# கொலைகாரப் பயணம்



எண்டமூரி வீரேந்தர்நாத்

# கொலை தூரப் பயணம்

எண்டமூரி வீரேந்திரநாத்
சுசீலா கனகதுர்கா

பூங்கொடி பதிப்பகம்

14. சித்திரைக் குளம் மேற்கு வீதி,
மயிலாப்பூர் : : சென்னை-600 004.

முதற் பதிப்பு : டிசம்பர் 1988
பதிப்புரிமை பெற்றது

அச்சிட்டோர் :

கனிமொழி அச்சகம்
19, வடுகு இடையர் தெரு,
மயிலாப்பூர், சென்னை-600 004.

# முன்னுரை

''உலகப் புகழ்பெற்ற ''காட் பாதர்'' எழுதிய மாரியோ பூஜோவிற்கு பம்பாய் இருட்டுலகத்தில் இரண்டு கள்ளக் கடத்தல் குழுக்களிடையே நாடகத்தைப் போல நடந்து வரும் போராட்டத்தைப் பற்றித் தெரிந்திருக்காது. அதுமட்டும் தெரிந்திருந்தால், 'காட் பாதரை' விட மிகவும் பரபரப்பான ஒரு கதையை புரிந்திருப்பார்...''

''இந்தியா டுடே'' 31-10-1983 இதழில் வெளிவந்த ஒரு கட்டுரையில் இதைப் படித்ததும் ஆர்வம் கொண்டு அது சம்பந்தப்பட்ட விஷயங்களைச் சேகரிக்கத் தொடங்கினேன். 1985-ம் ஆண்டு முடிவில் சுமார் 2000 பக்கங்கள் கொண்ட நாவல் எழுதக் கூடிய அளவிற்கு 200 பக்க விஷயங்கள் கொண்ட பைல் தயாராகிவிட்டது.

நாம் தெருவில் நடந்து செல்லும்போது தொலைவில் சாதுவாய் காட்சியாளித்துக் கொண்டிருக்கும் குடிசையில் நாட்டின் முக்கிய பிரஜையைக் கொல்லும் சதித்திட்டம் உருவாகிக் கொண்டிருக்கலாம். நம்மைக் கடந்து செல்லும் லாரியில் லட்சக் கணக்கான ரூபாய் மதிப்புள்ள ஹெராயின் என்ற போதைப் பொருள் பயணம் செய்து கொண்டிருக்கலாம். பஸ்ஸிலே நமக்கு அருகிலே அமர்ந்து பயணம் செய்து கொண்டிருக்கும் பயணியிடம் சமூகத்தைப் பாதிக்கும் எவ்வளவோ மர்மங்கள் அடங்கியிருக்கலாம். யாரிடம் என்ன ஆபத்து பதுங்கியிருக்கிறது, என்ன மர்மம் புதைந்திருக்கிறது என்பதனைப் புரிந்து கொள்ள இயலாதவண்ணம் நமது நாட்டின் சமூக அமைப்புகள் சிதைந்து போயுள்ளன.

நமது நாட்டின் பொருளாதாரத்தையும், பாதுகாப்பையும் ஒரு சில சமூக விரோதக் கும்பல் கையில் எடுத்துக் கொண்டு ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கின்றன. அவர்க

ளுடைய ஊடுருவல் அரசிலும், அரசியலிலும் மிகுந்துபோய் அவர்கள் தனி அரசாங்கமே நடத்திக் கொண்டிருக்கின்றனர், கோடி கோடியாகத் தாங்கள் குவிக்கும் பணத்தில் ஒரு சிறு பகுதியை பொதுக்காரியங்களுக்கென வழங்கிவிட்டு அதன் மூலம் தங்களைச் சுற்றி ஒரு பாதுகாப்பு வளையத்தை ஏற்படுத்திக் கொள்வதுடன் எளிதாக வள்ளல் பட்டத்தையும் பெற்று விடுகின்றனர். சட்டத்தின் பல வீனம் காரணமாகவும் அதிலுள்ள ஓட்டைகள் காரணமாகவும் அவர்கள் மிக எளிதாகத் தப்பிவிடுகின்றனர். போலீசும் அவர்களை எதிர்த்து நின்று அழிக்க முடியாமல்—அப்படி முன் வந்த சில கடமையுணர்வுமிக்க அதிகாரிகளே அழிந்துவிட்ட பரிதாபத்தைப் பார்த்துவிட்டு, அவர்களை எதிர்க்கும் வலிவோ, பாதுகாப்போ அற்ற நிலையில் அவர்களுக்கு இணங்கிப் போகவே நேர்கிறது.

நாட்டின் ஆரோக்கியத்திற்கு இது நல்லதல்ல. தென்னிந்தியா தற்போது அந்தக் கும்பலின் பிடியில் அதிகமாக சிக்காமல் ஓரளவு பாதுகாப்பாக இருக்கலாம். ஆனால் காலப் போக்கில் அந்த பாதுகாப்பு சிதைந்து போகவே செய்யும். எனவே சமூகப் பிரக்ஞையுள்ள பொது மக்களும் சிந்தனையாளர்களும் இந்த விஷயத்தில் மிகுந்த எச்சரிக்கையுடன், விழிப்புடன் இருக்க வேண்டும். இந்த எண்ணத்தின் உந்தலினாலேயே இந்த நாவலை நான் எழுதினேன். மரணமிருதங்கம் என்ற பெயரில் தெலுங்கில் வெளியான இந்நாவல் தற்போது 'கொலைதூரப் பயணம்' என்ற பெயரில் தமிழில் வெளிவருகிறது.

இறுதியாக ஒன்று சொல்கிறேன்.

இக்கதையில் வரும் சம்பவங்கள் கற்பனை அல்ல! தற்போது நம் நாட்டில் ஆங்காங்கே நடந்து வருபவைகளின் கதை வடிவம் தான் இது.

ஹைதராபாத்
1-12-88

எண்டமூரி வீரேந்திரநாத்
சுசீலா கனகதுர்கா

''உங்க ஜி. எம். தான் இல்லையே! பின்னே இந்த இடத்தில் நிறுத்தினால் என்ன?'' என்றாள்.

''ஜி. எம். இல்லையென்றாலும் இந்த இடத்தை காலியாத்தான் விடணும்'' என்று இழுத்தான் வாட்ச்மேன்.

''பரவாயில்லை'' என்று கூறிவிட்டு படியேறி, லிஃப்டை நோக்கிப் போனாள்.

லிஃப்ட் நாலாவது தளத்தில் நின்றது. இடது பக்கத்தில் அறைவாசலில் சேர்மன் என்று போட்டிருந்தது. வலது பக்கத்தில் போர்டுமீட்டிங் என்று பலகை மாட்டப்பட்டிருந்தது. மாடி முழுவதும் மெத்தென்ற கம்பளம் பரவப்பட்டு, ஏஸி செய்யப்பட்டு கும்மென்று இனிய சுகந்தம். ஹாலில் போடப் பட்டிருந்த சோபா ஒன்றில் அமர்ந்தாள். அங்கே ஏற்கெனவே மூன்று நபர்கள் அமர்ந்திருந்தனர். அந்த நபர் களைப் பற்றிய எடை போடுவதில் அனுஷா இறங்கினாள். முதல் நபருக்கு முப்பத்தைந்து வயதிருக்கும். வளவளவென்று பேசிக் கொண்டிருந்தது அது. இதுபோன்று வளவளவென்று பேசும் ஆசாமிகள் திறமைக் குறைவாயிருப்பார்கள், 'ஸ்டாக் ஹோம்' போன்ற நிறுவனங்களில் இப்படிப்பட்டவரை மிகச் சுலபமாய் கண்டுபிடித்து நிராகரித்து விடுவார்கள்.

இரண்டாம் நபர்—

உட்கார்ந்திருக்கும் தோற்றத்தைப் பார்த்தால் இங்கே உள்ளவர்களில் தான் மட்டுமே உயர்ந்தவன் என்ற கர்வம் கொண்டிருப்பவன் என்று தெரிந்தது. ஆகவே, அவன் பலத்த சிபாரிசு மூலம் வந்திருப்பவனாக இருக்க வேண்டும்.

மூன்றாவது நபர்—

எதிரே இருப்பவர்கள் பேசும் உதவாக்கரைப் பேச்சை உன்னிப்பாக கவனித்து, அந்தப் பேச்சில் தனக்கு ஏதாவது செய்தி கிடைக்கிறதா என்று உளவு பார்க்கும் குணம் கொண் டவராக இருக்கலாம். ஆகவே கெட்டிக்காரர். ஒருக்கால்

இந்த நபர் தனக்குப் போட்டியாக வரக் கூடியவராகவும் இருக்க வாய்ப்புண்டு.

—என்று ஒவ்வொருவரைப் பற்றியும் தன் மனதில் குறிப்பெடுத்துக் கொண்டாள் அனுஷா. இவர்கள் யாரையுமே அலட்சியமாக ஒதுக்கிவிடவும் முடியாது என்றும் கண்டு கொண்டாள்.

ஸ்டாக்ஹோம்!

டாடா, பிர்லா கம்பெனிகளில் பணிபுரியும் ஊழியர்களைக் கூட கவரும் அளவுக்கு பெரிய நிறுவனம். இரண்டாயிரம் கோடி லேவாதேவிகளுடன் இந்தியாவின் பொருளாதாரத்தைத் தன் உள்ளங்கையில் முடக்கி எடுத்துக் கொண்டு விவகாரங்களை நடத்திச்செல்லும் நிறுவனம். அதன்ஜெனரல் மானேஜர் பதவி என்றால் ஆறாயிரம் ரூபாய் சம்பளம்— ஏர்கண்டிஷன்கள், வீடு, இன்னும்...இன்னும்...வசதிகள்.

இங்கே நான்கே நான்கு நபர்களை மட்டும்தான் இன்டர்வியூவுக்கு கூப்பிட்டிருக்கிறார்கள் என்றால் எவ்வளவோ தில்லுமுல்லுகள் நடந்திருக்கக்கூடும், ஏன் இந்நேரம் நால்வரில் ஒருவர் தேர்வு செய்யப்பட்டிருக்கவும் கூடும். இல்லை, இந்த நால்வர் இன்டர்வியூ ஒரு கண்துடைப்பாகவும், வேறு முற்றிலும் புதிய நபர் தேர்வுக்குள்ளாயிருக்கவும் கூடும்— என்றெல்லாம் அனுஷா நினைத்துக் கொண்டிருக்கும் போது,

''உங்களை வரச்சொன்னாங்க''. என்ற அட்டன்டரின் குரல் கேட்டு நால்வருமே ஏககாலத்தில் திரும்பினார்கள்,

''யாரை?''

''நால்வரையுமே!''

எதிர்பாராத இந்த பதிலைக் கேட்டு, நால்வரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். பிறகு எல்லாரும் எழுந்து உள்ளே சென்றார்கள்.

விசாலமான அறை. அறையில் மேஜை, கால்மிதி முதல் திரைச்சீலை வரை எல்லாமே மஞ்சள் வண்ணத்தில் பொன்னில் குளித்தவையாக இருந்தன. நீண்ட பெரிய மேஜைக்கு முன்னால் உட்கார்ந்தார் ஸ்டாக் ஹோம் சேர்மன் பி.எஸ். பண்டா. ஐம்பத்தைந்து வயதிலும் நல்ல தொரு இளைஞனாககாட்சியளித்தார். தன் திறமையின் மூலம் அந்த நிறுவனத்தை முன்னுக்குக் கொண்டு வந்தவர். அவருக் கருகில் இன்னொரு நபர். அவர் யாரென்பது அவளுக்குத் தெரியும். பெயர் காந்தி. அவர் சுயமாய்த் தொடங்கிய கம்ப்யூட்டர் 'பிரெய்ன் நிறுவனத்தின் அதிபர். கணித மேதை கள் சகுந்தலாதேவி, சொல்மான்லலா முதலியோரைப் போன்று எவ்வளவு சிக்கலான கணக்காக இருந்தாலும் நொடியில் போட்டுவிடும் வல்லமை பெற்றவர்.

—அவளுக்கு நடக்கப்போவது என்ன வென்பது புரிந்து விட்டது. தம்மை இன்டர்வியூ சொல்வதற்காக அவரை அழைத்திருக்கிறார்கள்.

சேர்மன் கனைத்துக்கொண்டு, குறு குறு பார்வையுடன், "ஸ்டாக்ஹோம் ஜெனரல் மானேஜர் பதவி என்பது சாதார ணமானதில்லை. விநாடி நேரத்தில் தீர்மானித்து முடிவுகளை எடுக்க வேண்டும். எடுக்கும் தீர்மானம் கொஞ்சம் தவறாக இருந்தாலும் போதும்; அது இந்த நிறுவனத்துக்கு மட்டு மின்றி, நாட்டுக்கும் கூட ஆபத்து விளைவிக்கக் கூடியவை யாகி விடும்.''

அனுஷாவுக்கு இதன் அர்த்தம் என்னவென்பது தெரியும். இதற்கு முன்பு ஜி. எம்.மாக இருந்தவர் தங்கம் விலை ஏறிய போது எடுத்த தவறான கொள்கை முடிவுகளால் நிறுவனத் துக்கு சுமார் அறுபது லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டு விட்டதாக ஒரு கணக்கு இருக்கிறது. அதனாலேயே அவர் தனது பதவியை இழக்கும்படி நேர்ந்திருக்கிறது.

சேர்மன் தொடர்ந்தார்...

''அதனால் நபரைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் நாங்கள் எந்தவிதமான சலுகையும் காட்டப் போவதில்லை. எல்லாவற்றையும் இதோ இவரிடம் ஒப்படைத்து விட்டோம். இவரை உங்களுக்குத் தெரிந்திருக்கும்.''

''தெரியும்''-என்று நால்வரும் தலையாட்டினார்கள்.

பி. எஸ். பாண்டா தன் வேலை முடிந்து விட்டது என்பதற்கு அறிகுறியாக இருக்கையில் பின்னுக்குச் சாய்ந்து, ''இனி இன்டர்வியூவை இவர் தொடர்வார்'' என்றார்.

காந்தி அந்த நால்வரையும் புன்னகை தவழ பார்வையிட்டார். அவர் முகத்தில் புன்னகை என்பது என்றுமே அகலாத ஒன்று. அவர் சொன்னார்:

''ப்ரண்ட்ஸ், இது போன்ற எத்தனையோ இன்டர்வியூவை நீங்கள் பார்த்திருக்கக் கூடும். ஏன் நீங்களே கூட பிறரை இதுபோன்று இன்டர்வியூவை செய்திருக்கலாம். நிறைய விண்ணப்பங்களை வடிகட்டிய பிறகு நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளீர்கள். நீங்கள் இதுவரை வேலை செய்த நிறுவனங்களில் என்ன சம்பளம் பெற்றீர்களோ அதைவிட பெரிதாக ந்த நிறுவனம் தந்துவிடப் போவதில்லை. இருந்தும் நீங்கள் இந்த ஸ்டாக்ஹோம் நிறுவனத்தில் பணிபுரிய விரும்புகிறீர்கள் என்றால் உங்களது புத்திசாதுரியத்தை மேம்படுத்திக் கொள்ள விரும்புகிறீர்கள் என்று அர்த்தம்.''

இந்த முன்னுரையைக் கேட்டதும் அனுஷாவுக்கு தான் படித்த 'பார்ன்டுவின்' என்ற புத்தகம் நினைவுக்கு வந்தது. பேட்டிக்கு வந்திருப்பவரின் அகம்பாவத்தை மிக சாதுரியமாகத் தூண்டிவிடுகிறார். எதற்காகவோ சுற்றி வளைத்துப் பேசுகிறார் என்று அனுஷாவுக்குப் பட்டது.

காந்தி தொடர்ந்தார்:

''இன்றைக்கு அமெரிக்க டாலரின் மதிப்புஎன்ன? அடுத்த ஒரு மாதத்தில் அதன் மதிப்பு எப்படி இருக்கும்னு நிமிடத்தில்

கணக்கிட்டு பைசா பிசகில்லாமல் சொல்லிவிடக்கூடிய புத்தி சாலித்தனம் உங்களிடம் உண்டு. உத்யோகம் பொருட்டுதான் வந்திருக்கிறீர்களே அன்றி 'பணம்' என்பது உங்களுக்கு பிரச்னையில்லை. உங்களுக்கிருக்கிற கெட்டிக்காரத் தனத் திற்கு பத்தாயிரம் ரூபாயை கையில் கொடுத்தால் மாலைக் குள் அதை லட்ச ரூபாயாக மாற்றி விடுவீர்கள்.''

எல்லார் மத்தியிலும் சிரிப்பு. காந்தி அவர்களை சகஜ பாவத்திற்கு கொண்டு வந்துவிட்ட தெம்பில் மேலும் கூற முனைந்தார்.

''அதனால்தான் உங்கள் ஒவ்வொருவரையும் தனித் தனியாக பேட்டி காண்பது என்பதை நிறுத்தி, நால்வரையும் ஒரே நேரத்தில் சந்திப்பது என்று முடிவெடுத்தேன். பிரச்னைகளுக்கு முடிவெடுப்பதில் எவ்வளவு நேரம் எடுப்பீர்கள்னு தெரிஞ்சுக்கத்தான் நால்வரிடமும் ஒரே கேள்வியை கேட்கப் போகிறேன். இதில் உங்களுக்குத் தடையில்லையே?''

இல்லையென்று தலையாட்டினார்கள். இருந்தால்தான் எப்படி வெளிக்காட்ட முடியுமாம் என்று அனுஷா நினைத்துக் கொண்டாள்.

''இந்த ஆண்டு கோடையில் எதிர்பாராமல் மழை பெய்யத்தொடங்கிட்டது. உங்களிடம் ஆயிரம் டன் பாலியெஸ் டர் துணி இருக்கு. விற்று விடுவீர்களா? விற்காமல் வெச்சுப் பீங்களா?''

''விற்று விடுவோம்''-வில்லிலிருந்து புறப்பட்ட அம்பைப் போல் அனைவரிடமிருந்தும் ஒரே பதில்.

''அடுத்து என்ன பண்ணலாம்?'' என்பதுபோல பண்டார வைத் திரும்பிப் பார்த்தார். அவர் இதொன்றும் தனக்கு சம்பந்தமில்லை என்பதுபோல சாவதானமாய் 'பைப்பை' புகைத்துக் கொண்டிருந்தார்.

கோடையில் பெய்யும் மழையால் புளியின் விலை குறையும். புளியின் நாரிலிருந்து எடுக்கும் ஒருவிதமான அமிலம் மலிவாய் கிடைப்பதால் பாலியெஸ்டருக்காக உபயோகிக்கும் ராசயனப் பொருள் குறைந்து விடும். அப்படிப்பட்ட நிலையில் சரக்கைத் தேக்கி வைத்துக் கொள்வது விவேகமான செயலில்லை. ஆகவே அவர்கள் நிமிட நேரத்தில் இந்த முடிக்கு வந்துவிட்டார்கள்.

''ஸ்டாக் எக்ஸேஞ்ச் ஷேர் மார்க்கெட் விஷயங்களில் உங்கள் பரந்த அறிவை சோதிப்பது புத்திசாலித்தனமல்ல என்பது புரியுது. வேறு துறைகளில் சோதிக்கலாம். உதாரணமாய் சகுந்தலைக்கும் துஷ்யந்தனுக்கும் ஏதோ சம்பந்தமிருக்கிற விஷயமானது உங்களுக்கு தெரியுமில்லையா? எனக்கோ அதுகூடத் தெரியாதே'' என்றார்.

திரும்பவும் அங்கே சிரிப்பு.

பெரிய இடத்து இன்டர்வியூக்கள் பெரும்பாலும், மற்ற சாதாரண இன்டர்வியூவைப் போல கடுமையாக நடைபெறாது. இங்கே சகஜமாகக் கலந்துரையாடல் பாணியில் தான் 'பேட்டிகள்' நடக்கும். அதில் வெளிப்படும் புத்திசாலித்தனம் மட்டுமே 'கவுண்டுக்கு' வரும் என்பதை இங்கே சொல்லியாக வேண்டும்.

காந்தி: உங்களுக்குத் தெரியாத துறைகளில் கேள்வி கேட்டுத் தொந்தரவு பண்ணமாட்டேன். நீங்க ரொம்ப மேல் வட்டத்திலேயே யோசிக்கிறீங்க. அதனால் இம்முறை கீழிறங்கி கேள்வி கேட்பேன். அவ்வளவுதான். உதாரணமாய் ஒரு பேண்ட் துணியும், ஒரு ஷர்ட் துணியும் சேர்ந்து விலை ரூபாய் 130. பேண்ட் துணியின் விலை ஷர்ட் துணியின் விலையை விட 100 ரூபாய் அதிகம். அப்படியானால் அவற்றின் விலை என்னவென்று கேட்டால் நாம் சட்டென்று தயங்காமல் இதன் விலை நூறு, அதன் விலை முப்பது என்று (தப்பாய்) சொல்லுவோம். பதில் சொல்றதுக்கு எவ்வளவு

நேரம் யோசிக்கிறோம் என்பது நம் திறமையை பொறுத்திருக்கு. ஐன்ஸ்டீன் ஒரு மாநாட்டுக்குப் போனார். அங்கே சிறுவன் ஒருவன் அவரிடம் ஒரு கணக்கைத் தந்தான். 'எட்வர்ட், ராபர்ட், ஜார்ஜ் என்னும் மூவரும் பிக்னிக் போனார்கள். எட்வர்ட் ஐந்து ரொட்டிகளும், ராபர்ட் மூன்று ரொட்டிகளும் கொண்டு வந்தார்கள். அந்த எட்டு ரொட்டிகளையும் மூவரும் தின்று முடித்தபிறகு ஜார்ஜ் தன் பங்குக்கு செலவுத்தொகையாக ரூபாய் எட்டு தந்தான். இந்த பணத்தை மூவருக்கும் எப்படிப் பங்கிடுவது என்று யோசித்துப் பாராமல் 'எட்வர்ட்' ஐந்து ரூபாய், ராபர்ட் மூன்று ரூபாய் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று பதில் அளித்தார். பிறகு ஐன்ஸ்டின் தன் சுயசரிதத்தில் ஓரிடத்தில், தான் எப்படி கொஞ்சமும் யோசிக்காமல் இப்படி பதில் சொன்னோம் என்பதைப்பற்றி எழுதியவர், 'எட்வர்ட்' ஏழு ரூபாய், ராபர்ட் ஒரு ரூபாய் எடுத்துக் கொள்ளவேண்டும் என்ற யோசனை எனக்கு அரை நிமிடத்திற்குப் பிறகுதான் பட்டது. ஆனால் அதற்குள்ளாகவே என் வாயிலிருந்து தவறான பதில் வந்து விட்டது என்று எழுதினார். அதனால் நாம் சீக்கிரமாய் முடிவெடுப்பது எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியமானது அது, சரியான முடிவுதானா இல்லையா என்று சரிபார்ப்பதும். இவ்விரண்டிற்கும் நடுவில் சரியான கோடு ஒன்றை சரியாக கிழிக்க வல்லவர்தான் ஸ்டாக்ஹோமின் ஜெனரல் மானேஜராக வரமுடியும்.''

நால்வரும் அவர் பேசுவதையே கேட்டுக் கொண்டிருந்தனர்.

காந்தி: ''உங்களுக்கெதிரில் காகிதமும் பேனாவும் இருக்கின்றன. அமெரிக்க வானவெளி ஆராய்ச்சிமையம், வான ஆராய்ச்சி சம்பந்தப்பட்ட கேள்வி பதில் போட்டியை பயணத்தில் ஈடுபடுபவர்களுக்காக ஏற்பாடு செய்திருந்தார்கள். அதில் என்னை மிகவும் கவர்ந்த கேள்வி இதுதான். எவ்வளவு விரைவில் சொல்கிறீர்களோ உங்கள் வெற்றி உறுதி செய்யப்படும்...

நால்வரும் தம்மையறியாமலே பென்சிலை கையில் எடுத்துக் கொண்டு, காகிதத்தையும் அருகே இழுத்துக் கொண்டனர்.

''சந்திரமண்டலத்தில் ராக்கெட்டில் சென்று இறங்கி, அங்கிருந்து இன்னொரு வாகனத்தில் ஏறிக்கொண்டு பயணத்தைத் தொடர்கிறீர்கள். உங்கள் வாகனமானது ராக்கெட்டிலிருந்து சுமார் இருநூறு கிலோ மீட்டர்கள் தொலைவிற்கு வந்தபிறகு எதிர்பாராத விபத்து ஏற்பட்டு, வாகனம் சிதைந்து விடுகிறது. நீங்கள் உங்கள் ராக்கெட்டை அடைய இருநூறு கிலோ மீட்டர் தூரம் நடந்தாக வேண்டும். உங்கள் வாகனத்திலிருந்து சில பொருட்களை எடுத்துச் செல்லவேண்டும். அதன் முக்கியத்துவத்தைப் பொருத்து இந்தப் பதினைந்து சாமான்களை வரிசைப்படுத்துங்கள்.

நெருப்புப் பெட்டி—ஆகாரப் பொருட்கள்—ஐம்பதடி நீள நைலான் கயிறு—உங்கள் மனைவியின் புகைப்படம்—கையில் அடங்கும் சிறிய ஸ்டவ்—ஒரு சிறு துப்பாக்கி—பால் பவுடர்—ஆக்சிஜன் டாங்க்—சந்திரமண்டல வரைபடம்—திசைகாட்டும் கருவி—முதலுதவிப் பெட்டி—தண்ணீர்ப் பை—ராக்கெட்டில் இருப்பவர்களோடு பேசக்கூடிய சிறிய டெலிபோனைப் போன்ற சாதனம்—பிளாஷ் காமிரா—சந்திரமண்டல பூமியை தோண்டும் கடப்பாரை.

அவர் சொல்லத் தொடங்க, அனுஷா எழுதிக் கொண்டே போனாள். மற்றவர்கள் அவர் சொல்லச் சொல்ல பதினைந்து பொருட்களையும் முதலில் எழுதிக் கொண்டு, பிறகு வரிசைப் படுத்தினார்கள்,

அனுஷாவோ அவ்வாறு செய்யாமல் அவர் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அவற்றின் முக்யத்துவத்தை மனதிற்குள்ளேயே யோசிக்கலானாள். நெருப்புபெட்டி-சந்திர மண்டலத்தில் இதன் தேவை எதற்காக? அதை எல்லா வற்றிற்கும் கடைசியாய் எழுதிக் கொண்டாள், ஆக்ஸிஜன்

எல்லாவற்றிற்கும் மேலே எழுதி கொண்டாள். இப்படி ஒவ்வொன்றாக அவர் சொல்லிக் கொண்டிருக்கும்போதே வரிசைக்கிரமமாய் எழுதத் தொடங்கினாள்.

அவர் கடைசிப் பொருளைச் சொல்லும்போதே அவளும் தான் எழுதியதை மடித்து அவர் முன் வைத்தாள். இரண்டும் ஒரே சமயத்தில் நிகழ்ந்தது.

கம்ப்யூட்டர் மூளை என்று பெயர் பெற்ற காந்தியே கூட அவள் வேகத்திற்கு ஆச்சரியமடைந்தார், பண்டா புகழ்ச்சியோடு பார்த்துச் சிரித்தார். மற்றவர்களும் அதற்குள் பதிலை எழுதித் தந்து விட்டார்கள். காந்தி அவைகளை வாங்கி ஒரு பக்கமாய் வைத்தார். பதில் அவருக்கு ஆர்வமில்லை. சீக்கிரமாய் எடுக்கும் முடிவில்தான் அவர் ஆர்வமே இருந்ததென்று புரிந்தது. தொடர்ந்து பல கேள்விகள்,

உண்மையில் அவளைக்காட்டிலும் மற்ற இருவர் அதிகம் படித்தவர்கள். ஸ்டாக் எக்ஸேஞ்சு அனுபவம் உள்ளவர்கள்.

அதற்குள் காந்தி அடுத்த கேள்வியைக் கேட்டுவிட்டார்.

"ஃபிரண்ட்ஸ். ஒரு சிறிய கேள்வி. உண்மையிலேயே சின்னது. ஐதராபாத்திலிருந்து ஹெலிகாப்டரில் வடக்கு நோக்கி இரண்டாயிரம் கிலோ மீட்டர்கள் பிரயாணம் செய்து, வலது பக்கம் திரும்பி, தெற்குப்பக்கமாய் இன்னொரு இரண்டாயிரம் கிலோ மீட்டார்கள் வந்து, அங்கிருந்து திரும்பவும் வலது பக்கமாய் இரண்டாயிரம் கிலோ மீட்டர்கள் பிரயாணம் செய்து இறங்கினால் எங்கே இறங்குவீர்கள்?"

"புறப்பட்ட இடத்துக்கே" மூவருள் ஒருவன் சட்டெனச் சொன்னான்.

அதற்கு முந்தைய கேள்விகளுக்கு அவர் கேட்டு முடிக்கு முன்பாவே பதிலைச் சொன்ன அனுஷா, இந்த முறை

காந்தியை நிமிர்ந்து பார்த்தாள். அவர் முகத்தில் எந்த உணர்ச்சியுமில்லை. அந்த பதில் சரியானதுதானா இல்லையா என்று தெரிவிக்க வில்லை அவர். மற்ற இருவரும் கூட ஆழ்ந்த யோசனையில் மூழ்கிவிட்டிருந்தனர்.

முதலாமவன் சொன்னது சரியான பதிலாயிருந்தால் நிஜமாகவே காந்தி சொன்னதுபோல் இது மிகச்சிறிய கேள்வி தான். ஆனால் இக்கேள்வி தங்களை முட்டாளாக்கவே தொடுக்கப் பட்ட கேள்வி என்பதில் அனுஷா உறுதியாய் இருந்தாள்.

மற்ற மூவருள் இன்னொரு நபர், ''ஐதராபாத்திலேயே தான்'' என்றான்.

இனி பதில் சொல்ல வேண்டியது அனுஷாவும் மற்ற நபர் ஒருவருந்தான்.

நிமிடங்கள் பறந்துகொண்டிருந்தன. இனி தோல்விதான் என்று அனுஷா தீர்மானிப்பதற்குள் மற்ற ஒருவனும்,

''ஹெலிகாப்டர் மேலே இருக்கும் போது கீழே பூமி சுற்றுவதை கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டுமா?'' என்றான்.

காந்தி சிரித்து, ''எப்படிம்பீங்க? சூழ்நிலைகூட பூமியோடு தானே சுற்றிக் கொண்டிக்கும்'' என்றார்.

''அப்படியென்றால் ஐதராபாத்தில் தான்'' என்று மூன்றாவது நபரும் தனது பதிலைத் தந்து விட்டார்.

இனி அனுஷா மட்டுமே. ஐந்து ஜோடிக் கண்களும் அவளையே பார்த்தவாறு இருக்க, அவள் நினைத்தாள் இது உண்மையிலேயே அற்பமான சிறு கேள்விதானா?

# 2

அவள் இன்னும் கிறுக்கிக் கொண்டுதான் இருந்தாள். மேலும் இரு விநாடிகள் கழிந்தன. தான் கிறுக்கிய படத்தைப் பார்த்ததுமே அவள் மூளையில் ஏதோவொன்று பளிச்சிட்டது. அவ்வளவுதான் விநாடி நேரத்தில் அவள் மூளை மிஷினை விட வேகமாய் கணக்கைப் போட்டது. பிறகு முறுவலுடன் நிமிர்ந்து, ''நீங்க சொன்னதுபோல ஒரு ஹெலிகாப்டர் ஐதாராபாத்திலிருந்து சதுரமாய்இரண்டாயிர ம்கிலோமீட்டர் பிரயாணம் செய்தால் அது திரும்பவும் ஐதராபாத் வந்து சேராது. பத்ராசலம், கம்மம் பகுதியில்தான் வந்திறங்கும்.''

மற்றவர்கள் அவளை ஒரு பைத்தியத்தைப் பார்ப்பது போல பார்த்தார்கள். காந்தியின் முகத்திலோ எந்த மாறுதலும் இல்லை. மாறாக, ''இதை விளக்கிக் காட்ட முடியுமா?'' என்று கேட்டார்.

''ஓ! தாராளமாக...'' என்றாள் அனுஷா.

''ஐதாராபாத் 78-வது ரேகையில் உள்ளது. அதே கோட்டிற்கு மேலே இரண்டாயிரம் கிலோ மீட்டர்கள் வடக்கு முகமாய் போனால் காஷ்மீர் எல்லைக்குள் போகும். அங்கிருந்து பூமியின் மேல் குறுக்காய் அதே தூரத்தைக் கடந்தால் சீனாவில் 100வது ரேகையின் மேல் இருப்போம். அதே ரேகையின் மேல் கீழே இறங்கினால் தாய்லாந்து எல்லையில் இறங்குவோம். கணக்கின் திருப்பமே இந்த இடத்தில்தான் உள்ளது. வட துருவத்திலிருந்து கீழே இறங்க இறங்க ரேகைக்கு இடையேயுள்ள தூரமானது அதிகரிக்கிறது. எவ்வளவு தூரம் அதிகரிக்கிறது என்று கணக்கிட வேண்டுமானால் அதற்கு ஒரு கம்ப்யூட்டர் அவசியப்படும்'' என்றாள் 'கம்ப்யூட்டர்' என்னும் பதத்தை அழுத்தமாய் உச்சரித்து.

காந்தி சிரிப்பை அடக்க முயன்று தோற்றவாறு இருந்தார். அவள் தொடர்ந்தாள்,

"ஐதராபாத் இருப்பது பூமத்திய ரேகைக்கு 17வது கோட்டில். அந்த கோட்டின் மேல் பாங்காக் எல்லையிலிருந்து ஐதராபாத் சுமார் 2200 கிலோமீட்டர் தூரம் இருக்கும். அப்படியானால் பின்னோக்கி வரும் ஹெலிகாப்டர் ஐதாராபாத்திற்கு இருநூறு கிலோமீட்டர் தொலைவிலேயே இறங்கி விடும். அங்கிருக்கும் இடமோ பத்ராசலம்னு சொன்னேன். அப்கோர்ஸ் அந்தஊரில் ஹெலிபாட் இருந்தால்தான் இறங்க கூடமுடியும். இல்லே வானத்திலேயே ரவுண்ட் அடித்துக் கொண்டிருக்க வேண்டியதாகி விடலாம்" என்றாள்.

அறையில் விநோதமான அமைதி. அதைச் சிதறடித்தவாறு, "ஓகே ஃபிரண்ட்ஸ். உங்க ரிசல்ட்டை அப்புறமாய் தெரிவிப்போம்" என்று இருக்கையை விட்டெழுந்தார் அவர்.

எல்லாரும் கூடவே எழுந்தனர். அனுஷாவும் வெளியே வந்தாள். லிஃப்டிற்கு அருகில் வந்ததும், காந்தியைப் பார்த்து, "லட்சுமி எப்படி இருக்கிறாள்?" என்றாள்.

"ஷி ஈஸ் ஃபைன்" என்றார் காந்தி.

லிஃப்டிற்கு நுழையப் போனபோது சேர்மன் அனுஷாவைக் கூப்பிடுவதாகத் தகவல் வரவே அவள் தங்க நேர்ந்தது. காந்தி 'குட்பை' என்று சொல்லி லிஃப்டில் கீழே இறங்கப் போனவர் அவளுக்கு மட்டும் கேட்கும்படி, "கங்க்ராஜுலேஷன்ஸ்" என்றார் மெல்லிய குரலில்.

அவர் சொன்னது புரிந்ததும் அவள் இதழ்களில் மெல்லிய முறுவல் தவழ்ந்தது. ஆனால், அந்த முறுவல் அதிக நேரம நீடிக்கவில்லை. உள்ளே நுழைந்தபோது பண்டா திகிலடைந்தவராய்த் தென்பட்டார். அனுஷாவைப் பார்த்ததும்,

"உட்கார்" என்றார்.

இண்டர்வியூவில் தேர்ந்தெடுக்கப்பட்டமையால் தன்னை 'ஒருமையில்' அழைக்கிறார் என்பதைப் புரிந்துகொண்டாள். அந்த அழைப்பு அதிகாரத்தால் வந்ததில்லை, வயதாலும்-அனுபவ அறிவாலும் வந்தது.

''ஒரு சின்ன தடங்கல். உங்க நால்வருக்குள் மோகனுக்குப் பின்னால் ரொம்ப செல்வாக்கு இருக்கு. மோகனைத் தெரியுமில்லே? உங்க எல்லாரைத் காட்டிலும் ரொம்ப வீக். ஒரு சாதாரண நபரை இந்த பதவிக்குத் தேர்ந் தெடுத்து விட முடியாது, புத்தி சாதுரியம், செல்வாக்கு இரண்டும் இருந்து தீரணும். முதலாவது உன்னிடம் இருக்கு. இரண்டாவது அவருக்கு இருக்கு. உங்களில் யாருக்குமே தெரியாத விஷயம் என்னவென்றால் பார்க்க அழகாக, கம்பீரமாய்த் தோன்றும் இந்த நிறுவனம் எந்த நிமிடத் திலும் நொறுங்கிப் போகும் நிலையில் இருக்கு. இந்தச் சமயத்தில் எனக்கு ஒரு பலம் வாய்ந்த கை உதவிக்கு வேண்டும். என் ஓட்டு என்னவோ உனக்குத்தான். ஆனால்''...

பண்டா என்ன சொல்ல நினைக்கிறார் என்பது அனுஷா வுக்குப் புரிந்தது. அந்த ஆளை வேலைக்கு எடுத்துக் கொண்டால் இந்த நிறுவனத்தில் சில வேலைகள் எளிதாக நடந்து விடும். தனக்கும் அதுபோன்ற செல்வாக்கு இருப் பதாய்நிருபித்தால் இந்த வேலை நிச்சயம். ஆக, செல்வாக்கு இன்றியமையாத ஒன்று என்று அனுஷா உணர்ந்து கொண்டாள்.

''யார் சார் அந்த ஆளுக்கு சிபாரிசு?'' என்று கேட்கவும் செய்தாள்.

''டுபாக்கோ கிங் ராமசுப்பன். மோகன்- அவரது மைத்துனன்.''

அவள் இதயம் ஒரு விநாடி நின்று போனது. இந்தியா வின் புகையிலை வியாபாரத்தைத் தன் கைக்குள் வைத்திருக்

கும் ராமசுப்பன் அந்த ஆளுக்குப் பின்னால் இருக்கிறார். அந்த ஆளையும் தான் எதிர்த்துத் தீர வேண்டியிருக்கிறதே என்று நினைத்தாள் அனுஷா.

''இன்னும் ஒரு மணி நேரத்தில் இந்தப் பேட்டியின் முடிவைத் தெரிவிப்பதாகச் சொல்லியிருக்கிறேன்'' என்றார் பண்டா.

அனுஷாவுக்கு அந்த வார்த்தையின் உள் அர்த்தம் புரிந்தது. தான் வெளியே சென்று அந்த ராமசுப்பனைப் பற்றி ஏதாவது துப்புத் துலக்கிக் கொண்டு வந்தாலும் பிரயோஜனமில்லை. அதை இங்கேயே இப்போதே செய்ய வேண்டும். இதுவும் ஒருவித பரீட்சைதான்! ஸ்டாக்ஹோம் ஜெனரல் மானேஜர் நாற்காலியில் இருந்தவாறே எல்லா வேலைகளையும் செய்யத் தெரிந்தவராய் இருக்கவேண்டும் அதுவும் நொடிப் பொழுதில் எல்லாவற்றையும் செய்ய வேண்டும்.

அனுஷா ஒரு முடிவிற்கு வந்தாள். ''நான் உங்களது போனை பயன்படுத்திக் கொள்ள அனுமதிப்பீர்களா... ஒரேயொரு எஸ்டிடி கால், டில்லிக்கு'' என்றாள்.

''ஒருகால் என்ன? ஒன்பது கால் வேண்டுமானாலும் போட்டுக்கொள். அடுத்த அறையில் எஸ்டிடி இருக்கிற போன் இருக்கு'' என்றார் பண்டா.

அனுஷா அடுத்த அறைக்குள் நுழைந்து, எண்களைச் சுழற்றி டில்லி சர்க்கிள் டி.ஜி.பி. வீட்டிற்குத் தொடர்பு கொண்டாள்.

''ஹலோ! அண்ணா இருக்காரா?'' என்றாள்.

''இல்லை மேடம்.''

''சரி, பரவாயில்லை. நான் உனக்குத்தான் போன் செய்தேன்.''

அந்த பெங்காலி சமையற்காரனின் குரலில் ஆச்சரியம் ஒலிக்க, ''என்ன மேடம்? எனக்கா போன் செய்ய நினைத்தீர்கள்!'' என்றான்.

''ஆமாம்! ஏன் போன் செய்யக் கூடாதா? நீ எவ்வளவு பெரிய நடிகன். உன் நடிப்புத் திறமையை அண்ணா இங்கு வரும்போதெல்லாம் சொல்லிச் சொல்லி மாய்ந்து போவாரே...''

ஹரிசென் மேலும் ஆச்சரியம் அடைந்தவனாய், ''ஆமாம் மேடம், மிமிக்ரி நல்லா செய்வேன். ஒருத்தரைப் பார்த்தால் போதும். அவரைப் போலவே நடித்துக் காட்டி விடுவேன். கல்கத்தாவில் நாடகக் கம்பெனியில் வேலை செய்ததால் சின்னச் சின்ன வேடங்களில் நடிக்க சான்ஸ் கிடைத்திருக்கிறது'' என்று தனது பிரதாபங்களை எடுத்துவிட ஆரம்பித்து விட்டான்.

''நல்லது ஹரிசென்! எனக்கு நீ ஒத்தாசை அதுவும் உடனடியாகச் செய்யவேண்டியிருக்கிறது'' என்று அவன் செய்ய வேண்டியதைச் சொன்னாள். முதலில் தயங்கிய ஹரிசென், முடிவில் ஒத்துக்கொண்டான்.

போன் தொடர்பை துண்டித்து விட்டு அடுத்தபடியாக ராமசுப்பனுக்கு டயல் செய்தாள்.

''சார். நான் சுபோதயா பத்திரிகை நிருபர். புகையிலையின் விலையை உயர்த்துவதாக அரசாங்கம் முடிவெடுத்திருப்பதாகத் தகவல். இந்த திடீர் நடவடிக்கைப்பற்றி உங்களது கருத்தையும் கேட்டு செய்தி வெளியிடச் சொல்லியிருக்கிறார் ஆசிரியர். உங்கள் கருத்தைச் சொல்கிறீர்களா? ப்ளீஸ்...''

மறுமுனையில் ராமசுப்பன் அந்த வார்த்தையைக் கேட்டு நிச்சயம் மயங்கி விழுந்திருப்பார் என்பதில் சந்தேகமில்லை, உண்மையில் அப்படித்தான் நிகழ்ந்தது. அந்த நேரத்தில் சுமார் இரண்டு கோடி ரூபாய் பெறுமான புகையிலை விற்று

அதை அனுப்புவதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்த நேரம் அது. இந்த சமயத்தில் அரசாங்கம் இப்படி ஒரு முடிவை எடுப்பது என்றால்?

ஒருவழியாகத் தன்னைச் சமாளித்துக் கொண்டு, ''அம்மா! உங்களுக்கு இந்தத் தகவல் எப்படியம்மா கிடைத்தது?'' என்றார் பவ்யமாக.

''இப்போதுதான், உதவி நிதிமந்திரி டில்லி விஞ்ஞான் பவனில் இந்த விஷயத்தை நிருபர்கள் மத்தியில் வெளியிட்டிருக்கிறார். டெலிபிரிண்டரில் இப்போதுதான் அடித்துக் கொண்டிருக்கிறார்கள். இனிமேல் தான் மேற்கொண்டு செய்திகள் வரத்துவங்கும்'' என்றாள் அனுஷா.

மறுமுனையில் ராமசுப்பன் யோசிக்கலானார்.

''விஞ்ஞான் பவனா?''

''ஆமாம் சார். அவர் அங்கதான் இருக்கார். வேண்டுமானால் போன் நம்பர் தரேன். ட்ரை பண்ணி கன்பார்ம் செய்துவிட்டு, எனக்கு உங்கள் கருத்தைச் சொல்கிறீர்களா?''

''சரி அம்மா! அப்படியே செய்கிறேன். போன் நம்பரைச் சொல்'' என்றார் ராமசுப்பன் சர்வநாடியும் ஒடுங்கியவராய்.

''246392'' என்று சொல்லி, மேலும் ஏதோ சொல்வதற்குள் போன் தொடர்பு துண்டிக்கப்பட்டுவிட்டது.

சரியாக ஐந்து நிமிடம் கழித்து அவள் திரும்பவும் டில்லிக்கு போன் செய்தாள், ஹரிசென் எடுத்தான். இம்முறை அவன் குரலில் வெற்றியின் பெருமிதம் தொனித்தது.

''என்னவாயிற்று ஹரிசென்?''

''அந்த ராமசுப்பன் போன் பண்ணினார் மேடம். உதவி நிதிமந்திரி வேண்டுமென்றார். தான் யாருன்னு சொன்னால்

வருவாருன்னார். போனை வச்சிட்டு ஒரு நிமிடம் கழித்துத் திரும்பவும் பேசினேன். நான் உதவி மந்திரி கணக்கா பேசினேன்.''

''அப்படியே நடந்தது நடந்தபடி சொல்'' என்றாள் அனுஷா.

''ஹலோ! நான் ராமசுப்பன் பேசறேன் சார். நீங்களும் நானும் சந்தித்ததில்லை. நிதிமந்திரி சாருக்கு என்னை நன்றாய் தெரியும். உங்களைத் தொந்தரவு செய்வதற்கு முதலில் மன்னிக்கணும்.''

''ஓ! உங்களைத் தெரியாமலா சார்? டுபாக்கோ கிங் என்று எங்க மந்திரி சொல்லிட்டே இருப்பார். சொல்லுங்க, உங்களுக்கு என்னவாகணும்?'' பிசிறில்லாத இந்தியில் சமையற்காரன் வினயமாய் கேட்டான்.

''இப்பத்தான் தெரிஞ்சது செய்தி. புகையிலையின் விலையை உயர்த்தப் போவதாய் அரசாங்கம் தீர்மானம் எடுத்துட்டதாம்.''

''அதற்குள்ளே இந்த செய்தி அவ்வளவு தூரம் எட்டி விட்டதா?''

''இது தெரிஞ்சதுமே ஒரு நிமிடம் ஆடிப் போய்ட்டேன். நிதிமந்திரி சாருக்குத் தொடர்புகொண்டு பேசறதுக்கு முன்னாடி உங்களிடம் தொடர்பு கொள்வது நல்லதுன்னு பட்டது. அதனால்தான் சாப்பாட்டு வேளையிலே உங்களுக்கு போன் செய்ய வேண்டியதாயிற்று. இவ்வளவு ஆகாயத்துக்கு விலையை ஏத்திட்டால் எங்களைப் போன்றவங்க என்ன சார் ஆகறது? எனக்கே இருபது முப்பது லட்சங்கள் வரையிலும் நஷ்டம் வந்துடுமே. குறைந்த பட்சம் ஒருமாத நோட்டீஸ் தராம...''

''ஒருமாத நோட்டீஸா?''

''ஆமாம் சார்...''

''நாங்க உயர்த்தலாம்னு நினைச்சதே ஒரு மாதம் கழித்துதானே!''

திடீரென ராமசுப்பன் குரலில் மகிழ்ச்சி தென்பட்டது, 'நிஜமாவா சார்?'' என்றார்,

''ஆமாம். விலையை உயர்த்தப்போற செய்தி நிஜந் தான். ஆனால் உடனடியாய் இல்லை. ஒரு மாதத்துக்கப் புறம் உங்களிடம் இந்த செய்தியைச் சொன்னவங்க அந்த விஷயத்தைச் சொல்ல விட்டிருப்பாங்க. ஆனால் இவ்வளவு திடீர்னு அரசாங்கம் மட்டும் விலையை எப்படி உயர்த்தலாம்?''

''தாங்க்ஸ் சார். ரொம்ப தாங்க்ஸ்'' அப்பொழுதே ராமசுப்பன் தனக்கு இதனால் வரப்போகும் லாபத்தைக் கணக்கிட்டுக் கொண்டார். ''அப்போ இந்த விஷயத்துக்காக நிதிமந்திரி சாரிடம் போகத் தேவையில்லை... இல்லையா சார்?'' என்று பவ்யமாகக் கேட்டார்.

''தேவையில்லை. இந்த விஷயத்தில் நீங்க கவலையின்றி இருக்கலாம்.''

''தாங்க்ஸ் சார். டில்லிக்கு வரும் போது உங்களைச் சந்திக்கிறேன்.''

''சொல்ல மறந்துட்டேனே. ராமசுப்பன் எனக்கு ஒரு ஃபேவர் பண்ணணுமே முடியுமா?''

''என்ன சொல்லுங்க சார். என்ன செய்யணும்?''

''என் சிநேகிதரின் தங்கை உங்க ஊரில் ஒரு கம்பெனியில் அது என்ன கம்பெனி, ஏதோ ஸ்டாக் ஹோமாம்—அதற்கு ஜெனரல் மானேஜர் தேர்வு நடக்கிறதாம். அநேகமாய் இந்த

நேரத்தில் நடந்திட்டிருக்கணும். நீங்க ஒரு போன் செய்து அதை 'ஓகே' பண்ண வைத்தால் உதவியாய் இருக்கும். நீங்க ஒரு போன்பண்ணியிருக்கிறப்ப இந்த ஆப்ளிகேஷனைக் கேட்கிறதுக்கு தப்பா எடுத்துக்க மாட்டீங்களே!''

''கண்டிப்பாய் சொல்றேன்.''

''தாங்க்ஸ் ராமசுப்பன்ஜீ.''

''இதென்ன சார். இனிமே நீங்க வேற. நான் வேறயா. அவசியம் சொல்றேன்.'

''புகையிலை விலை உயர்வைப் பற்றி இனிமே நீங்க கவலைப்படத் தேவையில்லை.''

அலை அலையாய் எழும்பிய சிரிப்பை அவள் பலவந்தமாய் அடக்க முயன்று, ''தாங்க்ஸ் ஹரிசென், நன்றாய் பண்ணிட்டாய். நான் சொன்னதுக்கு மேலேயே உன்பங்கையும் சேர்த்தே செய்துட்டாய்'' என்றாள் அனுஷா.

''நான் என்ன பண்ணினேன் மேடம்...''

''அதான் ஒரு மாதத்திற்கு அப்புறம் விலை உயரும் என்றது.''

''அவ்வளவுகூட செய்யமுடியாவிட்டால் நான் கலைஞனாக இருக்கவே லாயக்கில்லையே?''

''தாங்க்ஸ்! இந்த விஷயத்தை அண்ணாவிடம் சொல்லிடாதே, அவர் கேட்டால் திட்டப்போறார்''

''சரிம்மா!''

அனுஷா போனை வைத்துவிட்டு அடுத்த அறைக்கு வந்தபோது, பண்டா யாருடனோ போனில் பேசிக்கொண்

டிருந்தார். அவளைப் பார்த்ததும் போனை வைத்துவிட்டு, ''இப்பத்தான் ராமசுப்பன் போன் செய்தார். ரொம்பப் பெரிய அளவில்தான் சாதித்திருக்கிறாய் போலிருக்கே'' என்று வியந்தார்.

அவள் சிரித்து மழுப்பினாள்.

பண்டா எழுந்து, ''எந்த விஷயமாயிருந்தாலும் நாலைந்து நாளில் தெரிவிக்கிறோம்'' என்றார்.

கிளம்பியவள், ''ராமசுப்பன் தன் மைத்துனர் விஷயத்தில் ஒன்றும் வருத்தப்படவில்லையே சார்?'' என்று கேட்டாள்.

''படமாட்டார். இது உண்மையில் ரொம்ப புகழ் வாய்ந்த உத்யோகந்தான். ஆனால் டுபாக்கோகிங் தன் மைத்துனருக்கு தேவையானால் இதையும் விட இன்னும் பெரிய உத்யோகத்தைத் தேடித் தந்துவிடுவார்.''

அவள் கிளம்பி வெளியே வந்தாள், மணி மூன்றாகியிருந்தது. லிஃப்டில் இறங்கி கீழே வந்தாள். அவள் தன் காரைத் திறந்து உள்ளே உட்காரப் போனபொழுது வாட்ச்மேன் வந்தான்.

அவள் சுற்றிலும் கோடுகளுக் கிடையே நிறுத்தி வைக்கப் பட்டிருந்த கார்களைப் பார்த்து விட்டு அவனிடம், ''யார் இந்த பார்க்கிங் லைனைப் போட்டது?'' என்றாள்.

''நான்தான் மேடம்.''

இவை 45 டிகிரியில் போட்டிருக்கு. நாளைக்கு லீவு நாளில் இதையெல்லாம் அழிச்சுட்டு 55 டிகிரியில் திரும்பவும் போடு. இன்னும் ஆறு ஏழு கார்களுக்கு இடம் கிடைக்கும் டிகிரின்னால் தெரியுமில்லே.''

வாட்ச்மேன் வியப்போடு, ''நீங்க யாருங்க மேடம்'' என்றான்.

''ஸ்டாக்ஹோம் ஜெனரல் மேனேஜர்.''

''.........''

பண்டாவுக்கோ தேவையான எழுச்சி அந்த விநாடியிலிருந்தே துவங்கி விட்டது.

இரவு மணி பதினொன்று. வத்சலா கையில் புத்தகம் விரிந்திருக்க, எல்லாரும் உறங்கிவிட்ட நிலையில் வத்சலாவின் கவனம் மட்டும் எங்கேயோ இருந்தது. எல்லாரும் என்பது அம்மா, அப்பா, தம்பி, தங்கை பண்டிகைக்காக கணவனுடன் வந்திருக்கும் அக்கா, சமீபத்தில் திருமணமான சின்ன அக்கா, அவளின் கணவன் முதலியவர்களைக் குறிக்கும்.

இதில் தம்பியும், தங்கையும் வத்சலாவின் அறையில் சமுக்காளம் விரித்துப் படுத்திருக்க இவள் மட்டும் அரிக்கேன் விளக்கின் துணை கொண்டு படிக்க முயன்று கொண்டிருக்கிறாள்.

எவ்வளவுதான் முயற்சித்தாலும் அவளால் புத்தகத்தில் கவனம் செலுத்த முடியவில்லை. மணி பனிரெண்டு அடித்து ஓயவும் நின்று போன மின்சாரம் மீண்டும் வரவும் சரியாக இருந்தது. எழுந்து அரிக்கேன் விளக்கின் திரியை அடக்கினாள். ஜன்னல் வழியே ஜில்லென்ற காற்று வீசவே போர்வையை எடுத்து தம்பி, தங்கை இருவருக்கும் போர்த்தி விட்டு அவளும் படுத்துக் கொண்டாள்.

தினமும் படுக்கப்போகும் முன் தெய்வத்தை நினைத்துக் கொள்வது அவளது பழக்கம். ''கடவுளே நாளை நடக்கும்

இன்டர்வியூவில் கண்ட கண்ட கேள்விகளைக் கேட்டு என்னைத் திணறடிக்கும்படிச் செய்யாமல் பார்த்துக்கொள். இந்த வேலை கிடைத்து அம்மாவிடம் விஷயத்தைச் சொல்லும் போது... 'போயும் போயும் இந்த வேலைக்குத் தானா போகணும், முடியாது, நான் ஏத்துக்க முடியாது' என்று தடுக்காமல் பார்த்துக் கொள். தள்ளாத வயதில் அப்பாவுக்கு என்னால் முடிந்த உதவியைப் பண்ண உதவு. ஏற்கனவே அப்பாவின் உடல்நிலை மோசம்'' என்று நினைத்தவாறு கண்களை மூடிக் கொண்டாள்.

ஹாலில் படுத்துக் கொண்டிருந்த அப்பா இருமிய சத்தம் நன்றாகக் கேட்டது. தொடர்ந்து அம்மா ''கொஞ்சம் மருந்து தடவி விடட்டுமா?'' என்று கேட்கும் குரல்,

''வேண்டாம், வேண்டாம்... நீ ஏன் எழுந்துக்கிறே... படுத்துக்கோ... சரியாப்போயிடும்'' என்று பதிலளிக்கும் அப்பாவின் குரலில் இருந்த பரிவு அவளைத் தொட, அவர்களின் முப்பது ஆண்டு தாம்பத்யத்தில் ஒருவரையொருவர் கடிந்து கொள்ளாத வாழ்க்கையை எண்ணி வியந்தாள். அப்படியே தூங்கியும் போனாள்.

''அம்மா, இனி நீ புறப்படலாம்'' என்றார்- பெரிய அத்தான், பஞ்சாங்கத்தை மடித்து வைத்துவிட்டு.

அதுவரையிலும் முள்ளின்மேல் அமர்ந்திருப்பது போலிருந்த வத்சலா, 'அம்மாடா' என்று எழுந்திருந்தாள். அப்பொழுதே இன்டர்வியூவுக்கு ஐந்து நிமிடம் தாமதம்' ராகுகாலம் என்று சொல்லி அதுவரை நிறுத்தி வைத்து விட்டார் பெரிய அத்தான்.

இந்த இன்டர்வியூ விஷயம் அப்போதுதான் அம்மாவுக்குத் தெரிய வர, ''நம்ப குடும்பத்திலேயே இல்லாத வழக்கமாய் உத்யோகம் போவதாவது'' என்று கூப்பாடு போடத் துவங்கினாள்.

அவளுக்கு நயமாய் எடுத்துச்சொல்லி முடிவதற்குள் போதும் போதுமென்றாகி விட்டது. நல்ல வேளை, அது என்ன உத்யோகம் என்று அவள் கேட்டு வைக்கவில்லை. வத்சலா அவசரமாய் படியிறங்கினாள். மொத்த குடும்பமே குரூப் போட்டோவுக்கு நிற்பது போல திண்ணையில் வந்து வழியனுப்பி வைத்தது.

ஒரு வழியாய் வத்சலா பஸ் ஸ்டாண்டை நெருங்கியபோது மணி மூன்று இருபது ஆகியிருந்தது. இனி இந்த வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கையே போய்விட்டது, இருந்தாலும் முயற்சி செய்து பார்க்கலாம் என்ற எண்ணத்தில் பஸ்ஸுக்குத் தவமிருந்தாள்.

அங்கே அவளுக்காக ராமன் காத்துக் கொண்டிருந்தான். பி.ஏ. முடித்த இளைஞன். தனக்கு சரியான வேலை கிடைக்காததற்கு இந்தச் சமூக அமைப்பு தான் காரணம் என்பதில் அசையாத நம்பிக்கை வைத்து இருப்பவன். டைப் ரைட்டிங் இன்ஸ்டிட்யூட் சென்று வருகிறான். அங்கேதான் அவனுக்கும் வத்சலாவுக்கும் சிநேகிதம். சிநேகிதம் என்றால் ஓரிரு தடவை பார்க்குக்குச் சென்று வந்திருக்கிறார்கள். ராமன் சிலசமயம் அவளை சினிமாவுக்கு அழைத்ததுண்டு. வீட்டில்திட்டுவார்கள் என்று வத்சலா அந்த சமயத்திலெல்லாம் மறுத்ததுண்டு.

''ஏன் இவ்வளவு நேரம்?'' எனறான்.

''ராகுகாலம் - எமகண்டம் என்று இவ்வளவு நேரம் காக்க வைத்துவிட்டரர்கள்.''

''இன்னும் கொஞ்சநேரம் நின்று பார்த்துவிட்டு போயிட லாம்னு நினைக்கறச்ச உன் தலை தெரிந்தது'' என்றான்.

''வேலை கிடைத்து விட்டால் என்னை மறந்துவிடுவை ...க்கும்'' என்று அவனே மேலும் தொடந்தான்.

அவள் இந்த கேள்விக்குப் பதில் சொல்லவில்லை. தொலைவில் சென்று கொண்டிருந் வாகனங்களையே பார்த்துக் கொண்டிருந்ததாள். தனக்குத் தேவையான பஸ் இன்னும் வந்த பாடில்லையே என்ற கவலைதான் அவளை அரித்துக் கொண்டிருந்தது. மணி மூன்றே முக்கால். அழுகை வராத குறைதான். பெரிய அத்தானின் மேல் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

"டைப் முடிந்ததும் ஆஸ்பத்திரி அருகே வந்து வழக்கம் போல் நிற்கிறேன். நீ இன்டர்வியூ முடிந்து அங்கே வந்து விடு."

அவன் சொன்ன எதையுமே காதில் வாங்கிக் கொள்ள வில்லை. எரிச்சல் எரிச்சலாக வந்தது அவளுக்கு.

ஒரு தீர்மானத்துக்கு வந்தவளாய், "யாரையாவது லிஃப்ட் கேட்கலாம்னு இருக்கேன்" என்றாள். அது கேட்ட ராமன் அதிர்ச்சியடைந்தான். ஒரு ஆணோடு பார்க்குக்குப் போனாலே பயப்படும் ஒரு பெண்-லிஃப்ட் கேட்பதாவது என்று எண்ணினான்.

அந்த வேலைக்காக அவள் எவ்வளவு ஆர்வத்துடன் இருந்தாள் என்பது அவனுக்குப் புரியவில்லை.

இரண்டு மூன்று கார்கள் கை நீட்டியும் நிற்காமலேயே சென்றுவிட, அடுத்தபடியாக வந்த காருக்கு குறுக்கே நின்று கொண்டு கையை நீட்டினாள்.

கார் நின்றதும் குனிந்து, "ரொம்ப அர்ஜெண்ட் ப்ளீஸ். ஸ்டேஷன் வரை போக வேண்டிருக்கு" என்றாள்.

காரின் கதவு திறக்கவும், அவள் ஏறியதும், கார் கிளம்பி யதும் நிமிடத்தில் நடந்து முடிந்து விட்ட செயல்கள். ஒப்புக்குக்கூட ராமனைப் பார்த்து கையைக் காட்டவில்லை அவனுக்கு என்னவோபோல்தான் இருந்தது. இருந்தாலு

அந்த சமயத்தில் ஆறுதல் அளிக்கக் கூடியதாக இருந்த விஷயம், காரை ஓட்டி வந்தவள் ஒரு பெண்ணாக இருந்தாள் என்பதுதான். ஒரு வித திருப்தியுடன் அவன் இன்ஸ்டிடியூட்டை நோக்கி நடந்தான்.

''மன்னிச்சுக்குங்க. ரொம்ப நேரமாய் பஸ்ஸே வரலை'' என்றாள் வத்சலா.

''ஸ்டேஷனுக்கு யாராவது வராங்களா?''

''இல்லை, இன்டர்வியூவுக்குப் போறேன்.''

''இன்டர்வியூவா?''

''ஏன் அப்படிக் கேட்கறீங்க?''

''வேடிக்கையாய் இருக்கே! நானும் இப்பத்தான் ஒரு இன்டர்வியூவை முடித்துவிட்டு வர்றேன். பை தி பை என் பேரு அனுஷா உங்க பேரு?''

''வத்சலா. இன்டர்வியூ எப்படி இருந்தது?.'

''வேலை கிடைச்சுட்டாற் போலத்தான்.''

''அதிர்ஷ்டசாலிதான், சம்பளம் எவ்வளவு?''

அனுஷா சட்டென்று திரும்பி வத்சலாவைப் பார்த்தாள். தன்னருகில் உட்கார்ந்திருந்த இப்பெண் உலகமே சின்னஞ் சிறு உலகம் என்ற கருத்தைக் கொண்டவள் என்றும் அப்பாவித்தனமாய் இக்கேள்வியைக் கேட்டிருக்கிறாள் என்றும் சுறுசுறுப்பான அனுஷாவின் கண்கள் கண்டுகொண்டன.

சிரித்துவிட்டு, ''ஆணின் சம்பளத்தையும் பெண்ணின் வயதையும் கேட்கக்கூடாது என்பது பழமொழி. இப்பொழுது அந்தப் பழமொழி பழையமொழியாகி விட்டது. இப்பொழுதெல்லாம் இளைஞர்கள் கூட தன் நிஜவயதைச் சொல்வதில்லை'' என்று சிரித்தாள், அனுஷா.

அபத்தமான கேள்வியைக் கேட்டு விட்டோமோ என்று வத்சலா வெட்கத்தினால் குன்றிவிட்டாள். இல்லாவிட்டால் காரில் இன்டர்வியூவுக்குப் போகக் கூடிய நிலையிலிருக்கிற அவளைப் பார்த்து 'சம்பளம் எவ்வளவு?' என்று கேட்ப தாவது.

''உங்களுக்கு இது முதல் இன்டர்வியூதானே?''

வத்சலா ஆச்சரியம் அடைந்தவளாய், ''உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்றாள்.

அனுஷா சிரித்து விட்டு, ''சரியாய் பனிரெண்டு ஆண்டு களுக்கு முன்னால் என்னுடைய முதல் இன்டர்வியூவில் நானும் இதே போன்ற பரபரப்பை அடைந்திருக்கிறேன், அதனால்...'' என்றாள்.

வத்சலா அவளை வியப்போடு பார்த்தாள். 'பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னால்-அப்படியென்றால் இந்தப் பெண் ணிற்கு என்ன வயதிருக்கும்' என்று நினைத்தாள்.

அதேசமயம் அனுஷாவும் கடந்தகால நினைவுகளில் ஆழ்ந்து விட்டாள். பன்னிரண்டு வயது பிராயத்தில் தாயும் தந்தையும் சேர்ந்தாற்போல விபத்து ஒன்றில் இறந்ததும்-தானும் தன் அண்ணனும் அநாதையாகி விட்டதும்- சிறுவய திலே அண்ணன் போலீஸ் இலாகாவில் சேர்ந்து விட்டதும் முதல் ஆண்டு காமர்ஸ் படித்துக்கொண்டே தான் பகுதிநேர வேலையொன்றில் முதல் இன்டர்வியூவுக்குப் போனதும் நினைவிற்கு வந்தது.

''உங்களுக்கு முதல் இன்டர்வியூவிலேயே வேலை கிடைத்து விட்டதா?''

''கிடைச்சுடுத்து'' என்றாள் அனுஷா தனது பழைய நினைவிலிருந்து மீண்டு.

''நான் இங்கே இறங்கிக்கிறேன், அதோ அந்த ஆஸ்பத்திரிதான்'' என்றாள் வத்சலா.

அனுஷா காரை மெதுவாய் ஒரு பக்கமாய் நிறுத்திவிட்டு, ''இந்த வேலை கிடைத்தால் எனக்கு பார்ட்டி கொடுக்கத் தவறமாட்டீங்களே-சமயத்துக்குக் கொண்டுவந்து சேர்த்ததுக்கு'' என்று சிரித்தாள் அனுஷா.

''கண்டிப்பாய்! எங்கே பார்க்க முடியும் உங்களை?''

''ஸ்டாக் ஹோம்'' அனுஷாவின் வார்த்தைகள் காற்றில் தேய்ந்து மறைந்தன.

வத்சலா கார் போன திசையையே பார்த்துக்கொண்டு ஒரு விநாடி நின்றாள். ஏனோ அவள் மனம் ஒருவித உணர்ச்சித் துடிப்பில் ஆழ்ந்து விட்டது. தன்னைக் காரில் ஏற்றி இறக்கிவிட்ட அந்தப் பெண்ணைப் பற்றி உண்மையில் எதுவுமே தெரியாது. ஆனால், அவளோடு பயணம் செய்த இந்த சொற்ப நேரத்தில் சுறுசுறுப்பான அவளது கண்களும் மிடுக்கும், பணிவை வெளிக்காட்டும் தோற்றமும், வாழ்க்கையில் எதையும் எதிர்த்து நிற்கக் கூடிய உறுதியும் நன்றாய் வத்சலாவின் மனதில் பதிந்துவிட்டன.

சட்டென்று நேரமாகி விட்டதை உணர்ந்து மருத்துவமனையை நோக்கி பரபரப்புடன் அடியெடுத்து வைத்தாள். பெருந்த உடம்புடன் நர்ஸ் ஒருத்தி அவளைப் பார்த்துவிட்டு, ''நீதானா வத்சலா என்பது? இவ்வளவு தாமதம் ஏன்? டாக்டர் எல்லாரையும் இன்டர்வியூ செய்து அனுப்பிவிட்டார். இனிமேல் நீ வரமாட்டையோன்னு நினைச்சிக்கிட்டிருந்தப்ப வந்து சேர்ந்து விட்டாய். போ, போ'' என்று அவசரப்படுத்தினாள்.

வத்சலா திருதிருவென்று விழித்தபடி டாக்டர் ஹரிநாத்தின் அறைக்குள் அடியெடுத்து வைத்தாள். உள்ளே நுழைந்த போது அவளது வலது கண் அதிர்ந்தது.

ராமசுப்பன் கார் வேலூரை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. தற்போது ராமசுப்பன் போய்க்கொண்டிருந்தது மற்றொரு புகையிலை வியாபாரியான கனகராஜின் மகள் திருமணத்திற்கு. அவர் வேலூரை அடைந்தபோது மாலை ஐந்து. கனகராஜூ அவரை பலமாக ஆர்வத்துடன் வரவேற்றார். இருவரும் அன்போடு உரையாடிக் கொண்டனர்.

சிறு வியாபாரிகள் யாவரும் இரவுச் சாப்பாட்டிற்கு முன் மயக்கம் வேண்டி கையில் மதுக்கோப்பைகளுடன் மூன்றாவது ரவுண்டில் இருந்தனர். ராமசுப்பன் அதிகாரிகளை வயப்படுத்த மது வாங்கிக் கொடுப்பாரேயொழிய அவர் மதுவைத் தொட மாட்டார். கனகராஜூம் அப்படித்தான். அதனால் அவர்கள் இருவரும் சற்று ஒதுங்கி நின்று வியாபாரம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

''போகப்போக இனிமேல் புகையிலை வியாபாரம் படுத்துவிடும். அதனால் ராமசுப்பா, நாம வேறு தொழில் பார்க்கிறதுதான் நல்லது'' என்றார் கனகராஜூ.

''ஏன்?''

''விலைவாசி உயர்ந்தால்தானே நமக்கு-லாபம்? இந்தப் புகையிலை போர்டின் நடவடிக்கையைப் பார்த்தால் அது உயரும் வழியாய்த் தோணலை. அதோடு ஆந்திராவில், மங்களூரில் இந்த ஆண்டு எக்கச்சக்கமாய் புகையிலை விளையும்னு எதிர்பார்க்கிறாங்க''

ராமசுப்பனின் மூளையில் ஒரு மின்னல். 'கனகராஜூக்கு அரசாங்கம் உயர்த்தப்போகும் விலையைப் பற்றி இன்னும் தெரியவில்லை. தான் அதிர்ஷ்டசாலி. தனக்கு மட்டுமே தெரிந்திருக்கிறது' என்று நினைத்துக் கொண்டார் ராமசுப்பன்.

''இதென்ன கனகராஜூ சார். எங்க ஃபாக்டரி சரக்கில்லாமல் நாங்கள் படுகிற பாடு உங்களுக்குத் தெரியாதா! நீ

என்னவோ ஸ்டாக் அதிகமாயிட்டுதோன்னு புலம்பறீங்களே?'' என்றார்.

''அப்படீன்னா உங்களுக்கு எவ்வளவு வேணுமோ சொல்லுங்க. நான் அனுப்பி வைக்கிறேன்.''

''ஒரு மாதத்துக்கப்புறம் ஒரு ஐம்பது லட்சம் சரக்கை தற்போதுள்ள விலைக்கே அனுப்பி வைப்பீங்களா?''

''கண்டிப்பாய்.''

அதற்கு மறுநாள் காரில் திரும்பிக் கொண்டிருந்த ராமசுப்பன் இதழ்க்கடையில்குறுநகைபடர்ந்து கொண்டிருக்க, தன் மடியில் கிடந்த 'பார்வேர்டு கான்ட்ராக்ட்' காகிதங்களை ஒரு தடவை பார்த்துக் கொண்டார்.

சுமார் இருபது லட்சம் தனக்கு லாபம் என்ற திருப்தியை விட தன் எதிரியை இருபது லட்சத்திற்கு கவிழ்த்து விட்டோம் என்ற எண்ணம்தான் அவருக்கு அதிக மகிழ்ச்சியைக் கொடுத்தது.

ஒரு பெண் வேடிக்கையாய் ஆடிய நாடகத்தில் ஒரு பாத்திரமான சமையற்காரன் சற்று மிகையாய் நடிக்கப் போக, அதனால் ஆன செலவு இருபது லட்சங்கள் என்று தெரிந்தால் அவர் மனநிலை எப்படியிருக்குமோ?

## 4

இரண்டு வாரங்கள் ஓடி மறைந்தன. புகையிலையின் விலையில் எந்த மாற்றமுமில்லை. குறைந்த பட்சம் விலை உயரப் போகும் அறிகுறி கூட தென்படவில்லை. ராமசுப்பன்

கலவரமடைந்தவராய் நிதியமைச்சருக்கு போன் செய்தார். ராமசுப்பனுக்கு நிதியமைச்சகத்தோடு நல்ல தொடர்பு இருந்த தால் புகையிலையின் விலை உயர்வைப்பற்றி கேட்டார்.

''விலை உயருவதா? இல்லையே...''பி. ஏ.வின் குரலில் ஆச்சரியம். அவர் போனை செகரட்டரியிடம் கொடுத்தார்.

''நமஸ்தே ராமசுப்பன்ஜீ. உங்களுக்கு ஒரு நல்லசேதி சொல்லப் போறேன். ஜெனிவாவிலிருந்து பிரதமர் திரும்பி வந்ததுமே விலையைக் கொஞ்சம் குறைக்கலாம் என்பது தான் உத்தேசம்'' என்றார் செகரட்டரி.

ராமசுப்பன் கையிலிருந்து போன் நடுங்கிற்று.

''இந்தச் செய்தி வெளியே போய்ட்டுதா?''

''எந்தச் செய்தி?''

''விலையைக் குறைக்கும் உத்தேசம் உங்களுக் கிருப்பது.''

இன்றைக்குத்தான் வெளியிட்டோம். ஒருக்கால் நாளைய பேப்பரில் இந்தச் செய்தி வெளியாகலாம்,''

சரியாய் இரண்டு மணி நேரங் கழித்து ராமசுப்பன் டில்லி செல்லும் விமானத்தில் இருந்தார், தனக்கு இருபது லட்சம் நஷ்டம் வருமாறு செய்த உதவி நிதிமந்திரி மட்டும் அந்தச் சமயத்தில் அவர் எதிரில் இருந்தால் எரித்துச் சாம்பலாக்கி விடுவார் போல அவரது இரத்தம் கொதித்துக் கொண்டிருந்தது. புகையிலையின் விலையை குறைத்தாலும் குறைக் காவிட்டாலும் அரசாங்கத்திற்கு அந்த உத்தேசம் இருப்ப தாய் செய்தி வெளியாகிவிடும். அது போதும், தனக்கு இருபது லட்சங்கள் நஷ்டத்தை ஏற்படுவதற்கு...இதற் கெல்லாம் காரணம் உதவி நிதிமந்திரிதான். விமானம் இறங்கியதுமே ராமசுப்பன் நேராய் உதவி நிதிமந்திரி வீட்டிற்குச் செல்லவில்லை. மாறாக, வசந்த் தாதா மாளிகையை நோக்கிச் சென்றார்.

இந்தியாவின் மிகப்பெரிய கடத்தல்காரகூட்டிலும் கொட்டம் அடங்கியபிறகு, மகுடமில்லாத மந்திலிருந்து வானான் வசந்த் தாதா. நான்கு மாடிக் கட்டிலசென்ஸ் இரண்டாவது தளத்தில்தான் வசந்த் தாதாவின் அந்த ஐம்பத்தைந்து வயதான பிரம்மச்சாரி இந்திய சமமான மற்றொரு அரசாங்கத்தை நடத்தி வ தியைத் தர என்றால் யாருமே நம்ப மாட்டார்கள். எங்கோ ந ஆண்டு சிறு விஷயத்தையும் கண்டுபிடித்து விடும் பார்வையுடை வரைக் அவன்.

கோடி ரூபாய் மதிப்புள்ள போதைப் பொருளை ஏ பாரந் விடும் கப்பலை சுங்க இலாகாவினரின் உதவியுடந்து போலீசார் மடக்கிவிட நேரும் சமயத்தில், வேறு வழியின்கும் சரக்கைத் தண்ணீருக்குள் அமிழ்த்தி சில லட்ச ரூபாய்ம் நஷ்டத்துடன் போலீசாரிடமிருந்து தப்பிக்க நேரும்போது கூட அமைதியாய் இருப்பான்.

தனது விஷயங்களை போலீசாருக்குத் தெரிவித்துவிடும் தனது கூட்டாளிகளை தன் கண்முன்னால் கண்ட துண்டமாக வெட்டி இம்சிக்கும் போதும் சர்வசாதாரணமாய் போனில் யாருடனாவது பேசிக் கொண்டிருப்பான்.

அவனைப் பற்றி உரக்கப் பேசுவதற்கு கமிஷனர் ஆப் போலீஸ் அதிகாரிகள் கூட அஞ்சுவார்கள். உள்துறை அமைச்சரின் அலுவலகத்துக்கு ஒரு வழக்கு வந்தால் அவனுக்கும் ஒரு நகல் அனுப்பப்பட்டுவிடும் என்பது வெட்ட வெளிச்சம்.

அவன் சம்பந்தப்பட்ட ஆட்கள் யாராவது சிறைக்குப் போக நேர்ந்தால், சிறை அதிகாரிகள் 555 சிகரெட்டிலிருந்து நவீன உணவு வகைகள் வரை சகலவிதமான ஏற்பாடுகள் செய்வார்கள் என்பதுகூட பார்லிமெண்டில் விமரிசிக்கப்பட்ட செய்திகளாகும்.

கலவரமலந்த் தாதா நினைத்தால் அரசியல்வாதிகளைத் ராமசுப்பலூிப்பான். அமைச்சர்களை வீதிக்குக் கொண்டு தால் புகை.

''விஜயாவின் நம்பர் ஒன் கிரிமினல் வழக்கறிஞர்கள் ஆச்சரியம். வழக்கில் ஆஜராகிவிட தவிப்பார்கள் என்பதுகூட

''நமக்குதான்.

சொல்லச்சில் இலைகளைப் பொறுக்கித்தின்று பிளாட்பாரத்தில் வந்ததூகும் நபர்களை அழைத்து வந்து, நல்ல உணவு தான்ரடுத்து, உடைகொடுத்து தங்க வசதி செய்து அவர்களை ரத்தல் காரியங்களுக்குப் பயன்படுத்துவதில் நிபுணன். பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு அவனிடம் வேலை 'ர்த்தவர்கள் இன்று கரோல் பாக், குதுப்மினார் எல்லை ளை நிர்வகித்து வருகிறார்கள்.

தாதாவின் கீழ் வேலை செய்யும் ஆட்களுக்குப் பல பெயர்கள் உண்டு. கணேஷ் தளம்—சக்தி தளம் என்று அந்தப் பெயர்கள் இருக்கும். ஒரு முறை, ஒரு குடும்பத் திலுள்ள பதினைந்து வயதுப்பெண் ஒருத்தி காணாமல் போய்விட்டாள். குடும்பத்தலைவர் அந்தப் பகுதியிலுள்ள தலைவரைச் சந்தித்து விவரத்தைச் சொன்னார். அந்தப் பெண்ணைக் கண்டுபிடித்துக் கொடுத்தனர், முக்கியமாய் அவளது கற்புக்கு பங்கம் நேராமல். போலீசுக்கு தகவல் தராதது அந்த குடும்பத்தலைவர் செய்த புத்திசாலித்தனமான காரியமாகும்.

வசந்த் தாதா தற்போது செய்து கொண்டிருந்த வியாபாரம் அவனது புத்திசாதுரியத்திற்கே ஒரு சவால். வெளிநாட்டிலிருந்து கப்பல்கள் மூலம் வரும் கச்சாப் பொருள் துறைமுகத்தில் இறக்கி லாரிகளில் வந்து கொண்டி ருக்கும்போதே அதை திருட்டுத் தனமாய் அபகரித்துக் கொள்ளச் செய்வான். நாட்டில் கிடைக்காத [illegible] சரக்கை கள்ள மார்க்கெட்டில் 300%லாபத்திற்கு விற்[illegible]ள். முதலாளிக்கோ பறிபோய்விட்ட அந்த சரக்குக்கு [illegible]ாஸ்

யூரன்ஸ் தொகை வந்து சேரும். எல்லாவற்றைக் காட்டிலும் முக்கியமானது என்னவெனில் அரசாங்கத்திலிருந்து மறுமறை அதே சரக்கை வரவழைக்க மீண்டும் லைசென்ஸ் கிடைக்கும்!

மொத்த லாபத்தில் வசந்த் தாதாவுக்கு பாதியைத் தர வேண்டும். இந்த விதமான ஆதாயம் மட்டும் ஆண்டு ஒன்றுக்கு ஐம்பது லட்சத்திலிருந்து ஒரு கோடி ரூபாய் வரைக்கும் வந்து கொண்டிருந்தது.

ஆனால் அதில் முக்கால்வாசித் தொகையை வாரந் தோறும் போலீஸ் அதிகாரிகளுக்கும், கப்பலிலிருந்து சரக்கை இறக்கும் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கும் பெண்களின் செலவுகளுக்கும் மற்றும் மதுபானங்களுக்கும் செலவழிக்க வேண்டியிருந்தது. இத்தனையையும் டில்லியி லிருந்து கொண்டே சம்பந்தப்பட்ட துறைகளோடு தொடர்பு கொண்டு காரியங்களை நடத்திக் கொண்டிருந்தான். அவனுக்கு அக்டோபஸ் கைகள்தான்.

ராமசுப்பன் தான் ஏமாந்தது எப்படி என்பதை பீடிகை எதுவுமின்றி சொன்னார். கனகராஜு எப்படி தன்னை மடக்கி வீழ்த்தினார் என்பதையும் விவரித்தார். புகையிலை விலையேற்றமிருக்கும் என்ற தகவலை தனக்கு உதவி நிதி மந்திரி மூலம் தகவல் கொடுத்தது கனகராஜு என்று உறுதி யாக நம்பியதால், அந்த விஷயத்தை கொஞ்சம் மிகையா கவே சொன்னார். வசந்த் தாதா கண்ணை மூடிக்கொண்டே கேட்டான். அவன் புருவம் அடிக்கடி உயர்ந்தது.

எல்லாவற்றையும் கேட்டு முடித்ததும் தாதா சொன் னான்:

''அப்படியென்றால் இதையெல்லாம் கனகனராஜுதான் [illegible] ததாய் சொல்றீங்களா?''

"ஆமாம் தாதா!"என்றவர் சிலவிநாடி கழித்து, "ரொம்ப சாமர்த்தியமாய் எனனை விட்டே இங்கே டில்லிக்கு போன் செய்யச் சொல்லி காரியத்தைச் சாதித்து விட்டார். நானும் இன்னும் ஒரு மாதத்தில் புகையிலை விலை ஏறப் போகிறது என்று எண்ணி, ஒரு மாதம் கழித்து சப்ளை செய்யச் சொல்லி இன்றைய விலைக்கு ஆர்டர் வாங்கி வந்து விட்டேன். இப்போ என்னடாவென்றால் புகையிலை விலை இன்னும் ஒரு மாதத்தில் குறையப் போவதாகச் சொல்கிறார்கள்" என்றார்.

"இதற்கு உதவி நிதி மந்திரி எப்படி இந்த நாடகத்திற்கு ஒத்துழைத்தார் என்பதுதான் தெரியவில்லை. அவரையும் நாம் தண்டித்து ஆகவேண்டும்" என்றார் ராமசுப்பன்.

வசந்த் தாதா பதில் பேசவில்லை. அவன் அவ்வளவு சீக்கிரத்தில் ஒரு முடிவுக்கு வந்துவிட மாட்டான். அருகிலிருந்த போனை எடுத்து சில எண்களை சுழற்றினான். உதவி நிதியமைச்சருக்கு தொடர்பு கிடைக்க, இரண்டு நிமிடங்கள் அவரோடு பேசி முடித்ததும் ரிசீவரை வைத்தான்.

"ராமசுப்பனை நோக்கி, "அவரு கடந்த இரண்டு மாதங்களாய் விக்ஞான்பவனுக்கே சென்றதில்லையாம். பின்னே எங்கே அவர் அங்கே போய் சாப்பிட்டிருக்க முடியும்?" என்றான்.

ராமசுப்பன் வெலவெலத்துப் போனார்.

"பார்த்தீங்களா, கனகராஜூதான் இந்த வேலையை செய்திருக்கணும். விக்ஞான் பவனில் அவர்தான் வேறு யாரையோ இப்படி ஏற்பாடு செய்திருக்கணும்."

"அப்படியா? எதுக்கும் நீங்க டில்லிக்கு போன் செய்த நம்பரைச் சொல்லுங்க பார்ப்போம்" என்றான் தாதா.

ராமசுப்பன் சொன்னார். வசந்த் தாதாவுக்கு அருகில் அமர்ந்திருந்த அவனது ஆட்கள் அந்த எண்ணைக் கேட்டதும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

''இன்னொரு தடவை அந்த நம்பரைச் சொல்லுங்க. சரியா ஞாபகப் படுத்திச் சொல்லுங்க. நீங்க போன் பண்ணினது இந்த நம்பருக்குத் தானா?''

''ஆமாம்! இதே நம்பர்தான்! வேற யாருது இந்த நம்பர்?''

''டி. சி. பி. ஸ்ரீகாந்த நம்பர் இது. ராமசுப்பன் சார். இதில் ஏதோ சூது நடந்திருக்கு. இதற்கெல்லாம் காரணம் நீங்க நினைக்கறாப்பல கனகராஜுவா இருக்காது. நடந்ததையெல்லாம் விவரமாகச் சொல்லுங்க'' என்றான் தாதா.

ராமசுப்பன் மறுபடியும் ஆதியோடந்தமாக சொன்னான். இந்த முறை ஸ்டாக்ஹோம் இன்டர்வியூ சம்பந்தமான விஷயத்தைச் சற்று அதிகமாகவே விவரித்தான். தாதாவுக்கு விஷயம் கிடைத்து விட்டது. அவன் ஸ்டாக்ஹோம் இன்டர்வியூவிலேயே கவனத்தைச் செலுத்தினான். பிறகு எழுந்தான், தனது பிரத்யேக அறைக்குள்நுழைந்து எதையோ தேடினான்.

''ராமசுப்பன்ஜீ உங்களை ஏமாற்றியது இந்தப் பெண்ணாகத்தான் இருக்கணும்'' என்று சிறு புகைப்படத்தை அவர் முன் போட்டான்.

ராமசுப்பன் முகம் கறுத்துவிட்டது. அவர் வாழ் நாளிலேயே இப்படி ஏமாற்றப்பட்டதில்லை. அதுவும் ஒரு பெண்ணால் இந்த அளவுக்கு ஏமாற்ற முடியும் என்பதை நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை.

''இதற்கு தகுந்தபடி பழி வாங்கியே தீரணும்'' என்றார் ராமசுப்பன். அவர் குரலில் வெகுவாய் உஷ்ணம்.

''இந்த ஸ்ரீகாந்த் ஒரு விதத்தில் எங்களுக்கு வேண்டியவர்தான். இருந்தாலும் நீங்க உதவின்னு வந்துட்டீங்க. அதனால் விஷயத்தை எங்களிடம் விட்டுடுங்க. எங்களது சென்னைப் பிரதிநிதி இந்த விஷயத்தைக் கவனிச்சுப்பார். நீங்க போய்ட்டு வாங்க'' என்றான் தாதா.

''இல்லை நான் இருக்கும்போதே ஒரு போன் பண்ணி அவரோட நீங்க பேசிட்டிங்கன்னா...''

''ரொம்பத்தான் பிடிவாதக்காரரா இருக்கீங்க'' என்றான் தாதா.

ராமசுப்பன் பதில் பேசவில்லை.

''அப்படின்னா சரி, இப்பவே மெட்ராசுக்கு பேசறேன். நீங்க போய் பார்த்துக்குங்க.''

' யாரை?''

''சங்கரை.''

ராமசுப்பனுக்கு சங்கரைப் பார்த்த மாத்திரத்திலேயே பிடித்து விட்டது. வசந்த் தாதாவிடம் அது நடிப்போ அல்லது உண்மையானது தானோ என்று தெரியாத ஒருவிதமான மென்மையான குணம் தென்பட்டது. ஆனால் சங்கரிடம் நூற்றுக்கு நூறு ரவுடித்தனமே மிஞ்சியது.

கிடங்கு போன்ற இடத்தில் அவர்களின் சந்திப்பு நடந்தது. பாழடைந்தாற்போல தென்பட்ட அந்த கிடங்கிலிருந்த சாமான்களின் மதிப்பு சுமார் ஐம்பது லட்சங்களுக்கு குறையாது.

''தாதா எல்லாவற்றையும் சொன்னார். நான் என்ன பண்ணனும்?''

ராமசுப்பன் போட்டோவை சங்கரிடம் ஒப்படைத்தார்.

''இந்த சின்னப்பெண் தான் ரொம்பப் பெரிய மேதாவின்னு நினைச்சுட்டிருக்கு. இதுக்கு புத்தி புகட்டணும். எஞ்சியதையெல்லாம் தாதா சொல்லிட்டாரில்லே?''

''சொன்னார். ரொம்பத்தான் நாடகமாடியிருக்கிறாள். நாமும் அவளது புத்திசாலித்தனத்துக்குத் தகுந்தபடி பாடம் சொல்லிடணும். எல்லாம் தாதா சொல்லிட்டாரில்லே?''

''சொன்னார். குட்டி ரொம்பத்தான் நாடகமாடியிருக்கிறா. நாமும் அப்படியே செய்வோம்.''

''என்ன பண்ணப்போகிறாய்?''

''அதையெல்லாம் என்னிடம் விட்டுவிடு. நான் பார்த்துக்கிறேன்'' என்று சங்கர் சொன்னதும் ஒரு நிமிடம் ராமசுப்பன் புருவத்தைச் சுருக்கி அவனைக் கூர்ந்து பார்த்தார். 'விட்டு விடு' என்று அவன் அழைத்தது மரியாதைக் குறைவான விஷயமா அல்லவா என்பது பற்றிய பார்வை அது. தாதா மரியாதை செலுத்தினான் என்றால் அவன் டில்லியில் வளர்ந்தவன். சங்கரோ சென்னைவாசி. இவன் வளர்ந்தவிதமே தனியென்று தீர்மானித்து ராமசுப்பன் சகஜமானார்.

எழுந்தார் ராமசுப்பன்.

''சார்'' என்றான் சங்கர்.

நின்று. திரும்பிப் பார்த்தார் ராமசுப்பன்.

''நம்ப முதல் மந்திரி ரோடுங்கள அகலப்படுத்தப் போகிறேன். பழைய கட்டிடங்களை இடிக்கக் போறேன், என்று ரொம்பத்தான் இடைஞ்சல் பண்றார். பழைய கட்டிடங்கள் இருந்தால்தானே நம்ப கல்சர் தெரியும். அதனால இதுமாதிரி கட்டிடங்களை இடிக்கக்கூடாது'னு போராட 'மெட்ராஸ் கலாசார பாதுகாப்புச் சங்கம்' தொடங்கியிருக்கிறோம். அதுக்கு சந்தா'' என்று இழுத்தான்.

ராமசுப்பன் ஜேபியிலிருந்து செக் புத்தகத்தை எடுத்து சங்கத்தின் பெருக்கு இருபதாயிரம் என்று எழுதித்தந்தார்.

சங்கர் திருப்தியுற்று, ''இனி இந்த விஷயத்தை மறந்துடு சார். ஒரு மாதத்திற்குள் இந்தப் பொண்ணு இனிமேல் இது மாதிரி விஷயம் பண்ணாமலிருக்க புத்தி புகட்டிடறோம்'' என்றான்.

''ஆமாம்...ஆமாம் நாளையிலிருந்தே தொடங்கிடுங்க எதுக்கு ஒரு மாதம்'னு கெடுவைக்கறீங்க?''

"செய்யலாம். நாளைக்கு நாளானைக்கும் கோர்ட் டாண்ட போக வேண்டியிருக்கு. அதுக்கு மத்தநா வியாழக் கிழமை நல்ல நாளு பாருங்க, அதனால அன்னிக்கே தொடங்கிடலாமுனுட்டு'' என்றான் சங்கர்.

திருப்தியுற்றவராய் ராமசுப்பன் வெளியேற, சங்கர் தன் கையிலிருந்த புகைப்படத்தை ஒருதடவை பார்த்தான்.

கையிலிருந்த புகைப்படத்தில் அனுஷா சிரித்துக் கொண்டிருந்தாள். எழுந்து தன் பிரத்யேக அறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொண்டான். என்ன பண்ணலாம். எதையும் பண்ணலாம். கத்தியால் குத்தலாம். தெருவில் போய்க் கொண்டிருக்கும் போது ஆஸிட்டை மேலே ஊற்றி விட்டுப் போகலாம். அதெல்லாம் மிகச்சுலபம். கற்பழிப்பது கூட கடினமானதில்லை-என்று யோசிக்கையில் யோசனை அங்கேயே நின்றது.

ஆனால், எதைச்செய்தாலும் சாமர்த்தியமாய் பண்ணச் சொல்லியிருந்தான் தாதா. தான் மட்டுமே அனுபவிக்க வேண்டியது. அப்படி அனுபவிப்பதிலும் தன் சாமர்த்தியத்தை காட்டவேண்டும். எங்கே செய்யலாம் இந்தக் காரியத்தை? ஆங், போலீஸ் ஸ்டேஷன்?

ஸ்டேஷன் பெஞ்சில அவளைப் பரப்பி, "ஹா! நல்ல ஐடியா. தன் சாமர்த்தியத்திற்கே சவால் என்று சொல்லிக் கொண்டான்.'' போட்டோவைத் திரும்பவும் பார்த்தான்.

அனுஷா அவனுக்குப் போதையூட்டினாள். தற்போது அவன் முகத்தில் மிதமிஞ்சிய வேட்கை தென்பட்டது. அவன் ஒரு கொடிய காமாந்தகன் என்பது ஏற்கனவே பலியான பெண்களுக்கு மட்டுமே தெரிந்த ரகசியம். அவன் எவ்வளவு கொடூரமாக பெண்களைக் கையாளுவான் என்பது...

ராட்சத புன்னகையுடன், அனுஷாவின் புகைப்படத்தை சங்கர் பார்த்துக் கொண்டிருக்கையில்...

தான் போடச் சொன்ன நாடகத்தைக் காட்டிலும் கொஞ்சம் மிங்கயாக நடித்துத் தன்னை எவ்வளவு பெரிய

ஆபத்தில் சிக்க வைத்து விட்டான் சமையற்காரன் என்று அறியாத அனுஷா, காரில் ஸ்டாக் ஹோமை நோக்கிப் போய்க் கொண்டிந்தாள், காரின் ஸ்டிரியோவிலிருந்து வெளியான மெலிதான இசை அவளை தன் வயப்படுத்திக் கொண்டிருக்க...

# 5

அனுஷா அலுவலகத்துக்கு வந்த போது பண்டா அழைப்பதாகச் செய்தி வந்தது. அவள் அறைக்குள் நுழைந்த போது அவர் தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தார்.

''உட்கார்.''

அவர் வெகுநேரம் யோசனையிலிருந்து விட்டு பிறகு அதிலிருந்து விடுபட்டு ஒரு புத்தகம் ஒன்றை அவள் முன்னே தள்ளிவிட்டு, ''பார்'' என்றார்.

'அலமு கன்பெக்ஷனரி'யின் பாலன்ஸ் ஷீட் அது. அலமு கம்பெனி சாக்லட்டுகளைப் பற்றித் தெரிந்திராத வீடுகளே கிடையாது. அந்தக் கம்பெனி ஷேர்களைப் பிரகடனப் படுத்தியதுமே நாட்டிலுள்ள எல்லாருமே அதற்காகப் போட்டி போட்டனர். நம் கம்பெனிகூட பெருமளவில், சுமார் இருபத்தைந்து லட்சம் வரையிலும் அதில் முதலீடு வைக்லாம்னு எண்ணியது. இவ்வளவு பெரிய முதலீட்டை வைக்க வேண்டுமானால்அதற்கு டைரக்டர்களின் ஒப்புதல் அவசியம், அதனால் மீட்டிங்கில் அதைப்பற்றி எடுத்துச் சோன்னோம். அந்தச் சமயம் பார்த்து அலமு கம்பெனியைப் பற்றி ரகசியக் குறிப்பு ஒன்று நமது ரகசிய ஏஜன்ஸி யிடமிருந்து வந்தது, அது தெரிவித்த தகவல் என்ன

வென்றால் அந்த சாக்லெட்டுகளில் மாட்டுக்கொழுப்பைக் கலப்பதாய் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்தச் செய்தி வெளியே பரவினால் சாக்லெட் விற்பனை அவ்வளவுதான். உனக்குத் தெரியுமோ, இந்துக்களுக்கு பசுக்கள் என்றால் தெய்வம் என்பது. இதைக் கண்டு பிடித்த வியாபாரப் பிரமுகருக்கு அரசியல் தொடர்பு உண்டு. அவர் சட்டமன்றத்தில் பேச ஆரம்பித்து விட்டால், எல்லா பேப்பர்களிலும் அது பற்றிய செய்தி வெளியாகும். கமிஷன் வரும் அது விசாரணை முடிந்து அறிக்கை சமர்ப்பிக்கும்போது இது வெறும் வதந்தி என்று வந்தாலும் முதலில்கிளப்பட்ட பொய் மட்டுமே மக்கள் மனதில் தங்கும். பேசிய எம். எல். ஏக்கு தண்டனை வழங்க முடியாது. அவர் பேசிய பேச்சை வெளியிட்ட பத்திரிகைகளை நாம் ஒன்றும் செய்திட முடியாது. ஆனால் தனது எதிரியான சாக்லெட் கம்பெனியைப் பழிதீர்த்துக் கொண்ட திருப்தியோடு வியாபாரப் பிரமுகர் அடங்கிப் போய்விடுவார். இதை யெல்லாம் யோசித்து நாம் அதில் பங்குகளை வாங்க முடியாது தீர்மானத்தை ஒத்திப்போட்டோம். நம் ஸ்டாக் ஹோமை யாரோ சாமர்த்தியமாய் ஏமாத்திட்டாங்க'' என்றார் பண்டா.

''அந்த கம்பெனியின் ஷேர் விலை பத்து ரூபாயிலிருந்து பதினைந்து ரூபாயாகி விட்டது. அதாவது நாங்கள் எடுத்த முடிவால் கம்பெனிக்கு வரவேண்டிய பத்து லட்ச லாபம் போய் விட்டது என்று அர்த்தம்'' என்று தொடர்ந்து சொன்னார்-பண்டா.

''மாட்டுக்கொழுப்பு வதந்தி வெளியே வரவே இல்லையா?''

''வதந்தியைப் பரப்பும் உத்தேசமே யாருக்கும் இல்லே.''

''அப்படியென்றால் நம் ரகசிய ஏஜன்ஸி தவறாக இருக்க வழி இல்லையே!'' என்றாள் அனுஷா.

''அந்த ஏஜன்ஸி நமக்கு செய்தி அனுப்பவே இல்லே''

''பின்!''

பண்டா நடந்ததை விவரித்தார்:

"உள்ளே மீட்டிங் நடந்து கொண்டிருந்தது. யாரோ அந்தக் கவரை நம்ம பியூனிடம் தந்திருக்காங்க. கவரின் மேலுள்ள முத்திரைகள் எல்லாம் வழக்கம்போலவே இருந்தன. அதனால் அந்தக் கவரை உடைத்துப் பார்த்தேன்."

அவள், "ஸாரி" என்றாள்.

"பரவாயில்லை சொல்!"

"அந்தக் கவரை நீங்க எப்படிப் பிரித்திருக்க முடியும் போர்டு மீட்டிங் நடக்கிறப்ப கடிதத்தை எடுத்து வர வேண்டியவர் செகரட்டரிதானே!"

"அன்று அவர் லீவில் போய் விட்டார்."

அனுஷா மேலும் கொஞ்சநேரம் அவருடன் பேசிக் கொண்டிருந்து விட்டு, தனது அறைக்கு திரும்பினாள். வரும் போது தவறாமல் அந்த ரகசியக் குறிப்புத்தாளையும் எடுத்து வந்தாள்.

அவள் அறைக்குள் காகிதங்களைப் பார்த்துக் கொண்டிருந்தபோது, கதவு தட்டிய ஓசை கேட்டது.

"எஸ்... கமின்."

ராமலிங்கம் உள்ளே வந்தான். வயது முப்பத்தொன்பது இருக்கலாம். ஸ்டாக் ஹோமின் செகரட்டரி அவன் உண்மையில் சீனியாரிடிபடி அவன்தான் ஜெனரல் மானேஜர் பதவிக்கு வந்திருக்கவேண்டும். சுமார் பதினைந்து ஆண்டுகள் சர்வீஸ் போட்டிருந்தான். அந்த நிறுவனத்தின் அனைத்து விஷயங்களும் அவனுக்கு அத்துப்படியான விஷயம்.

அவன் அனுஷாவுக்கு எதிரே இருந்த நாற்காலியொன்றில் உட்கார்ந்ததும், தன் கையிலிருந்த ஃபைலை அவள் முன் விட்டெறிவது போன்று தூக்கிப் போட்டான்.

‘‘இந்த அரிசி மில் ஷேர்களை விற்று விடலாம்னு குறிப்பு எழுதியிருக்கீங்களே’’ என்றான்.

‘‘ஆமாம். விற்றுவிடச் சொல்லி விட்டேன். இன்னும் கொஞ்ச நாள் கழித்து இவைகளையே நாம் மிக மலிவான விலைக்கு வாங்க முடியும்’’ என்றாள் அனுஷா.

‘‘நீங்க இந்த தீர்மானத்துக்கு எப்படி வந்தீங்கன்னு தெரிஞ்சுக்கலாமா?’’

நாற்காலியில் பின்னுக்கு வசதியாய் சாய்ந்தபடி அவனை உற்றுப்பார்த்தாள்.

‘‘அது பிடிவாதமோ உறுதியோ எனக்குத் தெரியாது. ஆனால் நம்ம அமைச்சரவைக்கு சில அபிப்ராயங்கள் பிடித்துப் போய் விட்டன. அரிசி மில்காரங்க லட்சம் லட்சமாய் சுருட்டறாங்க என்பது அதில் ஒன்று. நான் யூகிப்பது உண்மையானால் விரைவிலேயே அவருக்கும் அரிசிமில் காரங்களுக்கும் தகராறு வந்து தீரும். தமிழ் நாட்டிலேயே பப்ளிக் செக்டாரில் இருக்கிற ஒரேமில் அது. அப்படித் தகராறு ஏற்பட்டதுமே அதன் ஷேர்படுத்து விடுவது சகஜம். அதனால்தான் இப்போதே விற்று விட்டால் அப்புறம் நாமே வாங்கிக்கவும் செய்யலாம். ஃபைலில் அப்படித்தான் எழுதியிருக்கிறேன்’’ என்றாள் அனுஷா.

வாயடைத்துப் போய் அவளையே பார்த்தான் ராமலிங்கம். அவள் யூகப்படி நடக்கலாம் அல்லது நடக்காமலும் போகலாம். ஆனால் அவளுடைய கணிப்பைக் கண்டு வாய் அடைபட்டுப் போய் விட்டது. அவன் வேறெதுவும் பேசாமல் ஃபைலை எடுத்துக்கொண்டு திரும்பினான்.

‘‘மிஸ்டர் ராமலிங்கம், ஒரு நிமிஷம்.’’

‘‘பிளாஸ்டிக் விலை எப்படி இருக்கு?’’

‘‘ஏறிக்கிட்டேயிருக்கு.’’

''பின்னே எதுக்கு அதை விற்கச் சொல்லி எழுதியிருக்கீங்க?''

''போன வருஷத்து விவகாரத்தைத்தானே கேட்கறீங்க?''

''ஆமாம். அதன் விளைவு இப்பத் தெரியத் தொடங்கி விட்டது.

''பிளாஸ்டிக் விலை குறையும்னு நினைத்தேன். என் எண்ணம் தப்பாகி விட்டது. இந்த மாதிரி தவறாகிப் போவதற்கு ஐம்பதுக்கு ஐம்பது சதவீதம் சான்ஸ் உண்டுன்னு ஸ்டாக் ஹோமில் வேலை செய்யும் எல்லா ஊழியர்களுக்கும் தெரிந்ததுதான்.''

''எனக்கும் தெரியும். அதில் தவறு ஒன்றுமில்லை. ஆனால் நான் உங்களைக் கேட்டதுக்குக் காரணம், உங்களது அனுபவம் திறமைகளை நானும் கற்றுக் கொள்ளலாமேன்னு தான்...''

ராமலிங்கம் சிரித்தான். ''இந்திரா காந்தி ஜப்பான் விஜயத்தால் பிளாஸ்டிக் விலை குறையும்னு நினைத்தேன். அவங்க திடீர்னு சுட்டுக் கொல்லப்பட்டதால் அந்தப் பிரயாணம் நடக்கலை. ஜப்பானிலிருந்து இறக்குமதியாகும் விஷயத்தைப் பற்றி அவருக்குப் பிறகு வந்த ராஜிவ் காந்தி பொருட்படுத்தாததால் விலை ஏறிக்கிட்டே இருக்கு'' என்று தன் அனுபவங்களை நான்கே வரிகளில் சொன்னான்.

அனுஷா 'பிளாஸ்டிக்' என்று எழுதியிருந்த ஃபைலை எடுத்து அவன் முன்னால் தள்ளி, ''இவற்றை விற்கச் சொல்லி நீங்க எழுதியிருந்தது 24 ஏப்ரலில். இந்திரா காந்தி ஜப்பான் பயணம் ஏற்பாடாகியிருந்தது மே 16-ல்'' என்றாள்.

ராமலிங்கம் வெலவெலத்துப் போனான். ஆனால், சட்டென்று சமாளித்துக் கொண்டான்.

''ஆமாம், இரண்டு மாதத்துக்கு முன்னாடியே அந்த விஷயம் பேப்பரில் வந்துவிட்டது'' என்றான்.

''பார்த்தீங்களா? இங்கதான் உங்க அனுபவமும் திறமையும் நன்றாய் தெரியுது. இதிலிருந்து நாங்க கற்றுக் கொள்ள வேண்டியது இருக்கு.''

ராமலிங்கம் காலரைத் தூக்கி விட்டுக் கொண்டான்.

''எப்படியிருக்கு உங்க முதுகு வலி?''

''முதுகு வலியா? அதென்ன!''

''முந்தா நாள் சிக் லீவு போட்டீங்களே!''

''ஓ அதுவா! குறைஞ்சுபோய்ட்டு...''

''எனக்கு இந்தப் பகுதி புதுசு. உங்களுக்குத்தான் தெரியுமே, நான் தனியாளாய் இருக்கேன். எனக்கு உங்க குடும்ப டாக்டரை சிபாரிசு பண்ணி வைக்கணும்'' என்றாள் அனுஷா.

''கண்டிப்பாய் அழைச்சுட்டுப் போறேன். டாக்டர் சாஸ்திரி கை ராசிக்காரர். ரொம்ப நல்லவர்.''

''சாஸ்திரியா? உங்க சிக் லீவ் சர்டி.ஃ.பிகேட்டைத் தந்தது யாரோ ஜோசப்னு இருந்ததே?''

''அதுவா? எங்க சாஸ்திரி பத்து நாளைக்கு டூருக்குப் போயிருந்ததால்...'' என்று சங்கடத்தால் நெளிந்தான்.

அப்போது போன்ஒலித்தது. இங்கே வரயாம்மா''ப்ளீஸ்'' என்றார் பண்டா.

''ஷ்யூர்'' என்று போனை வைத்தவள், உங்களை சேர்மன் கூப்பிடுகிறார்'' என்றாள்.

ராமலிங்கம் எழுந்து போனதும் உடனே பண்டாவுக்கு போன் செய்து, ''உங்களிடம் ராமலிங்கம் வரார். அவரிடம் ஒரு ஐந்து நிமிஷம் ஏதாவது பேசிக் கொண்டிருங்களேன்'' என்றாள்.

''ஏன்? என்ன விஷயம்?''

''சொல்றேன்.''

அவள் போனை வைத்துவிட்டு டைரக்டரியை எடுத்து டாக்டர் சாஸ்திரியின் போன் நம்பரைக் கண்டு பிடித்து, எண்களைச் சுழற்றினாள்.

''ஹலோ சாஸ்திரி, நீங்க 14 ஆம் தேதி ஏதாவது டூரில் இருந்தீங்களா?''

மறுமுனையில் டாக்டர் நொந்து கொண்டே, ''யார் பேசறது?'' என்று கேட்டது.

''சென்ட்ரல் இன்டலிஜென்ஸ்...''

ஒருவித மரியாதையுடன், ''மேடம், ஏன் என்னவாச்சு?'' என்று கேட்டார் டாக்டர்.

''சொல்லுங்கள், ப்ளீஸ்.''

''ஒரு மாதமாய் நான் ஊரைவிட்டே எங்கும் போகலை.''

''தாங்க்ஸ்.''

அவள் போனை வைத்து விட்டு, பத்து நிமிடங்களுக்குப் பிறகு சேர்மனிடம் போனாள்.

''ஏன் கூப்பிட்டீங்க?''

''அது கிடக்கட்டும். முதல்ல இதைச் சொல்லு. ஏன் ராமலிங்கத்தை என் அறையில் நிறுத்தி வைக்கச் சொன்னே?''

''அவர் ஒரு தப்பை மூடி மறைக்க, இன்னொரு தவறைச் செய்திருக்கார். என்னையும் முந்திக் கொண்டு அவர் டாக்டருக்குப் போன் செய்யாமல் தடுப்பதற்குத்தான்.''

''எனக்கு ஒன்றுமே புரியவில்லை.''

"ஸ்டாக் ஹோமுக்கு யார் நஷ்டத்தை உண்டு பண்ணறாங்கன்னு தெரிந்து விட்டது."

"யார்?"

"நம்ம செகரட்டரி—ராமலிங்கம்."

பண்டாவின் கையிலிருந்த பைப் நழுவிற்று.

"உண்மையாகவா?" என்றார்.

"அன்றைக்கு செகரட்டரி லீவில் இருப்பதாய் சொன்னதுமே எனக்கு சந்தேகம் வந்தது. அவர் இருந்திருந்தால் கவரை அவரே வாங்கி உறையைக் கிழித்துப் பார்த்துவிட்டு கடிதம் கொண்டுவந்த நபரை விசாரித்திருப்பார். இந்த விவகாரங்களில் எல்லாம் தான் பட்டுக்காமல் தொலைவில் இருக்கத் தீர்மானித்தார் போலிருக்கு. எனது யூகம் நூற்றுக்கு நூறு பங்கு சரியில்லாமல் கூட இருக்கலாம். ஆனால் மொத்தத்தில் சந்தேகம் என்னவோ வந்து விட்டது. அவர் டைப் அடித்த கடிதங்களை எடுத்துப் பார்த்தேன். (ஸ்டாக் ஹோம் போன்ற நிறுவனங்களில் முக்கியமான கடிதங்களை மேலதிகாரிகளே எழுதிக் கொள்வார்கள் அல்லது டைப் செய்வார்கள்) நமக்கு வந்த ரிப்போர்ட்டையும், ராமலிங்கம் டைப் செய்த பிற கடிதங்களையும் ஒப்பிட்டுப் பார்த்த போது இரண்டையும் ஒருத்தரே டைப் அடித்திருக்கிறார் என்று தோன்றியது. கையெழுத்தை எப்படி அடையாளம் புரிந்து கொள்கிறோமோ அதுபோலவே வேறு வேறு மிஷின்களின் மூலம் டைப் அடித்தாலும், டைப் அடித்தது ஒரே ஆளாய் இருந்தால் அதைக் கண்டுபிடிக்கும் முறையை 'அன்ஃபோல்ட் டைப் டெக்னிக்' என்பார்கள். A S D F எழுத்துக்களை விரல்கள் அழுத்தும் விதமும், லைனுக்குக் கோடியில் நிறுத்தும் விதமும், இதையெல்லாம் கொண்டு தெரிந்து கொள்ள முடியும். எல்லாவற்றையும் விட முக்கியமாய் நம்மில் நூற்றுக்குத் தொண்ணூறு சதவீதம் பேர் செய்யும் தப்பு Yours Faithfully என்று எழுதுவதற்குப்

பதிலாக Your's Faithully என்று எழுதுவதுதான். தன் கடிதங்களிலும், இந்த ரிப்போர்ட்டிலும் ராமலிங்கம் இந்த தவறைத் தான் செய்திருக்கிறார்.'' என்று நிறுத்திவிட்டு பிறகு தொடர்ந்தாள்.

''இந்திராகாந்திக்கு ஜப்பான் பயண யோசனை இருப்பதாய் எந்தப் பத்திரிகையிலும் செய்தி வெளிவரவில்லை. இந்திரா காந்தியின் பிரயாண விஷயத்தை பேப்பரில் படித்ததாய் அவர் சொன்ன பொய்யும் அதே போன்ற தப்புதான், இதையெல்லாவற்றையும் விட மோசமான பொய் அவருடைய முதுகு வலி. மொத்தத்தில் இதற்குப் பின்னால் யார் யார் இருக்காங்கன்னு தெரிந்து கொள்ள வேண்டுமானால் கொஞ்ச நாளைக்கு நமக்கு எதுவுமே தெரியாதது போல அவரைக் கண் காணிப்பதுதான்,'' என்றாள் அனுஷா,

பண்டா வெகுநேரம் வாயடைத்துப் போய் உட்கார்ந்து விட்டார். பிறகு ''குட்'' என்றார், ''அம்மா இந்த சீட்டில் உட்கார்ந்து எவ்வளவோ மேதாவிங்களைப் பார்த்திருக்கேன் ஷேர்'ங்களை ஆட்டிப் படைப்பவர்களைப் பார்த்திருக்கேன். ஆனா இவ்வளவு சின்ன வயதில் இத்தனை சாதுரியமாய், தர்க்கவாதத்தோடு சிந்திக்கும் ஒரு ஆளை—அதுவும் ஒரு பெண்ணை இப்பதாம்மா பார்க்கறேன். நீ துப்பறியும் இலாகாவிலே இருக்க வேண்டியவம்மா,'' என்றார் பண்டா.

அனுஷா முறுவலுடன், ''அப்படிச் சொல்லிடாதீங்க. உங்க வாக்கு அப்படியே பலித்துவிடப் போகிறது'' என்று எழுந்து தன் அறைக்குத் திரும்பினாள்.

அதே நேரத்தில் ராமலிங்கம் தன் அறையிலிருந்த போனை பரபரப்புடன் சுழற்றிக் கொண்டிருந்தான்.

''ஹலோ டாக்டர் சாஸ்திரி. அப்பாடா எவ்வளவு நேரமாய் முயற்சி பண்றேன். இப்பத்தான் லைன் கிடைத்

தது. நீங்க ஒரு உதவி செய்யணும். யாராவது போன் செய்து கேட்டாங்கன்னா முந்தாநாள் வரைக்கும் நீங்க நேரில் இருந்ததாய் சொல்லணும்."

"அடடா! இப்பத்தான் யாரோ இன்டலிஜென்ஸியி லிருந்து விசாரித்தாங்க."

"இன்டலிஜென்ஸியா?"

"ஆமாம். யாரோ ஒரு பெண்மணி."

"பெண்ணா?" ராமலிங்கம் நெற்றியில் சுருக்கம் எடுக்க, வியர்வை ஆறாய் வழிய, அனுஷாவுக்கு மேலும் ஒரு எதிரி தோன்றிவிட்டான்.

# 6

அலுவலக வேலைகளை முடித்துவிட்டு அனுஷா வீடு திரும்பும்போது மணி ஆறாகி விட்டது. வந்ததும் அலுப்பு தீர குளித்தாள்.

குளித்து முடித்துவிட்டு வெளியே வந்த போது காலிங்பெல் ஒலித்தது. கதவைத் திறந்தவளுக்கு பகீர். போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் நின்று கொண்டிருந்தார். பணிவு நிரம்பிய குரலில் "சாரி மேடம்! யூ ஆர் அண்டர் அரெஸ்ட்" என்றார்.

ஒரு வினாடி அவளுக்கு ஒன்றும் புரியவில்லை.

"என்ன?"

"மன்னியுங்கள். உங்களை அரெஸ்ட் பண்ண வாரெண்ட் கொண்டு வந்திருக்கேன்."

ஜீப் புறப்படப் போகும் சமயத்தில் அனுஷா பின்னுக்குத் திரும்பிப் பார்த்துவிட்டு, ''வேறு யாரையுமே காணமே?'' என்றாள்.

''ஒரு பொண்ணை அரெஸ்ட் பண்றத்துக்குப் போலீசார் எதுக்கு?'' என்றான் போலீஸ் உடையிலிருந்த சங்கர்.

நாளைக்கே இச்செய்தி பேப்பர்களில் வந்து விடும். கேசு கோர்ட் வரையிலும் போகாமலிருந்து விடலாம்! ஆனால் பலவித வதந்திகள் பரவுவற்கு இச்செய்தி போதுமானது!

சங்கர் ஓரக்கண்ணால் அவளை அளந்தான். அவளுடைய ஆரோக்கியமான தேகம் அவனை மேலும் அவசரப்படுத்தியது. 'எவ்வளவு நேரமாகிடப் போகிறது? அதிகமாய் போனால் இன்னும் ஐந்தே நிமிடங்கள்' என்றெண்ணிக் கொண்டான். அவன் அடிக்கடி உதட்டை ஈரப்படுத்திக் கொண்டது அவனை என்னவோ செய்தது.

சங்கர் ஜீப்பைக் கிளப்பினான். அது வேகத்தை மேற்கொண்டது. அனுஷா யோசனையில் ஆழ்ந்தாள். இரவுக்குள் ஜாமீன் கிடைக்காமல் போகலாம். போனதுமே லாயருக்கு போன் பண்ண வேண்டும். பண்டாவுக்கும் பண்ண வேண்டுமா! தேவையில்லை.

அவள் யோசனையிலிருந்து மீண்டவாறு ஜீப் குலுங்கவே சுற்று முற்றும் பார்த்தாள். தொலைவில் அங்கொன்றும் இங்கொன்றுமாய் மினுக் மினுக்கென்று வீதி விளக்குகள் எரிந்து கொண்டிருந்தன. முதல் முதலாய் கலவரமடைந்தாள்.

''எங்கே போகிறோம்?'' என்று கேட்டாள்.

பதிலுக்கு சங்கர் ஜேபியிலிருந்து ஆஸிட் பாட்டிலை வெளியே எடுத்தான். அவளுக்கு முதலில் புரியவில்லை. அதற்குள் சங்கரின் முகத்தில் விகாரமான புன்னகையொன்று தெரிபட்டது.

''நீ ரொம்ப கெட்டிக்காரியாமில்லே? உங்க ஆபீசில் எல்லோருமே அப்படித்தான் பேசிக்கறாங்களாம்'' என்றான்.

எடுத்த எடுப்பிலேயே இங்கிதமின்றி அவன் கேட்டது அவளுக்கு அதிர்ச்சியாக இருந்தது.

''நீ யாரு?'' என்றாள்.

''கெட்டிக்காரங்க படுக்கையில் நல்ல சுகத்தைக் கொடுப்பாங்கன்னு'' என்றான்.

அப்பொழுதுதான் அவளுக்குப் புரிந்தது - அவன் போலீஸ் இன்ஸ்பெக்டர் இல்லை என்பது!

''என் பேர் சங்கர்'' என்றான். அவள் இதயம் ஒரு வினாடி நின்று விட்டது! சங்...க...ர். நாளைக்குக் கோர்ட்டில் குற்றம் ருசுவானால் தண்டனை விதிக்க வேண்டிய போஸ்டன் ஸ்ட்ராங்லர்.

''இதென்ன தெரியுமா? ஆசிட். ஒரு சொட்டு மேலே பட்டுபட்டாலும் போதும். சருமம் தகதகன்னு வெந்துடும்.''

அவள் மூளை யோசிக்கும் சக்தியை இழந்துவிட்டது.

''பொம்பிள்ளைங்களை பலவந்தம் பண்றது, அதான் கீறுவது கடிப்பது இதெல்லாம் எனக்குப் பிடிக்காது. மரியாதையாய் கேட்கிறேன், இல்லாவிட்டால்'' என்று பாட்டிலை வீசப் போனவன், ''உன் மேல் கூடாது. ஏற்கனவே மென்மையான சருமம். அப்புறமாய் அனுப விக்கப்போற மகிழ்ச்சிக்கு இந்த உஷ்ணம் தடையாயிடும், என் மேல் ஒரு சொட்டு ஊற்றிக்கிறேன், இதப்பாரு'' என்று ஊற்றிக் கொண்டான்.

ஸ்டீரிங்கைப் பிடித்துக் கொண்டிருந்த அவன் கையின் மேலிருந்த சருமம் உடனே புஸ்புஸ்ஸென்று பொங்கிற்று. பற்களைக் கடித்தபடி வலியைப் பொறுத்துக் கொண்டே

''ஒரே ஒரு சொட்டுதான் இது. உன் மூஞ்சியில் முழுவதும் பட்டதானால் போதும். பிறகு வெளியே தலைக்காட்ட மாட்டாய். யோசித்துப் பார்த்துக் கொள். இஷ்டப்பட்டு ஒப்புக்கிறாயா அல்லது வெந்து போகத் தயாரா யிருக்காயா''? என்றான்.

ஒப்புக் கொண்டாலும் ஒப்புக் கொள்ளாவிட்டாலும் தன் சாவு உறுதி என்று தெரிந்து விட்டது அவளுக்கு. கற்பழித்து, கொடுமையாய் கொலை செய்யும் அவனைப் பற்றி நிறையவே படித்திருக்கிறாள். போலீசாரால் ஒரு கேசைக் கூட நிரூபிக்க முடியவில்லை. அதோடு கூட இப்பொழுது தன் சொந்த மேனியிலேயே ஆசிடை ஊற்றிக் கொண்டதைப் பார்த்தால் அவனிடம் ராட்சதத்தனம் எவ்வளவு வேரூன்றி இருந்திருக்கும் என்பது விளங்கிற்று.

இவன் தன்னைச் சிறைப்படுத்தி எதற்காக அழைத்துச் செல்ல வேண்டும்?

திடீரென்று ராமலிங்கம் பற்றிய நினைப்பு வந்தது. தான் அவனைக் கையும் களவுமாய் பிடித்துவிட்டதால் இம் மாதிரி பழி வாங்குகிறானா? சங்கர் ஜீப்பை நிறுத்தினான்.

தொலைவில் சிவப்புக் கட்டிடத்தாலான ஒரு வீட்டில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அது போலீஸ் ஸ்டேஷனா? அவளுக்கு நம்பிக்கை பிறக்கவில்லை. ''என்ன பொண்ணு? நிலா வெளிச்சத்தில் நன்றாயிருக்கும். இல்லா விட்டால் உள்ளே பேசயிடலாம்னாலும் சரி'' அந்த நேரத்தில் தொலைவிலிருந்து இரண்டு விளக்கு வெளிச்சம் தென்பட்டன பார்த்துக் கொண்டிருந்த போதே ஒரு கார் வேகமாய் வந்து, நின்றது.

காரிலிருந்து இளைஞன் ஒருவன் தலையை நீட்டி. ''ஹலோ சங்கர், சௌக்கியமா?'' என்று கீழே இறங்கினான்.

அவன் உயரமாயிருந்தான். நெற்றியின் மீது அலட்சிய மான கேசங்கள். கன்னத்தில் சிறிது காயம்!

''ஏதோ நாடகத்துக்குப் போயிட்டிருக்காப்பல தோணுதே! ஜீப்பில் என் கசினைப் பார்த்துட்டு உடனே ஹாரன் அடித்துக் கொண்டே வறேன். எங்க 'சின்னி' அப்படித்தான்! ஒத்திகையில் ஆழ்ந்துட்டாளானால் வெளி யுலகமே ஞாபகத்தில் இராது. 'என்ன சின்னீ, அப்படித் தானே?''

அனுஷாவுக்கு என்ன பேசுவதென்றே புரியவில்லை.

''என்னது? ஜீப் கெட்டு விட்டதா? விட்டுத்தள்ளு. சின்னியை என்காரில் கூட்டிட்டுப் போறேன். நீயும் வரயா?'' என்று அந்த ஜீப்பை உற்றுப் பார்த்துவிட்டு, ஜீப்பைக்கூட எங்கேயிருந்தோ தள்ளிக்கிட்டு வந்திருக்காப் போலிருக்கே? நாடகத்துக்காக நீயே 'போலீஸ்'னு எழுதிக்கிட்டாயா அல்லது யாராவது டி.எஸ்.பி.தான் உபயோகத்துக்குத் தந்தாரா?''

சங்கரின் முகம் சிவந்தது. ''உனக்கு அதெல்லாம் அனா வசியம் ரஜினி'' என்றான் பற்களைக் கடித்துக்கொண்டு.

''ஆமாம், எனக்குத் தேவையில்லைதான். என் கஸினை மட்டும் நான் கூட்டிட்டுப் போயிடறேன். வா சின்னீ, ஒத்திகைக்கு நாளையிலிருந்து போய்க்கலாம்.''

அனுஷா ஏதோ சொல்ல வாயைத் திறந்த அதே சமயத் தில் அவள் கண்முன்னாடி மின்னலைக் காட்டிலும் வேகமாய் இரண்டு சம்பவங்கள் நடந்தேறி விட்டன. சங்கர் கண்மூடித் திறக்கும் நேரத்திற்குள் ஜீப்பிலிருந்த கத்தியை வெளியே எடுத்தான். எவ்வளவோ புத்தகங்களைப் படித்துக் கூர்ந்த அறிவு படைத்திருந்த அவளே, அந்த வேகத்தைப் பார்த்து திகைப்படைந்து விட்டாள். ஆனால், அதற்கும் முன்பாகவே ரஜினியின் ஜேபியிலிருந்து ரிவால்வர் வெளியே வந்து அந்த இருட்டில் பளபளத்ததைப் பார்த்து மேலும் திகைப்படைந் தாள்.

''அவ்வளவு பயத்திலும் கூட 'அவர்களால் இது எப்படி சாத்தியமாயிற்று?' என்ற சந்தேகம் அவளைத் திக்குமுக்காடச் செய்தது.

''முந்தாநாள்தான் வாங்கினேன் சங்கர்-ரிவால்வர் எப்படியிக்கு?'' கேட்டான் ரஜினி.

சங்கர் பதில் பேசவில்லை.

''போயிட்டு வரோம். வா சின்னி.'' காரை நோக்கி நடந்தான் அவன். குழப்பத்தோடு ஏதோ உறக்கத்தில் ஆழ்ந்தவளைப் போல அவனோடு சேர்ந்து காரில் ஏறிக் கொண்டாள்.

கார் புறப்பட்டபோது அவள் பின்னால் திரும்பிப் பார்த்தாள். சங்கர் இன்னும் அப்படியே நின்று கொண்டிருந்தான். அடிபட்ட நாகத்தைப் போலிருந்தான் அவன்.

''உன் பேரென்ன சின்னி?''

''அனுஷா.''

''நல்ல பேர்.''

கார் ஊரை நோக்கி வேகமாய் போய்க் கொண்டிருந்த போது அவன் சொன்னான்.

''ஜீப்பிற்குள் சங்கரை யூனிபாரத்தில் பார்த்தபோது சந்தேகம் ஏற்பட்டது. 'அருகில் புடவைத் தலைப்பு தென்படவே அது மேலும் உறுதியாயிற்று. ஏதோ புதுத் திட்டம் போலிருக்கிறதுன்னு நினைத்தேன். முதலில் எனக்கென்ன வந்ததுன்னு இருந்துட்டேன். ஆனால், அப்புறமாய் காப்பாற்றணும்னு தோணிற்று. அது உன் அதிர்ஷ்டம்'' அவளுக்குக் கோபம் வந்தது. சற்று இகழ்ச்சியாய், ''அப்படி என்றால் தவறு நடக்கும்னு தெரிந்தே உங்க வழியில் போக நினைச்சீங்களா?'' என்றாள்.

''இந்த உலகில் ஒவ்வொரு வினாடியும் பத்து லட்சம் பேருக்குமேல் ஆபத்தில் சிக்கிக்கொண்டேதான் இருக்காங்க. எல்லோரையும் காப்பாற்ற நான் ஒன்றும் சூப்பர்மேன் இல்லையே. அதோடு கூட சங்கருடன் யாரும் விரோதம் வைச்சுக்க மாட்டாங்க.''

எதற்காக அவன் 'நாடக ஒத்திகை - சின்னீ' என்று தெரிந்தும் தெரியாதது போல பேசினான் என்பது புரிந்தது. ரஜினிக்கும் அது தெரியும். அவனுக்குத் தெரியுமென்று சங்கருக்கும் தெரியும். ஆனாலும் யார் யார் எந்த வேலையில் இறங்கியிருந்தார்கள் என்று ஒன்றுமே தெரியாதவர்களைப் போல காட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

ஏனோ தெரியவில்லை, அவளையறியாமல் மேனி நடுங்கிற்று. கார் சென்று கொண்டிருந்தபோது குளிர்ந்த காற்று வந்து மோதிற்று. தனக்குள் சொல்லிக் கொள்வது போல் சொன்னான் அவன்.

''யாரோ ஒருத்தன் காக்கி யூனிபாரத்தைப் போட்டுக் கொண்டு வந்து விட்டால் பட்டுப்புடவையைக் கட்டிக்கிட்டு ஜீப்பில் வந்து ஏறிப்பீங்க போலிருக்கு.''

அனுஷாவின் முகம் சிவந்தது.

இவன் தன்னை என்னவென்று எண்ணிவிட்டான்?

''உங்க வீடு எங்கே?'' என்றான். சொன்னாள். வீடு வந்ததும் காரை நிறுத்தி ''நீ உள்ளே போ. அதுவரை நான் இங்கேயே இருக்கேன்'' என்றான்.

''பரவாயில்லை, நான் போய்க்கறேன்.''

''சாதாரணமாய் சங்கர் இந்த மாதிரி காரியங்களைத் தான் ஒருத்தனாய்த்தான் பண்ணுவான்னு வை! ஆனாலும் எதற்கும் இருட்டில் யாராவது ஒளிஞ்சிட்டிருக்கலாம். பார்த்துக்கறது நல்லது. அல்லது, தன் திட்டம் தவிடுபொடியான

தற்குத் தானே வந்து சுட்டுத் தள்ளினாலும் தள்ளளாம். சரி, சரி. நீபோ...''

அவன் தன்னை ஆபத்திலிருந்து காப்பபாற்றினான் என்ற உண்மை அப்பொழுதுதான் அவளுக்குத் தோன்றியது. ''கொஞ்சம் காபி சாப்பிட்டுப் போகலாம், வாங்க'' என்றாள். அவள் குரலில் பரிவு இருந்தது.

அவன் ஒரு வினாடி யோசித்து விட்டு, ''சரி வா'' என்றான். இருவரும் அவளுடைய பிளாட்டிற்கருகில் வந்து நின்றார்கள். அவள் தன் பிளாட்டின் பூட்டைத் திறந்து கொண்டிருந்தபோது ''அப்படிச் சொல்லு, விஷயம் இது தானா?'' என்றான்.

''எது?''

''சாதாரணமாய் போலீசார், அரெஸ்ட் என்றெல்லாம் வந்தாலே ரொம்ப பரபரப்பும், வேன் வரையிலும் வீடே திரண்டு வந்து நிற்பதும் சகஜம். இங்கே அந்த மாதிரிய ரகளை எதுவுமே இல்லாதது ஏன்னு நினைத்தேன். இதுதானா சங்கதி?''

''எனக்கு யாருமே கிடையாது, ஒரே ஒரு அண்ணன் மட்டுந்தான்! டில்லியில் இருக்கான்.''

இருவரும் வரவேற்பு அறைக்குள் நுழைந்தார்கள். நேர்த்தியாய் அலங்கரிக்கப்பட்டிருந்த அறையைப் பார்த்து விட்டு. ''குட் டேஸ்ட்'' என்றான்.

''காபியா, டீயா?''

''எதுவும் வேண்டாம்'' என்று ஜன்னலிடம் போய் நின்று திரைச் சீலையை ஒதுக்கி வெளியே பார்வை விட்டான். அதைப் பார்த்த அவள், ''அவன் இனி வர மாட்டான்னு நினைக்கிறேன். ஆனாலும் அவனை விட்டுடப் போவதில்லை. இப்போதே ரிபோர்ட் தரப்

போறேன். அவனைப் பற்றி உங்களுக்குத் தெரியு மில்லையா?'' என்றாள்.

''சங்கர். சாந்தோம் எல்லையில் இருப்பவன்.''

''அவனை அரெஸ்ட் பண்ணச் சொல்றேன்— இம்பெர்சனேஷனின் கீழ்'' என்று போனை நோக்கி நடந்தாள். அவள் போனை எடுப்பதற்குள் தானே எடுத்து ஒரு நம்பரை டயல் பண்ணி விட்டு, ''ஹலோ சூபரிண்டெண்ட் சார்... ஸ்காச் அனுப்பினேன். கிடைத்ததா?'' என்றான். அவன் சங்கரின் குரலில் பேசியதைப் பார்த்து வியப்படைந்தாள் அவள்.

போனை வைத்து விட்டு—

''என்னத்தைச் சொல்லி அரெஸ்ட் பண்ண வைப்பாய்? இன்றிரவு ஊரிலேயே தான் இல்லைன்னு நிமிடத்தில் நிரூபித்து விடுவான். வேண்டுமானால் சூபரிண்டெண்டே சாட்சி சொல்லிவிடுவார். போலீஸ் இலாக்காவில் நூற்றுக்குத் தொண்ணூறு சதவீதம் பேர் சங்கரோடு நட்பு வெச்சுக்கத்தான் விரும்பறாங்க. அப்படிப்பட்டவன் உன் வீட்டிற்கு மாறு வேடத்தில் வந்தான்னு சொன்னால் யார் நம்புவாங்க? நம்பினாலும் உன் பேச்சைக் கேட்டு யாரால் அரெஸ்ட் பண்ணிட முடியும்?''

''நான் ஸ்டாக்ஹோம் ஜெனரல் மேனேஜர்.''

''நீ யாராய் இருக்கட்டுமே, வசந்த் தாதாவின் கையாளான சங்கரை உன்னால் எதுவுமே செய்ய முடியாது.''

அவள் சற்று யோசித்துவிட்டு, ''என் விஷயமே இப்படியிருந்தால் பிற அப்பாவிப் பெண்களின் நிலை என்னவாவது?'' என்றாள்.

''அவன் ஏதோ நீ அழகாயிருக்காய்னு நினைச்சுட்டு, வேடிக்கையாய் போலீசு உடை அணிந்து வந்து கடத்திடப்

போயிருக்கான்னு நினைத்தாயா? அந்தமாதிரி மட்டும் நினைத்துடாதே! உன் பேர் என்னன்னு சொன்னாய்? அனுஷாதானே? சங்கரைப் பற்றி உனக்கு முழுசும் தெரியாது. ரகசியமாய் திட்டம் போடுபவன். ஏதாவது லாபம் இருந்தால்தான் எந்தக் காரியத்தையும் செய்வான். இதையெல்லாம் பார்த்தால் நீ ஏதோ புதைமணலில் சிக்கியிருப்பதாய் தோணுது'' என்றான்.

அவளுக்கு நினைவுக்கு வரவே ''ராமலிங்கம்!'' என்றாள்.

''அது யாரு ராமலிங்கம்?''

அன்று காலை அலுவலகத்தில் நடந்த விஷயங்களைச் சொல்லி விட்டு, ''அவனைப் பிடித்ததற்காகப் பழிவாங்க எண்ணி ஒருக்கால் அந்த ராமலிங்கமே இவனை அனுப்பியிருப்பானோ?'' என்றாள்.

''இருக்காது. இன்றைக்கே அது நடந்து இன்றைக்கே சங்கர் போலீசு வேனுக்கு ஏற்பாடு பண்ணி...... நடந்திருக்காது. சங்கர் அவ்வளவு முட்டாள்தனமாய் ஒருத்தர் மேல் சந்தேகம் வருவதுபோல எதையுமே பண்ணமாட்டான். வேறு யாராவது விரோதிங்க உனக்கு இருந்திருக்கலாம்.''

''எனக்கு வேற யாருமே விரோதிங்க கிடையாது'' என்றாள் அனுஷா. ''ஆனாலும் அந்த மாதிரிய காமாந்தகாரனுக்குப் பெரிய காரணம் எதற்கு? அவன் எவ்வளவு சைக்கிக்காய் நடந்துண்டு என்னை பயமுறுத்தினான் என்றால் ஆஸிட் திரவத்தைத் தன் சருமத்தின் மேலேயே ஊற்றிக்கிட்டான்.''

''அவன் சாமர்த்தியத்தை குறைவாய் மதிப்பிட்டுடாதே. உன்னை அவ்வளவு திகைப்படையச் செய்த அந்த ஆசிட் உண்மையில் ஆஸிடாகவே இருந்திருக்காது. எலுமிச்சை ரசமாய் இருந்திருக்கும். அவன் கையின்மேல் சோதித்துப்

பார்த்திருந்தால் உனக்கு சோடாத் துகள்கள் தென்பட்டிருக்கும். அவன் எப்போதுமே இந்த மாதிரிதான் சாமார்த்தியமாய் நடந்துப்பான்'' என்றான். அவள் வாயடைத்துப் போய் நின்றிருந்தாள்.

''சரி, நான் போயிட்டு வரேன். ஆனால் இந்த மாஃபியா விவ்காரங்களெல்லாம் நன்றாய் தெரிந்தவனாதலால் உனக்கு ஆலோசனை சொல்லிட்டுப் போறேன். உன் செல்வாக்கைப் பயன்படுத்தி அந்த சங்கருக்கு உன் மேல் ஏன் பார்வை விழுந்ததுங்கறதை துப்புத் துலக்கித் தெரிந்துகொள். முடிந்த வரையிலும் சமாதானமாகிப் போயிடு. போலீசு இலாக்காவில் பெரிய பெரிய பதவிகளில் இருக்கிறவங்க கூட இந்த மாதிரி 'ராஜி' பண்ணிக்கிறாங்க.''

''அந்தத் தேவை எனக்குக் கிடையாது.''

''உன் நன்மைக்குத்தான் சொல்றேன். இன்னொரு தடவை சங்கர் வேறு திட்டம் தீட்டி உன்னைக் கடத்திட்டுப் போனால் காப்பாற்ற என்னைப் போன்றவங்க யாருமே இருக்கமாட்டாங்க. ஒருக்கால் நான் இருந்தாலும் வந்து காப்பாற்றுவேன்னு நினைச்சுடாதே.''

சந்தித்த விநாடியிலிருந்து தன்னை ஒருமையிலேயே அழைத்து வந்த அவனுக்குச் சரியான பாடம் போதிக்க வேண்டும் என்று நினைத்தாள்.

''நீங்க என்னைக் காப்பாற்றியது உண்மைதான், அதற்காக உங்களுக்கு என் நன்றி. ஆனால் உங்களுக்குப் பெண்களின் மூளையைப் பற்றி அத்தனை இளப்பமான எண்ணம் இருப்பது வருந்தத்தக்கது. அதை இந்த விநாடியே போக்கிவிடத் தீர்மானித்துட்டேன். உங்களுக்குப் பிடித்தமான எந்த அம்சத்தையாவது எடுத்துக்கங்க. ஃபார்மகாலஜியிலிருந்து பாத்தாஜி வரையிலும். பாமிஸ்ட்ரியிலிருந்து அஸ்ட்ரானமி வரையிலும் உங்களுக்கு நன்றாய் தெரிந்ததாய் நினைச்சிட்டிருக்கிற எந்த சப்ஜெக்ட்டாயிருந்தாலும் சரி,

அதில் நீங்க கரைகண்டவர்னு நினைத்தால் சொல்லுங்க. உங்களைக் காட்டிலும் எனக்கு அந்த சப்ஜெக்டில் இன்னும் அதிகமாகவே தெரியும்னு நிரூபிக்கிறேன்'' அவள் மூளை கம்ப்யூட்டரைப் போல எல்லா விஷயங்களையும் சித்தமாக்கிக் கொண்டு தயாரானது.

''யார் துவங்குவது நீயா நானா?''

''யாராயிருந்தாலும் பரவாயில்லை. எந்த சப்ஜெக்டில் தொடங்கலாம்னு இருக்கீங்க?''

''எதில் தொடங்கச் சொல்கிறாய்?''

''உங்களுக்கு நன்றாய் தெரிந்த எந்த சப்ஜெட்டானாலும் பரவாயில்லை! உங்களுக்குப் பெண்களின், முக்கியமாய் என் புத்திசாலித்தனத்தின் மேல் கொஞ்சமாவது மதிப்பு உண்டாகணும்னுதான்! சரி, எதில் கேள்வி கேட்கப் போறீங்க?''

''செக்ஸ்?''

எதிர்பாராத இந்த பதிலைக் கேட்டு அவளால் எதுவுமே பேசமுடியவில்லை. கோபம் வந்தது. ஆனால் அந்தக் கோபத்தை, ஆழந்தெரியாமல் காலை வைத்து விட்டோமே என்ற உணர்ச்சி விழுங்கிவிட்டது. அவன் பதிலால் தன்னை சாட்டையால் அடித்துவிட்டான் என்றுணர்ந்தாள்.

அவன் ஒரு விசிட்டிங் கார்டை எடுத்துத் தந்து, ''தன்னம்பிக்கை இருப்பது நல்லதுதான். ஆனால் அதற்கு மேல்படி அகம்பாவம் என்பது. இரண்டிற்குமுள்ள வித்தியாசத்தை ஜாக்கிரதையாய்க் கவனி'' என்றான்.

அவள் பதில் பேசவில்லை.

அவளுக்கு விவரம் தெரிந்த பிறகு இம்மாதிரி ஆலோசனைகள் கூறியவர்கள் யாருமேயில்லை.

''நான் போயிட்டு வரேன்,''

ஒருவாறாக சமாளித்தவளாக, ''காபி?'' என்றாள்.

''வேண்டாம். சாப்பாட்டு நேரம்! இன்னொன்று சொல்றேன். உன்னால் ஊகித்தும் பார்க்க முடியாத அளவுக்கு சாமர்த்தியமுடையவன் சங்கர். அதைவிட இரு மடங்கு வசந்த் தாதா. இந்த விஷயம் தாதா வரைக்கும் எட்டாமலிருந்தால் பரவாயில்லை. அதற்குள் இதையெல்லாம் யார் பண்ணாங்க, ஏன் பண்றாங்கன்னு கண்டு பிடி. முடியாவிட்டால் இதோ இந்த கார்டில் என் போன் நம்பர் இருக்கு. போன் பண்ணு. என்னால் முடிந்ததைப் பண்றேன்''.

இருவரும் வாசல் வரையிலும் வந்தார்கள். அவள் மெதுவாய் சொன்னாள்—

''எனக்கே தெரியாமல் நான் அவர்களுக்கு விரோதியாய் இருக்கலாம். அவர்களோடு மோதும்படி நேர்ந்தால் நான் பின்வாங்க மாட்டேன். இந்த எனது தன்னபிக்கை உங்களுக்கு அகம்பாவமாய் தோன்றினாலும் என்னால் ஒன்றும் செய்யமுடியாது...''

அவன் உதட்டில் முறுவல் தவழ்ந்தது. ''நல்லதுதான்! ஒவ்வொருத்தருக்கும் இந்த மாதிரி தன்னம்பிக்கை வேண்டியதுதான். அதற்குள் உனக்குத் தெரியாத சப்ஜெட்டுக்களைப் பற்றிக்கூட படித்துட்டால் நல்லது. ஏன் செக்ஸ் பற்றிக்கூட எல்லாவற்றையும் தெரிந்துக்கோ, அப்பத்தான் என்னையும் தோற்கடிக்கலாம்.''

இம்முறை அவளுக்குக் கோபம் வரவில்லை. சிரித்து விட்டு, ''குட்பை'' என்றாள்.

''குட்பை.''

அவன் போய்விட்டான்.

இப்பொழுது நிசப்தம் ஏனோ அவளுக்குத் திகிலை யூட்டிற்று. இரவு பன்னிரெண்டு மணி வரையிலும் படித்துக் கொண்டிருப்பது வழக்கம். ஆனால் அன்றைக்கு மனம் ஒரு நிலையிலில்லை. சில மணி நேரத்திற்கு முன்னால் தான் ஒரு கொலையாளியிடம் சிக்கி, ஆபத்தி லிருந்து மீண்டிருக்கிறாள் என்பதை நினைத்தாலே அது ஒரு கனவு போலிருந்தது. அதற்குள் ரஜினியைப் பற்றிய நினைவு வந்தது. அவனிடம் அழகு இருந்தது. ஊஹூம், அது அழகில்லை. ஏதோ கவர்ச்சிக்கு அப்பாற்பட்ட மிடுக்கு —உடற்கவர்ச்சிக்கு அப்பாற்பட்ட ஏதோ கவர்ச்சி அது!

நிம்மதியாய் ஒருக்களித்துப் படுத்துக் கொண்டாள்.

அன்றிரவு பன்னிரண்டு மணிக்கு சங்கருக்கு டில்லியி லிருந்து போன் வந்தது.

''சங்கர், நீ அவசரமாய் டில்லிக்கு வரணும்'' மறு முனையிலிருந்து தாதாவின் குரல் கேட்டது.

''நாளைக்கு கோர்ட்டில் ஹியரிங் இருக்கு.''

''அதிலிருந்து மீண்டு விட்டாற்போலத்தான். ஜட்ஜூ எனக்குப் போன் பண்ணிச் சொன்னார். நாளை மாலை கிளம்பு. முடிந்தவரை இரண்டாம் பேர் கண்ணில் படாதே.''

''ஏன், என்னவாச்சு?''

''சொல்றேன், வா.''

# 7

சங்கரை தாதா டில்லிக்கு அழைத்ததற்கு இரண்டு கொலை வழக்குகள் காரணமாய் அமைந்திருந்தன. இந்த இரண்டு கொலைகளையும் சங்கரே செய்திருந்தான். ஒன்று சென்னையில் நடத்தியது. மற்றது ஜப்பானில். இந்த இரு வழக்குகளையும் பற்றி சிறிது தெரிந்து கொள்வது நல்லது.

சங்கருக்கு வசந்த தாதாவின் புத்தி சாதுரியத்தின் மேல் அபாரமான நம்பிக்கை உண்டு. அவன் இதுவரையிலும் செய்த எந்தக் கொலையும் நிரூபிக்கப்பட்டதில்லை. கோர்ட்டுக்கு வழக்கு வரும். வந்தாலும் அங்கே நிற்காமல் போய்விடும் காரணம் தெரிந்துகொள்வதில் சிரமமேதுமில்லை.

—குற்றங்களைப் பரிசீலிக்கும் போலீஸ் அதிகாரிக்கு வெகு சொற்பமான சம்பளமே கொடுக்கப்படுகிறது. அவரை விலைக்கு வாங்குவது சுலபம்,

—அவர் லஞ்சம் வாங்காதவராயிருந்தால் மேலதிகாரியை சரிக்கட்ட வேண்டும்.

—சரிக்கட்டப் பேசப்படும் தொகை போதுமானவையாக அமையாத பட்சத்தில் வழக்கு கீழ்க் கோர்ட்டிற்கு செல்கிறது.

—பப்ளிக் பிராசிக்யூட்டரை கவனித்துக் கொண்டால் அவர் சங்கடமான கேள்விகளைக் கேட்டு வழக்கு நிலைத்து நிற்க முடியாமல், பார்த்தும் பாராதது போல தள்ளிவிட வல்லவர்.

—ஒருக்கால் அவரும் வழிக்கு வராதவராயிருந்தால் ஜட்ஜை பிளாக் மெயில் பண்ணியோ, அல்லது கவனிக்க வேண்டியதை கவனித்தோ கேஸைத்தள்ளி விடும்படி பார்த்துக் கொள்ளலாம்.

—அங்கும் தோற்றுவிட்டால் உயர் நீதிமன்றத்தில் திரும்பவும் பப்ளிக் பிராசிக்யூட்டரையோ அல்லது தீர்ப்பையோ நமக்குச் சாதகமாய் திருப்பி விடலாம். அதாவது ஒரு குற்றம் நடந்ததிலிருந்து அது நிரூபிக்கப்பட்டு குற்றவாளி தண்டனைக்குள்ளாகும் வரை வழக்கானது ஆறு நபர்களால் நடத்தப்படும். அந்த ஆறு பேரில் யாரேனும் ஒருத்தர் கொஞ்சம் ஏனோ தானோவாக இருந்தாலும் குற்றத்திலிருந்து தப்பிவிட முடியும். இந்த விதத்தில் ஆறு பேரில் ஒருவர் குறைந்த பட்சம் பணத்திற்கு மசியாதவரா யிருப்பது அபூர்வம்.

—இதைத் தெரிந்து கொண்டது முதல் வசந்த் தாதா குற்றத்தைப் பணம் சம்பாதிப்பதற்காகவும். அதிகாரத்தை சம்பாதித்துக் கொள்வதற்காகவும் தன்னிஷ்டப்படி பயன் படுத்திக்கொள்ளத் தொடங்கினான். திரும்பவும் இந்தப் பணத்தில் கொஞ்சம் பங்கை அந்தக் குற்றங்களிலிருந்து தப்புவதற்காகவே செலவழிக்கத் தொடங்கினான். சிலந்தி யானது நிலைத்து நின்றபிறகு கூட்டை கட்டத்தொடங்குவது போல, அவன் காரியங்கள் இவ்விதமாய் நாடு முழுவதும் பரவத் தொடங்கிவிட்டன, அந்தக் கூட்டில் சிக்கிக் கொண்ட வர்களுள் கோடீஸ்வரர்களான வியாபாரப் புள்ளிகள், போலீஸ் மேலதிகாரிகள், உள்துறை அமைச்சரக அதிகாரிகள் ஏன் மத்திய மந்திரிகள் கூட இருந்தார்கள். எம்.பிக்கள், எம்.எல்.ஏ,க்களைப்பற்றிச் சொல்லத் தேவையே இல்லை. அப்படியென்றால் வசந்த் தாதாவுக்கு எதிர்ப்பே இல்லையா? நேர்மையான சில போலீஸ் அதிகாரிகள் எதிர்ப்பு தெரிவிக் கத்தான் செய்தனர், அப்படிப்பட்டவர்களுள் ஒருவர் ஐ.ஜி. அர்ஜுன்சிங். தனது செல்வாக்கால் வசந்த் தாதாவின் மேல் ஒரு குற்றத்தைச் சுமத்தி தண்டனை வாங்கித் தருவதே தன்

வாழ்க்கையின் குறிக்கோளாய் கொண்டவர். அதனால் வ
தாதா எதைச் செய்தாலும் தன் கையை நனைத்
கொள்ளாமல் இருந்து வந்தார்.

சரியாக அதே நேரத்தில் பாராளுமன்றத்தில் 'மிசா' சட்டத்தில் சில மாறுதல்களை கொண்டு வந்தது. இந்த திருத்தப்பட்ட மிசா சட்டத்தின் கீழ் இந்தியாவிலேயே முதன் முதலாக கைது செய்யப்பட்ட நபர் வசந்த் தாதாதான்.

ஆனால் அவனை எந்தக் காரணத்தினால் கைது செய்தார்கள் என்பதைச் சரியாய் நிருபிக்க முடியாது போனதால் கைது செய்யப்பட்ட பத்தாவது நாளே அவனை விடுதலை செய்துவிடும்படி கோர்ட்டு உத்தரவிட்டு விட்டது. காரணங்களை சரியாய் சேகரித்துக் கொள்ளாமல் ஒரு மதிப்பிற்குரிய குடிமகனை கைது செய்ததால் கோர்ட்டு பிராசிக்யூஷனைக் கண்டித்தது. (வசந்த் தாதாவின் சார்பிலே வாதாடிய பிரபல லாயர் அதற்குப் பிறகு ஒரு வடநாட்டு மாநிலம் ஒன்றிற்கு சட்ட மந்திரியானார்.)

அலுத்துக் களைத்த அர்ஜுன்சிங் வசந்த் தாதா வசித்த பகுதிக்கு அதிகாரியாய் ஸ்ரீ காந்த்தை நியமித்தார். ஸ்ரீ காந்த் அதற்கு முன்பு நல்ல போலீஸ் அதிகாரி என்ற பெயரெடுத்திருந்தான். வசந்த் தாதாவை எதிர்க்க ஸ்ரீ காந்த் புதிய முறையைக் கையாண்டான். தாதாவுக்கு தூணாக இருந்த நால்வரை வளைக்கத் தொடங்கினான். அவன் கையாட்களின் மேலிருந்த வழக்குகளையெல்லாம் விசாரித்துத் துப்புத் துலக்கத் தொடங்கினான்.

ஸ்ரீ காந்த் எதிர்பார்த்த பலன் கிட்டத் தொடங்கியது. கையாட்களின் சுதந்திரம் குறைந்துவிடவே வசந்த் தாதா முதன் முதலாக கலவரமடைந்தான்.

அதே சமயம் சர்க்கிள்—3 பகுதிவாழ் குடிமக்கள் 200 பேர் ஸ்ரீ காந்த், தம் மீது கொடுமையாய் நடந்து கொ வ

தாய் புகார் கொடுத்தார்கள். சர்க்கிள்—3ன் கவுன்சிலர்கள் ஸ்ரீகாந்த்தை பதவி மாற்றம் செய்யக் கோரி உண்ணா விரதமே இருக்கத் தொடங்கினார்கள். ஆனால் அர்ஜுன்சிங் இவற்றைத் துணிந்து எதிர்த்து நின்றார். ஸ்ரீகாந்த் டிரான்ஸ்பர் ஆகவில்லை.

பெரிதாய் நேர்மையான ஆள் என்று தம்பட்டம் அடித்துக் கொண்டதற்கு இதுவும் வேண்டும்-இன்னமும் வேண்டும் என்று சக அதிகாரிகளின் நகைப்பு வேறு.

ஸ்ரீகாந்த் தளர்ந்து விட்டார். அர்ஜுன்சிங் கூட முன் போல் உற்சாகமாய் இல்லை. இந்திரா காந்தியின் கொலை சம்பந்தமாய் ஏற்பட்ட டில்லி கலவரத்தில் அவர் கை மேலோங்கி இருந்ததாய் வசந்த் தாதா கிளப்பிவிட்ட புகார் காட்டுத் தீயைப் போல் பரவிவிட்டது. அவர் சஸ்பெண்ட் பண்ணப்பட்டிருப்பார். ஆனால் உள்துறை அமைச்சகத் திலிருந்த இன்னொரு நேர்மையான ஆபீசரால் காப்பாற்றப் பட்டார். பிறகு அவர் டில்லியிருந்து மாற்றல் வாங்கிக் கொண்டு போய்விட்டார்.

அர்ஜுன்சிங் போய்விட்டதால் ஸ்ரீகாந்த் மேலும் தனி ஆளாகி விட்டான். மேற்கொண்டு ஏதாவது கஷ்டம் வந்தால் வசந்த் தாதாவின் நிபந்தனைகளை ஒப்புக் கொண்டு விடலாம் என்ற நிலைக்கும் வந்து விட்டிருந்தான்.

ஆனால்—ஒரு நாள் எதிர்பாராத சம்பவம் ஒன்று சென்னையில் நடந்தது. அரேபியாவிலிருந்து வந்திருந்த தம்பதிகளுக்கு டூரிஸ்ட் கைடு வேஷம் போட்டுக் கொண் டிருந்த சங்கர்—லைட் ஹவுசைக் காட்டும் சாக்கில் ஆளரவ மில்லாத இடத்திற்கு அழைத்துச் சென்று தனது பாணியில் கொன்று விட்டான். டாலர்களைத் திருடிக் கொண்டு, மனைவியை மானபங்கப்படுத்திவிட்டு சமுத்திரத்தில் விட்டெறிந்தான். அவன் அதிர்ஷ்டம் நேர் எதிராக இருந்ததால் அவனது மோட்டார் சைக்கிளை சில பேர்

பார்த்து விட்டார்கள். வழக்கு போடப்பட்டது. கொலை செய்த இடத்தில் அவன் கைவிரல் அடையாளங்கள் கிடைத்தன.

சங்கர் தப்பித்துக் கொள்ள ஜப்பானுக்கு ஓடும்படி நேர்ந்தது. ஒரு கொலையாளியைத் திரும்பவும் தம் நாட்டிற்கு வர வழைத்துக் கொள்ள அதிகாரிகளுக்கு மூன்று மாதங்களுக்கு மேல் பிடித்தது. அதற்குள் வசந்த் தாதா தன்னைத் தயாராக்கிக் கொண்டு விட்டான். சாட்சிகளை விலைக்கு வாங்கிக் கொள்வதற்கும், ரிகார்டுகளை மாற்றிவிடுவதற்கும் முயற்சிகள் நடந்தன. இறுதிக் கட்டத்திற்கு வந்த போது, ஜட்ஜ் நேர்மையானவராகவும், எதற்குமே மசியாதவராகவும் தெரிந்தார். ஆனால் வசந்த் தாதாவின் அகராதியில் 'எதற்குமே' மசியாதவர் என்று யாருமே கிடையாது. ஒரு மாத காலத்திற்கு வசந்த் தாதாவின் கையாட்கள் ஜட்ஜ் குடும்ப அங்கத்தினர்கள் ஒவ்வொருவரையும் கண்காணித்து வரும்படி அமர்த்தப்பட்டார்கள். ஒருவன் சமையற்காரனாய் சேர்ந்தான். கார் டிரைவர் ஒரு மாதத்திற்கு லீவு போட்டான். ஜட்ஜின் இரண்டாம் மருமகளுக்கும் பெரிய மகனுக்கும் சம்பந்தம் இருப்பது தெரிய வந்தது. ஜட்ஜ் கிட்டதட்ட அழாத குறையாய் அந்த வீடியோ கேசட்டை விலைக்கு வாங்கிக் கொண்டார்— நியாயத்தை தாரைவார்த்து மார்ச் 12-ம் தேதி குற்றத்தைச் சரியாய் நிரூபிக்க முடியாத காரணத்தால் டூரிஸ்ட் கொலை வழக்கில் சங்கர் விடுதலையானான். (மார்ச்சு 24-ம் தேதி ஜட்ஜ் தற்கொலை புரிந்து கொண்டார்).

இதற்கு ஏறக்குறைய பதினைந்து நாட்களுக்கு முன்னர் அதாவது பிப்ரவரி 3-ம் வாரத்தில் ஒரு விஷயம் தெரிய வந்தது.

சாதாரணமாய் அபாயங்கள் எதிர்பாராத கோணத்திலிருந்தே வரும். சங்கரின் விஷயத்திலும் அவ்வாறுதான் நிகழ்ந்தது.

ஜப்பானில் தங்கியிருந்த சமயம் சங்கர் இன்னொரு கொலையைச் செய்ய நேர்ந்தது. இம்முறை 2,00,000 யென்னிற்காக இக்கொலையைச் செய்தான். ஆனால் ஜப்பான் துப்பறியும் இலாக்கா மிக ரகசியமாய் இந்த வேலையை மேற்கொண்டதை தெரிந்த இந்திய அதிகாரிகள் கூட இதனை மிக ரகசியமாய் வைத்துக் கொண்டார்கள். ஜப்பான் நீதிமன்றம் சங்கருக்கு மரண தண்டனை உறுதி செய்ய தீர்மானித்தது. வசந்த் தாதாவுக்கு முக்கிய எதிரியான போலீஸ் அதிகாரி அர்ஜுன்சிங் தனிப்பட்ட சிரத்தை எடுத்துக் கொண்டு இவ் விஷயத்தில் வேலை செய்தார். டூரிஸ்ட் கொலை வழக்கில் ஒரு வேளை சங்கர் தப்பித்துக் கொண்டால், உடனேயே அவனை ஜப்பானுக்கு அனுப்ப ஏற்பாடு நடந்து வந்தது. அவன் மரணம் ஜப்பானில் ஏற்படப் போவதை யாராலும் தடுக்க முடியாது என்பது உறுதியாயிற்று. 'சங்கர் விஷயத்தில் அலுப்படைந்த போலீஸ் அதிகாரிகளுக்கு இது சிறிது நம்பிக்கை ஒளியை ஊட்டிற்று. ஜப்பானிலிருந்து கமிஷனர் ஆஃப் போலீஸ் யமின்சன் தானே வந்து இந்தியாவில் தங்கினார். இந்த வழக்கு முடிந்ததுமே, அந்த வழக்கில் புக் செய்து அவனை ஜப்பானுக்கு கொண்டு சென்று தூக்கிலேற்றுவதற்காக உத்திரவு பெற்றிருந்தார்.

வசந்த் தாதாவுக்கு கோபம் வருவது அரிது. சென்னையில் அவனுடைய பொன் வாத்து சங்கர்! வருடத்திற்கு இருபத்தைந்து லட்சம் சம்பாதிக்கும் இந்த தளபதியின் ஒரு பலவீனந்தான் வசந்த் தாதாவை அடிக்கடி தொல்லை கொடுத்து வந்தது. எவ்வளவு தடவை எடுத்துச் சொல்லியும் சங்கர் இந்த பலவீனத்திலிருந்து மீளாதது துரதிர்ஷ்டமே.

இப்பொழுது சென்ற கடைசி அத்தியாயத்திற்குச் செல்லுங்கள். சங்கரை அவசரமாய் டில்லிக்கு வரச் சொல்லி வசந்த் தாதா போன் செய்தது இதற்காகத்தான்!

சங்கர் வந்ததும் வசந்த் தாதா இந்த ஜப்பான் விஷயத்தைச் சொன்னதுமே அவன் முகம் வாடிவிட்டது. ஆனால் அது ஒரு வினாடிதான். பிறகு அலட்சியமாய் சிரித்துவிட்டு, 'பார்த்துக்க மாட்டாயா தாதா' என்றான்.

தாதாவுக்கு சங்கரிடம் பிடித்த விஷயம் இதுதான். வானமே இடிந்து விழுந்தாலும் நிலை குலைய மாட்டான். ஒருவிதமான கிரிமினல் சைக்கோபாத்துக்கு மட்டுந்தான் இந்த அலட்சியம் படிந்திருக்கும். இத்தகைய நபர்கள் எதற்குமே தயங்கமாட்டார்கள். ஆனால் இம்முறை பிரச்னையைத் தீர்ப்பது அவ்வளவு சுலபமாயில்லை. இந்தியாவிற்கு வெளியே வசந்த் தாதாவின் அதிரடி வேலைகள் அவ்வளவாக எடுபடாது.

''நான் ஒரு பிளான் போட்டிருக்கேன். ரொம்ப 'ரிஸ்க்' எடுத்துக்கவேண்டிய வேலைன்னு வை. ஆனால் இந்தச் சூழ்நிலையில் அதைத் தவிர வேறு வழியில்லை.''

''அதென்ன பிளான் தாதா?''

வசந்த் தாதாவுக்கு சுமார் பதினைந்து நிமிடங்கள் பிடித்தது அவனுக்கு அந்த பிளானை விவரிப்பதற்கு.

''உனக்கு பதில் வேறொரு ஆள் சங்கரின் பேரில் ஜப்பான் போகிறான். அவனை நாம் விலை கொடுத்து வாங்கிக்கிறோம்... அவன் அங்கே தூக்கிலேற்றப்படுவான்... அல்லது செல்லிலேயே தற்கொலை செய்து கொள்வான். சங்கரின் சரித்திரம் அதோடு முடிந்துவிடும். முகத்தில் கொஞ்சம் மாறுதலுடன் புதிய பேருடனும் நீ திரும்பவும் உன் திருவிளையாட்டில் இறங்கிக்கலாம்.''

சங்கரே கூட இந்த திட்டத்தைக் கேட்டு சிலையாகி விட்டான். இது சாத்தியமான திட்டந்தானா என்ற அவ நம்பிக்கை அவன் கண்களில் பளிச்சிட்டது.

''வேறு வழியில்லை சங்கர்! நான் ரொம்ப யோசித்துப் பார்த்துட்டேன்... கொஞ்ச நாளுக்கு முன்னாடியே இந்த விஷயம் தெரிய வந்தது நம் அதிர்ஷ்டம். கோர்ட்டுக்கு வெளியிலேயே ஜப்பான் போலீஸ் அதிகாரி இருப்பார் கோர்ட்டில் உன்னை விடுதலை செய்ததுமே-அந்தக் குற்றத் தின் கீழே அரெஸ்ட் செய்யப்படுவாய். அன்றே உன்னை ஜப்பானுக்குக் கூட்டிச் செல்ல ஏற்பாடு நடந்து கொண்டிருக் கிறது. நம்ம சட்டத்தைவிட அவங்களது ரொம்ப கடுமை யானது. அப்பீல்களோ, கருணைமனுக்களோ இருக்காது. சாவுக்கு எவ்வளவு அருகில் நீ இருக்காய்னு உனக்குத் தெரியாது.''

சங்கருக்குத் தெரியும். இந்தியாவில் நடத்தி வந்த ரகசிய சாம்ராஜ்யத்தை அந்த நாடுகளில் நடத்த முடியாது, எந்த நிமிடம் ஜப்பான் விமானத்திற்குள் ஏற்றப்படுகிறானோ அந்த நிமிடமே அவன் உயிர் போனது போலத்தான்! வசந்த் தாதா சொன்னதுபோல் வேறு வழியில்லை.

''எனக்காக போகப்போறது யார்?''

''சர்மான்னு... ஒரு வேலையில்லா பட்டதாரி, உங்க மெட்ராஸ்காரன்தான். ஐந்து லட்சத்துக்கு ஆசைப்பட்டு ஒப்புக்கிட்டான். இங்கத்தான் இருக்கான், பார்க்கிறாயா? உன்னைப் போலவே இருப்பான்.''

''தேவையில்லை, ஆனால் இந்த மாற்றல் வேலை கடைசி சமயத்தில் நடக்கணும், இந்த நாட்டில் எந்த போலீஸ் அதிகாரியாயிருந்தாலும் சரி, என்னை உடனே அடையாளம் கண்டுப்பிடிச்சுடுவாங்க.''

''அந்த ஏற்பாடெல்லாம் நான்பண்றேன். எல்லாம் கடைசி தருணத்தில் நடக்கும். ஜப்பானில் சர்மா தற்கொலை பண்ணிப்பது போல ஏற்பாடு பண்ணியிருக்கேன். ஜப்பான் ஜெயிலில் இது நடக்கும். மனக்கஷ்டத்தைத் தாளாமல்

தற்கொலை பண்ணிக்கிறாப்போல நீ ஒரு கடிதம் எழுதித்தா...''

சங்கர் கடிதம் எழுதி தந்து விட்டு,

''ஆனால் என்றாவது ஒரு நாள் நான் உயிருடன் உலாவுவது தெரிந்துவிடும். தொடர்ந்து ரொம்ப நாள் இப்படியிருப்பது கஷ்டம்'' என்றான்.

''தெரியட்டுமே! தெரிந்தாலும் ஜப்பான் அரசு ஒன்றுமே பண்ண முடியாது. உனக்கு பதில் ஒரு அப்பாவியின் மரணம் நிகழ்ந்திருக்கிறது என்ற செய்தி வெளியுலகத்திற்கு தெரிவது அந்த நாட்டின் கௌரவம் சம்பந்தப்பட்ட விஷயம். அதனால் அதைப்பற்றி அவ்வளவு சிரத்தை எடுத்துக்காது... அதோடு கூட இந்த விஷயம் அவ்வளவு தூரம் தெரிய வழியில்லை.''

''அங்கே இல்லை, நம்ப நாட்டில்...''

''நம்ப நாடு சம்பந்தப்பட்டவரை உன் மேல் எந்த கேசும் இல்லை. அதோடு கூட இது நம்ப நாட்டின் புகழ் சம்பந்தப்பட்ட விஷயங்கூட! நம்ம டாக்டருங்க அந்த மாறுதலை உன் முகத்தில் பண்ணிடுவாங்க. விரல் அடையாள மாறுபாடு விஷயத்தில் நவீன வேலைபாடுகள் வந்துவிட்டதால் நம் வேலை எளிதாயிடும்.''.

வெகு நேரம் மௌனமாயிருந்து விட்டுப் பிறகு சொன்னான் சங்கர். ''இந்த விஷயத்தில் இதைக் காட்டிலும் வேறு எதுவும் செய்ய முடியாதுன்னு எனக்கும தோணுது தா்தா! இன்னொரு தடவை என்னைக் காப்பாற்றினாய், உனக்கு எப்படித்தான் நன்றி சொல்வதுன்னு தெரியலை.''

''இன்னொருவாட்டி இந்த மாதிரி ஆபத்துக்களில் சிக்கிக்காமல் இருப்பதன் மூலம்.''

சங்கர் சிரித்துவிட்டுப் பேசாமலிருந்தான். அது நடக்காத காரியம் என்று இருவருக்குமே தெரியும்.

சங்கர் எழுந்திருந்து, ''போயிட்டு வரேன் தாதா ட்ராஸுக்குப் போனதும் போன் பண்றேன். இந்த பிளான் நன்றாய் நடந்தேறும் தானே'' என்றான்.

''கடைசி தருணத்தில் அந்த சர்மா பயப்படாமலிருந்தால்.''

''ஆம் அது ஒன்று இருக்கே! அவன் எங்கேயிருந்து கிடைத்தான் நமக்கு?''

''இருபத்தைந்து வயதிருக்கும் அவனுக்கு. ஐந்து வருஷத்துக்கு முன்னாடி எதிர்த்த வீட்டுப் பெண்ணைக் காதலித்து வீட்டிலிருந்து ஓடி வரச் செய்து கல்யாணம் பண்ணிக் கொண்டான். வேலை கிடைக்கலை. இரண்டு குழந்தைங்க பிறந்துடுத்து. காதல் துருபிடித்துடுத்து. அவள் குழந்தைகளை விட்டுட்டு எவனோடயோ ஓடிப் போய் விட்டாள். இவனுக்கு மட்டும் குழந்தைங்க மேல் ரொம்ப பாசம். அந்த சென்டிமெண்ட் மேலதான் இந்த வேலைக்கு ஒப்புத்துக்கிட்டான். இப்போதே அவங்க பேரில் பணத்தை பாங்கில் போட்டுட்டான்.''

செத்த பிறகு என்னவாகும் என்று இருவருக்குமே தெரியும். அதைப் பற்றி வாதாடிக் கொள்ளவில்லை.

''போயிட்டு வரேன்.''

''என்னவாச்சு அந்த அனுஷா?''

போகத் திரும்பிய சங்கர் நின்றான். தாதா சிரித்தான்.

''போலீஸ் ஸ்டேஷன் வரைக்கும் கூட்டிட்டுப் போயும் கோட்டை விட்டுட்டியாமே!''

சங்கர் ஆச்சரியத்தோடு, ''உனக்குத் தெரியாத விஷயமே கிடையாதா தாதா?'' என்றான்.

தாதா வெகுளியாய், ''யாரோ ஒரு பெண்ணை நீ ஊருக்கு வெளியே கூட்டிட்டுப் போவதாய் யாரோ சொன்

னாங்க. அது அந்தப் பெண்ணாய்தான் இருக்கும்னு நி ம் தேன்."

"எவனோ ஒருத்தன் கடைசிசமயத்தில் வந்து பிளானைத் தோற்கடித்துட்டான்."

"அந்தப் பொண்ணு ரொம்ப புத்திசாலியாமில்லே?"

"என்னவோ? நான் அவ்வளவு ஆழமாய் விசாரிக்க வில்லை. இன்ஸ்பெக்டர்னு சொன்னதுமே வந்து ஜீப்பில் ஏறிக்கிட்டாள்."

"கெட்டிக்காரங்களை மானசீகமாய் கற்பழித்தால்தான் நன்றாயிருக்கும் சங்கர்! சாதாரண உடம்பெல்லாம் உனக்கு எங்கேயுந்தான் கிடைக்குமே."

"எனக்கும் அந்தமாதிரி எண்ணமிருக்கு. ஆனால் எப்படிப் பண்றது?"

"அவ்வளவு சின்னப்பொண்ணு அத்தனை பெரிய பதவியில் இருக்கான்னால் அவளுக்கு அந்த ஆபீசிலேயே யாராவது விரோதிங்க இராமல் போகாது. யாராவது இருக்காங்களான்னு கண்டு பிடி. மீதியைப் பிறகு யோசிப்போம்...'

வசந்த் தாதா தானே களத்தில் இறங்கியது சங்கருக்கு சந்தோஷத்தை கொடுத்தது. ஜீப்பில் தன்னருகில் உட்கார்ந்து கொண்டிருந்த அந்த பெண்ணின் முகம் சட்டென நினைவுக்கு வந்தது. 'அரெஸ்ட்' என்றபோது அவள் காட்டிய அந்த அலட்சிய மனப்பான்மை...அப்படிப்பட்டப் பெண்ணை வசந்த் தாதா அழவைக்கப் போகிறான்...அதற்குப் பிறகு தானும்....

# 8

அனுஷா தனக்கு முன்னால் இருந்த ஃபைல்களைப் பார்த்து, கையெழுத்துப் போட்டு அனுப்பினாள். ஸ்டாக் ஹோம் சம்பந்தப்பட்ட முக்கியமான ஃபைல் அது. எந்த எந்த ஷேர்கள் எவ்வளவுக்கு வாங்க வேண்டும்--அதுபோல எவ்வளவுக்கு விற்க வேண்டும் என்ற விவரங்கள் அடங்கிய ஃபைல்.

நாட்டிலுள்ள பெரிய பெரிய ஸ்டாக் புரோக்கர்கள் எல்லோருமே ஸ்டாக்ஹோமுடன் பிளாக் டு பிளாக் கவர் வைத்துக் கொண்டிருப்பார்கள். இந்த ஒப்பந்தங்கள் எல்லாம் லட்சக்கணக்கான பணத்தின் மேல் இருக்கும்.

அவள் ஃபைலை அனுப்பிய ஐந்து நிமிஷங்களுக்குப்பிறகு ஆபீஸ் பையன் வந்து, ''உங்களைப் பார்க்க யாரோ வந்திருக்காங்க மேடம்'' என்றான்.

''உள்ளே அனுப்பி வை.''

பையன் போய் விட்டான்.

''வரலாமா?'' என்ற இனிமையான குரலைக் கேட்டு நிமிர்ந்து பார்த்தாள் அனுஷா. வத்சலா புன்முறுவல் தவழ, கையில் ஒரு பாக்கெட்டுடன் எதிரே நின்று கொண்டிருந்தாள். 'எப்பொழுதுமே கள்ளங்கபடமில்லாத புன்முறுவலுடன் இருப்பது இந்தப் பெண்ணிற்கு தெய்வம் தந்த வரம் போலும்?' என்றெண்ணிக் கொண்டாள் அனுஷா. ''வா...வா'' என்று எழுந்திருந்தாள்.

வத்சலா வந்து உட்கார்ந்து கொண்டு, ''எனக்கு வேலை கிடைச்சுடுத்து,'' என்றாள்.

''ஸ்வீட் கொண்டு வந்திருக்கேன்னு சொல்லு.''

''உங்களுக்கு நன்றி சொல்லத்தான் வந்தேன்,'' அனுஷா ஸ்வீட்டை எடுத்துக் கொண்டு, ''சம்பளம் எவ்வளவு?'' என்று கேட்டாள்.

''உங்க சம்பளத்திலிருக்கும் கடைசி சைபரை அடித்துட்டால் என்ன வருமோ அவ்வளவு சம்பளம்...''

அனுஷா சிரித்துவிட்டு. ''நான் வேலையில் சேர்ந்த புதிதில் இதைவிடக் குறைந்த சம்பளத்தில் சேர்ந்தேன்'' என்றாள்.

''நான் இன்னும் பத்து ஜென்மம் எடுத்தாலும் இந்த நிலைக்கு என்னால் உயர முடியாது.''

''ஏன், ஏன் அப்படி நினைக்கணும்?'' என்றவள், ''சரிதான். அதற்கென்ன வந்தது இப்போ? வேறு ஏதாவது சொல்லு. என்ன விசேஷம்?''

இருவரும் ஐந்து நிமிடங்கள் ஏதேதோ பேசி முடித்த பிறகு வத்சலா ''நான் போயிட்டு வரேன்'' என்று எழுந்தாள்.

''நானும் அந்த பக்கந்தான் போறேன். உன்னை இறக்கி விட்டுடறேன்'' என்று அனுஷாவும் எழுந்தாள்.

காரில் வத்சலா மௌனமாய் இருந்ததைப் பார்த்துவிட்டு ''என்ன யோசிக்கிறாய்?''

''ஒ...ஒன்றுமில்லை.''

''இல்லை, என்னவோ இருக்கு.''

வத்சலா சற்றே நாணமடைந்து, ''நேற்றிரவு ஒரு கனவு வந்தது'' என்றாள். அனுஷா சட்டென்று திரும்பிப் பார்த்து வியப்போடு, ''கனவா? அதென்ன?'' கேட்டாள்.

வத்சலா தடுமாற்றத்தோடு, ''நீங்க வானத்தில் தேவதையைப் போல பறந்துண்டே பூக்களைத் தூவிண்டே போ நீங்க

நான் கீழே அவைகளைப் பொறுக்கிண்டே ஓடிண்டிருக் கேனாம்'' என்றாள்.

அனுஷா பேசவில்லை. அவள் பேசாததால் தானே மேலும் சொல்ல எண்ணி, 'உங்களைப் பார்த்த அன்றையிலி ருந்தே நான் என்ன நினைக்கிறேன் தெரியுமா? நான் எப்படி இருக்கணும்னு நினைச்சுப்பேனோ அசல் அதுபோலவே இருக்கீ க நீங்க'' என்றாள்.

'நானும் அப்படித்தான் இருக்கும்னு நினைத்தேன்'— என்று மனதிற்குள் எண்ணிக் கொண்டாள் அனுஷா. பேச்சை மாற்ற எண்ணி. ''உனக்கு பாய்ஃபிரண்ட் உண்டு இல்லையா?'' என்று கேட்டாள்.

வத்சலா வெட்கமடையவில்லை. ஏனோ தெரியவில்லை ஒருவிதமான குற்ற மனப்பான்மையுடன் ''ஆமாம்'' என்றாள்.

''நீங்களிருவரும் கல்யாணம் பண்ணிக்கலாம்கிற முடிவில் இருக்கீங்க இல்லையா?''

''சேச்சே! இன்னும் அவ்வளவு தூரத்துக்குப் போகலை.',

''டிட் யூ ஹாவ் செக்ஸ் வித் ஹிம்?''

கேட்டதுமே தான் அதிகப்படியாய் கேட்டுவிட்டதாக உணர்ந்தாள் அனுஷா. அதற்குள் வத்சலாவின் முகம் சிவந்து விட்டது. கண்களில் கண்ணீர் நிரம்பி வழிந்தது.

அவள் கைமேல் தன் கையை வைத்து, 'ஐ யாம் சாரி என்றாள். ''ரொம்ப உரிமை எடுத்துக் கொண்டதால் இப்படி கேட்டுட்டேன்.''

அதற்குள் தேறிவிட்ட வத்சலா, வழக்கம்போல் மாறாத புன்னகையுடன் ''பரவாயில்லை. அந்த மாதிரி ஒன்றுமில்லை' என்றாள்.

''எங்கே நிறுத்தணும்?''

''பார்க்கிற்கு அருகில்.''

''அவருக்காகவா?''

வத்சலா தலை குனிந்தாள்.

''இரண்டு மணி நேரமா என்ன பேசிப்பீங்க?''

''ஏதேதோ.''

''தினமுமா?''

''தினமும் முடியாது. இரண்டு மூன்று நாட்களுக்கு ஒரு முறை.''

''ஒரு சின்ன வேலை பண்ணித்தர முடியுமா?''

வத்சலா உற்சாகத்துடன் ''என்ன? எதுவாயிருந்தாலும் சரி, சொல்லுங்க, பண்றேன்'' என்றாள்.

''இன்றைக்கு இந்த இரண்டு மணி நேரமும் நீங்க என்ன பசிக்கிட்டிருந்தீங்கன்னு—அந்த டாபிக்ஸ் எல்லாவற்றையும் மனதிலேயே நினைவு வைச்சுக்கொள்! ஓய்வாய் இருக்கும் போது வந்து என்னிடம் சொல்லு, ஜஸ்ட் ஃபர் ஃபன்—''

வத்சலா குறும்புச் சிரிப்பு சிரித்துவிட்டு ''ஓ.கே. நினைவு வைப்பது என்ன, எழுதியே கொண்டு வந்துடறேன், போதுமா?'' என்றாள்.

அனுஷா காரை நிறுத்தினாள். வத்சலா காரை விட்டிறங்கியதுமே கொஞ்சம் தொலைவில் நின்று கொண்டிருந்த இளைஞனைப் பார்த்தாள். வேர்க்கடலைப் பொட்டலத்துடன் நின்றுகொண்டிருந்தான் அவன்.

நவம்பர் இரண்டு.

அனுஷா லஞ்ச்சை முடித்துக் கொண்டு திரும்பவும் வேலையைத் துவங்க கிளம்பியபோது சேர்மன் கூப்பிடுவதாய் செய்தி வந்தது.

அவள் எழுந்து அவர் அறைக்கு போனாள். ''இங்கே இல்லை மேடம். பண்டா சார் போர்டு ரூமில் இருக்கார்.'' என்றான் பையன். அவர் அங்கே எதற்கு இருக்கிறார் என்றெண்ணியவாறே போர்டு மீட்டிங் அறைக்கதவைத் தள்ளினாள். உள்ளேயிருந்தவர்களைப் பார்த்ததும் அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

ஸ்டாக்ஹோமின் ஆறு டைரக்டர்களும் அங்கே இருந்தார்கள். எல்லோரும் அவளையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவளுக்கு சங்கடமான சூழ்நிலை ஏற்பட்டது. ஏதோ நடந்திருக்கிறது! அது அவர்கள் கண்களில் நன்றாகத் தெரிந்தது! பண்டாவின் முகத்தில் மட்டும் கண்டிக்கும் பாவனையுடன் சிறிதளவு இரக்கமும் தெரிந்தது.

நீண்ட மேஜைக்கு மேல் ஒரே ஒரு ஃபைல்...அவள் இரண்டு நாட்களுக்கு முன்னால் கையெழுத்திட்டிருந்த ஃபைல்!

''கமின் மிஸ் அனுஷா ஏன் அப்படியே நின்னுட்டீங்க!' ஒரு டைரக்டர் கேட்டார். அவள் அருகில்வந்ததுமே ஃபைலை அவளுக்கு முன்னால் தள்ளி விட்டு, ''இந்த இந்தியன் பாஸ்ஃபேட் ஷேர்களை வாங்கிக்கலாம்னு எந்த உத்தேசத்தில் கையெழுத்திட்டிருக்கீங்க?'' என்று கேட்டார்.

அவள் பார்வை ஃபைலிலிருந்த காகிதத்தின் மேல் பட்டது. அதில் வரிசையாய் பலவித கம்பெனிகளின் ஷேர்கள் இருந்தன. நாட்டிலிருந்த பல்வேறுபட்ட புரோக்கர்களின் சார்பில் அந்தந்த விலைக்கு ஸ்டாக்ஹோம் வாங்குவதற்காக தீர்மானித்திருந்த ஷேர்களின் விவரங்கள். அவள் பார்வை 'இண்டியன் பாஸ்ஃபேட்' என்ற இடத்தில் நின்று விட்டது.

40, 00, 000.

நாற்...ப...து...ல...ட்...ச...ங்...கள்.

அவள் தன் கண்களையே தான் நம்பமாட்டாதவளானாள். கீழேயிருந்த கையெழுத்தைப் பார்த்தாள்.

...அவளுடையதுதான்.

அவள் அந்த அதிர்ச்சியிலிருந்து மீளுவதற்கு இரண்டு நிமிடங்கள் ஆயிற்று. போர்டு டைரக்டர்கள் எல்லோரும் அவளை ஒருமாதிரி பார்த்தார்கள். அவர்களின் மனதிற்குள் என்ன இருந்திருக்கும் என்பதை அவளால் ஊகிக்க முடிந்தது. அவள் இந்த மாதிரி ஒரு காரியத்தைப் பண்ணியிருக்கிறாள் என்றால்—யாருடனாவது தில்லுமுல்லு பண்ணத்தான் இவ்வாறு செய்திருக்க வேண்டும்—அல்லது அலட்சிய மனப் பான்மையிருந்திருக்க வேண்டும்! இவ்விரண்டையுமே ஸ்டாக் ஹோம் சகித்துக் கொள்ளாது.

எது என்னவானாலும் அவள் வேலைக்குச் சேர்ந்து மூன்று மாதங்கள் கூட ஆகவில்லை. அதற்குள் அவளால் அந்த நிறுவனத்திற்கு இருபது லட்சங்களுக்கு மேல் நஷ்டம் வந்து சேர்ந்திருக்கிறது. அவளே இந்த நிறுவனத்தின் முதலாளியாயிருந்தால் இப்படிப் பண்ணிய ஒரு ஆளை எந்த விளக்கத்தையும் கேட்காது வேலையிலிருந்து அந்த வினாடியே தள்ளியிருப்பாள்.

தலைகுனிந்தவாறு குற்றவாளியைப் போல நின்று கொண்டிருந்த அவளைப் பார்த்த பண்டா, "நீ வெளியே போய் உட்காரு. திரும்பவும் கூப்பிடறோம்" என்றார். அவள் தொங்கிய முகத்துடன் வெளியே வந்து வராந்தாவில் இருந்த நாற்காலியில் சரிந்தாள். தொலைவிலிருந்து ரிசப்ஷனிஸ்ட் அவளை இரக்கம் ததும்ப பார்த்துக் கொண் டிருந்தாள். போர்டு அறையிலிருந்து வெளியே வரும் ஊழியர்களின் முகத்தைப் பார்த்து உள்ளே என்ன நடந்திருக் கும் என்பதை ஊகித்துத் தெரிந்துகொள்ளும் அனுபவம் அந்த ரிசப்ஷனிஸ்ட்டிற்குப் பத்தாண்டுகளாய் இருந்து வந்தது. ஆனால் அனுஷாவை அந்த மாதிரி பார்த்தது அதுதான் முதல்தடவை,

நாற்காலியில் உட்கார்ந்திருந்த அனுஷா எதை எதையோ யோசித்துக் குழம்பிக் கொண்டிருந்தாள். சாதாரண

புத்திசாதுரியமும், சாதாரண ஸ்டாக் எக்ஸ்சேஞ்சு அனுபவமும் உடையவர்களுக்கு இதெல்லாம் ஒன்றுமே தெரியாது. ஆனால் அனுஷாவுக்கு வணிகத்துறையில் இருந்த புத்தி சாதுரியத்தில் பாதி இருந்தாலும் போதும், அவர்கள் ஊகித்து விடுவார்கள், இண்டியன் பாஸ்ஃபேட் ஷேர்களின் விலை எந்த நிமிடத்திலும் ஏறக்கூடும் என்பதை. இதற்குக் காரணத்தைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் வரலாற்றிற்குப் போக வேண்டும்.

ஆப்பிரிக்கா கண்டத்திலுள்ள சிறிய நாடான 'மொராக்கோ' உலக பாஸ்பரஸ் உற்பத்தியில் இரண்டாவது இடத்தில் உள்ளது. சுமார் இருபது ஆண்டுகளாய் மொராக்கோ சுல்தான்களுக்கும் சகாரா பாலைவனத்தை இருப்பிடமாய்க் கொண்டு போராட்டத்தை நடத்திவந்த புரட்சிக்காரர்களுக்கும் சண்டை நடந்து கொண்டேயிருந்தது. 1982 ல் S.A.D.R. ஐ சுதந்திர நாடாக்க வேண்டுமென்று இந்தியாவிற்கு விண்ணப்பித்துக் கொண்டது அல்ஜீரியா.

ராஜீவ் காந்தி பதவிக்கு வந்ததும்—இந்தியா அக்டோபர் ஒன்றாம் தேதியன்று SADR சுதந்திர நாடாக்குவதை ஒப்புக் கொள்வதாய் அறிவித்தது. இது நடந்த பன்னிரெண்டு மணி நேரத்திற்குள் அதாவது அக்டோபர் இரண்டாம் தேதி காலை பத்து மணிக்கு மொராக்கோ இந்தியாவுடனிருந்த உறவை முற்றிலும் கத்தரித்துக் கொண்டுவிட்டது. பிற எல்லா நாடுகளுடனும் சாதாரணமாக இருந்த மொராக்கோ இப்படிப்பட்ட திடீர் நடவடிக்கையை மேற்கொள்ளும் என்று யாருமே எதிர் பார்க்கவில்லை. டில்லியிலிருந்த மொராக்கோ தூதர் இந்த விஷயத்தை வெளிப்படுத்தியதுதான் தாமதம். மொராக்கோ நாட்டு பாஸ்பரத்தின் மூலம் உற்பத்தி பண்ணும் இந்திய கம்பெனிகளின் ஷேர்களின் விலைப்படுத்துவிட்டது. அதனால் உலக உற்பத்தியில் முதல் இடத்தை வகிக்கும் அமெரிக்காவிலிருந்து கச்சாப்பொருட்களை வாங்கும் இண்டியன் பாஸ்ஃபேட்டுகளின் ஷேர் விலை எக்கச்சக்கமாய் ஏறிவிட்டது.

ஷேர் மார்க்கெட்டில் இருப்பவர்கள் ஒவ்வொரு வினாடியும் கண்களில் விளக்கெண்ணெய் விட்டுக்கொண்டு நாட்டின், உலகத்தின் அரசியல், வியாபாரச் சூழ்நிலைகளை மிக கவனமாய் பரிசீலித்துக் கொண்டேயிருக்க வேண்டும். பல்வேறு பேப்பர்களைப் படிக்கவேண்டும். எல்லா விஷயங்களையும் தெரிந்து கொண்டிருக்க வேண்டும். அனுஷாவுக்கு இதெல்லாமே தெரியும்! ஸ்டாக்ஹோம் ஜெனரல் மேனேஜராய் இருந்துகொண்டு அவள் அந்த ஷேர்களை எதிர்காலத்தில் வாங்குவோம் என்று கனவிலும் கையெழுத்துப் போட்டிருக்க முடியாது!

ஆனால் போட்டிருக்கிறாள்!

அந்த நேரத்தில் தனக்கு என்னவாகி விட்டது? கண்கள் ஏன் அந்தமாதிரி மூடிக்கிடந்தன?

அவள் யோசனையிலிருந்து மீண்டவாறு அறை வாசலைப் பார்த்தாள். ஒவ்வொரு டைரக்டராய் வெளியே வந்து கொண்டிருந்தார்கள். இதற்கு முன்னால் புன்முறுவலுடன் நலம் விசாரித்து விட்டுப் போகும் வழக்கமுள்ள அவர்கள் இப்பொழுது பார்த்தும் பார்க்காததுபோல முகத்தைத் திருப்பிக் கொண்டு போனது ஈட்டியால் குத்தினாற் போலிருந்தது அவளுக்கு. அதற்குள் பண்டாவிடமிருந்து அழைப்பு வந்தது. அவள் உள்ளே போனாள்.

''உட்கார்'' என்றார். அவள் நிசப்தமாய் உட்கார்ந்து கொண்டாள். வெகுநேரம் மௌனமாயிருந்துவிட்டுப் பிறகு மெல்ல, ''டைரக்டர்கள் ரொம்பக் கோபமாயிருக்காங்க'' என்றார். அவள் பேசவில்லை.

''நயமாய் எடுத்துச்சொன்னேன் ரொம்ப நேரம். விருப்பமின்றியே ஒப்புக்கிட்டாங்க.''

எதற்கு என்று அவளுக்குத் தெரியும், தான் ஜெனரல் மேனேஜர் பதவியில் நீடிப்பதற்கு.

"......இனிமேல் ஜாக்கிரதையாய் இரு."

அந்த வார்த்தை போதும். உன்னதமான பதவியிலிருக்கும் அதிகாரிக்கு அதைக்காட்டிலும் பெரிய திட்டு தேவையில்லை. இனிமேல் ஜாக்கிரதையாய் இரு என்றால் இன்னொரு முறை இம்மாதிரி நடந்தால் என்னால் ஒன்றும் பண்ணமுடியாது—என்று அர்த்தம்! அவள் நன்றியோடு, "சரிசார்! இனிமேல் இப்படி நடக்க இடந்தரமாட்டேன்" என்று சொல்லிவிட்டு அங்கிருந்து வந்து விட்டாள்.

## 9

சீட்டில் வந்து உட்கார்ந்து கொண்டாள் என்ற பெயரே தவிர, அவள் மனதில் ஒருவித வெறுமை சூழ்ந்து கொண்டிருந்தது. ஒருவித தனிமை அவளை பயங்கரமாய் பற்றிக் கொண்டது போலிருந்தது. இதற்கு முன்னால் அவள் இது போன்ற சூழ்நிலைகளைக்கூட எதிர்த்து நின்றிருக்கிறாள். ஆனால் இங்கே பிரச்னை வேறு. தன் அலட்சியத்தை — தன் முட்டாள்தனத்தை பூதக்கண்ணாடியில் வைத்துக் காட்டியது போல இருந்தது தான் இவ்வாறு கையெழுத்திட்டது!

சேர்மன் மூன்று நான்கு வார்த்தைகளே பேசினார். ஆனால் அவை போதும் — அவர் எவ்வளவு சங்கடத்தில் ஆழ்ந்து விட்டிருந்தார் என்பதைக் காட்ட!

அதற்குமேல் அந்த அறையில் இருக்கமுடியவில்லை அவளுக்கு. செக்ரட்டரியிடம் சொல்லிவிட்டு வீட்டிற்கு வந்து விட்டாள். வீட்டிற்கு வந்தபிறகுதான் அவ்வாறு வந்தது மேலும் தப்பாய் தோன்றிற்று. வீடு மேலும் தனிமையை உணர்த்தியது.

குளித்துவிட்டு வந்து பதினேழாம் பெருக்கல் குறியைத் தேர்ந்தெடுத்துக் கொண்டாள். இரண்டாயிரத்து நாற்பத் தாறை இருபத்தி மூன்றால் பெருக்கினாள். தனியாய்இருக்கும் போது,ஒன்றும் தோன்றாதபோது, மனதிற்குள் இந்த மாதிரி கணக்குப் போடுவது அவள் வழக்கம். ஆனால் மனம் ஒன்ற மறுத்தது. இதுவரை இருந்து வந்த அறிவுக் கூர்மை குறைந்து விட்டதோ என்ற சந்தேகம் ஏற்பட்டது. யாராவது ஒருத்தருடன் பேசவேண்டும் போலிருந்தது. ஆனால் யார் இருக்கிறார்கள்?

அவ்வளவு வருத்தத்திலும் அவளுக்குச் சிரிப்பு வந்தது. யாருமில்லாதது உண்மையே. யாருமே இல்லை. இவ்வளவு பரபரப்பிலிருந்தும் சாமர்த்தியமான விஷவளையத்தி லிருந்தும் கொஞ்ச நேரம் ஓய்வு பெறலாமென்றால்... யாருமே இல்லை!

சட்டென்று அவளுக்கு ரஜினியைப் பற்றி ஞாபகம் வந்தது. புத்தகங்களுக்குப் பின்னால் விட்டெறிந்த விசிடிங் கார்டைத் தேடி எடுக்க பதினைந்து நிமிஷங்கள் பிடித்தன போன் பண்ணினாள்.

சுமார் ஐந்து நிமிஷங்களுக்குப் பிறகு அப்பொழுதுதான் உறக்கத்திலிருந்து எழுந்தாற்போல ஒரு குரல் அலுப்போடு, ''ஹலோ...வ்'' என்றது.

பிறகு மறுமுனையிலிருந்து, ''ஹலோ'' என்று கேட்ட இனிமையான குரலுக்கு மயக்கம் விடுபட்டாற்போல—

''யாரு... அருந்ததியா?'' என்று கேட்டது.

''இல்லை, நான் தான்.''

''ஓ நீயா கோமளி?''

''சாரி...நான்...''

''புரிந்தது. சொல்லாதே. ப்ரியம்வதாதானே?''

அவள் கோபமாய், ''யார் பேசறது?'' என்று கேட்டாள்.

''போன் பண்ணினவங்களே அதைச் சொல்றதுதான் மரியாதைன்னு நினைக்கிறேன்.''

''என் பேர் அனுஷா.''

''அனுஷா. பேர் நன்றாயிருக்கு. என் பேர் பில்வாணன்.''

அவள் புரியாதவளாய், ''வாட்?'' என்றாள்.

''பில்வாணன்... எல்லோரும் செல்லமாய் பில்வன் என்பாங்க.''

''அப்படீன்னால்?''

''அப்படீன்னாலா?...அப்படீன்னால் ஒன்றுமேயில்லை. பில்வன், அவ்வளவுதான். அதுசரி அனுஷான்னால் என்ன?''

''ரஜினி இருக்காரா?'' அவள் நொந்துகொண்டே கேட்டாள்.

''காலையிலேருந்து இது வரைக்கும் பன்னெண்டு பேர் போன் பண்ணினாங்க. அதிர்ஷ்டக்காரன்.''

''கேன்·ஐ ஸ்பீக் டு ரஜினி ப்ளீஸ்?''

''பன்னெண்டு பேருக்குமே இல்லைன்னேன். ஆனால் அனுஷாங்கற பேர் நன்றாயிருக்கு. ஒரு பெண்! அதனால் இருக்கிறார். போனைக் கொடுக்கிறேன். ஆனால் அனுஷான்னால் என்ன அர்த்தம். அதைச் சொல்லு.''

''எனக்குத் தெரியாது. ரஜினியை கூப்பிடறீங்களா. போனை வைச்சுடட்டுமா?''

''பார்த்தாயா, நீ எவ்வளவு அறிவில்லாதவளாய் இருக்கேன்னு தெரிஞ்சுக்கோ! குறைந்தபட்சம் உன் பேருக்கு அர்த்தம் கூட தெரியாது உனக்கு. என் பேரின் அர்த்தத்தைக் கேட்கிறாய்! அனுஷா என்றால் அனிருத்ரனின் மனைவி அபூர்வ அழகி. இந்தப் பேரை உனக்கு வைப்பதற்கு யாருக்

குத் தோன்றிற்றோ, தெரியலை. நல்ல யோசனை பண்ணித் தான் வைத்திருக்காங்க. சரி விடு, என் பேரைக் கேட்டா யில்லையா? பில்வன்! எங்கம்மா கல்யாணம் ஆகும் முன்பே எங்கப்பாவை காதலிச்சாங்களாம். பாவம் அந்த அப்பாவி வீதியோரமாயிருந்த திண்ணையறையிலேயே இருந்துண்டு. இந்த விஷயத்தை ரொம்ப நாள் கண்டுபிடிக்கவே இல்லை யாம். அதனால் 'பில்வ நீயம்' என்ற புத்தகத்தைப் பரிசாக அனுப்பிச்சாங்களாம் எங்கம்மா. காதலித்த பெண் காதல னுக்கு பில்வநீயம் அனுப்பியதால்...''

அனுஷா போனை வைத்து விட்டாள். ரஜினி தன் குரலை மாற்றிக்கொண்டு அந்தமாதிரி பேசியிருப்பானோ என்ற சந்தேகம் வந்தது. ஆனால் இரண்டு நிமிடங்களுக்குப் பிறகு ரஜினியிடமிருந்தே போன் வந்தது.

''என்ன, கூப்பிட்டுட்டு போனை வைச்சுட்டாயா மில்லே?''

''ஆமாம் ராங் நம்பர். பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு போயிடுத்து.''

ரஜினி சிரித்தான். ''என் அஸிஸ்டெண்ட் மேனேஜர், பில்வன்!''

''பேர் சரிதான்னு சொல்லுங்க.''

''சரிதான். ஏன் கூப்பிட்டாய்?''

அனுஷாவுக்கு என்ன பதில் சொல்வதென்று புரிய வில்லை. ஏதோ போன் பண்ணிவிட்டாளே தவிர, அவன் இந்தமாதிரி கேட்டபோது சங்கடத்தில் ஆழ்ந்தாள்...தன்னை சுதாரித்துக் கொண்டு, ஷேல் வி ஹேவ் டின்னர்?'' என்று கேட்டாள் தடுமாற்றத்தோடு.

''ஐந்து நிமிடத்தில் அங்கே வரேன். வீட்டிலிருந்து தானே?''

அவள் அவசரமாய் "என்ன இப்ப நாலரை மணிதானே ஆறது? நான் சொன்னது ராத்திரி டின்னரைப் பற்றி."

"ஐந்து நிமிடத்தில் வரேன்." சுருக்கமாய் சொல்லி விட்டுப் போனை வைத்துவிட்டான்.

சரியாய் ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு வாசலில் காலிங்பெல் ஒலித்தது. அவன் உள்ளே வந்தவாறு, "சூழ் நிலை எதிர்பார்த்ததை விட சூடாகியிருப்பது போல தோணுதே!" என்றான்.

"நான் கூப்பிட்டது ராத்திரி வெளியே ஓட்டலில்..."

"கட் இட், திரும்பவும் ஏதோ பிரச்னையில் சிக்கிண்டி ருக்காய். இல்லாவிட்டால் அப்போதே 'குட்பை' சொல்லிட் டவள் திரும்பவும் ஏன் கூப்பிட்டிருக்கிறாய்?"

அவள் மனம் புண்பட்டது. ஆனால் சட்டென்று அவளுக்கு அன்று அவன் பேசிய பேச்சு நினைவுக்கு வந்தது. இவனுக்குப் பெண்களின் பாலுள்ள கௌரவமே குறைந்து விட்டிருக்கலாம்.

"எனக்கு எந்த பிரச்னையும் இல்லை. சாயந்திரம் ஓய்வாயிருப்பேன், அதனால் நீ பண்ணிய உதவிக்கு டின்னர் தரலாம்னு நினைச்சேன்" என்றாள் ஒருமையில் அழைத்தபடி.

"திரும்பவும் மனச்சாட்சியை வஞ்சித்துக்கொள்கிறாய்! அந்த மாதிரி உத்தேசம் இருந்திருந்தால் அன்றைக்கே கூப் பிட்டிருப்பாய். இவ்வளவு நாள் காத்துட்டிருந்திருக்க மாட் டாய். இன்றைக்குத் திரும்பவும் ஏதோ நடந்திருக்கு. அதென்ன? வசந்த் தாதா என்ன பண்ணினான்?"

"வசந்தும் இல்லை தாதாவும் இல்லை—காமாலைக் காரனின் கண்ணுக்கு எல்லாமே மஞ்சளாய்த்தான் தெரியு மாம்" என்றாள்.

ரஜினி சிரித்துவிட்டு, "இல்லை. என்னை நீ சரியாய் புரிஞ்சுக்கலை, மனிதர்களைப் பார்த்ததுமே கொஞ்சமாவது

அவங்க மனத்தத்துவத்தை ஊகிக்க வல்லன் நான்னு நம்பறேன். பெண்களின் விஷயத்திலோ கேட்கவே வேண்டாம்! ஒருதடவை பரிச்சயம் ஏற்பட்டதுமே ஏதோ ஒரு சாக்கில் திரும்பவும் சந்தித்து அந்த பரிச்சயத்தை வளர்த்துக்கற 'டைப்' இல்லை நீன்னு பார்த்ததுமே தெரிஞ்சுக்கிட்டேன். உன் உலகமே வேறு...ஒருக்கால் உனக்கே என்னோடு சிநேகத்தை வளர்த்துக்கணும்னு இருந்திருந்தால், 'இதப்பாரு எனக்கு இந்த மாதிரி தோணுது, உனக்கு இஷ்டந்தானா?' என்று வெளிப்படையாகவே கேட்பாய்னு தெரியும். இந்த மாதிரி கேட்கறவங்க நூற்றுக்கோ கோடிக்கோ ஒருத்தர் தான் உண்டு. அவங்களை உலகம் எதற்கும் துணிந்தவங்களாய் பாவிக்கும். அதிர்ஷ்டவசமாய் உனக்கு அந்த மாதிரி பிரச்னைகள் எதுவும் கிடையாதுன்னு வை. காரணம் நீ ஒரு 'பெண்' என்ற விஷயத்தையே நீ மறந்து போய் ரொம்ப நாளாயிடுத்து அதனால்.''

''தாங்க்ஸ்! ஆனால் நான் உன்னைக் கூப்பிட்டது என் மனப்போராட்டத்தை விவரிப்பதற்கு இல்லை,'' அவள் குரலில் ஏளனம் தென்பட்டது.

மேலுக்கு அப்படிச் சொல்லி விட்டாளேயன்றி மனதிற்குள் அவனுடைய வருணனையைக் கேட்டு ஆச்சரியமடைந்தாள். அவன் சொன்னது உண்மையே. முதல் முறை சந்தித்ததிலிருந்து இன்று வரை ஒரு தடவை கூட அவனைப்பற்றிய ஞாபகமே வரவில்லை. ஆனால் இந்த மூட் இல்லாத சாயந்திர வேளையில் நினைவுக்கு வந்த முதல் ஆள் அவன்தான். எண்ணியதுதான் தாமதம், தான் தனியாய் இருக்கும் ஒரு பெண் என்பதோ அவனைக் கூப்பிடக்கூடாது என்பதோ மறந்துபோய் கூப்பிட்டுவிட்டாள். வியாபார சம்பந்தப்பட்ட விஷயங்களில் தருகின்ற பார்ட்டிகள் வேறு...முன்பின் யோசியாமல் இவ்வாறு அழைத்ததற்கு வேறு ஆளாயிருந்தால் கண்டிப்பாய் தவறான வழியில் எடுத்துக் கொண்டு விடுவார்கள்.

அவ்வாறு யோசித்துப் பார்த்தபொழுது அவளுக்கு அவன் மேல் கௌரவமே ஏற்பட்டது.

''நீங்க சொன்னது நிஜந்தான் ரஜினி...இன்றைக்கு எனக்கு மூட் சரியாயில்லை. என்ன செய்யறதுன்னே புரியலை வேறு விதமாய் எண்ணிக்காதீங்க'' என்றாள்.

''என்ன நடந்தது?''

அனுஷா அவனுக்கு நடந்ததையெல்லாம் சொல்லிவிட்டு ''இவ்வளவு பொறுப்பில்லாமல் அலட்சியமாய் எப்படித்தான் நடந்தேனோ எனக்கே புரியமாட்டேங்குது'' என்றாள்.

அவன் யோசித்துவிட்டு, பிறகு, ''அது உன் கையெழுத்து தானா?'' என்று கேட்டான்.

''முதலில் எனக்கும் இதே சந்தேகம் வந்தது. ஆனால் அந்தக் காகிதங்கள் எல்லாம் நான் படித்தவையே. அந்தக் கையெழுத்தும் என்னுடையதான். ஆனால் இந்த இண்டியன் பாஸ்ஃபேட் கம்பெனி விஷயம் மட்டும் எனக்கு ஏன் தோணலைன்னுதான் புரியவே இல்லை.''

அவன் நாற்காலியை விட்டெழுந்திருந்து, கொஞ்ச நேரம் நடைபயின்று விட்டு, பிறகு ஏதோ நினைவுக்கு வந்தாற் போல நின்று, ''நான் ஒரு முறை அந்தக் காகிதங்களைப் பார்க்கணும்'' என்றான்.

அவள் புரியாதவளாய், ''ஏன்?'' என்றாள்.

''சொல்றேன். உங்க ஆபீசுக்குப் போகலாம், வா.''

''இப்பவா?...ஆபீசை மூடியிருப்பாங்க.''

அவன் அலுப்போடு ''நீ ஜெனரல் மானேஜர். உன்னைப் பார்த்து வாட்ச்மேன் தடுத்துடப் போறானா?'' என்றான்.

அவள் சிரித்துவிட்டு, ''சரி போகலாம்'' என்றாள். இம்முறை அவன் காரை ஓட்டலானான். அவளுக்குக் காரை

வேகமாய் ஓட்டிப் பழக்கம். தினமும் வீட்டிலிருந்து ஆபீசுக்கு எவ்வளவு நேரம் பிடிக்கிறது என்று பார்ப்பது அவளுடைய பொழுது போக்கு. நான்கு நிமிஷமும் இருபது வினாடிகளும் பிடிக்கும், எவ்வளவு முயன்றபோதிலும் அதைவிடக் குறைந்த நேரத்தில் அவளால் முடியவேயில்லை. ஆனால் அவன் மூன்றரை நிமிஷங்களில் ஓட்டிக்கொண்டு போய் நிறுத் தியதைப் பார்த்து ஆச்சரியமடைந்தாள், அதைவிட வியப்பு என்னவென்றால், பக்கத்திலிருந்தவர்களுக்குக் கொஞ்ச மாவது பரபரப்பைத் தோற்றுவிக்காததுதான். மனிதனின் மனத்தத்துவத்தைத் தெரிந்துகொள்ளவதற்கு டிரைவிங்கைப் பார்த்தால் போதுமானது. பிரேக்கின் மேல் காலை வைக் காமல் டிரைவ் பண்ணுபவர்கள் சாதாரணமாய் பிறரைப் பார்த்த மாத்திரத்திலேயே படித்தறிந்துவிட வல்லவராயிருப் பார்கள். சர்வ சாதாரணமாய் ஓட்டியபடியே அவ்வளவு சீக்கிரத்தில் கொண்டு போய் சேர்த்தது அவன் மூளை யிலிருக்கும் கம்பார்ட்மென்டலிசத்தைக் காட்டிற்று.

தான் அவனைப்பற்றிப் போட்டிருந்த எடை தப்போ என்று தோன்றிற்று அவளுக்கு முதல் முதலாக.

"என்ன படிச்சிருக்கீங்க?" என்றாள்.

"எஸ்.எஸ்.எல்.சி. மூன்று தடவை பெயிலாயிருக்கேன்."

"நிஜத்தைச் சொல்லுங்க."

"நிஜந்தான். வேணுமானால் எங்க பில்வனைக் கேளு."

அவள் அதற்குப்பிறகு வாயைத் திறக்கவில்லை.

இருவரும் ஆபீசுக்குப் போய்ச் சேர்ந்தார்கள். தான் கீழேயே இருப்பதாய் சொன்னான் அவன். அவள் போய் அந்த ஃபைலைக் கொண்டு வந்தாள். இருவரும் வீட்டிற்குத் திரும்பி வந்ததும் அவன் ஒவ்வொரு காகிதமாய் எடுத்துப் பரிசோதித்துப் பார்த்தான்.

பத்து பக்கங்களுடைய ரிபோர்ட் அது! சுமார் ஐம்பது கம்பெனிகளின் ஷேர் விவரங்களும்—ஒவ்வொரு பக்கத்திலும் ஏழுகம்பெனிகள் வீதம் நீட்டாய் டைப் அடிக்கப்பட்டிருந்தது. அந்த ஷேர்களை வாங்குவதால் கிடைக்கப்போகும் லாபங்கள் நஷ்டங்கள் விவரமாயிருந்தன. ரிபோர்ட் காபிகள் மொத்தம் மூன்று இருந்தன. அவன் நிமிர்ந்து. "இந்த மாதிரி ரிபோர்ட்டுங்க மொத்தம் எவ்வளவு காபி டைப் அடிப்பாங்க?" என்றான்.

"நான்கு."

"அப்படீன்னால் இன்னொன்று எங்கே?"

"ஆபீஸ் காபி அது. ஆபீஸ் அசிஸ்டண்ட்டிடம் இருக்கும்."

"நான்கு காபிகள் எடுத்திருந்தால் இறுதி மூன்றும் கார்பன் காபிகளாய் இருந்திருக்க வேண்டுமில்லையா?"

"எங்களது நவீன உபகரணங்களைக்கொண்ட கம்பெனி ஒவ்வொரு காபியும் முதல் காபியைப் போலவே இருக்கும்."

அவன் கையிலிருந்த காகிதங்களை மேஜையின்மேல் போட்டு விட்டு,—"இங்கேதான் நீ மோசம் போயிட்டாய்" என்றான்.

"எப்படி?" என்றாள் புரியாமல்.

"சாதாரணமாய் முதல் காபியைப் படிச்சுட்டு எஞ்சியவை களிலும் கையெழுத்துப் போட்டுடுவோம். அந்த ஆபீஸ் காபியை எல்லாவற்றிற்கும் மேலே வைத்திருந்திருப்பாங்க. அதில் உண்மையான இண்டியன் பாஸ்ஃபேட் ஷேர்கள் சம்பந்தப்பட்ட விவரங்கள் இருந்திருக்காது. அது மூன்றாம் பக்கம்! அதாவது...முதல் காபியில் மட்டும் மூன்றாவது பக்கம் ஒருவிதமாய் இருந்திருக்கும். எஞ்சிய காபிகளில் வேறு விதமாய் இருந்திருக்கும். நீ மேலே இருந்த காபியைப் படிச்சுட்டு, எஞ்சியவைகளிலும் கையெழுத்திட்டிருப்பாய்" என்றான்.

அனுஷா அதிர்ச்சியடைந்தவளாய் அவனைப் பார்த்தாள். உண்மைதான். அவளுக்கு அந்த யோசனை ஏன் தோன்றவில்லை?

''நான் உடனே அந்த காபியை வரவழைக்கிறேன்'' என்றாள்.

''ஒருக்கால் ஆபீஸ் ஃபைல்களில் அந்த காபி கிடைக்காமல் போகலாம். இதற்குள் அது மாயமாகி விட்டிருக்கும். அல்லது எதிராளி மேலும் சாமர்த்தியசாலியாயிருந்தால் உனக்கு முன்னால் நாலுக்கு ஐந்து காபியாய் வைத்திருந்திருப்பான். ஒவ்வொரு பக்கத்திலும் கையெழுத்திடணுமாதலால் நீ நிதானமாய் பார்த்து கவனித்திருக்கமாட்டாய்''

அனுஷாவின் முகம் சிவந்தது. ஸ்டாக்ஹோமில் நிறைய வேலைகள் நம்பிக்கையின் பேரிலேயே நடக்கின்றன. எது என்னவானால் என்ன, தான் கால் இடறிவிட்டாள். ரொம்ப சாமர்த்தியமாய இதில் தன்னைச் சிக்கவைத்து விட்டார்கள்.

''இதெல்லாம் அந்த ராமலிங்கம் வேலைதான்? இப்போதே போலீசுக்குப் போன் பண்றேன்'.'

''உனக்கு ரொம்ப அபாரமான புத்தி இருப்பதாய் ஒரு முறை நீ சொன்ன ஞாபகம்! ஆனால் உன்னைச் சுற்றிலும் நிகழும் விவகாரங்கள் எதிலும் ஞானம் கிடையாதோன்னு தோணுது. அவன் பேர் என்னன்னு சொன்னாய்? ராமலிங்கம் தானே? அவன் மேல் என்னன்னு கம்ளையின்ட் தருவாய்? எனக்கு ஒன்றுமே தெரியாதுன்னு அவன் சொல்லிட்டால் நீ என்ன பண்ணுவே? உனக்கு என்ன சாட்சி இருக்கு?''

''போலீசார் அவன் வாயிலிருந்து நிஜத்தைக்கக்க வைத்து விடுவாங்க.''

ரஜினி திரும்பவும் சிரித்தான். அந்தச் சிரிப்பிற்குப் பொருள் புரிந்த அவள் மேலும் எரிச்சலடைந்து, ''ஒவ்வொரு மனிதனுக்கும் அந்தராத்மாங்கறது பலமானது. ஆனால்

தப்புப் பண்ணறப்ப அது பலவீனமாயிடுது. ராமலிங்கம் போன்றவங்களை இந்த மாதிரி இக்கட்டில் தள்ளினால் கண்டிப்பாய் தப்பை ஒப்புத்துக்குவாங்க'' என்றாள்.

''நம்ம நீதிசாஸ்திரத்துக்கே இது ஒரு நல்ல கேள்வி. ஒருக்கால் நீ சொன்னது போல தீவிரமான முயற்சியில் இறங்கி போலீசார் மூலம் அவனை உண்மையைக் கக்க வைத்து ஸ்டேட்மெண்ட் வாங்கியதாகவே வை! எப்பவோ ஆறுமாதங்கழித்து இந்த வழக்கு கோர்ட்டுக்கு வரும், அங்கே டிபென்ஸ் லாயர் இதை துண்டு துண்டாய் பிரித்தெடுத்துடுவார். கோ-எர்ஷனுக்குக் கீழே இந்த ஸ்டேட்மெண்ட்டை எடுத்துக்கிட்டதாய் நிரூபிப்பார். அத்துடன் அது முடிவடைந்துவிடும். இந்த உலகத்தில்—முக்கியமாய் நம் நாட்டில் குற்றம் புரிவது-குற்றத்தை நிரூபிப்பது—குற்றத்தை ஒப்புக் கொள்வது—அதற்கு தண்டனை விதிப்பது—இந்த நான்கும் நான்கு வேறு வேறு அம்சங்கள்.

''ஒவ்வொருத்தரும் இந்த மாதிரி நினைப்பதால்தான் நாடு இந்த மாதிரி உருப்படமாட்டேங்குது.''

''பின்னே என்ன பண்றது?''

''அநியாயத்தை எதிர்க்கணும்.''

''சரி, எதிர்த்து நில்! தற்போது உனக்குக் கீழே இருப்பவன் தப்புப் பண்ணியிருப்பது உனக்குத் தெரியும். அதை எப்படி எதிர்த்து நிற்கப்போகிறாய்னு கொஞ்சம் சொல் பார்ப்போம். போலீசு வரைக்கும் எதற்கு? குறைந்த பட்சம் உன் கம்பெனி சேர்மேன் டைரக்டர்களே கூட நீ சொல்வதை நம்ப மாட்டாங்க.'' அவள் போனை அணுகி அவன் தடுத்ததையும் பொருட்படுத்தாமல் ராமலிங்கம் வீட்டிற்குப் போன் பண்ணினாள்.

''ஒரு தடவை எங்க வீட்டுக்கு வரீங்களா?...இப்போதே... ப்ளீஸ்...தாங்க்யூ'' என்று ரிசீவரை வைத்துவிட்டாள்.

''என்ன பண்ணப் போகிறாய் நீ?''

# 10

அவள் அவனுக்கு பதில் சொல்லாமல், சோபாவுக்குப் பின்னால் டேப் ரிகார்டரை வைத்து ப்ளக்கைப் பொருத் தினான். அவள் செய்ய எண்ணியிருப்பதைப் புரிந்து கொண்டு அவன் சிரித்தான்.

சோபாவில் உட்கார்ந்து டேப் பட்டனை அழுத்திவிட்டு, "ஆமாம். நான்தான் ஃபைலிருந்த காகிதத்தை மாற்றினேன். என்ன பண்ணிடுவீங்க நீங்க?" என்றான் குரலை மாற்றிக் கொண்டு.

திருப்பிப் போட்டுக் கேட்டபொழுது அது ஒரு மாதிரியாய் கேட்டது. ரஜினி குரலைப் போல இல்லை. அவள் முகம் தொய்ந்துவிட்டது.

"ராமலிங்கம் குரல் எப்படி இருக்கும்னு எனக்குத் தெரியாது. ஆனால் நாளைக்கே கேசட்டை எடுத்துப்போய் உங்க சேர்மனுக்குப் போட்டுக் காட்டினால் அவன் இதைத் தான் சாதிப்பான்! யாரோ மிமிக்ரி ஆர்டிஸ்ட் மூலம் இந்த மாதிரி ரிகார்ட் பண்ண வைத்து தன்மேல் குற்றத்தைச் சுமத்துகிறாய் என்பான். இந்த மாதிரி டேப் ரிகார்டு சாட்சி யெல்லாம் கோர்ட்டில் எடுபடாது."

"பின்னே என்ன பண்ணுவது? அவன் இப்போ வரப் போகிறான்."

"இதப்பார், அவனைக் கூப்பிட்டது நீ. ஏன் கூப்பிடு கிறாய்னு என்னிடம் சொல்லாமலேயே அவனுக்கு போன் பண்ணினாய். என்னைப் போலவே அவனையும் டின்னருக்கு கூப்பிடுகிறாய்னு நினைத்தேன்."

முகம் சிவந்துவிட்டது. "நீங்க எனக்கு உதவு தப்புப் பீங்கன்னு நினைத்தேன். ஒருத்தி இந்த மாதிரி இக்கட்டில் ஆழ்ந்திருக்கும்போது சந்தோஷப்படற சாடிஸ்ட்டுனனு நினைத்திருக்கலை" என்றாள்.

"கூப்பிட்டதற்கு ராத்திரி டின்னர் கொடுப்பாய்னு நினைத்தேன். கூட்டிட்டு இந்த மாதிரி சங்கடமான சூழ்நிலையில் தள்ளுவாய்னு நினைத்திருக்கலை" என்றான் அவன் அதே ரீதியில்.

"உங்களைப் போன்றவங்களுக்கு டின்னர் கூட வேஸ்ட் தான்! போயிடுங்க இங்கேயிருந்தது. இந்தப் பிரச்னையை நானே தீர்த்துக்கறேன்."

"நல்லது, போயிட்டு வரேன்" என்று அவன் கிளம்ப எத்தனித்த போது கதவைத் தட்டிய ஓசை கேட்டது. இருவரும் தம்மையறியாமலேயே ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள். ரஜினி உள் அறைக்குப்போய், "உன் பிரச்னை கதவைத் தட்டுகிறது. அது போகும் வரை நான் இங்கே உள் அறையில் இருக்கிறேன். தயவு செய்து என்னை மட்டும் இதில் இழுத்துவிடாதே" என்றான்.

"நில்லுங்கள். உங்க பிஸ்டலை இப்படிக் கொடுத்துட்டுப் போங்க. உங்களைப் போன்ற கோழைகளிடம் அலங்கார வஸ்துவைப் போல அதைப் பார்த்த நினைவு" என்றாள் ஏளனமாய்.

அவன் பதில் பேசாமல் ஜேபியிலிருந்து பிஸ்டலை எடுத்துத் தந்து விட்டு, பெஸ்ட் ஆஃப் லக்" என்று உள்ளே போய்விட்டான். அவள் அதை புத்தகங்களுக்குப் பின்னால் மறைத்து வைத்துவிட்டுப் போய்க் கதவைத் திறந்தாள்.

ராமலிங்கம் உள்ளே வந்து, "இந்த ராத்திரி வேளையில் ஏன் கூப்பிட்டீங்க?" என்று கேட்டான். அவன் கண்கள் அவள் தன்னந் தனியாய் வசித்து வரும் அந்த வீட்டைச் சுற்றிலும் நோட்டமிட்டன.

''உங்காருங்கள்.''

அவன் கண்களில் கொஞ்சமேனும் பயம் இல்லாதது அவளை ஆச்சரியத்திற்குள்ளாக்கிற்று.

''உங்களை ஏன் கூப்பிட்டேன்னு உங்களுக்கே தெரியும்.''

''ஏன்?''

''இண்டியன் பாஸ்ஃபேட் கம்பெனி விஷயத்தில் நீங்க பண்ணிய மோசடியை உங்கள் வாயிலிருந்து வரவழைக்க.''

ராமலிங்கம் சிரித்துவிட்டு' ''நான் அதற்கு சம்மதிப்பேன்னு எப்படி நினைக்கிறாய்?''

அவள் திக்பிரமையடைந்து விட்டாள். தான் அவ்வாறு கேட்டதுமே அவன் பயந்து நடுங்கி விடுவான் என்றும், தனக்குத் தெரியாது என்று பொய் சொல்வான் என்றும் எண்ணியிருந்தாள். இவ்வளவு நேருக்கு நேராய் தன்னை எதிர்த்து நிற்பான் என்றோ ஒருமையில் தன்னை அழைப்பான் என்றோ நினைத்தும் பார்க்கவில்லை.

''நடந்ததற்கு நான்தான் பொறுப்பாளின்னு எழுதி கையெழுத்துப் போட்டுத் தா. இந்தா காகிதம்'' என்றாள்.

அவன் பதில் பேசவில்லை. அவன் பார்வை தன் தேகத்தின் மீதே நிலைத்து நின்றதை அவள் கவனித்தாள். ஆபீசில் பணிவோடு இருக்கும் ராமலிங்கம்தானா இவன் என்ற சந்தேகம் ஏற்பட்டது.

அதற்குள் அவன் எழுந்திருந்து, ''நீ ஜெனரல் மேனேஜராய் இருந்தால் இருந்துக்கோ. ஆனால் என்றுமே இந்தமாதிரி யாரையும் வீட்டுக்குக் கூப்பிடாதே. ஏற்கனவே தனியாய் இருக்கும் பொம்பிள்ளை வேறு'' என்று வெளியே போகத் திரும்பினான்,

''நில்'' என்றாள் அவள், பிஸ்டலை எடுத்து நீட்டியபடி.

''உன்னைக் கொன்றாவது நீ செய்த தப்பை ஒப்புக்கச் செய்றேன் பார்.''

''ஓஹோ! உன்னிடம் பிஸ்டல் கூட இருக்கா?'' என்றான் அவன், ஜன்னல் ஓரம் போய் நின்று. அவன், அந்தப் பக்கமாய் ஏன் போகிறான் என்று அவளுக்குப் புரியவில்லை. அவன் மட்டும் ஜன்னல் திரைச் சீலையை விலக்கி சைகை காட்டியிருந்தால் என்ன நடந்திருக்குமோ தெரியாது. ஆனால் அதற்குள் உள்ளேயிருந்து ரஜினி காற்றினும் வேகமாய்ப் பாய்ந்து வந்து அவனை பலமாய் ஓர் அறை விட்டான். எதிர்பாராத அந்த உதைக்கு ராமலிங்கம் தொலைவில் போய் விழுந்தான்.

அனுஷாவுடன் உள்ளே இன்னொரு ஆள் இருந்ததை அறியாத ராமலிங்கம் வியப்படைந்தான். அதற்குள் ரஜினி திரைச் சீலையைக் கொஞ்சமாய் விலக்கிப் பார்த்து விட்டுச் சட்டென்று மூடினான்.

தொலைவில் மின்சாரக் கம்பத்துக்குப் பக்கத்தில் சங்கர் இந்தப் பக்கமாய் பார்த்தபடி நின்று கொண்டிருந்தான்.

''இதில் உங்களை இழுக்க வேண்டாம்னீங்களே?'' என்றாள் அவள்.

''ஷட் அப்'' என்றான் ரஜினி. அவன் அவ்வளவு கோபமாய் இருந்து அப்பொழுதுதான் முதல் தடவையாகப் பார்க்கிறாள் அவள்.

கிட்டே போய் அவள் கையிலிருந்த பிஸ்டலை வாங்கி கொண்டு, ''இவன் மட்டும் கொஞ்சம் சைகை காட்டி இருந்தானானால் இந்த நேரத்தில் உன் வீடு இருந்த இடம் தெரியாமல் மாறிப் போயிருக்கும். இதற்குப் பின்னால் சங்கர் இருக்கான்னு நான் அப்பவே சொன்னேன், நீ நம்பலை'' என்றான்.

''நீ யாருன்னு எனக்குத் தெரியாது. ஆனால் சரியாய்த் தான் சொல்லிட்டாய்.'' எழுந்துகொண்டே சொன்னான் ராமலிங்கம்.

ரஜினி அவனை திரும்பவும் பலமாய் ஓர் அடியடித்தான். அவன் கத்த வாயைத் திறந்த போது பிஸ்டலைக் காட்டி, ''உன் வாயிலிருந்து ஒரு வார்த்தை வெளியே வந்தாலும் சரி. இந்த பிஸ்டல் உன் தலையைப் பதம் பார்த்துவிடும்'' என்று பயமுறுத்தினான். அந்த சமயத்தில் அவனுடைய தோற்றத்தைப் பார்த்து அனுஷா பயந்தாள்.

''அப்படி உட்காரு ராமலிங்கம். நீ ஜன்னல் வழியாய் சைகை காட்டாதவரையிலும் உனக்கு எந்த ஆபத்தும் இல்லைன்னு நினைத்து அந்த சங்கர் அங்கேயே நின்னுட்டிருப்பான். ஏய்! சொல்லு இதெல்லாம் என்ன? உனக்கும் சங்கருக்கும் என்ன சம்பந்தம்?''

ராமலிங்கம் பதில் பேசவில்லை. ரஜினி அனுஷாவைப் பார்த்து, ''உங்க வீட்டில் ஊறுகாய் இருக்குமா? அல்லது மிளகாய்ப்பொடி இருந்தாலும் போதும் கொடு'' என்றான்.

அனுஷா உள்ளே போனாள்.

''இவ்வளவுக்கும் பழி வாங்கிடுவான் அந்த சங்கர்'' என்றான் ராமலிங்கம்.

''கிழித்தான்! விஷயம் அவ்வளவு தூரத்துக்கு வந்தால் அப்போ அதை கவனிச்சுக்கிறேன்.''

அதற்குள் அனுஷா உள்ளேயிருந்து வந்தாள். அவள் கையில் மிளகாய்ப் பொடி பாட்டில் இருந்தது.

சரியாய் இரண்டு நிமிஷங்களுக்குப் பிறகு ராமமலிங்கம் சொன்னான்.

''இதையெல்லாம் நான் பண்ணவேயில்லை. என் தப்பை அவள் கண்டுபிடித்ததுமே, அந்த விஷயத்தை அப்போதே

மறந்து போயிட்டேன் நான். ஆனால் நாலு நாளைக்கு முன்னால் எனக்குச் செய்தி வந்தது.''

''யாரிடமிருந்து?''

''வசந்த் தாதாவிடமிருந்து.''

ரஜனியின் கையிலிருந்த பிஸ்டல் தன்னையறியாமல் கீழே தாழ்ந்ததை அனுஷா கவனித்தாள்...வச...ந்...த்... தாதா!

''ஏன் இந்தப்பெண்ணின் மேல் மாஃபியாவுக்கு அவ்வளவு கோபம்?'' என்று கேட்டான்.

''எனக்குத் தெரியாது. அவளுக்கு நன்றாய் புத்தி புகட்டணும்னு மட்டுமே தாதா என்னிடம் சொன்னான். எனக்கு எப்படியும் அவள் மேல் கோபம் இருந்து வந்தது. அதனால் இந்த வேலைக்கு ஒப்புக்கிட்டேன். நான் பெரிய ரிஸ்க்கை எடுத்திருப்பது புரிகிறது. ஆனால் சங்கர்தான் பின்னால் இருப்பதாய் தைரியம் சொன்னான்.''

ரஜினி வெகுநேரம் மௌனமாயிருந்துவிட்டு, ''சரி,இவள் சார்பில் நான் ஒரு ஐடியா சொல்கிறேன். போய் தாதா விடம் சொல்லு. நடந்தது என்னவோ நடந்துவிட்டது. தெரிந்தோ தெரியாமலோ இவள் பூண்ணிய தப்புக்கு தாதா இவளை சங்கடத்தில் ஆழ்த்தி நன்றாய்ப் புத்தி புகட்டிவிட்டான். அதற்கும் இதற்கும் சரியாயிடுத்து. இந்த இண்டியன் பாஸ்ஃபேட் விஷயத்தை நாங்கள் மறந்துவிடுகிறோம். இன்னொரு விதமாய் சொல்லணும்னால், நீதான் இந்த வேலையைப் பண்ணினாய்னு ஸ்டாக்ஹோம் சேர்மனுக்கோ, டைரக்டர்களுக்கோ தெரிவிக்காமல் இந்த விஷயத்தை இதோடு மறந்துடுவோம். இதற்குப் பிரதிபலனாய் தாதா இந்தப் பெண்ணின் விஷயத்தை மறந்துடணும். சங்கர் இனிமேல் இவள் ஜோலிக்கு வரக்கூடாது என்ன?''

''நான் ஒப்புக்க முடியாது'' என்றாள் அனுஷா. இந்த ஃபைல் மாறுபாட்டு விஷயத்தை இப்போதே பண்டாவுக்கு போன் பண்ணிச் சொல்றேன்.''

''மூடு வாயை!'' கத்தினான் ரஜினி. பிறகு ராமலிங்கம் பக்கம் திரும்பி. ''இது எங்க யோசனை. இதன்மூலம் உனக்கும் லாபம் உண்டு. யோசித்துப்பார். வீண் தகராறு எதற்கு'' என்றான்.

''கேட்டுச் சொல்றேன்.''

''குட்.''

அவன் போய்விட்டான்.

அந்த மௌனத்தைக் கலைத்தவாறு அனுஷா சொன்னாள். ''நீங்க இந்த மாதிரி ஆண்மையில்லாமல்—ஒரு வல்கரைப் போல, இன்னும் சொல்லப் போனால் ஒரு கோழையைப் போல் நடந்துப்பீங்கன்னு நான் கனவிலும் நினைக்கவில்லை.''

அதைக் கேட்டு ரஜனிக்கு கோபம் வரவில்லை. தனது பிஸ்டலை எடுத்து இடையில் சொருகிக்கொண்டே ''எது நடக்கக் கூடாதுன்னு நினைத்தேனோ அதே நடந்துடுத்து! வசந்த் தாதாவும் களத்தில் இறங்கியிருக்கான். நீ எண்ணெயில் விழுந்த கடுகாய் பொரிஞ்சு போயிடுவே. இந்த 'ராஜி'க்கு தாதா ஒப்புக்கிட்டால் நீ அதிர்ஷ்டசாலி. ரொம்ப சின்ன விஷயம் இது. துரதிர்ஷ்டவசமாய் இவ்வளவு தூரத்திற்கு வந்துவிட்டது. இதோடு முடிந்துட்டால் எல்லோருக்குமே நல்லது.''

''உங்களைப் போன்றவங்க இருப்பதால்தான் இந்த நாடு உருப்படாமல் போயிட்டிருக்கு...என் அஸிஸ்டென்ட் என் ஃபைல்களை மாற்றிடுவார். என் வேலை போனாலும் நான் மௌனமாய் சும்மாயிருக்கணும், என்னை எவனோ

ஜீப்பில் கூட்டிச் செல்ல முயற்சி பண்ணுவான். நான் யாருக்கும் புகார் தரக்கூடாது. என்வீட்டை துவம்சம் பண்ணுவாங்க. ஆனாலும் நான் சும்மாயிருந்துடணும். ஏன்?''

''இதுக்குப் பின்னால் மாஃபியா இருப்பதால்.''

''மாஃபியா-மாஃபியா-மாஃபியா! அவர்களும் உங்களைப் போன்ற மனுஷங்கதான். ஆனால் உங்களைப்போல வளையல் அணியவில்லை. அதனால்தான் உலகத்தையே ஆட்டுவிக்கிறார்கள்!''

''அப்படி என்றால் என்னதான் செய்யப்போகிறாய்?'' அலுத்துக்கொண்டான் அவன்.

''நான் வசந்த் தாதாவை எதிர்க்கத் துணிந்துட்டேன்.''

ரஜினி சிரித்தான்.

''எப்படி?''

''எதையோ ஒன்றைப் பண்றேன். போலீஸ் இலாக்காவில் ஒருவராவது நேர்மையானவங்க இல்லாமல் போக மாட்டாங்க. எனக்கு அவர்கள் உதவுவார்கள்.''

''அதன்மூலம் தாதாவின் காலடி மண்ணைக்கூட அவர்களால் பெயர்க்க முடியாது. ஒருக்கால் முடிந்தாலும் அதைப் பார்க்க நீ இந்த உலகத்தில் உயிரோடு இருக்கமாட்டாய்.''

''உங்களைப் போன்றவங்களுக்காகத் தமிழில் ஒரு நல்ல வார்த்தை இருக்கு.''

''என்ன?''

''கோழை.''

அவன் அவளைப் பிடித்திழுத்துச் சட்டென்று அவள் கன்னத்தில் ஒரு முத்தம் கொடுத்தான். அவளோ அந்த பிளாட் முழுவதும் எதிரொலிக்குமாறு வீலென்று கத்தினாள். அவன்

திரும்பவும் அவளை அருகே இழுத்து அணைத்துக்கொண்டு அவள் உதட்டோடு தன் உதட்டை அழுத்தி ஒரு 'இச்' கொடுத்துவிட்டுப் பிறகு அவளை விட்டான். அவள் போய் சோபாவில் சரிந்தாள்.

''இந்தப்பன்னெண்டு ஃபிளாட்டுகளில் இருக்கிறவங்களை யாருமே உன் கத்தலைக் கேட்டு ஓடி வரலை பாரு... இது நம்ப நாடு... நான் உன்னை முத்தமிட்டது தவறுதான். ஆனால் ஏன் முத்தமிட்டேன்? நான் சங்கர்னு வெச்சுக்கோ. நாளைக்கு அவன் வந்து இந்தமாதிரி பண்ணினால் யாருமே உன்னைக் காப்பாத்தமாட்டாங்க. அதைச் சொல் லத்தான் இந்தமாதிரி பண்ணினேன். ஏதோ நேர்மையான போலீசாபீசருங்க இருப்பதாய் சொன்னாய். இப்ப நான் பண்ணிய காரியத்துக்கு என்ன கேசு போடுவாய்?...வசந்த் தாதாகூட இந்த மாதிரிதான் எந்த சாட்சியும் இல்லாமல் வேலை பண்றான்... இந்த முத்தம் உனக்கு ஒரு அதிர்ச்சி வைத்தியம்! என்னையே உன் முதல் விரோதின்னு நினைச் சுக்கோ. என்னை எப்படி எதிர்த்து நிற்பாயோ, எந்தச் சட்டத்தில் கைது பண்ணுவாயோ. இன்றிரவெல்லாம் யோசித்துப் பார். ஒண்ணுமே பண்ண முடியாவிட்டால், அந்த தாதாவைக் கூட உன்னால் ஒண்ணுமே பண்ணிட முடியா துன்னு அர்த்தம். என்னிடம் தோற்றாலும் பரவா யில்லை. ஆனால் தாதாவிடம் தோற்றுவிட்டால் அதுவே உன் வாழ்க்கையின் இறுதி தோல்வியாயிடும். மனிதாபிமானம், நியாயம், தண்டனை போன்றவை மிக உயர்ந்த விஷயங்கள்— ஆனால் நடைமுறைக்கு உதவாது. அதற்கு இப்போது நடந்த சம்பவமே உதாரணம். முடியுமானால் நான் செய்த காரியத்துக்கு குறைந்தது ஒரு மணி நேரமாவது என்னை லாக்அப்பில் போடு பார்த்துடு வோம்'' என்று வாசல் வரை போய்விட்டுத் திரும்பி வந்து. ''சாரி...'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

கண்களை மூடியவாறு சிலையாய் நின்றுகொண்டே இருந்தாள் அவள்.

# 11

வாழ்நாளிலிலேயே முதல் முத்தம் அது...அவன் மொத்தம் 13 விநாடிகள் வரையிலும் முத்தமிட்டிருப்பான். அதில் 6.60 வினாடிகள் உதடுகளை ஒற்றியிருப்பான். 3.39 விநாடிகள் நாக்கினால் தடவியிருப்பான். 3.01 விநாடிகள் பற்களால் அழுத்தியிருப்பான். அபாரமான வேகம் இருந்தது அதில். அந்த முத்தத்தில் எல்லாம் இருந்தது. ஆனால் அதைப் பற்றி அவள் யோசிக்கவில்லை. அவன் பிஸ்டலை எடுத்த விதம், ராமலிங்கத்தை ஜன்னலுக்கருகில் எதிர்த்து நின்ற விதம், தன்னை முத்தமிட்ட துணிச்சல் இவையெல்லா வற்றையும் சேர்த்து யோசிக்கலானாள்.

சாதாரணமாய் சிரித்துப் பேசும் அவனே, ராமலிங்கம், சங்கர் பெயரைச் சொல்லி பயமுறுத்தியபோது எதிர்த்து நின்று பேசிய தோரணை இன்னும் அவள் மனதை விட்டு அகலவில்லை.

ரஜினி பயந்தாங்கொள்ளி இல்லை...நமக்கெதற்கு வம்பு, விடு என்ற மனநிலையுடையவன்...புத்தர் பிறந்த இந்திய நாட்டுக் குடிமகன்...கொஞ்சம் தூண்டினாலோ...?

வசந்த் தாதா-இருட்டுலகச் சக்ரவர்த்தி-மகுடமில்லாத அரசன்-எவ்வளவோ குடும்பங்களையும் எவ்வளவோ பேர் களையும் நிர்மூலம் பண்ணி விட்டு-இந்தியப் போலீசாரின் சாமர்த்தியமற்ற செயலையும், சட்டத்தின் நெளிவு சுளிவு களையும் சாதகமாய் எடுத்துக்கொண்டு அட்டகாசம் பண்ணும் ராட்சதன்!

ஆனாலும் அந்த சிம்மாசனத்தை இடிக்க எந்த மூலையிலிருந்தாவது ஒருவன் புறப்பட்டுத் தானே ஆக

வேண்டும்? அது அவளாகவே ஏன் இருக்கக்கூடாது? அதற்கு உறுதுணையாக ரஜினி ஏன் இருக்கக்கூடாது?

அவள் உதட்டில் குறுநகை படர்ந்தது.

ரஜினி சொன்னது போல வசந்த் தாதாவைப் பற்றி அவளுக்கு இன்னும் நன்றாய் தெரிந்திருக்கவில்லைதான்.

ரஜினியின் வார்த்தைகள் இரண்டு நாட்கள் வரை அனுஷாவின் காதுகளில் ரீங்காரமிட்டபடியே இருந்தன. தன் சாதனையை நிரூபிப்பதற்காக அவன் கொடுத்த முத்தத்தைக் காட்டிலும் இந்த வார்த்தைகளே அவளை மிகவும் பாடு படுத்தி வந்தன.

நாடு எந்த திசையில் போய்க் கொண்டிருக்கிறது? தனி மனிதனுக்கு தன்னைச் சுற்றிலுமுள்ள சூழ்நிலைகள் புரியத் தான் இல்லையா? அல்லது புரிந்தும் பொருட்படுத்துவதில்லையா? ஒரு காலி மனையை ரௌடி ஒருவன் ஆக்கிரமித்துக் கொண்டாலும் வெறுமே பார்த்துக் கொண்டிருந்து விடுவது இந்தியர்களின் ரத்தத்தோடு ஊறிப்போன விஷயந்தானா? தாம் மோசம் போவதுகூட தம் வாழ்க்கையில் ஒரு பாகமாய் எண்ணிவிட்டார்களா இந்த இந்திய மக்கள்?

தானும் அம்மாதிரி இந்தியக் குடிமகள்தானா? யாரோ தன்னை ஜீப்பில் ஏற்றிக்கொண்டு போயும் தான் சும்மாயிருந்து விடவில்லையா?

பலசாலியுடன் வீண்வம்பு எதற்கு என்று ஒவ்வொருவரும் நினைத்துக் கொள்வதில் ஆச்சரியமில்லை. ஆனால் தானும் அவர்களில் ஒருவளாகிவிட்டதுதான் வேடிக்கை! குறைந்த பட்சம் தானாவது அவர்களை எதிர்த்து நிற்காவிட்டால் இவ்வளவு படிப்பறிவும், புத்திசாலித்தனமும், பணிவும் இருந்து என்ன பயன்?

அனுஷா ஒரு தீர்மானத்திற்கு வந்துவிட்டாள்.

டில்லியிலிருந்த அண்ணன் ஸ்ரீகாந்திற்குப் போன் பண்ணினாள். வழக்கப் பிரகாரம் குசலம் விசாரித்துவிட்டு, யதேச்சையாய் கேட்பது போல, ''வசந்த் தாதாவை உனக்குத் தெரியுமா?'' என்று கேட்டாள். அவ்வளவு தொலைவிலிருந்து கூட ஸ்ரீகாந்தின் குரலில் மாறுபாடு நன்றாய்த் தெரிந்தது.

''இப்போ அவனைப்பற்றிய பேச்சு எதுக்கு?''

''சும்மாதான் கேட்கிறேன். சொல்லு.''

''பேப்பர்களில்தான் படிக்கிறாயே...எல்லோருக்கும் தெரிந்ததுதானே! அவனும் என்னோட ஜூரிஸ்டிக்ஷன்ல தான் இருக்கான்! எங்க இலாக்காவிலிருப்பவங்களை முட்டி தேய வைத்துடுவான். முக்கியமாய் என்னை...''

''அவ்வளவு பெரிய பதவியில் இருந்தும் உன்னால் ஒன்றுமே பண்ண முடியலையா?''

''சின்னப் பெண்ணைப் போல பேசாதே! அவன் தன்னோட கையாட்களின் மூலமாய் அங்கங்கே போடச் செய்திருக்கும் கேசுகளையெல்லாம் வாபஸ் வாங்கிக்கிட்டா னானால், அவனோடு ராஜியாகிப் போயிடலாம்னு இருக்கேன்.''

''நான் பேசறது என் அண்ணன் ஸ்ரீகாந்தோடத் தானே?''

''நீ ஒன்றும் என்னை ஏளனம் பண்ணத் தேவை யில்லை.''

''எனக்கு அந்த வசந்த் தாதா சம்பந்தப்பட்ட சில விஷயங்கள் தேவை.''

''என்னென்ன?''

அவள் சொன்னாள்.

அவன் மறுமுனையிலிருந்து, ''எதுக்கு இதெல்லாம்?'' என்று கேட்டான் வியப்பாய்.

''மிசாவுக்குக் கீழேயிருக்கும் அவனை இதுவரை ஒரு முறை கூட அரெஸ்ட் பண்ணமுடியலை உங்களால். ஒரு தடவையாவது அந்த மாதிரி பண்ணமுடியாதான்னுதான்...''

''வசந்த் தாதா அவ்வளவு சுலபத்தில் சிக்கமாட்டான் அனுஷா.''

''அவனில்லாவிட்டால், அவனோட தூணாய் இருக்கிற இன்னொரு ஆள்...நாளொன்றுக்கு ஒரு ரூபாய் லாபம் என்ற ஸ்கீமைப்பற்றித் தெரியுமா உனக்கு?''

''தெரியும். பம்பாய் லேபர் காலனிகளில் விஷஜுரத்தைப் போல பரவியிருக்கு இது.''

''அது வசந்த் தாதாவின் ஆலோசனைதான்.''

''ஆமாம். அவன் ஆட்கள்தான் அதை நடத்திட்டு வராங்க.''

''அதை ஒரு உதை கொடுக்கலாம்னு இருக்கேன்'' என்று விவரமாய் சொன்னாள் தன் திட்டத்தை! ஸ்ரீகாந்த் தனக்குத் தெரிந்த விவரங்களைச் சொன்னான். அவர்களின் சம்பாஷணை சுமார் பத்து நிமிஷங்கள் நடந்தன.

'நாள் ஒன்றுக்கு ஒரு ரூபாய் ஸ்கீமை' யாரோ ஒரு உதை கொடுக்கவிருக்கிறார்கள். என்ற விஷயம் தெரிய வந்ததுமே வசந்த் தாதா-இவ்வளவு நாட்களுக்குப் பிறகு தனக்கு ஒரு விரோதி முளைத்திருப்பதை உணர்ந்தான். அந்த விரோதி ஒரு பெண்ணாயிருந்தது அவனுக்குச் சிரிப்பை வரவழைத்து, ஆர்வத்தையும் உண்டாக்கிற்று. என்ன செய்யப் போறா றாள்னு பார்த்துடுவோம் என்று காத்திருக்கத் தெரிவு கினான்,-கோபமாய் இல்லை, வேடிக்கையாய்!

"நாள் ஒன்றுக்கு ஒரு ரூபாய் ஸ்கீம்"-என்ற முறையைப் பற்றி முதல் முதலாக 1970-ல் யோசனை தோன்றியது ஒரு சார்ட்டர்ட் அகௌண்டன்டிற்கு. பம்பாயில் கூலியாட்கள் அதிகமாய் வசிக்கும் எல்லையில் இதனை அறிமுகப் படுத்தினார் அவர். இந்த ஸ்கீமில் சேர வேண்டுமானால் பத்து ரூபாய் கட்ட வேண்டும். பிறகு, அதே போல பத்து ரூபாய் கட்டக் கூடிய மேலும் இருவரை இதில் அழைத்து வந்து சேர்க்க வேண்டும். இப்பொழுது அந்த ஆளுக்குத் தான் கட்டிய பத்து ரூபாயோடு கூட இன்னொரு ரூபாயும் போனசாக சேர்ந்து மொத்தமாய் பதினோரு ரூபாய்கள் கிடைக்கும். ஒருக்கால் அந்த மாதிரி இரண்டு பேர்களை அழைத்து வந்து சேர்க்க முடியாவிட்டால், அதை அவர்களிடம் சொன்னால், தம் செலவுக்காக ஒரு ரூபாயைக் கழித்துக்கொண்டு ஒன்பது ரூபாயைத் திருப்பிக் கொடுப்பார்கள். ஐந்து நிமிஷத்தில் ஒரு ரூபாய் சம்பாதித்துக் கொள்ளலாம்.

பிற ஸ்கீம்களுக்கும் இதற்கும் உள்ள வித்தியாசம் இது தான். பண சர்க்குலேஷன் போன்ற பேராசை இதில் இல்லை. மோசடிகள் இல்லை. கிடைத்தால் நூறு ரூபாய் லாபம். போனால் ஒரு ரூபாய் நஷ்டம். அவ்வளவு தான்.

இந்த திட்டத்தைத் தொடங்கிய முதல் நாளன்றைக்கு இதில் சேர்ந்த கூலியாள் ஒருவன் முதல் பத்து நாட்களுக்குள் சுமார் ஐநூறு பேர்களைச் சேர்த்துவிட்டு இருநூற்றைம்பது ரூபாய்களை சம்பாதித்தான். பதினோராம் நாள் யாருமே கிடைக்காமல் ஒரு ரூபாயை இழந்தான். மீதி 249 ரூபாய் லாபம்!

இச்செய்தி காட்டுத்தீயைப் போல லேபர் காலனியில் பரவிற்று. இந்த ஸ்கீமைத் தொடங்கிய பெரிய மனிதர், தனக்கு அங்கத்தினர்கள் தந்த பணத்தையெல்லாம் அன்றன்றைக்கு பாங்கில் டிபாசிட்டாய் போட்டு வந்தார்.

அதன்மூலம் அங்கத்தினர்களின் பணத்திற்கு நூற்றுக்கு நூறு சதவீதம் அந்த பாங்கின் உத்தரவாதம் கிடைத்தது.

இந்தத் திட்டத்தை வைத்தவனுக்கு சாதாரணமாய் லாபம் ஒன்றுமில்லை. ஓரிருவரைச் சேர்த்துக் கொண்டதுமே அவனுக்கு அவனுடைய பத்தோடு இன்னொரு ரூபாயையும் சேர்த்துத் தந்துவிடவேண்டும். எஞ்சின இருவரும் வேறு யாரையுமே கொண்டு வந்து சேர்க்காவிட்டால் அவர்களுக்கு 18 ரூபாய் தந்துவிட வேண்டும்! இந்த மாதிரி லட்சம் பேர் அங்கத்தினர்கள் இருந்தாலும் கடைசியில் மிஞ்சுவது ஒரு ரூபாய் லாபம் மட்டுமே!

ஆனால் தந்திரமே இங்கேதான் இருந்தது!

ஒரு கூலியாள், தான் பத்து ரூபாயைக் கட்டியதுமே— தன்னைப் போன்ற இருவருக்காக அலைவான். ஒருவாரம், பத்து நாட்கள் அத்தமாதிரி சுற்றி அலைந்து தேடிக்கொண்டிருப்பான். கிடைத்தால் சரி, இல்லாவிட்டால் மேலும் ஒரு பத்து நாட்கள் தேடியலைவான். எந்த நேரத்திலும் தன் ஒன்பது ரூபாயைத் திருப்பி வாங்கிக்கொள்ளலாம் என்ற நம்பிக்கை இருப்பதால் தான் கட்டிய பத்து ரூபாயைப் பொருட்படுத்தமாட்டான்.

அது போதும்—இந்தத் திட்டத்தை வைத்தவருக்கு— பாங்கிலிருந்து நல்ல வட்டியைப் பெறுவதற்கு.

இந்தத் திட்டம் எவ்வளவு வேகமாய் பரவியிருந்ததென்றால்—1976—ல் இதைத் தொடங்கிய இளைஞன் ஒருவன் 1979-ல் மத்தியப்பிரதேசத்தில் அறுபது லட்சம் போட்டு ஒரு காகித மில்லை விலைக்கு வாங்கியிருக்கிறான். இது உண்மை!

இதே திட்டத்தை இப்போது வசந்த் தாதா தொடங்கினான். தன் சாம்ராஜ்யத்தை பம்பாயிலிருந்து கல்கத்தா, டில்லி வரையிலும் பரப்பினான். கல்கத்தாவில் உழைப்

பாளர்களுக்கு நல்ல சக்தி இருந்ததால் அங்கு இத்திட்டம் மேலும் பிரபலமடைந்தது.

அனுஷாவுக்கு ஒரு சந்தேகம் ஏற்பட்டது.

நியாயத்திற்குப் புறம்பாகவோ, சட்ட விரோதமாகவோ, ஒழுக்க முறையிலோ கூட இந்த திட்டத்தில் எந்தவிதமான மோசடியும் இல்லை. ஆனால் பணம் சம்பாதிப்பது என்பது மனித ரத்தத்தை ருசி கண்ட புலியைப் போன்றது. இவ்வளவு பணத்தையும் பாங்கில் போட்டு வட்டி மூலம் சம்பாதித்துத் திருப்தியடைவது ஒன்றுதானா? அதுவும் வசந்த் தாதா போன்றவர்களுக்கு!

அனுஷா ஸ்ரீகாந்தின் மூலம் விசாரித்துத் தெரிந்து கொண்டது அதைத்தான்.

வசந்த் தாதா இப்பணத்தை பாங்கில் போடுவதில்லை... தன் எஞ்சிய திருவிளையாடல்களுக்குப் பயன்படுத்திக் கொள்கிறான்.

முதலில் பாங்கில் போட்டு அதன் உத்தரவாதத்தைப் பெற்றான். பிறகு அதை விட்டுவிட்டு, அந்த உத்தர வாதத்தை மட்டும் தன் விளம்பரத்திற்குப் பயன்படுத்திக் கொண்டான். எல்லோருமே பண்ணும் காரியந்தான் அது. சாதாரண மனிதர்களுக்கு இது தெரியாது. மற்றவர்களைப் போல முட்டாள்தனமாய் திட்டங்களைப் போட மாட்டான் தாதா! ரகசியமாய் போட்டு வந்தான்.

இப்படிப்பட்ட 'நாளொன்றுக்கு ஒரு ரூபாய்' திட்டத்தில் தற்போது எவ்வளவு பேர் அங்கத்தினர்கள் உள்ளார்கள் என்றும் எவ்வளவு பணம் அந்த முதலாளிகளிடம் இருக்கிறது என்றும் கணக்கிட்டு ஒரு ஆங்கிலப்' பத்திரிகையில் கட்டுரையைப் போல எழுதினாள் அனுஷா.

'பாங்கு உங்கள் பணத்திற்கு உத்தரவாதம் அளிக்கிறது' என்ற விளம்பரத்தை அந்த ஸ்தாபனம் எந்தத் தேதியிலிருந்து

அறிவிப்பதை நிறுத்திக் கொண்டுவிட்டது என்பதை தேதி குறிப்பிட்டு விவரமாய் எழுதியிருந்தாள் அந்தக் கட்டுரையில். ஒருக்கால் இந்த அங்கத்தினர்கள் எல்லோரும் 'எங்கள் பணத்தை 'எங்களுக்குத் திருப்பித் தந்து விடுங்கள்' என்று கேட்டால் எங்கேயிருந்து கொண்டு வந்து கொடுப்பார்கள்?'— என்றும் கேட்டிருந்தாள்.

ஒரு பிரபல ஆங்கிலப் பத்திரிகை இதைப் பிரசுரித்தது.

வசந்த் தாதாவுக்கு விரோதிகள் இல்லாமலில்லை. மாஃபியா குருப்புக்கள் அவனுக்கு விரோமாய் இயங்கிக் கொண்டுதானிருந்தன. ஆனால் அவை குறிப்பிடத்தக்கவாறு இல்லை. ஆனால் இந்த சந்தர்ப்பத்தில் அவர்கள் இக்கட்டுரையைத் தம் பிரசாரத்திற்குப் பயன்படுத்திக் கொண்டார்கள். லேபர் காலனிகளில் எந்த செய்தியாயிருந்தாலும் சரி, நிமிட நாழிகையில் பரவிவிடும். இப்படிப்பட்ட திட்டங்களுக்கு நம்பிக்கை மிக முக்கியமானது. 'நாளொன்றுக்கு ஒரு ரூபாய்' திட்டம் திவாலாகிவிடும் என்று தெரிந்ததுமே, பத்து ரூபாய் முதலீடு போட்டிருந்த ஒவ்வொருவரும், மேலும் இருவரைத் தேடியலைவதை விட்டுவிட்டு—தம் ஒன்பது ரூபாய்களையும் வாங்கிக் கொண்டுவிட கம்பெனிக்கு ஓடினார்கள்.

முதல்நாள் கம்பெனி இரண்டு லட்சத்திற்குமேல் வழங்கித் தீர வேண்டியிருந்தது.

இரண்டாவது நாள் ஆறு லட்சங்கள்.

மூன்றாம் நாள் எட்டு லட்சங்கள்.

ஒரு வாரத்திற்கு இம்மாதிரி வழங்கவேண்டியிருந்த மொத்தப் பணம் சுமார் ஐம்பது லட்சங்களாயிற்று. (இதை வைத்துக் கொண்டு ஜனங்களின் பணத்தால் எவ்வளவு வியாபாரம் நிகழ்ந்திருக்கும் என்பதை ஊகித்துக் கொள்ளலாம்) வேறு யாராவதாயிருந்திருந்தால் கப்பரையை ஏந்தியிருக்க வேண்டியதுதான்... வசந்த் தாதாவாயிருந்தால்

தாங்கிக்கொள்ள முடிந்தது. கூலியாட்களிடையே மறுபடியும் நம்பிக்கை பிறக்க ஒரு வாரம் பிடித்தது. எங்கெங்கிருந்தெல்லாமோ பணத்தைப் புரட்டித் தரவேண்டியிருந்தது. ஸ்ரீகாந்த் வலையை விரித்து வைத்துக்கொண்டு காத்திருந்தான். எந்த நிமிடத்திலாவது யாருக்காவது கம்பெனி, பணத்தைத் தர மறுத்தால் உடனே அரெஸ்ட் பண்ணுவதற்கு.

தாதா இவ்வளவு உதை என்றுமே பட்டதில்லை. புயல் ஓய்ந்த பிறகு கணக்கிட்டுப் பார்த்த போது நஷ்டம் சுமார் பதினைந்து லட்சம் என்று தெரிந்தது. ஒரு சிறிய கட்டுரை இவ்வளவு வேலை பண்ணும் என்று ஊகித்திருக்க வில்லை. வசந்த் தாதாவின் உதடுகளில் குறுநகை மாயமாயிற்று.

## 12

''ஹலோ!''

''பில்லவன் பேசறேன்.''

''ரஜினி இருக்காரா?''

''நீங்க யாரு? உங்க குரல் நன்றாயிருக்கு. அதனால் கேட்கிறேன்.''

''அசிஸ்டென்ட் கமிஷனர் ஆஃப் இன்கம்டாக்ஸ்.''

''மைகாட்! இருங்க மேடம். சாரி மேடம். இப்போதே கனெக்ஷன் தரேன் மேடம்.'' ஒரு விநாடி கழித்து ரஜினி லைனுக்கு வந்தான்.

கொஞ்ச நேரம் வழக்கமான பேச்சு வார்த்தைகள் நடந்த பிறகு அனுஷா கேட்டாள். ''மகாபலிபுரத்துக்கு அருகில்

சில யூகலிப்டஸ் பிளான்டேஷன் போடும் நிமித்தமாய் ஒரு லிமிடெட் கம்பெனி வரப் போகிறது. நீங்களும் வரீங்களான்னு கேட்கத்தான்.''

ரஜினி லேசாய் விசிலடித்தான். ''நீ கூப்பிட்டால் வர மாட்டேன் என்பேனா. கண்டிப்பாய் வரேன். பை தி பை— என்னவோ இன்கம்டாக்ஸ் என்றாயாமே?''

''உங்க ஆளுக்கு அப்படிச் சொன்னால்தான், பெண்களின் மேலிருக்கும் இளப்பமான எண்ணம் போகும்னு. ஸாரி, பை—நாளைக்கு சந்திப்போம்.''

அதற்கு அடுத்த நாள், இருவரும் மகாபலிபுரம் நோக்கி பயணமானார்கள்.

''நாம் எங்கே தங்கப்போறோம்?''

''நீலாங்கரைப் பக்கம் உள்ள கெஸ்ட் ஹவுசில்.''

ரஜினி திரும்பவும் லேசாய் விசிலடித்ததை ஓரக் கண்ணால் கவனித்தாள்.

''அநாவசியமான கற்பனைகளையும் ஆசைகளையும் வளர்த்துக்காதீங்க ரஜினி. உங்களை ஒரு வேலையாய் கூட்டிட்டுப் போகப் போறேன்.''

''என்ன வேலை?''

''போனதும் சொல்றேன்.''

கார் பாதி தூரம் தாண்டியதும் அவள் சொன்னாள்— ''வசந்த் தாதாவுக்கு சின்ன நீதி போதித்தேன் ரஜினி.''

ரஜினியின் முகத்திலிருந்த சிரிப்பு மாயமாயிற்று. ''என்ன? எப்படி?'' என்றான்.

அவள், தான் எழுதிய கட்டுரையைப்பற்றியும், வியாபாரிகள் வட்டாரத்தில் அதனுடைய பாதிப்பைப் பற்றியும், தாதாவுக்கு அதன் மூலம் வந்த நஷ்டத்தைப் பற்றியும் சொன்னாள்.

ரஜினி வெகு நேரம் பேசாமல் உட்கார்ந்திருந்தான். அவன் மூடு கெட்டு விட்டது புரிந்தது.

''ஏதாவது ஆனால் எனக்குத் தானே ஆகும். நீங்க எதுக்கு இப்படி மூட் அவுட்டாகணும்?''

''எனக்கு பயமாயிருக்கு.''

''தனியாயிருந்த ஒரு பெண்ணிடம் முத்தம் கொடுக்க மட்டும் பயமில்லையா?''

கார் நீலாங்கரைக்கு அருகிலிருந்த கெஸ்ட்ஹவுசிற்கு முன்னால் வந்து நின்றது. தொலைவிலிருந்த சிறிய குளத்தி லிருந்து குளிர்ந்த காற்று வந்து மோதிக்கொண்டிருந்தது. இருவரும் தனித்தனி அறைக்குள் நுழைந்து கொண்டிருந்த பொழுது, ''இன்னும் அரைமணியில் அந்த கம்பெனிக் காரங்க வந்துடுவாங்க. இடத்தைப் பார்க்கப் போகணும்'' என்றாள்.

''எனக்கு ஏதோ வேலை இருக்குன்னாயே?''

''சொல்றேன்.''

ரஜினி உள்ளே போய்விட்டான்.

ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு அவள் அவன் அறைக்குள் நுழைந்தாள். துண்டைக் கட்டிக் கொண்டு குளிப்பதற்கு தயாராக இருந்தான் அவன்.

அவளைப் பார்த்ததும் சட்டென்று பாத்ரூமுக்குள் போய், ''ஆண்களின் அறைக்குள் இந்த மாதிரி கதவைத் தட்டாமல் நுழையக் கூடாது'' என்றான்.

அவள் சிரித்துவிட்டு, "அந்தத் துண்டு இதற்கு முன்னால் இந்த அறையில் தங்கினவங்களுக்குத் தந்திருந்த தாம். அதை வெளியே வீசி எறிங்க. வேறு துண்டு வருது. பை தி பை, சீக்கிரமாய் குளித்து முடிங்க. அவங்க வர நேர மாயிடுத்து" என்றாள்.

ரஜினியின் கை கதவு சந்து வழியாக துண்டை வெளியே, வீசி எறிந்தது.

இரண்டு நிமிடங்களுக்குப் பிறகு பிரீஃப் கேசை மூடிய சப்தம் 'க்ளிக்' என்று கேட்டது.

பாத்ரூமிலிருந்தே, "ஏய்" என்றான்.

"நான் போயிட்டு வரேன்?"

"எங்கே? இரு...ஆயிடுத்து. அவனை சீக்கிரமாய் துண்டு கொண்டு வரச் சொல்லு."

"அவன் இப்போதைக்கு வரமாட்டான் ரஜினி! நாளை வரையிலும் நம்மைத் தொந்தரவு பண்ண வேண்டாம்னு சொல்லி அவனை அனுப்பியாச்சு. உங்க கைக் கடியாரம், மோதிரம், துணி மணிகள், துண்டுகள், கடைசியில் பெட்ஷீட்டோடு எல்லாவற்றையும் எடுத்துட்டுப் போறேன்.'

"ஏய்—என்ன இது, நில்!"

"ரஜினி! இந்த உலகத்தில் அயோக்கியர்களும் மனித உருவம் தாங்கிய ராட்சதர்களும் தன்னிச்சையாய் திரியும் போது, அவங்கவங்க நமக்கென்ன வந்ததுன்னு பேசாமலிருக் கிறாங்கன்னு நான் சொன்னதைக் கேட்டு நீங்க எதிர்த்து வாதாடினீங்க. ஏதோ உதாரணம் காட்டுவது போல என்னை முத்தமிட்டுவிட்டு, "எந்த போலீஸ் ஸ்டேஷனில் ரிப்போர்ட் கொடுக்கமுடியுமோ கொடு"ன்னு ஏளனம் பண்ணினீங்க. நடக்கிற ஒவ்வொண்ணுக்கும் பதில் சொல்றதுக்கு போலீசோ ஸ்டேஷனோ தேவையே இல்லை

ரஜினி! இந்தவிதமாய்க் கூட பதில் சொல்லலாம். ஏற்கனவே இந்த கெஸ்ட்ஹவுஸ் ஊருக்கு வெகு தூரத்தில் இருக்கு. ஆடை இல்லாமல் இங்கே இருந்து ஊருக்கு எப்படி வருவீங்களோ அது உங்களிஷ்டம். வஞ்சிக்கப்பட்ட ஒவ்வொருவரும் ஏதாவது ஒருவழியில் பழிதீர்த்துப் பாங்கன்னு சொல்றாங்களே அது எவ்வளவு உண்மைன்னு இப்பவாவது ஒப்புக்கிறீங்களான்னு பார்ப்போம். இனி, ஒருபோதும் உங்க சொந்த மனைவியை முத்தமிடுவதுபோல யாரையும் முத்தமிட்டுடாதீங்க. அப்படிப் பண்ணினால் நீங்களே வசந்த் தாதா ஆயிடுவீங்க. போயிட்டு வரேன்.''

''நில்! ஏய்! இரண்டு வினாடி டைம் தரேன். ப்ரீஃப்கேசை அங்கே வைத்துட்டுப்போ. இல்லாவிட்டால் இப்படியே வெளியே வந்துடுவேன், எனக்கு வெட்கமில்லை. உன்னால் தாங்கிக்க முடியாது'' என்று சிறிது தாமதித்துவிட்டு கதவைத் திறந்தான்.

வெளியே கார் ஸ்டார்ட் செய்யும் சத்தம் கேட்டது. அவள் மட்டும் போய்விட்டால் தன் நிலை என்னவாகும் என்பதை ஊகித்துணராத முட்டாளில்லை அவன். யாரும் இல்லாத இந்த நேரத்திலேயே அவளைப் பிடித்து விடுவதுதான் நல்லது. அப்படியே ஓட்டமாய் ஓடிவந்து படிகளில் இறங்கி கீழே வந்தான். புழுதியைக் கிளப்பிக் கொண்டு கார் போய் விட்டது. தொலைவில் குளக்கரை. இந்தப்பக்கமாய் கோவில், எங்கும் ஆள் நடமாட்டம் இல்லை.

சர்மா!

இருபதாவது வயதில் காதலித்துத் திருமணம் புரிந்து கொண்டான். பிறகுதான் புரிந்து — தம்மிருவருக்குமிடையே இருந்தது காதல் இல்லை, கேவலம் வயதுக் கோளாறு மட்டும் என்று. பிறகு இரு குழந்தைகள் பிறந்தார்கள். அதற்குப் பிறகு அந்தப் பெண் யாருடனோ ஓடிப்போனாள்.

இரு குழந்தைகளையும் காப்பாற்ற அல்லாடினான் சர்மா. அவர்களின் நலனுக்காக எதையும் செய்யத் தயாராயிருந்தான். சரியாய் சங்கரைப் போன்ற உயரமும் பருமனும் கொண்டிருந்த அவனை வசந்த் தாதாவின் ஆட்கள் பிடித்துக் கொண்டார்கள். ஒப்பந்தம் ஏற்பட்டது. இரு குழந்தைகளின் பேரிலும் தலைக்கு ஐந்து லட்சங்களை பாங்கில் போட்ட பிறகு டில்லிக்கு அழைத்துச் செல்லப்பட்டான்.

சங்கரின் மேல் நம் நாட்டில் வழக்கு முடிவடைந்ததுமே, விமான நிலையத்தில் நடக்க வேண்டிய ஆள்மாறாட்டம் நடப்பதற்கான ஒத்திகைகள் நடந்தன.

அந்த நாளும் நெருங்கிற்று!

அப்பொழுது—

மயக்கத்திலிருந்து மெல்ல மெல்ல தெளிவடைவது போல தான் மரணமடையப் போகும் உண்மை வெளியே வந்து சர்மாவை பயமுறுத்தத் தொடங்கிற்று.

காதலானது எப்படி கல்யாணமாகி, பின் முறிந்து விட்டதோ அதேபோல குழந்தைகளின் மேலிருந்த சென்டிமெண்ட்டும் சாவு நெருங்க போய்விட்டது.

அதுவரை, தான் செத்தபிறகு தன் பணத்தால் குழந்தைகள் கார்களுடன் பங்களாக்களில் வாழப் போவதாக கற்பனை பண்ணி மகிழ்ந்து கொண்டிருந்தவன், தானும் குழந்தைகளும் படாதபாடுபட்டு பணம் சம்பாதித்து, ஓடிப் போன மனைவியைப் பழிவாங்குவது போல கற்பனை செய்து மகிழ்ந்து கொண்டிருந்தவன்—

'அவை நடக்க வேண்டுமானால் இங்கேயிருந்து ஓடிவிட வேண்டும்' என்ற எண்ணத்திற்கு தள்ளப்பட்டு விட்டான்.

நிமிடத்திற்கு நிமிடம் அந்த எண்ணம் உறுதியாகிக் கொண்டே வந்தது.

ஒரு வாரத்திற்குப் பிறகு அதற்குரிய அவகாசமும் கிடைத்தது. வீட்டைவிட்டு வெளியேறிவிட்டான். சங்கரை தப்பிக்கச் செய்வதற்காக வசந்த் தாதா போட்ட அபார மான திட்டத்தைத் தெரிந்துகொண்டிருந்த ஒரே வேற்று ஆள் அவன்தான்.

சர்மா வெளியேறிவிட்ட விஷயம் தாதாவுக்குச் சரியாய் அரைமணிக்குப் பிறகு தெரிந்தது. வசந்த் தாதா வாழ்நாளி லேயே முதல் முதலாகக் கொதித்தெழுந்தான். அவனுள் இருந்த ராட்சதத்தனம் வெளியே வந்தது. முகம் விகாரமாய் மாறிற்று.

சுமார் ஐம்பது பேர் கையாட்கள் டில்லியின் புறநகர்ப் பகுதியை சல்லடை போட்டுத் தேடினார்கள். மோட்டார் சைக்கிள்களின் ஓசை காதைப் பிளந்தன.

புறப்படவிருந்த ரயில்கள் — 'பாம்' வைக்கப்பட்டுள்ளது என்ற மர்மத்தொலைபேசியால் நின்றன. பஸ் ஸ்டாண்ட், விமான நிலையம் எதையும் விட்டுவைக்கவில்லை. சர்மா எங்கே தென்பட்டாலும் உடனே சுட்டுத் தள்ளிவிடும்படி உத்தர விட்டான் தாதா. இந்தச் செய்தி வெளிப்பட்டுவிட்டால் பிறகு யாருமே சங்கரைக் காப்பாற்றி விட முடியாது என்பது உறுதி!

அப்பொழுதுதான் ஜப்பானிலிருந்து கமிஷனர் ஆஃப் போலீஸ் யமீன் சுன் இந்தியாவுக்கு வந்திருந்தார்.

சர்மாவுடன் தன் திட்டம் வெளியே வந்துவிடாமல் சமாதியாகி விட வேண்டும்!

சமாதி! சமாதி!

வசந்த் தாதா தன் அறையில் பொறுமையின்றி நடை பயின்று கொண்டிருந்தான்.

அதே சமயத்தில் இரண்டாம் வகுப்பு கம்பார்ட்மெண்டில் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு நின்றிருந்தான் சர்மா.

ரயிலில் 'பாம்' வைக்கவில்லை என்று உறுதியானதும் அது புறப்படுவதற்கு அனுமதி தரப்பட்டது. ஒரு மணி நேர தாமதத்தில் தாதாவின் ஆட்கள் ரயிலுக்குள் துருவித் துருவி தேடினார்கள். அவர்கள் கடைசி பெட்டியை தேடிக்கொண்டிருந்தபோது எக்ஸ்பிரஸ் கிளம்பப் போவதாய் அறிவிப்பு கேட்டது. நான்கு பேர் ரயில் ஓடிக்கொண்டிருக்கும் போதே இறங்கினர். எஞ்சிய இருவரும் ரயில் வேகம் எடுப்பதற்குள்ளாக 'அவுட்டர்' வந்ததும் கீழே குதித்தனர்.

வியர்வை ஆறாய்ப் பெருக அந்த டாய்லெட்டிலேயே சில மணி நேரம் கழித்தான் சர்மா. பயத்தால் நடுங்கிக் கொண்டிருந்தான் அவன். இப்பொழுது அவன் கண்முன்னால் ஐந்து லட்சம் தென் படவில்லை. குழந்தைகள் தென்பட்டார்கள். தன் அந்திமக்கிரியைக் காட்சிகள் தென்பட்டன.

வசந்த் தாதாவுக்கு ஐந்து நிமிடங்களுக்கொரு முறை சர்மா கிடைக்கவில்லை என்ற செய்தி அனுப்பப்பட்டது. அவன் பொறுமையின்றி அவஸ்தைப்பட்டான்.

சர்மா போலீஸ் அதிகாரிகளுக்கு இந்த விஷயத்தை வெளிப்படுத்துவதற்கு முன்பே அவன் வாயை நிரந்தரமாக மூடிவிட வேண்டும். இது முதல் வேலை. சங்கரை ஜப்பான் போலீசார் அழைத்துச் செல்வதற்கு முன்பே வேறொருத்தனை அந்த இடத்தில் தேடி வைக்க வேண்டும். இரண்டுமே கஷ்டமான வேலைகள். ஆனால் சாதித்துத் தீர வேண்டும்.

அவன் அசதியோடு குறுக்கும் நெடுக்கும் நடந்து கொண்டிருந்தான். நேரமோ அதிகமில்லை எந்த நிமிடத்திலும் சர்மா தன் திட்டத்தை வெளிப்படுத்திவிடக் கூடும். அதனால் தனக்கு எந்தக் கஷ்டமுமில்லை. சர்மாவின் சாட்சியை ஆதாரமாய் வைத்துக்கொண்டு போலீசார் தன்னை ஒன்றும் பண்ணி

விட முடியாது. ஆனால் சங்கரின் உயிரை மட்டும் அதற்குப் பிறகு யாராலுமே காப்பாற்ற முடியாது. ஜப்பானில் அவன் உடல் தூக்கில் தொங்கும்.

வசந்த் தாதா ரிசீவரை எடுத்து செக்ரட்டேரியட் லா மினிஸ்டருக்கு போன் பண்ணினான். செக்ரட்டரி தன் பெர்சனல் போனில் வந்ததும் அவரிடம் விஷயத்தைச் சொன்னான்.

செக்ரட்டரி சங்கடத்தோடு ''தாதா, முன்பு போலில்லை நிலைமை! பத்திரிகைகள், முக்கியமாய் இங்கிலீஷ் பத்திரிகைகள் நம்மைத் தூக்கி எறிந்து பேசுகின்றன. எதைப் பண்ணினாலும் ஜரக்கிரதையாய் பண்ணணும்'' என்றார்.

''இதொன்றும் பெரிய உதவியில்லை சார். ஏதாவது ஒரு காரணத்தை வைத்து சங்கரை இன்னும் மூணு நாலு மாதங்கள் இந்தியாவிலேயே இருக்கும்படி பார்த்துக்குங்க.''

''பார்ப்போம்.''

இது நடந்த இரண்டு நாட்களுக்குப் பிறகு சங்கரின் மேல் இன்னொரு சிறிய கேஸ் புக் ஆயிற்று. அதுவும் முடிந்த பிறகுதான் அவனை ஜப்பானுக்கு அனுப்ப முடியும் என்று மினிஸ்ட்டரிமிருந்து உத்தரவு வந்தது. இது இப்போதைக்கு முடிவடையாது என்று எல்லோருக்குமே தெரியும்.

ஆனால் ஜப்பானிலிருந்து வந்திருந்த போலீஸ் அதிகாரி மேலும் தீவிரமாய் நடந்து கொள்ளத் தொடங்கினார். நேராகப் போய் சட்ட அமைச்சருடன் பேசினார். அதிர்ஷ்டவசமாய் அந்த அமைச்சர் ஓர் இளைஞர். லஞ்சம் வாங்கும் விஷயத்தில் இன்னும் தேர்ச்சி பெற்றிருக்கவில்லை. இந்த விவகாரங்களையெல்லாம் முடித்து ஒரு மாதத்திற்குள் அனுப்பிவிட வேண்டுமென்று தேதி குறிப்பிட்டார். எது எப்படியோ வசந்த் தாதாவுக்கு ஒருமாத கால அவகாசம் கிடைத்து விட்டது.

இந்த ஒரு மாதத்திற்குள் அவன் இரண்டு வேலைகளைப் பண்ண வேண்டியிருந்தது. முதலாவது, சர்மாவின் வாயை நிரந்தரமாய் மூடச் செய்வதன் மூலம் தன் திட்டத்தை இரண்டாம் பேர் அறியாமல் செய்வது! இரண்டாவது—சங்கருக்கு பதில் ஜப்பானுக்கு போக மாற்று ஆளைத் தேடுவது!

அவன் இவ்வாறு யோசித்துக் கொண்டிருந்தபோது போன் வந்தது—''சரக்கு மெட்ராசில் இறங்கியிருக்காம். அங்கே இருக்கும் ஆட்கள் அடையாளம் தெரிஞ்சுக் கிட்டாங்க'' என்று.

கொஞ்சநேரத்தில் கட்டையாய் மாறப்போகிற உடலைத் தான் 'சரக்கு' என்று அவர்களின் பரி பாஷையில் சொல்லிக் கொள்வார்கள்.

# 13

''கங்கிராஜுலேஷன்ஸ் அம்மா'' என்றார் ராமசுப்பன் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு.

''எதுக்குங்க?'' முறுவலுடன் கேட்டாள் அனுஷா.

அவள் ஜெனரல் மேனேஜரான பிறகு ஒரு பார்ட்டியில் ராமசுப்பனைப் பரிச்சயம் பண்ணி வைத்து, இண்டர்வ்யூ சமயத்தில் அவள் செய்த தந்திரத்தைச் சொன்னார் பண்டா. ராமசுப்பன் பெரிதாய் சிரித்துவிட்டு, ''குட்! இந்த உத்தி யோகத்தில் இருக்கணும்னால்—இந்த அளவிற்காவது சாமர்த்தியம் இருந்து தீரணும்மா'' என்றார்.

பண்டா அவரிடம் போய் சொன்னாரே என்று எண்ணிக் கொண்டாளே தவிர, பிற்பாடு இந்த விஷயம் வேறு யார் மூலமாவது தெரியவருவதைவிட இந்த மாதிரி தெரிந்து கொள்வதே நலம் என்று அவளுக்குப்பட்டது. அதற்குப் பிறகு வேலூரிலிருந்து எப்பொழுது வந்தாலும் பால்கோவா வாங்கிக்கொண்டு வந்து தருவார். பண்டாவுக்கு பால்கோவா என்றால் மிகவும் பிடிக்கும். அவளோடும் சேர்ந்து சரளமாய் பேசுவார்.

''ஏதோ நீ எழுதியிருந்த கட்டுரை ரொம்ப நன்றாயிருந்த தாமே. எல்லோரும் சொன்னாங்க.''

அவள் பதில் பேசவில்லை. மனதிற்குள் தன் கட்டுரை இவ்வளவு பரபரப்பை ஏற்படுத்தியதற்கு வியப்படைந்தாள். அதற்குள் பண்டாவிடமிருந்து அழைப்பு வந்தது.

''ஒரு நிமிடம் இதோ வந்துட்டேன்'' என்று அவள் சேர்மன் அறைக்குள் நுழைந்து ''கூப்பிட்டீங்களா?'' என்றாள்.

பண்டா நிமிர்ந்து, ''நானா? இல்லையே?'' என்றார். ''சரி எப்படியும் வந்துட்டாய். இன்றைய பேப்பரில் ஏதோ ரதி அண்ட் கம்பெனியைப்பற்றி என்னவோ வந்திருக்காம். பாரு'' என்றார்.

ரதி அண்ட் கம்பெனிக்கு துணிமணி வியாபாரத்தில் சிறப்பான இடம் இருந்து வந்தது. பல நாடுகளுக்கும் ஏற்றுமதி பண்ணி வந்தார்கள்.

''எந்தப் பேப்பரில்?''

''இந்துவிலும்—இண்டியன் எக்ஸ்பிரஸிலும்.''

''அந்த மாதிரி எதையும் பார்த்ததாய் தெரியலையே'' என்றாள்.

ஒவ்வொரு நாளும் எல்லாப் பேப்பர்களையும் முதல் பக்கத்திலிருந்து கடைசி பக்கம் வரையிலும் ஒருவார்த்தை கூட விடாமல் படித்து விடுவது அவள் வழக்கம்.

''இன்னொரு முறை பாரு.''

அவள் திரும்பித் தன் அறைக்கு வந்தபோது பையன் 'எக்கனாமிக்ஸ் டைம்ஸ்' பத்திரிகையைக் கொணர்ந்து தந்தான். அந்த ஒரு பேப்பர்மட்டும் பிற்பகலில்தான் வரும். அவள் புரட்டிப் பார்த்தாள். மூன்றாம் பக்கத்தில் இருந்தது அச்செய்தி.

''எதுக்கும்மா சிரிக்கிறாய்?''

''ஒன்றுமில்லைங்க.''

ராமசுப்பன் பேப்பரை வாங்கிப் பார்ந்தார்.

''ரதி அண்ட் கம்பெனி அவர்களால் தயாரிக்கப்படும் புது விதமான பிரேஸியர்கள்!''

அஹமதாபாத், நவம்பர் 13. ரதி அண்ட் கம்பெனி புது விதமான பிரேசியர்களை பேடண்ட் பண்ணியிருக்கிறது. பின்னால் போட்டுக் கொள்ளும் கொக்கிகளோ, ஸ்ட்ரிப்ஸ்களோ இல்லாமல் முன் பாகம் உடைய இந்த பிரேசியர்கள் இந்தியாவின் முதல் துணி பேடண்ட் (பேடண்ட் நம்பர் பி, 19637) ஆகும் என்று இக்கம்பெனியின் டைரக்டர் மல்ஹோத்திரா சொன்னார். தற்போது அமெரிக்காவிலுள்ள ஸ்ட்ரிப்லெஸ் பிரேசியர்களைக் காட்டிலும் இது மேலானது என்றும், பெண்களின் அழகை எடுப்பாய் காட்ட வல்லதென்றும் மல்ஹோத்ரா சொன்னார். தற்போது அமெரிக்க இளம் பெண்களைக் காட்டிலும் 35 வயதிற்கு மேற்பட்டவர்களைத்தான் இந்த ஃபாஷன்கள் அதிகமாய்க் கவருகின்றன என்பது வாசகர்கள் அறிந்த விஷயமே...இந்த எஸ். எல். பி. க்கள் உடல்நலத்திற்குக் கூட...''

முற்றிலும் படிக்காமல் ராமசுப்பன் பேப்பரை மேஜையின் மேல் போட்டுவிட்டு ''அம்மா, இந்த கம்பெனியின் ஷேர்களை உடனே வாங்கணும்'' என்றார்.

அனுஷா சிரித்துவிட்டு, ''அவசரமில்லீங்க'' என்றாள்.

''உனக்குத் தெரியாது. இந்த மாதிரி விஷயங்களில் தான் புத்தி தேவை. ஒரு வருடம் ஓடி மறைவதற்குள்—நான் சொல்றேன் கேட்டுக்கோ, இந்த பிராக்கள் ஒவ்வொருத்தர் உடம்பிலும் தென்படாவிட்டால் பார், என் காதை அறுத்துக்கிறேன்.''

''நம்ப இந்தியர்கள் அவ்வளவு சீக்கிரத்தில் மாற மாட்டாங்க.''

''ஒரு வருடத்தில், இல்லாவிட்டால் இரண்டு வருடத்தில், மாறறாங்க! ஒரு காலத்தில் நம்மளவங்க பாடிதான் போட்டுக்குவாங்க. பிரேஸியர்கள் வந்த புதிதில் ரொம்பத் தடுமாறினாங்க. இப்பப்பாரு கடைவீதிக்குப் போய் கண்ணில் விளக்கெண்ணெயை விட்டுத் தேடினாலும் பாடி தென் படாது. என் ஊகம் சரியாயிருக்குமானால் அதற்குள் அந்த 'ரதி அண்ட் கம்பெனி' ஷேர்களின் விலை எக்கச்சக்கமாய் உயர்ந்திருக்க வேண்டும்.''

''புதியாய் கண்டுபிடித்த உடனேயே அவ்வளவு சீக்கிரத்தில் விலை உயராதுங்க. ஆனாலும் பார்ப்போம்...'' என்று விலைகள் சம்பந்தப்பட்ட பகுதிக்கு போன் பண்ணினாள்.

''ரதி கம்பெனி ஷேர் எவ்வளவு?''

''பதினோரு ரூபாய் மேடம்.''

''நேற்று?''

''பத்தரை.''

அவள் போனை வைத்துவிட்டு, ''நீங்க சொன்னது சரி தான். விலை உயர்ந்திருக்கு'' என்றாள்.

''எனக்கு ஒரு லட்ச ரூபாய்க்கு ஷேர் வாங்கும்மா.''

அனுஷா ஆச்சரியமடைந்து, ''லட்சமா?'' என்றாள். ''ரொம்ப சின்ன கம்பெனி அது. அதோட அதன் நிலவரங்கள் கூட அவ்வளவு திருப்தியாயில்லை. இன்னும் ஒரு ரெண்டு நாள் பொறுத்துப் பார்த்தால் என்ன?''

''அதற்குள் விலை இன்னும் உயர்ந்துடும். பெண்களின் விருப்பு வெறுப்புகள் எப்படி மாறும்னு உன்னைவிட எனக்கு ரொம்பவே தெரியும். மார்க்கெட்டில் நாளையிலிருந்தே இந்த எஸ்.எல் பிரேஸியர்கள் வரத்தொடங்கிடுத்துன்னு வெச்சிக்கோ. உன் கணக்குப் பிரகாரம் அடுத்த வருடத்திற்குள் எவ்வளவு பேர் இந்த தினுசை உபயோகிப்பாங்கன்னு கணக்கிட்டுச் சொல்லுபார்ப்போம். விற்பனை எப்படியிருக்கும்?''

அவள் கால்குலேட்டரை எடுத்து காகிதத்தின்மேல் ஐந்து நிமிடங்கள் கணக்குப் போட்டாள். மாறும் விருப்பு வெறுப்புக்கள்...ரிஸ்க் எலிமெண்ட்...ஜனத்தொகை... எல்லாவற்றையும் போட்டுப் பார்த்து விட்டு, ''கம்பெனி பேலன்ஸ் ஷீட்டை நான் பார்க்கலை. கேவலம் மார்க்கெட் ஒன்றை மட்டுமே கணக்கில் எடுத்துக்கிட்டீங்கன்னால் அடுத்த வருடம் இந்த ஒரு லட்சத்திற்கு லாபம் குறைந்தபட்சம் நாற்பதாயிரம் வரலாம்'' என்றாள்.

''ஒருக்கால் நம் இந்தியப் பெண்கள் இந்த மாதிரி நழுவும் பிராக்களை வரவேற்கலைன்னு வெச்சுக்கோ, நமக்கு வரும் நஷ்டம் எவ்வளவு?''

அவள் சிரித்துவிட்டு ''ஐந்தாயிரம்'' என்றாள்

''நாற்பதாயிரம் லாபத்துக்காக ஐந்தாயிரம் ரிஸ்க் எடுத்துக்காதவங்க வியாபாரப் புள்ளியாக முடியாது.''

அவள் ஃபாரத்தை அவருக்கு முன்னால் தள்ளினாள். அவர் கையெழுத்திட்டார். லட்ச ரூபாய்கள் வரை விடுப்பில் விற்கும் அதிகாரமிருந்தது அவளுக்கு. அவள் ஃபாரத்தில் எஞ்சியவைகளைப் பூர்த்தி செய்துவிட்டு வேறு இலாகாவுக்கு அதை அனுப்பி வைத்தாள்.

அவர் எழுந்து, ''நாளைக்கு இன்னொரு அரை ரூபாய் அதிகரித்ததுன்னு வை. நீயும் உங்க சேர்மனும் டின்னருக்கு வரணும்'' என்றார்.

''நாளைக்கே உயரம்னும்னு எதிர் பார்க்கிறது பேராசை. ஆனால் உங்க டின்னருக்காகவாவது அந்த மாதிரி ஆகணும்னு எதிர்பார்க்கிறேன்'' என்றாள். அவர் போய்ச் சேர்ந்தார்.

அவர் போன ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு கதவு தட்டிய சப்தம் கேட்டது.

`வத்சலா!

''பிசியா இருக்கீங்களா?''

''இல்லை, இல்லை, வாவா...'' வரவேற்றாள் அனுஷா.

வத்சலாவின் முகத்தில் என்னவோ கேட்கவேண்டுமென்ற ஆர்வம் தென்பட்டது. வந்து நாற்காலியில் உட்கார்ந்து, ''நீங்க எப்படித்தான் சொன்னீங்களோ இப்ப நினைத்தாலும் புரியமாட்டேங்குது எனக்கு. இந்த பத்து நாட்களில் சுமார் ஐம்பது தடவைகளாவது பிரயாணம் பண்ணியிருப்பேன். சுமார் நாற்பது தடவை லைப்ரரி பக்கம் போனேன். பத்து தடவை மட்டுமே ராமன் வீட்டிற்கு போனேன். இதெப்படி முடிந்தது?'' என்றாள்.

''மொத்தத்தில் என்ன தீர்மானித்தாய்?''

''லைப்ரரி பக்கம் போகத்தான்.''

''குட். உன் வாழ்க்கைப்பாதையை நகரத்து பஸ்தான் வகுத்துத் தந்திருக்குன்னு சொல்லு'' என்றாள் அனுஷா.

''வாழ்க்கைப் பாதையை விட்டுத் தள்ளுங்க. நீங்க இவ்வளவு கச்சிதமாய் எப்படித்தான் சொன்னீங்களோன்னு புரியலை'' என்றாள் வத்சலா, பத்து நாட்களுக்கு முன்னால் நடந்த சம்பவத்தை நினைவு கூர்ந்து.

பத்து நாட்களுக்கு முன்னால் நடந்தது இதுதான்.

''நீங்க கேட்டாற்போல அன்றைக்கு நாங்க என்ன பேசிக்கிட்டோம்னு காகிதத்தில் எழுதி எடுத்து வந்திருக்கேன்'' என்றாள் வத்சலா, கைப்பைக்குள் கையை விட்டுக்கொண்டே.

''என்ன காகிதம்?''

''அதான்...பார்க்கில் நானும் ராமனும் அன்றைக்கு என்ன பேசிக்கிட்டோமோ அது. அவரோடு பேசிக்கிட்டே மனதிற்குள் நோட் பண்ணிட்டேன்.''

''எங்கே பார்ப்போம்.''

''ஒரு கட்டுரையைப் போல இருந்தது அது. வரிசையாய் பாய்ண்ட்ஸாக மாற்றினால் அவை இவ்வாறு இருக்கும்.

1. சந்தித்ததுமே பேசிக் கொண்டது-புதிய உத்யோகம் இண்டர்வ்யூவைப்பற்றி பத்து நிமிடங்கள். தனக்கு இன்னும் வேலை கிடைக்காததைப்பற்றி சொல்லி ஓய்ந்தார் ராமன்.

2. புதிதாய் ரிலீசான மிதுன் சக்ரவர்த்தியின் சினிமா—ஜிதேந்திராவுக்கு இப்தொழுதெல்லாம் மார்க்கெட் குறைந்து கொண்டே வருகிறது என்றார்—எட்டு நிமிடங்கள் இடையில் இளையராஜாவைப் பற்றிக் கூட பேசிக் கொண்டோம்.

3. தன் வீட்டில் தன்னை அண்ணன்கள் சரியாய் கவனிப்பதில்லை என்றும் இரண்டாவது அண்ணி ஒருத்தி

தான் கொஞ்சம் நல்லவள் என்றும், அந்த நல்ல குணத்தைப் பற்றியும் சொன்னார். என் சின்ன அக்கா எவ்வளவு நல்லவள் என்றும் சொன்னேன் நான். மொத்தம் சுமார் பதினோரு நிமிடங்கள் இச்சம்பாஷணை நடந்தது.

4. கட்டாவ் வாயில் புடவை பற்றிய பேச்சு வந்தது. அது எனக்கு இஷ்டம் என்றேன், பெண்களின் லேட்டஸ்ட் .'.பேஷன்களைப்பற்றி இருவரும் பேசிக் கொண்டோம்.

5. எனக்கு சிறுவயதில் நடந்த டான்சில்ஸ் ஆபேரஷனைப் பற்றிச் சொன்னேன். சிநேகிதனின் ஸ்கூட்டரில் சென்றபோது நேர்ந்த ஆக்ஸிடென்டைப் பற்றிச் சொன்னார் அவர்.

6. தன் சிநேகிதனின் பெரியப்பா மகனின் வீட்டிற்குத் தேநீருக்காகப் போயிருந்தபோது அங்கே வந்திருந்த ஒரு எழுத்தாளன் எவ்வளவு கர்வமாய் நடந்து கொண்டான் எனபதை அந்த பெரியப்பா மகன் தன் சிநேகிதனுக்குச் சொன்னது—அந்த சிநேகிதன் அதை அவருக்கு (ராமனுக்கு) அதை எனக்கு சொன்னார்.

7. இருவரும் எழுந்திருந்து பஸ் நிறுத்தித்திற்கு வந்தோம். வெகு நேரம் திட்டித்தீர்தோம். நேரமாகி வீட்டால் வீட்டில் திட்டுவார்கள் என்று பயந்தேன். மொத்தம் பதினைந்து நிமிடங்கள்.

மொத்த நேரம்—இரண்டரை மணி நேரம்.

அனுஷா காகிதத்திலிருந்ததைப் படித்து முடித்துவிட்டு நிமிர்ந்தாள்.

''உள்ளது உள்ளபடி அப்படியே எழுதியிருக்கிறாய் போலிருக்கே?'' என்றாள்.

''ஆமாம் ஆனால் எனக்குப் புரியலை நீங்க எதுக்கு இந்த மாதிரி எழுதச் சொன்னீங்கன்னு—''

''நான் என் வாழ்க்கையில் எதையாவது மிஸ் பண்ணிட்டேனோன்னு தெரிஞ்சுக்கத்தான். ஆனால் இதைப் பார்த்தபிறகு நான் எதையும் இழக்கலைன்னு புரிஞ்சுது.''

''நீங்க என்ன பேசுறீங்கன்னு எனக்குப் புரியலை.''

''வாழ்க்கை என்பது ஒரு கணக்கைப் போன்றது. பண்ணின ஒவ்வொரு நிகழ்ச்சியையும் இன்னொரு முறை பரிசீலித்துப் பார்த்துக் கொண்டால் எந்தக் கணக்குமே தவற வழியில்லை. அதனால்தான் நேற்று மாலை நாம் எப்படி கழித்தோம்னு திருப்பிப் பரிசீலித்துப் பார்த்தால், நாளை மாலையில் இதைவிட இன்னும் நன்றாய் எப்படி கழிக்கலாம்னு யோசிக்க வழி தெரியும். அவ்வாறு பரிசீலிக்கவே இதையெல்லாம் எழுதச் சொன்னேன் உன்னை, சொல்லு வத்சலா. நன்லாய் யோசித்துப் பார்த்துச் சொல்லு. அந்த இரண்டரை மணி நேரத்தில் ஒன்றே ஒன்றாவது பயன்படத் தக்கதும் அறிவைப் பெருக்கக் கூடியதும்—குறைந்த பட்சம் மனதிற்கு உற்சாகத்தைத் தரக்கூடியதுமான ஏதாவது ஒன்றைப் பற்றியாவது பேசிக்கிட்டீங்களா நீங்க?''

அவள் எதிர்பாராமல் அவ்வாறு தீவிரமாய் கேட்கவே, வத்சலா திருதிருவென்று விழித்தாள். ஆனால் அவளும் அவ்வளவு முட்டாள் இல்லை.

''அப்படீன்னால் சிநேகமும் ஒருத்தரோடு மற்றொருத்தர் பேசுவதும் தப்புங்கறீங்களா?''

''அவனை—ஸாரி, அவரை நீ கல்யாணம் பண்ணிக்கப் போறியா?''

''இல்லை, இன்னும் அதைப் பற்றி யோசிக்கலை.''

''கல்யாணம் பற்றியே யோசிக்காமல் அவனோடு உடலுறவு வெச்சுக்கலாம்னு நினைக்கிறயா?''

வத்சலா, ''சீ...சீ...'' என்றாள்.

''பின்னே எதுக்கு வத்சலா அவனை வீட்டிற்குத் தெரியாமல், நேரமாயிட்டால் வீட்டில் திட்டுவாங்காளன்னு ஒவ்வொரு நிமிடமும் பயந்துகொண்டே பார்க்கில் திருட்டுத் தனமாய் சந்திக்கணும்? உங்க வீட்டிலேயே சந்தித்துக்கலா மில்லே? நில்! நீ சொல்லாதே. உன் கேள்வி எனக்குத் தெரியும். உங்க வீட்டில் உள்ளவர்களுக்கு அந்த சிநேகத் தைப் புரிஞ்சுக்கிற பண்பு கிடையாது. எப்படி என்பதே உன் கேள்வியானால், எதற்காக ஒரு ஆணோடயே சிநேகம் பண்ணணும்; என்ற இன்னொரு கேள்வி என்னிடம் தயாரா யிருக்கு. வெட்டிப்பேச்சுப் பேச பெண்களிலேயே நமக்குத் துணை கிடைக்க மாட்டாங்களா? என்னதான் மறுக்க முயன்றாலும் ஒரு கவர்ச்சி இருக்கும், ஒரு வயதில் இந்தக் கவர்ச்சியிலிருந்து யாருமே தப்பித்துவிட முடியாது. ஆனால் எவ்வளவு சீக்கிரமாய் இதிலிருந்து மீளமுடியுமோ அவ்வளவு சீக்கிரமாய் மீள்வது நல்லது. இதற்கு இரண்டே வழிகள். உண்மை நிலைக்குச் சீக்கிரத்தில் மாறுவ அல்லது கச்சிதமாய் கல்யாணம்பண்ணிக்கொண்டுவிடுவது

''கல்யாணம் பண்ணிப்பதற்கு முன்னால் ஒருத்தரை யொருத்தர் புரிஞ்சுக்க வேண்டாமா?''

''ஒருவரையொருவர் புரிஞ்சுப்பதா? மூன்றாங் கிளாசு பெயிலான பெண்ணைப்போல் பேசாதே வத்சலா! பார்க்கிலும் ஓட்டலிலும் உட்கார்ந்து மணிக்கணக்கில் பேசித் தீர்த்து என்னத்தைப் புரிஞ்சுக்கிட்டே நீ? Both of you will try to show the best Part of your faces to each other. அவ்வளவுதானே?''

வத்சலா வெகுநேரம் வாயைத் திறக்கவில்லை. பிறகு மெதுவாய் சொன்னாள். ''என்னால் சரியாய் சொல்ல முடியலை. இந்தக் கவர்ச்சியானது இயற்கையாகவே இருக்கிறாப்பல தோணுது.''

அனுஷா சிரித்தாள். ''சரி விடு, லாட்டரி போடு கிறாயா?''

''லாட்டரியா?''

அனுஷா சிரித்துக்கொண்டே காகிதத்தின் மேல் எழுதி னாள், ''லைப்ரரி—உன் வீடு—ராமனின் அறை...இந்த மூன்று பஸ் ஸ்டாப்புகளும் ஒரே ரூட்டில்தான் இருக்கு. இல்லையா? எனக்கு நகரத்து பஸ் டைம் எல்லாம் தெரியும். ஒரு மணி நேரத்துக்கு ஒரு முறை இந்தப்பக்கத்திலிருந்து அந்தப் பக்கமாகவும் அந்தப் பக்கத்திலிருந்து இந்தப் பக்க மாகவும் பஸ் போகுது! நீ உன் வீட்டிற்கு முன்னால் நில். இரண்டு பஸ் ஸ்டாப்புகளும் தெருவுக்கு இந்தப் பக்கத்திலும் அந்தப் பக்க்த்திலுமாய் இருப்பதால் எந்த பஸ் வந்தாலும் ஏறிக் கொள்வது உனக்கொன்றும் கஷ்டமில்லை. லைப்ரரி பக்கமாய் போற பஸ் முதலில் வந்துட்டால் அதில் ஏறு. ராமன் வீட்டிற்குப் போகும் பஸ் வந்தால் அதில் முதலில் ஏறு. இதுதான் லாட்டரி.''

ஓன்

''இதில் என்ன லாட்டரி இருக்கு? ஒரு பத்து தடவை இந்தப் பக்கமாகவும் ஒரு பத்து தடவை அந்தப் பக்கமாகவும் வந்துப் போகிறேன்.''

அ

''ஆனால் பதினைந்து தடவை லைப்ரரி பக்கமாயும் ஐந்து தடவை ராமன் வீட்டுப் பக்கமாகவும் போக நேர்ந் தால் உன் எண்ணத்தை மாற்றிக் கொள்வாயா?''

''அதெப்படி முடியும்?''

''பண்ணிப்பாரு.''

# 14

வத்சலா மெல்ல நிமிர்ந்தாள்.

''நான் இந்தப் பத்து நாளும் ஆழ்ந்து சிந்தித்துப் பார்த்தேன்! ஒருமுறை அந்த முறைப்படி யோசிக்கத் தொடங்கியதுமே இவ்வளவு நாளாய் நான் எவ்வளவு நேரத்தைப் பாழடித்து வந்திருக்கேன்னு புரிந்தது. ஏறக் குறைய அந்த சிநேகத்தைத் தவிர்த்து விட்டாற் போலத் தான்?''

''நான் ராமனோடு உன் சிநேகத்தை தவிர்த்துக் கொள்ளச் சொல்லலையே! அந்த சிநேகத்திற்கு ஒரு பாதையை ஏற்படுத்திக் கொண்டு—அந்த வழியாய் போய்க் கொண்டிருக்கிறாயா இல்லையான்னு ஒவ்வொரு வினாடியும் பார்த்துக்கிட்டே இருக்கச் சொன்னேன். அவ்வளவுதான்.''

''அந்த சிநேகத்திற்கு எந்தப்பாதையுமே கிடையாதுன்னு இப்பத்தான் புரிந்தது எனக்கு! நீங்க சொன்னாற்போல கொஞ்ச நாள் கழித்து அவன் கல்யாணத்தைப் பற்றிப் பேச்செடுப்பானோ என்னவோ? ஆனால் அப்பொழுதும் எனக்கு அவனைப்பற்றி ஒன்றுமே தெரிந்திருக்கப் போவ தில்லை. பெண் பார்க்கும் சமயத்தில் முன்பின் அறியாத ஒருவனைப் பார்த்து சம்மதித்து—அவனைப் பண்ணிக் கொண்டாலும் இவனைப் பண்ணிக்கொண்டாலும் ஒன்றாய்த் தான் இருந்திருக்கும். இந்தமாதிரி சிநேகங்கள் எல்லாம் எவ்வளவு நாள் நீடித்தாலும் அதிகமாக ஒன்றும் தெரிந்து விடப் போறதில்லை, தாய் தந்தையரை வருத்தப்படுத்தி னேன் என்ற ஒரே ஒரு வேதனை மட்டும்தான் மிஞ்சி நிற்கப் போகுது!''

''...திரில்?''

''த்ரில்...உண்மைதான்! 'த்ரில்' இருந்து வந்தது, ஒரு அந்நிய மனிதன் என்னை ஒரு பெண்ணாய் நடத்தியதும்—என் வீட்டைச் சேர்ந்த மனிதராய் இல்லாமல் வேறொரு மனிதருடன் சிநேகமும்—எப்பொழுது அவனைச் சந்திப்போம் என்று மாலை ஆகிவிட்டால் மனம் உற்சாகப்பட்டதும்—இதைப் பற்றியெல்லாம் நினைத்தால் மட்டும் மனம் தடுமாறுமோன்னு தோணுது.''

''தடுமாறாது வத்சலா!'' உறுதியாய் சொன்னாள் அனுஷா. ''ஆரோக்கியகரமான உணர்ச்சிகளில் நாம் சந்தோஷத்தை அனுபவித்தாலேயொழிய தெரியாது. அழகான ஓட்டல்களில் ஐஸ்கிரீமைச் சாப்பிடும் வரையிலும் தெரு ஓரத்தில் விற்கும் வேர்க்கடலையைச் சாப்பிடுவதில் தான்சந்தோஷமிருப்பதாய் பிரமை கொள்வோம். மனிதன் வளர வளர 'சந்தோஷம்' என்ற வார்த்தையின் வளர்ச்சியும் வளர்ந்துகிட்டேயிருக்கும். அந்த ஸ்டேஜிலிருந்து இந்த ஸ்டேஜிற்கு வந்திருக்கிற நான், இரண்டு ஸ்டேஜ்களையும் அனுபவித்துப் பார்த்திருக்கிற நான் இந்த விஷயத்தை மட்டும் அழுத்திச் சொல்ல முடியும். பார்த்துக்கிட்டேயிரு. ராமனைக் காட்டிலும் லைப்ரரி உனக்கு அதிக சந்தோஷத்தைக் கொடுக்கும். இனி 'த்ரில்'லைப் பற்றி கேட்கிறாயா? உண்மையில் அந்த மாதிரி த்ரில்லே வேண்டும் என்றால் பஸ் ஸ்டாண்டில் ஐந்து நிமிடங்கள் நின்றால் பத்து பேர் ராமனைப் போன்றவங்க கிடைப்பாங்க.''

''பஸ் ஸ்டாண்ட் என்றதும் நினைவு வருகிறது! எனக்கு அந்த கணக்கு எப்படி வந்ததுன்னு சொல்லமாட்டீங்களா? அவ்வளவு தடவை போவேன்னு எப்படி சரியாய் ஊகித்துச் சொல்ல முடிந்தது உங்களால்?''

''நான் சொல்லத் தேவையில்லை. நீயே தெரிஞ்சுப்பாய்' தெரிஞ்சுக்கணுங்கற ஆர்வம் வந்துருச்சி உனக்கு. அது

போதும். அந்தக் கணக்கில் எந்த சிக்கலும் இல்லை. தீர்க்கமும் கணிதமும் சேர்ந்திருக்கு அதில்—''

வத்சலா சிரித்துவிட்டு, ''யோசித்துப் பார்க்கிறேன்'' என்றாள். தொடர்ந்து, ''நான் ராமனிடம் இதையெல்லாம் சொன்னேன்.''

அனுஷா வியப்படைந்து, ''சொல்லிட்டாயா?'' என்று கேட்டாள்.

''ஆமாம். குறைந்தது அந்த மட்டுமாவது நேர்மையோடு விட்டுப் பிரிந்து போறது நல்லதுன்னு நினைச்சேன்.''

''குட். ஆமாம், என்ன சொன்னான்?''

''ரொம்ப வாதாடினான்.''

''என்ன வாதாடினான்?''

''நீங்க ஒரு ஸாடிஸ்ட்டாம். உங்களுக்கு மனசுங்கறதே கிடையாதுன்னான். புனிதமான சிநேகத்தைப் புரிஞ்சுக்கிற சாமர்த்தியம் இல்லை என்றான். இன்னும் என்னென்னவோ சொன்னான். இறுதியில் ஐ லவ் யூ என்று என்னிடம் சொன்னான்.''

''ஒவ்வொருவரும் சர்வ சாதாரணமாய் சொல்லுகிற ரொம்ப சுலபமான வார்த்தை இது. போகட்டும் கல்யாணம் பண்ணிக்கோன்னு கேட்கலையா நீ?''

''அதைப்பற்றிப் பேச்சும் எழும்பிற்று. வீட்டுப் பிரச்னைகள் கொஞ்சம் இருப்பதாகவும் அவை தீர்ந்ததும் பண்ணிக் கொள்வதாகவும் சொன்னான். அவையெல்லாம் தீர்ந்த பிறகு வந்தால், அப்போது திரும்பவும் சிநேகம் பண்ணிக் கலாம்னு சொன்னேன் நான். உன்னைக் காப்பாற்றுவதற்காகவும், 'உன்னை உனக்காகவே காதலிக்கிறேன்' என்றும், ஒரு மனிதனின் வாழ்க்கையில் சிநேகமும் காதலும் இருக்க

வேண்டும் என்றும், இதுபோன்ற வார்த்தைகள் என்னென்னவோ நிறையச் சொன்னான்'' என்று சிரித்தாள் வத்சலா.

''தன் பிரச்னைகளையே தீர்க்க முடியாதவன், பார்க்குக்கு வர்றதுக்குக்கூட வீட்டில் காசு கேட்டு வாங்கி வருகிறவன் உன்னை ஆபத்து சமயத்தில் காப்பாற்றிடுவான்னு நம்புவது பிரமை. அவ்வளவு சிறந்த குணம் இருப்பவனாகயிருந்தால், தன் காலில் தான் நிற்கத்தொடங்கிய பிறகே காதலைப் பற்றி பேச்செடுப்பபான். ஆனாலும், வத்சலா! ஒரு மனிதன் ஆபத்தில் இருக்கும்போது உதவுவதற்கும், கஷ்டத்தில் ஆழ்ந்திருக்கும்போது தேற்றுவதற்கும், காதலோ, ஆழ்ந்த சிநேகமோ கூட தேவையில்லை. முதல்ல நம்ம பிரச்னைகளை இன்னொருத்தர்...''

''மே ஐ கமின்?''

இருவரும் திரும்பிப் பார்த்தார்கள்.

போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒரு பெண் போலீசுடன் உள்ளே வந்தார்.

''மிஸ் அனுஷா நீங்கதானா?''

''ஆமாம்.''

அவர் வத்சலாவைத் திரும்பிப் பார்த்து, ''நீங்க கொஞ்ச நேரம் வெளியே இருக்கீங்களா மேடம்?'' என்றார்.

வத்சலாவுக்கு ஒன்றுமே புரியவில்லை. ஆனாலும் எழுந்து வெளியே வந்தாள்.

அவர் அனுஷாவைப் பார்த்து, ''இன்றைக்கு ராமசுப்பன் என்பவருக்கு நீங்க சில ஷேர்களை வித்தீங்களா?'' என்றார்.

அனுஷா ஆம் என்று தலையாட்டினாள்.

‘‘இந்தக்காகிதத்தை நீங்கதான் எழுதினீங்களா?’’ என்று ஒரு காகிதத்தைக் காட்டிக் கேட்டார். ரதி கம்பெனியின் ஷேர்கள் எப்படி உயரப்போகிறது என்பதைப்பற்றி இருவரும் சேர்ந்து உட்கார்ந்து கொண்டு போட்ட கணக்கு அது.

‘‘ஆமாம்’’? என்றாள்.

‘‘நான் உங்க டிராயரைச் சோதிக்கலாமா மேடம் இதோ வாரண்ட்.’’

இதெல்லாம் என்ன என்று புரியவில்லை அவளுக்கு. அவர் என்னதான் மரியாதையோடு பேசினாலும் அக்குரலிலிருந்து கண்டிப்பை உணர்ந்தாள்.

‘‘சேர்மனின் அனுமதியில்லாமல் ஆபீசை சோதனை போடக்கூடாது.’’

‘‘அவர்தான் அனுமதி கொடுத்திருக்கிறார் மேடம். வேணுமானால் நீங்க போன் பண்ணித் தெரிஞ்சுக்கலாம்.’’

‘‘தேவையில்லை, தேடிக்குங்க.’’

டிராயரை இழுத்தார். மேலறைக்குள் சிறிய பாக்கெட் ஒன்று இருந்தது. பாக்கெட்டிற்குள் கைக் கடிகாரம்—விலையுயர்ந்த கடிகாரம். அந்த பாக்கெட்டின்மேல் கட்டியிருந்த காகிதத்தில், ‘‘காம்ப்ளிமெண்ட்ஸ் ஃப்ரம் ரதி அண்ட் கம்பெனி’’ என்றிருந்தது.

‘‘மேடம், இன்றைய பேப்பரைப் படித்தீர்களா?’’

‘‘படித்தேன், ஏன்?’’

இன்ஸ்பெக்டர் தன் கையிலிருந்த பேப்பரை அவள் மேஜையின் மேல் விட்டெறிந்தார் ‘பார்’ என்பதுபோல. காலையில் அவள் பார்த்த பேப்பர்தான் அது! அதே செய்திகள் அதே தலைப்பு! ஆனால் ரதி அண்ட் கம்பெனியாரால்

புதுவிதமான துணிமணிகள்—ஷேரின் விலை உயர்வு—இருக்க வேண்டிய இடத்தில்—ரதி அண்ட் கம்பெனி இழுத்து மூடப் பட்டது'' என்றிருந்தது தலைப்புச் செய்தி!

தன் கண்கள்தான் தன்னை மோசம் பண்ணுகிறதோ என்றெண்ணினாள்.

பேப்பரை எடுத்துப் பார்த்தாள். எல்லாம் அதே செய்தி தான். ஒரே ஒரு செய்தி மட்டுமே மாறியிருந்தது. நடந்த தென்னவென்று கொஞ்சம் கொஞ்சமாகப் புரியத் தொடங் கிற்று அவளுக்கு.

அவள் போனை எடுத்து விலைகள் சம்பந்தப்பட்ட பகுதி புரோக்கருக்குப் போன் பண்ணினாள். ''காலையில் ரதி கம்பெனியின் ஷேர் விலை பதினொண்ணுன்னீங்க இல்லையா?''

''நானா? நான் ஆபீசுக்கு இப்பத்தான் மேடம் வரேன்.''

ஸோ, விஷயம் இதுதானா! தன் போன் புரோக்கர் வரையிலும் போகாமல் யாரோ வெளியேயிருந்து பேசியிருக் கிறார்கள். தன்னை சேர்மன் கூப்பிடுகிறார் என்று சொல்லி விட்டு தான் போனதும் தன் டிராயருக்குள் இந்தப் பரிசைப் போட்டு விட்டிருக்கிறார் ராமசுப்பன். எதேச்சையாய் பண்டா விடம் சொல்வது போல சொல்லிவிட்டு, தன்னிடம் கள்ள பேப்பரைக் காட்டியிருக்கிறார்கள். விலைகளின் கணக்கைப் போடச் செய்து ஷேர்களை வாங்கி விட்டார். மொத்தத்தில் தன்னைச் சுற்றிலும் ஜாக்கிரதையாய் வலைபின்னியிருக் கிறார்கள். 'அம்மா, அம்மா' என்று கூப்பிட்டு பயங்கரமான சிலந்தி வலைக்குள் பின்னவைத்து விட்டார்கள்.

''மேடம் ஒரு திவாலாகிவிட்ட கம்பெனியோடு உறவு கொண்டு, ஒரு அப்பாவியான கஸ்டமருக்குக் கள்ளக் கணக்கைக் காட்டி அவர் மூலம் கம்பெனி மூடப்பட்ட

அன்றைக்கே லட்ச ரூபாய் ஷேரை வாங்கச் செய்ததற்கு ஃபோர்ஜரி—சீட்டிங் கேசுகளின் கீழ் உங்களை அரெஸ்ட் பண்ணுகிறேன்.''

—

முடிந்துவிட்டது. எல்லாம் முடிந்துவிட்டது. எவ்வளவோ ரகசியமாய் போட்டிருக்கும் இந்த வலைக்குள் அனுஷா விழுந்து விட்டாள்! ஜெயில் தண்டனையிலிருந்து தப்பிக்க முடியாது. ஜாமீன் முடியுமோ முடியாதோ? ஆனால் இந்த சமயத்தில் பண்ணக்கூடியது ஒன்றுமில்லை. கண்மூடித் திறப்பதற்குள் அனுஷா கைகளில் விலங்கிட்டுப் பூட்டிவிட்டார். எவ்வளவோ துணிச்சல் மிகுந்த அனுஷாவே கூட அந்தக் காரியத்தைப் பார்த்து அதிர்ந்து விட்டாள்.

''வாட் ஈஸ் திஸ்?'' பெரிதாய் கத்தினாள் அனுஷா.

அவர் மேஜை மேலிருந்த பேப்பர் நறுக்கும் சிறு கத்தியைக்காட்டி, ''போலீஸ் அதிகாரியை எதிர்த்ததற்கும் தப்பி ஓட முயன்றதற்கும்'' என்றார். அருகிலிருந்த பெண் போலீஸ் சாட்சியாய் தலையாட்டினாள்.

இப்படி அழைத்துச் செல்வதற்கு இவருக்கு 'விலை' கொடுக்கப்பட்டிருக்கிறது. இனி வாதாடிப் பயனில்லை. ஒரு பெண்ணின் கையில் விலங்கிடக் கூடாது. அவளால் இதை கோர்ட்டிலேயே வாதாட முடியும். ஒரு பெண்ணைச் சிறு சிறு வழக்குகளில் கைது செய்து இரவு நேரங்களில் போலீஸ் ஸ்டேஷனில் வைத்திருக்கலாகாது. ஆனால் அவளால் இப்பொழுது ஒன்றுமே பண்ண முடியாது.

அவள் தலைகுனிந்து, ''லெட் அஸ் கோ இன்ஸ்பெக்டர்'' என்றாள்.

எல்லோரும் வெளியே வந்தார்கள்.

கைகளில் விலங்கோடு மெதுவாய் வெளியே வந்து கொண்டிருந்த அனுஷாவைப் பார்த்து வாயிலிருந்து வெளி

வரப்போன அலறலை அரும்பாடுபட்டு அடக்கிக் கொண்டாள் வத்சலா. அவள் முகத்திலிருந்த ரத்தம் சுண்டிவிட்டது. ""எ... என்ன...இதெல்லாம்?'' என்று கத்தினாள். அவள் வார்த்தையை ஒருவருமே பொருட்படுத்தவில்லை. அவள் கண்களிலிருந்து பொலபொலவென்று கண்ணீர் வழியத் தொடங்கிற்று.

இன்ஸ்பெக்டர் அனுஷாவை லிஃப்டில் கீழே அழைத்துச் செல்லவில்லை. படிகளின் வழியாகவே நடத்தி அழைத்துச் சென்றார். ஸ்டாக்ஹோம் சிப்பந்திகள்எல்லோரும் இருக்கைகளிலிருந்து எழுந்து நின்று தம் ஜெனரல் மேனேஜர் கையில் விலங்கிட்டு அழைத்துச் செல்வதை ஆர்வத்தோடும், வேதனையோடும், சிலர் உற்சாகத்தோடும் கவனிக்கலானார்கள். பண்டா ஆபீசில் இல்லை.

போலீஸ் வேனுக்குக் கொஞ்ச தூரத்திலிருந்து காரில் அமர்ந்தவாறு இரண்டு பேர் மட்டும் இதைசாவதானமாய் பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஒருவன் சங்கர். இன்னொருத்தனோ நாளொன்றுக்கு ஒரு ரூபாய் திட்டத்தைக் கவிழ்த்த தன் எதிரியின் மேல் இவ்வளவு சாமர்த்தியமாய் பழிதீர்த்துக் கொள்வதற்காக லட்சக்கணக்கான ரூபாய்களைச் செலவழித்து—ஒரு நாளேடு ஒன்றை பிரிண்ட் பண்ண வைத்து, ஷேர்களை வாங்கி, பிளான் போடக்கூடிய மேதாவி-சாடிஸ்ட் வசந்த் தாதா. சர்மாவைத் தேடிப்பிடிக்க வேண்டிய காரியத்திற்காக சுயமாய் வந்து, வேலையோடு வேலையாய் இந்த விஷயத்தையும் சுயமாய் பண்ணியவன்.

அனுஷாவை அழைத்துக் கொண்டு போலீஸ் வேன் போய்ச் சேர்ந்ததுமே, அவர்களின் கார் ஓட்டலை நோக்கிப் புறப்பட்டது. புழுதித்திரை வத்சலாவின் முகத்தில் வந்து மோதிற்று. நடந்தது கனவா நினைவா என்று புரியாத நிலையில்' கால்கள் தள்ளாட அவள் சிலையாய் அப்படியே நின்று விட்டாள்.

# 15

லாக் அப் கம்பிகளுக்கப்பால் சுவரில் சாய்ந்தவாறு முழங்காலில் முகத்தைப் புதைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள் அனுஷா. அந்த அறையில் சிறிய பெஞ்சு மட்டுமே இருந்தது. அறையின் ஒரு மூலையில் தண்ணீர்ப்பானையும் பக்கத்தில் ஒரு தம்ளரும் வைக்கப்பட்டிருந்தன. தொலைவில் சப்—இன்ஸ்பெக்டர் உட்கார்ந்திருக்கும் இடத்திலிருந்து விளக்கு வெளிச்சம் உள்ளே வந்து கொண்டிருந்தது.

அவளைக் கைது செய்த அரை மணி நேரங்கழித்து பண்டா வந்தார். கம்பெனி வழக்கறிஞர் வந்தார். ராமசுப்பன் தந்திருந்தது பிரைவேட் கம்ப்ளையிண்டாதலால் கம்பெனி வழக்கறிஞர் வரத் தேவையில்லை. ஆனால் பண்டாவின் வேண்டுகோளைத் தட்ட மாட்டாதவராய் வந்திருந்தார் அவர்.

பண்டா ரொம்பவும் தளர்ந்துவிட்டிருந்தார். "என்னம்மா இதெல்லாம்?" என்றார்.

எதைச் சொல்லுவாள் அவள்? பண்டா கூப்பிட்டது போல கூப்பிட்டு, தான் அவர் அறைக்குப் போனதும், தன் டிராயரில் பரிசை எடுத்து வைத்திருந்தார்கள் என்று சொல்லுவாளா? ஒரு நாளேட்டினைத் தானே சுயமாய் பிரிண்ட் பண்ணியிருக்கிறார் என்பாளா? தன் போன் கனெக்ஷனை இன்னொரு போனுடன் திசை திருப்பியிருக்கிறார்கள் என்பதைத்தான் சொல்லுவாளா? நம்பக்கூடிய சம்பவங்களா இவை? தனக்கு எதிராய், மாறிவிட்ட தன்கையெழுத்தோடு கூடிய கணக்கும், தான் பூர்த்திசெய்த அப்ளிகேஷன் பாரமும் தன்னைக் கோர்ட்டில் குற்றவாளியாய் நிற்கவைத்துவிடும். வழக்கறிஞர்

தன்னால் எதுவுமே பண்ணமுடியாது என்று சொல்லிவிட்டார். ஜாமீன் கிடைக்காது.

கைது செய்த இருபத்தி நான்கு மணி நேரத்திற்குள் மாஜிஸ்ட்ரேட்டிற்கு முன்னால் ஆஜராக்கவேண்டும். அதற்குப் பிறகுதான் பாண்டைப் பற்றிய சங்கதியே தொடங்கும். எவ்வளவோ தவிர்க்க முடியாத சூழ்நிலை இருந்தாலே யொழிய பெண் ஒருத்தியை இரவு நேரத்தில் லாக்அப்பில் வைத்திருக்கக்கூடாது என்ற தீர்ப்பைக் கூட மீறி இந்த இன்ஸ்பெக்டர் நடந்து கொண்டிருக்கிறார் என்றால், தனக்குப் பின்னாலிருக்கும் ரகசிய கூட்டத்திற்குள் அவர் மிக நன்றாய் மூழ்கியிருக்கிறார் என்பது தெரிந்தது.

பண்டா இன்ஸ்பெக்டரோடு பேசிவிட்டு அவளிடம் திரும்பி வந்தார். வருத்தத்தோடு, ''ஒன்றும் முடியவில்லை'' என்றார்.

அவள் மௌனமாக இருந்தாள். முகத்தில் எந்த உணர்ச்சியையும் காட்டவில்லை.

''நான் கேரேஜ் அனுப்பிவைக்கிறேன்'' என்றார்பண்டா. அவர் குரலில் சங்கடம் தெரிந்து. அவருக்கு அதற்குள் மறுநாள் பேப்பர்களில் வரப்போகும் செய்திகளைப் பற்றிய விஷயம் எட்டியிருந்தது.

'ஸ்டாக்ஹோம் ஜெனரல் மேனேஜர் கைது... அப்பாவி யான வாடிக்கையாளரை ஸ்டாக்ஹோம் ஊழியர்கள்பண்ணிய மோசடி... ஸ்டாக்ஹோமில் தில்லுமுல்லு... வாடிக்கையாள ரின்பணம் மூன்று லட்சத்தை அபேஸ் பண்ணிய விதம்...'

''வேண்டாம். நான் ராத்திரி வேளையில் சாப்பிடுவ தில்லை'' கச்சிதமாய் பொய் சொன்னாள் அனுஷா.

அருகிலிருந்த வழக்கறிஞர் சொன்னார்—''நான் போய் மாஜிஸ்ட்ரேட்டுடன் பேசிப் பார்க்கிறேன். முடிந்தால் ராத்திரிக்குள் ஜாமீனுக்கு முயற்சிக்கிறேன்.''

அனுஷா பதில்பேசவில்லை. வழக்கறிஞர், விடுவிடென்று போய்விட்டார். பண்டா போகக் கிளம்பியவர், தடுமாற்றத்துடன் நின்றார். பிறகு நிதானமாய் சொன்னார்—''நாளைக் காலையில் அவசரமாய் போர்டு மீட்டிங் வைக்கச் சொல்லி நோட்டீஸ் கொண்டு வந்திருக்காங்க. இந்தப் பத்து நிமிடத்திற்குள் மூணு போன் கால்கள் வந்துவிட்டது.''

அவள் அதற்கும் பதிலளிக்கவில்லை. பண்டாவின் குரல் மேலும் தாழ்ந்தது. சொல்லத்தயங்கினாற் போலிருந்தது. ''உனக்குத்தான் தெரியுமே, நம்ம ஸ்தாபனத்தில் ஒவ்வொன்றுமே நம்பிக்கையின் பேரில்தான் நடந்து வரது. இதுபோன்ற சூ... ழ்...நி...லை...யி...ல் ஐ யாம் சாரிம்மா! உன்னை சஸ்பெண்ட் பண்ணித் தீரவேண்டியிருக்கு...'' என்றவர் தொடர்ந்து அவசர அவசரமாய், ''இது கேவலம். நம்ம வாடிக்கையாளர்களைத் திருப்திப்படுத்துவதற்காகத் தான்! இந்த வழக்கு ஒரு முடிவுக்கு வந்ததுமே உன்னைத் திருப்பி அழைச்சுக்கிற பொறுப்பு என்னைச் சேர்ந்தது'' என்று அவளைப்பார்த்தார்.

''நாளைக்கு போர்டு மீட்டிங்கில் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வரப் போறீங்களா?''

''டைரக்டர்கள் கொண்டு வரப் போறாங்க.''

''அப்படி என்றால் நாளைக்கு பதினோரு மணி வரையிலும் நான் ஜெனரல் மேனேஜராகவே பதவியில் இருப்பதாய் அர்த்தம்!''

பண்டாவின் முகத்தில் அதே சங்கடம்!

அதற்குள் அனுஷா சொன்னாள். ''என் கீழே வேலை பண்றவங்க யாராவது இந்தத் தப்பைப் பண்ணியிருந்தால் நான் நாளை வரைக்கும் கூட தாமதிக்கமாட்டேன். உடனேயே சஸ்பெண்ட் பண்ணிடுவேன். ஒரு உ

பதவியிலிருக்கும் அதிகாரியை மேலும் பதினாலு மணி நேரங்கள் அதே பதவியில் தொடர்ந்து வைத்திருப்பது தப்பு,''

பண்டா சட்டென்று நிமிர்ந்தார். அவள் தலை குனிந்தவாறு கம்பிகளுக்கப்பால் தொலைவிற்குப் போய்விட்டாள். பண்டா ஏதோ பேச முயன்றவர், தன் எண்ணத்தை மாற்றிக் கொண்டு அங்கிருந்து போய்விட்டார். இந்தச் சூழ்நிலையில் தன்னால் ஒன்றுமே செய்ய முடியாது என்று தெரிந்திருந்தது அவருக்கு. நாளை வரை காத்திருக்க வேண்டியதுதான். நாளைக்காவது சொந்தச் செலவில் ஒரு வழக்கறிஞரை நியமித்துக்கொண்டு வாதாடலாம். எல்லாச் செலவையும் அனுஷாதான் ஏற்க வேண்டும்!

பண்டா போனபிறகு வெகு நேரம் அப்படியே உட்கார்ந்திருந்தாள் அனுஷா, தெலைவில் வராந்தாவில் உட்கார்ந்திருந்த கான்ஸ்டபிள்கள் இருவரும் வீட்டு விஷயங்களைப் பற்றி வம்பளந்து கொண்டிருந்தார்கள். ஆணைப் போலிருந்த பெண் கான்ஸ்டபிளின் குறட்டை ஒலி உள்ளிருந்து கேட்டுக் கொண்டிருந்தது. திரும்பிப் பார்த்த அனுஷா, மேசைக்குப் பின்னாலிருந்து தன்னையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த இன்ஸ்பெக்டரைப் பார்த்து விட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டு சரியாய் உட்கார்ந்தாள்.

இருட்டி எவ்வளவு நேரமாயிற்றோ தெரியாது. அவளுக்கு கடந்த காலச் சம்பவங்கள் நினைவுக்கு வந்தன. மிக புத்தி சாலியான மாணவி என்று பெயரெடுத்து 'கபாடியா மெடலை பெற்றதும், மத்திய நிதிமந்திரி அளித்த சர்டிபிகேட்டும், பெஸ்ட் மேனேஜ்மென்ட் அவார்டும் இந்தச் சின்ன சம்பவத்தால் போய்விட்டன.

இரவு ஒன்பதாயிற்று... ஒன்பதரை...பத்து.

வெளியே வாகனங்களின் ஓசை கூட குறைந்து விட்டது. நிசப்தம் அந்த அறையை ஆக்கிரமித்துக் கொண்டது.

அவள் இன்னும் அப்படியே உட்கார்ந்திருந்தாள்.

ரஜினி அப்பொழுதுதான் வந்தான். அசதியோடு வந்து உட்கார்ந்து பில்வனைப் பார்த்து. ''இன்றைக்கு என்ன விசேஷம்?' என்றான். தினமும் வந்ததுமே அன்றைய சமாச்சாரத்தைப் பற்றிக் கேட்பது அவன் வழக்கம்.

''யானைக்கவுனி கொலையில் முக்கியமான ஆள் ராமுன்னு தெரிந்தது. ஆனால் போலீசுக்கு இன்னும் சாட்சி கிடைக்கலை. கிடைக்காதுன்னுதான் தோணுது... என்னவோ தெரியலை சங்கரின் ஆட்கள் காலையிலிருந்து தேன் குடித்த நரியாய் இருக்காங்க. முக்யமாய் ரயில்வே ஸ்டேஷன் பக்கம் ஏதோ காவல் போட்டிருக்காங்க. அவங்க கர்களும் மோட்டார் சைக்கிள்களும்எங்கேபார்த்தாலும் பறந்துட்டிருக்கு இன்னிக்கு என்ன விசேஷம்னு தெரிந்து வரச்சொல்லி நம்ம ஆளை அனுப்பியிருக்கேன். வசந்த் தாதா கூட ஊரில்தான் இருக்கானாம். சங்கரை ஜப்பான் போலீஸ் பிடித்துப் போகும் விஷயத்துக்காக வந்திருக்கலாம்னு தோணுது. வசந்த் தாதான்னுமே ஞாபகம் வரது. உன் சிட்டுக் குருவி, அதான் உன் துணிகளை உரித்து உன்னைக் கண்ணில் விரலையாட்டினாளே அந்த அனுஷாவைப் போலீசார் சாயந்திரம் கைது பண்ணியிருக்காங்களாம்...''

அதுவரை அசிரத்தையாய் கேட்டுக்கொண்டே வந்த ரஜினி நிமிர்ந்து உட்கார்ந்தான். பில்வன் தான்பாட்டிற்குச் சொல்லிக் கொண்டே போனான்.

''ராமசுப்பனை ஏமாற்றியதற்காகசீட்டிங்கேசில் அவளை அரெஸ்ட் பண்ணியிருக்காங்க. மாஜிஸ்ட்ரேட் இல்லாத சமயத்தில் அரெஸ்ட் பண்ணியது, கத்தியைக் காட்டி மிரட்டினாள் என்ற சாக்கில் கையில் விலங்கிட்டது. இதையெல்லாம் பார்த்தால் ராத்திரிபூராவும் ஜெயிலில் வைத்திருப்பதற்காகவே போட்ட உபாயம் போல தோணுது.''

ரஜினி எழுந்து நின்று, ''வா போவோம் பில்வன், நாம் அவளை வெளியே அழைச்சுட்டு வரணும். ரா'த்திரி பூராவும் அந்தப் பொண்ணு ஜெயிலிலிருப்பது ஆபத்து.'

பில்வனின் வாய் நின்றது. ''என்னது?'' என்றான் ஒன்றும் புரியாமல்.

''நாம் அவளை வெளியே அழைச்சுட்டு வரணும்.''

'அவள் இருப்பது பிறந்த வீட்டிலில்லை—கூப்பிட்டதுமே ஓடி வந்துவிடுவதற்கு! ரொம்ப பெரிய தந்திரம் பண்ணி அவளை உள்ளே தள்ளியிருக்காங்க. அந்த இன்ஸ்பெக்டர் அவ்வளவு சுலபமாய் விடுவாருன்னு தோணலை.''

''அவன் பாட்டன் வந்தாலும் சரி. மீட்டு வருவோம்.''

ரஜினியிடம் அதுவரை இருந்த களைப்பு ஓடி மறைந்தது. ரிவால்வரை எடுத்து பாக்கெட்டில் வைத்துக் கொண்டான். எல்லாம் கண்மூடித் திறப்பதற்குள் நடந்தேறிவிட்டது. காரில் போகும்போது பில்வன் ரஜினியைப் பார்த்து, ''இந்தத் துகிலுரிந்த பெண் உன்னை ரொம்பத்தான் கவர்ந்துட்டாள் போலிருக்கே'' என்றான்.

சாதாரணமாக என்றுமே சிரிக்காத ரஜினியின் உதடுகளில் இப்பொழுதொரு குறுநகை படர்ந்தது. ''அந்தப் பொண்ணு ரொம்ப கெட்டிக்காரி பில்வா. ஆனால் இந்த அண்டர்வேர்ல்ட் பற்றி ஒன்றுமே தெரியாது. பைத்தியக்காரப் பொண்ணு! எல்லாவற்றையும் நேருக்கு நேராய் பண்ணிடலாம்னு நம்பிட்டாள். அனாவசியமாய் அந்த வசந்த் தாதாவுக்கு எதிர்ப்பாய் கட்டுரை எழுதியிருக்கிறாள். அஃப்கோர்ஸ், அந்த கெட்டிக்காரத்தனத்துக்குத் தகுந்தாற் போல கர்வம் கூட இருக்குன்னு வெச்சுக்கோ.''

''கர்வம், கெட்டிக்காரத்தனம் எல்லாம் இருக்கோ இல்லையோ தெரியாது. ஆனால் பார்க்காமலயே ஒன்று மாத்திரம் இருக்குமனு ஊகிச்சுட்டேன்.''

''அதென்ன?''

''அழகு.''

ரஜினி சிரித்தான். ''இல்லை பில்வா. அவ்வளவு அழகு ஒன்றுமில்லை. ஆனால் எனக்கு மட்டும் அவளைப் பார்த்தால், ஒரே வார்த்தையில் சொல்லணும்னால்—இரக்கம். ஆமாம், இரக்கந்தான் வருது. தன் சக்தியையும் மீறி பெரிய மலையோடு மோதுகிறாள். இப்பொழுதாவது அதை உணர்ந்து பின்வாங்கிட்டால் நன்றாயிருக்கும்.''

''எங்கே போயிட்டிருக்கோம் நாம் இப்போது?''

''போலீஸ் ஸ்டேஷனுக்கு.''

''சாதாரண வழியில் அவளை வெளியே அழைத்து வருவதுகஷ்டம், அந்த மூட்டைப்பூச்சி, அதான் அந்த ஸ்டேஷன் இன்ஸ்பெக்டர் சங்கரின் ஆள். அவ்வளவு சுலப மாய் கைது பண்ணியவளை விட்டுட மாட்டார்.''

''பின்னே என்ன பண்றது? இந்த வேளையில் மாஜிஸ்ட்ரேட் கூட கிடைக்கமாட்டாரே?''

''சட்டப்பிரகாரம் பிரயோஜனமில்லை. அந்த வழியையெல்லாம் அந்தக் கம்பெனிக்காரங்களே முயன்று பார்த்து கைவிட்டிருப்பாங்க. ஆங்...பொறு! இன்னொரு கொழுத்த மூட்டைப் பூச்சி இருக்கு. நாம்ப அதுக்கு நிறைய ரத்தம் ஊற்றியிருக்கோம். அந்த விதத்தில் முயற்சி பண்ணுவோம்.''

பில்வனிடமிருந்த வியக்கத்தக்க குணம் அதுதான். எதனை, எப்படி யார் மூலம் சாதித்துக் கொள்ளலாம் என்பதெல்லாம் அவனுக்கு அத்துப்படி. இரும்பை எவ்வளவு பழுக்கக் காய்ச்சி ஊற்றிச் சம்மட்டியால் எந்த இடத்தில் அடித்தால் இணைப்புகள் ஒன்றாகும் என்பதைச் சரியாய் ஊகிக்கவல்லவன்.

அவர்கள் உடனே போலீஸ் ஸ்டேஷனுக்குப் போக வில்லை. பெரிய மூட்டைப்பூச்சியிடம் சென்று விஷயத்தைச் சொன்னார்கள்.

அது யாருடனோ போனில் அரைமணிநேரம் வரை வாக்கு வாதங்களைத் தொடர்ந்தது. "நடக்காது சார், அரெஸ்ட் பண்ணிட்டோம் சார். நாளைக்கு மேஜிஸ்ட்ரேட் டிற்கு முன்னால் கூட்டிட்டுப் போகணும் சார். ஆங்...இங்க தான் லாக் அப்பில் இருக்குது. லேடி கான்ஸ்டபிளை போட் டிருக்கேன். சேச்சே, எப்படி சார், நீங்களே சொல்லுங்க. அவங்க ஆளுங்க கூட வந்து கேட்டாங்க. மறுத்துட்டோம். இவ்வளவு நடந்தபிறகு இப்ப எப்படி" போன்ற சாதாரண சம்பாஷணைகளை முடித்ததும் இன்ஸ்பெக்டர் நொந்து கொண்டே நிஜ விஷயத்திற்கு வந்தார்.

"சங்கர் சொல்லியிருக்கான் சார். அவன்தான் இதுக்குப் பின்னாடி இருக்கான். இன்னும் ஒரு இரண்டு மணி நேரத் தில் பார்க்கறதுக்கு இங்கே வருவான்."

பெரிய மூட்டைப்பூச்சி ரஜினியைப் பார்த்து, "இப்ப என்ன பண்ணலாம்?"

"என்ன பண்ணுவீங்களோ தெரியாது எனக்கு. அந்த பொண்ணு மட்டும் ராத்திரி பூராவும் போலீஸ் ஸ்டேஷனில இருக்கக் கூடாது." கச்சிதமாய் சொல்லிவிட்டான் ரஜினி.

மேலும் பத்து நிமிஷங்கள் போனில் சம்பாஷணை நடந் தது. இறுதியில் மறுமுனையிலிருந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒப்புக்கொண்டார். சொந்த விஷயத்தின் பேரில் (சட்டப்பிர காரம் இல்லை) மறுநாள் காலையிலேயே கொண்டு வந்து ஒப்படைத்துவிட வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் அவளை வெளியே விடுவதற்கு!

இருவரும் போலீஸ் ஸ்டேனுக்குக் கிளம்பினார்கள்.

ரஜினி இன்ஸ்பெக்டருக்கு கை குலுக்கிவிட்டு அத்துடன் கூட விலையுயர்ந்த வெளிநாட்டு லைட்டர் ஒன்றைத் தந்தான். இரண்டாம் பேர் அறியாத வண்ணம் அது கைமாறிற்று.

''ஜாக்கிரதையாய் கூட்டிட்டுப் போங்க. ரிகார்டுங்க பிரகாரம் அவள் உள்ளே இருக்கிறாப்போலத்தான்! ஏதாவது நடந்துட்டால் என் வேலை போயிடும். அதைவிட முக்கிய மாய் சங்கர்...'' என்று இழுத்தார்.

''அதையெல்லாம் நாங்க பார்த்துக்கிறோம்'' என்று லாக்கப்பை நோக்கி நடந்தான் ரஜினி. பில்வனும் அவனைத் தொடர்ந்தான். கம்பிகளுக்கு அப்பால் உட்கார்ந்திருந்த அனுஷாவைப் பார்த்ததுமே பில்வனின் உதடுகளிலிருந்து 'ஆ' என்ற சப்தம் வெளிப்பட்டது. ''நீ சொன்னது நிஜந் தான் ரஜினி. அழகு முக்கியமில்லை. கிரேஸ்... எவ்வளவு கிரேஸ்ஃபுல்லாய் இருக்கிறாள் இவள்.''

அனுஷா நிமிர்ந்து அவர்களைப் பார்த்தாள். நள்ளிரவு நேரத்தில் எதிர்பாராமல் ரஜினியை அங்கே பார்த்ததுமே ஏதோ சிநேக பாவத்தோடு கூடிய சிரிப்பு ஏற்பட்டது. ஆச்சரி யமும் சந்தோஷமும் திக்குமுக்காடச் செய்தன அவளை. ஆனால் அது ஒரு நிமிடந்தான்.

''என்னை அரெஸ்ட் பண்ணிய விபரம் உங்களுக்கு எப்படித் தெரிந்தது.''

''அதையெல்லாம் வெளியே போனதும் பேசலாம். வா.''

அனுஷாவின் கண்களில் வியப்பு. ''அப்படீன்னால் நான் வெளியே வரலாமா?''

''வரலாம்.''

''எப்படி?''

அதுவரை அங்கேயே நின்று கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் ஏதோ வேலை இருப்பது போல அங்கிருந்து நழுவினார்.

ரஜினி அலுத்துக் கொண்டான். ''எல்லாவற்றையும் இங்கேயே சொல்லிவிடணுமா என்ன?''

''என்ன பண்ணினீங்கன்னு எனக்கு சொல்லியே தீரணும். மாஜிஸ்ட்ரேட் இந்த அர்த்த ராத்திரி வேளையில் எப்படிக் கிடைத்தார்? ஜாமீன் எப்படிக் கிடைத்தது? இதையெல்லாம் தெரிஞ்சுக்காம நான் எப்படி வெளியே வரது? அது இன்னொரு குற்றமாயிடாதா?''

இனி லாபமில்லை என்றெண்ணி ரஜினி எல்லாவற்றையும் சொல்லிவிட்டான் விவரமாய். அவள் முகத்தில் ஏதோ உறுதி தென்பட்டது.

''மொத்தத்தில் இந்த மாஜிஸ்ட்ரேட், லாயர்கள், இறுதியில் எங்க சேர்மன்—யாருமே சாதிக்க முடியாத காரியத்தை நீங்க சாதிச்சிருக்கீங்கன்னு சொல்லுங்க! ஒரு ரௌடியும் ஒரு மனித உரு தாங்கிய ராட்சதனும் சேர்ந்து—போலீஸ் அதிகாரியை விலைக்கு வாங்கி, தம் கையாளை அனுப்ப, அவன் வந்து பொய் கேசை போடுவான். இன்னொருத்தன் வந்து மேலிடத்திலிருந்து முயற்சித்தால் திரும்பவும் விட்டு விடுவான். நீங்க சொன்ன கணக்குப் பிரகாரம்—அனுஷா என்ற பெண் இந்த இன்ஸ்பெக்டருக்கு இன்றைக்குக் கிடைக்கவில்லை. நாளைக்குக் கிடைத்து விடுவாள். பழைய கேசு ரிகார்டை கிழிச்சிப் போட்டுட்டு நாளைக்கு இன்னொண்ணு புதுசா எழுதிப்பாங்க. நாளைக்கு ஜாமீன் உடனேயே கிடைச்சுடும் அதானே?''

''அதேதான்! இவ்வளவையும் பண்ணி முடிக்க இந்த ராத்திரியில் நாங்க எவ்வளவு கஷ்டப்பட்டோம் தெரியுமா? முக்கியமாய் இதெல்லாம் வசந்த் தாதாவுக்குத் தெரியாமல் பண்றதுக்கு.''

''வெட்கமில்லை?'' கத்தினாள் அவள். அவ்வாறு கத்தியபோது அவள் குரல் 'கிறீச்' என்று ஒலித்தது. ஒரு நீதிபதியோ, ஒரு போலீஸோ இல்லை இந்த நாட்டை ஆளுவது. ஒரு தாதா ஆட்டிப் படைக்கிறான்! அவனை விட மேலானவங்க நீங்க! எந்த மாஜிஸ்ட்ரேட்டுமே பண்ண முடியாத காரியத்தை நீங்க நொடிப் பொழுதில் பண்ணிட முடிந்தது, இவ்வளவு நல்ல சிநேகிதர்கள் இருப்பதற்கு ஆஹா என்று மனம் நிறைஞ்சு போய் உங்களோடுகூட நானும் சேர்ந்துடட்டுமா? அப்படிப் பார்த்தால் உங்களைவிட அந்த வசந்த் தாதாவுடன் சேர்ந்து விடுவதே நல்லது போலிருக்கே! லாக்கப்பில் இருக்கேன்னா எனக்கு அதற்குப் பின்னால் ஒரு ஆத்மார்த்த திருப்தி இருக்கு. ஒரு அநியாயத்தை எதிர்த்து நின்றதால் இந்த நிலைக்கு வந்தேன். நான் உங்க உதவியை ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில்—முன்பே சொன்னது போல—அந்த உதவியை வசந்த் தாதாவிடமிருந்தே எதிர்பார்த்தால்—கை நீட்டிப் பிச்சை கேட்டால் இந்தக் கேசே இல்லாமல் பண்ணிக்கலாமில்லையா? ஆனால் நான் அவ்வாறு கேட்கமாட்டேன். ஏன் என்றால், இதோ யுத்தம்! போர் புரியுங்கள் ரஜினி! உங்களால் முடியும். இதுவரை உங்களுக்கும் இந்த நாட்டுச் சாதாரண குடிமகனுக்கும் எந்த வித்தியாசமுமில்லாமலேயே வாழ்ந்து வந்திருக்கீங்க. நானும் வாழறேன். அவங்களும் நம்மவரைக்கும் நன்றாய் நடந்துண்டால் போதும், வாழ்ந்துக்கட்டுங்கற உணர்ச்சியில் வாழ்ந்துண்டிருந்தீங்க. இதைக் காட்டிலும் பெரிய பொறுப்பு உங்களுக்கு வந்து சேர்ந்திருக்கு! உங்களால் அதை என்னைவிட நேர்த்தியாய் பண்ண முடியும். அந்த உணர்ச்சி வளருவதற்கு இன்றைய ராத்திரியே முதலிரவு ஆகட்டும்! என்னை இன்றிரவு, இந்த ஜெயிலிலேயே, இந்த மூட்டைப் பூச்சிகளுக்கிடையேயே இருந்துடச் செய்யுங்க. என்னை மன்னிச்சுடுங்க. இவ்வளவு சிரமப்பட்டு எனக்காக நீங்க வந்ததற்கு நன்றி'' என்றாள்.

சொல்லிவிட்டு அவள் உள்ளே போய்விட்டாள்.

ரஜினி ஏதோ சொல்ல வாயைத் திறந்தான். பில்வனைத் திரும்பிப் பார்த்தான்.

பெண்களை ஒரு அழகான பொம்மையாக மட்டுமே இதுவரை பார்த்திருந்த பில்வன்கூட இந்த அதிசயமான மனுஷியைப் பார்த்து சிலையாய் நின்றுவிட்டான்.

ரஜினி அவன் தோளில் கையை வைத்தான். இருவரும் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டார்கள், பிறகு மௌனமாய் வெளியே வந்தார்கள்.

## 16

சர்மா தெருக்கோடியில் நின்றபடி தன் வீட்டை பார்த்துக் கொண்டிருந்தான். அவன் வெகு நேரம் அங்கேயே நின்று கொண்டிருந்தான். அவன் வீடு பூட்டியிருந்தது. தன் குழந்தைகள் எங்கே போனார்கள் என்று புரியவில்லை அவனுக்கு.

சாவின் கடைசி வாயில்வரை வந்து தப்பித்துக் கொண்டாலும், அது சமயம் பார்த்துக் கொண்டிருப்பதை அறிவான் அவன். ரயில்வே ஸ்டேஷனுக்கு வெளியே வந்ததுமே அந்தக் காரைப் பார்த்தான். ஒரு கார் மட்டுமில்லை உடன் இரண்டு மோட்டார் சைக்கிள்களையும் பார்த்தான்.

வசந்த் தாதாவின் ஆபீஸிலிருந்த போது அவர்கள் பேசிக் கொண்ட பேச்சை வைத்து மாஃபியாவுக்கு அடையாளம் என்னவென்பதை தெரிந்து கொண்டிருந்தான் அவன். நம்பர் பிளேட்டிற்கு வலது பக்கத்தில் சிறிய சிவப்புப் பூ முத்திரை போட்டிருக்கும். அதுதான் அடையாளம்.

அந்த மோட்டார் சைக்கிள்களிலும் காரிலும் குறியைப் பார்த்ததுமே அவன் முதுகுத்தண்டு சிலிர்த்தது. முகத்தைக் கைக்குட்டையால் மூடிக்கொண்டு, ஜனங்களோடு சேர்ந்து நடுங்கும் கால்களுடன் வெளியே வந்தான். அதிர்ஷ்டவச மாய் வீடு வரையிலும் இரண்டாம் பேர் கண்ணில் படாமல் வரமுடிந்தது. வீடு பூட்டியிருந்தது.

வசந்த் தாதாவின் ஆட்கள் தன் வீட்டிற்கருகில் மறைந்து காத்திருப்பார்கள் என்று ஊகித்தான். நிமிட நேரத்தில் அவர் கள் எவ்வளவு துரிதமாய் காரியங்களைப் பண்ணுவார்கள் என்பதை அவர்களோடு இருந்தபோது கண்டுணர்ந்திருக் கிறான். தான் எந்த ரயிலில் எந்த கம்பார்ட்மென்ட்டில் ஏறி வந்தான் என்று கூட தெரிந்திருக்கும் அவர்களுக்கு என்பதை உணர்ந்தான்.

அவனுக்கு இப்பொழுது ஒரே ஓர் ஆசைதான்-சாவதற்கு முன்னால் தன் குழந்தைகளைப் பார்த்துவிட வேண்டும்! அதனால்தான் தெருக் கோடியிலிருந்த பாழடைந்த சுவருக்குப் பின்னால் நின்றபடி பார்த்துக் கொண்டிருந்தான். இருட்டிய பிறகு பக்கத்து வீட்டில் விசாரித்துப் பார்த்தால் குழந்தைகளைப் பற்றிச் சொல்லுவார்கள் என்ற ஆசை!

பல நாட்களாய் உறக்கமில்லாததால் அப்படியே குப்பைத் தொட்டிக்குப் பின்னால் படுத்துத் தூங்கிவிட்டான் அவன். விழிப்பு வந்தபோது நன்றாக இருட்டியிருந்தது.

சந்தோஷமாய் வீட்டுப் பக்கம் போனான். இன்னும் பூட்டியே இருந்தது. பின்பக்கம் சென்று பக்கத்து வீட்டுக் கதவை தட்டினான்.

இரண்டு நிமிடங்களுக்குப் பிறகு அவர்கள் கதவைத் திறந்தார்கள். தன் குழந்தைகளைப்பற்றி கேட்டான். முதல் நாள் காலையில் யாரோ காரில் வந்து அழைத்துப் போனதாய் சொன்னார்கள்.

சர்மாவின் தலையில் இடி விழுந்தது போலாயிற்று. தான் பம்பாயிலிருந்து தப்பித்துக் கொண்ட ஐந்தே நிமிஷத்தில் இங்கே தன் குழந்தைகளைக் கடத்திச் சென்றிருக்கிறார்கள் என்றால், வசந்த் தாதா மின்னலைக் காட்டிலும் வேகமாய் காரியங்களைப் பண்ணுவான் என்பது அனுபவபூர்வமாய் தெரிந்தது.

அவனுக்கு சாகத் துணிச்சல் வந்து சேர்ந்தது. சாவதற்கு முன்னாலே ஒரு நல்ல காரியத்தைப் பண்ணிவிடுவோம் என்ற யோசனை உதித்தது.

அங்கிருந்து போய் பார்க்கில் முனிசிபாலிடி விளக்குக் கம்பத்திற்குக் கீழே உங்கார்ந்து கொண்டு நடந்தவைகளை யெல்லாம் எழுதத் தொடங்கினான். தான் வசந்த் தாதாவின் கையில் சிக்கியது, சங்கரை ஜப்பான் தூக்குத் தண்டனை யிலிருந்து தப்புவிப்பதற்காக தன்னை அவர்கள் எப்படித் தேர்ந்தெடுத்தார்கள் என்ற விவரங்களையெல்லாம் மூன்று பக்கங்களில் எழுதினான். அவற்றிற்கு மூன்று நகல்கள் எடுத்தான். ஒன்றை போலீஸ் ஸ்டேஷனுக்கும், இன்னொன்றை போலீஸ் கமிஷனருக்கும், மூன்றாவதை முதல்மந்திரிக்கும் அனுப்பி வைக்கவேண்டும் என்பது அவன் முடிவாயிருந்தது.

அவன் முதலாவதாய் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனான்.

அதுவரையிலும் மிக ஜாக்கிரதையாய் நடந்து வந்த சர்மா இந்த கடைசி சமயத்தில் தப்பு பண்ணிவிட்டான்.

தன் வீடு இருந்த எல்லைக்குட்பட்ட போலீஸ் ஸ்டேஷனுக்குள் நுழைந்ததுதான் அவன் செய்த தப்பு.

அங்கு கூட தாதாவின் கையாட்கள் இருப்பார்கள் என்று நினைத்துப் பார்க்கவில்லை. அவன் இதுவரை எவ்வாறு ஒளிந்து கொண்டிருந்தானோ அதேபோலவே மா.'.பியா வும்

அவனுக்காகவே அந்த இருளில் ஒளிந்து கொண்டு கண்ணி வைத்திருந்தது. குழந்தைகள் தொலைந்து விட்டார்கள் என்றுபுகார் கொடுக்க அவன் அங்கே வருவான் என்று ஊகித்திருந்தார்கள் அவர்கள்.

போலீஸ் ஸ்டேஷனுக்குள் நுழையப் போனபொழுது எதிர்பாராமல் திடீரென்று அவன் மேல் டார்ச்சு விளக்கின் வெளிச்சம் வந்து பாய்ந்தது. அவன் உள்ளே ஓடப்போனான். டார்ச் விளக்கின் வெளிச்சத்தைப் பார்த்துவிட்டு அதையே தன் அறிகுறியாய் எடுத்துக் கொண்டு கண்மூடித்திறக்கும் நேரத்திற்குள் ஒரு ஜீப் வேகமாய் அங்கே வந்து நின்றது, அந்த வேகத்தை சென்ட்ரி கூடக் கவனிக்க முடியவில்லை. என்ன நடக்கப் போகிறது என்று ஊகித்துணருவதற்குள் ஜீப்புக்குள்ளிருந்து ஒரு 'ஸ்டென்கன்' வெளியே வந்தது. அந்த எல்லையே அதன் பேரோசைக்கு அதிர்ந்தது. முதல் படியில் காலை வைக்கப்போன அவனுடைய கழுத்தில் வந்து பாய்ந்தது முதல் குண்டு. இரண்டாவது முதுகில் மேலும் இரு குண்டுகள் இருதொடைகளிலும் பாய்த்தன. ரத்த வெள்ளத்தில் சரிந்து விழுந்தான் அவன். சத்தம் கேட்டு உள்ளேயிருந்து சப்இன்ஸ்பெக்டரும் கான்ஸ்டபிள்களும் ஓடி வருவதற்குள் ஜீப் கண்பார்வையிலிருந்து மறைந்து விட்டது.

வத்சலாவுக்கு அன்றைக்கு நைட் டியூட்டி, அவளுக்குத் தன் வேலை மிகவும் பிடித்துவிட்டது. முக்கியமாய் ஹரநாத், அந்தக் கிழவர் கொஞ்சம் ஞாபகமறதியான ஆள். ஆனால் ரண சிகிச்சையில் அவருக்கு நிகர் அவரேதான்! நைட் டியூட்டிக்கு அவள் வீட்டில் முதலில் கொஞ்சம் தடை விதித்தாலும் பிறகு ஒப்புக் கொண்டார்கள். வத்சலாவுக்கு ஓரிரு நர்சுகள் நன்றாய் சிநேகமாகி விட்டிருந்தனர். நாட்கள் வேகமாய் செல்லத் தொடங்கின.

அன்று அவள் நல்ல மூடில் இல்லை. அன்று மாலை தான் அனுஷாவை அரெஸ்ட் பண்ணியிருந்தார்கள்! வத்சலா

நேராய் ஸ்டாக்ஹோம் ஆபீசிலிருந்து மருத்துவமனைக்கு வந்து விட்டாள். அன்று மாலையெல்லாம் அனுஷாவின் நினைப்பிலேயே இருந்து வந்தாள் அவள்.

இரவு சுமார் பதினொன்று தாண்டியதும் வெளியே சந்தடி கேட்டது. இரண்டு போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் விடுவிடென்று உள்ளே வந்ததைப் பார்த்தாள்.

"என்ன நடந்தது?" என்று பக்கத்திலிருந்த நர்சைக் கேட்டாள்.

"யாரையோ போலீஸ் ஸ்டேஷனின் வாசலிலேயே சுட்டுத் தள்ளிட்டாங்களாம். கூட்டிட்டு வந்திருக்காங்க" என்றாள்.

இப்படிப்பட்ட கேசுகள் எல்லாமே சாதாரணமாய் அரசு மருந்துவமனைக்கே போகும். ஆனால் அந்த போலீஸ் ஸ்டேஷனிலிருந்த சப்—இன்ஸ்பெக்டர் இளைஞர். ரூல்ஸை விட உயிரே முக்கியமானது என்றெண்ணுபவர். உயிருக்கு ஊசலாடிக் கொண்டிருந்த சர்மாவை உடனே பக்கத்திலிருந்த ஹரநாத் மருத்துவமனைக்கு கூட்டி வந்திருந்தார்கள்.

வத்சலா மளமளவென்று வராந்தாவிற்கு வந்தாள். அதற்குள் ஆபரேஷன் தொடங்கப்பட்டு விட்டது. ஹரநாத் நோயாளியின் மேனியில் தைத்திருந்த குண்டுகளை எடுக்கும் முயற்சியில் ஆழ்ந்து விட்டார். சர்மா உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்தான்.

அதே சமயத்தில் வசந்த் தாதா கோபமாய் அங்குமிங்கும் நடைபயின்று கொண்டிருந்தான். அவன் முகம் ஆவேசத்தால் துடிதுடித்துக் கொண்டிருந்தது.

சர்மா முற்றிலும் சாகவில்லை என்ற விஷயம் அவனுக்கு அப்பொழுதுதான் எட்டியிருந்தது. கோபத்தால் கொதித்துக்

கொண்டிருந்தான். சங்கரைப் பார்த்து, ''அந்த சப் இன்ஸ்பெக்டர் யாருன்னு உனக்குத் தெரியுமா?'' என்றான்.

''தெரியாது. புதிதாய் வந்திருக்காராம்.''

தாதா ஒரு தீர்மானத்துக்கு வந்தவனாய் சங்கரைப் பார்த்தான், ''உன் கையாட்களிலேயே நல்ல ஆளாய் பார்த்து அந்த மருத்துவமனைக்கு அனுப்பிவை. சர்மா மரண வாக்குமூலம் தராமல் செத்துட்டானா அல்லது சாகலையான்னு முதலில் கண்டுபிடிக்கணும். ஒருக்கால் அவன் அந்த மாதிரி ஏதாவது தந்து விட்டிருந்தால்—அந்த ரகசியம் தெரிந்த ஆள் யாராயிருந்தாலும் சரி இந்த பூமியில் இருக்கக் கூடாது.எவ்வளவு ரத்த சேதம் ஏற்பட்டாலும் பரவாயில்லை. நமக்கு நேரமும் இல்லை. 'க்விக்'' என்றான். சங்கர்வெளியே ஓடினான். அடுத்த நிமிடம் காரைக் கிளப்பிய ஓசை கேட்டது.

*

வத்சலாவுக்கு ரத்தத்தைப் பார்த்துச் சகித்துக்கொள்ளும் குணம் இன்னும் வரவில்லை. தொலைவில் இருந்தபடியே வேண்டியவைகளை எடுத்துத்தருவாள்.

சர்மாவின் மேனியைச் சுற்றிலும் பச்சைநிறத் துணி போர்த்தப்பட்டிருந்தது. ஆபரேஷன் நடந்து கொண்டிருந்தது. அவன் உடம்பிலிருந்த துணியைக் கழற்றி ஒரு மூலையில் போட்டிருந்தார்கள். அவற்றில் ரத்தக்கறைகள் படிந்திருந்தன. ஆபரேஷன் தியேட்டருக்குப் பக்கத்திலேயே இன்னொரு அறை இருந்தது. அவள் துணிகளை எடுத்துப் போய் அந்த அறைக்குள் போட்டாள். அவ்வாறு போடும்போது அதிலிருந்த காகிதங்கள் கீழே விழுந்தன. சர்மா உள் ஆடைக்குள் மறைத்து வைத்திருந்திருக்கிறான் அவற்றை.

அவற்றை எடுத்து ஒரு பக்கமாய் வைக்கப் போனவள் எதேச்சையாய் பார்த்தாள். 'நான் இறக்க நேர்ந்தால்' என்றிருந்தது அவற்றின் மீது. அவள் திடுக்கிட்டாள்.

உள் அறையிலிருந்த எல்லோரும் அவரவர்களின் வேலைகளில் ஈடுபட்டிருந்தார்கள். அவள் விடுவிடென்று வெளியேயிருந்த அறைக்குப் போய் இன்ஸ்பெக்டரிடம் அந்த காகிதங்களைத் தந்தாள். முதலில் அவற்றைக் கவனிக்காமல் போனதற்கு அவர் நாக்கைக் கடித்துக் கொண்டார்.

அவர் அதைப் படித்துக் கொண்டிருந்தபோது அவளும் ஒரு காபியை எடுத்துப் படித்தாள். படித்து முடித்ததும் அவள் கைகள் நடுங்கின. அதற்குள் இன்ஸ்பெக்டரும் படித்து முடித்து விட்டார். அவர் முகம் உணர்ச்சிப் பிழம்பாயிருந்தது. இந்த உதையால் ஒரு அண்டர்வேர்ல்ட் ராக்கெட்டு அஸ்திவாரத்தோடு தரைமட்டமாகிவிடப் போகிறது என்றெண்ணிக் கொண்டார் தனக்குள்.

தாதா என்ன பண்ண இருந்தான்—கையாட்களின் விஷயங்கள்—காரில் இருந்த பூ அடையாளம்—ஜப்பான் விஷயம்—சங்கரைக் காப்பாற்றும் விதம்—எல்லாம் விவரமாய் எழுதியிருந்தது அதில்.

இன்ஸ்பெக்டர் ஏதோ சொல்ல வாயைத் திறந்தபோது, உள்ளேயிருந்து செய்தி வந்தது—சர்மாவுக்கு நினைவு வந்து விட்டது என்றும் அந்திம சமயத்தில் இருக்கிறான் என்றும்!

அவர் உள்ளே போனார்.

அதே சமயத்தில் வெளியே கார் நின்றது. இருட்டில் நான்குபேர் இறங்கினார்கள். காற்றினும் வேகமாய் உள்ளே ஓடிவந்தார்கள். ஊழியர்கள் யாவரும் காக்கையின் மேல் கல்லை விட்டெறிந்தாற்போல சிதறி ஓடினார்கள்.

அடுத்த நிமிடம் மிஷின் கன்னின் ஓசை கேட்டது. அந்த நிமிஷத்தில் உண்மையான மாஃபியாவின் சொரூபம் விஸ்வரூபமெடுத்துத் தாண்டவமாடிற்று. வத்சலா பல்லியைப்போல சுவரோடு ஒட்டிக்கொண்டாள்.

எவ்வளவு வேகமாய் வந்தார்களோ அவ்வளவு வேகமாய் திரும்பிப் போய்விட்டார்கள் வந்தவர்கள். எங்கும் குய்யோ முறையோ என்ற அலறல்!

எல்லோருடனும் சேர்ந்து அவளும் ஆபரேஷன் தியேட்டருக்குள் போனாள். அங்கே கண்ட காட்சியைப் பார்த்து தலை சுற்றிக் கீழே விழுந்தாள்.

டாக்டர் ஹரநாத், போலீஸ் சப்இன்ஸ்பெக்டர், நர்சுகள், சர்மா எல்லோரும் சவமாய் மூலைக் கொருவராய்க் கிடந்தார்கள்.

ரத்தச் சேற்றில் ஈரமாய் மிதந்து கொண்டிருந்தது சர்மாவின் இறுதிக் கடிதம். ஓர் உண்மை சமாதியாகிவிட்டது.

வத்சலாவின் மூளையில் மட்டும் அது உயிரோடிருந்தது. தன் கையிலிருந்த காகிதத்தைப் பார்த்ததும் வத்சலாவுக்கு நடந்ததெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக நினைவுக்கு வரத் தொடங்கின. மூளையை யோசிக்க விடாமல் அழுத்திக் கொண்டிருந்த திரை விலகினாற் போலிருந்தது. நடந்ததெல்லாம் கனவில்லை. நிஜமே என்ற நம்பிக்கை பிறந்தது.

போலீசார் அவளைக் கேள்வி கேட்டிருந்தால் என்னவாகியிருக்குமோ தெரியாது. ஆனால் அவர்கள் வேறு வேலையில் ஆழ்ந்து, ஊழியர்களை மறுநாள் விவரமாய் கேட்டுக் கொள்வோம் என்றெண்ணி விட்டுவிட்டதால் அவள் அந்த அதிர்ச்சியுடனேயே வந்து ரிக்ஷாவில் ஏறிக் கொண்டாள்.

இப்பொழுது காகிதத்தைப் பற்றி நினைவுக்கு வந்ததுமே தன்னையறியாமல், ''அய்யோ'' என்றாள். அவள் கன்னத்தில் வந்து விழுந்த நிழலையும், நெற்றியில் வந்து தவழ்ந்த கேசங்களையும் பார்த்துக் கொண்டிருந்த சீனிவாசன், ''என்ன ஆச்சு?'' என்றான்.

அவனுக்கு நான்கு குழந்தைகள். வயது நாற்பத்தைந்திற்கு மேலாகிவிட்டிருந்தது. ஆனாலும் மருத்துவ மனையிலிருந்த பெண் நோயாளிகளுடனும், நர்சுகளுடனும் சரச மாடிக் கொண்டிடேயிருப்பான். சிலர் ஒப்புக்கொள்வார்கள் ஒப்புக்கொள்ளாதவர்களை ஏதாவது வழியில் சீண்டி அழவைத்துக் கொண்டிருப்பான்.

வத்சலாவோடு சேர்ந்து ஒரே ரிக்ஷாவில் உட்காரும் அவகாசம் கிடைத்ததற்கு அவன் மனதிற்குள் பொங்கிவிட்டான். அவன் அவளுக்காக பல நாட்களாய் முயன்று கொண்டிருந்தான். ஆனால் அந்த அப்பாவிப் பெண்ணுக்கு, தனக்காக ஒரு ஆண் முயன்று கொண்டிருக்கும் விஷயத்தை அறியக்கூடிய ஞானம்கூட இல்லை. அவன் இருபொருள்பட பேசும் பேச்சுக்களின் அர்த்தங்களைப் புரிந்துகொள்ளத் தெரியாது. தீண்டினாலும் தவறுதலாய் மேலே பட்டுவிட்டாற் போலவே எண்ணிக் கொள்வாள்.

ரிக்ஷாவில் உட்கார்ந்திருந்தபோது அவன் பின்பக்கமாய் கையை நீட்டி 'ராடை'ப் பிடித்துக் கொள்வது போல கொஞ்ச நேரம் பிடித்துக் கொண்டிருந்துவிட்டு பிறகு அதை விட்டுவிட்டான். கையை மட்டும் அப்படியே வைத்திருந்தான் நள்ளிரவு தாண்டி விட்டது. தெரு இருளில் மூழ்கியிருந்தது ரிக்ஷாவின் குலுங்கலுக்கு யதேச்சையாய் பட்டாற்போல அவன் கை மேலே பட்டுக் கொண்டேயிருந்தது. அவள் தற்போது இருந்த மனநிலையில் அதைக் கவனிக்கவேயில்லை.

அவன் மேலும் நெருங்கி உட்கார்ந்து கொண்டான். அதுவரை மலிவுரகப் பெண்களோடு மட்டுமே பரிச்சயமிருந்த அவனுக்கு பூரிப்பான இந்த அழகு மேனியைத் தீண்டியது ஏதோ ஓர் உலகிற்கு அழைத்துச் சென்றது. சரியாய் அந்த சமயத்தில்தான் அவள் இந்த உலகிற்கு மீண்டாற்போல "'அய்யோ'' என்றாள். ''இந்தக் காகிதம்...'' என்றாள். கையிலிருந்த காகிதத்தைக் காட்டி.

"அதென்னது?"

அவள் சொன்னாள். தனக்கு மூன்று காபிகள்கிடைத்தது. அவற்றில் இரண்டை இன்ஸ்பெக்டரிடம் தந்தது—அதற்குள் உள்ளேயிருந்து நோயாளி பற்றிய செய்தி வரவே மரண வாக்குமூலம் வாங்க இன்ஸ்பெக்டர் உள்ளே போனது—அதற்குள் இந்த அமர்க்களம் நடந்தது—எல்லாவற்றையும் விவரமாய் சொன்னாள்.

"என்ன இருக்கு இந்த லெட்டரில்?"

"வசந்த் தாதாவாம் யாரோ—அவனைப்பற்றிய நிறைய விவரங்கள் இருக்கு. இன்னொருத்தன் யாரோ சங்கராம். அவனைக் காப்பாற்றுவதற்காக ஏதோ திட்டம் போரட்டு, இப்ப செத்துப் போனானே அந்த சர்மாவை இதில் சிக்க வைக்கப் போறாங்களாம். நிறைய எழுதியிருக்கிறான். பாதி புரிந்தது, பாதி புரியலை."

சீனிவாசன் கையை எடுத்து விட்டு சரியாய் உட்கார்ந்து கொண்டான். அவளிடமிருந்து காகிதத்தை வாங்கிக்கொண்டான். ரிக்ஷா சந்திலிருந்து மெயின் ரோட்டிற்கு வந்தது. மூன்று நிமிஷத்திற்குள் கடிதம் முழுவதையும் படித்து முடித்து விட்டான். அவனுக்கும் மாஃபியாவைப் பற்றி முழுவதும் தெரியாது. ஆனால் நிறையவே புரிந்தது.

"இந்த கடிதத்தைப் போலீசாரிடம் தர மறந்துட்டோம்" என்றாள் வத்சலா பயந்தவாறு. சீனிவாசன் சிரித்தான்.

இங்கே சீனிவாசனைப் பற்றி மேலும் கொஞ்சம் சொல்ல வேண்டும். தனக்குத் தெரியாத விஷயம் என்று எதுவுமே கிடையாது என்பது போல நடந்து கொள்ளும் பிரகிருதிதான் சீனிவாசன்.

வத்சலாவின் விஷயத்திலும் அவன் அப்படியே நடந்து கொண்டான்.

''இந்த காகிதத்தை போலீசில் தரப் போகிறாயா?'' என்றான். 'வேற என்ன பண்ணுவது'? என்றாற் போல அவனை ஏறிட்டாள் அவள்.

''இந்தக் கடிதத்தை அவங்களுக்கு நீ தந்தால் அடுத்த நிமிஷமே உன்னை அரெஸ்ட் பண்ணிடுவாங்க. ஏற்கனவே சாட்சி எதுவும் கிடைக்காமல் கிடந்து தவிக்கிறாங்க. இவ்வளவு கொலைங்க நடந்தப்புறம் யாரையோ ஒருத்தரைச் சட்டுனு அரெஸ்ட் பண்ணினாற் போல சொல்லாட்டால் ஜனங்க சும்மாயிருக்க மாட்டாங்க'' என்றான்.

''பின்னே என்ன பண்றது?'' என்றாள் அவள் பயந்து.

''இதைப்பற்றியே மறந்துடு. உனக்கு ஒண்ணுமே தெரியாதுன்னு நினைச்சுக்கோ, போதும்.''

காகிதத்தை தானே எடுத்து வைத்துக்கொண்டு ''போலீசுங்க ஜோலிக்கே போகக்கூடாது. நாம் போலீசு கேசுன்னால் எப்படியிருக்கும் தெரியுமா உனக்கு? ராவும் பகலும் வந்துண்டேயிருப்பாங்க. வீட்டிலேயிருந்து போலீஸ் வேனில் ஸ்டேஷனுக்குக் கூட்டிட்டுப் போவாங்க. கோர்டுக்கு வரச் சொல்லுவாங்க. நிஜத்தைச் சொல்ல வைக்கணும்னு உன்னைப் படாத பாடு படுத்திடுவாங்க. அஃப் கோர்ஸ், எனக்கு சி. ஐ. டி. யிலும் போலீசிலும்ரொம்ப பேரைத் தெரியும்னுவெச்சுக்கோ. ஆனால் எதுக்கு அந்தத் தொல்லையெல்லாம்?''

அவள் பதில் பேசவில்லை. ரிக்ஷா அவள் வீட்டிற்கு முன்னால் வந்து நின்றது. ''நானும் உள்ளே வந்து உங்க அப்பாவை ஒரு தடவை பார்க்கட்டுமா?''

''வேண்டாம், வேண்டாம். நானே போய்க்கிறேன்.

''சரி, நாளைக்குப் பார்ப்போம். நாளையிலிருந்து டாக்டர் ஹரநாத் இல்லாத ஆசுபத்திரி எப்படித்தான் இருக்குமோ, சரி போய்யா ரிக்ஷா.''

ரிக்‌ஷா நகர்ந்தது.

அவள் போய் கதவைத் தட்டினாள். எல்லோரும் ஆழ்ந்த உறக்கத்திலிருந்ததால் பலமாய் தட்ட வேண்டியிருந்தது. தந்தை வந்து கதவைத் திறந்தார். தாயும், எழுந்து வந்து விட்டாள். நள்ளிரவு நேரத்தில் வீட்டிற்குத் திரும்பி வந்த மகளைப் பார்த்து ஆச்சரியமடைந்தார்கள். பெண்ணின் முகம் ஏதோ போலிருந்ததைக் கண்டு, "என்ன ஆச்சும்மா?" என்று கேட்டாள் தாய். வத்சலா எல்லார் முகத்தையும் பார்த்தாள். தன் வீட்டார் அத்தனை பேரின் கண்களிலும் அவ்வளவு பாச உணர்ச்சியைக் கண்டதுமே அதுவரை அடக்கி வைத்திருந்த துக்கம் திடீரென்று வெளிவரத் தொடங்கிவிட்டது. தாயைக் கட்டிக் கொண்டு தேம்பித்தேம்பி அழத் தொடங்கினாள்.

## 17

தான் வீடு போய்ச் சேரும் வரையிலும் சீனிவாசனுக்கு இன்னும் காற்றில் மிதந்து கொண்டிருப்பது போலவே இருந்தது. பக்கத்தில் இன்னும் வத்சலாவின் மென்மையான மேனி பட்டுக் கொண்டிருப்பது போலவே உருவகித்துக் கொண்டான்.

வீட்டையடைந்து கதவைத் தட்டினான். மனைவி வந்து கதவைத் திறந்தாள்.

அவன் உள்ளே வந்து கடிதத்தைப் புத்தக அலமாரியில் போட்டு விட்டு சட்டையைக் கழற்றத் தொடங்கினான். அவன் முகம் ஏதோ போலிருந்ததைப் பார்த்து விட்டு, "என்ன நடந்ததுங்க?" என்றாள் மனைவி.

சீனிவாசன், "ஒன்றுமில்லை" என்று படுக்கையில் சாய்ந்தான். அப்படிக் கேட்டது மனைவியில்லாமல் வேறு எந்தப் பெண்ணாயிருந்தாலும் சரி, அவளுக்கு ஐம்பது வயதாயிருந்தாலும் சரி, அவன்விவரமாய் சொல்லியிருப்பான். ஆனால் இப்போழுதோ அந்தப் பக்கமாய் திரும்பிப் படுத்து கண்களை மூடிக்கொண்டான். ஐந்து நிமிடங்கள் கழிந்தன.

சீனிவாசனின் மனைவி திரும்பி கணவனைப் பார்த்தாள். அவனுடைய கிருஷ்ண லீலைகளும், நள்ளிரவு நேரத்தில் வருவதும் அவள் அறிந்ததே. இன்றைக்கு வந்த போது அவன் முகத்தில் ஒரு விதமான மாறுபாடு தென்பட்டதை கவனித்தாள். எந்தப் பெண்ணாவது, 'உங்களுக்குக் கல்யாண மாகிவிட்டாலும் பரவாயில்லை. நம்முடையது ஜென்ம ஜென்மத்துக்கும் இருக்கக் கூடிய காதல்' என்பது போன்று கடிதம் எழுதியிருக்கலாமோ என்றெண்ணிக்கொண்டாள். அதற்குள் பாத்ரூமிற்குள் போவது போல கட்டிலை விட்டிறங்கிப் போனவள் புத்தகங்களுக்கு மேலிருந்த அந்தக் கடிதத்தை அப்படியே கையோடு எடுத்துக்கொண்டு போனாள். பாத்ரூமிற்குள் சென்று கதவைச் சாத்திக் கொண்டு கடிதத்தைப் படிக்கத் தொடங்கினாள்.

சீனிவாசனுக்கு அப்பொழுதுதான் உறக்கம் வரத் தொடங்கியிருந்தது. அதற்குள் வெளியே கதவு தட்டிய ஓசை கேட்டது. இந்த பாதி ராத்திரி வேளையில் கதவைத் தட்டுவது யாராயிருக்கும் என்றெண்ணிக்கொண்டே போய் கதவைத் திறந்தான். எதிரே பலசாலியான ஒரு ஆள் நின்றிருந்தான். "சீனிவாசன் நீங்கதானா?" என்று கேட்டான்.

"ஆமாம்."

"நான் சி.பி.ஐ.யிலிருந்து வரேன்."

சீனிவாசனுக்கு பயம் ஏற்பட்டது. "என்ன...என்ன வேணும்?" என்றான்.

''உள்ளே வரலாமா?''

''வா...வாங்க.''

அவன் உள்ளே வந்து முன் அறையில் உட்கார்ந்து கொண்டான். அதற்குள் பாத்ருமிற்குள்ளேயிருந்து சீனிவாசனின் மனைவி வெளியே வந்தாள். அவள் அந்தக் கடிதத்தைப் படிக்கவில்லை. 'நான் என் குழந்தைகள்' என்றிருந்ததைப் பார்த்துவிட்டு அதென்னவோ ஆண் எழுதிய கடிதம் என்று தெரிந்ததுமே அவளுக்கு அதில் ஆர்வம் வற்றி விட்டது. திரும்பி வந்து அதை முன்பிருந்த இடத்திலேயே போட்டாள். வெளியே சம்பாஷணை நடந்து கொண்டிருந்தது.

''ரெண்டு மணி நேரத்துக்கு முன்னாடி ஆசுபத்திரியில் வரிசையாய் கொலைகள் நடந்தப்ப நீங்க அங்கேதானே இருந்தீங்க?''

''இருந்தேன். ஆனால் நான் எதையுமே பார்க்கலை'' பயந்து சொன்னான் சீனிவாசன். அரை மணிக்கு முன்னால் பெண் ஒருத்தி பக்கத்திலிருந்தபோது புலியாய் பேசியவன் இப்பொழுது பூனையாய் இருந்தான்.

''சே, நீங்க பார்த்ததாய் சொல்லலலை நான். எங்க டியூட்டியை நாங்க செய்யவேண்டாமா? அதனால்தான் வரிசையாய் எல்லோரையும் கேட்டுட்டேவரோம். இதெல்லாம் ரொடீன். ரெண்டு மூணு நாளில் ஃபைலை மூடிடுவோம், கொலையாளி யாருன்னு பிடிச்சுட்டு.''

அதான் இவங்களை சி. பி. ஐ. ங்கறாங்க போலிருக்கு என்றெண்ணிக் கொண்டான் சீனிவாசன் தனக்குள் பக்தி பூர்வமாய்.

போலீசுக்கும் சி.பி.ஐ.க்குமுள்ள வித்தியாசம் தெரியாது அவனுக்கு. கொலை நடந்த இரண்டே மணி நேரத்திற்குள் சி.பி.ஐ. களத்தில் இறங்கும் வாய்ப்பில்லை என்றும் அது

போலீஸ் கேஸ் என்றும் தெரியாது. அப்படிப் பார்த்தால் போலீசைவிட சி.பி.ஐ. நான்கு மடங்கு மந்த கதியில் வேலை பண்ணும் என்று கூடத் தெரியாது அவனுக்கு.

''சர்மாவை உங்க ஆஸ்பத்திரிக்குக் கூட்டிட்டு வந்தப்போ, உடைகளை மாற்றியது நீங்கதானே?''

சீனிவாசனின் மார்பு வேகமாய் துடித்தது.

''நானில்லை. புதிதாய் வேலைக்குச் சேர்ந்த இன்னொரு இளைஞன். ஏன் கேட்டீங்க?''

''நீங்க இல்லையா, சரி விடுங்க.''

''ஏன் அப்படி கேட்டீங்க?''

''சாதாரணமாய் இந்த மாதிரி நடந்தப்ப, போலீசுங்க தான் முதலில் ஜேபியையெல்லாம் தேடிப் பார்க்கணும். ஆனால் அந்த இலாக்காவைப்பற்றி உங்களுக்கு தெரியாதா என்ன? எல்லாம் ஒரே அவசரந்தான்.''

சி.பி.ஐ. ஆபீசர் அவ்வளவு மதிப்பாய் பேசியதைப் பார்த்து அவன் தேறிக் கொண்டான்.

''அந்த செத்த நோயாளியின் உடைகளில் எதாவது இருந்ததோன்னு தெரிஞ்சுக்கத்தான் வந்தேன், வேறில்லை.''

கடித சங்கதியைச் சொல்லிவிடுவோமா என்று நினைத் தான், ஆனால் பயமாயிருந்தது. முதலிலேயே ஏன் அதைச் சொல்லவில்லை என்று சொல்வானோ? ஆனால் அதற்குள் இன்னொரு பயமும் உண்டாயிற்று. இந்த இரவோ டிரவாய் இவர்கள் சோதனை தொடங்கினால் ஒருக்கால் இன்னும் ஒரு மணி நேரத்தில் வத்சலாவின் வீட்டிற்குக் கூட போனாலும் போவார்கள். ஒருக்கால் அவள் அந்தக் கடிதத் தைப் பற்றிச் சொல்லிவிட்டாளானால்?

''நீங்க ஏன் தடுமாறுகிறீங்க? உங்களுக்கு ஏதாவது தெரிந்தால் சொல்லுங்க.''

சீனிவாசன் சொல்லவில்லை.

''இந்தக் கேஸ் விஷயத்தில் உதவி பண்ணியவங்களுக்கு ரெண்டாயிரம் ரூபாய் பரிசு தர நிச்சயித்திருக்கிறது அரசாங்கம்.''

திடுக்கிட்டான்! இரண்...டா...யி...ரயிம் ரூபா...ய்!

''ஒரு கடிதம் இருக்கு'' என்றான்.

அம்பாய் சட்டென்று வெளி வந்தது பதில்—''எந்தக் கடிதம்?''

''சர்மா சாகும் போது எழுதியது.''

''எங்கே அது?''

சீனிவாசனின் கண் முன்னால் ஒரு காட்சி மிதந்தது. பெரிய விழா. போலீஸ் அதிகாரிகள் எல்லோரும் வரிசையாய் மேடையில் உட்கார்ந்திருக்கிறார்கள். முதல் மந்திரி முறுவலுடன் மைக்கிற்கு முன்னால் நின்றபடி பெயரைக் கூப்பிடுகிறார். ஒரு கொலைக் கேசில் உதவி புரிந்ததற்கு செக் வழங்கப்படுகிறது. எங்கும் கரகோஷம். தானும் வத்சலாவும் போய்...

ஆம், வத்சலாவும் கூட வர வேண்டும்.

அவன் யோசனைகள் ராக்கெட்டைக் காட்டிலும் வேகமாய் பறந்தன. இந்த சந்தர்ப்பத்தில் வத்சலாவுடன் சிநேகத்தை வளர்த்துக்கலாம். இந்தக் கடிதம் கிடைத்தது அவளுக்குத்தான் என்று சொன்னால் தன் மேல் மதிப்பு ஏற்படும். அந்தசாக்கில் அவளை நிறைய தடவை போலீஸ் ஸ்டேஷனுக்கும் வெளியேயும் அழைத்துச் செல்லலாம்...ஒரு ஆயிரம் ரூபாயை இழப்பதன் மூலம் அவள் எண்ணத்தில்

உயர்ந்தவனாய் பெயர்பெற்றுவிடலாம். அவளைத் தன் வசமாக்கிக்கொள்ள முடியும்.

"அந்தக் கடிதம் எங்கே?"

"தற்சமயம் வத்சலாங்கற பெண்ணிடம் இருக்கு."

"அவளிடம் எப்படிப் போச்சு?"

"செத்த சர்மாவிடமிருந்து எடுத்தது அவள்தான் எடுத்து எனக்குக் காட்டினாள். இதையெல்லாம் நாம்ப வெச்சுக்கக் கூடாது. உடனே போலீசுக்குத் தெரிவித்து விடுவது நம் பொறுப்புன்னேன். இன்ஸ்பெக்டரிடம் காட்டினோம். ரத்தத்தில் நனைந்து கிடந்ததே அந்த ரெண்டு காபிகள் தான் அவை! மூன்றாவது காபியை அவள் தன்னோடு வீட்டுக்கு எடுத்துட்டுப் போனாள். நாளைக்கு காலையில் நாங்களிருவரும் வந்து அதை ஒப்படைப்பதாய் இருக்கோம்."

"உங்களிருவரைத்தவிர வேறயாரும் படிக்கலையா அதை?"

"இல்லை."

"உங்களுக்கு நிச்சயமாய் தெரியுமா?"

"நிச்சயமாய் தெரியும். அந்த மாதிரி யாருக்குமே காட்டவேண்டாம்னும், அதை போலீசுக்கு மட்டுந்தான் தரணும்னும். அப்படித் தரதுதான் பொறுப்பான ஒரு குடி மகனின் கடமைன்னும் சொன்னேன். கொலை நடந்த பிறகு வந்த போலீசாரிடம் இதை உடனே தராதது கூட தப்புன்னேன். ஆனால் இன்ஸ்பெக்டர் சார்! அந்தப் பொண்ணு சின்னப் பொண்ணு! பாவம், ஒன்றுமே தெரியாது."

"அந்த லெட்டரில் என்ன இருந்தது?"

சீனிவாசன் சொல்லத் தொடங்கினான். அந்த கடிதத்திருந்த ஒவ்வொரு விஷயத்தையும் வரிசையாய் சொல்லிக்

கொண்டே வர வர, எதிரேயிருந்தவனின் முகத்தில் தோன்றிய மாறுபாட்டை கவனித்து இருமடங்கு உற்சாகத்துடன் 'மறந்துபோன சங்கதிகளையும் நினைவு படுத்திக் கொண்டு சொல்லத் தொடங்கினான். வசந்த் தாதாவைப் பற்றியும், இன்னும், இன்னும் சொல்லிவிட்டு, மாஃபியா வாகனத்தின் மேலிருக்கும் பூ அடையாளத்தைப் பற்றியும் சொல்ல வந்தபோது, கேட்டது போதும் என்பதுபோல அவன் எழுந்து நின்று, "நாம்ப அந்தப் பொண்ணு வீட்டுக்கு உடனே போகணும்" என்றான சட்டென்று.

"இப்பவா? இந்த ராத்திரி வேளையிலேயா?"

"ஆமாம் இப்பவே போய் அந்தக் கடிதத்தை வாங்கிக்கணும்."

சீனிவாசன் யோசித்தான். இந்த இன்ஸ்பெக்டரைக் கூட்டிச் சென்று கடிதத்தைப் பற்றிய பேச்செடுத்தால் வத்சலா அது உங்களிடம்தானே இருக்கிறது? என்று சொல்லிவிடலாம். நீங்கதானே யாருக்குமே காட்ட வேண்டாம் போலீசுக்குத் தரவே வேண்டாம்நீங்க? என்று சொல்லி விடலாம். தான் முதல்ல அவளைச் சந்தித்து எல்லாவற்றையும் சொல்ல வேண்டும். போலீசாரிடமிருந்து பரிசைப் பெறுவதற்காகத் தான் எவ்வளவு கஷ்டப்படுகிறேன் என்பதை விவரித்துச் சொல்ல வேண்டும். கடிதத்தை அவளிடம் தந்துவிட்டு, "இது உன்னோடதுதான் வத்சலா! நியாயமாய் இந்தப் பரிசு உன்னைத்தான் சேரணும். எனக்கு வேண்டாம், நீயே எடுத்துக்கோ" என்று சொல்ல வேண்டும். "இல்லை சீனு, இது உங்களுதுதான். இல்லாவிட்டால் நம்மிருவருதுமே" என்பாள். 'நம்மிருவரும்' என்று சொல்லும்போது அவள் கண்கள் கசியும், 'இந்த அன்பிற்காகத்தான் இவ்வளவு நாளும் தவிச்சிட்டிருந்தேன் வத்சலா' என்பான் அவன். இருவரும் சேர்ந்து போலீஸ் ஸ்டேஷனுக்குப் போவார்கள் ஒரே ரிக்ஷாவில்.

''என்ன யோசிக்கிறீங்க? கிளம்புங்க.'' குரல் கடினமாய் கேட்டது.

சீனிவாசன் யோசனையிலிருந்து மீண்டான். ''எனக்கு வத்சலாவின் வீடு எங்கேயிருக்குன்னு தெரியாது'' என்றான்.

''தெரியாதா?''

''தெரியாது. அந்தப் பொண்ணு எங்க ஆசுபத்திரிக்குப் புதிதாய் வந்து சேர்ந்தவள். தெருக்கோடியில் இறக்கி விட்டேன். அவ்வளவுதான் தெரியும். இந்த அர்த்த ராத்திரி வேளையில் அந்தத் தெருவில் யாரைப் போய்க் கேட்போம்?''

''எந்தத் தெரு அது?''

''மகாத்மா காந்தி ரோடு. உங்களுக்குத்தான் தெரியுமே. ரொம்பப் பெரிய ரோடு அது. அதில் கண்டு பிடிப்பது கஷ்டம்.''

''அந்தப் பெண்ணின் தந்தை பெயர்?''

''விஸ்வேஸ்வர சாஸ்திரி.''

''அந்தப் பெண்ணின் அட்ரஸ் உங்க ஆசுபத்திரியில் இருக்குமா?''

''இருக்கும். ஆனால் இந்தப் பாதி ராத்திரியில்...''

''போலீசுக்குக் கஷ்டம்னு எதுவுமே கிடையாது. யாரிடம் இருக்கும்?''

''ஆசுபத்திரி மேனேஜர் ரிகார்டில் இருக்கும். அவர் வீடு கூட எனக்குத் தெரியாது.''

''நாங்க தெரிஞ்சுக்கறோம்.''

"எதுக்கு சார்? நாளைக் காலையில் அந்தப் பெண்ணை கூட்டிட்டு வரும் பொறுப்பு என்னைச் சேர்ந்தது. உ அட்ரசைத் தாங்க."

கணவனுடன் இந்த அர்த்த ராத்திரி வேளையில் பேசுவது யாராயிருக்கும் என்றெண்ணி சீனிவாசனின் மனைவி மெல்ல எட்டிப்பார்த்தாள்.

ஜேபிக்குள் கையை விட்டதைப் பார்த்து, அந்த சி.பி.ஐ ஆபீசர் விசிட்டிங் கார்டை வெளியே எடுக்கிறார் போலும் என்றெண்ணிக் கொண்டான் சீனிவாசன்.

"உங்களோடு அந்தப்பொண்ணு கூட கடிதத்தை முழுவதும் படித்தாளா?"

"படித்தாள் சார். இருவரும் அதைப்பற்றி வாதாடிக் கிட்டோம் கூட."

"உங்களிருவரைத்தவிர ஆசுபத்திரியில் இன்னும் வேறு யாருக்கும் தெரியாது இல்லையா?"

"யாருக்குமே தெரியாது—" அவன் வார்த்தை முடிய வில்லை. எதிரே இருந்தவனின் ஜேபியிலிருந்து கை வெளியே வந்தது. முதலில் சீனிவாசனின் வாயிலிருந்து நீர் உப்பாய் வெளிவந்தது. வயிறு கபகபவென்று எரிந்தது. கைகளில் ஈரம் கசிந்தது. பிறகு மனைவியின் வீலென்ற அலறல் கேட்டது. எல்லாவற்றிற்கும் கடைசியாய்...வலி தோன்றியது. அதுவும் இரண்டு வினாடிகள் மட்டுமே.

வத்சலா சிறு பெண்ணைப் போல் தாயின் பக்கத்தில் ஒண்டிப் படுத்துக் கொண்டிருந்தாள். குடும்பம் முழுவதும் கூடி அவளை வெகுநேரம் தேற்ற வேண்டிய தாயிற்று. மருத்துவமனையில் அவ்வளவாய் ஒன்றுமில்லை. ஆனால் வீட்டிற்கு வந்ததும் அங்கே தோன்றிய பயங்கரக்

காட்சிகள் ஒவ்வொன்றாய் நினைவுக்கு வந்து அவனை அழுத்தத் தொடங்கின.

"என்னிடம் வந்து படுத்துக்கோம்மா" என்றாள் தாய். தந்தை நெற்றியில் விபூதி இட்டார். இந்தப் பக்கம் தம்பி படுத்துக்கொண்டான். எல்லோரும் அவளைச் சுற்றி... தாயின்மேல் கையைப் போட்டு இழுத்துக் கட்டிக் கொண்டாள். வீடு நிசப்தத்தில் ஆழ்ந்தது, குடும்பத்து அங்கத்தினர்கள் அத்தனை பேரும் அவளைச் சுற்றிலும் அன்போடும், பாசத்தோடும்...அவள் கண்களில் நீர் சுரந்தது. கண்களை மூடியவாறு பலவந்தமாய் உறங்க முயற்சித்தவள் எண்ணிக்கொண்டாள்.

"...பத்து ஜென்மம் எடுத்தாலும் இதே போன்ற பிறந்த வீடு தனக்கு அமைய வேண்டும்.'

அப்பொழுதுதான் கேட்டது ... முதலில் தொலைவிலிருந்து கொஞ்சங்கொஞ்சமாய் நெருங்கி வந்த மோட்டார் சைக்கிளின் ஓசை...வந்து வீட்டிற்கு முன்னால் நின்ற சப்தம்.

## 18

ராமன் ஆழ்ந்த உறக்கத்திலிருந்தான். அவன் அறை வீட்டிற்கு முன் பாகத்திலிருந்தது. வேலையில்லாதபட்ட தாரிகள் பலரையும்போல அவன் வாழ்க்கை பெரும்பாலும் தூங்குவதிலேயே கழிந்தது. விடியும் சமயம் கேட்ட கதவு சப்தத்திற்கு சோம்பலை முறித்துக் கொண்டே எழுந்து போய் கதவைத் திறந்தான்.

எதிரே வத்சலா நின்றிருந்தாள்! அவன் ஆச்சரியத்தால் ஓரடி பின்னுக்கு நகர்ந்தான். தன் அறைக்கு அவள் என்றுமே வர மாட்டாள். அதுவும் இந்த அதிகாலையிலேயே!... அவன் வியந்து கொண்டிருந்தபோது அவள் உள்ளே வந்தாள்.

''ராமன், நான் ஆபத்தில் சிக்கிட்டிருக்கேன்.''

''ஆபத்தா? என்ன ஆபத்து?''

''அதையெல்லாம் சொல்லி உன்னையும் ஆபத்தில் இழுத்து விடப் பிடிக்கலை எனக்கு. நான் இங்கேயிருந்து தொலைவிற்குப் போய்விட வேண்டும். எவ்வளவு சீக்கிரத்தில் இது முடியுமோ அவ்வளவு நல்லது.''

''நீ என்ன சொல்றே? ஏதாவது தப்பு பண்ணிட்டியா?''

அவன் கண்களில் ஏதோ சந்தேகம் நிழலாடிற்று. அவள் அதிர்ந்து விட்டாள். இவ்வளவு சீக்கிரத்தில் அவன் அந்த முடிவிற்கு வருவான் என்று ஊகித்திருக்கவில்லை அவள். அவனுக்குண்டான சந்தேகத்தால் தன் மனதில் ஏற்பட்ட கசப்பை பலவந்தமாக அடக்கிக் கொண்டே, கெஞ்சுவது போல், ''ராமன், இந்த விஷயம் என் வீட்டாருக்குக் கூடத் தெரியலாகாது. என் உயிர் ஆபத்தில் இருக்கு. எதையாவது பண்ணி கொஞ்ச நாளைக்கு எங்கேயாவது வழி காட்டு எனக்கு. வெகு தூரத்திற்குப் போயிடணும் நான். யாருக்குமே தெரியக் கூடாது.''

''என்ன நடந்ததுன்னே சொல்லாமல் இதெல்லாம் என்ன?'' அவன் அலுத்துக் கொண்டான்.

''வேண்டாம் ராமன். இது தெரிந்தால் உனக்கு ஆபத்து! அதனால்தான் எங்க வீட்டாருக்குக் கூட சொல்லிக்காமல் வந்துட்டேன் நான். இந்தச் சூழ்நிலையில் இதை விட வேறெதையும் சொல்ல முடியாது என்னால். என்னை மன்னிச்

சுடு. எனக்கு வெளி உலகமே தெரியாது. ப்ளீஸ், என்னை கொஞ்ச நாளைக்கு எங்கேயாவது மறைத்து வைக்க முயற்சி பண்ணு, வேணுமானால் யார் வீட்டிலாவது பற்றுப் பாத்திரம் தேய்க்கச் சொன்னாலும் தேய்க்கிறேன். ஆனால் நான் மட்டும் போய்த்தீரணும். வெகு தூரத்திற்குப் போய் விடணும்.''

''என்னால் மட்டும் எங்கே அனுப்பி வைக்க முடியும்? எனக்கு யாரையுமே தெரியாதே.''

தன் வருத்தத்தையும் உணர்ச்சிகளையும் புரிந்து கொள்ளாமல் விட்டேற்றியாய் அவன் பேசியது அவளுக்கு சுருக்கென்றது. அனுஷாவின் வார்த்தைகளாலேயே பாதி உடைந்து விட்டிருந்த மனம் இப்பொழுது அவன் நடவடிக்கைளை முற்றிலும் தெரிந்து கொண்டு விட்டது.. அவளுக்கு அனுஷாவின் வார்த்தைகள் நினைவுக்கு வந்தன. நிறையப் பேர் முக்கியமாய் ஆண்கள் எப்புவும் கோழைகள். பிரச்னை என்று வந்ததுமே நழுவிவிடுவார்கள். அதுவும் காதலர்கள் என்று அமைபவர்கள் ஒருவர் கஷ்டத்தில் மற்றொருவர் பங்கெடுத்துக் கொள்ளமாட்டார்கள், ஆனாலும் ஒருவர் கஷ்டத்தை மற்றவர் பங்கேற்றுக்கொள்ள அவர்கள் காதலர்களாய்த்தான் இருந்து தீரவேண்டுமென்பதில்லை, அவ்வளவு இக்கட்டான சூழ்நிலையிலும்கூட அவளுக்குச் சிரிப்பு வந்தது. இவனையா காதலித்தாள்? கற்பனைகள் சரிந்து, கசப்பான உண்மையானது நெஞ்சில் வந்து நின்றது. ''போயிட்டு வரேன் ராமன்' என்றாள்.

''என்னவாயிடுத்து வத்சலா? என்னிடம் சொல்ல மாட்டாயா?''

''சொல்றேன், ராமன். ஆனால் இந்த விஷயம் உனக்கு தெரிஞ்சுடுத்துன்னு அவங்களுக்குத் தெரிஞ்ச மறுநிமிஷமே உனக்கு எவ்வளவு தெரிஞ்சிருக்குன்னு அவங்க தெரிஞ்சுப்பதற்காக உன்னோட ஒவ்வொரு அங்கத்தையும் தேர்ந்தெடுத்து உண்மையை வரவழைப்பாங்க. அதனால்தான்.

இந்த விஷயம் எங்கவீட்டாருக்குக் கூடத் தெரியக்கூடாது. அவங்க எவ்வளவு திறமை வாய்ந்தவங்கன்னால் இந்த நேரத்தில் நான் இங்கே வந்திருப்பதுகூட அவங்களுக்கு எட்டியிருக்கும். இன்னும் ஒரு மணி நேரத்திற்குள் வந்து என்னைச் சூழ்ந்துக்குவாங்க. சொல்லு ராமன், உனக்கு தைரியமிருக்கா என்னைக் காப்பாற்ற...?''

அந்தமாதிரி நேருக்கு நேராய் அவள் கேட்கவே அவன் வாயடைத்துப்போனான். ''அவங்க யாரு?' என்றான். அவன் குரல் சுரத்தின்றி வெளி வந்தது.

''நாடெல்லாம் பரவியிருக்கும் ஒரு கும்பல்.''

''அவங்க வலையில் நீ எப்படி சிக்கிக்கிட்டாய்?''

''அதையெல்லாம் சொல்ல நேரமில்லை.''

''சொல்லாவிட்டால் எப்படி? என்னவோ பண்ணியிருக்கிறாய் என்ன பண்ணிாய்?''

அவள் சட்டென்று பதில் சொல்லவில்லை. அவனை உற்றுப் பார்த்தாள். பிறகு நிதானமாய், ''போயிட்டு வரேன் ராமன். ஒருக்கால் இனி நாம் சந்தித்துக் கொள்ளாமலேயே போகலாம்'' என்றாள், இனி அங்கே தனக்கு எந்த வேலையு மில்லை என்றாற் போல.

''எங்கே போகிறாய் வத்சலா?''

''தெரியாது. உன் கர்ச்சீப்பைத் தரயா ராமன்?''

''எதுக்கு? ஞாபகார்த்தமாவா?''

''இல்லை கட்டிய துணியோடு வெளியேறிட்டேன். ரொம்ப தூரம் பிரயாணம் பண்ணணும். வழியில் கண்ணீரைத் துடைச்சுக்கத்தான்.''

அன்றிரவு அந்த நகரத்து மாஃபியாக் குழு எதுவுமே உறங்க வேயில்லை.

I.G.I—இன்மூலம் (இண்டர் குரூப் இன்ஃபார்மென்ட்ஸ்) வசந்த் தாதாவின் ஒரு ரகசியம் ஒரு பெண்ணிற்குத் தெரிந்து விட்டதென்றும், அப்பெண் இன்னும் உயிரோடுதான் இருக்கிறாள் என்றும் எல்லா குரூப்பிற்கும் செய்தி எட்டிற்று. தமக்குள் என்னதான் தகராறு இருந்தாலும் போலீசாரை எதிர்க்கவேண்டிய சந்தர்ப்பம் வந்து விட்டால் எல்லா மாஃபி பியாக்களும் ஒற்றுமையாகி விடும். இதுதான் அவர்களிடம் இருந்த சிறப்பு. அந்தக் கடிதத்தில் என்னவிருந்ததென்று புரியாமல் பலவித கற்பனைகள் பரவிக் கொண்டிருந்தன. அதில் நாட்டில் நம்பர்—1 தலைவர் வசந்த் தாதா இருந்த தால் பரபரப்பு ஏற்பட்டது. அந்தப் பெண்ணை எப்படியாவது கண்டுபிடித்து வசந்த் தாதாவிடம் ஒப்படைத்து அவனுடைய பாராட்டைப் பெற்றுவிட வேண்டும் என்று ஆர்வத்தில் எல்லோரும் தேடித் திரிந்தார்கள்.

இவ்வாறு நடக்குமென்று வசந்த் தாதா முன்பே ஊகித் திருந்தான். ஆனால் இவ்வளவு சீக்கிரமாய் நடந்துவிடும் என்று எதிர்பார்க்க வில்லை.

அன்று காலை ஏழுமணிக்கு சங்கரின் கையாள் ஒருவன் மருத்துவமனைக்குச் சென்று வத்சலா வேலைக்காகப் போட்டிருந்த அப்ளிகேஷனிலிருந்த புகைப் படத்தை சம்பாதித்துக் கொண்டான். அந்தப் புகைப்படத்தின் காபிகளை வைத்துக் கொண்டு வேட்டை தொடங்கி விட்டது.

சாஸ்திரிக்கோ அந்த குடும்பத்திற்கோ வத்சலா எங்கேயிருக்கிறாள் என்ற விஷயமே தெரியாது என்று ருசு வாயிற்று. அவர்கள் வத்சலாவிற்காக உண்மையிலேயே கலவரமடைந்து வருகிறார்கள் என்று தெரியவந்ததும் சங்கர் அவர்களை விட்டுவிட்டான். போலீசாரே தம் மகளைத் தேடி வந்ததால்மகளைப்பற்றி வேறு ரிபோர்ட்டு தரவேண்டுமென்ற யோசனை தோன்றவில்லை சாஸ்திரிக்கு.

வத்சலா மாயமானதால் அக்குடும்பம் அல்லாடத் தொடங்கிவிட்டது. அவளது தாய் சரியாய் சாப்பிடுவதில்லை. மேலுக்கு கம்பீரமாய் தோன்றினாலும் உள்ளூர மானசீக வேதனையை அனுபவித்து வந்தார் தந்தை. அவருக்கு எல்லாப் பெண்களையும் விட வத்சலாவின் மேல் தான் அதிக அன்பு. ஏதும் அறியாத அப்பாவியான அப்பெண் திடீரென்று போலீசுக்கு பயந்து ஓடவேண்டிய காரணம் என்னவென்று புரியவில்லை தந்தைக்கு.

நகரத்தில் நடந்த இத்தனைக் கொலைகளைப்பற்றிய செய்திகளையும் பேப்பர்களில் பார்த்து ஊரே பயந்து நடுங்கியது. வசந்த் தாதாவையோ இச்செய்திகள் கவரவில்லை. வேறொரு செய்திதான் கலங்கடித்தது அவனை.

முதல் நாள் இரவு ஒன்பது மணிக்கு பம்பாயிலுள்ள ஷாவின் குரூப் மேனேஜிங் டைரக்டரையும் மேலும் மூன்று டைரக்டர்களையும் சி. பி. ஐ. அரெஸ்ட் பண்ணியிருந்தது. அன்றிரவே அகமதாபாத்திலிருந்த காட்டன் கிங் தத்தாவின் சொத்துக்களைப் பறிமுதல் செய்யப்போவதாய் அரசாங்கம் அறிவித்தது.

ஷாவின் குரூப்புடனோ, தத்தாவுடனோ வசந்த் தாதாவுக்குச் சம்பந்தமில்லை. ஆனால் ஒரே இரவில் இரண்டு முக்கியமான நாட்டின் பிரபல வியாபாரப் புள்ளிகளைக் கைது பண்ணியிருக்கிறார்கள் என்றால் அந்த விஷயத்தைப் பிரதம மந்திரிக்குத் தெரியாமல் நிதி மந்திரி பண்ணச் சொல்லி உத்தரவிட்டிருக்கமாட்டார். கோடீஸ்வரர்களாயிருந்தாலும் அரசியலில் என்னதான் செல்வாக்கு இருந்தாலும் சரி, ஒன்றையும் பொருட்படுத்தாமல், லகானிட்டு அவர்களனைவரையும் ஒவ்வொருவராய் பிடித்துக் கொண்டே வருகிறார்கள். பிரபல வியாபாரப் புள்ளியும், நாட்டின் பத்திலொருபாகம் நிதி முதலீட்டைக் கொண்ட வருமான ஷாவை கைது பண்ணியிருக்கிறார்கள் என்றால் நாட்டில் கருப்புப்பணத்தை ஒழிக்க எவ்வளவு உறுதியாய்

இருக்கிறார்கள் என்பது புரிந்தது. இதே சூழ்நிலை தொடர்ந்ததானால் ஒவ்வொரு தூணாய் இடிந்து விழுந்து முதலாளித்துவமே சிதைந்துவிடும். தாதாக்களின் பிரபாவமே குன்றி விடும். இந்தச் செய்திகள் யாவும் பேப்பர்களில் வந்து எல்லோருக்கும் தெரிந்து போய்விட்டது. ஆனாலும் நாட்டிற்குத் தெரியாத விஷயங்களும், ஜனங்கள் அவ்வளவாய் பொருட்படுத்தாத விஷயங்களும் இன்னும் நிறைய இருக்கின்றன.

இந்தச் சூழ்நிலையில் அந்தப் பெண்ணின் மூலம் எல்லா விஷயங்களும் வெளியே பரவிவிட்டதானால் மாஃபியா உலகமே சிதைந்துவிடும். முக்கியமான அரசியல் தலைவர்களில் குறைந்தது நாற்பது பேர்களாவது கம்பி எண்ணத் தொடங்கி விடுவார்கள். ஒரு பொறுப்பான குடிமகனாய், நாட்டின் நிலைமை இவ்வாறு அல்லோலகல்லோலமாகி விடாமல் பார்த்துக் கொள்வது தனது கடமை. நாடு மிக சுபிட்சமாயும், நன்றாயிருக்கிறது என்றும் சாமானியக் குடிமக்கள் நினைத்துக் கொண்டிருக்கும் வரையிலுந்தான் ஃபாஸிஸ்டுகளும் காபிடலிஸ்டுகளும் நீடிக்கமுடியும். ஜனநாயகத்தில் கொள்ளையடித்துக் கொள்ளவும் வழியுண்டு.

என்னவாயிற்று என்று தெரிந்துகொள்வதற்காக ரிசீவரை எடுத்து வசந்த் தாதா சங்கருக்குப் போன் பண்ணப் போனான். ஆனால் அதற்குள் போன் ஒலித்தது.

'யாரு?'' என்றான்.

''நான்தான், ராமு தாதா.''

''என்ன ராமு, என்ன விஷயம்?''

''அந்தப் பொண்ணு கிடைச்சுடுத்து. இங்கேதான் இருக்கிறாள்.''

வசந்த் தாதா சுறுசுறுப்பானான். ''எங்கே?'' கேட்டான் பரபரப்புடன்.

"பஸ் ஸ்டாண்டில்."

"நம்ப ஆட்கள் என்ன பண்ணிட்டிருக்காங்க?"

"நாலைந்து பேர் இங்கேதான் இருக்காங்க. மற்ற குரூப்காரங்க கூட அவளைக் கண்டுக்கிட்டாங்க. அவங்க இன்னும் களத்தில் இறங்கலை. அவ்வளவு பிரயாணிகளுக்கு மத்தியில் அவளிடமிருந்து அந்த லெட்டரை எப்படி வாங்கிக்கறதுன்னுதான் யோசிச்சிட்டிருக்காங்க போலிருக்கு."

"பின்ன நீ என்ன பண்ணப் போறே?"

ராமு சங்கடத்துடன், "நிறைய பேர் கூட்டமா இருக்காங்க தாதா. வேணும்னால் ஏதோ ஒருவிதத்தில் கொன்றுடலாம். ஆனால் உடனே ஜனங்க கூடிடுவாங்க. சவத்துக்கிட்டேயிருந்து கடிதத்தை எடுப்பது கஷ்டமாயிடுமேன்னுதான்..." என்றான்.

"அந்தப் பொண்ணு இப்போ எங்கே இருக்குது?"

"டிக்கெட் கௌண்டர் பக்கத்தில் கியூவில் நிக்குது."

"கையில் ஹேண்ட் பாக் இருக்கா?"

"இல்லை."

"அப்படின்னால் அந்தக் காகிதத்தை எங்கே வைச்சிருக்கும்?"

ராமுவுக்கு திக்கென்றது. "நிஜந்தான். அந்த யோசனையே வரலை. இருங்க தாதா, ஒரு நிமிஷம். அப்புறமாய் போன் பண்றேன்."

தாதா போனை வைத்துவிட்டு உட்கார்ந்தான். மிகச் சிறிய பிரச்னை என்றெண்ணியிருந்தது, மெல்ல மெல்ல சிக்கலாகிக் கொண்டே வருகிறது.

அதற்குள் போன் ஒலித்தது. ஆனால் இம்முறை ராமு விடமிருந்து இல்லை, சங்கரிடமிருந்து.

''சாஸ்திரியின் வீட்டிலிருந்து ஒரு ஈ காக்கை கூட வெளியே வரலை. உள்ளேயும் யாருமே நுழையலை. ராத்திரிலேருந்து இங்கேயே காவல் காத்திட்டு நிற்கிறேன்'' என்றான் அலுத்துக் கொண்டே.

சங்கருக்கு மிரட்டி உருட்டி காரியத்தைப் பண்ணிக் கொள்வதும், நொடிப்பொழுதில் கொலை பண்ணுவதும் வழக்கமே தவிர, இவ்வாறு பொறுமையாய், அதுவும் ஒரு பெண்ணிற்காக மணிக்கணக்கில் பழி கிடப்பது இதுதான் முதல் தடவை. எரிச்சலாயிருந்தது அவனுக்கு.

''தேவையில்லை சங்கர். அந்தப் பொண்ணு நம்ம ஆட்களுக்குக் கிடைச்சுடுத்து.''

''எங்கே?''

''பஸ் பஸ்டாண்டில் இருக்கிறாள். ராமு இப்பத்தான் போன் பண்ணினான்.''

''நான் அங்கே போறேன்.'' அவசரப்பட்டான்.

''வேண்டாம். ஒரு நிமிஷங் கழித்து போன் பண்ணு. அது சரி, அந்தப் பொண்ணு பஸ் ஸ்டாண்டுக்கு வருவதற்கு முன்னால் எங்கெங்க போனாள்னு தெரிஞ்சுதா?''

''ராமன்னு ஒரு சோனிப் பயலிடம் போனாள். அவ்வளவுதான்.''

''கடிதத்தைப் பற்றி...''

''அவனுக்கொன்னும் தெரியாது தாதா. நம்ப குண்டப்பா டீல் பண்ணினான். அவன் ஒரு தொடைநடுங்கி! நம்ம ஆளு ரெண்டு கேள்வி கேட்டதுமே அழத்தொடங்கி

விட்டான். அதுக்கு மேலே விட்டுட்டான். குண்டப்பா சொல் லிட்டால் அதற்கு மறுபேச்சு உண்டா?''

அவ்விஷயம் நிஜந்தான். இப்படிப்பட்டவைகளில் குண்டப்பா கைதேர்ந்தவன். அப்பெண் ராமனிடம் ஒன்றுமே சொல்லவில்லை என்பது உறுதியானாற் போலத்தான்.

வசந்த் தாதா நேரத்தைக் கணக்குப் போட்டுப் பார்த்துக் கொண்டான். அப்பெண் வீட்டை விட்டுப் புறப்பட்டதுமே நேராய் சீனிவாசனின் வீட்டிற்கு போயிருப்பாள். அங்கிருந்து இந்த நண்பனின் வீட்டிற்கு... பிறகு பஸ் ஸ்டாண்டிற்கு... அவ்வளவுதான். அதற்குமேல் வேறெங்குமே போயிருக்க நேரமில்லை.

''சங்கர், அந்த ராமனிடமிருந்து ஏதாவது பணம் வாங் கிட்டுப் போச்சா அந்தப் பொண்ணு?''

''அர்த்த ராத்திரியில் உன்னைப் பார்த்துட்டு கட்டிய புடவையுடன் ஓடிப் போயிருக்கிறவள் பணம் எடுத்துட்டுப் போயிருக்க மாட்டாள். ஒருக்கால் அவன் தந்திருப்பான். தற்சமயம் அந்தப் பொண்ணு மதுரைக்குக் கிளம்பிட் டிருக்கு.''

''நான் பஸ் ஸ்டாண்டுக்குப் போறேன்.''

''வேண்டாம். அந்த சாஸ்திரி வீட்டிற்கு போலீசுங்க யாராவது வந்தாங்களா?''

''இல்லை. வரணுங்கிற அவ்வளவு புத்திசாலித்தனம் இருந்துட்டால் அவங்க போலீசுங்களாக இருக்க முடியாது.''

''நீ போ சங்கர். அந்த வீட்டை அணுவணுவாய் பரி சோதிச்சிட்டே இரு. பிறகு எனக்கு போன் பண்ணு.''

''அப்படீன்னா அந்தப் பொண்ணு?''

"அது சங்கதியை நான் பார்த்துக்கிறேன். நம்பளண்டை நல்ல கண்டிஷனில் இருக்கிற ஜீப்புங்க எவ்வளவு இருக்கு?"

"ரெண்டு. ஒன்று ராமுவிடம் இருக்கு."

"இன்னொன்றை எடுத்துக்கிட்டு குண்டப்பாவை பஸ் ஸ்டாண்டிற்குப் போகச் சொல்லு. மீதியை ராமுவிடம் சொல்றேன்."

சங்கர் போனை வைத்ததுமே ராமுவிடமிருந்து போன் வந்தது.

"அந்தப் பொண்ணு துணிக்கடியில் அது இல்லை போலிருக்கு. நம்ம ஆள் தடவிப் பார்த்தான்."

"சரி, சரி. குண்டப்பா அங்கே வரான். ரெண்டு ஜீப்புகளில் பஸ்ஸைத் தொடர்ந்து போங்க. பஸ்ஸை நடுவில் நிறுத்திட்டு அவளை ஏற்றிக்குங்க. ரெண்டு மிரட்டு மிரட்டினால் அந்தக் கடிதத்தைப் பற்றிச் சொல்லிடுவாள். சொன்னதுமே காட்டிலேயே கொன்னுடுங்க. சவம் கிடைச்சுடாமல் மூடிடுங்க. கடத்தல் கேசுமாத்திரந்தான் வரும். கொலை வரையில் நீளாது."

"ரெண்டு ஜீப் எதுக்கு? நான் மட்டும் போறேனே?"

"நடுவழியில் ஜீப் கெட்டுட்டால்?"

ராமு நாக்கைக் கடித்துக் கொண்டு, "சரி தாதா சரி" என்று போனை வைத்து விட்டான். வசந்த் தாதாவும் போனை வைத்து விட்டு சங்கரிடமிருந்து வரப்போகும் செய்திக்காகக் காத்திருந்தான்.

# 19

வத்சலா வெட்கத்தால் கூனிக் குறுகிவிட்டாள். அதிர்ஷ்டவசமாய் யாரும் பார்க்காததால் தேற்றிக் கொண்டாள்.

ஏனோ திடீரென்று கௌண்டருக்கருகில் ரகளை ஏற்பட்டது. நிக்கர் அணிந்தவாறு ரௌடியைப் போலிருந்த ஒருத்தன் நேராய் வந்து ஜன்னலுக்குள் கையைவிட்டு டிக்கெட் கேட்டான். க்யூவிலிருந்த இன்னொருத்தன் சண்டையில் இறங்கினான். நொடிப்பொழுதில் கௌண்டருக்கு முன்னால் ரகளை வந்து விட்டது. க்யூவிற்கு முன்னால் நின்று கொண்டிருந்த வத்சலாவைச் சுற்றி நால்வர் கூடி விட்டார்கள். அங்கிருந்து வெளியே வர முடியாதவளானாள். ரகளை நடந்து கொண்டிருந்தபொழுதே அந்த நிக்கர் அணிந்த ஆசாமியின் கை பின்னாலிருந்து அவளுக்கு முன்னால் வந்தது. என்ன நடக்கிறது என்று ஊகிப்பதற்குள்ளாகவே அவன் கை அவள் ஜாக்கெட்டிற்குள்ளே நுழைந்து தேடியதும், இன்னொரு கை இடுப்பிற்குள்ளே நுழைந்து தேடியதும் நிமிட நாழிகையில் நடந்து முடிந்து விட்டன. ரகளையும் வந்த வேகத்திலே போய் மறைந்தது. க்யூ பழையபடி ஆயிற்று. சண்டையிட்ட இருவரையும் க்யூவில் காணவில்லை.

வத்சலாவுக்கு தலை சுற்றிற்று. முகமெல்லாம் வியர்த்தெடுத்தது. சுற்றிலும் பார்த்தாள். யாரும் கவனிக்கவில்லை. கவனித்திருந்தாலும் இரு பயில்வான்கள் அந்த மாதிரி செய்ததைப் பார்த்துத் தட்டிக் கேட்கும் துணிச்சலோ, மிரட்டும் தைரியமோ கூட இருந்திருக்காது சாதாரண

மனிதர்களுக்கு. பார்த்தும் பாராததுபோல இருந்து விட்டார்கள். அவள் அவஸ்தையை ஒருத்தன் மட்டுமே கவனித்தான்.

''என்னம்மா பொண்ணு, நீ எங்கே போகணும்?'' என்ற குரலுக்குத் தேறியவள்—எப்படியோ வாயைத் திறந்தாள். ''மதுரை'' என்றாள். அந்த ஆள் பருமனாகவும் உயரமாகவும் இருந்தான். வழுக்கைத் தலை. பார்த்த மாத்திரத்தில் நல்ல அபிப்ராயம் தோன்றியது. மதுரை என்று சொல்லி விட்டாளே தவிர, என்ன பண்ணுவது என்றுதான் புரியவில்லை அவளுக்கு. அவளிடம் பணமில்லை.

முதலில் கௌண்டரிடம் தான் ஏன் நின்றோம் என்றுகூட புரியவில்லை அவளுக்கு. யாரையாவது கேட்கலாம் என்றெண்ணியிருப்பாளா? இவை ஒன்றையும் யோசித்துப் பார்க்கவில்லை அவள். இப்பொழுது இந்தப் பெரிய மனிதருக்கு எப்படித் திருப்பித் தருவது என்ற யோசனையில் ஆழ்ந்தாள்.

அதற்குள் அவன் டிக்கெட் வாங்கிக்கொண்டு வந்து அவளுக்குத் தந்துவிட்டு, ''உள்ளே போனதும் பார்த்துக்கலாம்மா'' என்று சொல்லிவிட்டு அங்கிருந்து அவசரமாய் போய்விட்டான்.

பஸ்ஸிற்குள் போனதும் எப்படியாவது அவனைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளலாம் என்றெண்ணிக்கொண்டே அவள் போய் பஸ்ஸிற்குள் ஏறினாள். எவ்வளவு சீக்கிரத்தில் இந்தப் பட்டினத்தை விட்டுப் புறப்படுகிறோமோ அவ்வளவு நல்லது என்று அவள் மனம் பரபரத்தது.

அவள் டிக்கெட் நம்பர் தேடிப் பார்த்து சீட்டில் உட்கார்ந்தாள். இரு பக்கத்துச் சீட்டுகளும் காலியாயிருந்தது. மூவர் அமரும் சீட் அது. பஸ் கிளம்ப இரண்டு நிமிடங்கள் இருந்தபோது எஞ்சிய டிக்கெட் ஆசாமிகளும் வந்து சேர்ந்தார்கள். அதில் ஒருவன் இவளுக்கு டிக்கெட் வாங்கித் தந்த ஆள்.

''காரில் போகாமல் ஏன் இந்த பஸ் பிரயாணம்?'' என்று அவன் பக்கத்திலிருந்தவனைக் கேட்டான். அந்த இன்னொரு ஆள் உயரமாயிருந்தான். நெற்றியில் தலை மயிர் அலட்சியமாய் வந்து விழுந்து கொண்டிருந்தது. அவன் அதைக் கேட்டதாய் தோன்றவில்லை. அவன் பார்வை எங்கோ இருந்தது. தன் சீட்டிற்கருகில் வந்து நின்று அங்கே ஒரு பெண் உட்கார்ந்திருந்ததைப் பார்த்து கலவரமடைந்தவனாய் தோன்றினான். அதைக் கவனித்த அந்த வழுக்கைத் தலை ஆள், சீட், வேணுமின்னாய். எனக்குக் காலை நீட்டிக்க இந்தக் கோடி சீட்டுதான் வேணும். மத்தியில் இந்தப் பொண்ணு பாவம் உட்கார்ந்துட்டுப் போகட்டும். என்னம்மா, உனக்கு ஆட்சேபணை இல்லையே?''

வத்சலா இல்லை என்று தலையாட்டினாள்.

இருபக்கத்திலுமாய் உட்கார்ந்திருந்தவர்கள் பருத்த சரீரமுடையவர்களாதலால் கொஞ்சம் இடுக்காய் இருந்ததை உணர்ந்தாள். வெளியுலகத்து பயங்கரத்திற்கு அஞ்சியவாறு ஒரு தாய் பறவை சிறகுகளுக்குள் ஒடுங்கியவாறு உட்கார்ந்திருந்ததைப் போலிருந்தது அது. பஸ் புறப்பட ஆயத்தமாயிற்று.

''என்ன பொண்ணு—இடுக்காய் இருக்கா?''

''சே—இல்லை அங்கிள்'' என்றாள். அவன் அதிர்ந்தவனாய், ''அங்கிளா?'' என்று கிறீச்சென்று கத்தி விட்டான், பிறகு சொன்னான். ''என் தலை முழுவதும் தேடிப் பார்த்தாலும் ஒரு நரைத்த மயிர்கூட இராது. எந்தப் பெண்ணுமே என்னை இதுவரை அங்கிள்னு சொன்னதில்லை!''

வத்சலா கண்களை மலர்த்தி வியப்போடு பார்த்தாள். அவனை. அவன் சிநேகபூர்வமாய் சிரித்தான். ''என் பேர் பில்வன். உனக்கு அந்தப் பக்கமாய் உட்கார்ந்திருக்கிறவன் பேரு ரஜினி. சீரியஸ் டைப் அஃப் கோர்ஸ். உன்னைப்

போன்ற பெண்கள் இந்த மாதிரி பையன்களைத்தான் விரும்பு வாங்கன்னு வை'' அதுசரி, உனக்கு காதல்னா என்னன்னு தெரியுமா?

வத்சலா வியப்போடு, ''தெரியாது'' என்றாள்.

''ஒருத்தருக்குப் போதுமான இடத்தில் இருவர் ஒடுங்கு வதுதான்!...அதே மாதிரி இருவருக்குப் போதுமான இடத்தில் மூவர் ஒதுங்கிக்கிறதுக்கு என்னம்பாங்க தெரியுமா?''

அவள் மேலும் கலவரமடைந்து, ''தெரியாது'' என்றாள்.

''இந்தப் பூாண்டியன் பேருந்து!''

அதுவரை வெளியே பார்த்தவாறிருந்த ரஜினி யோசனையிலிருந்து மீண்டவன், திரும்பி, ''பில்வா, மாஃபி யாக்குழு எல்லாம் இந்த பஸ் ஸ்டாண்டில் எதுக்குப் பழி கிடந்தாங்க?''

அப்பொழுதுதான் கொஞ்ச கொஞ்சமாய் பயத்தின் பிடியிலிருந்து மீண்டு வந்து கொண்டிருந்த வத்சலா; அருகில் குண்டு வீழ்ந்தாற்போல அதிர்ச்சியடைந்தவளாய் சரேலென்று சீட்டைவிட்டு எழுந்திருக்கப் போனாள். அதற்குள் பஸ் புறப்பட்டுவிட்டது.

''என்ன பொண்ணு, என்ன ஆச்சு!''

''ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை.'' வத்சலாவின் குரல் நடுங்கிற்று. வெகு நேரம் அவளுக்கு என்ன பண்ணுவ தென்றே புரியவில்லை. பஸ் ஊரெல்லையைத் தாண்டியதும் வேகத்தை மேற்கொண்டது.

அதற்கு முன்னால் ஒரு ஜீப்பும், பின்னால் ஒரு ஜீப்பும் பின் தொடர்ந்து சென்றன. முன் ஜீப்பில் ராமுவும் இன்னும்

இருவரும் மூன்று 'ஸ்டென் கன்'களோடு உட்கார்ந்திருந் தார்கள். பின்னாலிருந்த ஜீப்பில் குண்டப்பா இருந்தான்.

ஏதோ சொல்ல வந்து வத்சலாவின் முகத்தைப் பார்த்த பில்வன் ஆச்சரியமடைந்தவனாய், "என்ன என்னவாச்சு?" என்றான்.

''ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை'' என்றாள் கலவரத் துடன்.

ரஜினி கண்களை மூடிக் கொண்டு இந்த சம்பாஷணை களைக் கேட்காமல் தன் உலகத்தில் ஆழ்ந்திருந்தான்.

அதற்குள் பஸ் நின்றுவிட்டது.

எல்லோரும் முன்பக்கம் பார்த்தார்கள். அதற்குள் பஸ் ஊரைத்தாண்டி நாற்பது கிலோ மீட்டர்கள் வந்திருந்தது. சுற்றிலும் மலைகள்—சிறிய காடு. ரஜினி கண்களைத் திறந்தான்.

பஸ் டிரைவர் ஜன்னல் வழியாய் தலையை வெளியே நீட்டி யாருடனோ பேசிக்கொண்டிருந்தான். ரஜினியும் வெளியே பார்த்தான். அப்பொழுதுதான் பஸ் ஏன் நின்றது என்று புரிந்தது. பஸ்ஸிற்கு முன்னாலிருந்த ஜீப்பும் நின்றிருந்தது.

அதற்குள் பஸ்ஸிற்குள் பனியன் அணிந்த இரண்டு பேர் ஏறினார்கள். அவர்கள் முகமூடியணிந்திருந்தார்கள் கையில் ஸ்டென் துப்பாக்கிகள் இருந்தன.

பஸ்ஸிற்குள் திடீரென்று கூக்குரல் கிளம்பத் தொடங்கின. தாய்மார்கள் தம் குழந்தைகளை இழுத்து அணைத்துக் கொண்டார்கள். பின்னாலிருந்து யாரோ வீலென்று அலறிக் கொண்டேயிருந்தார்கள். முகமூடியணிந்திருந்த ஒருவன் ஜேபியிலிருந்த இன்னொரு துப்பாக்கியை வெளியே எடுத்து

காற்றை நோக்கிச் சுட்டான். பஸ் முழுவதும் திடீரென்று நிசப்தம் சூழ்ந்துகொண்டது. அந்த நிசப்தத்தை துளைத்துக் கொண்டு அவன் குரல் பலமாய் கேட்டது. ''யாரும் அசையக் கூடாது. அசைந்தால் கொன்னுடுவோம்...''

எல்லோரும் சிலையாய் உட்கார்ந்துவிட்டார்கள்.

அவ்விருவரும் ஒவ்வொரு சீட்டாய் தேடிக்கொண்டே வந்தார்கள். ஒருவன் வத்சலா இருந்த சீட்டிற்கருகில் வந்தான். அப்பொழுதே அவள் குனிந்து முகத்தைத் தொங்கப்போட்டுக் கொண்டு தன்னை மறைத்துக்கொள்ள அரும்பாடுபட்டுக் கொண்டிருந்தாள்.

''ஏய்...எழுந்திரு'' என்றான் கடுமையாய்.

அவள் எழுந்திருக்கவில்லை. அதற்குள் இன்னொருத் தனும் அங்கே ஓடிவந்தான். பில்வனும் ரஜினியும் கூட தம் கைக்குட்டைகளால் முகத்தை மறைத்துக் கொண்டிருந் தார்கள்.

ஸ்டென் துப்பாக்கியை வைத்துக்கொண்டிருந்த ஆள் பில்வனின் தோளைப் பற்றி வேகமாய் அப்பால் இழுத்துத் தள்ளிவிட்டு, ''நகரு'' என்றான். பில்வன் எழுந்து தொலை வில் போய் நின்றுகொண்டான். பிறகு அவன் வத்சலாவின் தோளைத் தொட்டு எழும்பினான். அதுவரை பயத்தால் வாயடைத்துப் போய் கூனிக் குறுகி உட்கார்ந்து கொண்டி ருந்த வத்சலா, அவன் கை தன் மேல்பட்டதுதான் தாமதம். ஹிஸ்டிரியா வந்தவளைப் போல, ''விடு, என்னை விட்டுவிடு'' என கத்தத் தொடங்கினாள். அவன் துப்பாக்கியால் அவள் தோளுக்குக் கீழே பலமாய் குத்தினான். வீலென்று அலறி னாள் வத்சலா.

''எழுந்து நில்'' என்றான் இன்னொரு தடவை, அவள் எழுந்து நிற்க முயன்றாள். பயத்தால் கால்கள் தடுமாறவே

திரும்பவும் துவண்டு சரிந்தாள். இம்முறை இன்னொருவனும் வந்தான் உதவிக்கு. இருவரும் சேர்ந்து அவளை பலவந்தமாய் எழுப்பினார்கள்.

எந்த நிமிடத்திலும் வெடிக்கத் தயாராயிருந்த அந்த துப்பாக்கியைப் பார்த்துவிட்டு சும்மாயிருந்துவிட்டான் ரஜினி. அவளை அதே போல தள்ளிக்கொண்டே கதவு வரையிலும் இழுத்துக் கொண்டே போனார்கள். பலவந்தமாய் கீழே இறக்கி கதவைச் சாத்திவிட்டு, டிரைவரிடம், ''நாங்க போய்ச் சேர்ந்த ஐந்து நிமிடங்கள் வரைக்கும் பஸ்ஸைக் கிளப்பக்கூடாது! புரிஞ்சுதா?'' என்று சொல்லிவிட்டுத் தன் ஜீப்பை நோக்கிப் போனார்கள்.

பஸ்ஸிலிருந்த எல்லோரும், 'அப்பாடா' என்று திருப்தியோடு பெருமூச்செறிந்தனர். பெண்கள் தம் நகைகளைத் தடவிப் பார்த்துக் கொண்டார்கள்.

அதற்குள் வத்சலாவை ஜீப்பை நோக்கி இழுத்துச் சென்றவர்கள் நின்றனர், பின்னாலிருந்து குண்டப்பா தன் ஜீப்பைக் கொண்டு வந்து முன்னாலிருந்த ஜீப்பிற்குப் பக்கத்தில் நிறுத்தினான். அவ்விரண்டு ஜீப்புக்களும் முப்பதடி தூரத்தில் நின்று கொண்டிருந்தன. முதல் ஜீப்பில் டிரைவிங் சீட்டில் உட்கார்ந்திருந்த ராமு இறங்கி குண்டப்பாவிடம் வந்தான். ''நீங்கள்ளாம் இந்த ஜீப்பில் போயிடுங்க. நான் இவளைக் கூட்டிட்டு காட்டிற்குள் போய் சங்கதியைப் பார்த்துக்கறேன்'' என்றான்.

''உன்னோடு வேறொருத்தரும் தேவையில்லையா?''

''இரண்டு பேர் வராங்க!''

அவர்கள் இரண்டு குழுவாக பிரிந்தனர்.

வத்சலாவை குண்டர்கள் இழுத்துச் சென்றபிறகு பில்வன் தன் சீட்டிற்கு வந்தான். அதற்குள் ரஜினி தன் இருப்பிடத்தை விட்டு எழுந்திருந்தான்.

"பாவம், ரொம்ப நல்ல பொண்ணு. சிட்டுக் குருவியைப் போலிருந்தாள், இல்லே?"

ரஜினி பதில் பேசவில்லை. டிரைவருக்கு முன்னாலிருந்த கண்ணாடி வழியாய் பின்னால் நடப்பவைகளைப் பார்த்தான்.

ரஜினி திரும்பி பில்வனைப் பார்த்தான். அவன் கண்களில் தென்பட்ட உணர்ச்சியைப் புரிந்து கொண்ட பாவனையில் தலையாட்டினான் பில்வன்.

"...ரிஸ்க் ஆயிடுமோ என்னமோ? அவங்களிடம் நாலு ஸ்டென் துப்பாக்கி இருக்கு. நம்மிடம் இரண்டே இரண்டு தான்...அதைத் தவிர ஆறு சாதாரண துப்பாக்கிகள் வேறு...'

ரஜினி அவன் பேச்சை காதில் வாங்கிக் கொள்ளவே யில்லை. வத்சலாவுக்கு இரண்டு பக்கத்திலும் இருவர் நடந்து சென்று கொண்டிருந்தார்கள். ரஜினி பில்வனைப் பார்த்தான். கண்கள் பேசிக்கொண்டன.

பில்வன் டிரைவிங் சீட்டை நோக்கிப் போய், அவனை ஒதுங்கச் சொல்லிவிட்டுத் தான் அங்கே உட்கார்ந்து கொண்டான். டிரைவர் ஏதோ தடை சொல்லப் போனவன் அவன் கண்களில் தென்பட்ட ஹிப்னாடிக் உறுதியைப் பார்த்து வாயைத் திறக்க முடியாதவனாய் தன்னையறியாமல் ஒதுங்கிக் கொண்டான். ரஜினி கதவுப் பக்கமாய் போய் ஒண்டிக்கொண்டு கையில் பிஸ்டலை எடுத்து ரெடியாய் வைத்துக் கொண்டான். அதைப் பார்த்துவிட்டுப் பக்கத்து சீட்டில் உட்கார்ந்து கொண்டிருந்த ஆள், "ஏய் என்ன இது என்ன பண்ணிண்டிருக்காய்?" என்று கத்தப் போனான். அவன் வார்த்தை முடிவடைவதற்குள்ளாகவே ரஜினியின் கை வேகமாய் வந்து அவன் வாயில் ஒரு குத்து விட்டது. வேறு யாராவதாயிருந்தால் இந்த மாதிரி விஷயத்தில் கொஞ்சம் இரக்கம் காட்டியிருப்பார்களோ என்னவோ, ஆனால் ரஜினி அந்த மாதிரி செய்யவில்லை. 'யாரும் பேசக்

கூடாது. தலையை நன்றாய் குனிந்து உட்கார்ந்துக்குங்க' என்று எச்சரித்தான்.

அதற்குள் பஸ் புறப்பட்டது.

அந்த ஓசையைக் கேட்டு ஜீப்பிற்குள் வத்சலாவை ஏற்றிக் கொண்டிருந்தவர்கள் திரும்பிப் பார்த்தார்கள்.

'அதற்குள் கிளப்பாதே. இன்னும் கொஞ்ச நேரம் பொறு' என்று கத்தினான் அவர்களுள் ஒருவன் டிரைவரைப் பார்த்து. ஆனாலும் அவர்கள் அந்த பஸ் விஷயத்தை அவ்வளவாய் பொருட்படுத்த வில்லை, துப்பாக்கியைக் காட்டியதுமே சாதாரண ஜனங்கள் எப்படி பயந்து விடுவார்கள் என்பதை அனுபவபூர்வமாய் உணர்ந்தவர்கள் அவர்கள். டிரைவர்தான் பஸ்ஸைக் கிளப்புகிறார் என்றெண்ணி சும்மாயிருந்து விட்டார்கள் அவர்கள். அது கிளம்பிய அதே சமயத்தில் குண்டப்பா தன் ஆட்களுடன் ஜீப்பில் ஏறிக் கொள்ள சித்தமாயிருந்தான்.

திடீரென்று பஸ் வேகத்தை மேற்கொண்டது. கியரை மாற்ற எந்த முயற்சியும் பண்ணவில்லை பில்வன். இரண்டாவது கியரிலேயே வேகத்தை அதிகரித்தான். அந்த சப்தத்திற்கு பஸ் காற்றில்பறக்கும் சருகைப்போல குலுங்கிக் கொண்டே ஓடிற்று. பஸ்ஸிற்குள் இருந்த ஜனங்கள், 'ஆ,ஊ' என்று கூச்சலிட்டபடி தலையைப் பிடித்துக்கொண்டு உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்காகக் குனிந்தார்கள். ரஜினி பின்னால் நடந்து கொண்டிருந்த கலவரத்தை கவனிக்கும் நிலையிலில்லை. அவன் பார்வை வத்சலாவின் மீதே நிலைத்திருந்தது.

குண்டப்பா புறப்பட ஆயத்தமாயிருந்த ஜீப் அருகே பஸ் சென்றது. எதிர்பாராத இந்த விளைவினால் வத்சலாவிற்கு இரு பக்கங்களிலும் உட்கார்ந்திருந்த குண்டர்கள் திகைத்துப் போய் அவளை விட்டுவிட்டுக் கையிலிருந்த ஸ்டென் துப்பாக்கியை பஸ்ஸை நோக்கிக் குறி வைத்தார்கள்.

சாதாரண நிலையிலிருந்தால் அவள் என்ன பண்ணி யிருப்பாளோ தெரியாது. ஆனால் மரணத்தின் பிடிக்கு வந்து விட்டிருந்ததால் ஏற்பட்டிருந்த துணிச்சலால், வத்சலா, அவர்கள் தன்னை விட்டு விடவே அந்த வேகத்தில் கீழே சரிந்து உருண்டு விழுந்தாள். இவ்வளவு ரகளை நடந்த போதிலும் கலக்கமடையாமலிருந்தவன் ராமு ஒருத்தன்தான். இச் சூழ்நிலைகளை அவன் இதற்கு முன்பே ஓரிரு முறை கண்டிருக்கிறான்...ஆனால் அவன் ஜீப்பைத் தாண்டிக் கொண்டு பஸ் போய்விடும் என்றெண்ணினான். அருகிலிருந்த ஸ்டென் துப்பாக்கியை எடுத்துக் கொண்டு ஜீப்பிற்கு அந்தப் பக்கமாய் கீழே இறங்கினான்.

அதுவரையிலும் அவன் ஊகித்தாற்போலவே பஸ்ஸை ஓட்டிக் கொண்டு வந்த பில்வன் அவ்விடம் வரையிலும் வந்து சேர்ந்ததும், சட்டென்று ஸ்டீரிங்கை இந்தப் பக்கமாய் திருப் பினான்.

பஸ் வேகமாய் வந்து குண்டப்பா உட்கார்ந்திருந்த ஜீப்பை ஒரு பக்கமாய் தாக்கிற்று. காதைப்பிளக்கும் சப்தத் துடன் ஜீப் காற்றில் எழும்பி கீழே உருண்டது. ஜீப்பிற் கடியில் சிக்கிக்கொண்ட ஆளின் அலறல் காற்றோடு கலந்து ஓய்ந்தது. ஜீப்பிற்குள்ளிருந்தவர்கள் என்ன ஆனார்கள் என்று தெரியவில்லை. அவர்களின் அலறலை பஸ் சப்தம் விழுங்கிவிட்டது. பஸ்ஸிற்குள் இருந்தவர்கள் என்ன ஆனார் கள் என்பதை பில்வன் பொருட்படுத்தவில்லை. அவன் பார்வை வத்சலாவின் மீதே இருந்தது. அவள் நகர்ந்து உருண்டு விழுந்ததைப் பார்த்ததுமே அவன் கைகள் மளமள வென்று கியரை மாற்றத் தொடங்கின. பஸ் பின்னுக்கு வந்தது.

பஸ் ஜீப்பைப் போய் முட்டியதையும், நிமிட நேரத்தில் அது பின்னுக்கு வந்ததையும் பார்த்த ராமுவுக்கு நடப்பது என்னவென்று தெரியத் தொடங்கிற்று. பஸ்ஸை ஓட்டிக் கொண்டிருந்த ஆள் தப்பித்து ஓடிப் போய்விடுவதற்கு முயற்சி

பண்ணவில்லை என்றும், தம்மை எதிர்க்கத்தான் வருகிறார்கள் என்றும் புரியவே, படபடவென்று ஸ்டென் துப்பாக்கியை எடுத்து சுடத் தொடங்கினான். பில்வனுக்கு முன்னாலிருந்த கண்ணாடி உடைந்து தூள் தூளாயிற்று. அதற்குள் வத்சலாவிற்கருகிலிருந்த குண்டர்கள் கூட தம் துப்பாக்கிகளால் பஸ்ஸை நோக்கி குண்டு மாரி பொழியத் தொடங்கினார்கள். ஆனால் அது ஒரு வினாடி நேரந்தான்.

பஸ்ஸின் கதவுக்கருகிலேயே நின்றபடி அதுவரையிலும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ரஜினி, ஜீப் கீழே விழுந்ததைப் பார்த்துவிட்டு துப்பாக்கியால் சுட்டான். இரு குண்டர்கள் அலறிய படி கீழே சரிந்தார்கள். அவர்களின் கைகளிலிருந்த துப்பாக்கிகள் கீழே விழுந்தன. அவ்வளவு வேகமாய் பஸ் பின்னுக்குப் போய்க்கொண்டிருந்த போதிலும் சட்டென்று ரஜினி கதவைத் திறந்து கொண்டு கீழே குதித்தான். கீழே விழுந்துகிடந்த ஜீப்பைப் பார்த்துச் சுட்டான். ஜீப்பிற்குள்ளிருந்து மெல்ல வெளியே வந்து டிரைவிங் சீட்டிலிருந்த பில்வனைப் பார்த்து துப்பாக்கியால் குறிவைத்துக் கொண்டிருந்த குண்டப்பாவின் தோளில் போய்தைத்துக் கொண்டது துப்பாக்கிக் குண்டு. எவ்வளவோ கொலைகளை சாமர்த்தியமாய் பண்ணியிருக்கும் அந்த ரௌடியே கூட எதிராளியின் சாமர்த்தியத்தைப் பார்த்து அதிர்ச்சியடைந்தவனாய் கொஞ்ச நேரம் அப்படியே இருந்து விட்டான்...

அதற்குள் ரஜினி ஜீப்பிற்குப் பின்னால் போய், ஜீப் சக்கரங்களுக்குக் கீழேயிருந்து இன்னொரு முறை ராமுவின் கால்களை நோக்கிக் குறிப்பார்த்துச் சுட்டான். விகாரமான அலறலுடன் ராமு கீழே சரிந்தவன், சந்துவழியாய் கீழே இருந்த ரஜினியைப் பார்த்து விட்டு உயிருக்கு அஞ்சி அருகிலிருந்த புதருக்குள் ஓடி மறைய முயன்றான். ஆனால் அந்தப் பக்கத்தில் கிடுகிடு பள்ளமொன்று இருந்ததை அந்த அவசரத்தில் கவனிக்கத் தவறிவிட்டான்.

பின் நோக்கி வந்த பஸ்ஸை நிறுத்தாமலேயே டிரைவிங் சீட்டிலிருந்து பில்வன் குதித்ததால் பஸ் பெரிய குலுங்கலுடன் நின்றது. பஸ்ஸிற்குள்ளிருந்தவர்கள் போட்ட கூக்கூரல் சப்தம் காதைப் பிளந்தது. அவன் அதைப் பொருட்படுத்தாமல் ஜீப்பிற்கருகில் ஓடிப்போய் அதில் ஏறி உட்கார்ந்து கொண் டான். அதற்குள் ரஜினி கீழேயிருந்து பின்பக்கமாய் வெளியே வந்து அதே வேகத்தில் வத்சலாவை ஒரு பொம்மையைத் தூக்கிச் செல்வதுபோல அலாக்காய் தூக்கி ஜீப் பின் சீட்டில் தள்ளிவிட்டு, தானும் ஏறி உட்கார்ந்துகொண்டான். அவன் உட்கார்ந்ததும் ஜீப் நகர்ந்ததும் கண்மூடித் திறப்பதற் குள் நிகழ்ந்து முடிந்து விட்டன. எஞ்சிய குண்டர்கள் தம் ஆயுதங்களைப் பொறுக்கி எடுத்துக் கொள்வதற்குள் ஜீப் வேகமாய் பறந்தோடி மறைந்து விட்டது.

அந்த இருவரும் சுமார் அரைமணிநேரம் வாதாடி, ஒரு திட்டத்தை உருவாக்கி எவ்வளவோ சாமர்த்தியமாய் நிறை வேற்றிய அந்த இரண்டு நிமிட தாக்குதலில் இம்மி பிசகியிருந் தாலும் இருவருமே மரணத்தின் பிடியில் சிக்கியிருக்க வேண்டி யதுதான். அவ்விரண்டு நிமிடமும் இயந்திரத்தைப் போல இயங்கினார்கள் அவ்விருவரும்.

## 20

''ரொம்ப அதிர்ச்சியடைந்திருக்கிறாள் இந்தப் பொண்ணு ''என்றான் பில்வன், நினைவற்றுக் கிடந்த வத்சலாவைப் பார்த்து, அபாயத்திலிருந்த வரையிலும் அவள் உயிருக்காக அஞ்சி ஓடிக் கொண்டேயிருந்தாள். கடைசியில் விஷவலையத்திற்குள் சிக்கி ஏறக் குறைய உயிர் போய்விட்ட நிலைக்கும் வந்து விட்டாள். அவள் கண் முன்னாடியே ரத்த

வெள்ளம் பெருக்கெடுத்தோடியது. இறுதியில் எப்படியோ காப்பாற்றப்பட்டு விட்டாள்.

ஒருமுறை தான் காப்பாற்றப் பட்டு விட்டோம் என்று தெரிந்ததுமே— அதுவரை அனுபவித்துக் கொண்டிருந்த உணர்ச்சிப் பரபரப்பு நினைவு தப்பச் செய்து விட்டது அவளை. அருகில் சாய்ந்து, ரஜினியின் தொடையின் மேல் தலையை வைத்துக்கொண்டு கண்களை மூடியவாறு அப்படியே உறக்கம் போன்ற மயக்கத்தில் ஆழ்ந்து விட்டாள். ஜீப் அடுத்த ஊரை அடைந்ததோ, அதை அங்கேயே விட்டு விட்டு டாக்சியில் நகரத்திற்குத் திரும்பி வந்ததோ, தம்மை டாக்சிக்காரன் அடையாளம் தெரிந்துகொள்ளாமலிருப் பதற்காக மருத்துவமனைக்கு அருகிலேயே அதை நிறுத்தி, அவளை உள்ளே அழைத்துச் செல்வது போல நடித்துவிட்டு, அங்கிருந்து வெளியே வந்து இன்னொரு டாக்சி மாறி திரும்பி வந்ததோ அவளுக்குத் தெரியவே தெரியாது.

ரஜினியின் அறையிலுள்ள கட்டிலில் அவளைப் படுக்க வைத்ததும், சிகரெட்டைப் பற்றவைத்துக் கொண்டே சொன்னான் பில்வன்— "ரொம்ப சாகசம் பண்ணிட்டோம் ரஜினி! நம்மை மட்டும் அவங்க அடையாளம் தெரிந்திருந் தால் நாளைக்கு இந்த நேரத்திற்குள் நம் கதி அதோ கதிதான்."

ரஜினி பதில் பேசவில்லை. பில்வனே சொன்னான். "ஒரு பெண்ணிற்காக இரண்டு ஜீப்புகளில் துப்பாக்கிகளோடு வந்து, நடு வழியில் பஸ்ஸை நிறுத்தி, இவ்வளவு சீனை ஏற்படுத் தியிருக்காங்கன்னா, இந்தப் பெண்ணு ஏதோ சாதாரண பெண்ணாய் இருந்திருக்காது. அவங்களிடமிருந்து தப்பி ஓடிப்போன காபரே டான்சராயிருக்கணும், அல்லது அவங்க ளோடு கூட இருந்து நடித்திருக்கும் போலீசு உளவாளியாக வாவது இருந்திருக்கணும். ஆனால் இந்தப் பெண்ணைப் பார்த்தால் அவ்வளவு துணிஞ்சவளாய் தோணலை—"

அதற்குள் வத்சலா, கண்ணைத்திறந்தாள். ''எப்படியிருக்கு?'' என்றான் பில்வன். ரஜினி ஃப்ரிட்ஜிலிருந்து குளிர்ந்த நீரை எடுத்து வந்து அவளுக்குக் குடிக்கத் தந்தான். அவள் தண்ணீர் குடித்ததும், ''உம், சொல்லு, யார் நீ? உனக்கும அவங்களுக்கும் என்ன சம்பந்தம்?''

அவள் பதில் சொல்லவில்லை.

பில்வன் இடைபுகுந்து, ''பொண்ணு! மதுரை பஸ் சார்ஜை நீ எங்களுக்குத் தரணும், நாலு துப்பாக்கிக் குண்டுகளின் விலையையும் தந்துடணும். அந்த கைமாறுக் காகவாவது நீ நடந்ததைச் சொல்லத் தவறக்கூடாது.''

வத்சலா யோசித்துப் பார்த்தாள். ஒருகால் இது இன்னொரு ரௌடிக் கூட்டமாயிருக்குமோ? ரஜினியைப் பார்த்தால் அப்படித் தோன்றவில்லைதான். நடு வீதியில் துப்பாக்கிகள் மாறி மாறி வெடித்த சப்தங்கள் இன்னும் அவள் கண் முன்பு மிதந்து கொண்டிருந்தது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் அவளுக்குத் தெரிந்த விஷயத்தை இவர்களுக்குச் சொல்லி விட்டால்—இன்னும் எந்த மாதிரி ஆபத்தில் சிக்கிக் கொள்ள வேண்டியிருக்குமோ?

''வீட்டை விட்டுப் புறப்பட்டதிலேருந்தே ஒரு ரௌடி பின் தொடர்ந்து வந்தான். பஸ் ஸ்டாண்ட் வரைக்கும் வந்துட்டுப் போயிடுவான்னு நினைச்சிட்டிருந்தேன். இந்த மாதிரி நடக்கும்னு நினைக்கலை'' என்றாள்.

பில்வனும் ரஜினியும் சிரித்தார்கள்.

''நீ ஒரு அழகியாகவே இருக்கலாம் பெண்ணே, ஆனால் உயிரைத் துரும்பாய் மதித்து ரோடில் ஜீப்பையும் ஸ்டென் துப்பாக்கியையும் ஏந்திட்டு வழியில் வந்து உன்னைப் பிரிதிவிராஜன் போல தூக்கிக்கிட்டுப் போற அளவுக்கு கதையில் வரும் நாயகி இல்லை என்பது என் உத்தேசம்.

விஷயத்தைச் சொல்லாவிட்டால் போ. உன்னால் நடக்க முடிந்தால் நீ போய்க்கொள்ளலாம். எங்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை'' என்றான் பில்வன்.

வத்சலா தலை குனிந்தாள். எங்கே போவாள் அவள்? கடைசியில் சொன்னாள். ''நீங்க எனக்குப் பண்ணிய உதவிக்கு நன்றி. இதே மாதிரி இன்னும் கொஞ்சம் உதவ முடியுமா?''

''என்ன?''

''நூறு அல்லது இருநூறு தரமுடியுமா? திருப்பி உத்யோகத்தில் சேர்ந்ததுமே தந்துடறேன்.''

''ஓஹோ, வீட்டை விட்டு ஓடிப் போகப் போறயா?''

அவள் பேசவில்லை.

''உத்யோகம் ரெடியாய் இருக்கா?''

''இல்லை, தேடிக்கணும்.''

''மதுரையில் உனக்கு யார் வேலை தரப்போறாங்க?''

''எங்கேயாவது சரி— எந்த ஊராயிருந்தாலும் பர்வாயில்லை. இங்கேயிருந்து உடனே போயிட்டால் போதும்.''

''ஏன்?''

அவள் பதில் பேசவில்லை.

''குண்டப்பா, ராமு, இவங்களுக்கும் உனக்கும் என்ன சம்பந்தம்? ஒன்றுமில்லைன்னு சொல்லிடாதே. உனக்குப் பொய் கூட சரியாய் சொல்ல வராது.''

''ஒன்றுமில்லை.''

''இப்போ இன்னொரு ஊருக்கு எப்படிப் போவாய்?''

''பஸ்ஸிலோ அல்லது ரயிலிலோ.''

ரஜினி சிரித்தான். 'இதற்குள் நகரம் முழுவதுமுள்ள எல்லா கூட்டத்தாருக்கும் நடந்ததெல்லாம் தெரிந்து போயிருக்கும். அவங்க எங்களை அடையாளம் கண்டுக்க முடியாது. ஆனால் உன்னை...? உனக்காக மதுரை மட்டுந் தானா, கன்யாகுமரியிலேருந்து, திருச்செந்தூர் வரை எல்லா இடங்களிலும் காவல் வெச்சிருப்பாங்க.''

வத்சலாவின் உடல் வெல வெலத்துவிட்டது. ''அப்படீன்னால் என்ன பண்றது?'' என்றாள்.

''அதனால்தான் உண்மையைச் சொல்லச் சொல்றேன்.''

அதற்குமேல் அவளால் தாக்குப்பிடிக்க முடியவில்லை. மெதுவாய் சொன்னாள். ''இன்றைக்குப் பேப்பரில் ஆசுபத்திரியில் நடந்த கொலைகள் சம்பந்தப்பட்ட செய்தி களைப் படிச்சிருப்பீங்க. அந்தக் கடிதத்தை எடுத்தது நான் தான்...''

கேட்டுக் கொண்டிருந்த இருவரும் அதிர்ந்து விட்டார்கள்.

''அப்படீன்னால்...அப்படீன்னால்...''

''வசந்த் தாதாவைப் பற்றித் தெரிஞ்சுண்டிருப்பது நான் தான்...''

பில்வனின் வாயிலிருந்த சிகரெட் நழுவி விழுந்தது.

ரஜினி குழப்பத்தோடு அவளைப் பார்த்தான்.

வசந்த் தாதா...வ...சந்த்...தா...தா...!

ரஜினி ஏதோ சொல்லப் போனான். பில்வன் அவனைத் தடுத்துவிட்டு, ''ஒரு நிமிஷம் இப்படி வா'' என்று பக்கத்து அறைக்குக் கூட்டிச் சென்றான். வத்சலா அவ்வறையில் தனித்து விடப்பட்டாள். அவர்கள் உள்ளே பேசிக்கொண்டது என்னவாயிருக்கும் என்பது அவளுக்குத் தெரிந்ததுதான்.

வசந்த் தாதாவின் பெயரைக் கேட்டதுமே அவர்களின் முகத்தில் தோன்றிய மாறுதலைக் கண்டறிந்து விட்டான் அவன்.

அவன் யூகித்தது உண்மையே! உள்ளே சம்பாஷணை நடந்து கொண்டிருந்தது.

''ரஜினி, அநாவசியமாய் நாம் இதில் சிக்கிக்கிட்டோம் ஏதோ சண்டைன்னு நினைச்சோமேயன்றி இதுக்குப் பின்னால் டில்லி-தாதா இருக்காருன்னு நினைக்கலை. எவ்வளவு சீக்கிரத்தில் இந்தப் பெண்ணைக் கைகழுவிக்கிறோமோ அவ்வளவு நல்லது.''

ரஜினி பதில் பேசவில்லை. அலைகள் வந்து வந்து மோதுவதுபோல அவன் மனதில் வத்சலாவின் முகமே திரும்பத் திரும்ப வந்து கொண்டிருந்தது பஸ்ஸிற்குள் இரு ரௌடிகளும் வந்து மிரட்டியபோது அவள் முகத்தில் தென்பட்ட பயமும், அந்த அகன்ற கண்களில் தெரிந்த அச்சமும் ஒரு புகைப்படத்தைப் போல அவன் மனதில் பதிந்து போய் விட்டிருந்தன.

பில்வன் அவன் முகத்தைப் பார்த்து வேறுவிதமாய் புரிந்து கொண்டான்.

''ஒருகால் இவள் உயிரோடு அவங்க கையில் அகப்பட்டால், நமக்கு இந்த விஷயம் தெரியுங்கற விஷயத்தை அவங்களிடம் சொல்லிடுவாளோன்னு பயமா? அந்த பயமெல்லாம் தேவையில்லை. சங்கரிடம் நான் பேசிக்கிறேன்.''

ரஜினி மறுத்துத் தலையசைத்தான். ''அந்த பயமெல்லாம் தேவையில்லை...நமக்குத் தெரிந்தாலும் அந்த விஷயத்தைப்பற்றி மாஃபியா பொருட்படுத்தாது. நமக்குத் தெரிந்த விஷயத்தை சுயநலத்துக்காக எங்கேயாவது பயன்படுத்துகிறோமான்னு மட்டும் கவனித்து வரும். நமக்கு அந்த

மாதிரி உத்தேசம் கிடையாதுன்னு தெரிந்ததுமே மறந்துடும்.
ஆனால் இந்தப் பெண்...''

அவன் அவ்வாறு சொல்லி முடித்ததுமே வெளியறையி லிருந்து தேம்பித் தேம்பி அழும் சப்தம் கேட்டது. இருவரும் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக்கொண்டே வெளியே வந்தார்கள்.

பெஞ்சியில் தலையைக் கவிழ்த்துக்கொண்டு தேம்பித் தேம்பி அழுதுகொண்டிருந்தாள் வத்சலா! அவள் மேனி நடுங்கிக் கொண்டிருந்தது! அந்த நிலை எவ்வளவு கடின இதயம் படைத்தவர்களுக்கும் இரக்கத்தை வரவழைக்கத் தவறாது. யாருமே ஒன்றுமே பண்ணிவிட முடியாத நிலை.

இரண்டு நாள் வேதனையெல்லாம் கண்ணீர் வடிவத்தில் வெளியேறி, அவள் சோர்வுடன் ஒருவாறு தேறியபிறகு சொன்னான் பில்வன்...''பொண்ணு! உன்மேல் எங்களுக்கு இரக்கம் இருக்கிறது நிஜந்தான்! ஆனால் எதிரியோ ஊகித் துணர முடியாத பலசாலி! இப்போதே எங்களுக்கு இந்த விஷயம் தெரியாமல் அநாவசியமாய் இதில் காலை வைத்துட் டோம். நீ இங்கே அதிகநேரம் இருப்பதுகூட ஆபத்துதான்...'' அவன் அதை முடிக்கக்கூட இல்லை. அவள் கண்களில் குபுக் கென்று கண்ணீர் நிரம்பிற்று.

''நா...ன்... நா...ன்... எங்கே போறது?'' என்றாள் தீனமாய்.

ரஜினி அந்தக் காட்சியைக் காண சகிக்காதவனாய் ஜன்னலுக்கருகில் போய் வெளியே பார்த்துக் கொண்டிருந் தான். ஏதாவது பண்ணி அவளைக் காப்பாற்ற முடிந்தால் நன்றாயிருக்கும்! ஆனால் உலகமே ஒன்று கூடி வந்தாலும் அவளைக் காப்பாற்ற முடியாது. அந்த விஷயம் மாஃபி யாவைப் பற்றித் தெரிந்த எல்லோருக்குமே புரியும்.

''எங்கே போனாலும் அவங்க என்னை விடமாட்டாங்க.'' திரும்பவும் அவளே சொன்னாள்.

''கோவாவுக்குப் போனால் நன்றாயிருக்கும். கோவா வில் போதைப் பொருட்களை கடத்தல் பண்ணும் கூட்டம் வேறு...! அதற்கும் தாதாவின் மாஃபியாவிற்கும் அவ்வளவாய் சம்பந்தமில்லை. அது வேறு கும்பல். அங்கே போனால் உன்னை யாருமே பொருட்படுத்தமாட்டாங்க'' என்றான் பில்வன்.

ரஜினி பொறுமையின்றி ஜன்னல் கம்பிகளைப் பிடித்துக் கொண்டு நின்றிருந்தான், கோவா மாஃபியாவைப்பற்றி பில்வன் கொஞ்சம் பொய் சொல்கிறான். ஆனாலும் இத்தனை அப்பாவியாய் தென்படும் இந்தப் பெண் தன்னந் தனியாய் கோவாவைப் போன்ற ஊரில் எப்படி வசிக்க முடியும்?

அதற்குள் பில்வன் சொன்னான். ''பொண்ணு! உனக்கு ஒரு ரெண்டாயிரம் ரூபாய் வரை தரோம். எப்படியோ யார் கண்ணிலும் படாமல் உன்னை இந்த ஊர் எல்லையைத் தாண்டி கொண்டு போய் விட்டுடறோம். இவ்வளவு பண்றது கூட உயிரோடு சவால் எடுத்துக்கற விஷயந்தான்! ஆனால் உன்னைப் பார்க்கிறப்போ காற்றில் அணையும் தீபத்தைப் போல விட்டுடத் தோணலை. இதற்கு மாறாய் நீ இரண்டு உதவிகளை பண்ணணும். ஒன்று—ஒருக்கால் நீ அவங்க கையில் சிக்கினால், உயிரை எடுக்கும் சித்திரவதை பண்ணினால், உன்னை பஸ்ஸிலிருந்து காப்பாற்றியதும், கோவாவுக்கு அனுப்பி வைத்ததும் நாங்கதான்னு சொல்லிடக் கூடாது... இது முதலாவது. இரண்டாவது—குறைந்தபட்சம் இன்னும் நாலைந்து வருடமாவது நீ உன் தாய் தந்தையரைச் சந்திக்கவோ கடிதம் எழுதவோ கூட முயற்சிக்கக் கூடாது...'' என்றவன் சற்று நிறுத்தி. ''ஊஹூம். நாலைந்து வருட மில்லை. குறைந்தது பத்து வருடமாவது உன்னைப் பற்றியே யாருக்கும் தெரியக்கூடாது. இந்த ரெண்டு விஷயங்களையும் பின்பற்றுகிறேன்னு சத்தியம் பண்ணினால், எஞ்சிய ஏற்பாடு களை நான் பண்றேன். வைதீகக் குடும்பத்தில் பிறந்தவளாத லால் சத்தியத்தை நம்புவாய்னு நினைக்கிறேன்.''

அவள் பேசவில்லை. அவள் மௌனத்தை சம்மதமாய் எடுத்துக்கொண்டு பில்வன் ரஜினியைப் பார்த்து, ''இப்படி வா'' என்று திரும்பவும் பக்கத்து அறைக்குக் கூட்டிச் சென்றான். உள்ளே போனதும், "ரஜினி, நாம்ப ரொம்ப ரிஸ்க் எடுத்துக்கிறோமோன்னு தோணுது. இந்தப் பெண்ணைப் பார்த்தால் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுகிற தைரியம் இருப்பவளாய் தோணலை. நாளைக்கு அவங்க கையில் சிக்கி, விஷயத்தை வெளிப்படுத்திட்டாளானால்—அவங்க ஜீப்பை நாசம்பண்ணியதற்கும், அந்த குண்டப்பா, ராமுவைத் தாக்கியதற்கும் நம் உயிர் நிலைக்காது. சித்திரவதை பண்ணி மேலும் கக்க வைத்துடுவான் அந்த தாதா. ஏதோ ஆலோசனையைச் சொல்லிட்டேனேயன்றி, நாமும் இதில் சிக்கி விட்டோம்னு தோணுது. இந்த ஆலோசனை சொன்னதற்காக பிற்பாடு ஏதாவது தொல்லை வந்தால் என்னை நிந்திக்காதே. வேறுவழி ஏதாவது உனக்குத் தெரிந்தால் சொல்லு.''

வெகு நேரங்கழித்து வாயைத் திறந்த ரஜினி, ''வேறு வழி என்றால்?'' என்றான்.

''கடுமையாயிருந்தாலும் நாம் தப்பிச்சுக்க ஒரு வழியிருக்கு...''

''என்ன வழி?''

''இந்த விஷயம் நமக்குத் தெரிந்துடுத்துன்னு வசந்த் தாதாவிடம் சொல்லிவிடுவது ஒன்றுதான்.''

''பில்வா, அந்தப் பெண்ணைப் பார்த்தால் எனக்கு என்ன தோணுது தெரியுமா? வெண்மையான புறா ஒன்று தான் நினைவுக்கு வருது. ரொம்ப அடக்கமான புறா அதை —போயும்... போயும்...'' அதற்கு மேல் பேசமுடியாதவனானான் ரஜினி.

''ஆனால் அதற்குப் பிறகு வரப்போகும் விளைவுகள்?''

"பஸ்ஸை ஓட்டிட்டுப் போய் ஜீப்பின் மேல் மோதினப்ப அதைப்பற்றி யோசிக்கலையா பில்வா நீ?"

"அப்போ நாம் இதுக்குப் பின்னால் வசந்த் தாதா இருக்காருன்னு தெரிஞ்சுக்கலையே! ஏதோ ராமு, குண்டப்பா இவங்க சொந்த கடத்தல் விவகாரம்னு நினைச்சு அவங்களுக்குப் பாடம் கற்பிச்சோம். ஆனால் வசந்த் தாதாவைப் பற்றி உனக்கா தெரியாது? நகரத்தின் ஒரு மூலையில் ஒரு சின்ன வியாபாரம் பண்ணிண்டிருக்கிறவங்க நாம்ப. நம்ம வழியில் நாம்ப போகாமல் இந்த வசந்த் தாதாவின் தொல்லை எல்லாம் நமக்கெதற்கு?"

ரஜினி ஏதோ சொல்ல வந்தபோது இண்டர்காமில்— "உங்களைத் தேடி யாரோ வந்திருக்காங்க சார். ஏதோ கவராம். உங்களிடம் சுயமாய் தரணும்னு வந்திருக்காங்க" என்று கேட்டது. ரஜினி கீழே போய் கவரை வாங்கிக்கொண்டு "யார் அனுப்பினாங்க இதை?" என்றான்.

"தெரியாது சார். நேராய் உங்களிடமே தரச்சொன்னாங்க."

## 21

கவரை வாங்கிக்கொண்டு மேலே வந்தபடியே உறையை கிழித்தான். உள்ளே மூன்று பக்கங்களில் கடிதம் இருந்தது. கடைசியில் கையெழுத்து இல்லை. பெயரும் டைப் அடிக்கப் பட்டிருந்தது 'அனுஷா' என்று.

"ரஜினி! இப்பொழுது இரவு ஒன்பது மணி. இன்னும் ஒருமணி நேரத்தில் எனக்கு ஜாமீன் கிடைத்து வெளியே

வந்துவிடுவேன். இந்த இன்ஸ்பெக்டர் மிகவும் நல்லவர். பொழுது போகவில்லை என்றதுமே பேனாவும் பேப்பரும் கொடுத்தார். டைப் மிஷினைக் கூட தந்தார். இக்கம்பிகளுக் கிடையே உட்கார்ந்துகொண்டு இந்தக் கடிதத்தை டைப் செய்கிறேன். அப்பொழுதுதான் சங்கர் வந்தான். அதான் சொன்னேனே இன்ஸ்பெக்டர் நல்லவரென்று. வந்ததுமே மரியாதையுடன் வரவேற்று வெளியே போனார். சென்ட்ரியை தேநீர் குடிக்க அனுப்பிவிட்டார். எஞ்சியவர்கள் என்ன வானார்களோ தெரியாது.

அந்த விதத்தில் சங்கர் ஜெயித்துவிட்டான். போலீஸ் ஸ்டேஷனில் இன்ஸ்பெக்டரின் மேஜையின் மேல் நான் உன்னை ஜெயிக்கிறேன் என்று அவன் செய்த சபதத்தை மிகச் சர்வ சாதாரணமாய் நிறைவேற்றிக் கொண்டான். அந்த உயிரற்ற சுவர்களும், சமூகத்தைக் காப்பாற்ற வேண்டிய லாட்டி கழிகளும், துப்பாக்கிகளும் கூட அந்தந்த இடத்தில் எப்பொழுதும் போலவேதான் இருந்தன. அந்த மேஜையின் மேல் என் பக்கத்திலேயே இந்தியன் பீனல் கோட்புத்தகம் இருந்தது கூட இயற்கைதான் என்றெண்ணுகிறேன். அவன் சிரித்துக்கொண்டே பெல்ட்டைக் கழற்றினான்.

''ஊஹூம், இங்கேயில்லை, உனக்கு இன்னும் திமிர் அடங்கினதாய் தெரியலை. இன்னும் கொஞ்சம் அவகாசம் தரேன். இம்முறை நின்றுவிட்ட இந்த வேலையைப் பகிரங்க மாய் அசெம்பிளி மேடையிலேயே நிறைவேற்றுகிறேன் பார். உன் சக்தியின் மேல் உனக்குக் கொஞ்சமாவது நம்பிக்கை இருந்தால் உன்னை நீ காப்பாற்றிக்கொள். இல்லாவிட்டால், என்னுடைய அல்லது வசந்த் தாதாவின் இடுப்பைப் பிடித் துண்டு (கால்களை இல்லையாம் இங்கே கூட புரிந்ததா?) மன்னிக்கும்படி வேண்டிக்கொண்டால் உன்னை விட்டுடறேன்'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டான்.

சந்தோஷப்படுகிறீர்களா ரஜினி? அம்மாடா, ஒன்றும் ஆகிவிடவில்லை என்று நிம்மதியாய் மூச்சு விட்டுக் கொள்

கிறீர்களா? கழுத்து வரைக்கும் வந்துவிட்ட ஆபத்தை கொஞ்சம் தப்பித்துக் கொள்ளச் செய்து, காப்பாற்றப்பட்ட தால் இந்த கற்பின் மீதே எனக்கு நம்பிக்கை இல்லை. அவனுடைய தயவு தாட்சண்யத்தாலோ அல்லது என்னை மேலும் சில நாட்கள் சங்கடத்தில் ஆழ்த்தி சந்தோஷப்பட வேண்டும் என்ற அவன் சினிகல் மனோநிலையாலோ காப் பாற்றப்பட்ட இந்த கற்பு, அவ்வாறு காப்பாற்றப்பட்டிராமல் பறிபோயிருந்தால் நான், அம்மாடா, எல்லாமே முடிந்து தொலைந்தது என்று நிம்மதியாய் பெருமூச்செறிந்து தற் கொலை பண்ணிக்கொண்டோ அல்லது அசெம்பிளிக்கு இவ்விஷயத்தை இழுத்தடித்து பத்திரிகைகளின் சர்க்குலே ஷனை உயர்த்தியோ இருப்பேன்!

நான் உடனே அசெம்பிளி மேடையே இல்லாத டில்லி போன்ற எந்த யூனியன் பிரதேசத்திற்காவது ஓடிப்போய்விட வேண்டும். துரதிர்ஷ்டவசமாய் எந்த அசெம்பிளி மேடையில் அவன் இந்த அசுவமேத யாகத்தை மேற்கொண்டிருக்கிறான் என்றோ, இதேபோல எவ்வளவு நாட்களுக்குள் நான் அவர் களின் இடுப்புகளைப் பிடிக்க வேண்டும் என்றோ கெடு கூடத் தரவில்லை. அதனால் அவசரமாய் நான் ஏதேனும் ஒரு முடிவை எடுத்துக்கொண்டுவிடவேண்டும். எனக்கென்னவோ சங்கரைவிட தாதாவே மேல் என்று தோன்றுகிறது. நாட்டு மக்கள் எல்லோருமாய் சேர்ந்து பழைய வரலாற்றிற்கு ஆதாரமாய், பழைய அனுபவங்களைப் பிழிந்து ஜனநாய கத்தைக் காப்பாற்றுவதற்காகப் பகிரங்கமாய் நிர்மாணித்துக் கொண்டுள்ள இந்தச் சமூகம் என்ற கோட்டையின் மேல் தாதா, சங்கர், குண்டர்கள் என்னும் குதிரைகளின் மேல் ஏறி, ரௌடியிசம் என்ற கத்தியைக் காட்டி தம் சாம்ராஜ்யத்தை செங்கோலோச்சிக் கொண்டிருக்கையில்—என்னைப் போன்ற பெண்கள் மானத்தைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டிக் கைகளைக் காற்றில் மேலே தூக்கி ஜெயஜெய கோஷமிடாமல் எந்த சக்தி காப்பாற்றவல்லது?

......காப்பாற்றக்கூடிய கொஞ்சம் சக்தியையுடைய ரஜினிகள் கூட தம் சாம்ராஜ்யத்திற்கு நஷ்டம் ஏற்படாமலிருந்தால் அது போதும் என்ற சுயநலத்தில் இருக்கும் போது... அசெம்பிளி மேடை இல்லாத இடத்திற்கு ஓடவேண்டிய தருணம் வந்துவிட்டது.

அன்பே! (முதல் முறை முத்தமிட்டவரை அவ்வாறு அழைக்கலாம் என்று எங்கோ படித்திருக்கிறேன்) பிறகு எப்பொழுதாவது சந்திப்போம்—

—"அனுஷா"

பி. எஸ்:- இக்கடிதத்தை நான் டைப் அடித்தற்குக் காரணம் இதை நீங்கள் யாரிடமும் காட்டி நிரூபிக்காமல் இருப்பதற்காகத்தான்! ருசுக்கள் இல்லாமல் வேலை பண்ணுவதற்கு வசந்த் தாதாவிடமிருந்து இப்பொழுதுதான் பழகிக் கொண்டு வருகிறேன்.

படித்து முடித்தான் ரஜினி. அவன் முகம் ஒரு மாதிரியாகி விட்டது.

கடிதத்திலிருந்த ஒவ்வொரு வார்த்தையும் வேட்டையில் ஓட்டம் பிடிக்கும் குதிரைகளைப்போல அவன் மூளையைச் சின்னா பின்னமாக்கிற்று. அவனையே பார்த்துக் கொண்டிருந்த பில்வன் கிட்டே வந்து, "என்ன ஆச்சு?" என்று கேட்டான்.

ரஜினி பதில் பேசவில்லை.

வத்சலாவும் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். அந்தக் கடிதம் அனுஷாவிடமிருந்து வந்ததாய் தெரிந்திருந்தால் என்ன ஆகியிருப்பாளோ தெரியாது. அப்பொழுதுதே தன் சொந்தப் பிரச்னையில் கழுத்து வரை மூழ்கிவிட்டிருந்த அப்பெண் அதைப் பொருட்படுத்தும் நிலையிலில்லை. சரியாய் அந்தச் சமயத்தில் டெலிபோன் ஒலித்தது.

''உங்களுக்காக யாரோ இரண்டு பேர் வந்திருக்காங்க சார்.''

''இல்லைன்னு சொல்லு'' போனை வைத்துவிட்டான்.

இரண்டு நிமிஷங்களுக்குப் பிறகு திரும்பவும் ஒலித்தது.

''உள்ளே வந்து உட்கார்ந்திருக்காங்க. வரும் வரையிலும் இருக்காங்களாம்.''

ரஜினி அலுப்போடு கீழே இறங்கிப் போனான்.

கீழே சோபாவில் உட்கார்ந்திருந்த அவ்விருவரையும் பார்த்தவன் கடைசி படியிலேயே நின்று விட்டான்.

ராமுவும் குண்டப்பாவும் அங்கே உட்கார்ந்திருந்தார்கள். ராமுவின் முகத்தில் அங்கங்கே பிளாஸ்திரி இருந்தது. குண்டப்பாவின் கையில் பாண்டேஜ் போடப்பட்டிருந்தது எதிரேயிருந்த மேஜையின் மேல் அவர்களுடைய துப்பாக்கிகள் இருந்தன.

அரை நொடிக்குள் தேறிக் கொண்டான் ரஜினி. கையை நீட்டி, ''ஹலோ ராமு'' என்றான். ராமு தன் கையை நீட்டவில்லை.

''ரஜினி, நாம் ரொம்ப நாளுக்கு முன்னால் ஒரு தடவை சந்தித்திருக்கிறோம். நினைவிருக்கா?'' என்றான்.

''ஆம், ஏதோ விபச்சாரக் கேசில் என்று ஞாபகம்.''

ராமு பற்களைக் கடித்து, ''இல்லை, காவேரி நதிக் கரையில்'' என்றான்.

''உம் வயதாகிட்டிருக்கு. சரியாய் நினைவிருப்பதில்லை. என்ன விசேஷம்?''

''இதப்பாரு, இவன் பேர் குண்டப்பா. வசந்த் தாதாவின் வலது கை'' என்றான் ராமு, வசந்த் தாதாவின்

பெயரைச் சொன்னதுமே முகத்தில் தோன்றும் மாறுபாட்டைக் கவனித்தபடியே. இருந்தும் ரஜினியிடம் எந்த மாறுபாடும் தோன்றவில்லை.

''கிளாட் டு மீட் யூ'' என்றான் மெல்லக் கையை நீட்டி! குண்டப்பா தேவைக்கு மீறி அக் கையை அதிக சிநேக பாவத்தோடு பற்றுவது போல பற்றி அழுத்தினான். ராமு இடை புகுந்து, ''ரஜினி, நீ ஒரு உதவி பண்ணணும். தாதா உன்னைத்தான் கேட்கச் சொன்னார்'' என்றான்.

''தாதாவைப் போன்றவங்க என் பெயரை ஞாபகம் வைத்து சொல்லியிருக்காருன்னால் சந்தோஷப்படவேண்டிய விஷயந்தான். சொல்லு ராமு, என்ன பண்ணணும்?''

''இன்றைக்குக் காலையில் குண்டப்பா ஒரு கொலை பண்ணினான். அவன் உன்னிடம் இருந்ததாய் அலிபி தரணும்.''

''எவ்வளவு மணிக்கு?''

''காலையில் ஆறு மணியிலிருந்து பதினோரு மணி வரையிலும்.''

''கண்டிப்பாய் தாரேன்.''

குண்டப்பாவும் ராமுவும் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டார்கள். குண்டப்பா ரஜினியைப் பார்த்து, ''அந்த சமயத்தில் உன்னோடு யாருமில்லையே?'' என்றான்.

''இருந்தாங்க.''

''யாரு?''

''லட்சக்கணக்கான ஜனங்கள்.''

ராமுவின் முகத்தில் குழப்பம் தெரிந்தது. அதைப் பார்த்துவிட்டு ரஜினி விவரமாய் சொன்னான், ''காலையில் முதல் மந்திரியின் கொடி வணக்கம் நிகழ்ச்சிக்குப்

போனேன். அவர் கழுத்தில் மாலை கூட போட்டேன். ஆனாலும் பரவாயில்லை. குண்டப்பாவும் என்பக்கத்திலேயே தான் இருந்தான்னு சொல்றேன். லட்சம் பேர் சாட்சி!''

குண்டப்பா சங்கடத்துடன் முகவாயைத் தடவிக் கொண்டான்.

ராமு எழுந்து நின்று, ''வேண்டாம் ரஜினி. அந்த சாட்சியெல்லாம் அவ்வளவு பலமாய் இருக்காது, வேறு யாரையாவது பார்ப்பது நல்லது. போவோம் வா'' என்றான்.

ரஜினி அவர்களைக் கார் வரையிலும் போய் வழியனுப்பி வைத்துவிட்டு, ''தாதாவுக்கு இந்த விஷயத்தில் உதவ முடியாமல் போனதற்கு மனப்பூர்வமாய் வருத்தப்பட்டேன்னு சொல்லு, வேறு ஏதாவது விதத்தில் சாட்சிக்கு ஏற்பாடு பண்ணச் சொன்னால் பண்றேன்.''

''தேவையில்லை,''

ரஜினி உள்ளே வந்தபோது பில்வன் உள்ளேயிருந்து வெளியே வந்தான். அவனுக்குப் பின்னால் வத்சலாவும் வந்தாள். வந்துவிட்டுப் போன குண்டர்களை அவளும் பார்த்து விட்டிருந்தாள் போலிருந்தது. தொய்ந்து விட்டிருந்த அம்முகமே சொல்லிற்று.

''அவங்க நம்மை அடையாளம் கண்டுக்கிட்டாங்க அதனால்தான் காலையில் நாம். எங்கேயிருந்தோம்னு கண்டுக்கும் சாக்கில் வந்திருக்காங்க'' என்றான் ரஜினி.

''இருவரில் யாருக்குமே அதிகமாய் அடிபடலை போலிருக்கு. ஏதோ எலும்பு மட்டும் கொஞ்சம் முறிந்திருக்கும் போலிருக்கு. எனக்கு இப்பொழுது உடனே அந்த சங்கரைப் பார்க்கணும் போலிருக்கு. கையில் சிக்கிய பறவையைக் கொல்லாமல் ஏன் தப்பவிட்டிருப்பாங்கன்னு சந்தேகம் வருது, ஒருக்கால் இருபத்தி நாலு மணி நேரம் கெடு தந்திருக்கலாம்

அதற்காகத்தான் இவங்க இந்த மாதிரி கையில் பேண்டே ஜுடன் வந்திருப்பாங்க." என்றான்.

"இவங்களுக்கு நம்ப மேல் ஏன் சந்தேகம் வரணும்?"

"ஒருகால் பஸ் ஸ்டாண்டில் யாராவது பார்த்திருப்பாங்க ரஜினி! நாம்ப கூடிய சீக்கிரத்தில் இந்தப் பண்ணை இங்கேயிருந்து அனுப்பி வைக்க முயற்சி பண்ணணும்."

"தேவையில்லை."

பில்வன் ஆச்சரியமடைந்தவனாய், "ஏன்?" என்றான்.

"இந்தப் பொண்ணு நம்மோடேயே இங்கேயே இருந்துக் கட்டும்."

வத்சலா தன் செவிகளையே தான் நம்பமாட்டாதவளாய் நோக்கினாள். ரஜினி அவர்களைப் பார்க்கவில்லை. அவன் கண்கள் எங்கோ நிலைத்திருந்தன.

"பில்வா, நீ தமிழில் ரொம்ப கெட்டிக்காரன் இல்லையா. நாம் பண்றது தப்போ என்னவோன்னு மனம் குழம்பி வருத் தப்படறதை என்னம்பாங்க. ஒரே வரியில் சொல்லு."

"மனப் போராட்டம்."

"ஆங்...அந்த மனப் போராட்டந்தான் என்னுள் ரொம்ப நேரமாய் நடக்குது. பாவம் அனுஷாவை நினைச்சா தான் பாவமாய் இருக்கு."

சாதாரணமாய் கேட்டுக் கொண்டிருந்த வத்சலா திடுக் கிட்டு, "அனுஷாவா?" என்றாள் தன்னையறியாமல்.

ரஜினி அவளைப்பார்த்து, "ஏன் உனக்குத் தெரியுமா?" என்றான். வத்சலா தலையாட்டினாள். ரஜினி சொன்னான்—

"அனாவசியமாய் பெரிய ஆபத்தில் சிக்கியிருக்கிறாள் அவள். உண்மையில் அவள் செய்த தப்புதான் என்ன?

வசந்த் தாதா சம்பந்தப்பட்ட, ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் திட்டத்தைப்பற்றி விவரித்துக் கட்டுரை எழுதியதுதானே? அதற்குப் பிரதியாய் தாதா அவளை நன்றாய் அழவைக்கிறான்' என்றான் ரஜினி. அவன் முகத்தில் ஒரு விதமான பரிவு தென்பட்டதை கவனித்தாள் வத்சலா. தந்தையின் முகத்தில்கூட இதேபோன்ற மனப்போராட்டத்தை அவ்வப்பொழுது கவனித்திருக்கிறாள் அவள். பாதி கவிதையை எழுதிவிட்டு அவ்வளவு அபாரமாய் வந்துவிட்ட கவிதையைப் பார்த்துப் பார்த்து மிகுதி கவிதையை எப்படி முடிப்போம் என்று தெரியாமல் குழப்பமடைந்து, பிறகு அதை முடிக்கும் பொழுது அவர் முகம் எவ்வளவு பிரகாசிக்கும் என்பதையும், அவர் கண்களில் தென்படும் திருப்தியையும் கவனித்திருக்கிறாள். ஆனால் தந்தையுடையது இலக்கியம் சம்பந்தப்பட்டது. இவனுடையதோ சமூகம் சம்பந்தப்பட்டது. அதற்குள் ரஜினியே பேசினான்—

"அந்தப் பெண்ணின் வார்த்தைகள் என்னுள் ஒரு பெரிய முத்திரையைப் பதிப்பித்து விட்டது பில்வா! அவள் சொன்னது போல நாமெல்லோருமே கையாலாகாத கோழைங்கதான்! ஒரு பெண்ணை ஒரு சங்கர்—நான் உன்னை நாட்டில் எங்கேயானாலும் சரி - இறுதியில்போலீஸ் இன்ஸ்பெக்டரின் மேஜையின் மேலாவது சரி, அரசியல் தலைவரின் கூட்டம் நடக்கும் மேடையின் மீதாவது சரி—எங்கோ ஓரிடத்தில் அனுபவித்துத் தீருவேன்—என்று சவாலிட்ட போதும்கூட அவளைக் காப்பாற்ற ஒருத்தருமே—ஒரே ஒரு ஜீவன் கூட முன்வராது தன் வழியைத் தான் பார்த்துட்டுப் போயிடவேண்டியதுதான்! அவள் முதலிலிருந்தே சொல்லிக் கொண்டிருந்தாள்—நாம்ப தான்கேட்டுக்கலை... இப்பொழுது நடந்த சம்பவம் அவளுக்கு நேர்ந்ததில்லை. இந்த நாடு எவ்வளவு அனாதைன்னு காட்டுவதற்கு ஒரு உதாரணம்! இன்னொரு உதாரணம் இதோ இவன்! நீ சொன்னதுபோல அவன் பலத்தோடு ஒப்பிட்டால் நாம் ரொம்பச் சிறியவர்கள்தான். ஆனால் நாம் சாவதற்குள் அவங்க கூட்டத்திலிருக்கும் ஓரிருவரையாவது

கொன்னுட்டாவது சாவோம், அனுஷாவின் வார்த்தைப்படி சொல்லணும்னால்—ஏதோ ஒன்று எந்த மூலையிலிருந்தாவது தொடங்கித்தானே ஆகவேண்டும். அது இந்தப் பெண்ணைச் சாக்கிட்டு நம்மிடமிருந்தே தொடங்கட்டுமே! என்ன, சொல், நீ இதில் சேர்ந்துக்கிறாயா? எனக்குத் தேவையில்லைன்னு இந்த விஷயங்களை விட்டு ஒதுங்கிக் கொள்கிறாயா? பலவந்தப்படுத்தவில்லை பில்வா...உனக்கு எது பிடிக்குமோ சொல்லு.''

ரஜியின் வார்த்தைகளையும், வாதங்களையும் கேட்டபடி கண்கள் கசிய நின்றுகொண்டிருந்த வத்சலா இந்தக் கடைசி வார்த்தையைக் கேட்டு சட்டென்று பில்வனைத் திரும்பிப் பார்த்தாள்.

பில்வனின் முகம் வெகுநேரம் தீவிரமாயிருந்தது. பிறகு அதிலிருந்து மெல்ல முறுவல் பிறந்தது. ''ஓ.கே. ரஜினி... உனக்குத் துணையாய் நானும் இருக்கேன்...ஆனால் ஒரு விஷயம் சொல்றேன் கேளு. தலைமயிரைக் கட்டி மலையை இழுக்கப் போகிறோம்! நாட்டின் மிக பலம் வாய்ந்த மாஃபியாவோடு இரண்டு சுண்டெலிகள் மோதப் போகின்றன. அவ்வளவுதான்.''

## 22

எட்டு வயதிலிருந்து சின்னச் சின்ன ஜேப்படி திருடுகளைச் செய்து வந்தான். ஒரு முறை தன்னை எதிர்த்த இரு ரௌடிகள் பிளாட்பாரத்தில் உறங்கிக் கொண்டிருக்கையில் ஆசிடை அவர்களின் நிக்கருக்குள் ஊற்றி விட்டு ஓட்டமெடுத்தான். சுமார் இரண்டு பர்லாங்கு தூரம் வரையிலும் கேட்ட அவர்களின் அலறல் அவனுக்கு மிகத் திருப்தியளித்தது.

ஆனால் அதற்குப் பிறகு இரண்டு மணி நேரத்திற்குள் போலீசார் அவனைக் கைது செய்தனர்.

பாஸ்டல் பள்ளியிலிருந்து வெளியே வந்த போது அவன் வயது பதினெட்டு. பள்ளி அவன் வாழ்க்கையை மாற்றிவிட்டது. பிடிபடாமல் எப்படிக் குற்றம் புரிவது என்பதை சக மாணவர்கள் கற்றுத் தந்தார்கள். போலீசார்கள்—டீச்சர்கள் இவர்களின் சினிசிஸம் மனிதனுக்குள் இருக்கும் ராட்சதத்தனத்தை வெளிக்கொணரச் செய்தது. வெளியே வரும்போது தேர்ந்த குற்றவாளியாய் வெளி வந்தான். குப்பைத் தொட்டியில் எச்சில் இலையைப் பொறுக்கித் தின்னும் நிலையிலிருந்து இருநூறு கோடி ரூபாய் சொத்திற்கு அதிபதியாவதற்கு வசந்த் தாதா எவ்வளவோ அரும்பாடுபட்டிருக்கிறான்.

அப்படிப்பட்ட தாதா இப்பொழுது எரிச்சலோடு இருந்தான்.

ஒரு பெண்ணைப் பிடிக்க முடியாமல் சங்கர் மிகவும் தலைவேதனை கொடுத்து வருகிறான். காலையில் நடந்த சம்பவம் தெரிந்ததிலிருந்து தாதாவின் எரிச்சல் மேலும் அதிகரித்தது. பொதுச் சாலையில் நடந்த இந்தத் துப்பாக்கி விவகாரத்தைப் பத்திரிகையாளர்கள் மேலும் கொஞ்சம் திரித்துப் பத்திரிகைகளில் பிரசுரித்துப் புரட்சியை உண்டாக்கி வந்தார்கள். பத்திரிகைகளுக்கு தொலைவிலே இருந்து கொள்ள வேண்டும் என்ற தன் எண்ணத்திற்கு மற்றொரு முறை தடங்கல் வந்து சேர்ந்திருக்கிறது. அதற்குள் போன் ஒலித்தது. மறுமுனையிலிருந்து ராமு "என்ன ஏதாவது தடயம் கிடைத்ததா?"

"இன்னும் கிடைக்கலை தாதா."

"மடையன்கள்! என்னதான் பண்றீங்க அங்கே?" தாதாவுக்கு அவ்வளவு கோபம் வந்து பார்த்தது இதுதான் முதல் தடவை. ராமு தடுமாறிக்கொண்டே நடந்ததையெல்

லாம் சொல்லிமுடித்தான். இறுதியில் சொன்னான்—பஸ்ஸில் பிரயாணம் பண்ணுவோரிடம் துப்பாக்கி இருக்குமென்றோ, இருந்தாலும் இவ்வளவு வேகத்தில் வேலை பண்ணுவாங்கன்னும் எதிர்பார்க்காததால் இந்த மாதிரி ஆயிட்டுது தாதா.''

''அவ்வளவு வேகமாய் துப்பாக்கிச்சுடறவங்க இந்த எல்லையில் யார் யார் உண்டுன்னு உங்களுக்குத் தெரிஞ்சுக்க முடியலையா?''

''சந்தேகம் தோன்றிய எல்லோரையும் போய் நானும் குண்டப்பாவும் சோதித்தோம். உருவ ஒற்றுமையுடைய ஆட்கள் இருவர் இருக்காங்க. ரஜினி, பில்வன்னு...ஆனால் அவங்க அந்த நேரத்தில் முதல் மந்திரியின் விழாவில் இருந்தாங்களாம்.''

''அப்படியா? நீங்களே நேரடியாய் விசாரித்துப் பார்த்தீங்களா?''

''இல்லை தாதா.''

''அந்த ஜீப் என்னாயிற்று? போலீசார் பரிசோதனைக்காக அதை அப்படியே விட்டுட்டாங்களா?''

''இல்லை. அங்கேயே எரிச்சுட்டோம்.''

''பரவாயில்லை. இவ்வளவாவது உங்க மூளை வேலை பண்றதுக்கு சந்தோஷம். இன்னொரு ஜீப்?''

''அதில் அந்தப் பெண்ணை ஏற்றிட்டு ஊரெல்லை வரைக்கும் அவங்க வந்திருந்தாங்க.''

''அதன் மேல் அவங்க விரலடையாளம் இருக்குமே?''

அதுவரையிலும் ஒரு மாணவனைப் போல பதிலளித்துக் கொண்டே வந்த ராமு திடீரென்று அந்தக் கேள்வி கேட்கப்

யடவே, அதிர்ச்சியடைந்தவனாய் நாக்கைக் கடித்துக் கொண்டது நன்றாய் கேட்டது.

''அந்த விஷயம் தோணாமல் போயிடுத்து.''

''போங்க, போய் அதை எடுத்துட்டுத் திரும்பவும் சோதனை பண்ணுங்கள். அவங்க யாரு?''

''ரஜினி, பில்வன்.''

''ஆங்...அவங்க விரலடையாளத்தில் அது மட்டும் பொருந்தியிருந்தால்...''

''தேவையில்லை தாதா. மீதியை நாங்க பார்த்துக் கறோம்''—ஆர்வத்தோடு போனை வைத்தான் ராமு.

வசந்த் தாதாவுடன் பேசியபிறகு ராமு சங்கரிடம் வந்தான். அப்பொழுதுதான் சங்கர் வத்சலாவின் வீட்டிற்கு முன்னால் இன்னொரு ஆளை நிறுத்தி வைத்துவிட்டுத் தான், ரிலீ:பாகியிருந்தான். ராமு சங்கரிடம் தான் கண்டு பிடித்த விஷயங்களைச் சொன்னான்.

''ஜீப் எடுத்துட்டுப் போனது யாருன்னு சரியாய் தெரியலை சங்கர். அவங்களும் அந்தப் பெண்ணைத் தம்மோடயே வெச்சுக்கிட்டிருக்காங்களோ அல்லது இதுக்குப் பின்னாடி நாம்ப இருக்கோம்னு தெரிந்து விட்டுட்டாங் களோன்னு புரியலை. மொத்தத்தில் அவங்க துப்பாக்கியை உபயோகித்த விதத்தைப் பார்த்தால் இதில் அனுபவப்பட்ட வங்களாய்தான் தெரியறது. என் சந்தேகம் ரஜினி, பில்வன் இவங்க மேலேதான்...அந்தத் திருட்டுப் பசங்களின் விரலடையாளத்தைச் சம்பாதித்துவிட்டால் எல்லாம் வெட்ட வெளிச்சமாயிடும். அது மட்டும் தெரிந்துட்டால் இனி அவங்களை என்ன பண்றேன் பாரு! எப்படி நாடக மாடினாங்க முதல் மந்திரியின் மீட்டிங்குன்னு!''

''சந்தேகமாயிருந்தால் அங்கேயே கொன்றிருக்கிறதும் தானே?''

''கொன்றிருக்கலாம். ஆனால் அதன் மூலம் அந்தப் பொண்ணு எங்கேயிருக்குங்கற விஷயத்தைச் தெரிஞ்சுக்க முடியாதே! இன்னும் ஐந்தே நிமிடத்தில் அந்த விரலடையாளங்களை எடுத்துடுவாங்க நம்ம ஆட்கள். அங்கிருந்து இன்னும் ஒரு ஐந்து நிமிடத்தில் அந்த ரஜினியிடம் போயிடுவாங்க.''

அதற்குள் போன் ஒலித்தது.

சங்கர் வத்சலாவின் வீட்டிற்கு முன்னால் காவலுக்கு நிறுத்தியிருந்த ஆள் போன் செய்தான். ''சார், நீங்க அப்பால போனதுமே இந்த சாஸ்திரி வீட்டுக்கு ஒரு பொம்பளை வந்துட்டுப் போச்சு.''

''யாரு? வத்சலாவா?''

''அதென்ன சார். இப்படிக் கேட்டுட்டீங்க? வத்சலாவாயிருந்தால் அங்கேயே சுட்டுத் தள்ளியிருக்கமாட்டேனா? வேறு யாரோ பொண்ணு!''

''அப்படியானால் சரி...யாராவது சிநேகிதியாயிருக்கும். திரும்பத்திரும்ப இந்த மாதிரி போன் பண்ணாதே. இன்னும் யாராவது வந்தாங்களா?'' அலுத்துக்கொண்டான் சங்கர்.

அவ்வாறு போனவள் அனுஷாவாயிருக்கலாமோ என்ற சந்தேகம் அவனுக்கு வரவில்லை. வரக்கூடிய தேவையும் இல்லை. ஒரு பெண் அவ்வளவு துரிதகதியில் வேலை பண்ண முடியும் என்ற யோசனை கூட உதிக்கவில்லை. பெண்களின் புத்திசாதுரியத்தின் மேல் அவ்வளவு உயர்ந்த அபிப்பிராயம் ஏற்படக்கூடிய சந்தர்ப்பமும் இதுவரை கிட்டியதில்லை.

இனிமேல்தான் கிட்டப் போகிறது.

வீதியில் நின்றபடி வத்சலாவின் வீட்டையே பார்த்துக் கொண்டு இருந்த ஆள் மாஃபியாவைச் சேர்ந்தவன்தான் என்று அனுஷாவிற்குத் தெரியும். ஆனால் பொருட்படுத் தாமல் அவ்வீட்டிற்குள் நுழைந்தாள்.

லாக் அப்பிலிருந்து லாயரின் உதவியால் சட்டப்படி விடுதலையானதுமே அவள் செய்த முதல் காரியம் சாஸ்திரியின் வீட்டிற்குப் போனதுதான்!

அதற்கு சரியாய் ஒன்றரை மணி நேரத்திற்கு முன்னால் அவளுக்கு வத்சலாவின் குரல் கேட்டது, லாக் அப் அறைக்கு வெளியேயிருந்து...

"நான் ஒரு விஷயத்தைச் சொல்றதுக்கு வந்திருக் கேன்."

"எதைப் பற்றி?" இன்ஸ்பெக்டரின் குரல்.

"...மாஃபியா!"

"என்ன?"

"ஆமாம் சார்."

"அந்தக் கடிதம் எங்கே?"

"ஸ்ரீனிவாசனிடம் இருந்தது. அவனையும் கொன்னுட் டாங்க. ஒருக்கால் அவங்களுக்கு விஷயம் எட்டியிருக்கும்."

............

"நான் அந்தக் கடிதத்தைப் படித்தேன்."

"குட். அதில் என்ன இருந்தது?"

"சொல்லாதே வத்சலா— இந்த இன்ஸ்பெக்டரும் அவங்க ஆள்தான். சொல்ல வேண்டாம்"—என்று கப்பிகளுக் கப்பால் கலவரத்தோடு மனதிற்குள் எண்ணிக் கொண்டாள் அனுஷா! பிறகு இன்ஸ்பெக்டர் உள் அறைக்குப் போனதைப்

பார்த்தாள். அவர்போனில்என்ன பேசினார்என்று அவளுக்குக் கேட்கவில்லை. அவர் வெளியே வரும்போது அங்கே வத்சலா இல்லை என்பது அவர் சென்ட்ரிகளின்பால் எரிந்து விழுந் ததைக் கொண்டுபுரிந்து கொண்டாள். 'கங்கிராஜுலேஷன்ஸ் வத்சலா' என்று மனதிற்குள் பாராட்டினாள்.

வத்சலா இன்ஸ்பெக்டரிடம் சொன்ன விஷயங்கள் அவளைக் கலவரமடையச் செய்தது.

அவள் உண்மையிலேயே ஆபத்தின் கடை வாயிலில் இருக்கிறாள். லாயர் வந்து ஜாமீனில் அவளை விடு வித்ததுமே, அதற்காகத்தான் நேராய் சாஸ்திரியின் வீட்டிற்குப் போனாள்.

எல்லோரும் காலையிலிருந்து காபி கூட குடிக்காமல் அழுது கொண்டே உட்கார்ந்திருக்கிறார்கள் போலிருந்தது. வத்சலாவுக்குத் தெரிந்த பெண் வந்து விசாரித்ததைப் பார்த்து, எல்லோரும் சூழ்ந்துகொண்டு கேள்விமேல் கேள்விகேட்டனர்.

வத்சலா உயிருக்கஞ்சிதான் ஓடியிருக்கிறாள் என்று ஊகித்திருந்தாள் அவள்.

ஆனால் இந்த விஷயத்தை அவர்களிடம் சொல்வது நல்லதில்லை.

''என் மகள் என்ன தப்புப் பண்ணிட்டுப் போனாம்மா? எங்களோடு சேர்ந்து படுத்துக்கிட்டிருந்தவள் — இந்த மாதிரி ராவோடு ராவாய் வீட்டைவிட்டுப்போயிருக்கான்னால்—இந்த வீட்டுக்கு என்ன கெட்ட பேரு வருமோன்னு மனசு கிடந்து தவிக்குதும்மா. நெருப்பைக்கூட நீரால் கழுவுகிற வம்சமம்மா எங்களுது.''

''அந்தமாதிரி ஒன்றும் நினைக்காதீங்க. வத்சலாகூட நெருப்பைப் போன்றவள்தான்..சில ஆபத்தான சூழ்நிலையில் சிக்கிட்டிருக்கிறாள். நீங்க உடனே போலீசில் ரிப்போர்ட் தாங்க.''

சாஸ்திரி ஆச்சரியத்தோடு, "அப்படீன்னால்... போலீசு அவளைத் தேடலையா? நள்ளிரவில அவங்க வந்ததால் ஏதோ தப்புப் பண்ணிட்டு ஓடிப் போயிட்டதாய் எண்ணிக்கிட்டேன்."

"உங்க பெண் சட்டத்திற்குப் புறம்பாகவோ, ஒழுக்கத்திற்கு மாறாகவோ, எந்தத் தப்பும் பண்ணலை. தனக்கே தெரியாமல் ஒரு தப்பில் சிக்கிக் கொண்டிருக்கிறாள். விரைவிலேயே மீண்டுவிடுவாள். தற்போது இதைக் காட்டிலும் ஒன்றும்சொல்லமுடியாது. என்னைபலவந்தப்படுத்தாதீங்க."

"மகள் என்னவானாளோங்கற வருத்தத்தைவிட என்ன தப்புப் பண்ணினளோன்னுதாம்மா பயந்துட்டிருந்தேன், ஒரு தப்பும் பண்ணலையோன்னோ?"

"இல்லைங்க?"

"எந்த ஆபத்துமில்லையே?"

"இல்லை, நீங்க கவலைப்படாமல் இருந்துக்கலாம்."

அப்பொழுதுதான் அவர் அழத் தொடங்கினார். அதுவரையிலும் ஒரு குடும்பத் தலைவராய், வீட்டிலிருந்த எல்லோரையும் தேற்றிக் கொண்டு தைரியமாயிருந்த அவர், அந்த உயர்ந்த மனிதர், அனுஷாவின் கையில் தன் முகத்தைப் பொத்திக் கொண்டு வெலவெலத்துப் போய் அழலானார். அவளுக்கு அது வியப்பாயில்லை அன்பையும், அவ்வீட்டாரிடையே பின்னிப் பிணைந்து கிடந்த அந்தப் பாசத்தையும் கண்டபோதுதான் தன் வாழ்க்கையில் தான் எதை இழந்து விட்டிருந்தாள் என்பதைப் புரிந்து கொண்டாள். தனக்காக அழக்கூடியவர்கள் ஒருத்தர் இருப்பதைக் காட்டிலும் மனிதனின் வாழ்க்கையில் வேறு அதிர்ஷ்டந்தான் உண்டா? லட்சக்கணக்கான கோடிக் கணக்கான பணமும், கார்களும், சமூகத்தில் அந்தஸ்து இவை ஒன்றாலுமே ஈடுகட்டிவிட முடியாத திருப்தி அது. அவளுக்கு அத்தகைய குடும்பம்—ஒரு தந்தை, ஒரு அக்கா,

ஒரு தம்பி, ஒரு தங்கை இல்லாத குறை அந்த நேரம் தெரிய வந்து மனம் குனியமாயிற்று.

அவள் பேச்சை மாற்ற விரும்பி, ''எனக்குக் கொஞ்சம் விவரங்கள் வேண்டியிருக்கு. நேற்றிரவு நிகழ்ந்த விஷயங்கள்...''என்றாள்.

''நேற்றிரவு எத்தனை மணிக்கு வந்தாள் வத்சலா?''

சாஸ்திரி சொன்னார்.

''அந்த நள்ளிரவு நேரத்தில் தனியாய் வந்திருக்க மாட்டாள். யாராவது கொண்டு வந்து விட்டிருப்பார்கள்... யார்?''

எல்லோரும் மௌனமாயிருந்து விட்டனர்.

''தனியாய்த்தான் வந்தாள். நான்தான் கதவைத் திறந்தேன்—யாருமில்லை.''

''வந்தபோது எப்படித் தென்பட்டாள்? பயந்தவாறு இருந்தாளா''?

''இருட்டில் பார்க்கவில்லை.''

''கையில் ஏதாவது காகிதம் இருந்ததா?''

''இல்லை.''

''பர்ஸ்?''

''அவள் பர்ஸ் எடுத்துப் போக மாட்டாள்.''

அவளுக்கு அதற்கு மேல் என்ன கேட்பதென்று தெரிய வில்லை.

''நான் ஜன்னல் வழியாய் பார்த்தேன். ரிக்ஷாவில் வந்து இறங்கினாள். அவள் கதவிற்கருகில் வந்ததுமே, ரிக்ஷா போய் விட்டது. ரிக்ஷாவில் யாரோ இருந்தார்கள்.

கையைக்கூட ஆட்டினார்கள்'' என்றாள் வத்சலாவின் தங்கை.

சாஸ்திரியின் முகம் வாடிவிட்டது. ஆனால் அனுஷா அதைப் பொருட்படுத்தவில்லை. அந்த ஒரு வார்த்தையில் ஸ்ரீனிவாசனைப் பற்றி எடை போட்டுக் கொண்டாள். தொலைவிலிருந்தபடியே வத்சலாவை வீட்டிற்கு அனுப்பி வைத்திருக்கிறான் என்றால், ''நான் வீடு வரைக்கும் வந்து உங்கள் வீட்டார் பார்த்துவிட்டால் அழகாயிராது' என்ற குற்ற உணர்ச்சியை அவள் மனதில் நாட்டுவதற்கு முதல் முயற்சியை வித்திட்டிருக்கிறான்போலும்! இப்படிப்பட்ட ஆண்களைப் பற்றி அனுஷாவுக்கு நன்றாகவே தெரியும். இப்படிப்பட்டவர்கள் கடிதத்தை வத்சலாவிடம் தந்திருக்க மாட்டார்கள். தைரியசாலியைப் போல தானே வைத்துக் கொண்டிருப்பான். வத்சலா இன்ஸ்பெக்டரிடம் சொன்னதில் பொய்யில்லை. அவள் சட்டென்று எழுந்திருந்தாள்.

இன்ஸ்பெக்டர், தாதாவுக்கோ, சங்கருக்கோ போன் செய்து வத்சலா தன்னிடம் இருப்பதைச் சொல்லியிருப்பான் ஆனால் இந்தக் கடிதத்தைப் பற்றி சொல்லியிருக்க மாட்டான். ஆனால் அந்த மாஃபியாக்காரர்கள் பிற்பாடு இன்ஸ்பெக்டரைச் சந்தித்து எஞ்சிய விஷயங்களைக் கண்டிப்பாய் கேட்டிருப்பார்கள். அவர்களுக்கு முன்னால் தான் முந்திக்கொள்ள வேண்டும்,

அவள் மேற்கொண்டு தாமதிக்காமல் அங்கிருந்து கிளம்பினாள். பெட்டிக்கடைக்கருகில் நின்றுகொண்டிருந்த ஆள் இன்னும் அங்கேயே இருந்தான். ஓரக்கண்ணால் அவனைப் பார்த்தபடியே நடந்தாள். ஸ்ரீனிவாசனின் வீட்டை அடையும் வரையிலும் தன்னை யாரேனும் தொடர்ந்து வருகிறார்களா என்று கவனித்தாள். யாருமே பார்க்கவில்லை என்று முடிவாய் தெரிந்து கொண்டதும் உள்ளே நுழைந்தாள்.

ஸ்ரீனிவாசனின் பாட்டி மட்டுமே வீட்டிருந்தாள். வந்தவள் யார் என்று கேட்காமலேயே அவள் அழத்

தொடங்கினாள். அந்த அழுகையில் பேரன் போய் விட்டான் என்ற துன்பத்தைக்காட்டிலும் குழந்தைகளை யார் காப்பாற்றப் போகிறார்களோ என்ற துக்கமே மிகுந் திருந்தது.

அவளைத் தேற்றுவதுபோல பேசியபடியே அனுஷா தேடத் தொடங்கினாள். போலீசார் சவத்தை போஸ்ட் மார்ட்டத்திற்காக எடுத்துச் சென்று இன்னும் சில மணி நேரங்கள் கூட ஆகவில்லை. அந்த வீதியில் பரபரப்பு இன்னும் குறையவில்லை.

முதலில் அவள் படுக்கைக்குக் கீழேயும், கட்டிலுக்குப் பக்கத்திலிருந்த அலமாரியிலும் தேடினாள். தலையணை யடியில் மலிவு ரகப் புத்தகங்கள் சில இருந்தன. ஜன்னலில் ஓரிரண்டு துப்பறியும் நாவல்கள் இருந்தன. அலமாரியில் அதே போன்ற பத்து நாவல்கள் இருந்தன. அவற்றில் எந்தக் கடிதமும் இல்லை.

ஒருக்கால் இதற்குள்ளாகவே அந்தக் கடிதம் மா∴பியா வின் கைக்கு அகப்பட்டிருக்குமோ என்ற சந்தேகமும் ஏழாமலில்லை. வசந்த் தாதா இவ்வளவு அமைதியாய் எப்படி இருக்க முடியும் பின்னே? இனி பீரோவைத் தேட வேண்டும். சாவியைக் கேட்டால் தருவாளோ மாட்டாளோ?

என்ன பண்ணுவது என்று யோகித்தபடியே நடுவிலிருந்த அறைக்குள் வந்தாள் அனுஷா. அவ்வறையில் குழந்தை களின் புத்தகங்கள் இருந்தன. அவற்றைப் பிரித்த பிறகு பீரோவைப் பற்றிக் கேட்போம் எண்றெண்ணி அவற்றை ஆராய்ந்தாள். அங்கும் கடிதத்தைக் காணவில்லை.

அவளுக்கு சோர்வு ஏற்பட்டது. அதற்குள் அந்த கிழவிக்குச் சந்தேகம் வந்து, ''யாரும்மா நீ? என்ன வேணும்?'' என்று கேட்டாள்.

''உங்க ஸ்ரீநிவாசனின் ஆபீஸில்தான் நானும் வேலை பண்றேங்க. அவர் ஒரு காகிதத்தை வீட்டுக்கு எடுத்துட்டு வந்தாரு. அதைத்தான் தேடறேன்.''

கிழவியிடம் திடீரென்று சுறுசுறுப்பு ஏற்பட்டது.

''பேரன் போன துக்கத்துக்கு நாங்க அழுதுட்டிருக்கோம், நீயானால் ஆஸ்பத்திரி காகிதத்தைத் தேடிட்டிருக்கே...'' உர்ரென்று பாய்ந்தாள்.

அனுஷா ஏதோ நயமாய் சொல்லப் போனாள். ஆனால் அவள் கேட்டுக் கொள்ளவில்லை. ''அப்புறமாய் வந்து பார்த்துக்கோம்மா, போயிட்டு வா'' என்று அவசரப் படுத்தினாள். இரண்டு நிமிஷங்கள் வாதாடிக் கொண்டார்கள். பலனில்லை. இனி என்ன பண்ணுவ தென்று புரியாமல் கையிலெடுத்த குழந்தைகளின் புத்தகங் களைத் திரும்பவும் அங்கேயே வைக்கப் போனாள். அந்த சமயத்தில் கண்ணில் பட்டது காகிதங்கள்—மடித்து வைத் திருந்த மூன்று காகிதங்கள்.

சட்டென்று எடுத்துப் பார்த்தாள் அவைகளை. அவள் கைகள் நடுங்கலாயின. அது சர்மா எழுதிய கடிதம்!

# 23

''திரும்பவும் ஏன் வந்திருக்கீங்க?'' கேட்டான் ரஜினி.

''சாரி ரஜினி! புத்தகத்தை மறந்துட்டோம்'' என்றான் குண்டப்பா.

''எந்த புத்தகம்?'' பில்வன் அவர்களைப் பார்த்து சந்தே கத்துடன் கேட்டான்.

"பாக்கெட் டைரி! இங்கேயே வைச்சுட்டுப் போயிட்ட ஞாபகம். கொஞ்சம் தேடிப் பார்க்கிறீங்களா?'' ராமு கேட்டான்.

"வரும்போது உங்க கையில் எந்தப் புத்தகமும் இல்லையே?''

"சின்ன கருப்பு டைரி... காலையிலேருந்து வேறு எங்கேயுமே போகலை. இங்கேதான் வந்திருக்கோம். ரொம்ப முக்கியமான டைரி அது.''

"நீங்க இந்த அறையில்தானே உட்கார்ந்திருந்தீங்க, இங்கே இல்லையே.'' இனி நீங்கள் போகலாம் என்பது போல பார்த்தான் பில்வன். குண்டப்பா எழுந்திருந்து அவ்வறையிலிருந்த மேஜைக்குக்கீழேயும், பெஞ்சிற்குப் பக்கத்திலும் தேடிப் பார்ப்பதுபோல பரிசோதிக்கத்தொடங்கினான். அதற்குள் ராமு தன் ஜேபியிலிருந்த சிறிய கருப்பு டைரியைக் கைக்குட்டையின் உதவியால் கவனமாய் எடுத்து யாரும் பார்க்காத போது ரஜினிக்குப்பின்னால் போட்டு விட்டு, அப்பொழுது தான் அதைப் பார்த்தது—போல "அதோ ரஜினி, அதென்ன பாரு?'' என்றான்.

ரஜினி குனிந்து அதை எடுத்து, "இதான் போலிருக்கு'' என்று அவனிடம் தந்தான். கைக்குட்டையோடு அதனை வாங்கிக் கொண்டு, "தாங்க்ஸ் ரஜினி! பாவம், இது தொலைந்து போச்சேன்னு பயந்துபோய்விட்டான்'' என்று குண்டப்பாவை நோக்கி, "அதான் கிடைச்சுடுத்தே, போவோமா'' என்றான்.

பில்வன் அவர்கள் போனதும் "ஏதோ சதி நடக்கிறது ரஜினி. என் மனம் ஏதோ தீயதையே எடை போடுகிறது'' என்றான்.

"உன் மூஞ்சி'' என்றான் ரஜினி.

''இல்லை ரஜினி... உண்மையாகவே குண்டப்பா டைரியை இங்கேதான் விட்டுட்டுப் போயிருப்பான்னு நினைக்கிறாயா? என் கண்ணில் இதுக்கு முன்னாடி அது தென்படலையே?''

''பின்னே திரும்பவும் எதுக்கு வந்திருப்பாங்க? வத்சலாவைப் பற்றி ஒன்றுமே கேட்கலையே அவங்க?''

''பார்ப்போம், என்னதான் ஆகிறதுன்னு.''

ரஜினி டைரி கிடந்த இடத்தை ஒரு வினாடி உற்றுப் பார்த்தான். வெகு நேரமாய் அது அங்கேயே கிடந்திருக்குமானால் தன் கண்ணில் எப்படித் தென்படாமல் போயிற்று?

சரியாய் பத்து நிமிடங்களுக்குப் பிறகு சங்கரிடம் போட்டோக்களைத் தந்துவிட்டு, ''ஜீப்பிலிருந்த விரலடையாளங்களும் இந்த விரலடையாளமும் ஒன்றேதான்'' என்றான் நிபுணன்.

சங்கரின் முகத்தில் என்றுமே தென்பட்டிராத குரூரம் தென்பட்டது.

''அந்த சாஸ்திரி வீட்டை யாரும் கண்காணிக்கத் தேவையில்லை. வத்சலா இருக்குமிடம் தெரிந்து விட்டது. ரஜினி வீட்டிற்கு இன்றிரவு நாம் போகிறோம். அந்தப் பெண்ணை இழுத்துவரும் சாக்கில் குறுக்கிடப் போகும் அவர்களிருவரையும் அந்த இடத்திலேயே கொன்று போட்டுடப் போறோம'' என்று குண்டப்பாவைப் பார்த்து ''நடு வீதியில் ஜீப்பைக் கவிழ்த்தது போல நாமும் இன்றிரவு அவன் வீட்டைத் தலை கீழாக்கிவிட்டு வரவேண்டும். இரண்டு ஸ்டென் துப்பாக்கிகளையும் எடுத்துக் காரில் வைத்துக் கொள்'' என்றான் சங்கர்.

''ராத்திரி வரைக்கும் ஏன் காத்திருக்கணும்? இப்போதே போனால் என்ன?'' என்றான் குண்டப்பா.

''ராத்திரியானால் அவங்க கொஞ்ச அஜாக்கிரதையாய் இருப்பாங்க. அதோடுகூட அப்பத்தான் பட்சி சுலபமாய் வலையில் சிக்கிக்கும். நம்ம ரகளை சப்தமெல்லாம் வெளியில் கேட்டாலும் அவ்வளவு ஆபத்தில்லை.''

இரவு பத்தடித்தது.

வத்சலா அறையில் தனியாய் இருந்தாள். அவளுக்கு என்ன பண்ணுவதென்றே புரியவில்லை. ஆஸ்பத்திரியில் ஆபரேஷன், துப்பாக்கி குண்டுகளின் ஓசை—ரிக்ஷாவில் பயணம்—நள்ளிரவில் விழிப்பு வந்தது—அங்கிருந்து ஓட்டமாய் போலீஸ் ஸ்டேஷனுக்கு ஓடியது—பஸ்ஸில் அபாயம்—மயிரிழையில் தப்பித்தது—இறுதியில் இங்கே வந்து சேர்ந்தது.

ஒரே நாளில் முழு வாழ்க்கையின் அனுபவத்தையும் பெற்று விட்டாள்.

இதுபோன்று இன்னும் எவ்வளவு நாளோ?

அவள் கேள்விக்கான பதிலைப் போல கதவு திறந்து கொள்ள ரஜினி உள்ளே நுழைந்தான்.

அவன் முகத்தில் சோர்வு தென்பட்டபோதிலும் அவளைப் பார்த்துச் சிரித்துவிட்டு, ''நீ எங்களோடு சேர்ந்து கொஞ்ச நாள் இருந்து தீர வேண்டியிருக்கு. இந்த அறைகளை நானும் பில்வனும் சேர்ந்து பங்கு போட்டுக்கொண்டிருக்கோம். எல்லாம் தாறுமாறாய் கிடக்கும், நீ அந்தக் கட்டிலில் படுத்துக்கலாம். நான் அடுத்த அறையில் இருக்கேன். அதற்கடுத்த அறை பில்வனுது. முக்கியமாய் நான் சொல்ல வந்தது என்னவென்றால் 'நான் ஒரு பெண்'' என்று வருந்தி மடியாதே. அதுதான் எனக்கும் பில்வனுக்கும் பிடிக்காத விஷயம்.

''உன் வீட்டில் எப்படிப் படுத்துத் தூங்குவாயோ அந்த மாதிரி நிச்சிந்தையாய் படுத்து உறங்கு. எங்க பில்வன்கூட மேலுக்கு அப்படித் தென்படறானேயொழிய ரொம்ப நல்லவன்! சாதாரணமாய் எங்களோடு ஒருத்தியாய் இருந்து கொள்...சரி இப்ப உன்னைப் பற்றிக் கொஞ்சம் சொல்.''

''சொல்றதுக்கு ஒண்ணுமேயில்லை. ரொம்ப சாதாரணப் பெண் நான்.''

ரஜினி சிரித்தான். ''இந்த உலகத்தில் ரொம்பச் சாதாரணப் பெண்கள்கூட அப்படி நினைப்பதில்லை. சரி எதற்கும் உன் வீட்டைப்பற்றியும் வீட்டாரைப் பற்றியும் சொல்லு.''

அவள் சொன்னாள். தந்தை, தாய், அக்கா தங்கைகள், தம்பி எல்லோரையும் பற்றிச்சொன்னாள். அவன் எல்லாவற்றையும் கேட்டு முடித்துவிட்டு, ''...அப்படியானால் இந்த நேரத்தில் தந்தைக்கருகில் உட்கார்ந்து ராமாயணமோ பாகவதமோ கேட்டுட்டிருக்க வேண்டியவள் இங்கேவந்து என் முன் உட்கார்ந்து என் பேச்சைக் கேட்க வேண்டியிருக்குன்னு சொல்லு'' என்று சிரித்தான்.

''நான் ஒன்று கேட்கலாமா?'' என்றாள்.

''கேள்.''

''இதிலிருந்து நான் எப்படித் தப்பிப்பது?... அதாவது எவ்வளவு நாள் இப்படியே இருப்பது?''

''தெரியாது. பார்ப்போம்.''

''எங்க வீட்டாருக்குத் தெரியாவிட்டால் கலக்கமடைவாங்க.''

''கடிதம் எழுதிக்கொடு. போஸ்ட் பண்றோம்.''

அவள் மௌனமானாள்.

''கடைசியாய் ஒரு கேள்வி.''

"கேள்."

"முதலில் என்னை இங்கேயிருந்து அனுப்பிடாலாம்னு நினைச்சீங்க. அப்புறமாய் மனதை மாத்திக்கிட்டீங்க, ஏன்?..."

"இந்தக் கேள்விதான் உன்னை ரொம்ப நேரமாய் குழப்பிட்டிருக்குன்னு தோணுது."

அவள் மௌனமாயிருந்தாள்.

"சில விஷயங்களுக்குப் பெரிதாய் காரணங்கள் இருக்காது வத்சலா!... ஒரு பெண், ரொம்பத் திமிர் பிடித்தவள் அவள். நானே ஒரு காலத்தில் அந்தத் திமிரை அடக்கணும்னு நினைச்சேன். அவளுடைய வாதனைகளும் பந்தங்களும் ரொம்பவும் திமிர்பிடித்தாற்போலத்தான் தோணுது. ஆனால் எவ்வளவோ கஷ்டமான சூழ்நிலையிலும்கூட அவள் அதேபோல மிடுக்காய் நடந்து கொண்டதைப் பார்த்த போது ரொம்பவும் வியந்துட்டேன். கர்வத்துக்கும் தன்னம்பிக்கைக்கும் வித்தியாசம ரொம்பச் சின்னது. நீ இருந்தபோது வந்ததே ஒரு கடிதம். அது அவள் எழுதியது தான். ஒரு விதத்தல் அந்தக் கடிதந்தான இதற்குக் காரணம். ஒவ்வொன்றுக்கும் ஏதோ ஒரு இடத்தில் ஒரு தொடக்கம் வேண்டும். இந்தத் தொடக்கத்திற்கு அதுதான் மூல காரணம். அதை அவள் செய்தாள்."

"யார் அந்தப் பெண்?"

"அவள் பெயர் அனுஷா."

ஒரு பலம் வாய்ந்த சூறாவளி தன்னை வந்து மோதினாற் போல உணர்ந்தவளாய், "யாரு?" என்றாள் தன் காதில் தப்பாய் விழுந்து விட்டதோ என்றெண்ணி...

"அனுஷா...ஸ்டாக் ஹோமின் ஜெனரல் மேனேஜர். உனக்குத் தெரியுமா?"

தெரியும் என்று தலையாட்டி விட்டு, ''உங்களுக்கு நன்றாய் தெரியுமா?'' என்றாள்.

''கொஞ்ச நாளாய்தான் தெரியும்......''

''நீங்க என்ன படிச்சிருக்கீங்க?'' கேட்டாள் அவள் திடுமென்று அவன் சிரித்தான்.

''எம் ஏ. எம். எல்.''

''இவ்வளவு படிச்சுட்டு...'' என்று நிறுத்தி விட்டாள். அவன் சிரித்துக் கொண்டே, ''இவ்வளவு படிச்சுட்டு இந்தத் துப்பாக்கிச் சண்டை ஏன்னு கேட்கிறீங்க. இல்லையா? இதெல்லாம் எங்க வாழ்க்கையோடு ஒரு பாகம். இந்த ஓட்டல் என்னுடையதுதான். காபரே கூட இருக்கு. அது வரை அரசாங்கம் அனுமதி கொடுத்திருக்கு. பின்னாலிருக்கும் சின்ன கிளப் மட்டும் அனுமதியில்லாதது. சில தப்புப் பண்றதுக்கு அரசாங்கம் ஒப்புக்கிட்டதால், வேறு சில சுதந்திரங்களை நாங்க எடுத்துக்கிட்டோம். கிளப்பும், காபரேயும் இருப்பதால் துப்பாக்கியும் இருந்து தீர வேண்டும். போலீசாருக்கு மாமூல் போய் விடுவதால் பிரச்னை இல்லை'' என்று எழுந்தவன், ''ரொம்ப நேரமாகிவிட்டது, இனி படுத்துக் கொள்'' என்று வெளியே வந்தான். அவன் வந்த போது பில்வன் படியேறி மேலே வந்தான்.

''ரஜினி, ஏதோ வாசனை வரதே, என்ன வாசனை?''

''என்ன?''

''முன் காரில் இருவர் இருக்காங்க. பின்னாலிருந்து கூட ஒரு காரிலிருந்து வாசனை வருது. இன்னும் உறுதியாய் ஒன்றும் தெரியலை.''

''காலையில் அவங்களுக்கு ஏதோ சந்தேகம் ஏற்பட்டிருக்கணும்.. பில்வா, நீ முன் கதவிற்கருகில் நின்று கொண்டிரு. கஸ்டமர்கள் இன்னும் நிறையப் பேர் இருக்காங்க. முடிந்த

வரையிலும் அவங்களுக்குத் தொந்தரவு இல்லாமல் பார்த்துக் கொள்'' என்று மேலே போனான்.

வத்சலா அப்பொழுதுதான் விளக்கை அணைத்துவிட்டுத் தூங்க முயன்றாள். கதவு திறந்ததுமே உள்ளே நுழைந்தவனைப் பார்த்து அவளது இதயம் ஒரு வினாடி துடிப்பது நின்றது. அந்த ஆள் கிட்டே நெருங்கியதுந்தான் ரஜினி என்றுணர்ந்தாள். ரஜினி அவள் கட்டிலுக்கருகே நிற்காமல் ஜன்னலுக்கருகில் போய் திரை மறைவிலிருந்து வெளியே எட்டிப்பார்த்தான். கட்டிடதின் பின் பக்கத்துச் சந்தில் தூரத்தில் ஒரு கார் நின்று கொண்டிருந்தது. அவன் திரையைச் சரியாய் இழுத்து மூடிவிட்டு வெளியே போகத் திரும்பியவன் அவள் கட்டிலுக்கருகில் வந்து நின்றான்.

வத்சலா மூச்சை இழுத்து அடக்கிக் கொண்டாள். அவன் விடிவிளக்கை அணைத்தான். ''எந்தச் சூழ்நிலையிலும் அறையை விட்டு வெளியே வாரதே. குட் நைட்'' என்று அங்கிருந்து அகன்றான்.

வெளியே என்ன நடந்து கொண்டிருக்கிறதென்பது எதுவும் அவளுக்குத் தெரியாது.''

## 24

ரஜினி வீட்டின் பின்பக்கத்துக் கதவை மெதுவாய் சாத்திவிட்டு இருட்டில் இறங்கி நடந்தான். பின்பக்கமெல்லாம் குப்பை செத்தைகள் பரவிக் கிடந்தன. சிறிய சந்து அது. சந்தின் கோடியில்தான் கார் நிறுத்தப்பட்டிருந்தது. பழைய மாடல் மாரிஸ் மைனர் கார்.

தான் வீட்டிலிருந்து வெளியே வந்ததைக் காரிலிருந்தவர்கள் பார்த்திருப்பார்கள் என்று தெரியும் அவனுக்கு. அதனால் அந்தப் பக்கமாய் போகாமல் வேறு பக்கமாய் நடந்தான். மெயின் ரோட்டிற்குவந்துவலப்பக்கமாய் திரும்பி, இன்னொரு சந்து வழியாய் போய் அந்தக் காரின் பின்பக்கத்திற்கு வந்து சேர்ந்தான். மூடியிருந்த கடைகளைத் தாண்டி மறைந்த வாறே ஓசையின்றி காரை நோக்கி வந்தான்.

காரில் ஒரே ஒரு ஆள் மட்டுமே இருந்தான். அவன் ரஜினி வீட்டையே பார்த்துக்கொண்டிருந்தான். பின்பக்கமாய் வந்த ரஜினியை அவன் கவனிக்கவில்லை.

''ஹலோ'' என்றான் ரஜினி மெதுவாய்.

அருகில் குண்டு விழுந்தாற் போல அதிர்ச்சியடைந்தவனாய் திரும்பிப் பார்த்தான் அந்த ஆள். ரஜினி துப்பாக்கியை அவன் நெற்றியோடு பொறுத்தி, ''ஓ, நீயா குண்டப்பா! என்னது, இருட்டில் என்ன செய்து கொண்டிருக்கிறாய்?'' என்றான்.

''ஒ...ஒ...ஒண்ணுமில்லை. ஒரு நண்பனுக்காகக் காத்திட்டிருக்கேன்.''

''இந்த சந்தில் உனக்கிருக்கும் நண்பன் யாரோ?''

''இருக்காங்க.''

''முன்பக்கத்து வீதியிலிருக்கும் காரில்கூட இருக்காங்க போலிருக்கே?''

''இல்லை.''

''காரை விட்டிறங்கு. போய்ப் பார்ப்போம்.''

குண்டப்பா இறங்கவில்லை. ரஜினி காரின் கதவைத் திறந்து குண்டப்பாவின் தோளைப் பற்றி வெளியே வரச் சொல்லி இழுத்தான்.

''கார் கதவைப் பூட்டலையா?''

''தேவையில்லை.''

''உண்மையாகவே உனக்கு இந்த வீதியில் நண்பனிருந்தால், சரி—இவ்வளவு தூரம் வந்துட்டவன் ஒரு முறை எங்க ஓட்டலுக்குக்கூட வந்துட்டுப் போகலாமில்லே? போவோமா?''

''வா, குண்டப்பா.'' உன் சிநேகிதர்களிடம் போவோம்'' என்றான்.

இருவரும் சந்துக்குள்ளிருந்து மெயின் ரோடிற்கு வந்தார்கள்.

நாம் இப்பொழுது சிநேகிதர்களாய் போயிட்டிருக்கோம். நீ உன் சிநேகிதர்களிடம் நம்மைப் பற்றிச் சொல்லி என்னை அறிமுகம் பண்ணி வைக்கப் போகிறாய். என் ஓட்டலுக்கு முன்னால் துப்பாக்கி குண்டு சிதறி என் வாடிக்கையாளர்களுக்குத் தொந்தரவு கொடுத்துடக் கூடாதுன்னுதான் இந்த ஏற்பாடு புரியுதா?''

இருவரும் ஓட்டலுக்குக் கொஞ்சம் தொலைவில் இருந்த காரை அடைந்தார்கள். கார் அந்தப் பக்கமாய் திரும்பியிருந்தது. முன் சீட்டில் உட்கார்ந்திருந்த இருவரும் அந்தப் பக்கமாய் இருந்த ஓட்டலையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''அவங்களிடம் போய் துப்பாக்கியைத் தொடக் கூடாதுன்னு சொல்லு குண்டப்பா. நான் இங்கேயிருந்தே பார்த்துட்டிருக்கேன். மூவரில் யாருடைய கை அசைந்தாலும் சரி, அந்தக் காருக்குப் பின்னாலிருக்கும் கண்ணாடி வழியாய் சுட்டுத் தள்ளிடுவேன்னு சொல்லு! என் வாடிக்கையாளர்களுக்குத் தொந்தரவு ஏற்பட்டாலும் சரி...'' என்று ரஜினி அங்கேயே நின்று கொண்டான்.

குண்டப்பா காரை நெருங்கினான்.

அவன் ஏதோ, சொன்னான். அதற்குள் ரஜினி காரின் மறுபக்கமாய் போனான். குண்டப்பா சொன்னதைக் கேட்டு விட்டுக் காரிலிருந்த இருவரும் திரும்பிப் பார்த்தார்கள். அவர்கள் கை பாண்ட் பாக்கெட்டுக்குள் நுழைந்தன. ''வேண்டாம். வேண்டாம். எடுக்காதீங்க'' என்றான் குண்டப்பா.

''குட் மறுபக்கத்திலிருந்து ரஜினியின் குரல் கேட்கவே சட்டென்று திரும்பினார்கள் அந்தப் பக்கமாய்.

''ஹலோ ராமு'' என்றழைத்தான் ரஜினி. குண்டப்பாவைப் பார்த்து, ''அவங்களிடம் இருக்கும் துப்பாக்கியை எடுத்துக் கொள்'' என்று உத்தரவிட்டான். ராமுவுக்கருகிலிருந்த இன்னொரு ரௌடி நகர முயன்ற போது, குண்டப்பா தடுத்து நிறுத்தி, அவனிடமிருந்த துப்பாக்கியையும் பிடுங்கி ரஜினியிடம் தந்தான். ரஜினி பின் சீட்டில் ஏறி உட்கார்ந்து, ''வா, குண்டப்பா, காரை ஓட்டு'' என்றான்.

கார் புறப்பட்டதும் ரஜினி சொன்னான். ''வலது பக்கமாய் திரும்பி நேராய் போ.'' கார் கொஞ்சதூரம் போனதும், ''இங்கே நிறுத்து'' என்றான். அது சங்கர் இருக்கும் இடம்.

கார் அங்கே நின்றதுதான் தாமதம். காரில் அமர்ந் திருந்த மூவரும் ஆச்சரியமடைந்தார்கள்.

''இறங்குங்க.''

மூவரும் முன்னால் நடக்க ரஜினி பாண்ட் பாக்கெட்டினுள் இரண்டு கைகளையும் போட்டுக் கொண்டே அவர்களை அனுசரித்து நடந்தான்.

இரவு பதினோறடிக்கவிருந்தது. சங்கர் நன்றாய் குடித்திருந்தான். ரஜினியைப் பார்த்ததுமே மகிழ்வோடு "கூட்டிட்டு வந்துட்டீங்களா? குட்..." என்றான்.

"ஸாரி சங்கர், அவங்க கூட்டிட்டு வரலை. நான்தான் அவங்களைக் கூட்டிட்டு வந்திருக்கேன்."

சங்கருக்குப் புரிந்து விட்டது. "முட்டாள்களே! என்னடா இது. அதைக் கூட்டிட்டு வரலையா?"

ரஜினி ஆச்சரியத்தோடு. "எது சங்கர்? எதைக் கூட்டிட்டு வரச் சொல்லி அனுப்பினாய்? ஏதாவது தேவையாயிருந்தால் எனக்கு ஒரு போன் பண்ணினால் நான் கூட்டிட்டு வந்திருக்க மாட்டேனா? என் ஓட்டலுக்கு முன்னால் கார்களை எதுக்கு நிறுத்தி வைக்கணும்?" என்றான்.

"நடிக்காதே ரஜினி. நேராய் விஷயத்துக்கு வருவோம்.

"எந்த விஷயத்துக்கு?"

"சரியாய் இன்னும் அரை மணி நேரத்திற்குள் நீ அந்த பொம்பளையை எங்களிடம் ஒப்படைத்து விடப் போகிறாய். அது மட்டுமில்லை, ஜீப்பிற்கு ஏற்பட்ட நஷ்டம் லட்சம் ரூபாயை நாளைக் காலைக்குள் அனுப்பிவிடப் போகிறாய்."

"பொம்பளையா, யாரது? ஜீப்பா, அதென்னது? நாங்க வந்தது காரில்தானே? அதுவும உங்க குண்டப்பாதானே ஓட்டிட்டு வந்தான்."

"இந்த நடிப்புதான் வேணாங்கறது. ஜீப்பில் உன் விரலடையாளம் இருந்தது."

"எந்த ஜீப்?"

"நீ ஊரெல்லையில் விட்டுட்டு வந்த ஜீப்..."

''ஓ! அது உங்களோடதா? அதை யார் விட்டுட்டுப் போனாங்களோ தெரியலையேன்னுதான் நானும் பில்வனும் உள்ளே ஏதாவது காகிதங்கள் இருக்கோ என்னவோன்னு ஜீப் முழுவதும் தேடிப் பார்த்தோம்.''

சங்கர் கோபமாய் கையிலிருந்த விஸ்கி கிளாஸைத் தரையில் விட்டெறிந்தான். அது கலகலவென்று சிதறி உடைந்தது.

அதைப் பார்த்த ரஜினி மெல்ல, ''சங்கர், இந்த வியாபாரத்தில் நீயும் நானும் ரொம்ப நாளாய் இருந்து வரோம். ஒருவர் விஷயத்தில் மற்றவர் குறுக்கிடுவதில்லை. என்னைப் போன்ற ஓட்டல் முதலாளிங்களும் கடைக்காரங்களும் சந்தா மூலமாய் உனக்கு மாதந்தோறும் ஏதோ கொஞ்சம் தந்து கொண்டிருப்பதும் உனக்குத் தெரியும். நான் மாத்திரம் ஒரு பைசாகூட தருவதில்லை உனக்கு. அந்த விஷயத்தில் தலையிடப் போய் செம்மையாய் வாங்கிக் கட்டிக் கொண்டதும் தெரியும்... சங்கர் நான் சொல்றதைக் கேளு. நான் மனதுவைத்தால் உன்னைவிடபெரிய குண்டனாக முடியும். வசந்த் தாதாவின் செல்வாக்கைப் பெற்று இந்த எல்லைக்குத் தளபதியாகி விடவும் முடியும். ஆனால் எனக்கு இந்த பிழைப்புப் பிடிக்கலை. என் சொந்த வியாபாரம் எனக்கு இருக்கு. அதற்காக யாராவது என் ஜோலிக்கு வந்தால் இப்போது நீ சிதறடித்து உடைத்தாயே அந்த கிளாஸ் தம்ளரைப் போல அவங்க தலையைச் சிதறடித்துடுவேன். உன் விஷயத்தை நீ பார்த்துட்டுப் போ... இந்த ஓட்டலுக்கு முன்னால் கார்களை நிறுத்தி வைப்பது அதில் கழுகுகளைப் போல உன் ஆட்கள் ஒளிந்து கொண்டிப்பதும் எனக்குப் பிடிக்கலை.''

சங்கர் பதிலளிக்கவில்லை. ராமுதான் சொன்னான், ''உன்னை இங்கேயே நாங்க கொன்று போட்டுட்டால்...''

ரஜினி திரும்பிக்கூட பார்க்கவில்லை. 'சங்கர் —உங்க ராமுவுக்கு இன்னும் கும்பல் சண்டையைப்பற்றி ஒன்றும்

தெரியாது போலிருக்கு. நான் செத்த அடுத்த நிமிடமே உன் ஆட்கள் நால்வர் செத்துடுவாங்க. அதில் ஒருவன் நீயாகவும் இருக்கலாம். அதை அவனுக்குச் சொல்லு.' சங்கர் எழுந்து ரஜினியிடம் வந்து நின்று அவன் கண்களை உற்றுப் பார்த்தான்.

''அந்தப் பொண்ணை எங்களிடம் ஒப்படைத்துடு ரஜினி என்றான் சுருக்கமாய்.

''நீங்க பொண்ணு பெண்ணுன்னு யரைப் பற்றிச் சொல் றீங்கன்னு எனக்குப் புரியலை.''

''சரி, நீ போயிடு ரஜினி! உன்னிடமிருந்து உண்மையை எப்படி வரவழைப்பதுன்னு எங்களுக்குத் தெரியும்.''

''அதைச் சொல்லத்தான் நானும் வந்தேன். நீங்க என்னென்னவோ சந்தேகத்தை வளர்த்துக் கொண்டு எங்க பகுதிக்குள் நுழைந்தால், பிறகு ஏற்படும் விளைவிற்கு நான் பொறுப்பில்லை.''

சங்கர் சிரித்தான். 'உனக்கு ஒரு பகுதின்னு கிடையாது. அது போன்ற இடங்கள்ளாம் இருப்பது எங்களுக்குத்தான். எங்க தயவு தாட்சணியத்தின் பேரில்தான் நீ உன் வியாபாரத் தைப் பண்ணிட்டிருக்கிறாய். நீ மட்டுமில்லை, இந்த ஊரிலிருக்கும் ஒவ்வொருத்தருமே எங்க தர்மத்தின் பேரில் தான் வாழ்ந்துட்டிருக்காங்க. ஒரு சின்னப் பெண்ணை எங்களால் பிடித்துட முடியாதுன்னு நினைச்...சுடாதே. முன்னாடியே சொல்லி விடுவது எங்கள் கடமையாதலால் எல்லாவற்றையும் சொல்லிட்டோம்.''

''என் கடமையையும் நான் சொல்லிடறேன் சங்கர், இந்த நள்ளிரவு நேரத்தில் நீயும் நேரத்தைப் பாழடித்துக் காதே!''

ஹாய் ப்ளெசென்ட் சர்ப்ரைஸ்.''

''ஆச்சரியம் வரைக்கும் சரிதான். ஆனால் சந்தோஷமான ஆச்சரியம் மட்டும் இல்லை'' என்றாள் அனுஷா.

''என்ன விஷயம், ஏதோ போல் பேசுகிறாயே?''

''உங்க இலாகா சில பிரமுகர்களிடம் மயங்கி அவங்க ஆட்டுவிப்பது போல நடந்து கொண்டும், வேறு சிலரை அழ அழ விரட்டிக் கொண்டும் இருக்கிறது...அண்ணா, அந்த வசந்த் தாதாவைப் பற்றி கொஞ்சம் சொல்லு...''

டில்லி 3—வது சர்க்கிள் பகுதிக்கு டி.எஸ்.பி.யான ஸ்ரீகாந்த் திடுக்கிட்டான்.

''ஏன்?'' என்றான் சந்தேகத்தோடு.

''சொல்லு...''

''பேப்பரில்தான் படிக்கிறாயே, எல்லோருக்கும் தெரிந்தது தானே! அந்த ஆளுகூட என் ஜுரிஸ்டிக்ஷன்தான். எங்க போலீஸ் இலாக்காவையே முட்டி தேய வைச்சிட்டிருக்கும் ஆள். முக்கியமாய் என்னை...''

''நீ இந்த வார்த்தையை மனப்பாடம் பண்ணியிருக்கிறாய் போலிருக்கு. ரொம்ப நாளுக்கு முன்னாடி கூட நான் இதே கேள்வியைக் கேட்டபோது இதே பதிலைத்தான் இம்மியும் பிசகாமல் சொன்னாய்.''

என்னதான் விஷயம் அதைச் சொல்லு தங்கச்சி...''

''பஞ்சாங்கத்தைப் பார்த்து நாளைக் காலையில் ராகு காலம் எப்ப வரதுன்னு சொல்லு அண்ணா! நாளைக்கு சூரியோதய வேளையில் நான் வசந்த் தாதாவைச் சந்திக்கப் போகிறேன். ஃபர் எ ஃபைனல் ஷோடௌன்.''

ஸ்ரீகாந்தின் கையிலிருந்த தம்ளர் நழுவி விழுந்தது.

''நீ என்ன பேசுவதைப் புரிந்துதான் பேசுகிறாயா?''

''புரிகிறது. ஆனால் நடந்ததெல்லாவற்றையும் சொன்னால் உன் தலை சுற்றத் தொடங்கிவிடும்! உனக்குத் தெரியுமா நான் ஒரு நாள் முழுவதும் லாக் அப்பில் இருந்த சங்கதி? பிறகு ஜாமீனில் விடுதலையான விஷயம்?''

ஸ்ரீகாந்த் சிலையாகி விட்டான். ''நீ என்ன சொல்கிறாய்? இதெல்லாம் ஏன் நடந்தது? யாரால்?...'' என்றான்.

''சங்கரால்...''அவள் பதில் சர்வ சாதாரணமாயிருந்தது.

ஸ்ரீகாந்தின் முகத்திலிருந்த ரத்தம் சுண்டிவிட்டது. ''சங்கரா? அவனுக்கும் உனக்கும் என்ன விரோதம்? அவங்கள்ளாம் ரத்தத்தைக் குடிக்கிறவங். எனக்கு பயமாயிருக்கு. அனு...என்னதான் ஆச்சு, சொல்ல மாட்டியா?''

''ரத்தத்தைக் குடிக்கிறவங்களைப் பார்த்துப் போலீஸ் மேலதிகாரியொருவர் பயப்படுவதைப் பார்த்தால் சிரிப்புதான் வருது!''

''தமாஷ் பண்ணாதே, விஷயத்துக்கு வா.''

''ஒரு விஷயமும் இல்லை. நாளைக்கு நான் வசந்த் தாதாவைச் சந்தித்து நேருக்கு நேராய் பேசிச் சில விஷயங்களைத் தெரிந்துக்கப் போறேன். அவரைச் சந்திக்க வேண்டும் என்றால் முன் கூட்டியே அப்பாயிண்ட்மென்ட் வாங்கிக்கணுமா, அதை மட்டும் சொல்லு போதும்.''

''இதெல்லாம் என்ன அனுஷா?''

''என் கேள்விக்கு பதில் சொல்லு.''

''சமூகத்தில் வசந்த் தாதா ரொம்ப மதிப்புவாய்ந்த ஆள், ராபின்ஹூட்டைப் போன்ற ஆள். காலையில் எட்டு மணியிலிருந்து பதினோறு மணி வரையிலும் டில்லியிலுள்ள வெவ்வேறு பகுதி வாழ் ஏழை ஜனங்களும் அவன் வீட்டிற்கு

முன்னால் கூடி தம் கஷ்டங்களை எடுத்துச் சொல்லுவார்கள். அவனைக் கைது பண்ண போலீஸ் இலாக்காவுக்கு இருக்கும் கஷ்டங்களுள் அதுவும் ஒரு காரணம். அவர்களுக்கு அவன் பால் ரொம்பவும் இரக்கம் இருக்கிறது. அவங்களுக்குத் தெரியாது என்னவென்றால் அவன் சம்பாதிப்பதில் கேவலம் ஒரு சதவீதம்தான் அவங்களுக்காக செலவழிக்கிறான் என்பது.''

''அதெல்லாம் கிடக்கட்டும், நாளைக் காலையில் அவன் வீட்டிற்குப் போகப் போகிறேன்.''

''ஏன்னு சொல்ல மாட்டாயா?''

''ஊஹூம்! இந்த விஷயத்தையே கூட உன்னிடம் சொல்லியிருக்கக் கூடாது. ஆனால் நாளைக்கு எனக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்தாலும் நீ அவனை அரெஸ்ட் பண்ண ஒரு சாட்சி வேண்டாமா? அஃப் கோர்ஸ்! அப்படிப்பட்ட அஜாக்கிரதையான வேலை ஒன்றையும் தாதா பண்ணிட மாட்டான்னு வை...என் ஊகப்படி இந்த நேரத்திற்குள் அவனுக்கு நான் உன் தங்கைங்கற விஷயம் கூட தெரிந்து விட்டிருக்கும். அதனால்...நாளைக் காலை எட்டு மணிக்கு...''

இனி தான் என்ன சொன்னாலும் அவள் கேட்க மாட்டாள் என்றுணர்ந்தான் அவன். இறுதியில், ''என் வேனில் உன்னை அனுப்பி வைக்கிறேன். உன்னைப்பார்த்தால் ஏதோ ஆபத்திற்குள் அடி வைக்கப் போகிறாய் னு தோணுது. தொலைவில் காவல் போட்டு வைப்பது நல்லதுன்னும் படுது'' என்றான்.

அனுஷா சிரித்துவிட்டு, ''இந்த உலகத்திலேயே பெரிய தமாஷ் உங்க போலீஸ் வேன்தான்! திருடர்களுக்குக் காட்டிக் கொடுப்பது போல பெரிதாய் சப்தம் போட்டுக் கொண்டு தடதடவென்று ஓடி வரும் அந்த வேனை சினிமாக்களில் பார்க்கும்போதெல்லாம் சிரிப்புத்தான் வரும் எனக்கு'' என்றாள்.

"திருடர்களைப் பிடிக்கப் போகும் போது நாங்க சைரன் கொடுக்க மாட்டோம்." ரோஷத்தோடு சொன்னான் ஸ்ரீகாந்த்.

"சும்மா சொன்னேன் அண்ணா. நாளைக்கு என்னோடு யாரும் வரத் தேவையில்லை."

ஸ்ரீகாந்த் போகத் திரும்பியவன், "நீ சுயமாய் யோசித்து முடிவெடுக்கக் கூடியவள் என்றும், யார் சொன்னாலும் கேட்காத பிடிவாதம் கொண்டவள் என்றும் எனக்குத் தெரிந்ததுதான். ஆனாலும் இன்னொரு தடவை யோசித்துப் பார்த்துக் கொள்" என்றான் இறுதியாய்.

## 25

அவள் தொலைவில் நின்றபடியே அந்த வீட்டைப் பார்த்தாள். மிகச் சிறிய வீடு. உயரமான திண்ணைகள் இருந்தன. டில்லி சர்க்கிள் 3-ல் நடுத்தர மற்றும் பின்தங்கிய மக்கள் வாழுமிடத்தில் இருந்த மிகச் சாதாரணமான அந்த வீட்டுத் திண்ணையின் மேல் உட்கார்ந்திருந்த அந்த ஆளின் மாத வருவாய் எண்பது லட்சங்கள் வரை இருக்கும் என்றால் யாருமே நம்ப மாட்டார்கள்.

அவன் ஒரு கிழவியுடன் சாவதானமாய் பேசிக் கொண்டிருந்தான். முனிசிபாலிடி அதிகாரிகள் தன்னை எவ்வாறு வருத்துகிறார்கள் என்பதை அவள் சொல்லிக் கொண்டிருக்க, இரக்கம் ததும்பக் கேட்டுக் கொண்டிருந்தான் அவன்.

மெல்ல மெல்ல மனிதர்கள் குறையத் தொடங்கியதை அவள் கவனித்தாள். தாதாவின் கையாட்கள் ஒரு சிலரைத்

தவிர வேறு யாரும் இல்லை. அவனும் உள்ளே போக எழுந்தான். அப்பொழுது போய் சேர்ந்தாள் அவனிடம். சாதாரணமாய் தன்னிடம் வரும் மக்களைவிட சிறிது உயர் மட்டத்திலிருந்த அவளைப் பார்த்த தாதா 'என்ன' வென்பது போல ஏறிட்டான்.

"நான் உன்னோடு கொஞ்சம் பேசணும்."

அந்த ஒருமை அழைப்பைக் கேட்ட தாதாவின் புருவம் உயர்ந்தது. அருகிலிருந்த தாதாவின் கையாள் ஓரடி முன்னோக்கி வைக்கப் போனவன் தாதாவின் பார்வையைப் பார்த்து சமாளித்துக் கொண்டான். விநாடி நேரத்தில் தாதா தன்னை சுதாரித்துக் கொண்டான்.

"தினந்தோறும் அதிகாலையிலேயே உன்னிடமிருந்து எதையாவது யாசித்தபடியே வந்து மொய்க்கும் ஜனங்களில் ஒருத்தியில்லை நான். அதனால் நீ இந்த சிம்மாசனத்தின் மேல் உக்கார்ந்து கொண்டு பேசத் தேவையில்லை. உள்ளே போய் பேசுவோமே?"

அவன் ஏதோ சொல்ல வாயைத் திறந்தவன், சட்டென்று மனம் மாறி, "சரி...வா" என்று உள்ளே நடந்தான். உள் அறை இன்னும் சாமானியமாய் இருந்தது. இருவரும் மேஜைக்கு எதிரும்புதிருமாய் உட்கார்ந்தார்கள்.

"அடேய், யார் வந்தாலும் இப்பப் பார்க்க முடியாதுன்னு சொல்லிடு" என்று பணியாட்களுக்கு உத்தரவிட்டான்.

பிறகு அவளை நோக்கித் திரும்பி, "உம், சொல்லு, யார் நீ?" கேட்டான்.

"அனுஷா."

படபடத்த அவனது கண் இமைகளைப் பார்த்துத் தன் பெயர் அவனுள் சலனத்தைத் தோற்றுவித்திருக்கிறது என்றுணர்ந்து கொண்டாள்.

ஆனால் அது ஓரிரண்டு விநாடிகள் மட்டுமே. அவன் சுதாரித்துக் கொண்டு, ''ஓஹோ, நீதானா அது?'' என்றான் சுருக்கமாய்.

''ஆம், நான்தான்.''

''சொல்லும்மா, நான் என்ன பண்ணணும் உனக்கு?'' மரியாதையோடு கேட்டான். அந்த ராஜதந்திரத்திற்கு வியப் படைந்தாள் அவள்.

ஆனால் சட்டென்று விஷயத்திற்கு வந்தவளாய், ''தாதா உனக்கும் எனக்கும் விரோதமும் கிடையாது. நாட்டை நீ எப்படி சூறையாடுகிறாய்னு தெரிந்த ஒரு சில பேரில் நானும் ஒருத்தி. அதை வெளிப்படுத்தி நான் ஒரு கட்டுரை எழுதினேன். அது உனக்கு அபரிமிதமான நஷ்டத்தை உண்டாக்கி விட்டது. அதற்குப் பதில் என்னை நன்றாய் பழி வாங்கிட்டாய். பாராட்டுக்கள்! இந்த நாட்டின் ஒரு மனுஷியாய் உன்னை அவ்வப்போது கண்டிக்கும் உரிமை எனக்குண்டு. அதுபோலவே என்னைப் பழிவாங்கும் உரிமை யும் உனக்குண்டு ஆனால் நான் இப்போது வந்தது உன் மேலிருக்கும் பகைமையால் இல்லை. ஏனெனில் அது தனிப் பட்ட மனிதருக்குச் சம்பந்தப்பட்டதில்லை. பந்தயத்திற்கும் குணாதிசயத்திற்கும் சம்பந்தப்பட்ட ஒன்று...''

''அம்மா நீ இங்கிலீஷில் ரொம்ப நன்றாய் பேசுகிறாய். ஆனால் எனக்கோ நீ இவ்வளவு வேகமாய் பேசினால் புரியாது. புரியவும் இல்லை.''

''இந்த ஹிப்போகிரசிதான் வேண்டாங்கிறேன் தாதா. மொழி பெயர்ப்பாளரின் உதவி இன்றியே நீ அமெரிக்க ஜனாதிபதியோடு கூட பேசக் கூடியவன்னு எனக்குத் தெரி யும். அதுசரி விஷயத்துக்கு வருவோம். சங்கருக்கும் எனக்கும் இடையேயுள்ள விரோதம்பற்றி நீ அறிவாய். உங்களிருவருள் இப்பொழுது யாரோ ஒருத்தர்தான் பிழைக்கப் போகிறார்கள்.

நான் உன்னிடம் இப்பொழுது வந்த காரணம் இந்த ரகளையில் நீ தலையிடாமலிருக்க ஒத்துக்கிறாயா இல்லையான்னு தெரிஞ்சுக்கத்தான்! சங்கருக்கு உன் அரவணைப்பு இல்லாவிடில் அவன் தண்ணீருக்கு வெளியே இருக்கும் முதலையைப் போன்றவன்தான்.''

''நீ என்ன பேசுகிறாய்னே புரிலை. அம்மா எனக்கு ரொம்ப வேலையிருக்கு இந்து-சீக்கியர் ஒற்றுமை உறவுக் கூட்டத்திற்குப் போகணும்'' என்று எழுந்திருந்தான்.

அவளும் எழுந்திருந்து, ''இங்கே, கிட்டத்தில் ஏதாவது பிரஸ் இருக்குமா தாதா?'' என்றாள்.

''எதுக்கு?''

''வத்சலா என்று ஒரு பெண். அஃப் கோர்ஸ் உனக்கு ஒன்றுமே தெரியாதுன்னு வை எங்க ஊரில் சங்கர்னு ஒரு குண்டர் படைத்தலைவன் இருக்கிறான். அவனைப்பற்றி அவளிடம் கிடைத்த ஒரு கடிதத்தை ஒரு ஆயிரம் காபிகள் பிரிண்ட் பண்ணி, பேப்பர்களுக்கும், பிரஸ்களுக்கும் தரணும். அதனால்...''

வசந்த் தாதாவிடம் அந்த நேரத்தில் தென்பட்ட பரபரப்பை அவள் அதற்குப் பிறகு என்றுமே மறக்கவில்லை. அவ்வளவு பெரிய மாஃபியா தலைவனான அவனே விநாடி நேரம் கலவரமடைந்தான்

''போயிட்டு வரேன் தாதா.மன்னித்துக்கொள். ஒன்றுமே தெரியாத உன்னை ஏதேதோ சந்தேகத்தால் வதைத்து நேரத்தை வீணாக்கிட்டேன்''

''நில்.''

அனுஷா திரும்பினாள்.

''அப்படி உட்கார்.''

அவள் உட்கார்ந்தாள்.

"அந்தக் கடிதம் உன்னிடம் எப்படி வந்தது?"

"நீங்க என்ன பேசுறீங்கன்னு எனக்கு புரியலை! எனக்கு ரொம்ப வேலை இருக்கு. அகிம்சா தத்துவ போதனைக் கூட்டத்துக்குப் போகணும்" என்றாள் அனுஷா.

"விஷயத்துக்கு வருவோம். சொல்லு. அந்தக் கடிதம் உனக்கு எப்படி கிடைத்தது?"

அதுவரை அவன் முகத்தில் நிழலாடிக் கொண்டிருந்த கருணைத் திரை இப்பொழுது இல்லை. அவ்விடத்தில் குரூரம் ததும்பி நின்றது. அனுஷா அவனையே பார்த்துப் பேசினாள்.

"உன் கையாட்கள்—நீ நினைப்பது போல கெட்டிக் காரர்கள் இல்லை தாதா. போலீஸ் ஸ்டேஷனில் எல்லா உண்மைகளையும் சொல்லிவிட்ட வத்சலா, தன்னிடம் அந்தக் கடிதம் இல்லை என்ற உண்மையையும் சொன்னாள். அந்த விஷயத்தை அந்த இன்ஸ்பெக்டர் உன் வரைக்கும் விட்டவிடாமல் அசிரத்தையாய் இருந்து விட்டார். வத்சலாவும் ஸ்ரீனிவாசனும் சேர்ந்துதான் இருந்தாங்க. வத்சலாவிடம் இல்லாதபோது அந்தக் கடிதம் ஸ்ரீனிவாசனிடம் இருக்கலாம் என்ற யோசனையே உங்களில் யாருக்கும் தோன்றாதது துரதிஷ்டந் தான்."

"அந்தக் கடிதத்திலிருக்கும் விஷயத்தையெல்லாம் கொட்டைப்பாக்களவு பெரியபெரிய எழுத்துக்களில் பத்திரிகை களில் போட்டாலும் எனக்கு எந்த நஷ்டமும் இல்லை. எதுவுமே ருஜுவாகிடாது" மிடுக்காய் சொன்னான் தாதா.

"அது எனக்கும் தெரியும். ஆனால் உன் நிலைமை ரொம்ப இக்கட்டில் ஆழ்ந்துவிடும். உன் ரகசிய இருப் பிடங்களையெல்லாம் மாற்றிக் கொள்ள வேண்டியிருக்கும்... உன் முக்கிய கையாட்களின் ஜாபிதா வெளிப்பட்டு விட்டதானால் அவங்களுக்கும் உனக்கும் ரொம்ப தொல்லை வந்து சேரும். இதற்கு முன்பு சந்தித்தாற்போல உங்களால்

பிறகு தன்னிச்சையாய் சந்திக்க முடியாது. போலீசாரின் பார்வை உங்கள் எல்லோரின் மீதும் பரவும். உன் கிடங்குகளின் விலாசங்கள் அந்த லெட்டரில் இருக்கு. ராவோடு ராவாய் அதிலிருக்கும் சரக்குகளை வேறு இடத்திற்கு அப்புறப்படுத்துவது முடியாத காரியம். எல்லாவற்றைக் காட்டிலும் முக்கியமாய பிறநாடுகளின் மாஃபியாவுடன் உனக்கிருக்கும் தொடர்புகளைப்பற்றி அதில் குறிப்புகள் தரப்பட்டிருக்கின்றன. சர்மாவுக்கு அதைப் பற்றிய சங்கதிகள் எல்லாம் அவ்வளவாய் தெரியாது. ஆனால் கொஞ்சம் கெட்டிக்கார சி. ஐ. டி. ஆபீசர்கள் யாராயிருந்தாலும் சுலபமாய் கண்டு கொள்வார்கள்.''

''அந்த ராஸ்கல் சர்மா...அவனுக்கு இத்தனை விஷயம் எப்படித் தெரிந்ததோ?'' தனக்குள் முணு முணுத்துக் கொள்வது போல சொன்னான்.

''சாவுத் துணிச்சல் மனுஷங்களுக்கு புத்திசாலித்தனத்தைத் தந்துடும் போலிருக்கு. சரி, இப்போ அதைப்பற்றி என்ன வந்தது? சொல்லு தாதா, என் உடன்படிக்கைக்கு நீ சம்மதமா?''

''அதென்ன உடன்படிக்கை?''

''இந்தக் கடிதத்தை நான் வெளிப்படுத்தலை. எனக்கும் சங்கருக்கும் இடையேயுள்ள விரோதத்தில் நீ தலையிடகூடாது.

''தலையிடக் கூடாதென்றால்?''

''அரசியலிலும், அரசாங்கத்தோடும் உனக்குள்ள செல்வாக்கைக்கொண்டு சங்கரைக் காப்பாற்றுவதற்குப் பயன்படுத்தக் கூடாது.''

''ஒருக்கால் பயன்படுத்தினாலும் அந்த விஷயம் உனக்கு எப்படித் தெரியுமாம்? சங்கரை உன்னால் எப்படி அரெஸ்ட் பண்ண வைக்க முடியும்? அப்படி அரெஸ்ட் பண்ண

வைத்துட்டு அதற்குப் பிறகு அந்த லெட்டரைப் பற்றி வெளியே சொல்ல மாட்டாய்னு என்ன நிச்சயம்?''

''கோடிக்கணக்கான பணத்தோடு பதுக்கல் வியாபாரம் பண்ணுகிறவன் நீ...பெரிய மனுஷங்களின் ஒப்பந்தங்களைப் பற்றி உனக்கா தெரியாது? இனி சங்கரை நான் எப்படி சமாளிக்கிறேங்கறதெல்லாம் உனக்குத் தேவையில்லை. அது எங்கள் இருவரின் சம்பந்தப்பட்ட விஷயம்...''

''நான் இந்த ஒப்பந்தத்துக்கு சம்மதித்தால் உனக்கும் எனக்கும் இடையே எந்த சச்சரவும் இல்லாதது போலத் தானா?''

''இந்த நாட்டின் ஒரு குடிமகளாய், கொஞ்சமோ நஞ்சமோ நாட்டுப் பற்றுடையவளான எனக்கு நீ என்றுமே விரோதிதான். ஆனால் உன்னை எதிர்ப்பதும், சிறைவாசம் பண்ண வைப்பதும் போலீஸின் கடமை. அவங்க எப்படித் தம் கடமையை நிறைவேற்றுகிறாங்க என்பதெல்லாம் அவங்களிஷ்டத்தைப் பொறுத்திருக்கு. இந்த கடிதம் காரணமாய் இல்லாமல் வேறு எந்த விதத்திலாவது நீ என் கையில் அகப்பட்டிருந்தால் விட்டிருக்க மாட்டேன். நான் சொல்ல வந்தது என்னவென்றால் எங்கவிஷயத்தை எங்களிடமே விட்டுவிடு. கடிதத்தைப் பொறுத்த வரையில் நான் உன்னை விட்டு விடுகிறேன். இந்த விஷயம் நம் இருவருக்குமிடையிலேயே இருக்கணும்.''

''நான் உன்னை இங்கிருந்து போக முடியாமல் பிடித்து அடைத்துப் போட்டுட்டால்?''...

அனுஷா நாற்காலியை விட்டு எழுந்து நின்று சிரித்தாள். அதில் என்ன கண்டானோ தாதா,

''உன் ஒப்பந்தத்திற்கு நான் சம்மதிக்கிறேன்'' என்றான்.

அனுஷா போனபிறகு தாதா வெகுநேரம் அப்படியே உட்கார்ந்திருந்தான். மீட்டிங்கிற்குப் போவதற்காகக் கூப்பிட உள்ளே வந்த தம் ஆளைப் போகும்படி சொல்லிவிட்டு, மேலும் கொஞ்ச நேரம் அப்படியே உட்கார்திருந்துவிட்டு, ஒரு தீர்மானத்திற்கு வந்தவனாய் போய் காரில் ஏறி உட்கார்ந்தான்.

''மீட்டிங்கிற்கா சார்?'' டிரைவர் கேட்டான்.

''இல்லை, சோட்டி கலீக்குப் போ...''

கார் அரை மணி நேரம் ஓடி ஒரு சிறிய சந்திற்குள் நுழைந்து தூரத்தில் போய் நின்றது. அங்கிருந்து ஐநது நிமிஷம் கால நடையாய் நடந்து முன் பக்கத்துத் திண்ணை இடிந்து சரிந்திருந்த ஒரு வீட்டிற்குள் நுழைந்தான் தாதா. உள்ளே ஐம்பது அறுபது போன்கள் இருந்தன. பட்கா (பிராக்கெட) நம்பர்கள் பலவித எல்லைகளுக்கும் சொல்லும் போன்கள் அவை. சாதாரண போன்கள் கூட அவற்றோடு கலந்திருந்தன. அவற்றுள் ஒன்றை எடுத்து நம்பரைச் சுழற்றினான். அதற்கு எஸ். டி. டி. இல்லை.

''ட்ரங்க் புக்கிங் ப்ளீஸ்.''

''எஸ் ஸார்''—மறு முனையில் இருந்து இனிய குரல் கேட்டது.

''லைட்னிங் கால் டு மெட்ராஸ் ப்ளீஸ்.''

''நம்பர் ஸார்''—குரல் இனிக்கக் கேட்டது.

தாதா நம்பரைச் சொன்னான் தன் நம்பரையும் தனக்குத் தேவையான நம்பரையும்.

''ஒரு நிமிஷத்தில் திரும்பவும் உங்களுக்குப் பண்றேன் சார்.'' இனிமையாய் சொல்லிவிட்டுப் போனை வைத்தான் ஆபரேட்டர்.

வசந்த் தாதா போனையே பார்த்தபடி உட்கார்ந்திருந்தான். ஒரு நிமிஷத்திற்குப்பிறகு போன் ஒலித்தது. ''உங்க நம்பர் சார்'' இனிய குரல் ......... மறு முனையிலிருந்து லயனுக்கு வந்த சப்தம்.

''ஹலோ.''

''சங்கர்?''

''நான்தான்.''

''நான் தாதா பேசறேன்.''

''உம்.''

''அந்தக் கடிதம் கடைசியில் அனுஷாவிடம் சிக்கியிருக்கு''

''அதுகிட்ட எப்படிப் போச்சு?''

''அது எங்கிட்ட வந்து ஒரு பேரமாடிற்று. நான் உன்னைப் பற்றி அக்கறை எடுத்துக்காம விட்டுட்டால் அது பார்த்துக்குமாம்.''

''எதை விட்டால் எதைப் பார்த்துக்குமாம்? இரண்டாந் தடவையா?''

''எதையோ, சொன்னதில் எனக்குப் பாதி புரிந்தது: பாதி புரியலை மொத்தத்தில் உன்னைப் பழி வாங்கப் போறான்னு தோணுது.''

மறுமுனையில் சங்கர் சிரிப்பு, ''பார்ப்போம்.' மெட்றசுக்கு வந்தால் இங்கேயே முடிச்சுடறேன்.''

''அவ்வளவு சுலபமில்லைன்னு தோணுது. அந்த சர்மா எழுதி வைத்ததைப்போல தான் செத்து விட்டால் அந்தக் கடிதத்திலிருக்கும் விஷயம் வெளிப்பட்டு விடும்படி ஏதாவது ஏற்பாடு பண்ணியே வைத்திருப்பாள். அதனால்தான் நான் அவள் ஒப்பந்தத்துக்கு ஒப்புக்கொண்டது போல நடித்தேன். நமக்கு இந்த விதத்தில் கொஞ்சம் அவகாசம் கிடைக்கும். கொஞ்சம் ஜாக்கிரதையாய்... ஹலோ... ஹலோ...'

லயன் கட் ஆகி விட்டது.

''ஹலோ... ஹலோ... ஆபரேட்டர்—'

''எஸ் மிஸ்டர் வசந்த் தாதா...' 'அதே இனிய குரல்.

தாதா திடுக்கிட்டான் வாழ்க்கையிலேயே ஓரிரண்டு முறைதான் அவன் திடுக்கிட்டிருப்பான். அதில் இது ஒன்று.

''யாரு?''

''நான்தான் அனுஷா! நீ ரொம்ப கெட்டிக்காரன் தாதா ஆனால் என் புத்திசாலித்னத்தைக் கூட ஒரு தடவை நிரூபிச்சுக்கலாம்னு தோணிச்சு. இனி ஒரு போதும் இந்த மாதிரி யோசிச்சுப் பாராமல் போனைப் பயன் படுத்தாதே. நீ வாக்குத் தவறி விட்டாய் ஆனால் நம் ஒப்பந்தம் கான்சல் ஆகிவிட்டது. பை தி பை உன் பிரம்மாஸ்திரத்தை இந்த டெலிபோன் ஆப்ரேட்டரின் மேல் ஏவாதே! இனி உன் வலது கையோடு மனமாரப் பேசிக்கோ... குட்பை...'' டிக்...டிக்...

''ஹலோ தாதா, நான்தான் சங்கர்... என்னது யாரோ நடுவில் லைனுக்கு வந்துட்டாங்க போலிருக்கே?...ஹலோ... ஹ...லோ...' 'வசந்த் தாதா பேசவில்லை. மெதுவாய் போனை வைத்துவிட்டு நெற்றியில் படிந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டான்.

# 26

''இவ்வளவு நேரமாய் என்ன நடந்தது? எங்கே போயிருந்தீங்க இத்தனை நேரமும்?'' வத்சலா ரஜினியை கேட்டாள்.

முக்கிய நண்பர்கள் வந்தாங்க, வீடு வரைக்கும் கொண்டு போய் இறக்கி விட்டுட்டு வந்தேன்.''

''எனக்கு பயமாயிருக்கு.''

''எதற்கெடுத்தாலும் பயந்துக் கிட்டேயிருப்பது ஆரோக் கியமானதில்லை. நீ இன்னும் உறங்காமல் இருப்பாய்னு தெரிந்துதான் மேலே வந்தேன்.

அவள் கொஞ்சம் தடுமாற்றமடைந்து 'நானும் உங்களோடு வந்து படுத்துக்கறேன்'' என்றாள்.

கதவைத் தாண்டப் போன அவன் நின்று சிரித்துவிட்டு· ''உங்களோடுன்னு சொன்னது ஒருமையைக் குறிக்குமா அல்லது பன்மையா?'' என்றான்.

அவள் முகம் சிவந்தது. அவள் ஏதோ சொல்ல வந்தாள். அதற்குள் அவன் ''நடு கதவைத் திறந்து வைக்கிறேன். லைட்டைப்போட்டுவைக்கிறேன் தூங்க முயற்சி பண்ணு. அப் படி ஒருக்கால் தூக்கம் வராமல்போனால்...எங்களோடு சேர்ந்து படுத்துக்கலாம்'' என்று சொல்லிவிட்டுப் போய் விட்டான்.

''என்ன சொல்கிறாள்?'' பில்வன் கேட்டான்.

சின்னப் பொண்ணு என்ன பேசணும், என்ன பேசக்கூடா துன்னு கூட தெரியலை.''

"சின்னப்பொண்ணா...நல்லாயிருக்கு; 'பால் குடிக்கிற பச்சைக் குழந்தைன்னு சொல்லாமல் போனாயே! அந்தப் பொண்ணோட உருவத்தைப் பார்த்தாயா, ஒண்டர்ஃபுல் இல்லே?"

"அந்தப் பொண்ணைப் பார்த்தால் உனக்கு எல்லாமே மறந்து விடும் போலிருக்கு."

"இல்லை! அந்தப் பெண் என்னை 'அங்கிள்'னு கூப்பிட்டதுமே எனக்கு எந்த உணர்ச்சியும் இல்லாமல் போய் விட்டது. ஆனால் அந்தப் பெண்ணின் பார்வை... உன்மேல்"

"சும்மாயிரு பில்வா. அந்தப் பொண்ணு அந்த மாதிரி டைப் இல்லை. ரொம்ப நல்லபெண்."

"அந்தப் பெண்ணின் குணநலன்களைப் பற்றி நான் பேசலை. வயதைப்பற்றி அதுவும் நீ சின்னப் பொண்ணுன்ன தால் சொல்றேன்."

உள்ளேயிருந்த வத்சலாவின் காதில் இவ்வார்த்தைகள் விழுந்தன. அதைக் கேட்டு அவள் இம்முறை வெட்கப்பட வில்லை. குப்புறப்படுத்தவாறு ரத்த ஓட்டம் நின்று போய்விடு மாறு அழுந்த தலையணையில் முகத்தைப் பொத்திக் கொண்டாள்...பத்து நிமிடங்களுக்குப் பிறகு உள்ளே கையை விட்டுத் துழாவி எடுத்து வெளியே வீசி எறிந்தாற்போல மன திற்குள்ளிருந்து பயம் போய் விடவே உறக்கத்தில் ஆழ்ந்து விட்டாள்.

அடுத்த அறையில் பில்வனின் குறட்டை சப்தம் கேட்டது. ரஜினி மட்டும் உறங்கவில்லை. அதற்குள் இண்டர்காம் ஒலித்தது.

இருபத்திநான்கு மணி நேரமும் ரிசப்ஷனில் இருக்கும் ஆப்ரேட்டர், "சார் உங்களைப் பார்க்க இன்ஸ்பெக்டர் வந் திருக்கிறார்" என்றாள் போனில்.

அவன் எழுந்து கீழே வந்தான். கீழே அவனுக்காகக் காத்திருந்த இன்ஸ்பெக்டர் அவனைப் பார்த்துக் கையை நீட்டினார். அவர் கையில் ஒரு காகிதம் இருந்தது.

''மிஸ்டர் ரஜினி, உங்க வீட்டை சோதனை பண்ணணும். இதோ சர்ச் வாரண்ட்'' என்றார்.

ரஜினி முகத்தில் எந்த மாறுதலும் இல்லை. ''எந்த விஷயமாய்?'' என்றான், காகிதத்தை வாங்கிக்கொண்டு.

''உங்க ஓட்டலில் போதைப் பொருட்கள் இருப்பதாய் புகார்.''

ரஜினி கையிலிருந்த காகிதத்தைப் பிரித்துப் பார்த்து விட்டு, ''யார் தந்தது. இந்த வாரண்டை? சங்கரா?'' என்றான்.

''நீங்க அதிகப் பிரசங்கித்தனமாய் பேசினால் அரஸ்ட் பண்ண வேண்டியிருக்கும்.''

ரஜினி வழி விட்டான்.

இன்ஸ்பெக்டர் படியேறத் தொடங்கினார்.

அதற்குள் பில்வன் படியிறங்கி எதிரே வந்து கொண்டிருந்தான். இன்ஸ்பெக்டரைப் பார்த்ததும் நின்றான்.

''சர்ச் வாரெண்ட் கொண்டு வந்திருக்கேன் பில்வா! வீட்டையெல்லாம் சோதனை போடுவதற்கு'' இன்ஸ்பெக்டரின் குரலில் ஒரு விதமான பழிப்பு எதிரொலித்தது. பில்வன் ஒன்றும் புரியாமல் ரஜினியைப் பார்த்தான். ரஜினி கையிலிருந்த சர்ச் வாரெண்ட்டை படித்து முடித்து விட்டு அப்பொழுதுதான் நிமிர்ந்தான்.

''இன்ஸ்பெக்டர்...''

''எங்க ஓட்டலில் போதைப் பொருட்கள் இருப்பதாய் சொல்லித்தானே சர்ச் வாரெண்ட்?''

''ஆமாம்.''

''யார் தந்தாங்க இதை?''

''அதைப்பற்றிக் கூட அதில் இருக்கு ரஜினி.''

''இதை ஏற்காவிட்டால்?''

''இவ்வளவு பெரிய ஓட்டலை நடத்துகிறாய். செக்ஷன் 41-இந்தியன் கிரிமினல் ப்ராசீஜர் கோடைப் பற்றித் தெரியாமலிருந்திருக்காது உனக்கு...''

ரஜினி அந்த வாரெண்ட் காகிதத்தை சுக்கு நூறாய் கிழித்தெறிந்தான். அதைப் பார்த்து பில்வன் ஆச்சரியமடைந்தான். அந்தத் துண்டுகளைக் குப்பைக் கூடையில் விட்டெறிந்தபடி, ''ஓ கே. இன்ஸ்பெக்டர் என்னை அரெஸ்ட் பண்ணுங்க'' என்றான.

இன்ஸ்பெக்டர் வாயடைத்துப் போய் நின்றார். ரஜினி சோபாவில் போய் உட்கார்ந்து ''பில்வா! இன்ஸ்பெக்டருக்கு ஒரு கூல்டிரிங்க் கலந்து கொண்டு வா'' என்றான்.

இன்ஸ்பெக்டர் தன்னையறியாமல் நாற்காலியில் உட்கார்ந்தார்.

''இன்ஸ்பெக்டர்! உங்க ஸ்டேஷனுக்கு வாரந்தோறும் மாமூல் அனுப்பி வைப்பதில் நான் ஏதாவது தாமதம் பண்ணினேனா?''

''இல்லை.''

''உங்களுக்கும் எனக்கும் ஏதாவது விரோம் உண்டா?''

''இல்லை ரஜினி! ஆனால் என்னைச் சரியாய் புரிந்துக்கோ. மேலிடத்திலிருந்து வந்திருக்கும் ஆர்டர் இது.''

''தொப்பியைக் கொஞ்சம் எடுத்தால உங்க காதில் பூ ஏதாவது இருக்கான்னு பார்க்கிறேன். என் காதில் அந்த மாதிரி எதுவும் கிடையாதுன்னு...''

''ரஜினி!'

''சர்ச் வாரெண்ட்டை கவனமாய் தயாரித்திருக்காங்க. முத்திரையைக் கூட அதே போல தயாரித்திருக் காங்க... ஆனால் கொஞ்சம் கூர்ந்து கவனித்தால் அது நீங்க, அதாவது சங்கரும், நீங்களும் சேர்ந்து தயாரித்திருப்பதுன்னு சுலபமாய் புரிந்து விடும்.''

இன்ஸ்பெக்டர் வாயைத் திறக்கவில்லை.

''இன்ஸ்பெக்டர்! சங்கர் உங்க பர்சை நன்றாய் நிரப்பி விட்டு அவன் செய்யும் திருட்டு வியாபாரங்களை ஒப்பிட்டால் அவன் உங்களுக்கு வழங்குவது மிகுச் சொற்பமே. அந்த விதத்தில் பார்த்தால் — என் வியாபாரம் சின்னதானாலும் நான் உங்களுக்கு இனாம் 'தந்து கொண்டேதானிருக்கேன். அதற்கு பிரதிபலனாய் இந்த மாதிரி வேலையை மட்டும் உங்களிடமிருந்து என்னால் எதிர்பார்க்க முடியாது. இன்னொரு விதத்தில் சொல்லப்போனால் எங்கள் இருவரைக் காட்டிலும் பெரிய முதலை நீ. எங்களிருவரிடமிருந்தும் பணம் வாங்கிக்கொண்டு எங்களிருவருக்குமிடையே தகராறையும் மூட்டி விடுகிறாய்.'

''யூனிஃபாரத்தில் இருக்கேன். கொஞ்சம் மரியாதையாய் பேசு!'

''தரகர்களுக்கு துணியால் மதிப்பு வந்துடாது இன்ஸ் பெக்டர்! என்னை மேலும் கோபமுண்டாக்கி என்னிடமிருந்து மேலும் இது போன்ற விஷயங்களை வரவழைக் காதீங்க. உங்க போலீஸ் இலாகாவின் மேல் கொஞ்ச நஞ்சமாவது மரியாதை இருக்கிறவங்களுக்கு கூட அது போயிடும். சங்கரை இந்த மாதிரி யோசனைகளிலிருந்து விட்டு விலகிக் கச் சொல்லுங்க. உங்களுக்கும் அதையே சொல்றேன்...''

''என் ஆலோசனை என்னவென்றால் சங்கரோடு எந்த தகராறும் வெச்சுக்க வேண்டாங்கறதுதான்!''

''தாங்க்ஸ்.''

''இதோடு நின்னுட்டதாய் நினைத்துடாதே சங்கர். என் மூலமாய் இல்லாவிட்டாலும் எங்க டி. எஸ். பி. மூலமாவது உங்க வீட்டை சோதனை போட்டுடுவான்''

''நன்றாய் நினைவூட்டினீங்க. உங்க டி. எஸ். பிக்குச் சொல்லு முந்தா நாள் பார்ட்டிக்கு வந்ததுக்கு நன்றின்னு! அந்த வீடியோ ஃபிலிம் ரொம்ப நல்லா வந்திருக்கு ரிகார்டிங் கூட நன்றாக நடந்தது. எங்க காபரே டான்சர் அவர் அசிங்கமான நடத்தைக்குக் கம்ளைண்டு தர எண்ணினாள். வேண்டாம்னு தடுத்தேன், அதைப்பற்றி திகிலடைய வேண்டாம்னு சொல்லு.''

இன்ஸ்பெக்டரின் முகம் மேலும் வெளுத்து விட்டது.

''அ...அந்த... பார்ட்டியில் நானும் இருந்தேன்...'' என்றார் ஈனஸ்வரத்தில்.

''சே, அந்த ரூமில் இல்லையே? உங்க இலாகாவிலுள்ள மேலதிகாரின்னு சொன்னதுமே உங்களுக்கு வியர்த்துக் கொட்டத் தொடங்கிவிட்டதா? உங்க குரூப் எல்லாம் வேறு அறையிலும், ஹெட்கான்ஸ்டபிளின் லெவலிலிருந்து கீழ்மட்ட ஊழியர்கள் எல்லோரும் வெளித்தோட்டத்திலும் உட்கார்ந்திருந்தாற்போல ஞாபகம். அங்கே தானே உங்க ஆட்கள் இருவர் வாந்தி எடுத்து மயங்கி விழுந்த ஈங்க கூட....

''இப்போ அந்த விஷயமெல்லாம் எதுக்கு ரஜினி? ரிகார்டான அந்த காஸெட்டுக்களைத் தந்துடு. எங்க டி.எஸ். பி. சந்தோஷப்படுவார்.''

''வேண்டாம். நான் சொன்னேன்னு சொல்லு. எப்ப வாவது எங்க வீட்டுக்கு உன்னைப்போல யாராவது வந்தால் காட்ட ஏதுவாய் இருக்கும். அது என்னிடமே இருக் கட்டும். நாளைக்கு அவரும் ஒரு சர்ச் வாரெண்ட்டை எடுத்துட்டு வந்தால் எப்படியும் தரவேண்டாமா?''

"இனி அவர் வரமாட்டார்"

"வருவதும் — வராததும் நீ எப்படி எடுத்துச் சொல்கிறாய் என்பதைப் பொறுத்திருக்கு. நாளைக்குக் கையைச் சுட்டதுமே அவர் சஸ்பெண்டு ஆகி, 'இதுக்குப் பின்னால் இவ்வளவு கதை இருக்குன்னு நீ முன்பே ஏன் என்னிடம் சொல்லவில்லை'' என்று அவர் உன்மேல் எரிந்து விழுந்தால் என்னை நிந்திக்காதே. எதற்கும் நல்லதுன்னு இந்த சம்பாஷணையைக் கூட ரிகார்டு எடுத்து வைத்திருக்கேன்.''

''இன்ஸ்பெக்டர் கர்சீப்பால் முகத்தைத் துடைத்துக் கொண்டே, ''இப்போ நாம் பேசின இந்த பேச்சு கூட ரிகார்டு ஆயிட்டுதா?'' என்றார்.

''அதான் சொன்னேனே, எதற்கும் நல்லதுன்னு......''

இன்ஸ்பெக்டர் நாற்காலியை விட்டு எழுந்திருந்து, ''போயிட்டுவரேன்'' என்றார்.

''நல்லது. சங்கரிடம் சொல்வீர் இல்லையா?''

''சொல்றேன்...''

இன்ஸ்பெக்டர் போனதும் பில்வன் விழுந்து விழுந்து சிரித்தான். ரஜினியும் அவனோடு சேர்ந்து கொண்டான்.

''அன்றைக்கு நாம் கொடுத்த பார்ட்டிக்கு போலீஸ் அதிகாரிகள் எல்லோரும் வந்தது உண்மைதான். ஆனால் வீடியோ அதெல்லாம் —ஹ ஹ்ஹா — உண்மையில் இவன் அதையெல்லாம் நம்பிட்டான் என்றால்...'' என்று திரும்பவும் சிரித்தான்.

''வீடியோவில் படம் தெரிகிறாப்பல வரணுமானால் வெளிச்சம் கண்ணைப் பறிப்பதுபோல இருந்திருக்கணும்னு கூட தெரியாதவனாய் இருப்பதால்தான் இன்னும் போலீஸ் இலாகாவில் இருக்கிறான். ஓ.கே. பில்வா நேரமாயிடுத்து, போய்படு. இனி இன்றிரவு அந்த சங்கர் பயல் வேறெந்த முயற்சியும் பண்ணமாட்டான்னுதான் நம்பறேன்'' என்று எழுந்திருந்தான் ரஜினி.

# 27

''உன்னையொத்தவன் போலீஸ் டிபார்ட்மெண்ட்டில் இன்னும் நிலைத்திருக்கிறான்னால் நம்பத்தான் முடியலை. பாவம், ரொம்ப பாடுபட்டிருக்கிறாய்'' என்றாள் அனுஷா ஃபைலைக் கீழே வைத்தபடி.

இரவு இரண்டு மணி வரையிலும் அவள் படித்துக் கொண்டேயிருந்தாள். வசந்த் தாதாவைப் பற்றிய ஃபைல் அது. முழு விவரங்களும் அதில் இருந்தன. எவ்வளவோ ஆண்டுகள் சிரமப்பட்டு ஸ்ரீகாந்த் தயாரித்திருந்தான் அந்த ஃபைல்களை. அவன் பட்ட கஷ்டத்தை அதிலிருக்கும் ஒவ்வொரு வார்த்தைகளும் பிரதிபலித்தன... அனுஷா சொன்னாள். ''இவ்வளவு விரோதியான உன்னை இதுவரை தாதா இந்த எல்லையிலிருந்து டிரான்ஸ்பர் பண்ண வைக்காமல் போனதுதான் ஆச்சரியம்.''

''ரொம்ப முயற்சி பண்ணினான். ஆனால் அரசாங்க அதிகாரிகளில் சிலர் நேர்மையானவங்க இல்லாமல் போகலை. இனி எது பண்ணியும் லாபமில்லை. நான், பல்லைப் பிடுங்கிய பாம்பாயிட்டேன். அவனுக்குத் தெரியும்.''

''எப்படி?''

''இப்போ நீ படித்த ஃபைல்களின் நகல்கள் எல்லாம் அவனிடம் இருக்கு.''

''மைகாட்.''

''ஆமாம் எங்க இலாகாவின் சாமர்த்தியம் அது. அதன் மூலம் அவன் முன்கூட்டியே ஒவ்வொன்றுக்கும் தகுந்த

ஆதாரத்தை ஏற்படுத்திக்கிட்டே வரலானான். கோர்ட்டின் பிடியிலிருந்து சுலபமாய் தப்பிக்க முடிந்தது. என்னையே கோர்ட்டைச் சுற்றிச் சுற்றி வரப் பண்ணிட்டான்.''

''அதனால் நீ மனம் ஒடிஞ்சுட்டாய்.''

''ஒவ்வொரு மனிதனுக்கும் பிரேக் ஈவன் பாயிண்ட்டுன்னு ஒன்று உண்டு அனுஷா! அவன் என்னை மானசீகமாய் ரொம்பவும் தளரச் செய்துட்டான். எங்க இலாகாவின் மீதே நான் அலுத்துப் போகும்படி பண்ணிட்டான்.''

''எப்படி?''

''எப்புடியரவது? என் லீவெல்லாம் அவன் என் மேல் போட்ட கேசுங்களுக்காக கோர்ட்டைச் சுற்றி வருவதற்கே செலவழிக்கச் செய்துட்டான். எனக்கு இலாகாவிடமிருந்து இரக்கத்தைத் தவிர வேறொன்றும் கிடைக்காது. எவ்வளவு நாள்தான் தனியாய் போராடுவேன் நானும்? இந்த முடிச்சை அவிழ்க்கவே முடியாது... அவன் ராஜதந்திரமும் அதுதான்...! எதிராளி பலத்தை இழக்கச் செய்து விடுவது! அவன் நினைத்தால் ஏதாவது ஆக்சிடென்ட்டை ஏற்படுத்தி என்னை சாகடித்துடலாம். ஆனால் சாகடிக்கமாட்டான். ஆட்டங் காட்டி அழவைப்பான். இதுதான் அவனோட சாடிஸ்ட் மென்ட்டாலிட்டி!''

''நானும் அவனைக் கொல்லமாட்டேன். ஆட்டங்காட்டி அழவைக்கிறேன்'' மனதிற்குள் எண்ணிக் கொண்டாள் அனுஷா. கிட்டே வந்து அண்ணனிடம் சொன்னாள். இந்த ஃபைலுங்க எல்லாத்தையும் படித்துப் பார்த்த பிறகு நீங்க அவன் மேல் போட்ட எந்த கேசுமே நிலைக்காமல் போய் விட்டது. இதெல்லாம் கேவலம் இலாகா முறைப்படி நடந்த விசாரணையும்—எல்லோருமே அறிந்த உண்மைகளுமே தவிர வேறில்லை.

''வேறு வழியில்லை. எதிராளி சின்னவனாயிருந்தால் லாக்கப்பில் வைத்து எந்த விதத்திலாவது ரகசியத்தை

வரவழைக்கலாம். ஆனால் நாங்க ஜாமீன் இல்லாத வாரெண்ட்டைக் கொண்டு வந்தால், அவன் எங்களையும் முந்திக் கொண்டு ஜாமீனை சம்பாதித்திருப்பான். ஒரு நொடியில்வெளியே வந்து எல்லாவற்றையும் பூசி மெழுகி விட வல்லவன்.''

''உனக்கு அவன் மேல் அவ்வளவு பிடிவாதம் இருந்தால் ஒரு போலீஸ் அதிகாரியாயில்லாமல் சாதாரண மனித னாகவே அவனை எதிர்த்து நிற்கலாமில்லை?''

''எப்படி?''

''ஒரு பொய்க் கேசை அவன் மேல் கொண்டு வரலாம். உதாரணமாய் ஒரு ஆயுதக்கிடங்கு அவனுக்கு இருக்குன்னு உன்னால் நிரூபிக்க முடிந்ததுன்னு வை. அதன் மூலம் புரட்சிக்காரர்களுக்குத் துப்பாக்கிகளை சப்ளை பண்ணு கிறான்னு சாட்சிகளைக் கொண்டு வரலாம். தூக்குத் தண்டனைக்குச் சமமான தண்டனை அவனுக்கு விதிக்கப் படலாமில்லையா?''

''அநியாயம்.''

அவன் வெகுண்டு எழுந்தான். ''அநியாயமா? எது அநியாயம்? நாட்டுக்குச் சமமான இன்னொரு அரசாங்கத்தை நடத்திட்டு, நாட்டு நலனைச் சூறையாடும் ஒரு குண்டர்கள் தலைவனாய் வாழ்ந்து கொண்டிருக்கிற அவனைப் பிடித்து சிறைக்குள் தள்ளுவதற்கு நியாயம் அநியாயம்னு இரண்டு வேறு வேறாய் கூட இருக்கா?''

'நீ நினைப்பது போல அவ்வளவு சுலபமானதில்லை அனுஷா''

ஏன் சுலபமில்லை? பார்த்துக் கொண்டேயிரு. நானா அவனான்னு சீக்கிரத்திலேயே தெரிந்து விடும்.''

''போலீஸ் அதிகாரியாய் இல்லை. ஒரு அண்ணனாய் ஆலோசனை சொல்றேன். இதில் நீ தலையிடாதே. முடிந்த வரையிலும் நாங்க பார்த்துக்கறோம்.''

''பத்து வருஷமாய் பார்த்துட்டு வந்து, என்ன பண்ணினீங்க?'' ''உங்களால் ஒன்றுமே பண்ணிட முடியாது.''

''நீ மட்டும் என்னத்தைப் பண்ணிடுவாய்?''

''எதைப் பண்றேனோ பண்ணலையோ, முதல்லபிளாட், கார் இரண்டையும் விற்றுட்டேன்.''

ஸ்ரீகாந்த் அதிர்ந்தவனாய், ''வாட்? எதுக்கு?'' என்றான்.

''வேலையிலிருந்து எப்படியும் சஸ்பெண்ட் ஆயிட்டேன். இனி எனக்கு அந்த ஊரில் என்ன வேலை? ஒரு அண்ணனாய் என்னைப் போஷிப்பது உன் கடமை. அதனால் உன்னிடம் சமர்த்துத் தங்கையாய் வந்து சேர்ந்துட்டேன்.''

''விளையாட நேரமில்லை இது.''

''இதில் விளையாட்டு ஒன்றுமில்லை. நீதானே சொன்னாய் ஒவ்வொரு மனிதனும் ஏதாவது ஒரு இடத்தில் 'பிரேக்' ஆகிவிடுவான்னு! அஸ்திவாரத்தையும் பலமாய் கட்டிட்டு வரேன். அவன் கோட்டைக்குள் கோட்டையாய் கட்டிக் கொண்டே நாட்டிலுள்ள எல்லோரையும் விலைக்கு வாங்கிட்டான். அந்தக் கோட்டையைத் தகர்த்துக் கொண்டு நான் அதற்குள் நுழைய வேண்டுமானால் நானும் அவன் ஆட்கள் சிலரை விலைக்கு வாங்கணும். அதனால்தான் என் சொத்துக்களையெல்லாம் பணமாய் மாற்றினேன். அதான் சொல்லிட்டேன். நானா அவனான்னு தெரிஞ்சுடணும்னு.''

அவன் வெகு நேரம் வாயைத் திறக்கவேயில்லை. தங்கையின் பிடிவாதத்தை அவன் அறிவான். அதே சமயம் தாதாவின் சக்தி சாமர்த்தியங்களையும் நன்றாய் அறிவான்.

கடைசியாய் ஒரே ஒரு வார்த்தை சொன்னான்,

''நீ இதில் ஜெயித்துட்டால் என்னைக் காட்டிலும் சந்தோஷப் படக்கூடியவங்க வேறு யாருமில்லை, ஆனால நீ எதிர்க்கப் போவது பெரிய மலையை!''

அதற்கு பதிலளிப்பது போல டெலிபோன் ஒலித்தது. அவன் எடுக்கப் போவதற்குள் அனுஷா அதனை எடுத்து, 'ஹலோ' என்றாள்.

''நான்தான் அரவிந்தா'' மறு முனையிலிருந்து கேட்டது.

''எங்கேயிருந்து?''

''அமெரிக்காவிலிருந்து. இங்கே இப்போது பகல். அங்கே நள்ளிரவாய் இருக்கலாம், சரிதானே? வீணா தூக்கத்தைக் கெடுத்துட்டேன்.''

''பரவாயில்லை. எப்போது இந்தியாவுக்கு வருகை?''

''இன்னும் ஒரு மணி நேரத்தில் கிளம்பப் போகிறோம் அதனால்தான் அவசரமாய் பண்ணினேன். உனக்காக என்ன வாங்கிட்டு வரது?''

''என்ன வாங்கிட்டு வருவாய்?''

''டாப்ளர்ஸ்.''

''அப்படீன்னால் கண்டிப்பாய் வாங்கிட்டு வா. நான் ஏர்போர்ட்டுக்கு வரவா?''

''வா.''

''எத்தனை மணிக்கு இங்கே வந்து இறங்குது?''

''ஐந்து மணிக்கு.''

''சரி வைத்துடறேன்.''

''ஓ.கே.''

கேட்டுக் கொண்டிருந்த ஸ்ரீகாந்த்திற்கு ஒன்றுமே புரியவில்லை. ''இதெல்லாம் என்ன?'' என்றான்.

அனுஷா சிரித்தாள். டெலிபோன் எக்ஸ்சேஞ்ஜிலிருந்து தாதா யாருக்கோ போன் பண்ணி ஏதோ முக்கியமான

விஷயத்தைச் சொன்னான். அது டேப் பண்ணப்பட்டது. இந்த அரவிந்தா உரஃப் அம்மாஜீ என்ற பெண் எக்ஸ்சேஞ்ஜ் மூலம் அதனை ரிகார்ட் பண்ணினாள். ஏதோ முக்கியமான செய்தியாய்தான் இருந்திருக்கணும். அப்படி ஏதாவது இருந்தால் எவ்வளவு நள்ளிரவானாலும் சரி போன் பண்ணுன்னு சொல்லியிருந்தேன். உன் போன் பக்கிங் பண்ணப்பட்டிருப்பதால் கொஞ்சம் கோட்பாஷையில் பேசினாள், அவ்வளவுதான்.''

ஸ்ரீகாந்தின் முகம் ஜிவுஜிவுத்தது. ''என் போன் ஒண்ணும் பக்கிங் பண்ணப்படலை. தினமும் செக் பண்ணிட்டுத்தானே வரோம்'' என்றான்.

அனுஷா சிரித்தாள். ''உங்க இலாகாவை விட அந்த கள்ளக் கடத்தல்காரங்க குறிப்பு உணர்த்துவதில் ரொம்பவும் முன்னேறிட்டாங்க அண்ணா! ஒரு டி.சி.பி.யாய் உண்மையைச் சொல்லு, வயர்லெஸ் மூலமாய் பக்கிங் பண்ண, நம்ப டெலிபோனில் பேசுவதை மற்றவங்க கேட்க முடியுமா?'

''ஸ்காட்லாந்துயார்டில் மட்டுந்தான் சமீபத்தில் அது புதிதாய் கொண்டு வரப்பட்டிருக்குன்னு கேள்விப்பட்டேன்.'

''உலகத்தில் எந்த மூலையில் எது புதிதாய்க் கண்டு பிடிக்கப்பட்டாலும் அது தமக்குப் பயன்படுமானால் லட்சக் கணக்கில் செலவழித்தாவது அதைத் தமக்குச் சொந்தமாக்கிக் கொள்ளத் தயங்கமாட்டாங்க. அதனால்தான் அவங்க உங்களை விட மேல் படியில் இருக்காங்க. அதே உபகரணத்தை உங்க இலாகா பெற வேண்டுமானால் ஐந்து ஆண்டுகள் வரையிலும் ஃபைல் நகரும்.'

ஸ்ரீகாந்திற்கு என்ன பேசுவதென்றே புரியவில்லை. இவ்வளவு ஜாக்கிரதைகளை மேற்கொண்டிருந்தும் தன் போன் பக்கிங் பண்ணப்பட்டிருக்கிறதென்றால் நம்பத்தான் முடியவில்லை அவனால். தன் போனைப் பரிசோதித்த நிபுணரும் கூட தாதாவின் ஆளாய் இருந்தாலேயொழிய அது

சாத்தியமில்லை. என்னவோ? இந்த அரசாங்க எந்திரங்களில் எதுவும் நடக்கலாம். செய்வதறியாது தலைகுனிந்தான் ஸ்ரீகாந்த்.

# 28

காலை ஐந்து மணிக்குத் தன்னை யாரும் பின்தொடரவில்லை என்பதைச் சந்தேகமற தெரிந்து கொண்டு, டெலிபோன் எக்சேஞ்சிற்குக் காரில் போனாள் அனுஷா. அவளை எதிர்பார்த்துக் கொண்டிருந்த சூப்பர்வைசர் அவளிடம் ஒரு கேசட்டைத் தந்து, ''ராத்திரி இரண்டரை மணிக்கு மெட்ராசிலிருந்து நீங்க கொடுத்த நம்பருக்கு வந்த கால் இது'' என்றாள்.

சர்மா எழுதியிருந்த கடிதத்தில் அந்த நம்பரும் இருந்த விஷயத்தைப் பற்றி நாதாவுக்குச் சந்தேகம் வரவில்லை என்று தெரிந்து கொண்டாள். அவளுக்கு நன்றி சொல்லி விட்டு அந்த கேஸட்டை எடுத்துக் கொண்டு காரில் வீட்டிற்குப் புறப்பட்டாள்.

அதுதான் போலீசாருக்கும் வெளி மனிதர்களுக்குமுள்ள வித்தியாசம். போலீசே அந்த நம்பரை ட்ராப் பண்ண வேண்டி நேர்ந்தால், எவ்வளவோ பெரிய ஏற்பாடுகளைப் பண்ண வேண்டியிருக்கும். அவள் சின்ன சிநேகத்தாலும் நூறு ருபாய் செலவாலும் அதனைச் சாதித்து விட்டாள்.

வீட்டிற்கு வந்து டேப்பைப் போட்டுக் கேட்டாள்.

''நான்தான் சங்கர்.''

''என்ன வாச்சு? வத்சலா கிடைத்தாளா?''

"இல்லை. அந்த ராஸ்கல் இன்ஸ்பெக்டர் வெறுங் கையோடு திரும்பி வந்துட்டான். வாரெண்ட் நாம்ப தயாரித்ததுன்னு தெரிந்து விட்டது அவங்களுக்கு."

இங்கிருந்து தாதா ஏதோ முணு முணுத்தான்.

"அனுஷாவிடமிருந்து அந்த லெட்டர் கிடைத்தா லொழிய நம்ப பரபரப்பு அடங்காது. என்ன ஆகணுமோ, அதே ஆயிடுத்து தாதா. நீ அவளை ஒழித்துக்கட்ட வழிபாரு. நான் இந்த மூவரின் சங்கதிகளைப் பார்த்துக்கறேன். இது ஒன்றுதான் கடைசி வழி. பார்ப் போம். அந்த லெட்டர் மட்டும் வெளிப்பட்டுவிட்டால் எவன் என்ன பண்ணுவானோ..."

"அனுஷா சங்கதியைப் பார்த்துக்கத் தேவையில்லை, அவள் அதை வெளியே சொல்லமாட்டாள். அதை நானும் அவளும் பார்த்துக்கறோம். வத்சலாவை மட்டும்...ஒகே சங்கர். கும்பல் சண்டை தொடங்கினாலும் தொடங்கிற்று, இன்றைக்கோ நாளைக்கோ அந்தப் பெண்ணோடு சேர்ந்து அவங்க இருவரையும் கூடக் கொன்றுவிடு. ஆனால் கொல் வதற்கு முன்னால் கடைசி முறையாய் இன்னொரு தடவை பயமுறுத்திப் பார்ப்பது நல்லதுன்னு தோணுது எனக்கு. பயமுறுத்துவது என்றால் இதுவரை செய்தாற் போல சர்ச் வாரண்ட் என்று சொல்லி தூது அனுப்பியது போல இல்லை. கொஞ்சம் செலவு பண்ணினாலொழிய அவன் நம்ப பேச்சைக் கேட்க மாட்டான்..."

"இந்த அளவுக்காவது சம்மதித்தாயே தாதா, அது போதும்! இனி பார்த்துக் கொண்டேயிரு! ரஜினிக்குத் தன் ஓட்டலின் மேல் உயிர். இன்றைக்கு அதை தரைமட்டம் பண்ணிடுவோம், அந்தப் பெண்ணும் அந்தச் சுவருக்கடியில் விழுந்து சமாதியாயிடணும். அப்பத்தான் புத்தி வரும் அவனுக்கு. ரொம்பச் சின்ன விஷயத்தைப் பெரிது பண்ணிட்டோம் இப்போதே..."

''நாளைக்கு எனக்குப் போன் பண்ணிச் சொல்லு. அது சரி. அந்த போனை பயன்படுத்தாதே. சர்மா அதன் நம்பரை கடிதத்தில் எழுதி வைத்திருக்கிறான் போலிருக்கு...''

''சரி...''

போன் கட் ஆகிவிட்டது.

அனுஷா போஸ்ட் ஆபீசிற்குப் போய் தன் சிநேகிதிக்குப் போன் பண்ணினாள். அரை மணிக்குப் பிறகு ரஜினியிடமிருந்து அவளுக்குப் போன் வந்தது.

''எங்கே இருக்கிறாய் நீ?''

''இன்னும் டில்லியில்தான்.''

''என்ன பண்ணுகிறாய்?''

''உங்களைக் காப்பாற்றும் வழியை யோசிச்சிட்டிருக்கேன்.''

''உன்னை நீ காப்பாற்றிக் கொண்டாகி விட்டதா? அதுசரி, இன்னொரு முக்கியமான விஷயம்...''

''என்னது?''

''எனக்கு உன்னை அவசரமாய் பார்க்கணும் போலிருக்கு.''

''வேறொன்றுமில்லையே?''

''இருக்கு. அதை போனில் சொன்னால் நன்றாயிருக்காது. அதுசரி, ஏன் இந்த மாதிரி வெளியேயிருந்து போன் பண்ணச் சொல்லி செய்தி அனுப்பினாய்?''

''உங்க போனை அவங்க கேட்கிறாங்களோன்னு சந்தேகம் வந்ததால்...இன்றிரவு அவங்க உங்க ஓட்டலின் மேல் படையெடுக்கப் போறாங்க.''

''எப்படி?''

"'பாம்' மூலமாய் இருக்கலாம்னு தோணுது."

"உனக்கெப்படித் தெரியும்?"

"அதான் சொன்னேனே, இங்கே இருந்து நான் பண்ற காரியம் அதுதான்னு."

"அந்த சங்கருக்கு இம்முறை நன்றாய் பாடம் கற்பிக்கிறேன்."

"அதன் மூலம் உங்க ஓட்டல் இடிந்து விழுவது நின்று விடாது. அவங்க உண்டு இல்லைன்னு பண்ணிடறதாய் இருக்காங்க. அது சரி, வத்சலா எப்படியிருக்கிறாள்?"

"நன்றாயிருக்கிறாள்."

"அவளை வெளியே விட்டுவிட மாட்டீங்களே?"

"தலையே போனாலும் மாட்டேன்."

"ரொம்பச் சின்னப் பெண். அருகில் இழுத்து முத்தம் கொடுப்பது, சபதம் என்ற சாக்கில் பைத்தியக்கார வேஷம் போடுவது இதெல்லாம் இல்லையே?"

"இல்லை. உன் மேல் ஆணை. நீ ஒன்றும் பொறாமைப்படத் தேவையில்லை."

"எனக்கொன்றும் பொறாமை இல்லை."

"அது உன் குரலிலேயே தெரிகிறது."

"அட, ஒரு பெரிய கும்பல் இன்றிரவு உங்க ஓட்டலை நிர்மூலம் பண்ணப் போறதுன்னு சொன்னால் உங்களுக்கென்னவோ எறும்பு கடிப்பது போலிருக்கா?"

"இன்ஷ்யூரன்ஸ் வரும், பரவாயில்லை. பாம் போடுவதற்கு முன்னால் அவங்க பிடிபட்டுட்டால் அவ்வளவுதான் சவங்களாகிவிடுவாங்க."

"வத்சலா?"

''அவளை வெளியே எங்கேயாவது ஒளித்து வைக்கிறேன்.''

''உங்க தோளில் இருக்கிற சுறு சுறுப்பு கொஞ்சம் மேலே மூளையிலும் இருந்தால் நன்றாயிருக்கும் ரஜினி!''

''ஏன், என்னவாயிற்று?''

''பி.கிளாஸ் சினிமாவில் சி.கிளாஸ் ஹீரோவைப் போல யோசிக்கிறீங்க! தாதாவைப் போன்றவங்களின் உபாயத்திற்கு மேல் உபாயம் தீட்டணுமானால், இன்னும் புத்திசாலித்தனமாய் யோசிக்கணும். அவங்க விழுங்கவும் முடியாமல் துப்பவும் முடியாமல் சாவணும்.''

''எப்படி?''

அவள் சொன்னாள்.

எல்லாவற்றையும் கேட்டு முடித்துவிட்டு அவன் உல்லாசமாய் விசிலடித்தான். ''ஓகே. அப்படியே பண்றேன்'' என்றான்.

அன்று காலை பத்து மணியளவில் அனுஷா புதுடில்லி வெளிநாட்டுத் தூதரகத்திலிருந்த ஜப்பான் தூதரின் காரியாலயத்திற்குப் போனாள். பெர்சனல் அசிஸ்டெண்ட்டைச் சந்தித்து தன்னைப் பரிச்சயம் பண்ணிக்கொண்டாள்.

''சங்கரின் மேல் ஜப்பானில் வழக்கு இருப்பது உங்களுக்குத் தெரிந்திருக்கும். அதைபபற்றிய விவரங்கள் வேண்டும்.''

''எதற்கு?''

''அவன் எவ்வளவு சீக்கிரமாய் இந்தியாவை விட்டுப் போவானோன்னு எதிர்பார்த்துட்டிருப்பவங்களில் நானும் ஒருத்தி. அதனால்தான்'' சிரித்தாள்.

"உங்களுக்கு இதில் ஏன் ஆர்வம்?"

"சர்க்கிள் 3 டி.சி.பி. ஸ்ரீகாந்தின் தங்கை நான். வேண்டுமானால் அங்கேயே இதைப்பற்றிய ஃபைலைப் பார்த்துக்க முடியும். ஆனால் உங்கள் வாயிலிருந்தே இந்த விவரங்களைத் தெரிந்துக்கணும்ங்கறது என் விருப்பம்! ஜப்பானியர்கள் தாமதத்தையும், நல்ல பயிற்சியைக் கெடுப்பதையும் சகித்துகொள்ள முடியாதவர்கள் என்று எங்கேயோ படித்த நினைவு எனக்கு. இந்த விஷயத்தில் ஏன் இவ்வளவு தாமதமாகிறதுன்னுதான் எனக்குப் புரியலை. இதைப்பற்றி ஒரு கட்டுரை எழுதலாம்னு இருக்கேன்."

அவள் பேச்சின் கடைசிவார்த்தை நன்றாய் வேலை செய்தது.

"இதில் எங்கள் தாமதம் எதுவுமே இல்லை. எல்லாம் இந்தியாவுடையதுதான்! வேறு ஏதோ சின்ன கேசு இருக்குன்னு அவனைத் தடுத்து வைச்சாங்க. அது முடிந்ததுமே எங்க அதிகாரிகள் அவனை ஜப்பானுக்குக்கூட்டிட்டுப் போயிடுவாங்க."

"இந்த விஷயத்தை நான் என் கட்டுரையில் எழுதலாமா?"

"எந்த விஷயத்தை?"

"தாமதத்திற்குக் காரணம் இந்திய அதிகாரிகள் தான்னு."

"எழுதிக்குங்க. ஆனால் அதற்கு என்னைப் பொறுப்பாளியாக்கிடாதீங்க. நடக்கிற விஷயம் என்னவோ அது தான்."

"நான் ஒரு போன் பண்ணலாமா?"

"ஷ்யூர்."

அவள் ஸ்ரீகாந்த் ஆபீசிற்குப் போன் பண்ணினாள்.

"எங்கேயிருந்து பேசுகிறாய் நீ?'

''ஜப்பான் தூதர் காரியாலயத்திலிருந்து.''

''என்ன? அங்கே என்ன பண்ணுகிறாய் நீ?''

சங்கரை இவங்க எப்போது ஜப்பானுக்குக் கூட்டிட்டுப் போறாங்கன்னு தெரிஞ்சுக்க வந்தேன். இவங்க இங்கே என்ன சொல்றாங்க என்றால், தாமதத்துக்குக் காரணமே இந்திய அரசாங்கந்தான் என்றும், இங்கே வழக்கை முடிக்க முடியாமல் தில்லு முல்லு நடக்குதுன்னும் சொல்றாங்க.''

''இப்போ அந்த விஷயமெல்லாம் உனக்கெதற்கு?''

''என்ன அண்ணா இது? உனக்குத்தான் எல்லாம் சொல்லி யிருக்கேனே? சங்கர் இருக்கிறவரைக்கும் எனக்கு ஆபத்துன்னு.''

''சரி, என்னதான் சொல்றே?''

''சங்கரை காப்பாற்றுவதற்குச் சில உயர்மட்ட அதிகாரிகள் முயற்சிக்கிறார்களா?' — என்ற தலைப்பில் கட்டுரை எழுதலாம்னு இருக்கேன். அதற்குத் தேவையான விவரங்களைத் தெரிஞ்சுக்கத்தான் இங்கே வந்தேன்.''

''நீ வெறி பிடித்து அலைகிறாய். எதற்காக நீயே போய் ஆபத்தில் தலையிடுகிறாய்?''

''தலையிடுவதா? முற்றிலும் இதிலேயே மூழ்கிப் போயிருக்கிறப்ப...''

''சரி சரி, வீட்டுக்கு வா, விவரமாய் பேசலாம்.''

அவள் போனை வைத்துவிட்டு பி.ஏ.வைத் திரும்பிப் பார்த்தாள்.

''இதைப் பார்க்கிறப்ப, தாமதமெல்லாம் எங்களோடது தான்னு புரிகிறது. முழு விவரமும் தெரிஞ்சிக்காமல் உங்களிடம் வந்தது என் தப்புதான்! ..பைல் முழுவதையும் படித்து விட்டுப் பிறகு உங்களிடம் வருகிறேன். அப்போது நீங்க கண்டிப்பாய் உதவி பண்ணணும்...''

"ஷ்யூர்."

"சங்கரை அழைத்துட்டுப் போக உங்க போலீஸ் அதிகாரி எப்போது வரப்போகிறார்?"

"இங்கே கோர்ட்டில் வழக்கு முடிந்ததுமே எங்களுக்கு எழுதச் செல்லி எங்க நாடு உங்களைக் கேட்டுக்கொண்டிருக்கிறது. வழக்கு முடிவடைவதற்காகக் காத்திட்டிருக்கோம்."

"ஒருகால் வழக்கு நிரூபிக்கப் பட்டு, சங்கருக்கு ஆறு காலங்கள் வரையிலும் தண்டனை கிடைத்தால், உங்க வழக்கு முயற்சிகூட அவ்வளவு நாள் தள்ளிப் போடப்படுமா?"

"வேறு வழி இருக்காதே... எனக்குச் சட்டம் அவ்வளவாய் தெரியாது.'

அனுஷா சிரித்தாள். "ஆனால் தனக்கு இந்த நாட்டில் தான் தண்டனை கிடைக்கணும்னு சங்கர் விரும்பிக்கிட்டிருந்திருக்கலாம். எவ்வளவு நாள் தண்டனை நீடிக்கிறதோ அவ்வளவு நாட்கள் அவனுடைய மரணமும் தள்ளிப் போடப் படும் இல்லையா?"

பி.ஏ.வும் சிரித்துவிட்டு. "ஆமாம்" என்றார்.

அவள் எழுந்து, "வரேன், தாங்க்ஸ். ரொம்ப சிரமம் எடுத்து உங்க நேரத்தை எனக்காகச் செலவழித்தீங்க" என்று வெளியே வந்தாள்.

அதுவரையிலும் வெளியிலேயே நின்றுகொண்டிருந்த இன்னொரு கார். தன்னைப் பின்தொடர்ந்து வருவதைக் கவனித்தாள். பனிரெண்டு மணி அடிக்கவிருந்தது.

பிற்பகல் சாப்பாட்டு வேளையில் ஸ்ரீகாந்திடம் போனாள் அவள். அவன் குழப்பத்தோடு அவளைப் பார்த்து, "ஏன் ஜப்பான் தூதரகத்துக்குப் போனாய்? அது சரி, அவங்க உன்னோடு இந்த விவரங்களையெல்லாம் எப்படிப் பேசியிருப்பாங்க?" என்றான்.

''என்ன அண்ணா இது. பெண் ஒருத்தி போய்க் கேட்டால் அது கூடவா சொல்லமாட்டாங்க?'' என்று அப்பாவியாய் நடித்தாள்.

ஜப்பானில் நடக்கப்போகும் வழக்கு விவரம் கூட வசந்த் தாதாவுக்குத் தெரிந்து விடும். அந்த ஆபீசில் தாதாவின் ஆட்கள் இருக்கிறாங்கன்னு சந்தேகப் படுகிறோம் நாங்க! எங்களிடம் சொல்லாமல் நீ அங்கே போனது தப்பு. இந்த நேரத்தில் வசந்த் தாதாவுக்கு நீ சங்கரைப்பற்றிக் கட்டுரை எழுதப் போகும் விஷயம்கூட எட்டியிருக்கும்.''

''உண்மையா?''

''ஆமாம். அதனால்தான் அவங்கவங்க பண்ணவேண்டிய காரியத்தை அவங்கவங்கத்தான் பண்ணனும்.''

''சாரி அண்ணா, அவ்வளவு தூரம் யோசித்துப் பார்க்கலை நான்'' என்றாள் அனுஷா.

தூரதரகத்திலிருந்து அவள் தன் அண்ணனோடு பேசிய ஒவ்வொரு வார்த்தையும் வசந்த் தாதாவுக்குப் போய்ச் சேர்ந்துவிட்டன. அதன் சாராம்சங்களையெல்லாம் தெரிந்து கொண்டு மகிழ்ச்சியடைந்தான் தாதா. இவ்வளவு நாளும் சங்கருக்கு பதில் வேறொருவனை ஜப்பானுக்கு அனுப்பும் திட்டத்தைப் பற்றி சர்மா தன் கடிதத்தில் எழுதியிருப்பானோ, அதற்கு பதிலாய் வேறு உபாயம் எதையாவது தீட்ட வேண்டியிருக்குமோ என்றெல்லாம் குழம்பி வந்தான். சர்மா தன் கடிதத்தில் இந்த விஷயத்தைப்பற்றிக் குறிப்பிடவில்லை என்பது புரிந்தது, அதனால்தான் அனுஷா சங்கரை ஜப்பானுக்கு எப்பொழுது கூட்டிட்டுப் போகப் போகிறார்களோ என்ற அவசரத்தில் இருந்து வருகிறாள்.

சர்மா சங்கருக்கு பதிலாய் தன்னை ஜப்பானுக்கு அனுப்பத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் என்ற விஷயத்தை

எழுதாததில் ஆச்சரியமில்லை. மனிதர்கள் எவ்வளவோ உண்மைகளை வெளிப்படுத்தினாலும், சாவதற்கு முன்னால் கூட தம் பெயருக்கு களங்கம் ஏற்படும் விஷயத்தை மறைத்து வைத்து விடுவது சகஜமே! பணத்திற்கு ஆசைப்பட்டு தான் இதற்கு ஒப்புக் கொண்ட விஷயத்தை உலகம் அறிந்து விடக் கூடாது என்றெண்ணியிருக்கலாம்.

எது என்னவானால்தான் என்ன, இந்த விஷயம் தெரிந்தது தனக்கு நன்மையே!

இனி, வேறு திட்டத்தைப் பற்றி யோசித்து கொண்டிருக்காமல், சங்கருக்கு பதிலாய் அனுப்பக்கூடிய மற்றொரு ஆளைத் தேடிப் பிடித்தால் போதும். இங்கே போலீஸ் வழக்கு முடிவடைவதற்குள்ளாகவே அதற்காக அவசரப்பட வேண்டும்!

வசந்த் தாதாவின் முகத்தில் குறுநகை படர்ந்தது.

ஸ்ரீகாந்தைப் போலவே வசந்த் தாதாவும் அனுஷாவைப் பற்றிக் குறைவாய் எடைபோட்டு விட்டது இந்த விஷயத்தில் தான்! சர்மா தன் கடிதத்தில் எழுதியிருந்த முதல் பாயிண்டே அதுதான்! ஜப்பானுக்கு சங்கருக்கு பதில் வேறொருத்தர் போகப்போகும் விஷயம்! ஆனால் அனுஷாவின் யோசனை வேறு.

இந்த விஷயம் அவளுக்குத் தெரிந்து விட்டதென்று தாதா தெரிந்து கொள்ளக்கூடாது. கடிதத்தில் அந்த விஷயமே இல்லை என்றெண்ணி விட்டுவிடவேண்டும் அவன்! அதற்காக அனுஷா மிக சாமர்த்தியமாய் திட்டம் போட்டாள். உண்மையில் அவள் ஜப்பான் தூதர் காரியாலயத்திற்குப் போக வேண்டிய அவசியமே இல்லை. அங்கிருந்து ஸ்ரீகாந்திற்கு போன் பண்ணவேண்டிய அவசியமும் இல்லை. அவள் ஸ்ரீகாந்தோடு போனில் பேசிய சம்பாஷணைகளை ஆராய்ந்து பார்த்தால் அது அர்த்தமில்லாத உளறலைப் போலிருந்ததை

கவனிக்கலாம். அவள் எண்ணமெல்லாம் தன் டெலிபோன் பேச்சை அவர்கள் கேட்க வேண்டும் என்பதே. அவங்கவங்க காரியத்தை அவங்கவங்க பண்ணணும்' என்று ஸ்ரீகாந்த் சொன்னதைக் கேட்டு அதற்காகத்தான் அவள் வந்த சிரிப்பை பலவந்தமாய் அடக்கிக் கொண்டாள். சங்கருக்கு பதிலாய் வேறு ஆளை அனுப்புவதென்றால் பல பேரின் ஒத்துழைப்பு இல்லாமல் நடக்கும் காரியமல்ல அது! ஜப்பான் தூதரகத்தில் தாதாவின் கை கொஞ்சம் இருக்குமென்று ஊகித்துக்கொண்டாள். தான் வீட்டை விட்டுப் புறப்பட்ட வினாடியிலிருந்து தன் ஒவ்வொரு அசைவும், பேச்சும், கவனித்துக் கொண்டே வரப்படுகிறது என்பதை அறிவாள் அவள். ஒன்றுமே அறியாதவளைப் போல போய், போன் பேசிவிட்டு, தனக்குத் தேவையான உத்தேசத்தை தாதாவிடம் எழுப்பி விட்டாள். சரியாய் வலையில் விழுந்தான் தாதா.

வத்சலா அவர்கள் செய்து கொண்டிருந்த காரியத்தையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தாள். இன்னும் கொஞ்ச நேரத்தில் தம் கட்டடத்தின் மேல 'பாம்' விழப் போகிறது என்று தெரிந்துங்கூட அவர்கள் அதென்னவோ-மழை பெய்வதற்கு முன்னால் வெளியே காயப்போட்டிருக்கும் வடகங்களை எடுத்து உள்ளே வைப்பதுபோல-சாவதானமாய் சாமான்களை எடுத்து வைத்துக் கொண்டிருந்ததைப் பார்த்து தலைசுற்றியது அவளுக்கு.

அதற்குள் மாடியிலிருந்து முன் அறையில் அவர்கள் சாமான்களை அடுக்கி முடித்தார்கள். ரஜினி அவளைப் பார்த்து, "நீ போய் படுத்துக்கொள். பெரிய சப்தம் கேட்டாலும் கலங்காதே. உன் அறை வரைக்கும் ஆபத்து வராது" என்றான்.

"உனக்கு புத்தியே கிடையாது பாஸ்! இந்தச் சூழ்நிலையில் அந்தப் பெண்ணுக்குத் தூக்கந்தான் வருமா?" என்று அதட்டிவிட்டு வத்சலாவைப் பார்த்து, "வா, நானும் வரேன்" என்றான் பில்வன்.

# 29

இரவு பதினோரு மணி. விலையுயர்ந்த கண்ணாடிகள், சாமான்கள் முதலியவைகளை எடுத்து அடுக்கி வைத்தாகி விட்டது. வெயிட்டர்களுக்கும் ஓரிரு வாடிக்கையாளர் களுக்கும் இன்னும் கொஞ்ச நேரத்தில் நடக்கப் போகும் ஆபத்து பற்றி எதுவுமே தெரியாது.

மேலும் ஒரு மணி நேரம் கடந்தது. பார் காலியாகி விட்டது. அவர்களும் போய்விட்டார்கள். ஷட்டர்களைக் கீழே இறக்கிவிட்டார்கள். எங்கும் நிசப்தம்.

''யாரும் வந்தபாடில்லையே? அனுஷா தவறான செய்தி கொடுத்திருப்பாளோ?'' என்றான் பில்வன்.

''இல்லை. பின்னாலிருக்கும் கிளப்பில் சீட்டாடும் ஓரிருவரும் போனபிறகு தாக்கத் தொடங்கலாம். நம் மூவரைத்தவிர, மற்றவர்களைச் சாகடிப்பது அவங்களுக்குப் பிடிக்காமல் இருக்கலாம்'' என்றான் ரஜினி.

அவன் சொன்னது உண்மையாயிற்று.

விடியற்காலை மூன்று மணியாகும்போது வெள்ளை அம்பாசிடர் கார் ஒட்டலைத் தாண்டி மெதுவாய் ஊர்ந்து சென்று கொண்டிருக்க, ஒரு கை வெளியே வந்து கிரேனடை வேகமாய் வீசி எறிந்தது. ஷட்டர்கள் உடைந்து விழுந்தன. பெருத்த ஓசையுடன் கண்ணாடிகள் உடைந்து எகிறி விழுந்தன. பாரின் மேல் அறையிலிருந்து உடைந்து விழுந்த பிராந்தி, விஸ்கி, சீசாக்களிலிருந்து திரவம் சட்டென்று பற்றிக் கொண்டு எரியத் தொடங்கிற்று.

காரிலிருந்து இன்னொரு முறை கிரேனுடும் போய் தாக்கியிருந்தால் மேலும் இரண்டு அறைகள் இடிந்து விழுந் திருக்கலாம். ஆனால் அதற்குள் பில்வன தன் காரை அந்த சந்திற்குள் கொண்டு வந்தான்.

சந்திற்குள் இன்னொரு கார் வரவே, கிரேனடை வீசி யெறிந்த கார் வேகமாய் புறப்பட்டுப் போகத் தொடங்கிற்று.

தாம் கிரேனடுகளை வீசியெறிந்ததைப் பின்னாலிருந்த காரிலிருப்பவர்கள் பார்த்துவிட்டார்களோ என்னவோ, அதற்காகத்தான் தம்மைத் துரத்திக் கொண்டு வருகிறார்கள் போலும் என்றெண்ணி முன்னாலிருந்த கார் வேகமாய் கொஞ்சதூரம் போய்விட்டு. பின்னாலிருந்து கார் மேலும் தொடராததைப் பார்த்துவிட்டு மெல்ல ஊர்ந்து செல்லத் தொடங்கிற்று.

அவர்கள் நினைத்தாற்போலவே பில்வனின் கார் அங்கேயே நின்றுவிட்டது உண்மையே. ஆனால் அவர் களுக்குத் தெரியாத விஷயம் என்னவென்றால், ரஜினியின் கார் விளக்கு இல்லாமல் தம்மைத் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது என்பது.

''சந்திப்பை அடைந்ததும் அவர்கள் தாம் அதுவரை யிலும் சுற்றிய காரை அங்கேயே விட்டுவிட்டு தங்களது காரை நோக்கிச் சென்றனர்' அப்போது அவர்களைப் பிடித்துக் கொண்டான் ரஜினி.

அவர்கள் இருவரையும் ரஜினி இதற்குமுன் பார்த்த தில்லை. ஒரு கால் கிரேனடுகளை வீசியெறிவதில் நிபுணர்களாயிருக்கலாம்!

''சபாஷ்! ஒரே 'பாம்' மூலம் இரண்டு அறைகளை உடைச்சுத் தள்ளிட்டீங்க! இன்னும் எவ்வளவு இருக்கு?'' என்றான் ரஜினி.

அவர்கள் பதில் பேசவில்லை.

''என் ஓட்டலை நிர்மூலமாக்க வந்திருக்கீங்கன்னு தெரியுது. குட். இந்த வேலைக்கு எவ்வளவு தரேன்னான் சங்கர்?''

அவர்கள் பதில் பேசவில்லை. அவன் பதிலை எதிர் பார்க்கவும் இல்லை. அவர்களின் காரிலேயே ஏறியமர்ந்து, ''போ'' என்றான் அவர்களுள் ஒருத்தனைப் பார்த்து.

''எங்கே?'' முதல் முறையாய் வாயைத் திறந்தான் ஒருத்தன்.

''பரங்கிமலை.''

இருவரும் திடுக்கிட்டார்கள். பரங்கிமலையின் புறப் பகுதி சங்கரின் சென்டர்.

''ஏன்?''

''நீ கேள்வி கேட்காதே. காரை எடு.''

கார் நகர்ந்தது. நள்ளிரவு தாண்டி வெகுநேரமாகி விட்டதால் வீதியெங்கும் ஆளரவமின்றி இருந்தது. பதினைந்து நிமிடத்தில் கார் போக வேண்டிய இடத்தை அடைந்தது.

''கையில் எத்தனை குண்டுகள் இருக்கிறது?'' என்றான் ரஜினி.

''ஆறு.''

''என் ஓட்டலின்மீது எப்படி வீசி எறிந்தாயோ, அதை விட கவனமாய் வீசி எறியணும். கிரனேடுகளைக் கையில் எடுத்துக்கோ'' என்றான் ரஜினி.

அப்பொழுதுதான் அவர்களுக்குப் புரிந்தது—அவன் தம்மை அங்கே ஏன் அழைத்து வந்தான் என்று. இருவரும் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டார்கள்.

''சங்கர் உங்களைக் கொன்னுடுவான்.''

''அது நாளைய சங்கதி. இப்போது வீசி எறியா விட்டால் நான் உங்களைக் கொல்ல வேண்டிவரும்!''

ஒருத்தன் காரை கிளப்பினான். இன்னொருவன் கிரேனடை வீசினான். 'பாம்' வெடித்த சமயத்தில் கார் நூறு கெஜங்களுக்கப்பால் தாண்டிப்போய்விட்டது.

''இம்முறை சேலையூருக்குப் போ.''

கார் தாம்பரத்தைத் தாண்டி சேலையூருக்குள் நுழைந்தது. அங்கே இன்னொரு குண்டு வெடி!...எல்லா வேலையும் முடியும்போது மணி நான்காகி விட்டது.

அவர்களை விட்டுவிட்டு ரஜினி தன் வீட்டிற்குத் திரும்பி வந்த போது அங்கே போலீசார் கூட்டமாய் கூடியிருந் தார்கள், தீயணைக்கும் இன்ஜின் நின்றுகொண்டிருந்தது. அவன் காரைப் பார்த்துவிட்டு பில்வன் ஓடிவந்து, ''குடி முழுகிட்டது பாஸ்! ராத்திரி யாரோ நம்ப ஓட்டலின் மேல் குண்டு போட்டிருக்காங்க'' என்றான்.

''உண்மையாகவா!'' என்றான் ரஜினி நம்ப மாட்டாதவனாய்.

''நம்ப மேல் அவ்வளவு விரோதம் யாருக்கு?''

''நீங்கதானா ரஜினி என்பது?'' என்றார் அங்கே நின்ற போலீஸ் அதிகாரி.

''ஆம்'' என்றான் ரஜினி.

''பத்து மணிக்கு போலீஸ் ஸ்டேஷனுக்கு வரீங்களா. ஸ்டேட்மென்ட் எடுத்துக்கணும்.''

''ஷ்யூர்''

ரஜினி போனபோது அங்கே சங்கரும் வந்திருந்தான். சங்கரைப் பார்த்து, ''இதென்ன, நீங்களும் ஸ்டேஷனுக்கு வந்திருக்கீங்க?'' என்றான் ரஜினி.

''அவருடைய இருப்பிடத்திலும் குண்டை வீசியிருக்ாங்க. மொத்தம் ஏழு இடங்களில் குண்டு வெடிப்பு நடந்திருக்கு'' என்றார் இன்ஸ்பெக்டர்.

''உங்க ஓட்டலைத் தவிர மீதி ஆறு இடங்களும் சங்கருடையதுதான்.''

''உண்மையா? மைகாட்! சங்கர். நம்மிருவருக்கும் சேர்ந்தாற்போல விரோதி யாரு? உங்களுக்கு யார் மேலயாவது சந்தேகம் வருதா?''

''இல்லை.''

''மொத்த நஷ்டம் ஐம்பது லட்சங்கள் வரையிலும் இருக்கலாம்னு ஊகம்'' என்று எழுந்திருந்து ஃபைலை எடுத்துவர உள்ளே போனார் அதிகாரி.

அவர் போனதும்ே ரஜினி சங்கரைப் பார்த்து ஓரக் கண்ணால் அளந்தபடி, ''அதிகாரியின் கணக்குப்படி ஐம்பது லட்சம்! கள்ளக் கடத்தல் சாமான்களின் நஷ்டம் அதைவிட பத்துமடங்கு இருக்குமில்லையா சங்கர்! என்ன பண்றது? வாயை மூடிட்டு சும்மா இருந்துட வேண்டியதுதான்'' என்றான்.

சங்கர் உள்ளங்கையை மடக்கிக் கொண்டு மேஜையின் மேல் பலமாய் குத்தினான்.

உள்ளிருந்து வந்த அதிகாரி சொன்னார். ''உங்களுக்கு ஏற்பட்ட நஷ்டத்துக்கு வருந்துகிறோம். விரைவிலேயே குற்றவாளிகளைக் கண்டுபிடிச்சுடுவோம்!''

ரஜினி குறுக்கிட்டு. ''எங்களுக்கு நஷ்டமேற்பட்டதற்காக வருத்தப்படவில்லை சார். அதற்கெல்லாம் இன்ஷ்யூரன்ஸ் வந்துடும். இல்லையா சங்கர்?''

''இதெல்லாம் யார் பண்ணினாங்க, யாரை வைத்து பண்ண வைச்சாங்கன்னும் எனக்குத் தெரியும். எனக்கு இந்த போலீசின் உதவி தேவையில்லை. நானே அவங்களை எதிர்க்க முடியும்!'' என்றான் சங்கர்.

''நீ இம்மாதிரி கோபமாய் பேசினால் நம்மிருவருக்கு மிடையே ஏதோ விரோதம் இருக்குன்னு இந்த போலீசுங்களே நினைச்சுடுவாங்க. சூபரிண்டெண்ட் சார்! நாங்களே ஒருத்தர் வீட்டு மேலே இன்னொருத்தர் குண்டைப் போட்டுக் கிட்டோம்னு சந்தேகம் ஏதாவது வருதா உங்களுக்கு?''

''முதல்ல அந்த சந்தேகம் வந்தது! ஆனால் இப்பத் தான் 'லாபி'லிருந்து ரிப்போர்ட் வந்து சேர்ந்தது. அந்த கிரனேடுங்க ஏழும் வரிசை நம்பர்களாய் இருக்குதுன்னும், எல்லாவற்றையும் ஒருத்தரே வீசியிருப்பாங்கன்னும் உறுதியாயிருக்கு!''

''அப்பாடா! குறைந்தபட்சம் எங்க இரண்டு பேருக்கும் சேர்த்து ஒரே விரோதிங்க இருக்கிற விஷயம் தெரிஞ்சு திருப்தியாயிருக்கு!''

சங்கர் சரேலென்று எழுந்து, ''இனி நான் எதுவும் சொல்லத் தேவையில்லைன்னு நினைக்கிறேன். வரேன்'' என்றான். அவன் முகம் தொய்ந்திருந்தது.

''உங்களுக்கு ஏதாவது 'க்ளு' கிடைத்தால்...''

''தேவையில்லை. நான் பார்த்துக்கறேன்'' என்று விடுவிடுவென்றுஅங்கிருந்து அகன்றான்.

ரஜினியும் எழுந்து, ''நானும் அப்புறமாய் சாவகாச மாய் வரேன். இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிக்குப் போகணும்'' என்றான்.

''இந்த ஊரில் யாருக்குமே போலீஸ் தேவையே வேண்டாம் போலிருக்கே! அவங்கவங்க வேலையை அவங்கவங்களே பார்த்துக்கிடறாங்க போலிருக்கே!'' என்றார் டி. சி. பி.

''அதென்ன சார் அப்படிச் சொல்லிட்டீங்க! போலீசுங்களே இல்லாவிட்டால் இந்த ஊரு டிராஃபிக்

எல்லாம் தாறுமாறாயிடாதா? அதைக் கட்டுப்படுத்து வதற்காக போலீசின் தேவை அதிகம்'' என்று அவருக்குக் கைகுலுக்கிவிட்டு இன்ஸ்பெக்டரைப் பார்த்து ''அன்று என்னவோ வாரண்ட் எடுத்துட்டு வந்தீங்களே, வேலை யிருந்ததுன்னு திரும்பிப் போயிட்டிங்க. அப்புறம் ஏன் வரவே யில்லை?'' என்று கேட்டான்.

''வாரண்ட்டா, அதென்னது?'' டி.சி.பி. கேட்டார்.

''அதா...ஒன்றுமில்லை'' மென்று விழுங்கினார் இன்ஸ் பெக்டர்.

''வாரண்ட் இல்லை. சாரி, நான் மறந்துட்டேன்; போலீஸ் வெல்பேர் நிதிக்காக சந்தா காகிதம் எடுத்துட்டு வந்தார்னு நினைக்கிறேன். இல்லையா?''

''ஆமாம், ஆமாம்.''

''சாயந்திரம் எடுத்திட்டு வாங்க. கண்டிப்பாய் தரேன், ஏற்கனவே குண்டு விழுந்த நஷ்டத்தில் இருக்கானேன்னு தயங்காதீங்க. அதான் சொன்னேனே, அதெற்கெல்லாம் இன்ஷ்யூ ரன்ஸ் வந்திடும்னு! சங்கரிடம் மட்டும் சந்தா வ்சூலிக்கப் போகாதீங்க. பாவம், ஆறு கடைகள் மட்கா எல்லாம் போன அதிர்ச்சியில் ஆழ்ந்திருக்கிறான். அதற் கெல்லாம் இன்ஷ்யூரன்ஸ் கூட வராது!'' என்று கூறிவிட்டு அங்கிருந்து வெளியேறினான் ரஜினி.

/

''வத்சலா, இனி இங்கிருந்து நீ போகவேண்டிய நேரம் வந்திட்டுது.'' உள்ளே வந்த ரஜினி சொன்னான்.

சாப்பிட்டுக் கொண்டிருந்த வத்சலா சட்டென்று நிமிர்ந்து, ''எங்கே?'' என்றாள் குழப்பத்துடன்.

''என் சிநேகிதனின் வீட்டில் எங்கேயாவது கொஞ்சநாள் இரு! இந்தப் போராட்டம் உச்சநிலைக்கு வந்துவிட்டது.

இன்றைக்கு போலீஸ் ஸ்டேஷனிலேயே அந்த சங்கர் துப்பாக்கியை ஜேபியிலிருந்து எடுத்து என்னைச் சுட்டுத் தள்ளிடுவான்னு நினைச்சேன். நாளை அல்லது நாளை மறுநாள் தன் எல்லா சைனியத்தையும் திரட்டிக்கொண்டு இந்த வீட்டைச் சூழ்ந்துடுவான்னு தோணுது. இனி நீ இங்கே இருப்பது ஆபத்து.''

அவள் மறுத்துத் தலையசைத்து, ''நான் இங்கேதான் இருப்பேன்!'' என்றாள்.

இக்குறுகிய காலத்திற்குள் அவளுக்கு அந்த வீட்டில், முக்கியமாய் பில்வனிடம் நல்ல பரிச்சயம் ஏற்பட்டு விட்டிருந்தது.

ரஜினியிடம் அன்பும் மதிப்பும் பெருகிவிட்டிருந்தன.

''இங்கே இருந்தால் ஆபத்து'' என்றான் பில்வன்.

''ஊகூம். இங்கேயே இருக்கேன்'' என்றாள் வத்சலா பிடிவாதமாய்.

''குண்டு வெடித்துச் சாவாய்'' என்றான் பில்வன்.

வத்சலா தோளைக் குலுக்கிக் கொண்டே, ''உங்களோடு சேர்ந்துதானே?'' என்றாள்.

''லாபமில்லை பாஸ்! இந்தப் பொண்ணு நம்மோடயே இருந்து தன் குடும்பத்து ஆச்சாரங்களையெல்லாம் ஒவ்வொன்றாய் கெடுத்துக் கொண்டிருக்கிறாள்'' என்றான் பில்வன்.

வத்சலா சிரித்தாள். அன்றிரவு அவளுக்கு நிறைய கனவுகள் வந்தன.

# 30

அவள் இருந்தது ஏ.ஸி. அறை. இருப்பினும் குண்டு சப்தத்தை வத்சலா சுவர்கள் அதிர்வதால் உணர்ந்தாள். ஆனாலும் அவள் ஜன்னல் கதவுகளைத் திறக்கவேயில்லை. ஓட்டலின் கீழ்த்தளத்தில் அந்த குண்டு விழுந்திருந்தது' என்றுணர்ந்தாள். எப்படிப்பட்ட நிலையிலும் வெளியே வர வேண்டாம் என்று ரஜினி சொல்லியிருந்தான்.

அவள் இருந்த ஓட்டலின் பின்பக்கத்து மாடியில். அது ஓட்டலுக்குக் கொஞ்சம் தூரத்தில் இருந்தால், போலீசார் வந்ததோ மற்ற பரபரப்போ அவளுக்குத் தெரியவில்லை. வெடிச் சத்தம் கேட்ட கொஞ்ச நேரத்தில் பில்வன் உள்ளே வந்தான்.

''நினைத்தாற்போலவே நடந்திட்டது. நான் கொஞ்சம் கலக்க மடைந்தாற்போல நிற்கணும். நீ போய் தூங்கு'' என்று சொல்லி விட்டுப் போய்விட்டான்.

கஷ்டங்கள் அதிகமாக ஆக அதனால் ஏற்படும் வருத்தம் குறைந்துவிடுகிறது. அவள் இம்முறை எதைப்பற்றியும் யோசிக்காமல் படுத்ததும் உறங்கினாள்.

அவளுக்குச் சட்டென்று விழிப்பு வந்தது. தலையணை முழுவதும் வியர்வையால் நனைந்து விட்டிருந்தது. ஒரு வினாடி. அது கனவா நினைவா என்று புரியவில்லை. பிறகு கனவுதான் என்ற தீர்மானத்திற்கு வந்தாள். தன் மேனி லேசாய் நடுங்குவதை உணர்ந்தாள். எவ்வளவு கட்டுப் படுத்திக் கொள்ள முயன்றாலும் அவளால் முடியவில்லை.

கனவில் நடந்த சம்பாஷணைகள் தெளிவாய் நினைவிற்கு வரவில்லை. ஆனால் அதன் அர்த்தம் நினைவிற்கு வந்தது. அவளுக்கு ஒரு விஷயந்தான் பிடிபடவில்லை. பதினைந்து நிமிஷங்களுக்கு முன்னால் கனவில் அழுதவள், இப்பொழுது நிஜமாகவே அழுதாள். வந்த கனவை நினைத்து! ஒரு 'பார்' ஓட்டலை நடத்துபவனின்பால் தன்னையறியாது ஆசைகளை வளர்த்துக் கொண்டு விட்டேனோ என்ற யோசனையால் வந்த துக்கமல்ல அது! பெண்ணாய் இருந்து இப்படி வெளியே வந்துவிட்டோமே என்பதற்காகக்கூட இல்லை. அந்தத் துக்கம் நெருக்கத்தின் வாயிலாய் காதலை வெளிப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கை தோன்றியதால்!

அலாரம் அடித்தது.

அவள் எழுந்து ஜன்னல் கதவைத் திறந்தாள். வெளிச்சம் உள்ளே சன்னமாய் வந்து கொண்டிருந்தது.

அதற்குள் ரஜினி மேலே வருவது கேட்டது. கீழே நடந்த வெடிகுண்டு சம்பந்தப்பட்ட விவரங்களை போலீஸ் அதிகாரிகளோடு பேசி முடித்து அவர்களை அனுப்பி விட்டே அவன் வந்து கொண்டிருந்தான்.

அவன் அடுத்த அறையை நோக்கி திரும்பியபோது, அவள், 'நான்' ஒரு கேள்வி கேட்கலாமா?'' என்றாள்.

அவன் முகத்தில் வியப்பு. ''என்ன? கேள்'' என்றான்.

''ஒன்றும் தவறாக நினைக்கக் கூடாது!''

''நினைக்கலை.''

''நான்...ஒருபெண்ணாக இல்லாமல் ஆணாக, அதாவது அந்த சர்மாவே இந்தமாதிரி உங்களிடம் வந்திருந்தால் நீங்க வைச்சிட்டிருப்பீங்களா?''

அவன் நிமிர்ந்து பார்த்ததைக் கண்டு மேலும் தடுமாற்றமடைந்தவள், "'அதாவது என் எண்ணம்...'' என்று ஏதோ சொல்லப்போனாள்.

"'வேறெந்த விவரமும் தேவையில்லை. வைத்துக் கொள்ள மாட்டேன்.''

வசந்த் தாதாவுக்குக் குழப்பமாயிருந்தது. ஒன்றுமே புரியவில்லை, அனுஷா வந்து, அந்தக் கடிதம் தன்னிடம் இருக்கிறது என்றதுமே அவன் கலக்கமடைந்தது நிஜமே. ஆனால் சட்டென்று சமாளித்துக் கொண்டான். கடிதம் இருந்த இடமாவது தெரிந்ததே என்றெண்ணிக் கொண்டான்.

அவனுக்கு அதற்குமுன்பே இன்ஸ்பெக்டரின் மூலமாய் அக்கடிதம் சீனிவாசனின் வீட்டிலிருந்த விஷயம் தெரிந்திருந்தது. வத்சலா இன்ஸ்பெக்டரிடம் வந்து அந்த விஷயத்தைச் சொல்லி விட்டு ஓடிப்போன விஷயம் தெரிந்ததுமே அவன் சங்கரிடம் வத்சலாவைப் பிடிக்கும் பொறுப்பை ஒப்படைத்து விட்டு, வேறொருத்தனை சீனிவாசனின் வீட்டிற்கு அனுப்பியிருந்தான். ஆனால் அதற்குள் தாமதமாகி விட்டது. யாரோ ஒரு பெண் வந்து வீட்டையெல்லாம் தேடிப்பார்த்த சங்கதி தெரியவந்தது. அந்தப் பெண் யார் என்று அப்பொழுது தெரியவில்லை.

கடிதம் பற்றிய சங்கதியைத் தெரிந்து கொண்டிருந்த மூவருள் ஒருவன் மரணமடைந்துவிட்டான். ஒருத்தி தலைமறைவாகியிருக்கிறாள். இன்னொருத்தி இந்த அனுஷா. இவர்களைத்தவிர வேறுயாருக்குமே தெரியாது.

அனுஷா போனதுமே அவன் மும்முரமானான். நிமிடத்தில் போன்கால்கள் பறந்தன. தன் சம்பந்தப்பட்ட எந்த ரகசியங்களை சர்மா வெளிப்படுத்தியிருப்பான் என்று சந்தேகம் ஏற்பட்டதோ அந்த தடயங்களையெல்லாம் அழிக்க முயன்றான்.

கள்ளக்கடத்தல் சாமான்கள் இருந்த கிடங்குகளை காலி பண்ணினான். அவற்றை வேறு இடங்களுக்கு மாற்றினான். புதிதாய் வரும் சரக்கு வண்டிகளை தொலைவிலேயே நிறுத்தி வைக்கச் சொன்னான். சர்மாவுக்குத் தெரிந்திருக்கும் என்று சந்தேகம் பிறந்த ஒவ்வொரு கார், லாரி, வேன்களின் நம்பர் களையும் மாற்ற ஏற்பாடு செய்தான். தன் கைக்குள் இருந்த எல்லா போலீஸ் அதிகாரிகளிடமிருந்து ரைடிங் போன்ற ஏதாவது வருமானால் உடனே தெரிவிக்கும்படி ஏற்பாடு செயது கொண்டான். சர்மாவுக்குத் தெரியுமாறு எந்தெந்த பார்லிமெண்ட் அங்கத்தினர்கள் தம்மிடம் வந்தார்கள் என்பதை நினைவுபடுத்திக் கொண்டு அவர்களுக்கும் தமக்கு மிடையே இருந்து வந்த கீழுலக விவகாரங்களில் எச்சரிக் கையை மேற்கொண்டான். நாட்டின் பல்வேறு மாகாணங் களிலும் இருந்து வந்த தம் ஆட்களை ஜாக்கிரதையாய் இருக்கும்படி பார்த்துக் கொண்டான்.

அரை மணிநேரத்தில் அவனது ஆட்கள் டெலிபோன் எக்சேஞ்சிலிருந்து தகவல் சேகரித்து வந்தார்கள். திருட்டுப் பெயருடன் சங்கருக்கு இருந்து வந்த போன்களுள் எந்த போனில் பேசினாலும் தனக்குத் தெரியுமாறு அனுஷா செய்திருந்த ஏற்பாடுகளை அறிந்து கொண்டான்.

சர்மாவின் கடிதத்தில் சங்கரின் இந்த போன் நம்பர்களை களையெல்லாம் தந்திருக்கிறான் என்பது அப்பொழுதுதான் புரிந்தது. இந்த இடத்தில்தான் தாதா அனுஷாவின் கெட்டிக்காரத்தனத்தைக் குறைவாய் மதிப்பிட்டு விட்டான். தான் போனில் பேசியதுமே தாதா எக்சேஞ்சிற்கு ஆட்களை அனுப்புவான் என்று அவளுக்குத் தெரியும். தனக்கு சங்கரின் ரகசிய போன் நம்பர்கள் மட்டுமே தெரிந்திருப்பதாக செய்தி சேர்ந்தால் போதும் என்று திட்டமிட்டு செயல்பட்டாள். உண்மையில் சர்மா, தாதாவின் ரகசிய போன் நம்பர்களைக் கூட எழுதியிருந்தான். தாதா நாட்டின் வெவ்வேறு இடங் களுக்கும் செய்த போன் நம்பர்களெல்லாம் இவ்விதமாய்

டேப்பில் ரிகார்டு பண்ணப்பட்ட விஷயம் தாதாவுக்குத் தெரியாமல் போய்விட்டது. சர்மாவின் கடிதமும், இந்தச் சம்பாஷணைகளுமே அவளுக்குப் போதும்—தாதாவை சிக்க வைப்பதற்கும், கோர்ட்டைச் சுற்றி அலைய வைப்பதற்கும். ஆனால் அது போதாது. அதனால்தான் அனுஷா அதையும் விட பெரிய திட்டத்தைப் போட்டு விட்டுதான் மௌனமா யிருந்து கொண்டாள்.

ஆம்—மௌனமாய்தான் இருந்தாள். நாட்டின் வெவ் வேறு மூலை முடுக்குகளிலும் இருந்த கிடங்குகளிலிருந்து சரக்குகள் இடம் மாறியபோதிலும், பிரமுகர்கள் எல்லா வற்றையும் ஈடுகட்டிக் கொண்டு எச்சரிக்கையாக இருந்த போதிலும் அவள் ஒன்றுமே செய்யவில்லை. தனக்குத் தெரிந்த விஷயத்தை தன் அண்ணனிடம் கூட மூச்சு விடவில்லை.

ஒரு நாள்—இரண்டு நாள்—ஒரு வாரம் கழிந்தது. ஒன்றுமே நடக்கவில்லை.

தாதா தலையைப் பிய்த்துக் கொண்டான், அந்தக் கடிதம் போலீசுக்கும் போய்ச் சேரவில்லை. பத்திரிகை களுக்கும் எட்டவில்லை. இந்தப் பெண்ணின் உத்தேசந்தான் என்ன? தான் தப்பித்துக் கொள்ள இவ்வளவு அவகாசத்தை ஏன் தரவேண்டும்? இங்குதான் அவன் மற்றொரு முறை அவளைப் பற்றிக் குறைவாய் எடை போட்டு விட்டான்.

அனுஷா அப்போது ஜப்பானுக்குப் போய்மூன்று நாட்கள் ஆகிவிட்டிருந்தன. மாஃபியாவைக் காட்டிலும் மிக வேகமாய் வேலை செய்து கொண்டிருந்தாள் அவள்.

# 31

ஜப்பானில் இறங்கியதுமே அனுஷா போலீஸ் அதிகாரிகளைச் சந்திக்கவில்லை. அவர் எப்படிப்பட்டவர் என்று விசாரிக்கத் தொடங்கினாள். நாடு விட்டு நாடு வந்து ஒரு போலீஸ் அதிகாரியின் நிஜ சொருபத்தைத் தெரிந்து கொள்வது அவ்வளவு சுலபமாயில்லை. இந்தியத் தூதரகத்தில் ஒரு இளைஞன் 'யகுஜா'வைப் பரிச்சயம் செய்து வைத்து அவளுக்கு உதவினான்.

ஜப்பானிலுள்ள மா:ஃபியா கூட்டத்திற்கும், பணத்தைப் பெற்றுக்கொண்டு தேவையானவர்களைக் கொலை செய்யும் கும்பலுக்கும் 'யகுஜா' என்று பெயர். ஜப்பானில் குற்றங்களின் எண்ணிக்கை மிகக் குறைவு. அமெரிக்கா, பிரிட்டன் போன்றவைகளை ஒப்பிட்டால் தனிப்பட்ட முறையில் குற்றம் புரிபவர்கள் குறைவு எனலாம். அந்த நாட்டில் குற்றம் புரிவதெல்லாம் இந்த 'யகுஜா' கூட்டங்கள்தான். 1984-கணக்குப்படி ஜப்பானில் 2300 யகுஜா கும்பல்கள் இருக்கின்றன. அதில் 94,000 பேர் அங்கத்தினர்களாய் இருக்கிறார்கள். இந்த அங்கத்தினர்களை அடையாளம் கண்டுபிடிப்பது வெகு சுலபம். கட்டம் போட்ட சூட்டும், சதுர வடிவத்திலுள்ள கழுத்து டையும் அவர்களின் சிறப்பு.

போதைப் பொருட்களைக் கடத்தி விற்றல், விபச்சாரம், போர்னோகிராபி புத்தகங்களைப் பிரசுரித்தல், ப்ளாக்மெயில் போன்ற வேலைகளை இவர்கள் செய்வார்கள். யகுஜாவில் ஒருவன் சேர்ந்து விட்டால் பிறகு வாழ்நாளெல்லாம் அதன் தலைவருக்கு சேவை செய்ய வேண்டியதே. அதற்குக் கைமாறாக அதன் தலைவர் அவர்களைப் போலீசாரின் பிடியிலிருந்து காப்பாற்றுவார்.

இந்த கும்பல்களை ஒடுக்குவதற்காக ஜப்பான் அரசாங்கமும் போலீசாரும் நிறைய அறிக்கைகளை வெளியிட்டார்கள். இன்னமும் வெளியிட்டு வருகிறார்கள். ஆனால் பலன் சூன்யம். யகுஜாவில் அங்கத்தினராவதை ஒவ்வொருவரும் பெருமையாய்க் கருதினார்கள்! ஜனங்கள் அவனைப் பார்த்து பயப்படுவார்கள். அவன் யகுஜா அங்கத்தினன் என்று தெரிந்தும் போலீசார் அவன் மேல் எந்த கேசையும் நிரூபிக்க முடியாமல் செய்வதறியாது இருந்து விடுவார்கள். இதுதான் அங்கிருந்த நிலைமை!

''எனக்கு ஒரு சின்ன உதவி வேணும்'' என்றாள் அனுஷா.

'யகுஜா சின்ன உதவியெல்லாம் பண்ணாது. பெரிய உதவிகளை மட்டுந்தான் பண்ணும்'' என்றான் சதுர வடிவ டை கட்டிக்கொண்டிருந்த அந்த இளைஞன்.

அனுஷா சிரித்தாள். எந்த நேரத்தில் சிநேகபூர்வமாய் சிரிக்க வேண்டுமென்றும், எந்த நேரத்தில் ஆளை மயக்கும்படி சிரிக்க வேண்டுமென்றும் அவளுக்கு நன்றாய்த் தெரியும்

''உங்களுக்கு இது சின்ன வேலையாயிருக்கலாம். ஆனால் எனக்கோ இது பெரிய உதவி.''

''என்னது?''

''ஒரு ஆள் லஞ்சம் வாங்குபவரா இல்லையாங்கற விவரம் வேணும். இதில் கொஞ்சங்கூட பொய்யான செய்தி இருக்கக்கூடாது.''

''யார் அந்த ஆள்?''

''உதவி செய்வதாக ஒப்புக் கொண்டதும் சொல்றேன்,''

''1,50,000 யென் ஆகும்'' (சுமார் பத்தாயிரம் ரூபாய்)

''எனக்கு சம்மதந்தான்.''

''சொல்லுங்க, யார் அந்த ஆள்?''

''சூபரிண்டென்டென்ட் பதவியிலிருக்கும் போலீஸ் அதிகாரி யமின் சுன்.''

இரண்டு நாட்களுக்குப் பிறகு அவளுக்குத் தேவையான செய்தி வந்து சேர்ந்தது. அதைக் கொண்டு வந்து கொடுத்து விட்டு, ''சாதாரண அரசாங்க அதிகாரியாயிருந்தால் ஒரே நாளிலேயே சொல்லிவிடுவோம்! போலீஸ் இலாக்காவில் நிஜ சொரூபம் தெரிவது ரொம்பக் கஷ்டம்'' என்றான் அவன்.

''மொத்தத்தில் இது உண்மையான ரிபோர்ட்டுதானே?''

''இதில் இம்மியும் பிசகு இருக்க வழியில்லை.''

''தாங்க்ஸ்.'' பணத்தைத் தந்தாள் அவள்.

சங்கரை ஜப்பானுக்குக் கூட்டி வரவிருந்த போலீஸ் அதிகாரியைப் பற்றிய ரிபோர்ட் அது.

''யமின் சுன்—மிகவும் நேர்மையான போலீஸ் அதிகாரி! ஒரு கொலை கேசில் யகுஜா அவருக்கு மில்லியன் யென் ஆசை காட்டியபோது கூட அவர் இணங்கவில்லை. அரும் பாடுபட்டு அந்த அதிகாரியை அந்தப் பிரிவிலிருந்து மாற்ற வேண்டியிருந்தது. தான்தான் போலீஸ் அதிகாரிகளிலேயே மிக கெட்டிக்காரன்.'' என்பது அவர் நம்பிக்கை

பத்தாயிரம் ரூபாய் பெறுமானமுள்ள அந்த இரண்டு பாரா உள்ள கடிதத்தை அவள் கவனமாய் படித்து விட்டுப் பொசுக்கி எரித்து விட்டாள்.

அன்று மாலையே யமின்சுன்னைச் சந்தித்தாள். அவர் அவ்வளவு எளிதில் வழிக்கு வரவில்லை. அனுஷாவைச் சந்தேகத்தோடு பார்த்தார்.

''ஆமாம், நான்தான் சங்கரை இங்கே கூட்டிக்கொண்டு வரவிருப்பவன். அதற்கும் உனக்கும் என்ன சம்பந்தம்?''

அவள் அதிகமாய் சுற்றி வளைக்காமல் நேரிடையாய் விஷயத்திற்கு வந்தாள்.

''சங்கரால் பாதிக்கப்பட்டவர்களுள் நானும் ஒருத்தி. அவன் சீக்கிரமாய் ஜெயிலுக்குப் போனால் நன்றாயிருக்கும். எனக்கு.''

''அந்த விஷயத்தில் நீ திகிலடையத் தேவையில்லை விரைவிலேயே அது எப்படியும் நடந்துதான் தீரும்.''

''நீங்க இந்தியாவுக்கு எப்போது வரப்போறீங்க?''

''அவன் மேலிருக்கும் கேஸ்அங்கே முடிவடைந்ததுமே!''

''அது முடிந்ததுமே இன்னொரு கேசு போட்டால்? அல்லது போடச் செய்தால்?''

''தொல்லைதான் வழக்கு முடிவடையும் வரையிலும் காத்திருக்கவேண்டியதுதான். என்னால் ஒன்றும் பண்ணமுடியாது.''

''அப்படியானால் இந்தியாவில் அவன் மேலிருக்கும் கேசு ஒரு நாளும் முடியப்போவதில்லை. ஒன்றைத் தொடர்ந்து இன்னொன்று வந்துகொண்டேயிருக்கும். அவனும் ஜாமீனில் சுதந்திர ஆளாய் திரிந்துகொண்டே இருப்பான்.''

''நான் என்னம்மா பண்ணுவேன்? உங்க நாட்டுக்கு வந்து என்னால் ஒன்றும் பண்ண முடியாதே!''

''உங்களைப் போன்ற கெட்டிக்காரங்க ஒன்றும் பண்ண முடியாது என்றால் வேடிக்கைதான்.''

''ஆஃப்கோர்ஸ், நான் கெட்டிக்காரன்னே வை. ஆனாலும் என்ன பண்ணிட முடியும்?''

''சங்கர் இந்தமாதிரி தப்பித்துக் கொண்டிருப்பதற்கு அவனுக்குப் பின்னால் இருக்கிற வசந்த் தாதாங்கிற சாமார்த்தியசாலிதான் காரணம்.''

''ஆமாம்! ரிகார்டில் அதைப் பற்றி படிச்சிருக்கேன்.''

''அவனை வீழ்த்த வேண்டுமானால் நீங்க கூடகொஞ்சம் உங்க சட்டங்கற கோட்டைத் தாண்டி வெளியே வரணும்.''

''எப்படி?''

சுமார் பத்து நிமிஷங்கள் அவள் சொன்னதையெல்லாம் கேட்டு முடித்துவிட்டு அவர் சொன்னார்.

''பெண்களுக்கு மூளையே கிடையாதுங்கறதை நிரூபிச் சுட்டாய் அம்மா. இதென்னவோ சின்னப்பசங்க கதையைப் போல இருக்கு. நீ இவ்வளவு முட்டாள்னு தெரிஞ்சிருந்தால் இதைப்பற்றிய பேச்சையே எடுத்திருக்கமாட்டேன்.''

''நான் உங்களை அங்கிள்னு கூப்பிடலாமா?''

''தாராளமாக.''

''உங்களைப் போன்ற கெட்டிக்காரத்தனம் எனக்கு ஏது அங்கிள்? ஏதோ பெண்பிள்ளை. நீங்களோ இந்த நேரத்தில் கமிஷனர் ஆஃப் போலீசாகி இருக்க வேண்டியவர். உங்களோடு என்னை ஒப்பிடலாமா?''

யமின் சுன் சிரித்தார். ''நீ சொன்னது நிஜந்தான்னு வை. இந்தத் திட்டத்தால் சங்கரை சீக்கிரத்தில் ஜப்பானுக்குக் கூட்டிட்டு வந்துட முடியும். ஆனால் உன் நிஜமான விரோதி வசந்த் தாதா என்கிறாய்! அவனுக்கு இந்தத் திட்டத்தால் என்ன நஷ்டம் வந்துடப் போகுது? சங்கர் செத்தாலும் அவன் நன்றாகத்தானே இருப்பான்? அந்த ஜப்பான் போலீஸ் அதிகாரி தன்னை நன்றாக குட்டிட்டான்னு எண்ணிப்பான். அவ்வளவுதானே?''

''அந்த திருப்தியே போதும் எனக்கு.''

''நீ ரொம்ப அல்ப சந்தோஷியாய் தோணுதே!''

அனுஷா சிரித்தாள். ''முட்டாள்கள் எல்லோருமே அல்ப சந்தோஷிங்கதான். அவங்களால் அதை விட பெரிதாய்

ஒன்றையும் சாதிச்சிட முடியாததால்தான்'' என்று எழுந்திருந்து, ''...அப்படீன்னால் நீங்க இந்தியாவுக்கு வரீங்க. ஒரு லஞ்சம் வாங்கும் போலீஸ் அதிகாரியாய் அங்கே காட்சியளிக்கப் போறீங்க. உடனே மாஃபியா உங்களைச் சந்தித்து பேரமாடப் போகிறது. அவங்க ஏதாவது பிளான் போடு வாங்க. அதற்கு நீங்க ஒப்புக்கிட்டதுமே, சங்கரை உங்களிடம் ஒப்படைப்பாங்க. நீங்க அவங்களை ஏமாத்திட்டு, ஜப்பானுக்குக் கூட்டிட்டுவந்துடுவீங்க. வில்லன்களின் மூஞ்சி வெளுக்கும். எப்படியிருக்கு நம்ப பிளான்?''

''சி-கிரேட் ஜப்பான் ஸ்டண்ட்பிக்சரைப் போல இருக்கு.''

''நீங்க அவங்களை ஏமாத்திட்டு ஜப்பானுக்குத் திரும்பி வந்ததுமே. அவங்க உங்களைப் பழிவாங்க ஏதாவது பண்ணிடுவாங்களோன்னு பயப்படுறீங்க போலிருக்கு?''

''நான்சென்ஸ்! இதை வேற யாராவது சொல்லியிருந்தால் நடப்பதே வேறு.''

''பின்னே உங்களுக்கென்ன பயம்?''

''ஒரு பயமுமில்லை. இந்த பிளான் எனக்கும் ஓ. கே. தான். ஆனால் அவங்க வந்து என்னோடு என்ன பேரம் செய்வாங்க?''

''எனக்குத் தெரியாது. ஏதாவது ஒரு பேரம் நடக்கும்னு மட்டும் தெரியும். எது என்னவானாலும் உங்க காரியம் நிறைவேறும். எங்க நாட்டிலிருந்து சங்கர் போயிடுவான். அதற்குப் பிறகு வசந்த் தாதாவை நாங்க பார்த்துக்கிறோம்.''

''எனக்கு ஒரு லட்சமோ இரண்டு லட்சமோ லஞ்சம் கிடைத்தால் அந்தப் பணத்தை என்ன செய்யறது?''

''எங்க நாட்டில் எத்தனையோ அநாதை இல்லம் இருக்கு. அதற்கு நிதி கொடுங்க. அநாதைகள் சந்தோஷப் படுவார்கள். ஒரு மனித உருக்கொண்ட ராட்சதனைப் பிடிப்

பதற்காக நீங்க சட்டத்தின் எல்லையிலிருந்து கொஞ்சம் வெளியே வரவிருப்பது எனக்குச் சந்தோஷமாய் இருக்கு. குற்றவாளி தண்டனையிலிருந்து தப்பக் கூடாது. அதுதான் சட்டத்தின் முக்கிய நோக்கமே. உங்களுக்கு என் நன்றி குட் பை.''

அவள் அன்று மாலையே ஜப்பானிலிருந்து கிளம்பி இந்தியாவிற்கு வந்து சேர்ந்து விட்டாள். விமான நிலையத்தில் இறங்கியதுமே அவள் பண்ணிய காரியம் நேராய் 'இந்தியா ட்ரிப்யூன்' ஆபீசுக்குப் போனதுதான். நாட்டிடிலேயே அதிக சர்க்குலேஷனுடைய அந்தப் பத்திரிகையில் மறுநாள் ஒரு செய்தி வெளியாயிற்று-

## 32

CRACK IN MAFIA?

நாட்டிலேயே பெரிய மா∴பியா தலைவராய் பெயர் பெற்றுள்ள டில்லி வசந்த் தாதாவுக்கும் சங்கருக்குமிடையே மனஸ்தாபம் ஏற்பட்டு விட்டதா?

—என்ற தலைப்பின் கீழ் நான்கு பத்திகளில் வந்திருந்த செய்தி அது. இருட்டுலகத்தில் பரபரப்பு தோன்றலாயிற்று.

பலவிதமான கேள்விகளின் மூலம் வெளிவந்த அக் கட்டுரை ஒரு 'ஆட்டம் பாமை'ப் போல ஜனங்களிடையே வெடித்தது. அடுத்தடுத்து இந்தியா முழுமையிலுமுள்ள மா∴பியா பற்றிய கட்டுரைகள் வெளிவந்தன. அதுவரை செய்திதாள்களைப் படிக்கும் வழக்கமில்லாதவர்கள் கூட இச்செய்தியின்பால் ஆர்வம் காட்டினார்கள். அந்தக் கட்டுரையாளரின் பெயர் சங்கர் என்றிருந்தது. போலீஸ் இலாக்காவைக் கூட வியப்புறச்செய்தது.

சங்கரைப்பற்றியும் தாதாவைப்பற்றியும் தெரிந்தவர்கள் அவ்விருவருக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டு விட்டது என்றே எண்ணிக்கொண்டார்கள். வதந்திகளைப் பரப்புவதற்குத் தர்க்கரீதியாய் காரணமே தேவையில்லை. தாதாவுக்கும் சங்கருக்கும் விரோதம், அவ்வளவுதான் செய்தி.

மூன்றாம் கட்டுரை மேலும் ஆழமாய் விவரங்களைக் கக்கிற்று. உலகத்தில் போதைப் பொருட்கள் ஐந்து விதமானவை. ஹெராயின், குடி, மார்ஃபின், ஹஷீஷ், மாண்ட்ராக்ஸ்...இவையெல்லாவற்றையும் விட விலையுயர்ந்தது ஹெராயின்...இதனைக் கள்ளக்கடத்தல் பண்ணுவதில் இண்டர்நேஷனல் ஏர்போர்ட் அதாரிடீஸ் ஆஃப் இந்தியா ஊழியர்களுக்கு இருந்து வரும் சௌகரியங்களைப் பற்றி விளக்கம் தெரிவித்திருந்தது அந்தக் கட்டுரை. ஒரு கனடா ஸ்தாபனம் இந்தியாவிலிருந்து சில லட்சம் மதிப்புள்ள பம்ப் செட்டுக்களை இறக்குமதி செய்துகொள்வதற்குக் காரணம் என்ன? பம்ப் செட்டிற்கிடையில் ஹஷீஷை வைத்து ஒரு விதமான சாயம் பூசிவிட்டால், ஏர்போர்ட் அதிகாரிகளின் எக்ஸ்ரே கண்களுக்கு அவை எட்டாது என்றா? இவ்வளவு சிறிய விஷயம் அதிகாரிகளுக்குத் தெரியாதா? தெரிந்தும் தெரியாததைப்போல சும்மாயிருக்கிறார்களா?

—விமானத்தில் பயணம் பண்ணும் ஒரு பெண் எதிர் பாராமல் இறந்துவிட்டபோது மரண காரணத்தை உறுதிப் படுத்திக் கொள்ளாமல் அரைமணியில் அவளை சொந்தக் காரர்களிடம் எப்படி ஒப்படைத்தார்கள்? அவ்வாறு ஒப்படைத்த 12 மணி நேரத்திற்குள் அவள் தேகம் மயானத்தில் புதைக்கப்பட்டபோது யாருக்குமே சந்தேகம் வரவில்லையா? தன் தேகத்தில் மறைத்துகொண்டு அவள் எடுத்துச் சென்ற பிளாஸ்டிக் ஹெராயின் பாக்கெட் தவறுதலாய் உடைந்து விட்டதால் அவள் செத்திருக்கலாம் என்றும், அவள் தேகத்துடன் இன்னும் சேர்ந்து விடாமல்

மிஞ்சியிருந்த ஹெராயினின் மிச்சத்திற்காக அவள் தேகத்தைக் கிழித்துக் கள்ளக்கடத்தல்காரர்கள் தேடி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்று யாருக்குமே சந்தேகம் வரவில்லையா? கப்பல்களில் அனுப்பப்படும் செய்தித்தாள்களின் சந்துகளில் மாண்ட்ராக்ஸ் இருப்பது உண்மையிலேயே நம் அதிகாரிகளுக்குத் தெரியாதா?

—இவ்விதமாய் நீண்டது அந்தக் கட்டுரை.

இக்கட்டுரையைப் பிரசுரித்த செய்தித்தாள் விடியற்காலை நான்கு மணிக்கு வெளிவந்தது. அன்றிரவே பதினோரு மணிக்கு ஒரு விமான நிலைய அதிகாரியின் வீட்டைச் சோதனை பண்ணி, ஏற்றுமதிக்குத் தயாராயிருந்த லட்சம் ரூபாய் மதிப்புள்ள ஹெராயின்களை ஸ்ரீகாந்த் சுயமாக பறிமுதல் செய்தான்.

பத்திரிகை ஆசிரியர் தம் பத்திரிகைக் காரியாலத்திற்கு வந்து சேர்ந்த செய்திகளால்தான் போலீஸ் அதிகாரிகள் இவ்வாறு சோதனை பண்ண முடிந்தது என்று ஒரு கட்டமிட்ட செய்தியை அக்கட்டுரைக்கிடையே பிரசுரிக்கச் செய்தார்.

ஆதனால் அக்கட்டுரைக்கு அபரிமிதமான கவர்ச்சி வந்து சேர்ந்தது.

அரசாங்கம் இவ்வளவு நாளும் என்னதான் செய்து கொண்டிருந்தது என்று எல்லோரும் வியக்கத் தொடங்கினார்கள்.

நான்காம் பத்திரிகையில் வெளி வந்த கட்டுரை துப்பாக்கிகளைப் பற்றி.

முதல் கட்டுரை தென்னிந்திய (ஆயில் மாஃபியா) இரண்டாவது கட்டுரை மத்தியபிரதேசம் (காடு), மூன்றாவது (டில்லி—பம்பாய்) ஹெராயின் பற்றியதானால் இந்த நான்காம் கட்டுரை குஜராத்தைப் பற்றியது!

வேலை நிறுத்தங்களாலும், ரகளைகளாலும் இரண்டு படும் அந்த மாகாணத்து அராஜக சக்திகளுக்கு ஆயுதங்களை யார் சப்ளை பண்ணுகிறார்கள்?

"லைசன்சு இருக்கும் ஒவ்வொரு துப்பாக்கிக்கும் குஜராத்தில் லைசன்சு இல்லாத பத்து துப்பாக்கிகள் இருக்கின்றன. பிடிபட்ட ஒவ்வொரு துப்பாக்கிகளுக்கும் பின்னால் பிடிபடாத இருபது துப்பாக்கிகள் இருப்பதாய் கணக்கு."

"கணக்கு" என்ற தலைப்புடன் பிரசுரமாகியிருந்தது அக்கட்டுரை. மகாராஷ்டிரா, ராஜஸ்தானிலிருந்து குஜராத்திற்குள் நுழையும் ரயில்களில், சிறிய சிறய பாக்கெட்டுகளில் இந்த ஆயுதங்களை ஏற்றி அனுப்பும் விஷயம் உண்மையில் போலீசாருக்குத் தெரியாதா?—என்று எதிர்க்கட்சி உலுக்கி எடுத்த கேள்விக்கு முதல் மந்திரி என்ன பதில் சொல்லப் போகிறார்? காந்தி பிறந்த இடமான போர்பந்தரில் சுமார் இருபது தொழிலகங்கள், ஒவ்வொன்றிலிருந்தும் வாரத்திற்கு ஐந்தாறு ரிவால்வர்கள் தயாராகின்றன" என்பது உண்மையிலேயே அரசாங்கத்திற்குத் தெரியாதா? இவ்வாறு நீண்டது அக்கட்டுரை.

ஐந்தாம் கட்டுரை கரி சம்பந்தப்பட்டது. எந்த நபரைப் பற்றி பீகார் முதல் மந்திரி அடிக்கடி ஜனங்களை எச்சரித்து வருவாரோ, எந்த நபரின் மேல் 22 கிரிமினல் வழக்குகள் இருந்தனவோ, எந்த நபர் 75,000 ஓட்டுக்களில் எம்.எல்.ஏ. ஆனாரோ—அந்த நிலக்கரி மா:.பியா தலைவனைப்பற்றிய கட்டுரை அது.

ரங்கதாரி வரியின் பெயரில் வசூலாகும் பணம் யார் கைக்குப் போகிறது? யாரை டிபுடி கமிஷனர் ஆ:.ப் போலீஸ்கூட, 'சார்' என்று அழைப்பாரோ, யார் தம் கட்சியில் இருந்தால் தம் கட்சிக்கே அந்த எல்லையில் வேறு இணை கிடையாது என்று டா ப்பார்களோ அந்த ஆளின் நிஜ சொரூபம் என்ன? பாரத் குக்கிங் கியாசை ஆடிட் பண்ணுவதற்காகப் போன சார்டர்ட் அகௌண்டென்டின் சவம் ரயிலடியில் காலும் கையும்

வெட்டிப் போடப்பட்டுக் கிடந்ததற்குக் காரணம் என்ன? அது தென்பட்ட நான்கு மணி நேரத்திற்குள்ளேயே எஸ்.ஐ.அது ரயிலிலிருந்து தவறிவிழுந்து விபத்துக்குள்ளான சவம் என்று கூறி உடனடியாய் இழுத்தெறியும்படி உத்தரவு ஏன் தந்தார்? பிற ஆடிட்டர்கள் ரகளை பண்ணியதால் தோண்டியெடுத்துத் திரும்பவும் சவப்பரிசோதனை பண்ணிய போது வெளிப்பட்ட உண்மைகளுக்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டது? தன் ஆடிட்டிங்கில் கண்டுபிடித்த விஷயங்களுக்காக அந்த அகௌண்டென்ட் சாவதற்கு முன்னால் எம்.எல்.ஏ.ஐச் சந்தித்தது உண்மையா, இல்லையா? தாம் அந்த ஆடிட்டரை, சித்திரவதை பண்ணியது உண்மைதான் என்று சி.பி.ஐ.யிடம் ஒப்புக்கொண்ட 'வலதுகை' கோர்ட்டில் தன் ஸ்டேட்மெண்ட்டை நிராகரித்து எப்படி தப்பித்துக் கொண்டார்?

இவ்வாறு நீண்டது அந்தக் கட்டுரை.

சர்மா சாகப்போகும் முன்னால் எழுதிய கடிதத்திலிருந்த ஐந்து முக்கியமான விஷயங்களையும் ஐந்து அம்புகளாய் எய்து வீசியெறிந்தாள் அனுஷா.

அவள் யாரையும் குறிப்பிட்டு வாதாடவில்லை. யாருமே அவள்மீது மான நஷ்ட வழக்குப் போடும்படியான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தவுமில்லை. ஆனால் அம்புகள் யாவும் சரியாய் போய் தைத்தன! புரிய வேண்டியவர்களுக்குப் புரிந்தது. அவர்கள்—போலீசார், அரசியல் தலைவர்கள், தாதாக்கள்!

சர்மா எழுதிய கடிதம் அனுஷாவின் கையில் சிக்கிக் கொண்டிருக்கும் விஷயத்தை அறிந்த தாதா, அனுஷாவுக்குத் தன்னை எதிர்க்கும் நோக்கமில்லை என்று நினைத்துக் கொண்டிருந்தான். இந்த விதமாய் அடி கொடுப்பாள் என்று எதிர்பார்த்திருக்கவில்லை. முதல் நாள் பேப்பர்களில்

செய்தி வெளியாவதற்கு முன்பே டில்லி போலீசார்—மூன்று வெவ்வேறு இடங்களில் நுழைந்து வீழ்த்தி விட்டார்கள். தாதாவின் வலதுகையாக இருந்த இரு ஆட்கள் பிடிபட்டுப் போனார்கள்.

சர்மா எழுதியிருந்த கடிதத்திலிருந்த விஷயங்களை கடைசி நிமிஷம் வரையிலும் அனுஷா யாருக்குமே சொல்லவில்லை. சொந்த அண்ணனான ஸ்ரீகாந்திற்குக் கூட அவள் சொல்ல வில்லை. ஐந்து கட்டுரைகளையும் தயாரித்துக் கொண்ட பிறகுதான் சொன்னாள் ஸ்ரீகாந்திடம். அவன் வியப்படைந் தான். "இவ்வளவு" சமாச்சாரங்களை உனக்குள்ளேயே வைத்துக் கொண்டு இவ்வளவு நாளாய் ஏன் சொல்லவே யில்லை?" என்றான்.

"சொன்னால் என்ன பண்ணியிருப்பீங்க? உங்க ஆட்களே அந்த தாதாவிடம் வரி பிசகாமல் ஒப்பித்திருப்பார்கள் எல்லாவற்றையும், அவ்வளவுதானே?"

"ஆனால் இந்த மாதிரி முக்கியமான விவரங்கள்..."

"சரி போகட்டும், இப்போது சொல்லிவிட்டேன் இல்லையா. இந்த விவரங்களை வைத்து உன்னால் என்ன பண்ண முடியுமோ பண்ணு..."

இவையனைத்தும் செய்தித் தாள்களில் வெளிவரவிருந்த போது முதல்நாள் இரவே சிலர் கைதானார்கள். ஆயில் ராஜாவைப் போன்ற சில பிரமுகர்கள் கைதானார்கள். ஆனால் இவர்கள் கைதானது பெரிய பெரிய கேசுகளின் மூலம் இல்லை. லைசன்சு இல்லாமல் ரிவால்வர் வைத்துக் கொண்டி ருந்தார்கள் என்பது போன்ற சிறிய கேசுகளில்!

ஆனால் இந்த கைது விஷயங்கள் கூட கட்டுரையோடு கூட செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்டதுதான் ஜனங்க ளிடையே பெரும் பரபரப்பை உண்டாக்கிற்று. ஒன்றோ டொன்று சேர்த்து ஆராய்ந்து பார்க்கும் ஜனங்கள் இக்

கட்டுரையின் மூலந்தான் கைதாக்கப்பட்டதாய் பாவித்தார்கள்.

மாஃபியாவைப் பற்றித் தெரிந்தவர்கள் சங்கருக்கும் தாதாவுக்கும் ஏற்பட்ட மனஸ்தாபத்திற்கு சந்தோஷப்பட்டார்கள். வெளியுலகத்தைவிட மாஃபியா உலகத்தில் இச்செய்தி அதிக பரபரப்பை உண்டாக்கிற்று. அந்த இருட்டுலகத்தில் எல்லா காரியங்களுமே வாய் வார்த்தையின் மீதே நடந்து வந்தன. எப்பொழுது எதிராளியின் மேல் கொஞ்சம் அவநம்பிக்கை ஏற்பட்டதோ அப்பொழுதே எல்லா விவகாரமும் கவிழ்ந்து விடும்.

ஸ்ரீகாந்த் அனுஷாவிடம் கேட்டான். "நாம்ப எதற்காக இதையெல்லாம் பண்ணனும்? இதன் மூலம் தாதாவின் கட்டைவிரல் கூட நகராது. கொஞ்சம் ஏதோ நஷ்டம் வரலாம். ஆனால் அது அவனுக்குப் பெரிய நஷடமில்லை."

"மானசீகமாய் தளர்ந்து போகும்படி பண்றதுக்குதான்... போலீசாராகிய உங்களால் அதைப் பண்ண முடியாது! மனிதன் தளர்ந்துபோயிட்டால் பிறகு நீதி தேவையில்லை. அது மட்டுமில்லை, எவ்வளவு பெரிய மாஃபியா லீடரானாலும் அவன் கையாட்களுள் சிலர் தம் சொந்த சமஸ்தானங்களை ஸ்தாபித்துக்கணும்னு எதிர்பார்த்துட்டே இருக்காங்க, அப்படிப்பட்டவங்களுக்கு இது ஒரு அவகாசத்தைத் தரும். அவங்களுக்குள் எவ்வளவு பிளவு வருமோ அவ்வளவு நமக்கு நல்லது."

"இந்தக் கட்டுரைகளையெல்லாம் சங்கரின் பெயரில் ஏன் எழுதினாய்?"

அனுஷா சிரித்து, "அது டாப்சீக்ரட்" என்றாள்.

அதே சமயம் சங்கர் தாதாவிற்கு முன்னால் கவலையுடன் நடைபயின்று கொண்டிருந்தான்.

''இதெல்லாம் அந்த ஸ்ரீகாந்தின் தங்கச்சி பண்ணின வேலை. அதை ஏன்தான் இன்னும் விட்டு வெச்சிருக்கீங்களோ எனக்குப் புரிய மாட்டேங்குது'' என்று கத்தினான்.

''இவ்வளவு நாளும் சும்மாயிருந்துட்டு இன்றைக்கு இப்படி வெடிக்கும்னு கண்டேனா?''

''அதை அன்றைக்கே கற்பழித்துக் கொன்றுபோடாமல் விட்டது என் தப்பு.''

''நாளைக்குப் பார்லிமெண்ட் தொடங்கினதும் ஒரிரு முதல் மந்திரிங்களுக்கும்' நாலைந்து கவர்னர்களுக்கும் சீட்டு கிழிஞ்சுடும்.''

''நம்மிருவருக்கும் மனஸ்தாபம்னு நம்ப ஆட்களே நினைச்சுப்பாங்க. ஆனால் அந்த கழுதைக்குப் பைத்தியந்தான் பிடிச்சிருக்கணும். இல்லாவிட்டால் என் பேரில் எதுக்குக் கட்டுரை எழுதினா?''

வசந்த் தாதா மௌனம் வகித்தான். பைத்தியக்காரியா? உண்மையிலேயே பைத்தியமாய்தான் சங்கரின் பெயரில் கட்டுரை எழுதியிருப்பாளா? முன்பானால் நம்பியிருப்பானோ என்னவோ? இப்பொழுது யோசிக்க வேண்டியிருந்தது.

## 33

''இவ்வளவுதானா—இன்னும் ஏதாவது பாக்கி இருக்கிறதா—உனக்குத் தெரிந்தவைகளும்—அவள் எழுதியிருப்பதுவும்?'' ஐந்து பேப்பர்களையும் அவளுக்கு முன்னால் கொண்டு வந்து போட்டுவிட்டுக் கேட்டான் ரஜினி.

"வேறில்லை, சர்மாவின் கடிதத்தில் எழுதியிருந்த ஒவ்வொரு விஷயமும் இதில் வந்திருக்கிறது"—அவற்றைப் படித்துவிட்டுச் சொன்னாள் வத்சலா. அனுஷா இவ்விதமாய் செய்தித்தாள்களில் பிரசுரித்து பலகோடி பேருக்கு தெரியும் படி செய்தது வத்சலாவுக்கு குதூகலமாகவும் உற்சாகமாக வும் இருந்தது.

"எனக்கு ஒன்றுதான் புரியலை. சாதாரணமாய் கெட்டிக்காரப் பெண்ணாயிருந்தால், அந்த சர்மாவின் கடிதம் கிடைத்ததுமே போலீசாரிடம் ஒப்படைத்துவிட்டு, தாதாவை சிக்கலில் மாட்டி வைத்திருக்க வேண்டும். அனுஷா, கொஞ்சம் அதிகப்படியான புத்திசாலியானதால் அந்த விஷயத்தைச் சில நாட்கள் மறைத்து வைத்துவிட்டு, தாதா ஹாய்யாக இருந்த சமயம் பார்த்து வெளியிட்டிருக்கிறாள். இதன்மூலம் தாதாவை கொஞ்சம் சங்கடத்தில் வைக்கலாம், மற்றபடி ஒன்றும் குடி முழுகிடாது! இதற்காகவா அனுஷா இவ்வளவு பண்ணினாள்? என்னவோ அவள் இந்த விஷயத் தில் இன்னும் கொஞ்சம் புத்திசாலித்தனமாய் யோசித்திருக்க லாம்னு தோணுது எனக்கு..."

லேசான சிரிப்புச் சத்தம் கேட்டது. "யோசித்துப் பார்க்கலைன்னு ஏன் நினைக்கிறீங்க ரஜினி?" என்ற குரல் தொடர்ந்து கேட்டது.

மூவரும் திடுக்கிட்டுத் திரும்பினார்கள். எவ்வளவு நேரமாய் நின்று கொண்டிருந்தாளோ தெரியாது. அனுஷா அங்கே இருந்தாள்! எதிர்பாராமல் அவளை அங்கே திடீரென்று கண்டது மூவருக்குமே ஆனந்தமான அதிர்ச்சி யாயிருந்தது. எல்லோரையும் விட அதிகமாய் சந்தோஷப் பட்டது வத்சலாதான்!

"ரஜினி! தாதா என்ன தப்பு பண்ணினாரோ அதையே நீங்களும் பண்றீங்க."

"என்ன?"

''முதலில் ஜாக்கிரதையாய் இருந்து போகப்போக அசிரத்தையாகி விடுவது.''

''எந்த விஷயத்தில்?''

''வத்சலாவைக் காப்பாற்றுகிற விஷயத்தில், யாருமே என்னைத் தடுக்கலை. எப்பொழுதும் போல படியேறி மேலே வந்துட்டேன். சங்கருக்குக் கொஞ்சமாவது சாமர்த்தியம் இருக்குமானால் ரகளை ஏதும் செய்யாமல் இப்படி வந்து துப்பாக்கியை நீட்டியிருந்தால் நீங்கள் வெறுமே பார்த்துட்டு சும்மாயிருந்துக்க வேண்டியதுதான்.''

பில்வனும் ரஜினியும் ஒருவ முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டனர். நூற்றுக்கு நூறு உண்மை.

''ரஜினி, உங்களிடம் அவசர வேலை இருக்கு. நாடகத்தின் இறுதி திரையை இனி இறக்க வேண்டியது நீங்கதான்.''

பேசிக்கொண்டே உள்ளே போனார்கள். பில்வனும் அவர்களைத் தொடர்ந்தான். வத்சலா மட்டுமே அங்கிருந்தாள்.

அனுஷா வந்ததுமே அங்கு தோன்றிய உற்சாகம், தன்னை மட்டும் விட்டுவிட்டு எல்லோரும் அகன்றது... இவற்றால் ஒரு சிறு குழந்தையைப் போல் உணர்ந்தாள் வத்சலா. பேசுவது எதுவாக இருந்தாலும் தனக்கு எதிலேயே பேசிக் கொள்ளலாம் அல்லவா என்றெண்ணிக் கொண்டாள்.

ஒரு மிக முக்கியமான விஷயமாய் முடிவெடுப்பதற்கு அவர்கள் வாக்குவாதம் பண்ணிக் கொண்டிருக்கிறார்கள் என்று அவளுக்குத் தெரியாது.

உள்ளே வந்த ரஜினி, அனுஷா சொன்னதையெல்லாம் கேட்டு விட்டு—உனக்கு புத்தி பிசகி விட்டது. நடக்கிற காரியமா இது?'' என்றான்.

''ஏன் நடக்காது? உங்களுக்குத் துணிச்சல் இல்லை.''

''தைரியம் இல்லாமலில்லை. இந்த மாதிரி திருட்டுத் தனமாய் ஏன் பண்ணணும்?''

என் ஊகம் சரியாயிருக்குமானால், இதுதான் நாம் போடுகிற கடைசி நாடகமாயிருக்கும். இதன் மூலம் யார் பலசாலின்னு தெரிந்துவிடும்?''

ஆனால்...'' ரஜினி ஏதோ சொல்ல வந்தான்.

வெளியே வத்சலா பொறுமையின்றி இங்குமங்கும் நடந்து கொண்டிருந்தாள். இவர்கள் இவ்வளவு நேரமாய் என்ன பேசிக் கொண்டிருக்கிறார்கள்?'' அதைத் தனக்கும் சொன்னால் என்ன?

ஒரு தீர்மானத்திற்கு வந்தவளாய் அந்த அறைக்குள் நுழையப் போனாள். அதற்கு முன்பே ரஜினி ஓ.கே. நீ சொன்னாற் போலவே பண்றேன். அதற்குப் பதிலாய் நீ என்ன தருவாய்?'' என்றான்.

திகைப்படைந்த அனுஷா ''நான் என்னத்தைத் தருவேன்?'' என்றாள். ரஜினி சிரித்தான்.

''பாரு பெண்ணே! எனக்கு அந்த சங்கரோடும் தாதா வோடும் எந்தவிதமான விரோதமும் கிடையாது. உனக் காகவே அவங்களோடு விரோதம் பண்ணிக்கணும்''என்றான்.

''வத்சலாவுக்காகவும் பண்ணிக்கலையா?'' கேட்டாள் சற்று ரோஷமாய்.

''அதற்கு பதில் அவள் என்ன தரப்போகிறாங்கிறதை நாங்களிருவரும் தீர்மானித்துக்க வேண்டியது! உன் சார்பில் இதெல்லாம் பண்ணினதற்கு நீ என்ன தருவாய்? அதைச் சொல்லு.''

"என்னால் ஒன்றும் தர முடியாது. 'உம்' என்றால் ஆயிரம் பேர் பண்ணித் தருவாங்க இந்த வேலையை."

"நீ இந்த வேலையைச் சொன்னால் போதும் எல்லோரும் ஓடிடுவாங்க. அதுவும் சங்கருக்கு எதிராய் இந்த வேலையைப் பண்ணணும்னு சொன்னால்—அதிக நெஞ்சுரம் வேண்டும்."

"அது எனக்கும் தெரியும். ஆனால் ப்ளீஸ் ரஜினி, இந்தக் காரியத்தை உங்களைத் தவிர வேறு யாருமே பண்ண முடியாது. அவன் உங்களுக்கும் எனக்கும் ஏன்—நம் எல்லோருக்கு பொது விரோதிதான்! ரொம்ப யோசித்து இந்தத் திட்டத்தைப் போட்டிருக்கிறேன். எனக்கு இந்த உதவியைப் பண்ணமாட்டீங்களா? என் ஒருத்திக்காக இல்லை, நம் எல்லோருக்காகவும் குறிப்பா இந்த நாட்டுக்காக..."

"இதப்பார். சங்கர் பிழைத்திருப்பதால் உனக்கு நஷ்டம். வத்சலாவுக்கும் நஷ்டம். அதானேயன்றி எனக்கொன்றுமில்லை. வத்சலாவை சங்கரின் பிடியிலிருந்து காப்பாற்றுவதற்கு அவள் எந்த விதத்தில் எனக்கு நன்றியாயிருப்பாள் என்றதெல்லாம் நீ அறிய வேண்டியதில்லை. நீ சொன்னது போல பண்றத்துக்கு எனக்கு எவ்வளவு தருவாய்னு சொல்லு!"

"எவ்வளவு வேணும்?"

"பத்து லட்சம்."

"மைகாட்...பத்து லட்சமா?" ஆழமாய் பெருமூச்செறிந்தாள் அனுஷா.

"ஆமாம்."

"போயிட்டு வரேன் ரஜினி! உங்களிடம் வந்தது என் பிசகு!" என்றாள்.

"நீ இங்கிருந்து போகணுமானாலும் லட்ச ரூபாய் தரணும் அனுஷா!"

அவள் முகம் சுளித்து, ''எதுக்கு?'' என்றாள்.

''உன் முழு பிளானையும் என்னிடம் சொல்லிவிட்டாய். இப்போது நான் அதை தாதாவிடம் சொல்லி விட்டால் நீ நினைத்தது நடக்காது. அப்படிச் சொல்லாமலிருக்க லட்சம் தேவை,''

''பிளாக்மெயில்?''

''நீ என்ன பேர் வேணுமானாலும் வெச்சுக்கோ.''

''சொல்லிக்குங்க ரஜினி. இந்தமாதிரி ஐடியா என்னிடம் நிறைய இருக்கு. இது இல்லாவிட்டால் வேறொன்று யோசித்துக்கறேன். நான் செய்த தப்பெல்லாம் நீங்க இவ்வளவு பிசினஸ் மைண்டாம் இருப்பீங்கன்னு எதிர் பார்க்காததுதான். வத்சலாவுக்கு உதவினதற்கு அவள் சார்பிலும் அவளால் உங்களுக்கு லட்சம் ரூபாய் தர முடியாது அதனால் அவள் சார்பிலும் நானே சொல்லிடறேன் போயிட்டு வரேன், குட்பை ''

அவள் வாசலைத் தாண்டும் சமயம்—போகட்டும், லட்சம் தேவையில்லை. அதற்குச் சமமான மதிப்புள்ளது இன்னொன்று...'' என்று இடையிலேயே நிறுத்திக் கொண்டான். அப்பொழுதுதான் அவள் பார்த்தாள். உதடுகளுக்குப் பின்னால் அதுவரையிலும் அடக்கி வைத்துக் கொண்டிருந்த அந்தச் சிரிப்பை.

இவ்வளவு நேரமாய் தன்னை அழவைந்துக் கொண்டிருந்திருக்கிறான் என்று—அவ்வளவு கெட்டிக்காரியான அவளுக்கே அப்பொழுதுதான் புரிந்தது. ''என்ன?'' என்றாள்

''உன் ஃபிளாட்டில் உன்னை அருகே இழுத்து அணைத்துக் கொண்டு அன்றைக்குப் பண்ணிய காரியம்... ஒவ்வொன்றும் லட்சம் பெறுமானது. நீ சொன்னதை மறந்து போயிடணுமானால் ஃபீஸ் ஒன்று...உன் பிளானில் பங்கேற்கணும்னால் பத்து. உனக்கு எது இஷ்டமோ, எதுவேணுமோ நீயே தேர்ந்தெடுத்துக்கொள்.''

"எனக்கொன்றும் தேவையில்லை."

"அப்படிச் சொல்லாதே...ரஜினி என்னை நாற்பது லட்சம் ஏன் கேட்காமல் போனான்னு மனதிற்குள் நினைக்கிறாய் இல்லே நீ இப்போ."

"இல்லை. பெண்களின் மேல் இவ்வளவு இளப்பமான எண்ணம் இருப்பதற்கு மனதிற்குள் வருந்துகிறேன். போயிட்டு வரேன்."

"அன்றையிலிருந்து எவ்வளவோ முறை ஞாபகம் வந்தாலும், மேலுக்கு மிடுக்காய் இருப்பது மனுஷத் தன்மையில்லை."

"எனக்கொண்ணும் ஞாபகம்வரலை. மேலும் அன்றைக்கு நீங்க போனதுமே என் உதடுகளை டெட்டால் போட்டு அலம்பினேன்."

"உண்மையைச் சொல்லு, நிஜமாகவே என்னைப்பற்றி ஞாபகம் வரவேயில்லையா."

"வரலை"

"நிஜமாய் வரலையா?"
"வரலை... வரலை... வரலை"

அவன் சட்டென்று அவள் தோளைப்பற்றி அவள் சற்றும் எதிர்பாராத வேகத்தில் சரேலென்று அவளை அருகில் இழுத்துக் கொண்டான். அவள் பெரிதாய் எதிர்பார்க்கவில்லை. இருவரும் அருகருகே இருந்த அதே சமயத்தில் பொறுமையின்றி வெளியே நடைபயின்று கொண்டிருந்த வத்சலா உள்ளே வரப்போனாள். உள்ளே தென்பட்ட காட்சியைப் பார்த்த அவள் முகம் சிவந்து கன்றிவிட்டது. விருட்டென்று திரும்பி விட்டாள்,

அதற்குள் உள்ளே அனுஷா அவனிடமிருந்து விடுபட்டு. "என்ன இது?" என்றாள் கோபமாய்.

"இப்போ சொல்லு, இது ஞாபகத்துக்கு வரலையா?" என்று கேட்டான்.

"ரஜினி, நீங்க இதை ஹிப்போ கிரசின்னு எண்ணிக்கா விட்டால் நான் ஒரு விஷயம் சொல்றேன். ஒரு கடமை முன்னோக்கி இருக்கும்போது, எனக்கு எந்த விஷயமும் ஞாபகத்துக்கு வராது. இது நிஜம்."

"சரி, நானும் அதுவரைக்கும் காத்திருக்கேன். சொல்லு குறைந்தபட்சம் நி...னை...வு...'

அவள் சிரித்துவிட்டு, "வந்தீங்க உண்மையைச் சொல்லணும்னால் நிறையத் தடவை! நிறைய" என்றாள்.

அவன் 'ஹுர்ரே' என்று கத்தப் போனவன், வெளி அறையில் வத்சலா இருந்தது நினைவுக்கு வரவே நிறுத்திக் கொண்டான். ஆனால் அவன் நினைத்தாற்போல வத்சலா முன் அறையில் இல்லை. அவர்களைப் பார்த்தவுடன் அவள் நேராய் பால்கனிக்கு வந்தாள். அவள் மனமெல்லாம் யாரோ பிடித்து அழுத்தினாற் போலிருந்தது. தன்னை ஏமாற்றி விட்டார்கள் என்ற உணர்ச்சியா அல்லது தான் இருக்கக் கூடாத இடத்தில் இருக்கிறோம் என்ற உணர்ச்சியா என்று கூட அவளால் புரிந்துகொள்ள முடியவில்லை. பால்கனிக்கும் பக்கத்திலிருந்த படிகளில் இறங்கி கீழே வந்தாள்.

இன்னும் என்ன? இனி எந்த ஆபத்துமில்லை.

இந்த யோசனை இவ்வளவு நாளாய் ஏன் வராமல் போய் விட்டது அவளுக்கு?

வெளியே ஏதாவது கடை கண்ணியிலிருந்து போன் பண்ணி தான் இவ்வாறு போய்விட்டதைச் சொல்ல வேண்டும். சொன்னதும் அவர்கள் என்ன பண்ணுவார்கள்? ஒருக்கால் ஒருவர் முகத்தை இன்னொருவர் பார்த்துக்கொண்டு சிலையாய் நின்றுவிடுவார்கள். தம் தவறை உணர்ந்து பச்சாதாபப் படுவார்கள்.

கீழ் வராந்தாவிலிருந்து அவள் வெளியே வந்தாள். வெடி குண்டால் சிதைந்து விழுந்திருந்தவைகளை பணியாட்கள் அள்ளி வெளியே எறிந்து கொண்டிருந்தார்கள்.

அவள் வெளியே வந்து வீதியில் காலை வைத்தாள். பல நாட்களுக்குப் பிறகு—

## 34

சங்கருக்கும் தாதாவுக்கும் மனஸ்தாபம் ஏற்பட்டுவிட்டது என்ற செய்தி பரவி ஒருவர்க்கொருவர் கொல்லுவதற்கு முயல்கிறார்கள் என்றும் வதந்திகள் பரவின.

''இந்தக் கட்டுரைகளை எழுதியது அனுஷாதான்னு உறுதியாயிடுத்து. சங்கர் என்ற புனைப் பெயரில் எழுதியிருக்கிறாள். அதற்கு பத்திரிகை ஆசிரியர்களை எப்படிக் குறை சொல்ல முடியும்?'' என்றான் தாதா.

''கட்டுரைகளை எழுதியது நான் இல்லைன்னு ஸ்டேட்மெண்ட் தந்தால்?'' என்றான் போனில்.

''அதனால் என்ன லாபம்? என்ன காரணத்துக்காக இப்படி அவள் எழுதியிருக்கான்னு தெரியாதே'' என்றான் தாதா.

''மொத்த நஷ்டம் எவ்வளவு?''

''ரொம்ப...நினைத்தும் பார்க்க முடியாத அளவு. அந்தக் கடிதம் வத்சலாவின் கையில் சிக்கியிருந்தபோது ரொம்ப ஜாக்கிரதையாய் இருந்தோம். ஆனால் இந்த மாதிரி விஷயங்களில் எவ்வளவு நாளுக்குத்தான ஜாக்கிரதையாய் இருந்து விட முடியும்? கிடங்குகளிலிருந்த சரக்குகளை,

எவ்வளவு நாளைக்கு வேறிடத்தில் ஒளித்து வைக்க முடியும்?... எல்லாம் முடிந்து விட்டதுன்னு நினைத்திருந்த சமயத்தில் இப்படி திடீர்னு எல்லா பக்கத்திலிருந்தும் தாக்குதல் வரும்னு நினைக்கலையே! அந்த நஷ்டம் கிடக் கட்டும்—இப்போது முதல் மந்திரிங்க, கவர்னருங்க பேரும் இதில் அடிபடுவதால் ரொம்பக் கஷ்டமாகிவிட்டது. முக்கிய மாய் அந்த காடுகள், கலப்பைத் தகராறு, கரி விஷயம் இதெல்லாம் ரொம்ப சங்கடத்தில் கொண்டு விட்டுட்டுது! அதனால் இந்த கட்டுரை மீது அதற்குள் சி.பி.ஐ. விசாரணை தொடங்கிவிடும் என்ற விஷயம் வெளியாகிவிட்டது. இனி நாம் எவ்வளவு ஆழமாய் போகிறோமோ அவ்வளவு ஆபத்து நமக்கு! 'நமக்கு' என்றால் நமக்கில்லை. உதவி பண்ணின வங்களுக்கு! பெரிய பெரிய பதவிகளில் இருப்பவங்க பயப்படத் தொடங்கிட்டால் நம்ப விவகாரம் எதுவுமே நடக்காது.''

அந்த விஷயம் சங்கருக்கும் தெரியும்! 'இந்த சர்க்கார் காரியாலயங்களில் பெரிய பதவிகளில் இருக்கும் லஞ்சப்பேர் வழிகள் ரெண்டு கைகளிலும் வாங்க முடிந்தவரைக்கும் பணத்தைப் பிடுங்கிப்பாங்க. தம் மேல் பழி வரும்னு கொஞ்சம் சந்தேகம் வந்துட்டால்போதும். நத்தையாய் ஒடுங் கிடுவாங்க அப்போது அவங்களையொத்த பயந்தாங்கொள்ளி களை வேறெங்கும்பார்க்க முடியாது. முடிந்தால் அடுத்தவ னின் மீது தள்ளிடலாம்னு எதிர்பாத்துட்டிருப்பட்டிருப்பாங்க என்றெண்ணிக் கொண்டான் மனதிற்குள், போனை வைத்து விட்டு.

இதற்கெல்லாம் காரணம் அந்த அனுஷாதான்! அவள் எங்கேயிருந்தாலும் பிடித்துவிடவேண்டும். வெறுப்போடு ஆக்சிலேட்டரை அழுத்தினான். கார் வேகமாய்ப் பறந்தது. அவனுக்கு முன்னால் அவள் உருவம் தெளிவின்றி தெரிந்தது. சாதாரணமாய் தெருவில் போய்க்கொண்டி ருந்தால் அவனால் அடையாளம் கண்டு பிடித்திருக்க

முடியாது—பொருட்படுத்தியும் இருக்கமாட்டான். ஆனால் அவள் அப்பொழுதுதான் ரஜினியின் பிடியிலிருந்து வெளியே வருகிறாள். அவன் பிரேக் போட்டான். அங்குமிங்கும் பார்த்தான், தன்னை வலையில் வீழ்த்த இது ஏதாவது புது திட்டமா என்று!

அப்படி ஏதுமில்லை என்று தீர்மானமாய் தெரிந்ததும் அவளைத் தொடர்ந்தபடியே காரை மெதுவாய் ஓட்டிக் கொண்டு போனான். அவள் தெருக்கோடியில் திரும்பியதுமே காரை ஒரு பக்கமாய் நிறுத்தினான். தனக்குப் பக்கத்தில் கார் வந்து நின்றதுமே அவள் முதலில் அதை ரஜினி என்றெண்ணி னாள். அதில் உட்கார்ந்திருந்த ஆளை அடையாளம் புரிந்து கொள்ள அவளுக்கு அரை நிமிஷம் ஆயிற்று. அதற்குள் அவன் காரை விட்டிறங்கி வந்ததும். அவளை உள்ளே தள்ளிவிட்டுக் காரின் கதவைச் சாத்தியதும் நடந்து முடிந்து விட்டது. அவள் கத்தப் போனாள். அவன் இப்படிப்பட்ட விஷயங்களை நிறைய பார்த்திருக்கும் அனுபவசாலி. இழுத்து முகத்தின்மேல் ஒரு குத்து விட்டான். அவளுக்கு நினைவு தப்பிவிட்டது. கார் வேகமாய் போகத் தொடங் கிற்று.

ஐந்து நிமிடங்கள் வரை கலவரப்பட்டுக் கொண்டிருந் தார்கள் அவர்கள். அதற்குள் போன் ஒலித்தது. ரஜினி எடுத்தான்.

''ஹலோ ரஜினி சௌக்கியமா?''

''யாரு?''

''நான்தான் சங்கர். அனுஷா எங்கே?''

''தெரியாது.''

''நிஜமாய் தெரியாதா?''

''தெரியாது.''

அதற்குள் அனுஷா அவனுக்கருகில் வந்து என்ன என்பது போல கேட்டாள். இரு என்று சைகை காட்டினான். அதற்குள் மறுமுனையிலிருந்து சங்கரின் குரல் கேட்டது.

''உனக்கு அனுஷாவின் மேல் காதல் அதிகமா, வத்சலாவின் மேலா? யோசித்துக் கொள் ரஜினி! இவ்வளவு நாளாய் நீ ஒளித்து வைத்துப் பாலும் தேனுமாய் கொடுத்து போஷித்து வந்த வத்சலா என்னிடம் இருக்கிறாள். முன்பானால் அவளைக் கண்டதுமே கொன்று போட்டிருப் பேன்! இப்பொழுது இனிமேல் அவளிடம் ஒளித்து வைக்க வேண்டிய ரகசியம் எதுவுமில்லை. ஆனால் பேரமாட அவள் உதவுவாள். இருபத்தி நான்கு மணி நேரம் டைம் தரேன் உனக்கு! நாளைக்கு இந்நேரந்திற்குள் அனுஷாவை என்னிடம் ஒப்படைக்கணும். இல்லாவிட்டால் இந்த வத்சலாவின் ஒவ்வொரு அவயவத் தையும் மணிக்கொன்றாய் அனுப்பி வைக்கிறேன்.

வத்சலா சங்கரிடம் அகப்பட்டுக் கொண்டிருக்கிறாள் என்ற அதிர்ச்சியிருந்து மீள வெகு நேரமாயிற்று ரஜினிக்கு...

''வத்சலாவின் குரலை போனில் கேட்கிறாயா?''

''தேவையில்லை.''

''ரஜினி! உனக்குத் தெரியும் நான் எவ்வளவு முரடன்னு யோசித்துப் பார்த்துக்கொள். உனக்கு அவள் வேணுமானால் அனுஷாவின் இருப்பிடத்தைச் சொல்லு.''

''அனுஷா எங்கே இருக்கிறாள்னு எனக்குத்தெரியாது.''

''உனக்குப் பக்கத்திலேயேதான் இருக்கிறாள்னு தெரியும் எனக்கு. அவளை அனுப்பாவிட்டால் வத்சலாவின் முதல் அவயவத்தை நாளைக்கு அனுப்பி வைக்கிறேன் நான். பார்க்கப்போனால் அவ்வளவு நேரம்கூட உனக்குத் தருவது அனாவசியம். உன்னைக் கொஞ்சம் இக்கட்டில் ஆழ்த் தணும்னு ஆசை ஏற்பட்டது எனக்கு.''

போன் கட் ஆகிவிட்டது.

''என்ன? என்னவாச்சு?'' என்று பதறினாள் அனுஷா.

ரஜினியால் உடனடியாகப் பதில் சொல்ல முடியவில்லை. உன்னை ஒப்படைத்தால் அவன் வத்சலாவைத் திருப்பித் தருவானாம்—என்று அவனால் சொல்ல முடியவில்லை.

அவன் அங்கிருந்து அகன்றான். பில்வனும் அவனும் வெகு நேரமாய் வாதாடிக் கொண்டார்கள்.

''ஒன்று மட்டும் நிஜம் பாஸ்! அந்த சங்கர் சொன்னதைச் செய்து காட்டுவான். ஏற்கனவே இந்தக் கட்டுரைகளால் கொதித்துப்போயிருக்கான் அவன். இப்போது குரங்கு கையில் பூமாலையாய் இந்தப் பொண்ணு அவன் கையில் சிக்கிட்டிருக்கு.''

"என்ன பண்றது? அனுஷாவை எப்படி விட்டுவிடுவது?"

''அனுஷா என்னவோ உங்க சொந்த சொத்தைப்போல நினைத்து எப்படி விடுவதுன்னு கேட்கிறீங்க.'' பில்வன் சிரித்தபடி சொன்னான்.

''சாரி. என் எண்ணம் அதில்லை. ஆனாலும், எனக்குப் புரியமாட்டேங்குது, இவ்வளவு நாளாய் இந்தப் பெண்ணை விட்டுட்டு இப்போது 'என்னிடம் ஒப்படை'ன்னு ஏன் கேட்கிறாங்க?''

ஒருகால் இவ்வளவு நாளாய் ஜாக்கிரதையாய் இருந்துட்டு, இப்போது உன்னிடந்தான் வந்துடப் போறேனேன்னு போலீஸ் பந்தோபஸ்தை விட்டுட்டு வந்துட்டாளோ என்னவோ?''

''தமாஷ் பண்ண இது நேரமில்லை பில்வா! நமக்கு அதிக நேரமும் இல்லை.''

''இருபத்தி நான்கு மணி நேரம் அவகாசம் கொடுத்திருக்கானே, பார்ப்போம்.''

நேரமாகிக் கொண்டேயிருந்தது. ஆனாலும் களுக்கு எந்தயோசனையுமே தோன்றவில்லை. கொடுத்திருந்த கெடுவில் இன்னும் ஒரு மணி நே பாக்கியிருந்தது.

முதல் நாள் போன அனுஷா அதற்குப் பிற தடவை கூட தென்படவில்லை. போனிலும் பேசவி ரஜினி நாலைந்து முறை ஓட்டலுக்கு முயற்சி செய்து பார் தான். அவள் இல்லை என்று சொல்லிவிட்டார்கள்.

ரஜினியின் பரபரப்பு அதிகரித்தது. அனுஷா ஓட்டலுக்கும் வரவில்லை என்றால் நிச்சயமாய் சங்கரின் கையில்தான் சிக்கி யிருப்பாள். அப்படி நடந்திருந்தால் சங்கர் வத்சலாவை விட்டிருக்க வேண்டுமே. ஒரு வேளை இருவரையுமே... அதற்குமேல் அவனால் யோசிக்க முடியவில்லை. இருவரும் அறைக்குள் நடை பயின்றார்கள். நடந்தது அறைக்குள்ளே யானாலும் நேரமாக ஆக அவர்களின் நடை வேகம் அதிகரித்தது.

''இருவருள் யாரைக் காப்பாற்றுவது என்ற சங்கடத் திலிருந்து—இருவரையும் எப்படிக் காப்பாற்றுவது என்ற பிரச்னைக்கு வந்து சேர்ந்துட்டோம். அதுவரைக்கும் சந்தோஷந்தான்.''

ரஜினி நடப்பதை நிறுத்திவிட்டு, ''இவ்வளவு நெஞ்சு உரத்தோடு எப்படித்தான் இருக்கிறாயோ பில்வா நீ?'' என்றான்.

''தலைக்குமேலே வெள்ளம் வந்தால் சாண் போனா லென்ன, முழம் போனாலென்ன? இன்னும் ஒரு மணி நேரம் பார்ப்போம். எந்த யோசனையும் வராமல் போனால் யுத்தத்திற்கு அறிவிப்பு வழங்குவோம்.''

அது அவ்வளவு சுலபமில்லை என்றறிவான் ரஜினி. சங்கரின் இருப்பிடத்தைத் தான் போய்ச் சேருவதற் குள்ளாகவே உயிர் போவது திண்ணம்.

'னுக்கு அனுஷாவின் மேல் கோபம் வரலாயிற்று.
போன் ந்த துணிச்சலில் இவ்வாறு சுயேச்சையாய் திரிந்து
''என்லருக்கிறாள் என்று புரியவில்லை.

ரஜினிய
ன்னை
நுவான

## 35

ஆனால் அவன் நினைத்துக் கொண்டிருந்தாற்போல அனுஷா சுயேச்சையாகவும், மனம் போன படியும் திரிந்து கொண்டிருக்கவில்லை. மிகுந்த எச்சரிக்கையுடன் செயல் பட்டாள். முடிந்த வரையிலும் யார் கண்ணிலும் படாம லேயே வத்சலாவின் வீட்டிற்குப் போனாள். அதற்கு முன் னால் வந்திருந்தபோது வத்சலாவுக்கு எந்த ஆபத்தும் இல்லை என்று சொல்லியிருந்தாள் அவள். அதனால் அவளைக் கண்டதுமே எல்லோரும் சூழ்ந்துகொண்டார்கள். அவள் அவர்களைப் பார்த்து ஆச்சரியமடைந்தாள். எல்லோரும் எலும்புந்தோலுமாய் இளைத்துப் போய் காட்சி யளித்தார்கள். அவ்வளவு பேர் இருந்த அந்தக் குடும்பத் தில் வத்சலா ஒருத்திக்காக எல்லோரும் அவ்வளவு பரிதவித் துப் போயிருந்தது அவளுக்கு மிகவும் ஆச்சரியமாயிருந்தது. உயர்மட்ட குடும்பங்களில் தென்படாத அன்பின் பிணைப்பு அது.

அவர்கள் கேட்ட கேள்விகளுக்கு முன்பு போல வத்தலா நலமாகவே இருக்கிறாள்என்று அவளால் பதில்சொல்ல முடிய வில்லை. அவர்கள் கேட்ட கேள்விகளிலிருந்து வத்சலா வீட்டிற்கு வரவில்லை என்று புரிந்தது. சாஸ்திரி குடும்பத் திற்கு மற்றொரு முறை தைரியம் சொல்லிவிட்டு அவள் அங்கிருந்து புறப்பட்டாள். போலீசுக்குக் கம்ப்ளையிண்ட் தருவோமா என்று கேட்ட கேள்விக்கு-'வேண்டாம்' இன்னும்

கொஞ்ச நாள்தான்' என்றாள்—குடும்ப கௌரவத்தை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள் என்ற பொருள் பட...

அவள் தன் ஓட்டலை அடைந்த போது அடுத்த அறையில் தனக்கு வேண்டிய ஆள் வந்து சேர்ந்ததாய் செய்தி எட்டிற்று. அவள் அதைப்பற்றி முன்கூட்டியே சொல்லி வைத்திருந்தாள்.

அந்த ஆள் வந்து சேர்ந்தது தெரிந்ததுமே அவள் தன் அறையிலிருந்து போன் பண்ணினாள்.

''ஹலோ''

''நான்தான்...அனுஷா.''

''உன் போனைத்தான் எதிர் பார்த்துக் கொண்டிருந்தேன்.''

''ராத்திரி பத்து மணிக்கு சந்திக்கிறேன்.''

''சரி.''

அவள் போனை வைத்ததும், ரிசப்ஷனில், தன்னைப் பற்றி யார் கேட்டாலும் அறையில் இல்லை என்று சொல்லச் சொன்னாள்.

பிறகு நிச்சிந்தையாய் உறங்கத் தொடங்கினாள்... ஒன்பதரைக்கு எழுந்து குளித்துவிட்டு, பக்கத்து அறைக்குப் போனாள். கதவைத் திறந்து, ''கமான்...அண்ட் தாங்க்யூ—எனக்காக அறையை புக் பண்ணியதற்கு'' என்றான்.

''வெல்கம். இதில் என் தேவையும் அடங்கியிருக்கே.'' பிறகு அரை மணி நேரம் அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதைப்பற்றிப் பேசிக் கொண்டார்கள்.

''சாப்பிடுறீங்களா?''

''அமெரிக்கன் சாப்—சீ.''

அவன் போன் பண்ணி டின்னருக்கு ஆர்டர் தந்தான். அது வந்து சேர இருபது நிமிஷம் பிடித்தது.

இருவரும் பேசிக்கொண்டே சாப்பிட்டு முடித்தார்கள். அவள் தன் அறைக்குத் திரும்பி வரும்போது மணி பன்னிரெண்டாகி விட்டது.

அவள் தன் அறைக்கு போவதற்கு சரியாய் ஒரு மணி நேரத்திற்கு முன்பு இரவு பதினோரு மணியளவில் சங்கரின் முக்கிய கையாள்—குண்டப்பா—அந்த ஓட்டலுக்கு வந்து துப்புத் துலக்கினான்.

"ஜப்பானிலிருந்து வந்திருக்கும் யு மின் சுன் எங்கே? எந்த ரூம்?"

அவன் லிஃப்டில் பதினோராம் மாடியை அடைந்தான். அறைக்கு முன்னால் 'தொந்தரவு பண்ண வேண்டாம்' என்றிருந்த போர்டிற்கருகில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அப்பொழுதுதான் அறைக்குள் சாப்பாடு எடுத்துக் கொண்டு வந்த வெயிட்டரிடம், "தூங்குறானா?" என்று கேட்டான் ஐந்து ரூபாயைக் கையில் வைத்தபடி. வெயிட்டர் சிரித்துவிட்டு, "விஸ்கி குடிச்சிட்டிருக்கார். கிழவருக்குப் பக்கத்தில் ஒரு பொண்ணு இருக்குது" என்றான்.

"எப்போது வந்திச்சு?"

ரூமுக்கு வந்து இறங்கினதுமே, இங்கே ஏதாவது பட்சி கிடைக்குமா'ன்னு கேட்டாரு. 'ஸ்டார் ஓட்டலானதால நாங்க அந்த மாதிரி எதுவும் சப்ளை பண்ண மாட்டோம். நீங்க கூட்டிட்டு வந்தால் ஒன்றும் சொல்லமாட்டோம்'னன் எப்படிப் பிடிச்சுட்டு வந்தாரோ தெரியாது. பத்து மணிக்கு ஒரு பொண்ணு வந்துச்சு. பக்கத்து ரூமிலேயேதான் இருக்கு அதுவும்."

"யார் அந்தப் பொண்ணு?"

''விலையுயர்ந்த சரக்குங்க இந்த மாதிரி அறை எடுத்துப் பது இந்த ஓட்டல் வழக்கந்தாங்க. வராந்தாவில் உலாத் திட்டே வாடிக்கையாளர்களைக் கவர்ந்து இழுக்குங்க...''

''யாரோ வந்திருக்காங்கன்னு சொல்லு, சந்திக்க முடியு மான்னு பார்ப்போம்.''

வெயிட்டர் உள்ளே போய் கேட்டான்.

''இப்போ முடியாது. நாளைக் காலையில் வரச்சொல்'' என்றார் யு மின் சுன். அவர் குரல் குழறிற்று.

வெயிட்டர் வெளியே வந்து விஷயத்தைச் சொன்னான்.

குண்டப்பா சங்கரிடம் போனான்.

''கிழவன் பலே அழுத்தமானவன்தான். இந்தியாவில் வந்து இறங்கியதுமே விஸ்வருபத்தைக் காட்டத் தொடங்கிட் டான். நான் போகும்போது மருந்து அடிச்சிக்கிட்டு ஒரு பொண்ணோடு இருந்தான்.''

''அந்த ரெண்டு பழக்கமும் இருக்கிறவங்க லஞ்சப்பேர் வழியாய்த்தான் இருப்பாங்க. நாளைக்குப் போய் சந்திப் போம். டைரக்டாய் பேரமாடிடலாம். இல்லாவிட்டால் என்ன பண்ணலாம்னு அப்புறமாய் யோசிப்போம்.''

அதற்குள் உள் அறையில் உட்கார்ந்திருந்த அனுஷா, வெயிட்டர் வந்து யாரோ வந்திருப்பதாய் சொன்னதுமே திரைக்குப் பின்னாலிருந்து எட்டிப் பார்த்தாள் குண்டப் பாவை அவள் அடையாளம் புரிந்துகொள்ளவில்லை. ஆனால் யாரோ உள்ளூர் குண்டர் என்று மட்டும் புரிந்து கொண்டாள். அவர்கள் வருவார்கள் என்று தெரியும். ஆனால் இவ்வளவு சீக்கிரமாய் வந்து சேருவார்கள் என்று நினைத் திருக்கவில்லை. 'இப்போ முடியாது. நாளை காலையில் வரச் சொல்' என்றதுமே உள்ளே இன்னும் யார் இருக்கிறார்கள் என்று வந்த ஆள் வெயிட்டரை விசாரிப்பான் என்று அவள் ஊகித்துக் கொண்டாள். அதுவே நிஜமாயிற்று.

அவள் அந்த ஜப்பான் போலீஸ் அதிகாரியோடு டின்னரை முடித்துக்கொண்டு தன் அறைக்குப் போய்விட்டாள். போகும்போது வராந்தாவில் தன்னை யாரும் பாராதவாறு ஜாக்கிரதையை மேற்கொண்டாள். யு மின் சுன் அறைக்கு முன்னால் தொந்தரவு பண்ண வேண்டாம்' என்ற போர்டு மட்டும் இன்னும் அப்படியே இருந்தது.

பில்வனும் ரஜினியும் நடை பயின்று கொண்டேயிருந்தார்கள். இரவெல்லாம் உறங்காததால் அவர்கள் கண்கள் சிவந்திருந்தன. சங்கரிடமிருந்து போன் வந்து அரைமணி நேரமாயிற்று. ''இன்னும் ஒரு மணி நேரந்தான் பாக்கியிருக்கு. ரஜினி, முதலில் எந்த அவயவத்தை வெட்டியனுப்பச் சொல்கிறாய்?'' என்றான்.

''நிஜத்தை சொல்றேன் சங்கர்! அனுஷா எங்கேயிருக்கிறாள்னு தெரியாது எனக்கு.''

''ஆனால் நேற்று உன்னிடம் வந்தான்னு தெரியும்''.

''வந்துட்டுப் போயிட்டாள்.''

''ஆமாம் உன்னிடமிருந்து சாஸ்திரியின் வீட்டிற்குப் போனாள்.''

''பின்னே அவ்வளவு தெரிந்திருக்கிறவன், அவள் எங்கேயிருக்கிறான்னு நீயே தேடிப்பிடிச்சுக்கலாமே?''

மறுமுனையிலிருந்து சிரிப்பு கேட்டது. ''எலிக்குஞ்சைப் போல தப்பி ஓடிட்டாள். ஆனாலும் அது மட்டுமே காரணமில்லை. இருவரில் நீ யாரைத் தேர்ந்தெடுக்கிறாய்னு பார்க்கணுமுன்னு இருக்கு.'' போன் கட் ஆகிவிட்டது.

ரஜினி நேரத்தைப் பார்த்துக் கொண்டான். இன்னும் அதிக நேரமில்லை.

''நாம்ப போய் நேரடியாய் தாக்கலாங்கிறியா?''

''அது அவ்வளவு சுலபமில்லை. அது சுலபமாயிருந்தால் வத்சலா நம்மிடம் இருந்தபோது அந்த சங்கர் அந்த மாதிரி செய்வதறியாது ஏன் பார்த்துட்டிருந்தான்? நம்ம நிலைமைகூட இப்போது அதேமாதிரிதான் இருக்கு.''

''நிஜந்தான். அதனால்தான் விதவிதமான திட்டங்களைத் தீட்டி அந்தப் பெண்ணை வெளியேற்ற முயற்சித்தானேயன்றி நேரடியாய் வந்து தாக்கவில்லை.''

விதவிதமான திட்டம் என்று பில்வன் சொன்னதுமே ரஜினிக்கு சட்டென்று ஒரு திட்டம் உதித்தது.

அதை பில்வனிடம் சொன்னான்.

''அது அவ்வளவு சுலபம் என்கிறாயா?''

''பார்ப்போம்...'' என்று அனுஷாவுக்குப் போன் பண்ணினான். துரதிஷ்டவசமாய் அவள் இருந்தாள்.

''நீ அவசரமாய் வரணும்.''

''எதுக்கு?''

''அதிக நேரமில்லை. உடனே கிளம்பி வா.''

அவள் பத்து நிமிடத்தில் வந்து சேர்ந்தாள். ''என்ன விஷயம்?''

அவன் கடந்த இருபத்தி நான்கு மணி நேரத்தில் நடந்தவைகளை சொன்னான்.

''மைகாட்! இவ்வளவு நடந்திருக்கும்போது என்னிடம் ஏன் சொல்லவேயில்லை?''

''சொல்லியிருந்தால் என்ன பண்ணியிருப்பாய்?'' பக்கத்திலிருந்த பில்வன் கேட்டான்.

அனுஷா அவனைப் பார்த்தாள். ஆம். என்ன பண்ணியிருப்பாள்? 'வத்சலா நீ வெளியே வா, நான் பார்த்துகிறேன்' என்று சொல்லமுடியாதே!

''இப்போது இந்த யோசனையெல்லாம் அனாவசியம். நமக்கு இன்னும் ஐந்து நிமிடம்தான் நேரமிருக்கு. சட்டென்று ஏதோ ஒன்றைப் பண்ணாவிட்டால் அங்கே சித்திரவதையைத் தொடங்கிடுவான் சங்கர்'' என்றான் ரஜினி. —''நான் ஒரு பிளான் போட்டிருக்கிறேன். அதற்கு உன் உதவி தேவை. எல்லாம் ஐந்து நிமிடத்திற்குள் நடந்து முடிஞ்சுடணும்'' என்று தனது திட்டத்தை விவரித்தான்.

''வசந்த் தாதா அவ்வளவு தூரம் ஏமாறுவான்னு தோணலை'' என்று போனை எடுத்து டில்லிக்கு டயல் பண்ணினாள் அனுஷா.

''ஹலோ தாதா எப்படியிருக்கிறாய்?''

''யாரது?''

''நான்தான், அனுஷா.''

மறுமுனையில் ஆள் அசைந்த ஓசை.

''எங்கேயிருந்து?''

''அது உனக்குத் தேவையில்லை. உன்னோடு ஒரு வியாபார ஒப்பந்தம் பற்றிப் பேசத்தான் போன் பண்ணினேன்.''

''பண்ணினதையும் பண்ணிட்டு இனி வியாபார ஒப்பந்தம் வேறா? நீ எழுதிய கட்டுரைகளால் என்கட்டை விரலைக்கூட அசைக்க முடியலை. அது தெரியுமா உனக்கு?''

''என் மேல ஒரு தப்பும் இல்லை தாதா! கட்டுரைகளைப் பிரசுரிப்பதற்கு முன்னால் உன்னிடம் கேட்டேன். ஒப்பு கொண்டதுபோல ஒப்புக்கொண்டு என்னை மோசம் பண்ணிட்டாய. அதற்கு இது சரியாய் போயிட்டது. சரி, விஷயம் என்னன்னு கேட்கிறாயா? எனக்குத் தெரிந்த ஆறாவது விஷயம்கூட இன்னொன்று இருக்கு, ஐந்தை

மட்டுந்தான் கட்டுரையாய் எழுதினேன். கடைசியான இதை பிரம்மாஸ்திரத்தைப் போல என்னிடமே வைத்துக் கொண்டிருக்கிறேன். இப்போது அதைப் பயன்படுத்தாமல் விட்டுடணும்னால் நீ சங்கருக்குப் போன் செய்யணும்."

"செய்து?"

"எங்க வத்சலாவை அவன் பிணைக் கைதியாக வைத்திருக்கிறான், இன்னும் ஐந்து நிமிடத்திற்கெல்லாம் அவளைத் துன்புறுத்தப்போறான். அவளை விட்டுடுன்னு நீ சொல்லணும்.

"உனக்குத் தெரிந்த அந்த ஆறாவது ரகசியம் என்ன?"

"அதைச் சொன்னால் நீ எச்சரிக்கையாக எடுத்துக்க மாட்டாய்னு என்ன உறுதி?"

"நான் வத்சலாவை விட்டுடுன்னு சொன்னதுமே நீ எனக்குத் திரும்பவும் போன் பண்ணி அந்த ரகசியத்தைச் சொல்லிவாய்னு என்ன உறுதி?"

"ஒரு தடவை நேர்மையாகவே நான் உனக்கு என் வியாபார ஒப்பந்தத்தைச் சொன்னேன் தாதா! நீதான் என்னை ஏமாற்ற நினைத்தாய். ஆனால் இம்முறையாவது என்னை நம்பித் தீரணும். வேறு வழி இல்லை."

"நம்ப முடியாது. இந்த தாதா யாரையுமே நம்ப மாட்டான்."

"சரி. அப்பிடின்னால் போனை வைச்சுடறேன்."

"நில்... நான் வத்சலாவை விட்டுடச் சொன்னால்—இந்த ஆறாவது விஷயம் உன்னோடேயே இருந்து விடுமில்லையா? வெளியே சொல்ல மாட்டாயே?"

"நம்மிருவருக்குமிடையே மட்டுமே இருக்கும்."

"அப்படின்னால் சரி. இப்போதே சொல்றேன், அவளை விட்டுடச் சொல்லி, ஆனால் ஒரு நிபந்தனை! ஐந்து நிமிடங்

கழித்து நீ போன் பண்ணி எனக்குச் சொல்லணும் —உனக்குத் தெரிந்த அந்த விஷயம் என்னன்னு! அப்படி உன்னிடமிருந்து போன் வராவிட்டால் திரும்பவும் சங்கருக்குப் போன் செய்து உடன்படிக்கை ரத்துன்னு சொல்லிடுவேன்.''

போன் தொடர்பு அறுபட்டது.

அனுஷா செய்வதறியாது இருவரையும் பார்த்தாள்.

அவள் ஊகம் சரியாயிருந்தது. தாதா அவ்வளவு எளிதில் ஏமாறமாட்டான். தான் அந்த ஆறாவது விஷயத்தைச் சொல்லிவிட்டால்— திரும்பவும்சங்கருக்குப் போன் பண்ணி வத்சலாவை விட வேண்டாம் என்று அவன் சொல்லப்போவது உறுதி.

எல்லாவற்றையும் விட முக்கியமானது—

உண்மையில் தன்னிடம் அந்த ஆறாவது ரகசியம் என்று ஒன்றுமே இல்லை.

ரஜினி நேரத்தைப் பார்த்துக் கொண்டான். சங்கர் கொடுத்திருந்த கெடுவில் இன்னும் ஒரே நிமிடம்தான் பாக்கியிருந்தது.

செய்வதறியாது விழித்தான் ரஜினி. வசந்த் தாதா இத்த மாதிரி ஒரு குழப்பத்தில் ஆழ்த்தி விடுவான் என்று எதிர் பார்க்கவில்லை.

''தாதா அவ்வளவு சுலபத்தில் வலையில் விழுந்துடு வான்னு எப்படி நினைச்சீங்க நீங்க?'' கேட்டாள் அனுஷா.

''என்னதான் மறுத்தாலும் தாதா நாட்டை ஆளுகிற ஒரு மாஃபியா தலைவன். நீ ஏதோ ரகசியம் தெரியும்னு சொன்னதுமே கலவரமடைந்து ராஜிக்கு வரமாட்டானான் னுதான்!''

''ஒருகால் உண்மையிலேயே நமக்கு அந்த ஆறாவது ரகசியம் ஏதாவது தெரித்திருந்தாலும், அதைச் சொன்னதுமே

தாதா கேட்டுட்டு, பிறகு சங்கருக்குப் போன் பண்ணி, 'நமக்கு ரகசியம் தெரிந்துடுத்து. இனி வத்சலாவை விடவேண்டிய அவசியமில்லைன்னு சொல்லிவிட்டால், அதற்குப் பிறகு என்ன செய்வது... ஆனாலும் வத்சலா அவனிடம் இருப்பதால் நாம் தாதாவின் நிபந்தனைக்கு இணங்கித் தீர வேண்டியிருக்கும்...'' என்று சொல்லிக் கொண்டிருந்த போதே ஏதோ யோசனை உதிக்கவே ''ஐடியா'' என்று கத்தினாள் உணர்ச்சிவசப்பட்டு.

## 36

வசந்த் தாதா போனை வைத்துவிட்டு யோசனையில் ஆழ்ந்தான். அனுஷாவுக்குத் தெரிந்த ஆறாவது ரகசியம் என்னவாயிருக்கும்! அது தனக்கு எவ்வளவு பயன்படும். அதைத் தெரிந்து கொள்வதால் லாபம் உண்டா?

கையில் அகப்பட்டிருக்கும் வத்சலாவால் எந்த லாபமுமில்லை. சங்கர் அனாவசியமாய் அந்தப் பெண்ணை இப்போது பிடித்திருக்கிறான். அனுஷா எங்கே போய் விடுவாள். அவள்மீது எப்பொழுது வேண்டுமானாலும் பழி தொடுக்கலாம். எப்பொழுது நினைத்தாலும் கைக்கு அகப்படுவாள் அவள்.

ஆனால் அந்த ரகசியம்தான் என்ன?

அதைத் தெரிந்துகொண்டதுமே, திரும்பவும் சங்கருக்குப் போன் செய்து வத்சலாவை விட்டுடாதேன்னு சொல்லுவதால் மட்டும் என்ன லாபம் வந்துவிடப் போகிறது? அப்பொழுது அனுஷா என்ன பண்ணிவிடுவாள்?

தாதாவின் உதட்டில் குறுநகை படர்ந்தது. 'டிட் ஃபர் டாட்.'

அவன் போனை எடுத்து சங்கருக்கு எஸ்.டி.டி. பண்ணினான். ''சங்கர், வத்சலா உன்னிடந்தானே இருக்கிறாள்?''

''ஆமாம்.''

''இப்போது ரஜனி கோஷ்டி நம்மோடு ஒரு பேரமாடினாங்க. அனுஷாவுக்குத் தெரிந்த இன்னொரு முக்கியமான ரகசியத்தை, வத்சலாவை நாம் விட்டுட்டால் நமக்குச் சொல்வாங்களாம்.''

பித்தலாட்டம், நம்மை வலையில் வீழ்த்த அவங்க போடுகிற நாடகம் இது'' என்று கத்தினான் சங்கர்.

எனக்குத் தெரியும் என்று மனதிற்குள் எண்ணிக் கொண்டான் தாதா. ஆனால் வெளியே சொல்லவில்லை. இதற்கு முன்னால் இதே போல சங்கருக்குப் போன் செய்த போது அதனை அனுஷா கேட்டு விட்டாள் என்ற சங்கதியை அவன் மறந்துவிடவில்லை. இப்பொழுதும் ஒருகால் கேட்டுக் கொண்டிருக்கிறாளோ என்னவோ? அதனால் குரலில் நேர்மையை வரவழைத்துக் கொண்டு பேசலானான்.

''இல்லை சங்கர். நாம் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவோம். நிஜமாய் அவங்க அந்த ரகசியத்தை நமக்குச் சொல்லி விட்டால் நாம் வத்சலாவை விட்டுத் தீரவேண்டும். உன் சார்பில் நான் அந்த ஒப்பந்தத்திற்கு ஒப்புக்கிட்டேன்.''

''நீ எப்படி சொல்கிறாயோ அப்படியே செய்கிறேன் தாதா.''

''இன்னும் ஐந்து நிமிடத்தில் அவங்க எனக்குப் போன் செய்து அந்த ஆறாவது ரகசியத்தைச் சொல்றேன்னாங்க. சொல்ற செய்தி உண்மையாகவே உதவக் கூடுமானால், நாமும் சொன்ன சொல்லைக் காப்பாற்றி அவங்க பொண்ணை அவங்களிடம் ஒப்படைச்சுடணும். அவங்க

நம்பனை ஏமாற்றினால் நான் உனக்குத் திரும்பவும் போன் செய்து அதைத் தெரிவிக்கிறேன், அரை மணிக்குள்.''

''சரி தாதா. அரைமணி காத்திருக்கேன்.'' போனை வைத்து விட்டான்.

ரஜினியும் அனுஷாவும் அனுப்பி வைக்க, பில்வன் சங்கரிடம் கிளம்பினான். அவன் வரவை முன்கூட்டியே ஊகித்திருந்ததால் அங்கு அவனை யாருமே தடுக்கவில்லை.

''இன்னும் இருபது நிமிடம் டைம் இருக்கு. உட்கார் அப்படி'' என்றான் சங்கர் பில்வனைப் பார்த்து.

''ரொம்ப பருமனாயிட்டயே. உன்னைப் பார்த்து ரொம்ப நாளாகிவிட்டது!

''வாயை மூடிக்கிட்டு பேசாம உட்காரு.''

''என் அளவுக்குப் பருத்துட்டாய்னு சொல்றேன். பின்னாலிருந்து திடீர்னு பார்த்தால் இருவரும் ஒரே அளவு குண்டாயிருப்போம் இப்போது.''

''பேசவேண்டான்னேன்.''

''சரி, என்ன பண்றது! சில சமயம், காலனே கதவைத் தட்டி நான் உனக்காகத்தான் வந்தேன் என்றால் கூட ஒருவனும் நம்ப மாட்டானாம்.''

சங்கர் ஜேபியிலிருந்து மின்னல் வேகத்தில் கத்தியை வெளியே எடுத்தான்.

''நான் அவ்வளவு எளிதில் சாகமாட்டேன் பில்வா. உன் யோசனையை விடு.''

பில்வன் சிரித்துவிட்டு, ''நான் உன்னைக் கொன்னாலும் இங்கேயிருந்து என்னால் வெளியே போக முடியாதுன்னு தெரியும் சங்கர்! என் உயிர் மேல [illegible]

வத்சலாவைக் கூட்டிட்டுப் போகத்தான் வந்தேன். உன்னைக் கொன்று என் உயிரை பலி தரமாட்டேன்'' என்றான் பில்வன்.

சரியாய் அதே சமயத்தில் வசந்த் தாதா நேரத்தைப் பார்த்துக் கொண்டான். அதற்குள் பத்து நிமிடங்கள் ஆகிவிட்டன. ரஜினியிடமிருந்தோ அனுஷாவிடமிருந்தோ போன் வரவில்லை. சங்கருக்கும் போன் பண்ணி வத்சலாவை விட வேண்டாம் என்று சொல்ல நினைத்தான். அதற்குள் போன் ஒலித்தது.

''ஹலோ!''

''நான்தான் அனுஷா. பத்து நிமிடமாய் முயற்சி பண்ணிண்டேயிருக்கேன். எஸ்.டி.டி. கிடைக்கலை. தாதா சர்மா எழுதியிருந்த கடிதத்தில் ஆறாவது ரகசியம் என்ன வென்றால்—ஹலோ...ஹலோ...ஹலோ...ஹலோ...''

''கேட்கிறது சொல்லு,''

''ஹலோ...ஹலோ...''

தாதா குரலை உயர்த்தி, ''கேட்கிறது சொல்'' என்றான் திரும்பவும்.

''ஹலோ... ஹலோ— இதென்னது ரஜினி, லைன் சரியாய்தான் இருக்கு. மறுமுனையிலிருந்து ஒன்றுமே கேட்கலையே.''

''திரும்பவும் முயற்சி பண்ணு.''

லைன் கட் ஆகிவிட்டது.

தாதாவுக்கு எல்லாம் கேட்டது. அவன் குரல்தான் எதிர் முனையிலிருந்தவர்களுக்கு கேட்கவில்லை.

திரும்பவும் போன் ஒலித்தது. ரிசீவரை எடுத்தான்.

''நான்தான் அனுஷா. சர்மா...''

லைன் கட் ஆகிவிட்டது,

தாதா நேரத்தைப் பார்த்தான். அரை மணி முடிவடைவதற்கு இன்னும் பத்து நிமிடம் பாக்கியிருந்தது. பத்து நிமிடங்களுக்குப் பிறகு சங்கர் வத்சலாவை விட்டு விடலாம். முன்பே சொல்லி வைப்பதுதான் நல்லது.

போன் பண்ணத் தொடங்கினான்.

எங்கேஜ்ட் ரிங் வந்தது.

நேரம் இன்னும் எட்டு நிமிடங்கள் இருந்தன.

அதற்குள் இரண்டாவது போன் ஒலித்தது சட்டென்று எடுத்தான்.

''ஹலோ, நான்தான் அனுஷா. சர்மா எழுதிய கடிதத்திலிருந்த ஆறாவது ரகசியம் உனக்கும் சமீபத்தில் ராஜினாமா செய்த...''

லைன் கட் ஆகிவிட்டது.

தாதாவுக்கு சந்தேகம் ஏற்பட்டது, தன்னை வலையில் வீழ்த்திவிட்டு வத்சலாவை மீட்டுச் செல்வதற்கான சதியாகயிருக்குமோ என்று! உடனே சங்கருக்கு திரும்பவும் போன் பண்ணினான். திரும்பவும் எங்கேஜ்ட் சத்தமே கேட்டது. நொந்து கொண்டான். சங்கர் தன் போனை எதிர்பார்த்துக் கொண்டிருக்காமல் யாருக்கு போன் பண்ணுகிறான்?

திரும்பவும் போன் ஒலித்தது.

''ஹலோ'' என்றான் போனை எடுத்து.

''நான்தான் அனுஷா. நான் சொல்றது உங்களுக்குக் கேட்கிறதா? லைன் சரியாயில்லை போலிருக்கு.''

''கேட்கிறது சொல்லு.''

''ஹலோ.''

''கேட்கிறது சொல்லு.''

''ஹலோ.''

''கேட்கிறது சொல்லு'' குரலை உயர்த்திச் சொன்னான்.

''ஹலோ...ஹலோ...'' மறுமுனையிலிருந்து உரக்கக் கேட்டது.

''பாரு பொண்ணு, உன்னால என்னை ஏமாற்றிட முடியாது. இன்னும் இரண்டே நிமிடத்தில் உன்னிடமிருந்து விஷயம் வெளிவரலைன்னால்—நான் சங்கருக்குப் போன் பண்ணப் போவது நிச்சயம். வத்சலா உங்களுக்குக் கிடைக்க மாட்டாள்.''

''ஹலோ...ஹலோ...''

லைன் கட் ஆகிவிட்டது.

தாதா இம்முறை சங்கருக்குப் போன் பண்ணவில் லை. அனுஷாவும் ரஜினியும் அவன் போனை ஏதோ பண்ணியிருக்கிறார்கள். இம்முறை அவன் சங்கரின் சிநேகிதனுக்குப் போன் செய்து வத்சலாவை நிறுத்தி வைக்கும்படி சொல்ல நினைத்தான்.

இன்னும் அதிக நேரம் கூட இல்லை. அரை மணி முடிந்ததுமே சங்கர் வத்சலாவை விட்டுவிட வேண்டிவரும். அவளை விட்டு விடுவதால் ஒன்றும் பெரிதாய் குடி முழுகிவிடாது. ஆனால் தன் கௌரவம் சம்பந்தப்பட்ட விஷயம் இது!

இங்கே தாதா போனுடன் இவ்வாறு தலையைப் பிய்த்துக் கொண்டிருக்கையில் அங்கே பில்வன் சங்கரை அவசரப்படுத்தத் தொடங்கினான். ''நாங்க ஒப்பந்தப் பிரகாரம் விஷயத்தைச் சொல்லிட்டோம் சங்கர்! இனி வத்சலாவை சொன்னது போல விட்டுடு.''

''நீங்க சொன்ன விஷயம் என்ன?''

''அந்த உனக்கு சொல்லவேண்டுமென்று ஒப்பந்தம் இல்லை.''

''நான் தாதாவுடன் பேசிய பிறகு அதைப்பற்றித் தீர் மானிக்கிறேன்.''

''உன் இஷ்டம். ஆனால் தாதா அரைமணி கழித்து அப் பெண்ணை விட்டுடச் சொல்லலையா?''

''நானும் தாதாவும் என்ன பேசிக்கிட்டோங்கறது உனக்குத் தேவையில்லை.''

பில்வன் இடைமறித்து. ''சீக்கிரமாய் தாதாவுக்குப் போன் பண்ணு'' என்றான்.

தாதாவுக்கு சங்கர் போன் செய்யும் சமயத்தில் தாதா வீட்டுக்கு வெளியே ஜீப் வந்து நின்றது. ஸ்ரீகாந்த உள்ளே வந்து, ''தாதா சர்ச் வாரெண்ட் கொண்டு வந்திருக்கேன். உன் வீட்டை சோதனை போடணும்'' என்றான்.

வசந்த் தாதா தன் வீட்டில் எதையுமே வைத்துக்கொள்ள மாட்டான். ''அதற்கென்ன வந்தது டி. சி. பி. சார்? உங்க ளுக்கும் எங்களுக்கும் இதெல்லாம் புதுசா என்ன? சோதனை போட்டுக்குங்க'' என்றான். ஐந்து நிமிடங்கள் சோதனை நடந்தது. அதற்குள் போன் ஒலித்தது. தாதா ரிசீவரைக் கையிலெடுக்கப் போவதற்குள் ஸ்ரீகாந்த் எடுத்தான்.

''தாதா நான்தான் சங்கர் வத்சலாவை விட்டுடலாமா?''

''விட்டுடு'' என்று ஸ்ரீகாந்த் போனை வைத்துவிட்டான். ''யார்?'' என்று கேட்டான் தாதா.

''உன் பழைய சிநேகிதன் சங்கர்! யாரையோ விட்டு டட்டுமான்னு கேட்டான். விட்டுடுன்னு சொன்னேன். பரவா யில்லையா?'' என்றான் ஸ்ரீகாந்த்.

தாதாவின் முகத்தில் ஈயாடவில்லை.

''நான் இதோ வரேன் சார்'' என்று இன்னொரு அறைக்குள் நுழையத் துடித்தவாறு சொன்னான்.

''எங்கே?''

''போன் பண்ணிட்டு வரேன்.''

''சர்ச் முடிவடையும் வரையிலும் வெளியார் யாருக்கும் போன் செய்ய முடியாதுன்னு தெரியுமில்லையா?''

சோதனை பத்து நிமிடங்கள் நடந்து முடிந்தது.

ஸ்ரீகாந்திற்கும் அங்கே ஒன்றுமே கிடைக்கப்போவதில்லை என்று தெரியும். தங்கையின் வேண்டுகோளைத் தட்டமாட்டாமல் கால்மணி நேரம் தாதாவைப் பாதுகாவல் புரிவதற்காக, வாழ்நாளிலேயே முதல் முதலாக போலீஸ் அதிகாரத்தைப் பயன்படுத்தி, வாரெண்ட் இல்லாதபோதே, இருப்பதாகவும் சொன்னான்.

குண்டர் படைத் தலைவன் ஒரு பெண்ணைக் கடத்திக் கொண்டு போய் வைத்திருக்கிறான். ஆயினும் தம் இலாகாவால் ஒன்றுமே பண்ண முடியவில்லை. குறைந்தது இந்த விதத்திலாவது தன்னால் உதவ முடிந்ததற்கு ஸ்ரீகாந்த் மகிழ்ச்சி அடைந்தான். அவன் ஆபீசிற்குத் திரும்பி வந்ததுமே தங்கையிடமிருந்து போன் வந்தது, பிளான் வெற்றியடைந்து விட்டதென்றும், வத்சலா மீண்டுவிட்டதாகவும்!

பில்வனுக்குப் பக்கத்தில் காரில் உட்கார்ந்திருந்தாள் வத்சலா. கார் மெதுவாய் போய்க்கொண்டிருந்தது. வெட்கத்தாலும், வருத்தத்தாலும் அவள் தலை தாழ்ந்திருந்தது. தனது செயல்களால் அவளுக்கு தன் மீதே வெறுப்பு.

அவர்கள் வீட்டையடைந்ததும் அனுஷா சிரித்தபடியே ''உனக்கு வீட்டைப்பற்றிய ஏக்கம் அதிகமாயிடுத்து. ஆனாலும் இன்னும் கொஞ்சநாள் இங்கே இருந்துதான் தீரணும்'' என்றாள்.

"இருபத்தி நான்கு மணி நேரமாய் டென்ஷனை அனுபவித்துட்டு வந்திருக்கிறாய்.?" கொஞ்சம் காபி குடிக்கிறாயா என்று கேட்டான் ரஜினி சிரித்தபடியே.

அவளுக்கோ துக்கம் பொத்துக் கொண்டு வந்தது.

ஒரு நேர்மையான ஆபீசர் இருக்கிறார், அல்லது இஞ்ஜீனியர் இருக்கிறார். ஒரு கண்ட்ராக்டர் அவர் வீட்டிற்கு லஞ்சம் கொண்டு போய் பெஞ்சியின் மேல் அந்த நோட்டுக் கற்றைகளை வைத்து விட்டு கைகளைக் கட்டிக் கொண்டு, "இந்தக் காரியத்தைப் பண்ணித்தரணும் சார்" என்று சுற்றி வளைக்கிறார் அந்த இஞ்ஜினியர் ஆள்காட்டி விரலைச் சுட்டிக் காட்டி, "கெட் அவுட்" என்று கத்துகிறார். அந்த காண்ட்ராக்டர் பணத்தை எடுத்துக்கொண்டு பின் வாங்குகிறார்.

ஒருகால் இஞ்ஜினியர் இளைஞராயிருந்தால், அந்த காண்ட்ராக்டர் கேலியாய் சிரிப்பார். 'நீ இன்னும் இளைஞன் விஜய்! இந்த நாகபூஷணம் பாம்பைப் போன்றவன். என்னை விரோதிச்சுக்கிட்டு இந்த கிராமத்தில யாருமே பிழைச்சிடமுடியாது. இந்தக் காரியத்தை நீ எப்படிப் பண்ணாமலிருக்கிறாய்னு பார்த்துடறேன்" என்று கருவிக் கொண்டே வேகமாய் போய்விடுகிறார். நாகபூஷணத்தின் பெண் வனிதா—விஜய் இருவரும் சேர்ந்து அவர் கொட்டத்தை அடக்குகிறார்கள். சுபம்!

கற்பனை இலக்கியம் என்றால் இதுதான்! இதைக் காட்டிலும் வேறு விதமாய் எந்த சினிமாவுமே இருக்காது.

நிஜ வாழ்க்கையில் இந்த மாதிரி நடக்கவே நடக்காது. முதலில் விசாரணையிலேயே தொண்ணூறு சதவீதம் வெளிப் பட்டு விடும்—எதிராளி லஞ்சம் வாங்குபவரா வாங்காதவரா என்று! தொண்ணூற்றொன்பது சதவீதம் வாங்குபவரே—

அல்லது தொந்தரவு தாங்காமல் இணங்குபவர்! எஞ்சிய ஒரு சதவீதத்தில் பாதிப்பேர் பயந்தாங்கொள்ளிகள். அவர்கள், ஆள்காட்டி விரல் கிடக்கட்டும், சுண்டு விரலைக்கூட சுட்டிக் காட்ட இயலாதவர்கள். எஞ்சியவர்களில் பாதிப்பேருக்கு மேல் அந்தத் தேவை இல்லாதவர்கள். கேவலம் 0.01 சதவீதத்தினர் மட்டுமே நேர்மையானவர்கள். பிரபல மனோதத்துவ நிபுணர் கார்ல்பர்ட்—மாறும் பொருளாதார நிலையை ஆதாரமாய்க் கொண்டு போட்ட கணக்கு இது. கம்யூனிஸ்ட் நாடுகளோடு சேர்ந்து உலக முழுவதற்கும் இது பொருந்தும்.

ஜப்பான் போலீஸ் அதிகாரி யு மின் சுன் வந்ததிலிருந்தே ஓட்டல் அறையில் தண்ணீர் அடித்துக் கொண்டிருக்கிறார். இரவு வேளைகளில் பெண்கள்கூட வந்து போகிறார்கள். இவ்விரண்டு குறிப்புகள் போதுமானவை. அவரை வசந்த் தாதா சந்தித்தான்.

''இதோ ராயல் சல்யூட் சார். உங்களுக்காகவே சிங்கப்பூர் விமான நிலையத்திலிருந்து வரவழைத்தேன்.''

''தாங்க்யூ.''

ஐந்தாவது பெக் முடிந்ததும் சம்பாஷனை நேரடியான விஷயத்திற்கு வந்தது.

'நீங்க எங்களுக்கு ஒரு உதவி பண்ணணும் சார்.''

''என்னது?''

''எங்க சங்கரை ஜப்பானுக்குக் கூட்டிச் செல்லும் விஷயமாய்—''

''ஆமாம், அதற்காகவேதான் வந்திருக்கேன்.''

''அவரு எங்க ஆள். நீங்க கொஞ்சம் உதவினால் நாங்க அவரைக் காப்பாத்திக்க முடியும்.''

''எப்படி?''

''அந்தப் பிளானையெல்லாம் அப்புறமாய் சொல்றேன் —நீங்க முதலில் 'உம்' என்று சொல்லுங்கள்.''

''.........''

''என்ன உதவின்னு சொல்லுங்க.''

''கொஞ்சம் சிக்கலானது சார்! ஆனால் அரசாங்கமெல்லாம் நம் மோடதுதான்! உங்க மேல் எதுவும் வராது. எல்லாத்தையும் நாங்க பார்த்துக்கிறோம். நீங்க பண்ண வேண்டியதெல்லாம் உங்களுக்கு ஒன்றுமே தெரியாதது போல இருந்துட வேண்டியதுதான். சங்கரின் பெயரில் உங்களுக்கு இங்கே ஒரு ஆள் அதிகாரிகளால் ஒப்படைக்கப்படுவான். அவனைக் கூட்டிட்டுப் போக வேண்டியது. அவ்வளவுதான்.''

''ஓ, இதுதானா உங்க பிளான்?''

''ஆமாம் சார்.''

''ஜப்பானில் அவன் விரலடையாளங்கள்?''

''அங்கேயிருக்கும் யகுஜா (மாஃபியா) பார்த்துக்கும் அதை. நீங்க சரின்னால் அவங்களோடு பேசறேன்.''

''ரொம்ப பெரிய அளவில்தான் திட்டம் தீட்டியிருக்கீங்க.,

''நீங்க கூட கொஞ்சம் உதவினால்..'' குழைந்தான்.

''முடிந்ததைப் பண்றேன். இவ்வளவு பண்ணியிருக்கிற நீங்க நான் மறுத்தாலும் இன்னொரு பிளான் போடப் போறீங்க! நான் ஏன் மறுக்கப்போறேன்?''

''தாங்க்ஸ் சார்! ஸ்விஸ் பாங்கில் உங்க பேருக்கு இன்றைக்கே ஒரு லட்சம் கட்டி, ரசீது உங்க நாட்டில் கிடைக்கும்படி பண்றேன்.''

''லட்சமா! ரொம்பக் குறைவு.''

''ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் டாலர்கள்.''

''தாங்க்ஸ்.''

ஒப்பந்தம் முடிவடைந்து விட்டது.

# 37

இண்டர்காம் ஒலித்தது, ''அனுஷாவைப் பார்க்க வந்திருக்காங்க சார்.''

ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டார்கள்.

''அனுஷா இங்கே இல்லையே!''

மறுமுனையில் ஆபரேட்டருடன் ஏதோ பேசிய சப்தம். அரை நிமிடத்திற்குப் பிறகு, ''உங்களோடு பேசறாங்களாம் சார்'' என்றாள் செக்ரட்டரி. ரஜினி ரிசீவரை எடுத்துக் கொண்டான்.

''வரச்சொல்'' என்று ரஜினி போனை வைத்துவிட்டான்.

''யாராம்?'' என்றாள் அனுஷா.

அதற்குள் அந்த ஆள் மேலே வந்துவிட்டான். அவன் கொஞ்சம் குள்ளமாய் இருந்தான். வழுக்கைத்தலை, சுறுசுறுப்பான கண்கள், புத்திசாலித் தனத்தை எடுத்துக் காட்டும் திருந்திய மூக்கு.

அவன் வந்ததுமே ரஜினியிடம் கார்டை நீட்டினான். ரஜனி வெகு நேரம் அதை உற்றுப் பார்த்தான். பிறகு தலையாட்டிவிட்டு, ''இங்கேயே பேசுறீங்களா?'' என்று கேட்டான்.

''இல்லை, தனியாய் பேசணும்.''

அனுஷா ஒரு பார்வையாளரைப் போல கேட்டுக் கொண்டிருந்தாள். அவளுக்கு ஒன்றும் புரியவில்லை.

''என் அறையில் உட்கார்ந்து பேசுங்கள்.''

அந்த ஆள் அனுஷாவைப் பார்த்து,"வரீங்களா?"என்றான். அவள் ரஜினியைக் கேள்விக்குறியோடு ஏறிட்டு நோக்கினாள். அனுஷாவுக்கு பரிச்சயம் பண்ணிவைத்து, "இவரை எனக்குத் தெரியும். ஒரு முறை டில்லி ஆபீசில் பார்த்திருக்கேன்" என்றான் ரஜினி.

அந்த ஆள் சிரித்துவிட்டு, 'என் கார்டை நம்பி, ஜேபியில் ரிவால்வர் அது இதுன்னு தேடிப் பார்க்காமல் எங்களிரு வரையும் தனியாய்விடச் சம்மதித்தபோதே தெரிந்து விட்டது நான் யாரோ நம்பிக்கைக் குரியவனாக இருப்பேனு' என்றான்.

அனுஷாவுக்குப் புரியவில்லை— அந்த ஆள் தன்னைத் தேடி வந்ததன் நோக்கம் என்னவென்று. அவளுக்கு திடீரென்று பயமாயும் இருந்தது. குறிப்பிட்ட காரணம் எதுவும் இல்லை. குழப்பம். அவ்வளவுதான்.

"ரிவால்வரை எதுக்குத் தேடிப் பார்க்கணும்?" என்றான் ரஜினி ஆச்சரியத்தை வெளிக்காட்டிக் கொள்ளாமல்.

"நீங்க சங்கரிடமிருந்து எந்த நிமிடத்திலும் ஆபத்து வரலாம்னு எதிர்பார்க்கிறீங்கன்னு தெரியும் எனக்கு" என்றான்.

அனுஷா அவனைத் தொடர்ந்தாள்.

"கேட்கத் தொடங்கலாமா?" உட்கார்ந்ததுமே கேட்டான்.

"கேளுங்க."

"சங்கரின் பெயரில் நீங்க எதுக்காக கட்டுரை எழுதினீங்க?"

"அது என் புனை பெயர்? ஏன்? அதில் ஏதாவது சட்ட விரோதமான செயலிருக்கா?"

"சட்டத்தைப் பற்றி இப்போது பிரச்னை இல்லை. அந்தப் பெயரை ஏன் தேர்ந்தெடுத்தீங்கன்னுதான் கேட்டேன்."

''கிடக்கட்டும். அடுத்த முறை வசந்த் தாதாங்கிற பெயரில் எழுதறேன்.''

''விஷ் யூ ஆல் தி பெஸ்ட்.''

''தாங்க்ஸ்.''

''மிஸ் அனுஷா! நீங்க கொஞ்ச நாளைக்கு முன்னால் ஜப்பானுக்கு ஏன் போகவேண்டியிருந்ததுன்னு தெரிவிக்க முடியுமா?''

அனுஷா திடுக்கிட்டாள். அவள் இக்கேள்வியை எதிர் பார்க்கவில்லை. எவ்வளவோ ரகசியமாய் வைத்துக் கொண்டிருந்த இந்த விஷயம் இந்த சி. பி. ஐ. க்கு எப்படித் தெரிந்திருக்குமென்று புரியவில்லை. இந்த ஆபீசர் அவளையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தார்.

''ஜப்பானைப் பார்க்கணும்னு எனக்கு வெகுநாளாய் ஆசை, அதனால்தான்.''

''ஜப்பானில் எந்தெந்த இடங்களைப் பார்த்தீங்க?''

''டோக்கியோ, ஒகாசா...இன்னும் ஆங்...புல்லட் ட்ரெயின்.''

''இரண்டே நாளில் நிறைய இடங்களைப் பார்த்திருக் கீங்களே?''

அவள் மௌனமாயிருந்தாள்.

''யுமின்சுன்னை ஏன் சந்திச்சீங்க அங்கே?''

அனுஷாவின் கைகளில் வியர்த்தெடுத்தது. முதல் முதலாக வசந்த் தாதாவின் மேல் சந்தேகம் ஏற்பட்டது. அவனுக்கு அரசாங்கத்திலிருந்த செல்வாக்கைப் பற்றி நன்றாய் அறிவாள் அவள். இந்த சி. பி. ஐ. ஆபீசர் கூட தாதாவின் ஆள்தானோ?

அந்த சந்தேகம் வந்ததுதான் தாமதம் அவளுடைய நவ நாடிகளும் தளர்ந்துவிட்டன. இதைப் பார்த்தால்

தாதாவுக்கு எல்லாமே தெரிந்து போயிருக்கும் போலிருக்கிறது தான் இதுவரையிலும் பண்ணிய காரியமெல்லாம் வீண்.

''நான் ஜப்பானில் எந்த போலீஸ் அதிகாரியையுமே சந்திக்கலை.'' பொய் சொன்னாள்.

''சந்தித்திருக்காவிட்டால் யுமின் சுன் போலீஸ் அதிகாரின்னு உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''பேப்பரில் படித்தேன்.''

''அப்படிப் படிச்சுட்டுதான் நேற்றிரவு அவரை ஓட்டலில் சந்திச்சீங்களா?''

லாபமில்லை. இவருக்கு எல்லாமே தெரிந்துவிட்டிருக் கிறது. என்ன பதில் சொல்வது என்று அவள் யோசித்துக் கொண்டிருந்தபோதே அவர் சொன்னார்.

''உங்களுக்கும் தாதாவுக்கும் ஆகாது. தாதாவைப் பற்றி எத்தனையோ செய்திகளைப் பத்திரிகைகளில் எழுதி யிருக்கீங்க நீங்க. சங்கரைக் கூட்டிட்டுப் போகவிருந்த போலீஸ் அதிகாரியை முன்பே ஜப்பானில் சந்திச்சிருக்கீங்க நீங்க. எவ்வளவோ பணச் செலவு பண்ணி நீங்க இந்தக் காரியத்தைப பண்ணியிருக்கீங்க. அப்புறமாய் அந்த அதிகாரி இங்கு வந்தபோது பக்கத்து அறையிலேயே நீங்களும் வந்து தங்கினீங்க, மேலும் அந்த அறையை வேறு பெயரில் புக் பண்ணியிருக்கீங்க. ராத்திரி அந்த அதிகாரியோடு வெகுநேரம் கழிச்சிருக்கீங்க, இதெல்லாம் எதுக்கு? எதுக்கு?''

''நீங்க கேட்டவைகளில் நான் செய்த குற்றம் ஒன்றுமே இல்லையே!'' என்றாள்.

இம்முறை அதிர்ந்தது அவர், ''குற்றமா? நீங்க குற்றம் பண்ணியதாய் நான் சொல்லலையே? உங்களைக் குற்ற வாளியின் நிலையில் இறுத்தி இந்தக் கேள்விகளைக் கேட்கலை நான். ஒரு வழக்கில் சாட்சியாகக் கேட்கிறேன்.''

''வழக்கா? என்ன வழக்கு?''

''இன்றைய பேப்பரில் படிக்கலையா? ஆளும் கட்சிக்குச் சமமான ஒரு கட்சியைத் தோற்றுவித்திருக்காங்க நாட்டிலுள்ள கள்ளக் கடத்தல்காரர்களும், குண்டர்களும்.''

''ஆமாம்.''

''இந்த வழக்கின் முழுப்பொறுப்பும் என்னிடந்தான் இருக்கு. இதற்குப் பின்னால் இருக்கிற முக்கியமானவர்களில் வசந்த் தாதா ஒருவர்! நாளைக்கு இந்த கட்சி மட்டும் ஜெயித்து விடுமானால், அவ்வளவுதான்.''

''ஆனால் அதன் சரித்திரத்தையே துடைத்தெறிஞ்சிட தீர்மானிச்சிருக்கிறோம். அதற்கு முக்கியமான பாயிண்டுகள் உங்கள் கட்டுரையிலிருந்து கிடைத்தன. நீங்க யாரு என்ற கேள்வி எழும்பிற்று. சோதித்துப் பார்க்கப் பார்க்க உங்க நடவடிக்கையெல்லாமே எங்களுக்கு ஒரு சரித்திரத்தைப் போலிருக்கு இப்ப சொல்லுங்க.''

''என்ன சொல்றது?''

''இதற்கு முன்னால் நான் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் நேர்மையான பதில்.''

''முதலில் சொன்னதெல்லாம் பொய்யில்லை. சங்கர் என்னைப் பழிவாங்கத் திட்டமிட்டிருக்கிறான். அவன் எவ்வளவு சீக்கிரத்தில் இந்த நாட்டை விட்டுப் போகிறானோ அவ்வளவு நல்லது எனக்கு. அதனால்தான் நானும் ஆர்வம் எடுத்துக்கிட்டு யுமின் சுன்னை இந்த விஷயமாய் முன் கூட்டியே போய் சந்திச்சேன்.''

அவன் ஆழ்ந்து பெருமூச்சு விட்டான். ''நீங்க பொய் சொல்றீங்க. அந்த ஐப்பான் அதிகாரி எப்படியும் சங்கரைக் கூட்டிட்டுப் போவாரு. நீங்க அவரைப் போய் முன்கூட்டியே பார்த்து சிபாரிசு பண்ண வேண்டிய அவசியமே இல்லை.''

அவள் பதில் பேசவில்லை.

அவன் வேறு என்னென்னவோ கேள்விகளைக் கேட்கத் தொடங்கினான். அவள் பட்டும் படாமலும் அவற்றிற்கு பதிலளித்து வந்தாள். அவள் யோசனையெல்லாம் எங்கோ இருந்தது. கடைசியில் அவன் எழுந்திருக்க முயன்றபோது மனம் பொறுக்காமல் கேட்டுவிட்டாள்.

''உங்க சி.பி.ஐ. விஷயமெல்லாம் வசந்த் தாதா தெரிஞ்சுக்க அவகாசம் உண்டா?''

''உங்களுக்கு எங்க மேல் மட்டமான அபிப்பிராயம் இருப்பது போல தெரியுதே!''

''அப்படின்னால் வசந்த் தாதாவுக்கு இந்த விஷயத்தை எட்டச் செய்கிற ஆட்கள் உங்க இலாக்காவில் இல்லைன்னு உங்க அபிப்பிராயமா?''

உள்துறை இலாக்காவில்கூட தாதாவின் ஆட்கள் இருந்ததை அவள் நம்பினாள்.

''இந்த வழக்கை மட்டுமே நான் நடத்தறேன். பிரதம மந்திரி இதை என்னிடம் ஒப்படைச்சிருக்கிறார்.''

அவள் வியப்போடு பார்த்தாள் அவனை.

''உங்க கார்டை காட்ட முடியுமா?''

அவன் எடுத்து நீட்டினான்.

அவன் பதவியை அந்த கார்டில் பார்த்து ஆச்சரியமடைந்தாள் அவள்.

டெபுடி ஜெனரல்!

மிக உன்னதமான பதவி!

''இந்த விஷயத்தில் நீங்க பயமில்லாமல் உண்மையைச் சொல்லலாம். சொல்லுங்கள், எதற்காக நீங்க ஜப்பானுக்குப் போனீங்க?''

"என் பதிலில் எந்த மாறுதலும் இல்லை."

"சரி, நான் போயிட்டு வரேன். ஆனால் ஒன்றை மாத்திரம் நினைவில் வைச்சுக்குங்க. இந்த ரகசியத்தை எப்படியாவது என்னால் கக்க வைச்சிட முடியும்."

"இதில் எந்த ரகசியமும் இல்லை. ஆனால் எனக்கு ஒரு விஷயத்தைச் சொல்லுங்க. இந்த அரசியல் கட்சி பயம் இல்லாமலிருந்திருந்தால் அரசாங்கம் இந்த விஷயமாய் உங்களை சோதனைக்கு அனுப்பி வைத்திருக்குமா? தாதாவின் கொட்டமெல்லாம் இன்னும் கொடுமையாய் தொடர்ந்து கொண்டே வந்திருந்தாலும் யாராகிலும் பொருட்படுத்துவாங்களா? இந்த ஃபைல் நகரத்தான் நகருமா முதலில்?"

அவனால் சட்டென்று பதில் சொல்ல முடியவில்லை. கொஞ்சம் பொறுத்து மெல்ல, "நான் ஒரு அரசாங்க ஊழியன். அரசாங்கத்தை விமரிசனம் பண்ணுகிற உரிமை எனக்கில்லை. ஆனால் நீங்க சொல்றது உண்மையாயிருக்கலாம். அரசியல் புரட்சிங்கற பயம் இல்லாமலிருந்திருந்தால் ஒருக்கால் யாருமே இதைப்பற்றி தீவிரமாய் எடுத்துக்காமலே போகலாம்."

"எனக்கு இந்த நாட்டு போலீஸ் மீதும் சி. பி. ஐ. மீதும் தாழ்ந்த அபிப்பிராயம் இருந்தது. அதைப் போக்கிட்டீங்க." மிகச் சுலபமாய் நிறைய விஷயங்களைக் கண்டுபிடிச்சிட்டீங்க என்றாள்.

"என்னத்தைக் கண்டுபிடிச்சுட்டேன்? ஒன்றையுமே கண்டு பிடிக்கலை. ஆனால் சீச்கிரத்திலேயே நீங்க ஜப்பானுக்கு ஏன் போனீங்கன்னு கண்டுபிடித்துத் தீருவேன்."

அவள் கைகளைக் கூப்பி, "நன்றி" என்றாள், மேற்கொண்டு பேச எதுவுமில்லை என்பது போல!

அவன் தலையாட்டிவிட்டுப் போய்விட்டான்.

# 38

அவள் மானசீகமாய் மிகவும் தளர்ந்துவிட்டாள். மேலுக்கு துணிச்சல்காரியாய், அவ்வாறு பேசிவிட்டாளேயன்றி, தான் எவ்வளவோ ரகசியமாய் செய்து கொண்டிருக்கும் காரியங்கள் எல்லாம் எல்லோருக்கும் தெரிந்து போனது ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் கொடுத்தது.

அவள் முகம் களையிழந்திருந்ததை ரஜினி கவனித்தான்.

''ஏன் பயப்படுகிறாய்?'' என்றான்.

''நான் என்ன தப்பு செய்தேன் பயப்படுவதற்கு?''

''திகிலடைந்து போயிட்டாயே, அதனால்தான் கேட்டேன்.''

அவள் ஒன்றும் பேசாமல் கைவிரல் நகங்களைப் பரிசீலித்தபடி உட்கார்ந்திருந்துவிட்டாள்.

''வெற்றியானது மனிதனைக் கண்ணைப் பறிக்க வைக்கும் வெளிச்சத்திற்குக் கொண்டு வருகிறது! அந்த வெளிச்சத்திற்குப் பழக்கப்பட கண்களுக்குக் கொஞ்ச நேரம் பிடிக்கிறது. கண்கள் சரியாய் தெரியாத அந்த நேரத்தில் மனிதன் அவசர முடிவிற்கு வந்துவிடுகிறான். அவ்வளவு தான்'' என்றான்.

அவள் அவனை வியப்போடு பார்த்தாள்.

''ஆமாம் அனுஷா! தொடர்ந்தாற்போல வெற்றிக்கு மேல் வெற்றியையே குவித்துக் கொண்டிருந்தால் நம்மேல் நமக்கே அளவுக்கு மீறி நம்பிக்கை ஏற்பட்டு, என்ன பண்றுகிறோம்னே தெரியாமல் போய்விடும். நீ பிரசுரித்த கட்டுரைகள் வெற்றியை அடைந்ததுமே — ஒரு லேடி ஜேம்ஸ்

பாண்டைப் போல ஜப்பான்னுக்குப் போனாய்! உன்னைப் பற்றி அவ்வளவாய் சிரத்தை எடுத்துக்காததால் தாதாவுக்கு இந்த விஷயம் தெரியலை. ஆனால் ஒரு சி. பி. ஐ. ஆபீசர் விசாரணையைத் தொடங்கிட்டால் இதெல்லாம் தெரிவதற்கு எவ்வளவு நேரம் பிடிச்சிடும்? அதேபோல் ராத்திரி ஓட்டல் அறையை எடுத்துக்கிட்டதும் கூட...''

அவள் கலவரத்தோடு அவனைப் பார்த்தாள்.

''அப்படின்னால் நான் போட்ட பிளான் எதுவும் பலிக்கப் போவதில்லையா?'' என்றாள்.

''நீ என்ன பிளான் போட்டாய்னு எனக்குத் தெரிந்தால் தானே சொல்றதுக்கு?'' என்றான்.

அதைக் கடைசி நிமிடம் வரையிலும் யாருக்குமே சொல்லக் கூடாது என்றெண்ணிக் கொண்டிருந்தாள். ஆனால் இப்பொழுது அத்தீர்மானத்தை மாற்றிக் கொண்டுவிட்டாள். மானசீகமாய் ஒரு பலமான துணை அவளுக்கு வேண்டியிருந்தது. அவள் மெதுவாய் சொல்லத் தொடங்கினாள். சுமார் பத்து நிமிடங்கள் பிடித்தன அவள் தன் பிளானைச் சொல்லி முடிப்பதற்கு. கேட்கக் கேட்க ரஜினியின் முகம் நிறம் மாறத் தொடங்கிற்று. அவள் முழுவதும் சொல்லி முடித்ததுமே அவன் கோபமும் எரிச்சலும் மண்டிய குரலில், ''உனக்கு நிச்சயமாய் பைத்தியந்தான் பிடிச்சிருக்கணும்'' என்றான்.

''இந்த விதத்தை விட்டால் வேறெந்த விதத்திலும் அந்த தாதாவின் கொட்டத்தை அடக்கிட முடியாது.''

''புத்திசாலித்தனம் ரொம்ப அதிகரிச்சிட்டால் இந்த மாதிரிதான் ஆகும்! ஆனாலும் இது எப்படி சாத்தியமாகும்? சங்கர் ஒன்றும் அவ்வளவு முட்டாளில்லை இந்த விஷயத்தை ஊகித்துக் கொள்ளாமல் இருப்பதற்கு! அவங்க மட்டும் இதைத் தெரிந்துகொண்டுவிட்டால் அதற்குப் பிறகு உன் உயிரை எடுக்காமல் விட்டு வைக்கமாட்டாங்க! அவங்களை

னதாலும் தடுத்துட முடியாது. அது சரி, சங்கருக்கு பதில் ஜப்பானுக்குப் போற அந்த ஆள் யாரு?''

''பில்வன்.''

தலையில் இடி விழுந்ததுபோல அதிர்ந்து விட்டான் ரஜினி. அவன் கண்கள் திக்பிரமையால் அகன்றன. சிறிது நேரம் அவனால் பேசமுடியவில்லை. அப்படியே சிலையாய் நின்றுவிட்டான்.

''உன் சம்பந்தப்பட்ட விஷயம் பற்றி நீ வாழ்க்கையில் எந்த முடிவெடுத்தாலும் தப்பில்லை அனுஷா! ஆனால் மற்ற வர்களிடமிருந்து நீ உதவியை எதிர்பார்க்கிறபோது அது அவங்களுக்கு எவ்வளவு தீங்கைத் தரும்ன்னு ஒருமுறை நன்றாய் யோசித்துப் பார்த்துக் கொள்வது நல்லது.''

''தாதா ஒரு மலையைப் போன்றவன் ரஜினி! அவனை எதிர்க்க என் ஒருத்தியால் முடியாது. எல்லாப் பக்கங்களிலி ருந்தும் வந்து அவனைச் சூழ்ந்துக்க வேண்டும். இதில் சிலர் இறந்தாலும் அது மரணமாகாது. உயிர்த் தியாகம் பண்ணிய தாகத்தான் ஆகும். இந்த விஷயத்தையெல்லாம் வாதாடி முடித்தபிறகுதான் பில்வன் இதற்கு ஒப்புக்கொண்டான்.''

''சங்கர், வசந்த் தாதா இவங்களிடமிருந்து வரப்போற ஆபத்தைப் பற்றிச் சொல்லலை நான். நம்ப அதிகாரிங்களிட மிருந்து எதிர்ப்படப் போற ஆபத்தைப் பற்றித்தான் சொல் றேன். சங்கர் ஜப்பானுக்குப் போறதுக்கு முன்னால் அவன் சம்பந்தப்பட்ட ஃபைல் எவ்வளவோ அதிகாரிங்க வழியாய் கைமாறும். அவன் இந்த நாட்டை விட்டுட்டு ஜப்பானுக்குள் காலெடுத்து வைக்கும்வரை எவ்வளவோ அதிகாரிகள் அவனைப் பரிசோதிப்பாங்க. இந்த வரிசைக்கிரமத்தில் யாரா வது ஒருத்தர் கொஞ்சம் நேர்மையாயிருந்தாலோ-விமான நிலையத்தில் யாராவது ஒருத்தராவது கொஞ்சம் ஒத்துழைக் காதவராயிருந்தாலோ, எல்லா ரகசியமும்வெளிப்பட்டுவிடும். அப்போது நம் நேர்மையை நிரூபிக்க எண்ணினாலும்

யாருமே நம்ப மாட்டாங்க. அந்த நிலைமை வரைக்கும் வந்துட்டால் அது தேசத்துரோகத்திற்குச் சமமானவிஷயமாகி விடும். அவனுக்கு ஒத்துழைத்ததற்கு ஆயுள் தண்டனைக்குச் சமமான தண்டனை பில்வனுக்குக் கிடைக்கும். இதையெல் லாம் யோசிச்சீங்களா?"

"யோசிச்சுப் பார்த்துதான் இம் முடிவை எடுத்தோம் ரஜினி" என்று உள்ளே நுழைந்தான் பில்வன். "இனி இந்த விஷயத்தில் விவாதம் தேவையில்லை. இப்போதே பைத்தியக் கார ஆஸ்பத்திரியில் நான் அட்மிட்கூட ஆயிட்டேன். வசந்த் தாதாவுக்கு என்னைக் காட்டப்போற ஆளும் யாருன்னு தெரிஞ்சிட்டது. உடனே ஆஸ்பத்திரி சூபரிண்டென்டென்ட்டை இந்த மாஃபியா பத்தாயிரம் ரூபாய்க்கு விலைக்கு வாங்கிட்டுது. அந்த சூப்ரிண்டென்ட் நம்ப ஆளுன்னு மட்டும் தெரியாது அவங்களுக்கு."

ரஜினி ஆச்சரியத்தோடு அனுஷாவைப் பார்த்தான்.

"உங்க யோசனைகளையும் திட்டத்தையும் நான் மறுக்கலை—ஆனால் இதில் குறைகள் நிறைய இருக்கு. உதாரணமாய் இரண்டு மூன்றைச் சொல்றேன், கேட்டுக்குங்க. ஒன்று, தனக்கு பதில் யார் ஜப்பானுக்குப் போறாங்களோ பார்ப்போம் என்று சங்கர் எந்த நிமிடத்தில் நினைச்சானோ அந்த நிமிடமே இந்தத் திட்டம் தோல்வியடைந்து நிர்மூல மாயிட்டாற் போலத்தான். இரண்டாவது என்னதான் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு வந்து பார்த்தாலும், வசந்த் தாதா பில்வனைப் பார்க்கப் போகும்போதெல்லாம் தனியாகத் தான் போவான் என்ற நம்பிக்கை இல்லை. அவனோடு போகிற ஆட்களில் யாராவது ஒருத்தராவது இதற்கு முன்னால் பில்வனைப் பார்த்திருந்தார்களானால்—எல்லா திட்டமும் பாழாயிடும். மூன்று—என் அபிப்பிராயம் என்ன வென்றால் ஜப்பானிலிருந்து வந்திருக்கும் அதிகாரி சங்கரைத் தன் கட்டுப்பாட்டுக்குள் எடுத்துக் கொண்டதும் விமான நிலையத்தில் இந்த ஆள்மாறாட்டம் நிகழும். அந்த

சமயத்திலேயே பாஸ்போர்ட்டில் போட்டோ மாற்றமும் நிகழ்ந்து விடும், ஆள் மாறாட்டம் செய்து கடைசி நிமிடத்தில் வேறு போலீஸ் அதிகாரியாவது வழியனுப்ப வந்துவிட்டால் பில்வனின் உயிருக்கே ஆபத்து. ஒரு மனித உரு கொண்ட ராட்சதனுக்கு உதவியதற்குக் கிடைக்கும் தண்டனை சாதாரணமாயிருக்காது.''

''வசந்த் தாதா இப்போது ஓய்வில்லாமல் வேலையில் ஆழ்ந்திருக்கிறான். ஒருபக்கம் விசாரணைகள்! இன்னொரு பக்கம் பரிசோதனைகள்! இந்த மாதிரி நிலைமையில் அவன் ஆஸ்பத்திரியில் பார்த்து ஒருமுறை செட்டில் பண்ணிட்டானா னால் பிறகு இன்னொரு தடவை பார்க்க முயற்சிப்பான்னு நான் நம்பலை. பில்வனைப் பார்த்து சங்கர் அடையாளம் தெரிந்துகொண்டால் என்ன செய்வது என்று கவலைப்படத் தேவையில்லை. நிலைமை அவ்வளவு தூரத்திற்கு போகுமானால் என்ன பண்ணுவதென்று நானும் பில்வனும் யோசித்துதான் வைச்சிருக்கோம். அது என்னவென்று உங்களுக்கும் தெரியும். விமான நிலையத்தில் நடக்கப் போவது கொஞ்சம் முன் கூட்டியே நடந்துவிடும். அவ்வளவு தான். இனி நீங்க கேட்ட கடைசி கேள்வி—நம்ப ஆபீசர்கள் சங்கருக்கு பதில் வேறு யாரோ போறாங்கன்னு தெரிந்து கொண்டால் என்ன செய்வது என்பது பற்றி! ரஜினி! இந்த நாட்டைப்பற்றி என்னைவிட அதிகமாய் தெரிந்திருக்கும் உங்களுக்கு, நான் சொல்லித்தான் தெரியணுமா?

நம்முடைய கலப்புப் பொருளாதாரம்! கலப்புப் பொருளாதாரத்தில் அறிவுடைய எவனுமே இன்னொருத்தருக்குக் கீழேயோ அல்லது அரசாங்க காரியாலயத்திலேயோ வேலை பண்ணமாட்டான். அரசியலிலேயோ அல்லது வியாபாரத்திலேயோதான் மூழ்கிவிட்டிருப்பான். சாதாரண புத்திசாலிகளும், வாழ்க்கையை இயந்திரமாய் பாவிப்பவர்களும் மட்டுமே இதில் நாயுருவியைப் போல ஒட்டிக் கொண்டிருப்பார்கள். இப்படிப்பட்ட ஜடங்களைத் தவிர, இன்னும் சிலர்

மிகச் சொற்பமான பேர் கூட இந்த இயந்திரத்தில் இருப்பாங்க. ஆனால் இவங்களுக்குத் தாம் பண்ணும் காரியத்தைக் காட்டிலும் இதர விஷயங்களில் அக்கறை நிறைய இருக்கும். அதனால் அரசாங்கத்திலிருக்கும் தம் வேலையைப்பற்றிப் பொருட்படுத்தமாட்டாங்க.

''இப்படிப்பட்ட சூழ்நிலையில் பில்வனை யாராவது அடையாளம் கண்டுபிடிச்சுடுவாங்களோன்னு நினைப்பது காரணமில்லாத பயத்தைத்தான் காட்டுகிறது. எவ்வளவோ நம்பிக்கை இருந்தாலேயொழிய தாதா இக்காரியத்தில் தலையிட்டுக் கொண்டிருக்க மாட்டான். பார்ப்போம் என்ன நடக்குதுன்னு.''

மூச்சு விடாமல் சொல்லி முடித்த அனுஷாவின் பேச்சைக் கேட்ட ரஜினியால் ஒன்றும் பேசமுடியவில்லை. அவள் சொன்னதில் பொய்யில்லை. யாரோ ஒருத்தர் ஏதோ ஒரு இடத்திலிருந்து ஏதோ ஒன்றைத் தொடங்கினால்தானே ஆகும்! ஆனால் தாதாவின் மரணம் இதற்குப் பரிகாரமாகி விடாது. விருட்சம் ஆட்டம் கண்டுவிட்டது. சாய்ந்து தான் விழப் போகிறதோ அல்லது மேலும் பலமாய் வேரூன்றி நின்றுவிடப்போகிறதோ என்பதை காலந்தான் சொல்ல வேண்டும்.

எல்லாம் நல்லபடியாய் முடியும் என்ற நம்பிக்கை அவளுக்கிருந்தது. அந்த சி. பி. ஐ. ஆபீசர் சுக்ரீவ் தன் திட்டத்தை தெரிந்துகொண்டு விடுவாரோ என்று சந்தேகமா யிருந்தது. அவர் நிறைய விஷயங்களைத் தெரிந்து கொண்டிருக்கிறார்—தான் ஜப்பானுக்குப் போனதையும், ஒட்டலில் யுமின் சுன்னைச் சந்தித்ததையும்...அவருக்கு மட்டும் சந்தேகம் வந்து விட்டால் போதும், திட்டமெல்லாம் பாழாகிவிடும்.

அவ்விரண்டு நாட்களும் அவள் மன உளைச்சலோடேயே கழித்தாள்.

# 39

கையிலிருந்த உத்தரவை வியப்போடு பார்த்தான் ஸ்ரீகாந்த். சண்டிகாருக்குப் பதவி உயர்வோடு மாற்றல் செய்யப்பட்டிருந்த உத்தரவு அது.

அவனை சுயமாய் கூப்பிட்டு உள்துறை அமைச்சர் அதனைத் தந்திருந்தார். அமைச்சர் அவனோடு பேச விரும்பியதே அதற்குக் காரணம். ''இது ரொம்ப ஆபத்தான பதவின்னு தெரியும் எனக்கு. இதை சாமர்த்திய மாய் நிர்வகிக்கக் கூடிய ஒரு சில பேரில் நீயும் ஒருத்தன்னு நினைக்கிறோம். டில்லி எல்லையில் வசந்த் தாதாவை நீ ஒருத்தனே தனியாய் நின்று எதிர்த்தவன் என்று எனக்குத் தெரியும்...''

''என்னத்தை எதிர்த்துட்டேன் சார்? அவரு ரொம்ப நேர்த்தியாய் தன் வேலையைப் பண்ணிட்டே போறாரு... அவர் மேல் ஒரு கேசு கூட போடமுடியலை எங்களால்...''

''அவரை உங்களால் அரெஸ்ட் பண்ண முடியாமலிருந் திருக்கலாம். ஆனால் நிறைய காரியங்களுக்குத் தடை போட்டாச்சு. அது போதும்.''

''ஆனால் எவ்வளவு நாளைக்குத்தான் அந்த மாதிரி தடுத்துட்டே வர முடியும் சார்?''

''உன் சந்தேகம் எனக்குப் புரியுது ஸ்ரீகாந்த். உன் இருப்பிடத்திற்கு வரப்போகும் டி. சி. பி. உன் போன்று சுறுசுறுப்பானவராய் இல்லாமலிருக்கலாம். அல்லது தாதா வோடு நமக்கெதற்கு விரோதம்னு நினைக்கிறவராய் இருக்கலாம். ஆனால் தாதாவை விட பஞ்சாப் பிரச்னை

ரொம்பப் பெரிசு. உன்னைப் போன்றவங்களின் தேவை ரொம்பவும் வேண்டியிருக்கு அங்கே. உடனே போ.''

ஸ்ரீகாந்த் எழுந்து சல்யூட் பண்ணிவிட்டு, ''தாங்யூ சார்'' என்றான்.

''பெஸ்ட் ஆஃப் லக்.''

ஸ்ரீகாந்தின் மாற்றல் விஷயத்தைக் கேள்விப்பட்டதுமே வசந்த் தாதாவின் உதடுகளில் குறுநகை நெளிந்தது. ஸ்ரீகாந்தை அவ்விடத்திலிருந்து அப்புறப்படுத்தி விட வெகு காலமாய் முயன்று கொண்டிருந்தான் அவன். எதிரிகள் தம் எண்ணம் நிறைவேறியதற்கு மகிழ்ச்சியடைவார்கள். மக்களோ—தமக்கு இவ்வளவு சேவை பண்ணிய நபருக்குப் பதவி உயர்வு கிடைத்ததற்கு மகிழ்ந்து வழியனுப்பி வைப்பார்கள். கடையடைப்புக்களோ மறியலோ பண்ண வேண்டிய அவசியமிராது. சரியாய் அதுவேதான் நடந்தது.

தாதா தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு வேண்டுகோள் விடுத்தான். எப்படியும் சுறுசுறுப்பான துணிச்சல் மிகுந்த போலீஸ் ஆபீசர்கள் பஞ்சாபிற்கு வேண்டியிருந்தது. அப்படிப்பட்டவர்களில் ஸ்ரீகாந்தும் ஒருவன்.

இவ்விதமாய் இரண்டையும் எடைபோட்டு, தாழ்த்தப் பட்டவர்கள் 'குறிப்பு' கொண்டு வந்ததுமே உடனேயே அது ஏற்கப்பட்டது. உள்துறை அமைச்சர் சொன்னது போல பஞ்சாப் பிரச்னை எல்லா பிரச்னைகளையும் விட பெரிது. மேலிடத்தவர்களுக்கு தாதா விஷயமோ அற்ப விஷயம். பார்லிமென்டில் விவாதத்திற்கு வராது அது.

எது என்னவானால்தான் என்ன, மொத்தத்தில் தாதாவின் வழியிலிருந்து ஸ்ரீகாந்த் விலக்கப்பட்டான். தாத சமீபத்தில் சாதித்த மாபெரும் வெற்றிகளுள் அது ஒன்று அனுஷாவின் விஷயத்தை தாதா மறந்து விடவில்லை. போன் மூலமாய் நாடகமாடி வத்சலாவை அவள் விடுதல

பண்ணியது தாதாவை ஆத்திரமூட்டிற்று. அதற்கு அவளுக்கு நல்ல பாடம் கற்பிக்க எண்ணியிருந்தான். ஆனால் அவள் விஷயத்தை மெதுவாய் இன்னும் நாலைந்து நாட்களுக்குப் பிறகு பார்த்துக் கொள்ளலாம்.

இன்னும் இரண்டு நாளில் சங்கரை ஜப்பானுக்குக் கூட்டிச் செல்லயிருந்தார்கள்.

இதற்கு வெகுநாட்களுக்கு முன்னரே தாதா திட்டம் தீட்டி வைத்து விட்டான். ஆனால் இம்முறை அவன் சர்மாவைப் போன்றவர்களைத் தேர்ந்தெடுத்து ஆபத்தில் தலையைக் கொடுக்க விரும்பவில்லை. அதிர்ஷ்டவசமாய் அவனுக்கு இம்முறை பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் மன நோயால் வருந்தும் ஒரு நோயாளி கிடைத்தான். அவன் தப்பித்துச் செல்வதற்கு ஆஸ்பத்திரி அதிகாரி ஒப்புக் கொண்டார். அந்த நோயாளி அதிகமாய் பேசவில்லை. சாதுவாய் தென்பட்டான். யார் எதைச் சொன்னாலும் அப்படியே செய்து விடுகிற சிறுபிள்ளையின் மனநிலை யிலிருந்து இன்னும் வளர்ச்சியடையாத மனோபாவம்.

பார்க்க சங்கரின் உயரமே இருந்த அந்த நோயாளியைப் பார்த்ததுமே தாதாவுக்குப் பிடித்துவிட்டது. சங்கருக்கு மட்டும் சில சந்தேகங்கள் நிலைத்து விட்டிருந்தன.

"தாதா! நாளைக்கு இந்த நோயாளி எனக்கு பதில் ஜப்பானுக்குப் போனால்—அங்கிருக்கும் அதிகாரிகள் இரண்டு மூன்று கேள்விகளைக் கேட்டுப்பார்த்து இவன் ஒரு நோயாளின்னு தெரிஞ்சுக்க மாட்டாங்களா? நம்ப திட்டமே அதனால் பாழாயிடாதா? சர்மாவைப் போலிருந்தாலாவது எனக்கு பதில் தூக்குக் கம்பம் ஏறினாலும் ஏறலாமேயொழிய இப்படிப்பட்ட ஒரு நோயாளி எனக்கு பதில் கடைசி வரைக்கும் எல்லோரையும் நம்ப வைச்சிட முடியுமா?"

தாதா சிரித்தான். ''கடைசி வரைக்கும்னு நீ சொன்ன வார்த்தையே இதுக்கு பதில் சொல்லிடும் சங்கர். விமான நிலையத்தில் மாற்றம் நிகழ்ந்ததுமே—உனக்கு பதில் போகிற நோயாளியின் கடைசி தருணம் நெருங்கிடும். போகிற விமானத்திலேயே யுமின்சுன்னோடு சேர்ந்து அவனும் செத்துடுவான்.''

''எப்படி?'' ஆச்சரியத்தோடு கேட்டான் சங்கர்.

''குண்டு மூலம் விமானம் வெடிக்கும். இந்த ரகசியத்தை கடைசி நிமிடம வரையிலும் யாருக்குமே சொல்ல விரும்பலை நான். நாளன்றைக்கு உன்னைக் கூட்டிட்டு ஜப்பானுக்குப் போகிறான் யுமின்சுன்! அதே விமானத்தில் பாபா ஆட்டமிக் ரிசர்ச்சைச் சேர்ந்த விஞ்ஞானிகள் மூவரும் கூட பயணம் பண்ணுவார்கள். இந்த விமான வெடிப்பு அந்தக் காரணத்தால் பயங்கரவாதிகளின் நடவடிக்கையாய் சித்தரிக்கப்படும்! ரிகார்டில் சங்கர் செத்து விட்டதாய் குறித்துக்கொள்ளப்படும். உன் பேரில் யாரோ ஒருத்தன் ஜப்பானுக்குப்போய் அங்கே இறப்பதைவிட போற வழியிலேயே விபத்து மூலம் இறந்து விட்டால் அதற்குப் பிறகு வழக்கே இருக்காதில்லையா? மேலும் பரிசோதனைக்குக்கூட சவம் கிடைக்காது.''

சங்கர் தாதாவைப் பார்த்து, ''ரொம்ப அபாரமான யோசனைதான் தாதா உன்னுது'' என்று மெச்சலானான்.

''நீயும் யாருக்கும் இதைச் சொல்லிடாதே.''

''இது உன் படுக்கை'' என்றார் டாக்டர், பில்வனிடம். ''இன்றிரவு உன்னை சுவரைத் தாண்டிக் குதித்து வெளியே போக வைத்து நோயாளி தப்பிச்சு ஓடிட்டான்னு ரிகார்டில் குறித்துக்கொள்வோம். அங்கிருந்து காரில் நீ பம்பாய்க்கு அனுப்பப்படுவாய். அதுவரைக்குந்தான் எனக்குத் தெரியும்.''

பில்வன் சிரித்துக்கொண்டே தனக்குள் நினைத்துக் கொண்டான்—'அப்புறம் என்னன்னு எனக்குத் தெரியும்' என்று.

இங்கே இவ்வாறு நடந்து கொண்டிருந்த அதே நேரத்தில் அங்கே அனுஷா யுமின்சுன்னுடன் பேசிக் கொண்டிருந்தாள்.

"இனி நாம்ப சந்திப்பது நன்றாயிராது. சங்கருக்குப் பதில் வேறொரு ஆள் வந்தால் நீங்கள் பரபரப்படையாதீங்க. லஞ்சம் வாங்கிய பிறகு நீங்க போட்டதெல்லாம் நாடகம்னு தெரிந்தால் கொதித்தெழுவாங்க. தாதா அனுப்பி வைத்த ஆளை உங்களோடு கூட நிசப்தமாய் அழைச்சுட்டுப் போயிடுங்க..."

"அப்ப சங்கர்?"

"அவன் சங்கதியை நாங்க பார்த்துக்கறோம். ஜப்பானுக்குப் போய்ச் சேரும் வரையிலும் இந்த விஷயம் உங்களுக்குத் தெரியாதது போலவே இருந்துடுங்க. குட் பை."

பிரயாணத்திற்கு இன்னும் ஐம்பது நிமிடங்கள் இருந்தன.

அவரவர்கள் தம் திட்டங்களைத் தீட்டியபடி இறுதி முடிவுக்காகக் காத்திருந்தார்கள். இரண்டு நாட்கள் கழிந்தன.

மேலும் பன்னிரெண்டு மணி நேரங்கள்... இறுதியில் எதிர்பார்த்த அந்த நிமிடம் வந்தே விட்டது.

## 40

சங்கரை ஜப்பானுக்குக் கூட்டிச் செல்ல எல்லா ஏற்பாடுகளையும் செய்து முடித்துக் கொண்டார் யுமின்சுன். சங்கர் கோர்ட்டிலிருந்து விடுதலையாகி, இந்தியாவை விட்டுப்

போகலாம் என்று இந்த அரசாங்கம் பச்சைக் கொடியைக் காட்டியதுமே, அவனை அதிகாரபூர்வமாய் தன் சுவாதீனத் திற்குள் எடுத்துக் கொண்டு விட்டார்.

ஜப்பானுக்குப் போய்ச் சேரும் வரையிலும் சங்கரை ஜாக் கிரதையாய் பார்த்துக்கொள்ளும் ஏற்பாடுகளனைத்தும் கட்டுத் திட்டங்களுடன் செய்து முடிக்கப்பட்டது. அவற்றைப் பார்க் கப் பார்க்க யுமின்சுன்னிற்கே ஆச்சரியமாயிருந்தது. சங்கர் தப்பித்துக்கொள்ளும் விதத்தைப்பற்றி அனுஷா வந்து தன்னி டம் சொல்லாமலிருந்திருந்தால் இவ்வளவு ரகசியமாய் ஏற்பாடு பண்ணியவர்களைத் தனக்குள் மெச்சிக் கொண்டிருந் திருப்பார்.

ஆனால் அவருக்குத் தெரியும்—இவ்வளவு ஜாக்கிரதை யாய் கட்டுத்திட்டங்களை மேற்கொண்டிருந்த போதிலும் அதற்குப் பின்னால் சங்கர் தப்பித்துவிடுவதற்கு சுறுசுறுப்பாய் ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தனவென்று!

வசந்த் தாதா சுயமாய் இந்த ப்ளானை வலை பின்னியி ருக்கிறான். அவனே சங்கரை விமான நிலையத்திலிருந்து தப்பித்துக் கொள்ளச் செய்து கூட்டிச் செல்ல தானே வர விருந்தான். மிக உயர்ந்த நிலையிலிருந்த நான்கு அதிகாரி கள் இதற்கு ஒத்துழைககிறார்கள். அதில் ஒருவர் போலீஸ் துறையிலும், இனனொருவர் சுங்கத்துறையிலும், மேலும் இருவர் விமானநிலையத்தைச் சேர்ந்த அதிகாரிகளும் ஆவார்கள். நால்வருக்கும் விமான நிலையத்துடன் நெருங் கிய தொடர்புகள் இருந்து வந்தன.

சூங்கரின் தேவை தற்போது தாதாவுக்கு மிகவும் வேண்டி யிருந்தது.

இந்தோனேஷியா மலேஷியா நாடுகளில் போதைப் பொருட்களின் வியாபாரத்திற்கு தண்டனையாய் தூக்குத் தண்டனையை உறுதிப் படுத்தி, அரசாங்கத்தைச் சீர்திருத்தி,

"அது நம்மிருவரையும் எப்படி முட்டாளடிச்சுடுத்துன்னு உனக்குத் தெரியுமோ தாதா? போனில் நாடகமாடி வத்சலாவை விடுவித்துக்கொண்டு போயிட்டது. அப்படிப் பட்ட அவளை ஒன்றுமே பண்ணாமல் பதிலடி கொடுக்காமல் போய் விடுவதா? ஊஹூம்—என்னாலாகாது அது. நான் போன பிறகு நீ எதையாவது பண்ணினால் அதனால் எனக்கென்ன திருப்தி? நான்தான் பண்ணணும் அதை திரும்ப போலீசில் சிக்கினாலும் பரவாயில்லை... அந்தமாதிரி கொதிக்குது என் மனசு. ஆனாலும் இதெல்லாம் போலீசுக்கு எப்படித் தெரியப் போறது? விமான நிலையத்திலிருந்து தப்பித்ததுமே நம்ப இருப்பிடத்துக்குப் போகப் போறோம். நான் எப்படியும் ஜப்பானுக்குப் போயிட்டேன்னு எண்ணிக் கிட்டு அது வெளியே வரும். அதைப் பிடிச்சு இழுத்திட்டு வரச்சொல்லி குண்டப்பாவிடம் சொல்றேன். வேலை முடிஞ்சதுமே கொன்னுடறேன் அப்புறம் போலீசுக்கு எப்படித் தெரிந்துவிடும்? நீ என்ன சொன்னாலும் சரி அதை விட்டுட்டுப் போக என்னால் முடியாது. இதற்கு மட்டும் ஒப்புக்கோ. வேறெதுவும் தேவையில்லை எனக்கு."

தாதாவுக்கு அது பிடிக்கவில்லை. அவன் முதலில் எண்ணிக்கொண்டிருந்த பிரகாரமாயிருந்தால் விமான நிலையத்திலிருந்து நேராய் டாக்யார்டிற்குப் போய், எவ்வளவு சீக்கிரத்தில் முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் கப்பலில் டர்க்கி பக்கமாய் போய்விட வேண்டுமென்பதுதான். சங்கர் சிற்சில விஷயங்களில் மிகவும் பிடிவாதக்காரன் என்பது தாதா அறிந்ததே. இப்பொழுது இதனால் மேலும் ஆறு ஏழு மணி நேரம் தாமதமாகலாம். குண்டப்பாவால் அனுஷாவைப் பிடித்துக் கொண்டு வரமுடியுமா என்ற சந்தேகம் வேறு. போதைப் பொருளைச் சாப்பிட வைத்து இவ்வளவு தூரம் காரில் கூட்டிக்கொண்டு வர வேண்டும். எல்லாம் முடிந்த பிறகு தானே இது...அப்பொழுது பார்த்துக் கொள்ளலாம் என்றெண்ணினான்.

தான் யோசிக்க வேண்டிய முக்கியமான விஷயம் இன்னொன்றும் இருந்தது தாதாவுக்கு தெரியும். விமானத்தை வெடிக்கும்படி செய்யும் சங்கதிதான் அது!

சங்கருக்கு பதில் ஜப்பானுக்குப் போகவிருந்த ஆளை தாதா கடைசி முறையாய் அன்று காலையில்தான் கூர்ந்து கவனித்தான். டாக்டர் சொன்னது நிஜந்தான். மூளை சரியாய் வளர்ச்சியடையாத ஆள்தான் அவன். யார் எதைச் சொன்னாலும் அதைச் செய்யலானான். சங்கரின் உயரமும் அதே பருமனும் இருந்ததால் பொருந்திவிட்டது. வழியில் விமானம் மட்டும் வெடிக்காமல் போய் விட்டால்—ஜப்பானில் இறங்கிய அடுத்த நிமிஷமே அங்கிருக்கும் அதிகாரிகள் நொடிப்பொழுதில் நடந்ததைத் தெரிந்து கொண்டு விடுவார்கள்.

யுமின் சுன்னை மாத்திரம் நன்றாய் சம்மதிக்கச் செய்து விட்டார்கள். ஜப்பானில் இறங்கியதுமே அங்கிருக்கும் மாஃபியா சங்கரின் பெயரில் வந்து இறங்கும் ஆளைக் கொண்றுவிடும் என்றும், அது பழைய விரோதத்தால் ஏற்பட்ட கலகம் என்றும் பூசி மெழுகி விடலாம்—அந்த விதமாய் வழக்கு முடிவடைந்துவிடும்...

இதுவரையிலும் திட்டம் நன்றாகவே இருந்தது. இனி விமானத்தை வெடிக்கச் செய்யும் காரியத்தைத் தொடங்க வேண்டும்.

இந்தியாவில் விமானத்தை வெடிக்கச் செய்வது மிக எளிது. விமான நிலையங்களில் அதிகாரிகள் அரைமணி நேரம் வரையிலும் பண்ணும் இச்சடங்கைப் பார்த்தால் யாருக்குமே உண்மையில் சிரிப்புத்தான் வரும். பிரயாணி களின் பெரிய பெரிய லக்கேஜுகள் நேராய் விமானத்திற் கருகில் போய்ச் சேரும். ப்ரீஃப் கேசுகளை மாத்திரம் தம்மோடு எடுத்துச் செல்லலாம். இவற்றை மட்டும் திறந்து அதிகாரிகளுக்குக் காட்ட வேண்டியிருக்கும். திறப்

பதற்கு முன்னால், ''பிசினெஸ்ஸா சார்?'' என்று கேட்பார்கள். ஆமாம் என்றால், பெஸ்ட் ஆஃப் லக் சார்'' என்று கையிலிருக்கும் 555 பாக்கெட்டை நோக்கிப் பார்ப்பார்கள். ஒரு சிகரெட்டைத் தந்ததுமே உல்லாசமாய் சிரித்து விட்டு சலாம் போடுவார்கள். பிறகு போய் விமானத்தை ஹைஜாக் பண்ணிக் கொள்ளலாம் அவர்கள், ப்ரீஃப் கேசிலிருக்கும் பிஸ்டலுடன்...

குண்டு போட்டு வெடிக்கச் செய்வதற்கு மட்டும் கொஞ்சம் கஷ்டப்பட வேண்டியிருக்கும். ஆனால் அசாத்திய மான விஷயமொன்றுமில்லை... விமானத்திற்கருகிலேயே லக்கேஜுகளைப் பயணிகள் அடையாளம் கண்டு கொள்ள வேண்டியிருக்கும். ஒரு பெரிய மனிதர் சாக்பீசுடன் நிற்பார். ''இந்தப் பெட்டி என்னுடையது'' என்றதுமே அதன் மேல் குறி போடுவார்.

அதிகாரிகளின் உத்தேசம் என்னவென்றால் — எந்தப் பிரயாணியும் தான் பயணம் செய்கிற விமானத்தில் குண்டைப் போட்டுக் கொள்ளமாட்டான் என்பது! அதனால் தான் இந்த லக்கேஜுகளைப் பரிசோதிக்க மாட்டார்கள். ஒரு சக பிரயாணியை உதவிகேட்டு நாம் நம் லக்கேஜை அவர் லக்கேஜுடன் சேர்த்து ஐதராபாத்திற்கு அனுப்பி விட்டு நாம் அருகிலிருக்கும் பெங்களூர் விமானத்தில் ஏறிவிட்டால் போதும்! ''ஐதராபாத் விமானம் சிதைந்து விட்டது'' என்ற செய்தி நாம் பெங்களூரில் இறங்கியதுமே தெரிந்துவிடும். இதுதான் நம் பரிசோதனை முறை!

வெளிநாடுகளுக்குப் போகும் விமானங்களானால் குண்டு வைப்பது கொஞ்சம் கடினம். வசந்த் தாதா இதற்கு ஒரு கட்டுத் திட்டமான பிளானைப் போட்டிருந்தான். வியாபார அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஒரு இளைஞனை அதே விமானத்தில் ஜப்பானுக்கு அனுப்பவிருந்தான். தான் எடுத்துச் செல்லும் சாம்பிள்களில் ஒரு குண்டும் இருக்கிற சங்கதி தெரியாது அவ்விளைஞனுக்கு. யுமின்சுன்னுடன்

சேர்ந்து தானும் சாகப் போவதை அறிய மாட்டான் அவன். இது முதல் கட்டம்.

இத்திட்டத்தால் திருப்தியடைந்த தாதா இரண்டாவது உபாயத்தைப் பற்றி யோசிக்கத் தொடங்கினான். சங்கருக்கு பதிலாய் போகவிருக்கும் நபர் மாற்றத்தை எந்த இடத்தில் செய்வது என்பது பற்றி. அதிகாரிகளின் பரிசோதனை எல்லாம் முடிந்ததும், விமானத்திற்குள் ஏறப்போகும் தருணத்தில் இந்த மாறுபாடு நிகழ்ந்தால் பிறகு சோதிப்பவர்கள் யாருமிருக்க மாட்டார்கள். இம்முடிவிற்கு வந்திருந்தான். இத்திட்டத்திற்கு உதவவிருந்த நான்கு அதிகாரிகளுடனும் இவ்விஷயத்தைப் பற்றி வாதாடினான்.

அவர்களுக்குள் முதல்நாள்தான் இதைப்பற்றிய விரிவான விவாதங்கள் நடந்து முடிந்திருந்தன. லவுஞ்சுக்கு வரவேண்டிய தேவையில்லாமலேயே வெளியே வரக்கூடிய வழி ஒன்றிருந்தது. அந்த வழி சம்பந்தப்பட்ட ப்ளூ பிரிண்ட்டை கவனமாய் பரிசீலித்தார்கள். ஆளரவமில்லாமலிருக்கும் அந்த ஹாலுக்குப் பக்கத்திலேயே ஒரு சிறிய டாய்லெட் இருந்தது. விமான நிலையத்தைச் சேர்ந்த அதிகாரி சங்கரை இந்த ஹாலுக்குள் அனுப்பி விடுவார். ஜப்பானுக்குப் போகவிருக்கும் நபருடன் வசந்த் தாதா அதுவரையிலும் அந்த டாய்லெட்டிற்குள் ஒளிந்து கொண்டிருப்பான். யுமின்சுன்னிற்கருகில் அந்த ஆள் போய்ச் சேர்ந்ததுமே தாதா—சங்கர் இருவரும் டாய்லெட்டிற்குப் பின்பக்கமாய் உள்ள வழி மூலமாய் வெளியேறிவிடுவார்கள். இத்திட்டத்தில் பங்காளியான சுங்க அதிகாரி இவர்களைக் காரில் ஏற்றி அனுப்பி வைத்து உதவிபுரிவார். இது இரண்டாவது கட்டம்.

திட்டத்தின் மூன்றாவது கட்டம்—விமான நிலையத்திலிருந்து சங்கரை டாக்யார்டிற்குக் கூட்டிச் செல்வது... இதில் பெரிதாய் எந்த கஷ்டமுமில்லை. ஆனால் அதற்குள் ஆஸ்பத்திரியிலிருந்து வந்த ஆள்—சுற்றிலும் மனிதர்களின்

ஆரவாரத்தைப் பார்த்துவிட்டு விமானத்திற்குள் ஏதாவது ரகளையை ஆரம்பித்து விட்டால் கஷ்டம்! புறப்பட்ட ஒரு மணி நேரத்திற்குள் விமானம் வெடித்து விடும். அதுவரையிலும் அந்த ஆள் எந்த ரகளையும் பண்ணாமலிருக்க வேண்டும். ஒரு கால்பண்ணி விட்டால்...அந்த விஷயத்தை விமான ஓட்டி கீழே பூமியிலிருக்கும் அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்திவிட எவ்வளவு அவகாசம் இருக்கிறது? ஒரு கால் சொல்லாமலும் போகலாம். ஆனாலும் அவனைக் கூட்டிச் செல்கின்ற போலீஸ் அதிகாரியின் கையில் கொஞ்சம் போதை வஸ்துவைத் தந்து விமானத்தில் ஏறி உட்கார்ந்ததுமே அந்த போலி சங்கருக்கு அதைத் தந்து விடச் சொல்ல வேண்டும். அதன் மூலம் போய்ச் சேரும் வரையிலும் அவன் எந்த ரகளையும் பண்ணாமலிருப்பான்.

திட்டத்தின் நான்காம் பாகம் அனுஷா! விமான நிலையத்திலிருந்து டாக்யார்டிற்குப் போகும் வழியில் குண்டப்பா அனுஷாவைக் கூட்டி வந்து நிறுத்தியிருப்பான். அவனால் அனுஷாவைப் பிடிக்க முடியாவிட்டால் ரொம்ப நல்லதாய்ப் போயிற்று. ஒருவேளை பிடித்துவிட்டால் மட்டும் நினைத்த காரியம் நிறைவேறும் வரையிலும் சங்கர் சும்மாயிருக்க மாட்டான். பிறகு அனுஷாவின் சவத்தை எப்படி மாயம் பண்ணுவது என்பதை குண்டப்பாவிடம் விட்டு விட வேண்டும். இந்த விஷயத்தில் அவனை முழுவதும் நம்பலாம்.

அதனால்— இத்திட்டத்தில் எங்குமே எந்தக் குறையும் இல்லை. பண்ணவேண்டிய காரியங்களை இவ்விதமாய் ஒவ்வொரு கோணத்திலிருந்தும் நன்றாய் பரிசோதித்துப் பார்த்துவிட்டு திருப்தியடைந்தான் தாதா. மிக நுணுக்கமாய் திட்டத்தைத் தீட்டுவதால்தான் ஷெர்வாரிலால் வசந்த் தாதா ஆக முடிந்தது.

# 41

யுமின்சுன் யோசித்தார்—இந்த மாஃபியா திட்டத்தை எப்படி வெளிப்படுத்துவது என்று! சரியாய் எந்த சமயத்தில் ஆள் மாறாட்டம் நிகழும் என்பது தெரியாது. அவர் உறுதி யெல்லாம் சங்கரை எப்படியாவது தன்னோடு ஜப்பானுக்குக் கூட்டிச் சென்றுவிட வேண்டும் என்பதுதான். நடுவில் கை நழுவிவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்!

சங்கர் இந்தியாவில் ஏதாவது சாக்கிட்டுக்கொண்டு தொடர்ந்து தங்கிக்கொண்டே இருக்கக்கூடாது என்றுதான் அவர் லஞ்சம் வாங்குவதுபோல நடித்தார். விமான நிலையம் வரையிலும் இந்த ஆள் மாற்றம் நடக்காது என்று அவர் அறிவார். விமான நிலையத்திற்குள் இருவரும் இறங்கிய அடுத்த நிமிடத்திலிருந்து சங்கரின் மேல் ஒரு கண் வைத்துக் கொண்டேயிருந்தால் போதும். அவ்வளவு பேர் கூடியிருக்கும் ஜனக்கூட்டத்திற்கிடையே எந்த மாஃபியா தலைவனாகத்தான் இருக்கட்டுமே, தன்னிடமிருந்து சங்கரை மீட்டு அழைத்துச்சென்று விட முடியாது என்று நம்பினார். தன் போலீஸ் அனுபவத்தின் மேல் அவருக்கு அத்தனை நம்பிக்கை. ஜப்பானுக்குப் போய்விட்டால் போதும், அதற்குப் பிறகு சங்கரின் கொட்டத்தை எப்படி அடக்க வேண்டும் என்று அவருக்கு நன்றாய் தெரியும். அங்கேயானால் மாஃபியா அத்தனையும் சேர்ந்து வந்து எதிர்த்தாலும் அவரை ஒன்றும் பண்ணிவிட முடியாது. தானே முன்னின்று சங்கரைத் தூக்கு மேடைக்கு அனுப்பி வைத்துவிடுவார். அவ்வாறு பண்ணாமல் போனால் அது தன் போலீஸ் தொழிலுக்கே பெருத்த அவமானம். இது அவருக்கு ஒரு சவால். விமானத்தில் குண்டு வைக்கப்படவிருக்கும் விஷயம்வரையிலும் அவர் யோசித்துப் பார்க்கவில்லை.

விமான நிலையத்திற்குப் போக வேண்டிய நேரம் நெருங்க, அந்த ஆபீசர் சங்கரைத் தன் பார்வையிலிருந்து மீண்டுவிடாமல் ஜாக்கிரதையாய் பார்த்துக் கொள்ளத் தொடங்கினார்.

இறுதியில் எதிர்பார்த்த அந்த நேரம் வந்து சேர்ந்தது.

போலீஸ் பந்தோபஸ்துடன் விமான நிலையத்திற்குக் கிளம்பினார்.

சுங்கப் பரிசோதனை முடிவடைந்ததுமே எஞ்சிய அதிகாரிகளிடமிருந்து விடைபெற்றுக் கொண்டு அவர் சங்கரோடு சேர்ந்து பயணிகளின் உள் லவுஞ்சிற்குள் நுழைந் தார். விமானம் கிளம்பத் தயாராயிருந்தது அறிக்கை மூலம் தென்பட்டது.

வசந்த் தாதாவின் கார் மருத்துவமனையிலிருந்து புறப் பட்டது. டிரைவர் மெதுவாய் ஓட்டிக்கொண்டிருந்தான். பின் சீட்டில் தாதா உட்கார்ந்திருந்தான். அவனுக்கருகிலேயே சங்கருக்கு பதில் போகவிருந்த பில்வனும் உட்கார்ந்திருந் தான். வயது வளர்ந்தாலும் மனம் வளர்ச்சியடையாத சிறு வனைப் போல முடுக்கிக் கொண்டு உட்கார்ந்திருந்தான். அதற்குக் கொஞ்ச நேரத்திற்கு முன்னால்தான் தாதா என்ன சொன்னாலும் அப்படியே நடந்துகொள்ள வேண்டும் என்று டாக்டர் தந்த அரிவுரையைக் கேட்டுச் சிறு பையனைப்போல சரி என்று தலையாட்டிவிட்டு வந்திருந்தான்.

அவனைப் பார்த்தபோது வசந்த் தாதாவிற்கு எந்தத் தொல்லையும் வராது என்ற நம்பிக்கை ஏற்பட்டது. கார் விமான நிலையத்திற்கு முன்னால் வந்து நின்றது. எதிர் பார்த்தாற்போலவே அங்கே ஒரு அதிகாரி அவர்களுக்காகக் காத்திருந்தார். ''என்ன ஆச்சு?'' காரை விட்டிறங்கியபடியே தாதா கேட்டான்.

"அவங்களும் இப்பத்தான் உள்ளே போனாங்க. இன்னும் பத்து நிமிடத்தில் நாம்ப திட்டமிட்டிருக்கிற இடத்துக்கு வந்துசேருவாங்க. இப்படி வாங்க, நாம்ப இந்த பக்கமாய் போகணும்" என்று ஒரு பக்கமாய் கூட்டிச் சென்றார். விமான நிலையத்தில் மிகவும் செல்வாக்குள்ள அதிகாரிஅவர். அவரை யாரும் தடுக்க முடியாது. இக்காரியம் பண்ணித் தந்தால் அவருக்கு கணிசமான தொகை கிடைக்கும்.

தாதா, பில்வனின் தோளில் கை வைத்து, "வா" என்றான். பில்வன் அவனை அனுசரித்துச் சென்றான்.

இவ்விருவரும் காரிலிருந்து இறங்கியதையும், பிறகு விமான நிலையத்துக் கட்டிடத்திற்கிடையே இருந்த ஒரு இடுக்கான சந்து வழியாய் உள்ளே நுழைந்ததையும் தொலைவில் இன்னொரு காரிலிருந்தபடி பார்த்தாள் அனுஷா.

வசந்த் தாதா ஜப்பானுக்கு அனுப்பப்போகும் இளைஞன் சம்பந்தப்பட்ட சாமான்கள் யாவும் 'ஓ.கே' ஆகி விமானத்தை அடைந்தது.

சேரவேண்டிய வெடிகுண்டும் விமானத்திற்குள் போய்ச் சேர்ந்து விட்டது.

அந்த சாமானை 'ஓ.கே' பண்ணிய அதிகாரி—வசந்த் தாதாவின் திட்டத்தில் பங்கேற்றுக்கொண்டிருந்த நான்கு அதிகாரிகளுள் இறுதியானவர்.

சதுரங்கத்து எல்லாக் காய்களும் கடைசி தசையைப் போய்ச் சேர்ந்தாகி விட்டது.

அனுஷா போட்ட திட்டத்தில் எங்கேயோ ஏதோ தவறாகி விட்டதாய் தோன்றிற்று ரஜினிக்கு. அது என்னவென்று தெளிவாய் புரிபடவில்லை முக்கியமாய் சங்கர் அத்தனை அஜாக்கிரதையாய் விமானத்தில் ஏறிவிடமாட்டான். அதைத்தான் அவளிடம் சொல்லப் போனான். ஆனால்

அவள் திட்டத்தை பில்வனும் ஒப்புக்கொண்டதால் ரஜினிக்கு என்ன பண்ணுவதென்று புரியவில்லை. சாதாரண மாய் எப்போதும் தன் பேச்சைத் தட்டாத பில்வனும் கூட இம்முறை அவள் பக்கமே இருந்ததால் அவனால் ஒன்றுமே பேசமுடியவில்லை.

ஒருகால் அனுஷாவின் திட்டம் வெற்றியடைந்து, பில்வனே விமானத்தில் ஏறவேண்டியிருந்தால்—அந்த நேரத்தில் அவனுக்கருகில் தானும் இருப்பது அவசியம் அதிகம் போனால் பத்தாயிரம் செலவாகலாம். கடைசிவரை யிலும் போகத் தீர்மானித்தான் ரஜினி.

ஆள் மாற்றம் லவுஞ்சிற்குள்தான் நடக்கும் என்பதைச் சொல்லித் தெரியவேண்டியதில்லை!

அது வரையிலும் போக வேண்டுமானால் ஜப்பானுக்கு டிக்கெட் வாங்கினால்தான் உண்டு.

யு மின் சுன்னும்—சங்கரும் எஞ்சிய பயணிகளோடு சேர்ந்து செக்யூரிட்டிக்குள் நுழைந்தபோது ரஜினியும் தொலைவிலிருந்தபடியே அவர்களைத் தொடர்ந்து வந்தவன் பிரயாணிகளின் லவுஞ்சிற்குள் நுழைந்தான்.

பிறகு ஒரு செய்தித்தாளை எடுத்து முகத்தை மறைத்துக் கொண்டு அங்கிருந்த நாற்காலியில் உட்கார்ந்தான்—விமானம் கிளம்பப் போகும் அறிவிப்பை எதிர்பார்த்தபடி.

இரண்டு நாட்களாய் அகப்பட்ட பயங்கரவாதிகளை விசாரணை செய்து கொண்டேயிருந்தான் ஸ்ரீகாந்த். டில்லி வேலைக்கும் இதற்கும் நிறைய வித்தியாசமிருந்தன. டில்லி யிலிருந்த குற்றவாளிகள் ஒரு தனிப்பட்ட ரகம். திட்டம், திட்டத்திற்கு மேல் திட்டம், ஜாமீன்கள், சதிகள், செல்வாக்கு—இவைகள் பஞ்சாபில் இல்லை. இங்கே குற்ற வாளிகளுடன் யுத்த ரீதியில்தான் போராட்டம் நடக்கிறது. சாதாரண இலாக்காவில் இருக்கும் லஞ்சம், சிகப்பு நாடா

போன்றவை இங்கே செல்லாது. உயிரை விட்டு வைப்பதா வாங்குவதா...அவ்வளவே!

ஸ்ரீகாந்திற்கு எல்லாவற்றைக் காட்டிலும் பிடித்த விஷயம் சாவிரோவின் கீழே வேலை பண்ணுவதுதான். பம்பாய் மா:ஃபியாவை ஒரு கலக்குக் கலக்கிவிட்டு பஞ்சாப் வந்த போலீஸ் அதிகாரி அவர்.

கடைசியாய் ஸ்ரீகாந்த் விசாரித்த நபர் மகா அழுத்தம் எந்த கேள்விக்கும் பதிலளிப்பதில்லை.

# 42

பன்னிரெண்டாம் நாள் ஸ்ரீகாந்த் வெற்றியடைந்தான். வெளிவந்த விஷயங்கள் எல்லாம் சாதாரணமானவையே. பாகிஸ்தானில் பயிற்சி, காஷ்மீர்—ராஜஸ்தான் வழியாய் உள்ளே நுழைவது, அப்பாவிகளைக் கொன்று குவிப்பது, பீதியை உண்டாக்குவது, பாங்குகளைக் கொள்ளையடிப்பது...இந்த கடைசி விஷயத்தைக் கேட்டு விட்டு ஸ்ரீகாந்த் சட்டென்று விசாரித்தான்.

"எதுக்காக பாங்குகளில் கொள்ளையடிக்கணும்?"

"பணத்துக்காக."

"அது எனக்கும் தெரியும். ஆனால் அவ்வளவு பணம் தேவையில்லையே?"

"ஆயுதங்களுக்காக" என்று பதிலளித்தான்.

"பாகிஸ்தான் தரதில்லையா?"

"தருவது போதவில்லை."

''இந்நாட்டில் உங்களுக்கு எங்கே விற்கிறாங்க அவைகளை?''

''போர்ப்பந்தரில்''

''அவை வீடுகளில் தயாரிக்கப்பட்டவை. பெருமளவில் எங்கே கிடைக்கிறது?''

பதிலில்லை.

போர்ப்பந்தரில் கிடைக்கும் ஆயுதங்களுக்காக அவ்வளவு பணம் தேவையில்லை.

''சொல்லு''

''...''

''உல்லாஸ்பூரில் இருக்கும் துப்பாக்கித் தொழிற்சாலையிலிருந்து ரகசியமாய் விற்கிறாங்க.''

ஸ்ரீகாந்த் திடுக்கிட்டான். அந்தத் தொழிற்சாலை பகவதாருடையது! மாஜி மந்திரியின் மிக நெருங்கிய சிநேகிதன் என்று மக்களால் பரவலாய் பேசப்பட்டு வந்த பகவதார்—குறுக்கு வழியில் பண்ணுகிற வேலை இதானா?

''உங்களுக்கு அந்த ஃபேக்டரி வழியாய் ஆயுதங்களைக் கொண்டு வருவது யார்?...''

''எனக்குத் தெரியாது''

''தெரியாதா?''

''தெரியாது''

''தெரியும்'' சொல்லு.''

''தெரியாது. அந்த ஃபேக்டரியிலேயிருந்து ஆயுதங்கள் வருவதாய் என்னோடு வேலை பண்ணுகிறவங்க பேசிக்கிட்டதைக் கேட்டேன். அவ்வுளவுதான்.''

'ஆனால் நடுவில் தரகர் யாராவது இருந்து தீரணும். இந்த மாதிரி காரியங்களை நேராய் பண்ணமாட்டாங்க யாருமே. யார் தரகர்?'' பாதியை மட்டுமே சொல்லிவிட்டு மீதி எதுவுமே தெரியாது என்று நம்பவைப்பது இந்த தீவிர வாதிகளுக்கே உரிய தந்திரம்.

''வசந்த் தாதான்னு...டில்லியில்... இருப்பாரு அவரு... மூல...மாய்...'' பலவீனமாய் ஒவ்வொரு வார்த்தையாய் வெளிவந்தன.

முதல் வார்த்தைக்கே அதிர்ச்சியடைந்து விட்டிருந்த ஸ்ரீகாந்த் தொடர்ந்து அவன் சொன்னதைக் கேட்கவே யில்லை. தா...தா... வசந்த தாதா!

அகப்பட்டுவிட்டான்! இவ்வளவு நாளாய் டில்லியில் கண்ணாமூச்சியாடியபடியே ஒவ்வொரு முறையும் தப்பித்துக் கொண்டு விட்ட தாதா—ஒரு தேசத்துரோகம் என்ற குற்றத்தின் கீழ் கையும் களவுமாய் பிடிபட்டுவிட்டான். பெரிய தண்டனையிலிருந்து தப்பிக்க முடியாது. உண்மை யிலேயே மிகப் பெரிய தண்டனை...

ஸ்ரீகாந்த் உற்சாகத்தோடு தலைமை அதிகாரியிடம் போனான். சாவிரோ அறைக்குள் ஏதோ ஃபைலைப் பார்த்துக் கொண்டிருந்தார். ''இந்தத் தீவிரவாதிங்களுக்கு ஆயுதங்களை சப்ளை பண்றவன் வசந்த் தாதா! இவை தயாரிக்கப்படுவது பகவதார் தொழிற்சாலையில்... உல்லாஸ்பூரில் இருக்கிறது அந்த ஃபேக்டரி...'' உணர்ச்சி வசப்பட்ட குரலில் பரபரக்கச் சொன்னான் ஸ்ரீகாந்த்.

சாவிரோ நிமர்ந்தார். அவர் கண்களில் ஒளியில்லை. ஸ்ரீகாந்த் சொன்ன வார்த்தைகள் அவருள் எந்த மாற்றத்தை யும் உண்டாக்க வில்லை. கையிலிருந்த ஃபைலை அவனுக்கு முன்னால் தள்ளிவிட்டு, ''ஒரு மணி நேரத்திற்கு முன்பா யிருந்திருந்தால் நீ சொன்னதைக் கேட்டு குதித்துக் கும்மாள மிட்டிருப்பேன் ஸ்ரீகாந்த்! ஆனால் இப்பொழுதோ...ஊஹூம்

ஒரு லாபமுமில்லை. இந்த ஃபைலைப் படித்துப்பார். இப்பத் தான் வந்தது நமக்கு சி. பி. ஐ. யிடமிருந்து'' என்றார்.

ஸ்ரீகாந்த் படிக்கத் தொடங்கினான்.

''பகவதார் தொழிற்சாலையிலிருந்து துப்பாக்கிகள் லைசென்ஸ் கொடுக்கப்பட்ட விகிதத்தைக் காட்டிலும் அபரிமிதமாய் தயாரிக்கப்படுவதாய் சி. பி. ஐ. க்கு செய்தி கிட்டிற்று. ரகசியமாய் புலன் விசாரித்துப் பார்த்தபோது அது உண்மைதான் என்று தெரிந்து அந்த ஃபேக்டரியை சோதனை போடுதல் நிகழ்ந்தது. பகவதார் மாஜி மந்திரிக்கு நெருங்கியவரானதால் இச்செய்தி கூட ரகசியமாய் வைக்கப்பட்டது. இதற்குள் அரெஸ்ட் ஆகிவிடாமல் பகவதார் ஜாமீன் வாங்கிக் கொண்டுவிட்டார். இந்த அபரிமிதமான துப்பாக்கிகள் என்னவாகின்றன என்று தெரியவில்லை. பகவதார் தற்சமயம் அரசாங்க விருந்தினராய் ஃபிரான்சிற்குப் போயிருக்கிறார்!''

ஸ்ரீகாந்தின் முகம் வாடிவிட்டது. ஆனால்...ஆனால் இந்த சதியில் வசந்த் தாதாகூட இருக்கான் சார்'' என்றான்.

''ஆனாலும் ஒண்ணும் பண்ண முடியாது நம்மால்! இந்த ஒரு தீவிரவாதியின் சாட்சி மட்டுமே போதாது. அவ்வளவு தூரம் எதற்கு? பகவதார் பேக்டரியில் ஆயுதங்கள் கிடைத்திருக்கின்றனவே! என் அனுபவத்தில் சொல்றேன். நாலைந்து மாதங்களுக்குள் இந்த கேசிலிருந்து பகவதார் தப்பி வெளிவந்துவிடுவார்! அந்தத் துப்பாக்கிகளின் உதிரி பாகங்களை இறக்குமதி பண்ணுவதற்குத் தனக்கு அனுமதி இருப்பதாய் பத்திரங்களைக் காட்டுவார். பஞ்சாப் தீவிரவாதிகளுக்கும் தனக்கும் எந்த சம்பந்தமுமில்லை என்பார், இனி வசந்த் தாதாவைப் பற்றி சொல்கிறாயா? பகவதாரைப் போன்ற மூல புருஷர்களே தப்பித்துக் கொண்டு விட்டபோது, தரகரான இந்த தாதா தப்பித்துக்கொள்ள எவ்வளவு நேரம் பிடிக்கப் போகிறது...''

சாவிரோ சொன்னது உண்மைதான் என்று தோன்றிற்று ஸ்ரீகாந்திற்கு! தீவிரவாதிகளுக்கு பகவதார் ஃபேக்டரியி லிருந்து ஆயுதங்கள் போய்ச் சேருவது தெரிந்திருந்தும் அரசாங்கம் என்ன செய்கிறது? நாட்டுப் பாதுகாப்புச் சட்டத் தின் கீழ் அவர்களைக் கைது பண்ணுகிறது. லைசென்சை கான்சல் பண்ணிவிடுகிறது. வழக்கு நீதி மன்றம் போகிறது. பிறகு சாவிரோ சொன்ன வார்த்தைகள் உண்மையாகின்றன.

பகவதார் வழக்கு குறைந்த பட்சம் நீதிமன்றம் வரையிலு மாவது போகும். தாதாவுடையதோ அது வரையிலும் கூட போகாது. ஒரு தீவிரவாதியின் வாய்ச்சொல்லை மட்டுமே ஆதாரமாய்க்கொண்டு வேறு எந்த சாட்சி ஆதாரங்களு மில்லாமல் தாதாவைக் கைது செய்வதென்பது இயலாத காரியம், ஸ்ரீகாந்த் தளர்ந்து விட்டான். எழுந்து ''எனக்கு ஒரு மூணு நாள் லீவு வேணும் சார்'' என்றான்.

''எதுக்கு?''

''சொந்த வேலை இருக்கு''

''எப்போதிலிருந்து வேணும்?''

''இந்த நிமிஷத்திலிருந்தே''

சாவிரோ அவனை விநோதமாய் பார்த்துவிட்டு, ''சரி எடுத்துக்கோ,' என்றார்.

ஸ்ரீகாந்த் வெளியே வந்தான்.

சூழ்நிலையானது எதிர்க்கும் போது மனிதன் சிலசமயம் 'பிரேக்' ஆகிவிடுகிறான்—சைனியங்கள் எதிரியின் பாசறையில் அவஸ்தைப் படுவது போல...

எவ்வளவோ விதமாய் முயற்சி செய்து பார்த்துவிட்டு தாதாவை ஒன்றுமே பண்ணமுடியாத அந்த நேர்மையான போலீஸ் ஆபீசர் அந்த நேரத்தில் அவ்வாறு 'பிரேக்' ஆகி இந்த முடிவிற்கு வந்தான்.

ஆபீசில் லீவு லெட்டரை எழுதிக் கொடுத்துவிட்டு 'லீவிற்குக் காரணம்' என்றிருந்த இடத்தில் ''யுத்தம்'' என்று எழுதினான் அவன்.

அதுதான் தன் கடைசி லீவு லெட்டர் என்று அவனுக்குத் தெரியும்.

சண்டிகாரிலிருந்து ஸ்ரீகாந்தின் கார் மெதுவாய் டில்லியை நோக்கிப் போய்க்கொண்டிருந்தது, அவனும் அதே போல அமைதியாயிருந்தான். சாலிரோவின் வார்த்தைகள் அவன் செவிகளில் ஒலித்துக் கொண்டேயிருந்தன. ''யுத்த நீதி மிகச் சுலபமானது. அமைதியில் தண்டனை கூட கஷ்டந்தான்...தண்டனைகூட க...ஷ்..ட..ந்...தா...ன்''

அதனால்தான் ஒரு தீர்மானத்திற்கு வந்துவிட்டான் அவன். இரண்டு துப்பாக்கிக் குண்டுகள் போதுமானவை! இருட்டுலகத்து மன்னனான—இந்திய நாட்டு எல்லைகளைக் கூடத் தன் சுயநல வியாபாரத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளும் சாமர்த்தியசாலியான வசந்த் தாதாவைப் பரலோகத்திற்கு அனுப்பி வைப்பதற்கு...மனித உரு தரித்த அரக்கனான ஒரு கயவனிடமிருந்து நாட்டைக் காப்பாற்றுவதற்கு...

எந்த நீதிமன்றமும் தேவையில்லை.

யுத்தம் என்றால் இதுதான்! ஒரு போலீஸ் ஆபீசராய் இல்லை—ஒரு சுதந்திர இந்தியக் குடிமகனாய் தாதாவைக் கொன்று விடுவான்! அவனுக்கு பத்து அல்லது பதினான்காண்டுகள் தண்டனை கிடைக்கலாம்! கிடைக்கட்டும்! அவனை வேலையிலிருந்து தள்ளி விடுவார்கள். அவனுக்கு எதிர்காலமே இல்லாமல் போய்விடும்! போகட்டும்! அவன் போலீஸ் ஆபீசராய் இருந்தபோது அவனைத் தண்ணீர் இல்லாத காட்டிற்கு மாற்றி ஓட ஓட விரட்டியவன் இந்த தாதா! நீதிமன்றங்களைச் சுற்றிச் சுற்றி வரச்செய்தவன். பந்தாய் உருட்டினான் அவனை அதற்கு இவ்வளவு சிறிய

பரிகாரத்தைப் போல இம்மாதிரி ஒரு நீதியிருப்பது அவனுக்கு இவ்வளவு நாள் தெரியாமல் போனது துரதிருஷ்டந்தான்!

இந்த நாட்டில் யாராவது ஒருத்தராவது இதனைச் செய்தித்தாளில் படித்துவிட்டு, அவன் செய்த இக்காரியம் நல்லது என்று மெச்சுவார்களா? போலீஸ் ஆபீசரே சட்டத்தைத் தன் கையில் எடுத்துக் கொண்டு விட்டார் என்று அவன் மேல் வெறுப்படைவார்களா!...இல்லை இல்லை. அம்மாதிரி ஒருநாளும் நடக்காது. யாராவது ஒருத்தராவது இல்லாமல் போக மாட்டார்கள.

அதுவரையிலும் தாதாவை அவனால் மன்னிக்க முடிந்தது. நாட்டின் நன்மைக்குக் குந்தகம் வந்ததைப் பார்த்துவிட்டு அவனால் சும்மாயிருக்க முடியவில்லை.

அவன் கார் பம்பாயிலிருந்த தாதாவின் இருப்பிடத்திற்கு முன்னால் வந்து நின்றது. தாதா டில்லியிலிருந்து பம்பாய்க்கு வந்திருக்கும் விஷயம் அவனுக்கு அதற்கு முன்பே தெரியும். தாதா எந்த ஊரில் இருக்கிறான் என்று தெரிந்து கொள்வது ஒரு போலீஸ் ஆபீசரான அவனால் முடியாத காரியமா? பம்பாயில் மட்டும் தாதாவின் சங்கதியை எவ்வளவு முயன்றும் தெரிந்து கொள்ளமுடியவில்லை. ஊரில் இருக்கிறான் என்ற விஷயம் மட்டும் திட்டமாய் தெரிந்தது.

மருத்துவமனைக்குப் போனதையும் அங்கிருந்து விமான நிலையத்திற்குப் போனதையும் தாதா மிக ரகசியமாய் வைத்திருந்தான். இந்த ஆபரேஷனின் முழு விஷயமும் இரண்டு மூன்று பேரைத் தவிர வேறு யாருக்குமே தெரியாது. ஸ்ரீகாந்த் நிராசையடையவில்லை. தாதா இன்றில்லாவிட்டால் நாளைக்குக் கிடைத்துவிடுவான். கொல்லத் தீர்மானித்து விட்ட பிறகு அவசரம் எதற்கு? அவன் மனம் லேசாயிருந்தது. தாதாவின் இருப்பிடத்திலிருந்து வீட்டை நோக்கி அவன் போய்க் கொண்டிருந்த போது வழியில் தென்பட்டான் பழைய கைதி...குண்டப்பா.

# 43

பழங்காலத்துப் பூட்டாயிருந்தது அது. திறந்து எவ்வளவோ நாட்களாயிருக்கும் போலிருந்தது.

தாதாவுடன் வந்த அதிகாரி அதைத் திறந்து அவ்விருவரையும் உள்ளே அனுப்பி வைத்தார். திரும்பிப் போகும் போது தாதாவிடம் சொன்னார்—''நீங்களும் சங்கரும் இதே வாசல் வழியாய் வெளியே வந்துடுங்க. நான் வெளியே கொஞ்ச தூரத்தில் நின்னுட்டிருக்கேன். நீங்க வெளியே வந்ததும், சகஜமாய் வந்து பூட்டிட்டு நான் போயிடறேன். இங்கேயிருந்து கார் வரையிலும் போக முயற்சியுங்கள். என்னோடு மேற்கொண்டு பேசத்தேவையில்லை. நாம் அப்புறமாய் சந்தித்துக்கொள்வோம்.''

தாதா தலையாட்டினான்.

இருவரும் உள்ளே போனதும் கதவை வெறுமே சாத்திவிட்டு தொலைவிலிருந்த தன் காருக்குப் பக்கத்தில் போய் நின்று கொண்டார் அந்த அதிகாரி.

தாதா நேரத்தைப் பார்த்துக் கொண்டான். சரியாய் இரண்டு நிமிடங்களில் சங்கர் அங்கே வரவேண்டும். நுழை வாயிலிலிருந்து எல்லா சோதனைகளும் முடிவடைந்து, பிரயாணிகள் உள்ளேயிருந்த ஹாலுக்கு வந்து சேர்ந்து விட்ட சந்தடியானது சுவருக்கப்பாலிருந்து கேட்டு கொண்டிருந்தது.

தொலைவில் கண்ணாடி வழியாய் ஜப்பானுக்குப் போகும் விமானம் தென்பட்டது.

அந்த பயணிகளுக்கும் இவர்களுக்குமிடையே ஒரு சுவரும், கதவும் மட்டுமே குறுக்கேயிருந்தன. அவ்விருவரும்-

இருந்தது ஒரு காலத்தில் ஸ்டோர் ருமாயிருந்ததால் அரை யிருட்டாயிருந்தது.

சங்கர் வர இன்னும் ஒரு நிமிடந்தான் இருந்தது. அந்த நடுக்கதவைக்கூடத் திறந்து வைக்க ஏற்பாடு பண்ணியிருந் தான் தாதா. எல்லாம் திட்டப்படியே நடந்து முடிந்து விட்டது.

தாதா திரும்பி, தான் மருத்துவமனையிலிருந்து கூட்டி வந்திருந்த ஆளைப் பார்த்தான். அந்த இருட்டில் பார்த்த போது அவனது உயரம், பருமன்—எல்லாம் சங்கரைப் போலவே தென்பட்டன. தாதாவின் கண்களில் திருப்தி.

''ரகளை எதுவும் பண்ணக்கூடாது, உன்னை ஒரு இடத் துக்குக் கூட்டிட்டுப் போவாங்க. ரகளை பண்ணாமல் போகணும்'' என்றான் சிறு பையனுக்குச் சொல்வது போல.

அதுவரை ஒவ்வொன்றிற்கும் சிறுவனைப்போல தலை யாட்டிக் கொண்டே வந்த அந்த இரட்டை நாடி ஆள் இம் முறை தாதாவின் காதில் விழுமாறு மெல்லிய குரலில் ஒரு பாடலைச் சொன்னான்.

அதுவரையில் சலசலப்பில்லாமலிருந்த அவ்விடத்தில் திடீரென்று எரிமலையொன்று வெடித்தாற்போல தாதா அதிர்ந்து விட்டான். ஒரு வினாடி ஒன்றும் புரியாமல் குழப்பத் தோடு திரும்பிப் பார்த்தான், அது பாடலா, புலம்பலா, பைத்தியக்காரனின் பேச்சா ஒன்றும் புரியவில்லை.

அதற்குள் பில்வன் சொன்னான். ''என்னைப் பைத்தியக் காரன்னு நினைச்சுட்டிருக்கிற ஓ பைத்தியக்காரனே! அந்த பாடலுக்குப் பொருள் சொல்றேன் கேளு—மழைக்காலத்தில் ஆனந்தமாய் நாட்டியமாடவல்ல மயில் கோடைக்காலம் வந்துவிட்டால் கத்தக்கூட முடியாமல் போயிடுமாம். போற காலம் வந்துட்டால் மனிதன் போடுகிற பிளான்கள் கூட அப் படித்தான் இருக்கும்! எங்க ரஜினி சொல்லுவான்—வெற்றி உன்னுடைய கண்களுக்கு முன்னால் மயக்கத் திரையைப்

போட்டுடுமாம்! அந்த விதமான மயக்கத்தில் ஆழ்ந்துபோய் பெரிய மா:ஃபியா லீடராயிருந்தும்கூட என்ன பண்றோம்னு உனக்கே தெரியாமல் இவ்வளவு முட்டாள்தனமான பிளான் போட்டுட்டாய்?''

''யா...யாரு நீ?'' தாதா கேட்டான்.

''இன்னும் ஒரிரண்டு நிமிடங்களில் சங்கர் வந்துடுவா னில்லையா? அவனையே கேட்டுக்கோ! காத்திட்டிரு'' என்றான் பில்வன்.

தாதாவின் பார்வை வெளியே செல்லும் வாசலைப் பார்த்ததைக் கவனித்த பில்வன் சிரித்தான். ''உன்னிடம் ஆயுதம் இல்லை. என்னிடமும் இல்லை, செக்யூரிட்டி பரிசோதனை எல்லாம் முடிந்துவிட்டது. அதனால் சங்கரிடம் கூட இருக்காது! பார்ப்போம். யார் ஜெயிக்கிறாங்கன்னு... அதுவரையிலும் உன்னால் வெளியே கூட போக முடியாது தாதா. இதுதான் அனுஷாவின் பிளான்...ஏதோ ஒன்று முடிவுக்கு வந்துடக்கூடிய பிளான்.''

''அனுஷாவா...அனுஷாவா?''

''ஆமாம்.''

தாதாவையும் சங்கரையும் பற்றி எல்லாரும் குறைவாய் எடை போட்டது இந்த இடத்தில்தான். கடைசி தருணத்தில் யுமின்சுன் எதிர்த்து நிற்கலாமென்றும், தான் வெளியே போக சம்மதிக்காமல் போகலாம் என்றும் முதலிலிருந்தே சங்கருக்கு சந்தேகம் இருந்தது. அந்த சந்தேகத்திற்கு வசந்த் தாதாவும் கொஞ்சம் உரமூட்டினான் என்று சொல்ல வேண்டும். ஜப்பான் விமான நிலையத்தில் மா:ஃபியா, சங்கரைச் சுட்டுத் தள்ளிவிடும் என்று தாம் சொன்ன வார்த்தைகளை யுமின்சுன் முற்றிலும் நம்பினாரோ இல்லையோ தெரியாது. ஒருக்கால் அவ்வாறு நடந்தாலும் போஸ்ட் மார்ட்டத்திற்கு முன்னால் இறந்தது சங்கரில்லை

என்று உறுதியாகிவிட்டால். யுமின்சுன் குறைந்தது பத்து வருடமாவது ஜெயில் தண்டனையை அனுபவிக்க வேண்டி வரும். அவ்வளவு ஆபத்தை விலைக்கு வாங்கிக் கொள்வாரா அவர்? தாதாவுக்கு முற்றிலும் நம்பிக்கை ஏற்படவில்லை.

தாதா சந்தேகப்பட்டாற்போலவே—பயணிகளின் லவுஞ்சிலிருந்து சங்கர் எழுதியிருந்து கிளம்ப முற்படுகையில் யுமின் சுன் போகவிடாமல் போக்குக்காட்டத் தொடங்கினார். சங்கர் அதைப் பார்த்து ஆச்சரியம் எதுவும் அடையவில்லை. இந்த மாதிரி ஏதாவது நடக்கும் என்று முன்பே ஊகித்திருந்தான் அவன்.

''இதெல்லாம் உன்னை ஜப்பானுக்குக் கூட்டிச் செல்வதற்காகப் போட்ட பிளான்தான் சங்கர்! நான் மட்டும் இந்த மாதிரி நடித்திருக்காவிட்டால் –நீ இந்திய நீதி மன்றத்திலேயே ஒன்றையடுத்து இன்னொரு கேசாய் போட்டுட்டு இங்கேயே தங்கிடுவாய்னு தெரியும் எனக்கு.''

யுமின்சுன் இதெல்லாம் அனுஷாவின் பிளான் என்று சொல்லவில்லை. அப்படிச் சொல்லிக் கொள்வதற்கு அவருடைய அதிகார மனோபாவம் இடங்கொடுக்கவில்லை. சங்கரின் முகம் வெளுத்தது. யுமின்சுன் சிரித்தார். சங்கர் திரும்பிவந்து அவர் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டான்.

''நீ என்ன யோசிக்கிறாய்னு எனக்குத் தெரியும் சங்கர்! என்பேரில் ஸ்விஸ் பேங்கில் பணத்தைக் கட்டியதைப் பற்றித் தானே? அதைப்பற்றி எங்க அதிகாரிகளுக்கு நானே சொல்லிடப்போறேன்.''

சங்கர் கைக்கடியாரத்திற்குப் பின்னாலிருந்து சிறிய ஊசியொன்றை வெளியே எடுத்ததை அவர் கவனிக்கவில்லை.

''இனி உங்க மாஃபியாவைப் பற்றித்தானே?...எங்க ஜப்பான்காரங்களோடு ஒப்பிட்டால் அதொன்றும் அத்தனை

பயங்கரமானதில்லை. அதை எப்படி எதிர்த்து நிற்பதுன்னும் எனக்கு நன்றாய் தெரியும்.''

சங்கர் நாற்காலியின் கைமேல் இருந்த தன் கையை நீட்டினான். யுமின்சுன்னின் தோள் அவன் கைக்கெட்டும் தூரத்தில் இருந்தது.

''ஒருக்கால் மாஃபியா என் உயிரை எடுத்தாலும் ஒரு மனித உரு தரித்த அரக்கனைத் தூக்கு மேடை ஏற்றினே னேன்னு திருப்தியாவது அடைவேன். போலீஸ் இலாக்க விலேயே என்னைப் போன்றவங்க ரொம்ப அ...பூ...ர்...வ... னு...வை...சு...க்......கோ...''

யுமின்சுன்னின் தலை சாய்ந்தது. ஐந்து நிமிடங்கள் வரை அவருக்கு நினைவு திரும்பாது.

அப்பொழுதுதான் முதல் முறையாகச் சிரித்தான் சங்கர். மிகவும் கைதேர்ந்தவனாய், கொஞ்சமும் தடுமாறால் சர்வ சாதாரணமாய் எழுந்து வராந்தா பக்கம் வந்தான். பிரயாணி களில் யாராவது யுமின்சுன்னைப் பார்த்தாலும் -- விமானத் திற்காகக் காத்திருந்தபடி அவர் கண்களை மூடிக்கொண்டிருப் பதாய் நினைத்துக் கொள்வார்களேயன்றி தற்காலிகமாய் மயக்கத்தில் ஆழ்ந்து விட்டார் என்று மட்டும் எண்ணிக் கொள்ளமாட்டார்கள்.

சங்கர் விடுவிடென்று ஆள் அரவமில்லாத அந்த வராந் தாவைத் தாண்டி பின்பக்கத்திற்கு வந்தான். அங்கிருந்த இருவரையும் பார்த்ததுமே அவன் முகம் மலர்ந்தது.

''தாதா! யுமின்சுன்னுக்குப் பக்கத்தில் இந்த ஆளை உட்கார வைக்கணும்'' என்றான். அவன் உத்தேசம் என்ன வென்றால் அந்த போலீஸ் அதிகாரிக்கு நினைவு வந்ததுமே அருகிலிருக்கும் ஆளைப்பார்த்து வேறு வழியின்றி தன் மதிப்பைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அவனையே கூட்டிச் செல்ல முயற்சிப்பார் என்பது தான்!

வழியில் விமானம் எப்படியும் எரிந்துவிடப் போவதால் அத்துடன் கேஸ் முடிவடைந்து விடும்.

''சீக்கிரமாய்...அவனுக்கு விழிப்பு வந்துடப் போகுது சீக்கிரம்.''

தாதா ஓரடி முன்னோக்கி வைத்தான். வென்ட்டிலேட்டரி லிருந்து வெளிச்சம் வந்து அவன் முகத்தின் மேல் விழுந்தது. ஒரு விதமான தர்மசங்கடமான உணர்ச்சியை, ஏதோ சொல்ல வந்ததை சொல்ல முடியாமல் தவித்தாற் போன்ற உணர்ச்சியை தாதாவிடம் கண்டான் சங்கர்.

''என்ன நடந்தது தாதா?'' என்று அவன் கேட்கும் போதே பில்வனும் வெளிச்சத்திற்கு வந்து நின்றான். திறந்த வாயை மூடாமல் நின்று விட்டான் சங்கர். அந்த சமயத்தில் பில்வனை அந்த இடத்தில் எதிர்பார்க்கவில்லை அவன்.

ஆனால் அவனோ இதைவிட ஆபத்தான எவ்வளவோ சூழ்நிலைகளைப் பார்த்திருக்கிறான். ஆச்சரியத்திலிருந்து மீள வினாடி நேரம் கூட பிடிக்கவில்லை. மின்னல் வேகத்தில் கால் சாக்ஸிற்குள்ளிருந்த துப்பாக்கியை வெளியே எடுத்தான்.

அதற்குள் பில்வனும் ஜேபியிலிருந்து துப்பாக்கியை வெளியே எடுத்தான்.

ஆனால் சங்கரிடம் துப்பாக்கியை எதிர்பார்க்காத அவன் தன்னிடமிருந்த ஆயுதத்தை வெளியே எடுக்கத் தாமதமாகி விட்டது. சங்கர் துப்பாக்கியை எடுத்துச் சுட்டான்.

பில்வனின் கைவழியாய் அது துளைத்துக் கொண்டு போயிற்று.

# 44

அனுஷா விமான நிலையத்திற்குப் போயிருப்பது குண்டப்பாவுக்கு பூடகமாய் தெரிந்தது. அந்த விஷயத்தைச் சொன்னது சி. பி. ஐ. ஆபீசிலிருந்த ஒரு செய்தி அறிவிப்பாளர். சுக்ரீவ் அனுப்பிய ஒரு தந்திச் செய்தியை அவன் மா∴பியா கூட்டத்திற்குத் தெரியப் படுத்தினான்.

சங்கர், தாதா, அனுஷா முதலிய எல்லோரின் நடவடிக்கைகளையும் முதலிலிருந்தே ஜாக்கிரதையாய் கவனித்து வரலானார் சுக்ரீவ். அவர் கேட்ட கேள்விகளுக்கு அனுஷா சொன்ன பதில்கள் அவருக்குத் திருப்தியளிக்கவில்லை. முக்கியமாய் அவள் யுமின்சுன்னை ஏன் சந்தித்தாள் என்று புரியவில்லை அவருக்கு. அதனால்தான் சங்கர் ஜப்பானுக்குக் கிளம்பும் வரையிலும் ரகசியமாய் அவனைப் பின்தொடரச் செய்தார். ஆனால் அவர் ஆபீசில் மா∴பியாவுக்குச் செய்திகளைப் பரிமாறும் ஆள் இருந்ததால் தாதாவுக்கு இந்தவிஷயம் முன் கூட்டியே தெரிந்து விட்டது. அதனால்தான் மருத்துவமனைக்குக் கிளம்புவதற்கு முன்பே தொடர்பு அறுந்து விடும்படி பண்ணிவிட்டான் தாதா.

ஒரு முறை சங்கர் பயணிகளின் உள் லவுஞ்சிற்குள் நுழைந்ததுமே சுக்ரீவ் நிம்மதியாய் பெருமூச்சு விட்டார். இது நடந்து ஐந்து நிமிடங்களுக்குப் பிறகு அவருக்குத் துப்பாக்கி வெடித்த சப்தம் கேட்டது. சாதாரண பயணிகளுக்கு அதென்னவோ சாதாரண சப்தத்தைப் போலத்தான் கேட்டது. ஆனால் அவருடைய போலீஸ் காதுகள் அதை சட்டென்று கிரகித்துவிட்டன. கேட்டிற்கருகில் நின்றிருந்த கூர்க்காக்களிடம் தன் அடையாளக் கார்டைக் காட்டி விட்டு வேகமாய் உள்ளே ஓடிவந்தார்.

அனுஷா இன்னும் அந்த வாசலையே பார்த்துக் கொண்டிருந்தாள். அதற்குள் தாதாவும் பில்வனும் அங்கே போய்ச் சேர்ந்து பத்து நிமிடங்களுக்கு மேல் ஆகிவிட்டது.

நேரம் ஆக ஆக அவளிடம் பரபரப்பு தோன்றிற்று. உள்ளேயிருந்து எந்த சந்தடியுமே இல்லை. அவள் உள்ளங்கைகள் வியர்த்தன. தான் போட்ட திட்டமெல்லாம் தோல்வியடைந்து விட்டதோ என்ற சந்தேகம் ஏற்பட்டது அவளுக்கு. அவ்வாறு மட்டும் இருந்துவிட்டால்......அவள் மேனி லேசாய் நடுங்கிற்று. அதற்குள் காருக்குப் பின்னால் சப்தம் கேட்டது. அவள் திரும்பிப் பார்த்தாள்.

குண்டப்பா!

அவள் வீலென்று அலறப்போக, அதை அரும்பாடுபட்டு அடக்கிக் கொண்டாள்.

''உன்னைத்தான் தேடிட்டிருக்கேன் பொண்ணு, இறங்கு.''

''எங்கே?'' என்று கேட்கக்கூட அவள் வாய் புரள வில்லை.

குண்டப்பா சுவாதீனமாய் கார் பின் கதவைத் திறந்து ஏறி உட்கார்ந்து கொண்டு 'ஓட்டு' என்று சொல்ல வாயைத் திறந்தான். அதற்குள் மின்னலாய் வந்து தாக்கிற்று ஒரு கை பின்பக்கத்திலிருந்து. ஸ்ரீகாந்த் எங்கே அடிக்கிறோம் என்று கூடப் பார்க்காமல் கண்மண் தெரியாமல் அடிக்கத் தொடங் கினான். போலீஸ் உதை அது! அந்த உதைக்கு குண்டப்பா வின் முகம் கார் கண்ணாடியில் மோதி அது கலகலவென்று உடைந்து சிதறிற்று.

அந்த சத்தத்தோடு சேர்ந்து கேட்டது துப்பாக்கி வெடித்த சத்தம் முதலில் ஒரு முறை...

அது சரியாய் கேட்கவில்லை அவர்களுக்கு.

பிறகு ஒரு நிமிடங்கழித்துத் திரும்பவும் கேட்டது. ஒன்றைத் தொடர்ந்து மற்றொன்றாய் வரிசையாய்!

ஐந்து குண்டுகள் வெடித்த சப்தம்...

யுமின்சுன்னை மயக்கத்தில் ஆழ்த்திவிட்டு சங்கர் பின் பக்கமாய் போனதுமே—பேப்பரை மடித்து வைத்துவிட்டு ரஜினியும் அவனைப் பின்தொடர்ந்து போனான். அவன் பின்பக்கத்து ஹாலுக்குள் நுழைந்து கொண்டிருந்தபோது துப்பாக்கி வெடித்த சத்தம் கேட்டது. ஓடத் தொடங்கினான். அதற்குள் பில்வனின் கையிலிருந்து ரத்தம் பெருக்கெடுக்கத் தொடங்கி விட்டது.

அங்குதான் ரஜினி சாமர்த்தியமான காரியம் ஒன்றைச் செய்தான்.

சட்டென்று உள்ளே நுழைந்து விடாமல் கையிலிருந்த ப்ரீ:.ப் கேசை வீசியெறிந்தான். அது அம்மூவருக்கும் தொலை தூரத்தில் பெருத்த சப்தத்துடன் போய் விழுந்தது. அந்த ஓசைக்கு சங்கர் அதிர்ந்து போய் அந்தப் பக்கமாய் பார்த்தான். அந்தக் குறுகிய நேரத்திற்குள் பில்வன் மின்னலாய் பாய்ந்து அவன் கையைத் தட்டினான். துப்பாக்கி நழுவி விழுந்தது.

ரஜினி தாமதிக்கவில்லை. ஒரே பாய்ச்சலில் அவ்விடத்தை அடைந்து துப்பாக்கியை எடுத்து வரிசையாய் ஐந்து முறை சுட்டான். தாமதமின்றி க்ளோஸ் ரேஞ்சில் ஐந்து குண்டுகளும் சங்கரின் மேனியைத் துளைத்துக்கொண்டு போயின. அந்த நீண்ட மனிதன் வேரோடு சாய்ந்த பனைமரத்தைப் போல கீழே சரிந்தான்.

வாழ்ந்த நாளெல்லாம் மனிதத் தன்மையையே மறந்து எவ்வளவோ பெண்களைக் கெடுத்து, எத்தனையோ பேரைக் கொன்றிருந்த அவன் ஐந்து வினாடி நேரம் துடிதுடித்து விட்டு உயிரை விட்டான்.

ரஜினி மேற்கொண்டு தாமதிக்க விரும்பாமல் பில்வனைப் பார்த்து, ''உம் கிளப்பு, க்விக்'' என்றான். பில்வன் தாதா வின் முகத்தின் மீது பலமாய் ஒரு குத்து விட்டுவிட்டு வேக மாய் வாயிலை நோக்கி ஓட்டமெடுத்தான். சரியாக அதே சமயத்தில் விமான நிலையத்திற்கு வெளியே காத்துக்கொண் டிருந்த அதிகாரி வெளிக்கதவைத் திறந்தார். தொலைவில் நின்றபடி, தாதா, சங்கருடன் சேர்ந்து எப்பொழுது வெளியே வரப்போகிறானோ என்று காத்துக்கிடந்த அந்த அதிகாரிக்கு உள்ளே யிருந்து கேட்ட சப்தங்களுக்கு அர்த்தம் சரியாய் விளங்க வில்லை. கதவைத் திறக்கப்போனதுமே உள்ளேயிருந்து கதவுகள் திறந்து கொண்டன.

அதற்குள் தாதா எழுந்து கீழே கிடந்த ரஜினியின் துப்பாக்கியை எடுத்துக் கொண்டான். கதவை நோக்கி ஓடிக் கொண்டிருந்த ரஜினியைப் பார்த்துச் சுட்டான். ஆனால் அதிலிருந்த குண்டுகள் தீர்ந்து விட்டிருந்தன. அவனும் வாசலை நோக்கி ஓடலானான். ஆனால் இருவரும் வெளியே வந்ததுமே அதிகாரி சட்டென்று கதவைச் சாத்திப் பூட்டிவிட்டார். ஒன்றுமே தெரியாதது போன்று அங்கிருந்து போய்விட்டார். ரஜினியும் பில்வனும் ஜனக்கூட்டத்தோடு கலந்து மறைந்தார்கள். மிகக் கூர்ந்து கவனித்திருந்தாலே யொழிய ஜனங்களுக்கு அந்த சப்தம் எதன் சப்தம் என்று தெரிய நியாயமில்லை. அதனால் வெளியே சூழ்நிலை எப்பொழுதும் போலவே இருந்தது.

தாதாவுக்குத் தான் செய்த தப்பு தெரியத்தொடங்கிற்று. துணியால் துப்பாக்கியைத் துடைத்து, விரலடையாளம் இல்லாமல் பண்ணிவிட்டு வெளியே போய்விடலாம் என் றெண்ணினான். அவன் துப்பாக்கியைத் துடைத்துக் கொண் டிருந்த போது சுக்ரீவ் உள்ளே வந்தார்.

''சி. பி. ஐ...டோன்ட் மூவ்...அந்த துப்பாக்கியை அப்படியே கீழே வை'' என்றார் அதிகாரம் நிரம்பிய குரலில்,

தாதா நிமிர்ந்தான்.

சுக்ரீவ் சங்கரைப் பரிசோதித்தார். அவன் உயிர் போய் விட்டிருந்தது.

"ஸோ...உன்னைப்பற்றிக் கட்டுரைகள் எழுதியது இவன் தான் என்ற பிரமையில், உன் குட்டை ஜனங்களுக்கு எடுத்து உடைத்தது இவன்தான் என்ற ஆத்திரத்தில் இவன் ஜப்பானுக்குப் போவதற்கு முன்பே இவ்விதமாய் பழிவாங் கிட்டாய்னு சொல்லு. இந்த மாதிரி உள்ளே வரத்துக்கு உனக்கு யார் உதவி பண்ணினாங்க? சரி போகட்டும். அதை யெல்லாம் நீதிமன்றத்தில் சொல்லிக்கலாம்...நௌ யூ ஆர் அண்டர் அரெஸ்ட்" என்றார்.

ஐந்து முறை துப்பாக்கிச் சப்தம் கேட்டதுமே ஸ்ரீகாந்த் காரிலிருந்து வெளியே வரப்போனான். அனுஷா சட்டென்று அவன் கையைப் பிடித்துத்தடுத்து.

"இங்கே ஒரு ரௌடி என்னைத் தாக்கிட்டிருக்கிறப்ப என்னை விட்டுட்டு எங்கே அண்ணா போகிறாய்?" என்றாள்.

"விடு, உள்ளே ஏதோ ரகளை நடக்கப்போகுது."

"உள்ளே போக எவ்வளவோ விதிகள் இருக்கு. அதை யெல்லாம் முடிச்சுட்டு நீ போவதற்குள் என்ன நடந்ததுன்னு வெளியே இருப்பவங்களே சொல்லிடுவாங்க."

"உனக்கென்ன மூளை பிசகிடுத்தா? கையை விடு. உள்ளே யாரோ பயங்கரவாதி கொலைத் தொழிலைப் பண்ணிட்டிருக்கிறான் போலிருக்கு."

"உன் போலீஸ் குணத்தை நீ விடமாட்டாய். அது வேறு ஏதோ சத்தமாயிருக்கும்".

ஸ்ரீகாந்தின் முகம் சிவந்தது. "உனக்கு புத்தி பிசகி விட்டது. அந்த வித்தியாசத்தைக் கூட யூகிக்க முடியாத வனில்லை நான்" என்றான்.

அனுஷா அவன் கையை விட்டு விட்டாள். அந்த சம்பாஷணையில் அவளுக்குத் தேவையான சமயம் கிடைத்து விட்டது. அவள் பக்கமாய் திரும்பி உட்கார்ந்திருந்ததால் அவன் கவனிக்கவில்லை—இடப்பக்கத்தில் தொலைவில் கிடங்கு போல தென்பட்ட கட்டிடத்திற்குள்ளிருந்து பில்வனும் ரஜினியும் வெளியே வந்து கார்களை நோக்கி ஓட்டமெடுத்ததையும்—தொடர்ந்து விமானநிலையத்து அதிகாரி கதவைச் சாத்தியதையும்! அவன் பார்வையிலிருந்து அக்காட்சி தப்பி விட்டது தெரிந்ததுமே, இனி தன் வேலை முடிந்து விட்டது என்றெண்ணிய அனுஷா அவன் கையை விட்டாள்.

அவன் நுழைவாயிலை நோக்கி ஓட்டமெடுத்தான்.

யுமின்சுன் கண்களைத் திறந்தார். ஒரு வினாடி அவருக்குத் தான் எங்கேயிருக்கிறோம் என்று புரியவில்லை.

சுற்றிலுமிருந்த பயணிகளைப் பார்த்ததும்தான் புரிந்தது. பக்கத்தில் பார்த்தபோது சங்கரைக் காணவில்லை. முதல் முதலாக தன் போலீஸ் சாமர்த்தியத்தின் மீது சந்தேகம் ஏற்பட்டது. நாற்காலியை விட்டு எழுந்திருக்க முயன்ற போது, செக்யூரிட்டி கார்டுகளுக்கு நடுவே தாதா வந்து கொண்டிருந்தது தென்பட்டது, தலை குனிந்தபடி ஒவ்வொரு அடியாய் எடுத்து வைத்தபடி, இந்த வளையத்திலிருந்து எப்படித் தப்பிப்போம் என்று யோசித்தபடி!

தன்னை யார் தப்பிக்க வைக்க முடியும் என்று யோசித்தபடி!

யார் யார் தனக்குச் சாட்சி சொல்ல முடியும் என்று யோசித்தபடி!

அனுஷா காரை விட்டிறங்கினாள்.

போலீஸ் காருக்குள் தாதாவை ஏற்றிக் கொண்டிருந்தார் சுக்ரீவ். அருகிலேயே ஸ்ரீகாந்த் நின்று கொண்டிருந்தான். ஜனங்கள் வட்டமாய் கூடி தூரத்தில் நின்றிருந்தார்கள்.

மெல்ல அவ்விடத்திற்குப் போனாள்.

அந்த சமயத்தில் அவளை அங்கே பார்த்த சுக்ரீவ் தனக்கேற்பட்ட ஆச்சரியத்தை அரும்பாடு பட்டு அடக்கிக் கொண்டார்.

''ஒரு நிமிடம் தாதாவோடு பேசலாமா?'' மரியாதையோடு கேட்டாள்.

அவர்களின் பதிலுக்காகக் காத்திராமல் நேராய் தாதா விடம் போனாள்.

தொலைவிலிருந்த ஜனங்களைப் போலீசார் மடக்கிக் கொண்டிருந்தார்கள்.

''தாதா'' என்றாள்.

தாதா நிமிர்ந்தான். இருவர் பார்வையும் கலந்தன.

''நான் உனக்கு முன்பே சொன்னேன். நீ என்னை விட்டுட்டால் நானும் உன்னை விட்டுடறேன்னு சொன்னேன். கேட்கலை நீ. கேட்டிருந்தால் அஸெம்பிளி மேடையின் மீது என்னைக் கெடுக்கிறேன்னு சொன்ன சங்கருக்கும் எனக்கும் இடையில் மட்டுந்தான் விரோதம் இருந்திருக்கும். எனிவே அவனைக் கொன்று என்னைக் காப்பாற்றியதற்கு என் நன்றி.''

தாதாவைக் காரில் ஏற்றினார்கள், அவள் அப்படியே நின்று கொண்டிருந்தாள். சுக்ரீவ் காரில் ஏறிக்கொண்டதும் அது புறப்பட்டது. ஸ்ரீகாந்த் அவள் தோளில் கை வைத்து, ''வா, போகலாம்'' என்றான்.

தொலைவில் சங்கரின் சவத்தை ஆம்புலன்சில் ஏற்றிக் கொண்டிருந்தார்கள். அவள் அந்தப் பக்கமாய் இமைக்காமல் வினாடி நேரம் பார்த்துவிட்டு, அண்ணனுடன் சேர்ந்து தம் காரை நோக்கி நடந்தாள்.

# 45

மறுநாள் எல்லா செய்தித்தாள்களிலும் இச்செய்தி முதல் பக்கத்திலேயே வந்திருந்தது. எங்கும் பரபரப்பு!

அனுஷாவுக்கு ஏற்பட்ட வியப்பு என்னவென்றால் தன்னிடமிருந்து கட்டுரைகளை வாங்கிக்கொண்ட ஆசிரியர்கூட, அந்தக் கட்டுரைகளை சங்கர் எழுதியதால் பகைமைகொண்டு தாதா இக்காரியத்தைப் பண்ணினான் என்று எழுதியிருந்தது தான். ஒரே ஒரு பத்திரிகை மட்டும் ''என்றுமே தன் கையைக் கறைப்படுத்திக் கொள்ளாமல் ஜாக்கிரதையாய் இருக்கும் தாதா இந்த ஒரு விஷயத்தில் மட்டும்... அதுவும் சுயமாய் கொலை பண்ணும்படியாய் ஏன் நடந்துகொண்டார்'' என்று எழுதிற்று. ஆனால் அக்கட்டுரைக்கு அவ்வளவு முக்கியத்துவம் கிடைக்கவில்லை. முக்கியத்துவம் இல்லாத கட்டுரைகளைப் பத்திரிகைகள் சிறப்பாய் பிரசுரிக்காது.

சங்கரின் கொலையும், அதில் தாதாவின் பங்கு இருந்ததும் மாஃபியாவைக் கலங்கடித்தது.

தாதாவுக்கு உதவி பண்ணிய விமான நிலையத்து அதிகாரிகள் நால்வரும் நடுநடுங்கினார்கள். யாருமே எதுவுமே பேசவில்லை. தாதா அவ்விடத்திற்கு எப்படி வந்தான் என்பது எஞ்சியவர்களுக்கு புரிபடாத கேள்வியாக இருந்தது. தாதாவுக்காக கிடங்கின் கதவைத் திறந்து உதவி பண்ணிய ஆபீசர் மட்டும் இச்சம்பவம் நடந்த ஒரு மணி நேரத்தில், என்றாவது தன் விஷயம் வெளிப்பட்டு விடப்போகிறதே என்ற பயத்தில் தற்கொலை பண்ணிக்கொண்டார்,

சங்கரின் கொலையால் விமானப்போக்குவரத்து ஒருமணி நேரம் தாமதமாயிற்று. அதற்குள் யாரோ உண்மை விளம்

போன்பண்ணி, ஜப்பானுக்குச் செல்லவிருக்கும் விமானத்தில் 'குண்டு' வைக்கப்பட்டிருப்பதாய் செய்தியைத் தெரிவிக்கவே, அவ்விமானம் கிளம்ப மேலும் ஒருமணி நேரம் தாமதமாயிற்று ஆனால் பிற போன்களைப் போல : இல்லாமல், இவ்விஷயம் உண்மையாயிருந்து, விமானத்தில் 'குண்டு' கிடைத்தது. இது பயங்கரவாதிகளின் நடவடிக்கை என்றெண்ணிக் கொண்டார்கள் அனைவரும். தாதா கைதானதைப் பார்த்து நான்கு அதிகாரிகளும் பயத்தால் நடுங்கியது உண்மையே யானாலும் அதில் ஒருவருக்குக் கொஞ்சமாவது மனிதப்பண்பு ஒட்டிக்கொண்டிருந்ததால் துணிந்து 'உண்மை விளம்பி, என்ற பெயரில் போன் பண்ணி 'குண்டு' விஷயத்தைச் சொன்னார்!

வசந்த் தாதாலை அரெஸ்ட் பண்ணிய அன்று மாலை ரஜினியும் பில்வனும் அனுஷாவும் விமானத்தில் திரும்பி வந்து சேர்ந்தார்கள்.

''கதவைச் சாத்திடட்டுமா?'' என்று கேட்டான் ரஜினி.

ஏதோ யோசனையாயிருந்த அனுஷா புரியாமல் ''என்ன?'' என்றாள்.

''கதவைச் சாத்தியதுமே நீ என்கால்களில் விழுந்து, என்னை மன்னிச்சுடுங்க உங்களைப் புரிஞ்சிக்காமல் போயிட்டேன்' என்பாய். நான் உன் தோளைப் பிடித்துத் தூக்கி நிறுத்தி, 'அப்படியெல்லாம் பேசாதே அனுஷா' என்று கட்டிலை நோக்கிக் கூட்டிச் செல்வேன்னு அர்த்தம்'' என்றான் கடைசி வாக்கியத்தை அழுத்திச் சொன்னபடி.

''ஷட் அப்'' என்றாள் அனுஷா கோபமாய்.

அதற்குள் கதவைத் தட்டிய ஓசை கேட்டது.

''உள்ளே வரலாமா?''

இருவரும் சட்டென்று திரும்பிப் பார்த்தார்கள் சி. பி. ஐ ஆபீசர் சுக்ரீவ் நின்றுகொண்டிருந்தார். அனுஷா சிலையாகி விட்டாள்.

அந்த நேரத்தில் அவள் அவரை அங்கே எதிர்பார்க்க வில்லை. காலையில்தான் பம்பாயில் அவரைப் பார்த்தாள். இப்போது இங்கே...

அவள் ஏனோ பயந்தாள், ஏதோ நடக்கப் போகிறது. ஏ...தோ...

''என்ன அப்படி சிலையாய் நின்னுட்டீங்க?'' சுக்ரீவ் கேட்டார்.

''இங்கே நீங்க இப்படி வந்தீங்க?'' என்றாள் வியப்பிலி ருந்து மீளாமலேயே. எவ்வளவு முயன்ற போதிலும் அவள் முகத்தில் ஏதோ ஆபத்து வரப்போவதை அவ்வுணர்ச்சி எடுத் துக்காட்டிக் கொண்டேயிருந்தது.

''நீங்க வந்த விமானத்தில்தான் நானும் வந்தேன்'' என்று ரஜினியை திரும்பிப் பார்த்து, ''ரஜினி'' உங்களோடு கொஞ்சம் பேசணும்'' என்றார்.

இருவரும் வேறு அறைக்குப் போனார்கள். அனுஷா தனியாய் நின்றுகொண்டிருந்தாள். அவள் இதயம் வேகமாய் துடித்தது. இவர் ரஜினியை என்ன கேட்கப் போகிறார்? எல்லாம் முடிந்து விட்டது என்றெண்ணிக்கொண்டிருந்த சமயத்தில் இவர் வந்தது அவளுள் சந்தேகத்தை வளர்ந்தது. சுக்ரீவின் முகத்தைப் பார்த்தால் மேலுக்குத் தென்படுவதைக் காட்டிலும் பல மடங்கு புத்திசாலியாய் தோன்றுகிறார்.

ஐந்து நிமிடங்கள் பாரமாய் கழிந்தன. ரஜினி வெளியே வந்தான். ''உன்னைக் கூப்பிடுகிறார்'' என்றான் சுருக்க மாய். அவள் ஏதோ கேட்கப் போனவன் மனதை மாற்றிக் கொண்டு உள்ளே நடந்தாள். சுக்ரீவ் அவளைப் பார்த்து முறுவல் பூத்தார். அவள் சிரிக்கவில்லை.

''உட்காருங்க மேடம்.'' அவள் உட்கார்ந்தாள். அவர் சுற்றிவளைக்காமல் சொன்னார். ''வசந்த் தாதாவின் கேஸ் இந்த மாதிரி திசை திரும்பிடும்னு எதிர் பார்க்கலை நாங்க யாருமே. சங்கரின பெயரில் நீங்க தாதாவுக்கு எதிர்ப்பதமாய் எழுதிய கட்டுரைகள்தான் இந்தக் கொலைக்கும் விரோதத்திற்கும் காரணமானால், கேஸ் எளிதில் தீர்ந்துவிடும். ஆனால் அந்தக் கட்டுரைகளை நீங்கதான் எழுதினீங்கன்னு தாதாவுக்குத் தெரியுமில்லையா? சங்கரை எதுக்குக் கொல்லப் போறாரு?''

''தாதா சங்கரை எதுக்குக் கொன்னாருன்னு எனக்குத் தெரியாது.''

''ஆனால் உலகம் அவர் இந்தக் கட்டுரையால்தான் விரோதம் பூண்டு கொன்றிருப்பதாய் நினைக்கிறது.''

அவள் மௌனம் வகித்தாள்.

''இங்கே வருவதற்கு முன்பே வசந்த் தாதாவைச் சந்திச்சுட்டுதான் வந்திருக்கேன். தான் இந்தக் கொலையைப் பண்ணலைங்கிறார். லாயரைச் சந்தித்துப் பேசாமல் எந்தக் கேள்விக்குமே பதில் சொல்ல மறுக்கிறார் அவர்.''

அவள் எந்த பதிலும் சொல்லவில்லை.

''ஜப்பானுக்குப் போகவிருந்த விமானத்தில் ஒரு ஆள் உள் லவுஞ்சு வரைக்கும் நுழைந்துட்டு அங்கேயிருந்து மாயமாயிருக்கான். பாஸ்போர்ட் டிக்கெட்டின் மேல் 'சின்மயானந்தன்'னு இருக்கு. அவன் யாருன்னும் எந்தப் பக்கமாய் வெளியேறினான்னும் உங்களுக்கு ஏதாவது தெரியுமா?''

''சின்மயானந்தனா? தெரியாதே! ஒருக்கால் 'குண்டு' வைத்த பயங்கரவாதியாயிருந்திருக்கலாம்.''

''இந்த பதில் நன்றாய் தானிருக்கும். ஆனால் நீங்க அந்த சமயத்தில் விமான நிலையத்தில் ஏன் இருந்தீங்க?''

''இதென்ன சார் இது! சங்கர் போறதைக் கடைசி வரைக்கும் பார்க்காவிட்டால் என் உயிருக்கு உத்திரவாதம் ஏது?''

''அப்படின்னால் 'கடைசி வரைக்கும்' போறதைப் பார்த்த பிறகுதான் நீங்க திருப்தியடைஞ்சதாய் சொல்றீங்க, இல்லையா?'' அழுத்தமாய் உச்சரித்தார் அக்கேள்வியை.

அவள் பதில் பேசவில்லை.

''வசந்த் தாதா அந்த எல்லை வரைக்கும் எப்படி நுழைந் தாருன்னு உங்களுக்கு ஏதாவது ஐடியா தெரியுமா?''

''இதென்னது? எனக்கெப்படித் தெரியும்?''

''வெளியிலேயே காரில் உட்கார்ந்து எல்லாம் பார்த்தீங்க இல்லையா, உங்க கண்ணில் ஏதாவது பட்டதான்னு...''

''நான் அவரைப் பார்க்கவில்லை. எங்கண்ணாவோடு பேசிட்டிருந்தேன்.''

சுக்ரீவ் தாடையைச் சொரிந்து கொண்டார். அவர் உதடு களில் முறுவல் இப்போது இல்லை.

''சங்கரின் தேகத்தில் ஐந்து குண்டுகள் இருக்கின்றன. ஆறாவது குண்டு சுவரில் துளைக்கப் பட்டிருக்கு. தரையில் ரத்தம் சிந்தியிருக்கு. அது சங்கருடையது இல்லை. தாதா உடம்பில் காயமில்லை. பின்னே யாருடையதாய் இருக்கும்?''

அனுஷாவின் இதயம் ஒரு விநாடி துடிப்பதை நிறுத்தி விட்டது. பி...ல்...வ...ன்...கையில் கட்டோடு இருக்கும் பில்வன்...

ஒரு கேள்வியைப் போலின்றி ஏதோ தனக்குள் தானே சொல்லிக்கொள்வதுபோல சுக்ரீவ் சொன்னார்.

''யுமின்சுன் எல்லாவற்றையும் சொல்லிட்டாரு...நீங்க எதுக்கு அவரைச் சந்தித்தீங்க போன்ற எல்லா விஷயத்தை யும்.''

அனுஷாவின் நெற்றில் வியர்த்தது. அவ்வறையில் ஆழ்ந்த அமைதி ஏற்பட்டது. அவள் கொஞ்ச நேரத்தில் தேறி, ''யுமின்சுன்னை அந்தக் காரியத்துக்கு ஒப்புக்கச் சொல்லி நான்தான் வேண்டிக்கிட்டேன். அப்படிச் சொன்னால்தான் சங்கரின் பிரயாணத்துக்கு சம்மதிப்பாருன்னு'' என்றாள்.

''உம், சொல்லுங்க'' ஊக்கமூட்டினார்.

''சொல்றத்துக்கு வேறென்ன இருக்கு?''

''நீங்க யுமின்சுன்னை அந்த ஒரு காரியத்துக்கு மட்டுமே வேண்டிக்கிட்டிருந்த பட்சத்தில், தாதா தன்னோடு கூட்டிட்டு வந்த ஆள் எப்படி மாயமாயிருப்பான்? அதுவும் கையில் காயத்தோடு? அவன் அந்த மாதிரி ஓடத் தொடங்கியிருந்தால் தாதாவும் அங்கேயிருந்து ஓடாமல் பார்த்துட்டு நின்னுட்டிருந்தாரா?''

''அதைத் தெரிஞ்சுக்க வேண்டியது நீங்க.''

''நாளைக்கு தாதா சொல்லப்போறது என்னவென்றால், இந்த சின்மயானந்தன் என்கிற பெயரோடு ஜப்பானுக்குப் போகவிருந்த பயணியும், தான் கூட்டிட்டு வந்த ஆளுமாய் சேர்ந்து சங்கரைக் கொன்னுட்டு ஓடிட்டாங்கன்னு!''

''ஆனாலும் அந்த சாட்சி கோர்ட்டில் செல்லாது.''

''ஆனால் அந்த அறையில் இன்னொருத்தரின் ரத்தமும் இருக்கு...பில்வன் எங்கே?''

வாதாட வாதாட தான் ஒவ்வொரு படியாய் கீழிறங்கிக் கொண்டே போவதை அவள் உணர்ந்தாள். இந்தக் கடைசி கேள்வி—'பில்வன் எங்கே?' என்று கேட்டது அவளுக்கு இனி தான் செய்யக் கூடியது எதுவுமே இல்லை என்று புரிந்து விட்டது. தான் போட்ட இந்தப் பிளானால் தன்னுடைய மிகப் பிரியமான சிநேகிதர்கள் இருவருமே தூக்குமேடைக்கு

மிகச் சமீபத்தில் வந்து நிற்கிறார்கள். எவ்வளவோ சாமர்த்தியமாய் போட்ட பிளான் என்றெண்ணியிருந்தது இவ்விதமாய் இருவரைப் பழிவாங்கிவிட்டது. அவள் உள்ளங்கையை மடக்கி உதடுகளின்மேல் குத்திக் கொள்ளத் தொடங்கினாள். 'என்ன பண்ணலாம்?' என்று யோசித்தவாறு.

அதற்குள் சுக்ரீவ் நாற்காலியை விட்டு எழுந்தார். அங்குமிங்கும் நடை பயின்றவாறே, யோசிக்கத் தொடங்கினார். அருகிலிருந்த அனுஷாவைக் கூட மறந்துவிட்டார் போலிருந்தது. தனக்குள் சொல்லிக் கொண்டார்.

''வசந்த் தாதா லேசில் விட்டுடமாட்டான். கடைசி வரைக்கும் அவன் லாயர்கள் போராடுவார்கள். அவனுக்கு உதவிய அதிகாரி அதிர்ஷ்டவசமாய் தற்கொலை பண்ணிக் கொண்டு விட்டார். எஞ்சிய அதிகாரிகள் இன்றைக்கு உதவியிருந்தாலும், நாளைக்கு கோர்ட்டில் செத்தாலும் அந்த உண்மையை ஒப்புக்கமாட்டார்கள். தாதாவைத் தெரியவே தெரியாது என்று சொல்லிவிடுவார்கள். சரி, அந்த சின்மயானந்தன்ங்கிற ஆளு நீ சொன்னது போல பயங்கரவாதின்னே வெச்சுப்போம். 'பாம்'மை வைச்சுட்டு அவன் மாயமாயிட்டான். யுமின்சுன்னுக்கு ஒன்றுமே தெரியாதுன்னு வைச்சுப்போம். தன் பெயரில் ஸ்விஸ் பாங்கில் பணம் கட்டியிருந்த விஷயம் கூட அவருக்குத் தெரியாது. ஒருகால் அப்படிப்பட்ட ஒப்பந்தம் எங்களுக்கிடையே ஏதாவது இருந்திருந்தால், சங்கர் என் கையில் மயக்க ஊசியைக் குத்தி மயக்கமடையச் செய்துட்டுப் போக வேண்டிய அவசியம் ஏன்னு அவரு சமயம் வரும்போது கோர்ட்டில் சொல்லுவாரு. அனுஷாவைத் தனக்குத் தெரியவே தெரியாதுன்னு சொல்லிடுவாரு. போயும் போயும் ஒரு போலீஸ் அதிகாரி அனுஷாங்கிற வெளி மனுஷி ஒருத்தி தனக்கு ஆலோசனை தந்தாள் என்றும், அதன் பிரகாரமே தான் லஞ்சம் வாங்கிட்டது போல நடித்தேன்னும் சொல்லிக்க மாட்டாரில்லையா? அதிலும் அந்தக் கிழவருக்குத்

தன் சாமர்த்தியத்தின் மேல் ரொம்பவும் நம்பிக்கை... இனி என் விஷயம்...நான் போனபோது அப்பத்தான்கடைசி குண்டு வெடித்து துப்பாக்கியின் மேலிருந்த விரலடையாளத்தைத் துடைச்சிட்டிருந்தான் தாதா. அறையில் வேறு யாருமே இல்லை. வெளியே யாரும் போன சப்தமும் கேட்கலை...''

அனுஷா கண்கள் அகல விரிய அவரையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவர் என்ன பேசிக் கொண்டிருக்கிறார் என்று அவளுக்குக் கொஞ்ச நேரம் புரியவில்லை. கட்டிய வீட்டை தொலைவில் போய் நின்றபடி பார்த்துக் கொள்ளும் மேஸ்திரியைப் போல அவர் சம்பவங்களை கண்முன் நிறுத்திப் பார்த்துக் கொண்டிருந்தார்.

''மொத்தத்தில் தாதாவின் கழுத்தைச் சுற்றி ரொம்ப நன்றாய்தான் வலையைப் பின்னிட்டாய் அம்மா. இந்த கேசை முதலிலிருந்தே எடுத்து நடத்திட்டிருக்கிற எனக்கே கொஞ்சமும் சந்தேகம் ஏற்படாதவாறு! ஆனால் ரஜினி துப்பாக்கியைச் சுட்டதால் உன் பிளான் எல்லாம் பாழாகிடுத்து.''

திரும்பவும் நிசப்தம்...ஒருவாறு அனுஷா சக்தியைத் திரட்டிக் கொண்டு கேட்டு விட்டாள். ''பில்வன்தான் அந்த ஆளுன்னு உங்களுக்கு யார் சொன்னது?''

சுக்ரிவ் சிரித்தார்.''ரஜினி.''

அவளுக்கு ரஜினியின் மேல் ரொம்பவும் கோபம் வந்தது. தனக்கிருந்த கொஞ்சநஞ்சம் தைரியம் கூட இல்லாமல் யாரோ போலீஸ் ஆபீசர் வந்து நாலு கேள்வி கேட்டதுமே எல்லாவற்றையும் சொல்லிவிட்டான்.

''அதற்குள் ரஜினி உள்ளே வந்தான்.

''வா ரஜினி'' என்றார் சுக்ரீவ். ''நீ சொன்னதை யெல்லாம் இந்தப் பெண்ணிடம் சொல்லிட்டேன்.''

''நான் என்ன சொன்னேன்?''

''தாதாவுடன் போனது பில்வன் என்றும், சங்கரைக் கொன்னது நீதான்னும்.''

''நான் ஒன்றும் சொல்லலையே இப்ப நீங்கதான் சொல்றீங்க.''

அனுஷா அதிர்ச்சியடைந்தவளாய் அவ்விருவரையும் பார்த்தாள். தன் தவறு புரிந்தது. சுக்ரீவ் இருட்டில் எய்திய அம்பு சரியாய் போய் தைத்துக்கொண்டு விட்டது. அவர் கண்களால் சுயமாய் பார்த்தது போலவே ஒவ்வொரு விஷயத்தையும் சொன்னபோது அவள் வலையில் வீழ்ந்து விட்டாள்.

கடைசி தருணத்தில் எல்லாம் நாசமாகிவிட்டது. சர்வ நாசமாகி விட்டது...இனி ரஜினியை யாரால் காப்பாற்ற முடியும்?

சுக்ரீவ் நடை பயிலத் தொடங்கினார். அவர் முடிவிற்குக் கட்டுப்பட்டிருப்பவனைப் போல ரஜினி மௌனமாய் நின்று கொண்டிருந்தான். அனுஷாவுக்கு ஒவ்வொரு நிமிஷமும் ஒரு யுகமாய் பரபரப்போடு கழிந்தது. நடையின் தீவிர வேகத்தைப் பொறுத்து சுக்ரீவ் ஆழ்ந்த யோசனையில் இருப்பது புரிந்தது.

அவர் தன் நடையை நிறுத்தி விட்டு, ''என்ன பண்ணலாம் ரஜினி?'' என்றார்.

ரஜினி பதில் பேசவில்லை.

அனுஷாவுக்கு எதுவுமே புரியவில்லை. ''இதில் ரஜினியின் தப்பு ஒன்றுமேயில்லை. தப்பெல்லாம் என்னோடதுதான். பில்வனை காப்பாற்றத்தான் அந்தக் காரியம் பண்ணியிருக்கிறார் அவர். தண்டனை எனக்குத் தான் கிடைக்கணும்'' என்றாள் ஆவேசமாய்.

''ஒரு போலீஸ் ஆபீசர் யாரையாவது காப்பாற்ற வேண்டியிருந்தால் ஐந்து குண்டுகளை உடம்பில் துளைக்கக் கூடாது. கால்களில்தான் சுடணும்.''

''போ...போலீஸ் ஆபீசரா?''

''ரஜினியை யாருன்னு நினைச்சாய் அனுஷா? அவன் எங்க இலாக்கா ஆள்!''

அனுஷா ஆச்சரியமடைந்தாள். சுக்ரீவ் சொல்லிக் கொண்டே போனார். ''எங்க இலாக்காவில் தனிப்பட்ட பாகம் இருக்கு. அதை ''சென்டர்' என்பாங்க. 'சென்டரு'க்குக் கீழே சிலபேர் ''கன்ட்ரோல்ஸ்' என்று இருப்பாங்க. நான் ஒரு 'கன்ட்ரோல்'! ரொம்பப் பேர் நினைச்சிட்டிருக்காங்க, நாட்டில் இவ்வளவு பேர் குற்ற வாளிங்கதிரிஞ்சிட்டிருக்கிறப்ப போலீஸ்இலாக்கா ஒன்றுமே பண்ணாதுன்னு...ஏன் பண்ணமாட்டோம்?''

குறைந்தபட்சம் ஐம்பது சதவிதத்தினர் நேர்மையானவங் களும், சாமர்த்தியசாலிங்களும் 'சென்டரில் இருக்கிறாங் கன்னு சொன்னால் யாருமே நம்பத்தான் மாட்டாங்க. ஆனால் குற்றவாளிங்க சட்டத்தின் மூலம் தப்பித்துக் கொள் கிறாங்க. அதுக்கு நாங்க என்ன பண்ணமுடியும்? ஒவ்வொரு கன்ட்ரோலுங்களுக்கும் நாட்டில் பல பாகங்களிலிருந்தும் ரிப்போர்ட்டுகள் வந்து சேருவதற்கு சில ஆபீசர்கள் இருக்காங்க. இவங்களை 'ஸ்லீப்பர்ஸ்' என்பாங்க. இந்த ஸ்லீப்பருங்க நகரத்தில் பல ஆண்டுகள் நிரந்தர இருப் பிடத்தை உண்டாக்கிக்கொண்டு, தம் சாதாரண ஆளுங்க மாதிரி யாருக்குமே சந்தேகம் ஏற்படாதவாறு சாதாரண குடிமகனைப் போல இருப்பாங்க.

அந்த மாதிரிதான் ஸ்லீப்பராய் இருந்துட்டு கிளப் ஓட்டலை நடத்துவது போல இருந்து வந்தான் ரஜினியும். ரஜினியின் சாமர்த்தியத்தைப் பார்த்துட்டு அவனிடம் முக்கிய மான மாஃபியா பகுதியை ஒப்படைத்தோம். அதனால்தான்

அவன் ஒரு கிளப்பை நிர்வாகம் பண்ணிட்டுவரான். அவன் ஒரு 'ஸ்லீப்பர்' அவனுடைய மேல் கன்ட்ரோல் நான். நான் டில்லியில் தாதாவின் மேல் இருக்கிற கன்ட்ரோல்! நேற்று வரை ரஜினி ஒரு போலீஸ் இன்ஃபார்மர் மாத்திரமே. உன்னால் அவன் சங்கரை நேருக்கு நேராய் எதிர்த்தான். எந்த ஸ்லீப்பருமே பண்ணக் கூடாத வேலை அது.

கடைசியில் சங்கரைக் கொன்னுட்டான். பத்தாண்டுகளாய் அரசாங்கத்தால் பண்ணமுடியாத காரியத்தை ஒரு அதிகாரி பண்ணிட்டான். இது நியாயத்திற்குட்பட்டது தான். ஆனால் தாதாவின் சரித்திரத்திற்கு ஒரு முடிவு கட்டணுமானால் சட்டத்தைத் தஞ்சமடைந்தால் போதாது. சில சந்தர்ப்பங்களில் நியாயங்களைப் பின்பற்றணும்! அதனால் தான் ரஜினி செய்தது சரியானதுதான்னு நான் நம்புகிறேன்...''

அனுஷாவுக்கு அவன் வார்த்தைகளை ஜீரணித்துக் கொள்ள வெகு நேரம் பிடித்தது. கன்ட்ரோல்களையும் ஸ்லீப்பர்களையும் பற்றி அவள் ரஷ்யன் கே. ஜி. பி. யில் படித்திருக்கிறாள். ஆனால் ரஜினியை ஒரு ஸ்லீப்பர் என்ற போது அவளால் நம்பமுடியவில்லை. தன் முன் முரட்டுத்தனமாயும், குறும்புத்தனமாயும் சிலமுறை ஜடமாகவும் நடித்த ரஜினி பெயர் பெற்ற இலாக்காவில் ஒரு ஸ்லீப்பர். மிக சாமார்த்தியசாலிகளைத்தான் அந்த பதவிக்கு நியமிப்பார்கள் என்றறிவாள் அவள்.

''என்ன பண்ணலாங்கிறாய் ரஜினி?'' கேட்டார் சுக்ரீவ்.

# 46

''நீங்க என்ன சொல்றீங்களோ அப்படியே பண்ணத் தயாராயிருக்கேன் சார்'' என்றான் ரஜினி.

''தாதா தப்பிக்க வேறு வழியில்லையா?'' என்றார் அதிகாரி சுக்ரீவ்.

''இல்லைன்னுதான் நினைக்கிறேன் சார்.''

''கடைசி வரைக்கும் எல்லா ரிப்போர்ட்டுகளையும் எனக்கு அனுப்பி வைச்சுட்டு, கடைசியில் அனுஷா பிளான் சங்கதியை மட்டும் என்னிடம் சொல்லாமல் மறைத்து வைத்து, நீயே சுயமாய் பிரச்சினைக்குப் பரிகாரத்தை ஏற்படுத்தி, சின்மயானந்தன்கிற பேர்ல கிளம்பியதுக்கு மட்டும் உன்னை தண்டிச்சே ஆகணும்.''

''அதற்கும் தயாராயிருக்கேன் சார்.''

''ஆனா அதை நான் சென்டருக்கு ரிப்போர்ட் பண்ணாட்டா அதிலிருந்தும்கூட நீ தப்பி விடுவாய்.''

''ஆமாம் சார். தாங்க்யூ சார்.''

எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த அனுஷாவுக்குச் சட்டென்று ஏதோ புரியவே, 'அப்படின்னா பில்வன்?'' என்று கேட்டாள்.

நான் ரிப்போர்ட் தராவிட்டால் அவனும் சிக்கிக்க மாட்டான்.'' சிரித்தார் சுக்ரீவ். ''அவனைக் கூட நான் சிக்க வைக்கப்போவதில்லை. பார்ப்போம். கோர்ட்டில் தாதா என்ன வாதாடுகிறான்னு...''

அவள் ஒரு வினாடி யோசித்தாள். அவர் சொன்ன ஒவ்வொன்றும் புரிந்தது. தாதா தப்பிக்க வழியில்லாமல் ஒவ்வொரு வழியாய் ஏன் அடைத்துக் கொண்டே வந்தார் என்பது புரியத் தொடங்கிற்று. ஆனாலும் ஏதோ சந்தேகம்... அவஸ்தையோடு. 'நீங்க...நீங்க ஏன் இந்த முடிவுக்கு வந்தீங்க?'' என்று கேட்டாள்.

''உண்மையே! இந்த இலாக்காவில் இருந்து கொண்டு உள்ளது உள்ளபடி உண்மையாக நடந்ததை மட்டுமே அரசாங்கத்துக்கும் நீதி மன்றத்துக்கும் சொல்ல வேண்டும். ஆனால்...எவ்வளவோ ஆண்டுகளாய் யாராலும் தாதாவை ஒன்றுமே பண்ண முடியலை. வாலியைக் கொல்வதற்கு இராமனே மரத்திற்குப் பின்னால் போனான். தாதாவை ஒழிப்பதற்காக சுக்ரீவன் சின்ன பொய்யொன்றைச் சொன்னால் என்ன தப்பு?''

அவள் அவரையே மௌனமாய் பார்த்தபடி உட்கார்ந்திருந்தாள். அவரோ ரஜினியைப் பார்த்து, ''வரேன். நான் சொன்னதெல்லாம் நினைவிருக்கா?'' என்றார். ரஜினி தலையாட்டினான்.

அவர் அனுஷாவைப் பார்த்தார். ''நான் இந்த முடிவை ஏன் எடுத்தேன்னு உனக்கு இன்னும் திருப்தியைத் தரலை, இல்லையா?'' என்று சிரிக்க முயன்றார். சிரிப்பு வரவில்லை. என்னென்னவோ யோசனைகளால் அந்த நடுத்தர வயதுக்காரருக்கு மேலும் பத்தாண்டுகள் கூடி விட்டாற்போல, வயோதிகம் வந்து சேர்ந்து விட்டாற்போல தோன்றியது. ஒரு வேதனைத் திரை அவர் முகத்தில் நிழலாடிற்று. ''என் ஒரே மகன்...ஜவஹர்லால் நேரு யுனிவர்சிடியில் படிச்சிட்டிருந்தான். புத்திசாலிப் பையன், ஹெராயினுக்கு அடிமையாகி வாழ்க்கையையே கெடுத்துக்கிட்டான். எங்களுக்கு வயிற்றெரிச்சலை உண்டாக்கிட்டு அந்த மயக்கத்திலேயே தற்கொலை பண்ணிக்கிட்டான்.'' அவர் குரல் வேதனையாய் வெளி வந்தது. ''காரணம் யாரு? இந்த மாதிரி

எவ்வளவோ தாதாக்கள்தான்! இதற்கு முற்றுப்புள்ளி வைக்க முடியலை என்னால்.குறைந்த பட்சம் 'கமா'வாவது வைக்க முடிந்தது! சட்டத்தைக் காப்பாற்ற வேண்டிய ஒரு அரசாங்க அதிகாரியாய் நீங்க பண்ணியதை நான் வரவேற்காமல் போகலாம். ஆனால் ஒரு குடிமகனாய் உங்களுக்கு வாழ்த்து சொல்கிறேன். விஷ் யூ அல் தி பெஸ்ட்.''

அவர் போய் விட்டார்.

ரஜினி அருகில் வந்து அவள் கையைத் தன் கையில் எடுத்துக் கொள்ளப்போனான்.

அவள் நாசூக்காய் விடுவித்துக்கொண்டு ''நீங்க சி.பி,ஐ. ஸ்லீப்பர்னு ஏன் என்னிடம் சொல்லலை?'' என்று கேட்டாள்.

''எந்த ஸ்லீப்பருமே தான் ஒரு ஏஜெண்ட்டுன்னு யாருக்குமே சொல்லிக்க மாட்டான்.''

''நீங்க ஸ்லீப்பர்னு பில்வனுக்குத் தெரியுமா?''

''தெரியாது. அவன் ஸ்லீப்பராய் நான் நடத்தி வந்த என் கிளப்பிற்கு மேனேஜர், அவ்வளவுதான்'' என்று அவன் சொல்லத் தொடங்கினான். ''சங்கரின் மேல் எப்போதும் ஒரு கண் வைச்சுட்டிருப்பதுதான் என் வேலை, அன்றிரவு, போலீஸ் ஸ்டேஷன் எல்லையில் உன்னைக் கூட்டிட்டுப் போய்க்கொண்டிருந்ததைப் பார்த்தேன். எங்களிடையே தகராறு தொடங்கியது, ஸ்லீப்பர்கள் சாதாரணமாய் வெளியே காட்டிக்கக் கூடாது. ஆனால் வேறு வழியில்லை. உனக்காக சங்கர் போட்ட பிளான்களையெல்லாம் 'கண்ட்ரோலு'க்கு ரிப்போர்ட் அனுப்பிக்கிட்டே இருந்தேன். உன்னைப் பின் தொடர்ந்துகொண்டே இருக்கும்படி உத்தரவுகள் வந்தன. அதற்குள் உன் நெருக்கமும் பிடிவாதமும் என்னைக் கவர்ந்திழுக்கத் தொடங்கின. அரசாங்கத்தை விட ஜனங்களின்பால் அதிக பொறுப்பிருப்பதாய் எனக்கு நானே சொல்லிக்கொண்டு உன்பால் சிரத்தை காட்டத்

தொடங்கினேன். அதற்குக் காரணம் நீதான். அதற்குள் வத்சலாவின் சரிதம் தெரிய வந்தது. வத்சலாவை வலையாய் போட்டு தாதாவைப் பிடித்து விட எண்ணியிருந்தேன். மதுரைக்குப் பயணம் என்று சொல்லி, பில்வனையும் கூட்டிச் சென்றேன். இருவரும் அவளைப் பின் தொடர்ந்தோம். நாங்க எதிர்பார்த்தாற் போலவே நடு வழியில் தாக்கத் தொடங்கினார்கள். அவள் எங்கள் பாதுகாப்பிற்கு வந்து சேர்ந்தாள். வத்சலா எங்களிடம் இருக்கும் வரையிலும் சங்கரும், தாதாவும் எண்ணெயில் விழுந்த அப்பளமாய் தவிப்பார்கள் என்றெண்ணினோம். அப்படியே நடந்தது. தாதா களத்தில் இறங்கினான். தாதாவை எப்படி வளைத்துப் போடுவது என்று யோசித்துக் கொண்டிருந்தபோதே நீ எங்களையும் விட வேகமாய் ஒன்றையடுத்து மற்றொன்றாய் நடவடிக்கைகளை எடுக்கத் தொடங்கினாய். அதிலிருந்து நீ எனக்கு அருமையாய் தென்படலானாய். அதிலிருந்து 'கண்ட்ரோலு'க்கு ரிப்போர்ட் தருவதை நிறுத்திட்டேன். உன் ஜப்பான் பயணத்தைப் பற்றி சுக்ரீவ் சொல்லும் வரையிலும் எனக்கு எதுவுமே தெரியாது. அதற்குள் நீ இந்த கடைசி பிளானைப் பற்றிச் சொல்லி குண்டைத் தூக்கிப் போட்டாய். யாரிடமும் சொல்லாமல் நானே இந்த கேஸை எடுத்துக்க நினைத்திருந்தேன். பில்வனுக்கு ஏதாவது ஆபத்து வரும் போலிருந்தால் அந்த கும்பலையே கொன்று போட்டுடலாம்னு இருந்தேன். அதிர்ஷ்டவசமாய் அந்த மாதிரி நடக்கலை. சங்கரை மட்டுமே பலிவாங்க வேண்டியிருந்தது.

இம்முறை அவர் அவன் கையில் தன் கையை வைத்தார். ''இதெல்லாம் பண்ணியதற்கு உங்களுக்கு நல்ல வெகுமதி கிடைக்கும்.''

ரஜினி வருத்தமாய், ''லாபமில்லை, இதை அரசாங்கத்திற்குத் தெரிவிக்கக்கூடிய அவகாசம் இல்லை'' என்றான்.

"நான் சொல்ற வெகுமதி அரசாங்கத்திடமிருந்து இல்லை" சிரிப்பை அடக்கிக்கொண்டாள் அவள்.

"பின்னே யாரிடம்" அவன் வார்த்தைகளை இடையிலேயே நிறுத்திவிட்டு, ஆனந்த மிகுதியால் கத்திவிட்டான். அவள், கதவு மூடியிருக்கிறதா என்று உறுதியாய் பார்த்துக் கொண்டாள்.

## 47

அறையில் உட்கார்ந்து ஏதோ கவிதை பாடிக் கொண்டிருந்தான் பில்வன்.

"அந்தப் பொண்ணை வீட்டில் இறக்கி விட்டுட்டு வரச் சொன்னால் கவிதை பாடிட்டிருக்கியா"? என்றான் ரஜினி.

ரஜினி வத்சலாவைப் பார்த்து சிரித்துவிட்டு, "இவ்வளவு நாள் கழித்து சிறையிலிருந்து உனக்கு விடுதலை. பில்வன் சொன்னது போல் சுகமான முடிவுதான்! இனி எந்த பயமுமில்லை, நீ வீட்டிற்குப் போகலாம்" என்றான்.

அவள் மௌனமாய் அவனைப் பார்த்தாள். அவ்வாறு பார்த்த போது கண்கள் கமலங்களாயின.

அவள் கன்னத்தை வேத[illegible]ாய் அழுத்திக் கொண்டாள்.

"என்ன யோசிக்கிறாய்?"—கேட்டான் பில்வன்.

அவள் சட்டென்று பதில் சொல்லவில்லை. எந்த நேரத்திலும் அவள் கண்கள் குளமாகி விடலாம் போலிருந்தன.

தன்னைக் காப்பாற்றுவதற்காக மலையாய் நின்ற இம்மூவரையும் விட்டுப் போவது...!

"மறுபடியும் அவ்வப்போது வந்து சந்தித்துக் கொண்டிருப்பாயல்லவா?" என்று கேட்டாள் அனுஷா.

"உங்கள் கல்யாணத்துக்கு வரேன்" என்று சொல்ல நினைத்தாள். ஆனால் அதைக் காட்டிலும் கேவலமான மலிவான பதில் வேறில்லை என்று தோன்றிற்று. சிறிய காகிதத்தை எடுத்து ரஜினியிடம் நீட்டி "ஆட்டோகிராப் ப்ளீஸ்" என்றாள். அவன் அதை வாங்கிக்கொண்டு "என்ன எழுதுவது?" என முறுவலுடன் கேட்டான். அவள் பதில் சொல்லவில்லை. பேனாவால் நான்கு வரிகளை எழுதித் தந்தான். அவள் பரபரப்புடன் வாங்கி என்ன எழுதியிருக்கிறான் என்று பார்த்தாள்.

Morning is beautiful...a little acquaintance.
A little love and then a good day
Evening is short, a little hoping
A little dreaming and then...a good bye.

ஏனோ தெரியவில்லை. அவள் வதனம் வாடிவிட்டது. தன்னையறியாமல் வலக்கன்னத்தை அழுந்திக் கொண்டாள்.

"அப்ப என்னைக் கேட்கமாட்டாயா?" என்றான் பில்வன்.

அவள் காகிதத்தை [illegible]னிடம் நீட்டினாள்.

"வீட்டிற்கருகில் இறக்கி விடும்போது எழுதித் தரேன்" என்றான் அதை வாங்கிக் கொள்ளாமல்.

"கிளம்பு" என்றான் ரஜினி.

' உங்களை : அப்புறமாய் சந்திக்கிறேன்'' என்றான் நுஷாவிடம்.

''அப்படியானால் எங்களை சந்திக்க மாட்டாயா?''

உண்மைதான்! ஒரு 'பாரு'க்குத் தான் வந்து இவனைச் சந்திருப்பதை அறிந்தால் உலகம் காக்கையாய் கரையும். கம வரைக்கும் எதற்கு, அவள் வீட்டிலேயே அதற்கு பபுத் தெரிவிப்பார்கள். இவ்வளவு நாட்களும் னுடைய ஓட்டலின் மாடிப்பாகத்தில் தான் இருந்தது ர்களுக்குத் தெரியவரும்! இவன் எவ்வளவோ பெருந் மையாய் தன்னிடம் பழகியது தன் மனசாட்சிக்குத் ரியும். ஆனாலும் அவர்கள் பயப்படுவார்கள். அவர்களுக்கு வளும் பயப்படுவாள். பயந்தான் மனித வாழ்க்கையை ட்டுவிக்கிறது. இந்த 'பயம்' மாஃபியாவைவிட பயங்கர னது.

அவள் கன்னத்தை மறுபடியும் அழுத்திக் கொண்டாள்.

''போவோமா?'' என்றான் பில்வன்.

அவள் தலையாட்டிவிட்டு அனுஷாவைப் பார்த்து, ''ஒரு தேகம்'' என்றாள்.

''என்ன?''

''ஒரு மணி நேரத்திற்கு ஒரு பஸ் இந்தப் பக்கத்திலே து அந்தப் பக்கமும் அந்தப் பக்கத்திலேயிருந்து இந்தப் கமுமாய் போகிறது! நான் வெவ்வே சமயங்களில் பஸ் டாப்பில் நிற்பேன். எந்த சமயத்தில் நின்றாலும் து வை லைப்ரரிக்குப் போகிற பஸ் வந்ததானால், இரண்டு வைதான் சீனிவாசன் வீட்டுப் பக்கமாய் போகிற பஸ் ரும்! அப்படித்தான் வரும்னு அவ்வளவு உறுதியாய் தலிலேயே எப்படிச் சொல்ல முடிந்தது உங்களால்?''

அனுஷா சிரித்துவிட்டு, ''பஸ் டைமிங் தெரியும், அதனால்...'' என்றாள்.

''ஆனாலும் இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் கூட மணிக்கு ஒரு...'' என்று சொல்லிக் கொண்டிருந்த வத்சலாவின் பேச்சை இடையிலேயே தடுத்து நிறுத்தி,

''ஆனாலும் என்ன? கொஞ்சம் தர்க்கரீதியாய் யோசித்துப் பார் வத்சலா! நீ நிற்கிற பஸ் ஸ்டாப்பிற்கு இந்தப் பக்கத்திலேருந்து சீனிவாசன் வீட்டுப் பக்கமாய் போகிற பஸ்கள் 8.00 மணிக்கும் 9.00 மணிக்கும் 10.00 மணிக்கும் வரதுன்னு வை! லைப்ரரி பக்கமாய் போற பஸ்கள் 8.10க்கும், 9.10க்கும் 10.10க்கும் அந்தப் பக்கத்திலேருந்து வரதுன்னு வை! அப்போ நீ எந்த சமயத்தில் பஸ் ஸ்டாப்பில் நின்றாலும், லைப்ரரி பக்கமாய் போகத்தான் 50.10 சான்சு இருக்கும் இல்லையா?

வத்சலா புரிந்தது என்று தலையாட்டினாள். பிறகு [illegible] மௌனமாய் நடந்தாள்.

ஜீப் நின்றதுமே வத்சலா ஒரே பாய்ச்சலில் கீழே குதித்து வீட்டிற்குள் ஓட்டமெடுத்தாள். அவள் வரவால் அவ்வீட்டில் தோன்றிய கலகலப்பை 'வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது.

அவள் வீட்டிற்குள் காலெடுத்து வைத்தபோது தந்தை சாய்வு நாற்காலியில் அ[illegible]து ஏதோ தீர்க்காலோசனையில் [illegible]யிருந்தார். தாய் [illegible] வேலையாய் உள்ளேயிருந்து அப்பொழுதுதான் வெளியே வந்தாள். ஒரு மூலையில் அமர்ந்து எதையோ தைத்துக் கொண்டிருந்தாள் அக்கா.

அவளை முதலில் பார்த்தது தம்பிதான். 'அக்கா' என்று பாய்ச்சலில் ஓடிவந்து கட்டிக்கொண்டான். வத்சலாவின்

தாய் மகளைப் பார்த்துவிட்டு ஓட்டமாய் ஓடிவந்து கட்டிக் கொண்டு 'ஓ' வென்று அழுது தீர்த்து விட்டாள்.

அப்பா நாற்காலியை விட்டு எழுந்திருந்து, தன் வயோதிகத்தைக் கூட பொருட்படுத்தாமல் விடுவிடென்று மகளை நோக்கி வந்தார். மனதிலிருக்கும் உணர்ச்சிகள் முகத்தில் பிரதிபலித்தன. அது ஆனந்தமா, உணர்ச்சிவசமா, துக்கமா, அல்லது ஆவேசமா என்று தெரியாது.

மாலினி வத்சலாவை ஓடி வந்து கட்டிக்கொண்டாள். சண்பகமாலா நாலடியிலும் த்ஸிபதா இரண்டடிகளிலும் ஓட்டமாய் வந்து வத்சலா... ம் நின்றார்கள்.

பில்வன் பார்வையாளனாய் பார்த்துக் கொண்டிருந்தான். அவளோடு தொடர்ந்த கதை அவளோடு முடிவடைந்து விட்டது. ஆசாரமான குடும்பத்தில் பிறந்து நர்சக வேலையைத் தொடங்கி, மாஃபியாவின் வலையி... ...ந்தா—சங்கர் மூலமாய் மரணத்தின் கடைசி படிவரையிலும் சென்று மீண்டிருக்கும் அப்பெண், என்றோ தன்னிடம் சொன்ன வார்த்தைகள்—'தலைமுறை தலை முறையாய் ஆசாரத்தில் பெயர் பெற்ற குடும்பம் எங்களுது' என்றது நினைவிற்கு வந்தது.

அதற்குள் பரபரப்பு நீங்கி நிமிர்ந்த வத்சலா பில்வனைப் பார்த்துவிட்டு, ''அங்கிள்'' என்று பரிச்சயம் பண்ணினாள்.

அனுஷாவின் மூலமாய் அதற்கு முன்பே பாதி கதையை தெரிந்து கொண்டிருந்த அவளது அப்பா ''கொஞ்சம் மோர் குடிச்சிட்டுப் போங்க'' என்றார் அன்பும் நன்றியும் நிரம்பிய குரலில்.

பில்வன் திடுக்கிட்டு, ''மோர் வேண்டாங்க. இன்னொரு நாள் எப்பொழுதாவது வரேன். இருட்டி விட்டது'' என்றான்.

வத்சலா சிரிப்பை அடக்கிக் கொண்டாள்.

"போயிட்டு வரேன்."

"அங்கிள், ஒரு நிமிஷம்" என்று அவள் காகிதத்தை எடுத்து வந்து, "ஆட்டோகிராப் ப்ளீஸ்" என்றாள்.

என்ன எழுதுவது என்பது போல அவளைப் பார்த்தான். கன்னத்தை அழுத்திக் கொண்டு நின்றவாறிருந்த அவளைப் பார்த்துவிட்டு இரண்டே வரிகள் எழுதினான்.

"ஞானமும் பல்லும்—வரும் போது மிகவும் கஷ்டப்படுத்தும். ஆனால் மனிதனுக்கு அவை இன்றியமை யமையாதவை!"

காகிதத்தை அவளிடம் தந்து விட்டு அவன் ஜீப்பில் ஏறிக் கொண்டான். வீட்டிலுள்ளோர் எல்லோருமாய் கூடி அவன் போன திசையையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவனது ஜீப் வேகமாய் போய் முனை திரும்பி மறைந்தது.

முற்றும்

# கொலைகாரப் பயணம்



எண்டமூரி வீரேந்தர்நாத்